

# மௌனப் புன்னகையாள்

அருட்பணி ஜோ. ஆல்பர்ட் OCD

8. நிறைவை நோக்கி ........................................ 178
(20 பிப்ரவரி 1893 முதல் மார்ச் 1896 முடிய)

9. வளரும் பருவம் ........................................ 209
(சனவரி 1895 முதல் ஏப்ரல் 1896 முடிய)

10. ஆன்மீக இருள், அழைப்பின் பிறப்பு ........................................ 235
(ஏப்ரல் 1896 முதல் ஏப்ரல் 1897 முடிய)

11. நோய், வேதனை, மரணம் ........................................ 263
(ஏப்ரல் முதல் 30 செப்டம்பர் 1897 முடிய)

12. மரணத்திற்குப் பின் வாழ்வு : மாட்சிமைப் புயல் ........................................ 304

பின்னிணைப்பு

கடலின் சிறு துளிகள் : சான்றுகள் ........................................ 323

கருவி நூல் பட்டியல்.

# திருத்தந்தையின் உரை

## அன்பே! அவளது அழைத்தலுக்கு திறவுக் கோல்

*"பிற இனத்தார் உன் ஒளி நோக்கி வருவர்" (எசா. 60: 3) குழந்தை இயேசுவை வணங்க, கிழக்கிலிருந்து வந்த மூன்று ஞானியரது இயேசுவின் திருக்காட்சியின் எதிரொலி, இறைவாக்கினர் எசாயாவின் சொற்களில் ஆர்வமூட்டும் எதிர்பார்ப்பாகவும், ஒளி தரும் நம்பிக்கையாகவும் ஒலிக்கின்றது. மறைத்தூதுப் பணியின் சிறப்பியல்பைக் கண்டுணர இப்பெருவிழா நமக்கு வழி வகுக்கிறது. மாந்தர் அனைவருக்கும் மீட்பு உண்டு என்னும் கருத்தை எசாயாவின் முன்னறிவிப்பு தெளிவு படுத்துகின்றது; மூன்று ஞானியரது இறைவாக்குச் செயலை (மத் 2 : 1 - 12) உணர்த்துகின்றது; பிற இனத்தார் இயேசுவின் நற்செய்திக்குச் செவி கொடுக்கத் தூண்டுகின்றது.*

*எல்லா மனிதரும் மீட்பின் நற்செய்தியைப் பற்றுறுதியுடன் ஏற்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர். அனைத்து மக்களுக்கும் அனைத்து நாடுகளுக்கும், கலாச்சாரங்களுக்கும் திருச்சபை அனுப்பப்படுகின்றது. "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும் படி கற்பியுங்கள்." (மத் 28 : 19 - 20). "உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத் 28 : 20) என்று தமது விண்ணேற்புக்கு முன் கூறிய இயேசுவினது உறுதிமொழிச் சொற்களே மறைப்பணி கட்டளையின் சாரம்.*

*நற்செய்தியை அறியாதவரிடமும், இயேசு மீது பற்றுறுதி கொள்ளாதவரிடமும் சமயப் பணியாளர்கள் மூலம் கிறிஸ்துவே "மறைப் பணியாள"ராகச் செல்கின்றார்.*

*லிசியூ நகர் கார்மல் சபைச் சகோதரி தெரேசு மார்ட்டின் ஒரு மறை போதகராகக் பணியாற்றப் பேராவல் கொண்டிருந்தார். "மறை போதக நாடுகளின் பாதுகாவலி" என அறிவிக்கப்படும் அளவுக்கு அவரிடத்தில் மறைப்பணி ஆர்வம் பொங்கி வழிந்தது. இவ் அழைப்பை எவ்வாறு வாழ்ந்து காட்டுவது என இயேசுவே அவருக்குத் தெளிவுப்படுத்தினார். அன்புக் கட்டளையைக் கடைப்பிடித்ததால், அவரால் திருச்சபையின் மறைப்பணியில் முழுமையாகத் தம்மையே*

கரைத்துக் கொண்டு நற்செய்தியை அறிவிக்கும் அனைவரோடும் இறைவேண்டலின் அற்புத ஆற்றலால் ஐக்கியமாக முடிந்தது. இவ்வாறு இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்திய "திருச்சபை மறைத் தூதுப் பணியைத் தன்னியல்பிலேயே கொண்டுள்ளது" (தி.ம. எண் 2) என்ற கருத்துக்குத் தமது வாழ்வின் வாயிலாகத் தெரேசு செயலாக்கம் கொடுத்தார். மறைப் பணி வாழ்க்கையைத் தெரிவு செய்து கொண்டவர்கள் மட்டு மல்ல, திருமுழுக்கு பெற்ற அனைவருமே மறைப் பணியாளராக அனுப்பப்படுகின்றனர்.

எனவே தான் மறைபரப்புதல் ஞாயிற்றுக் கிழமையை, ஆன்மீகச் சிந்தனையாளராகிய இளமங்கை குழந்தை இயேசுவின் தெரேசுவை **'அகில உலக திருச்சபையின் மறை வல்லுநராக'** அறிவிக்கும் நாளாகத் தேர்ந்தெடுத்தேன்.

இன்றைய தினம் வியத்தகு நிகழ்வு ஏதோ நடைபெறுவதை அனைவருமே உணர்கின்றனர். லிசியூ நகர் தூய தெரேசுவுக்கு எந்தவொரு பல்கலைக் கழகத்திற்கும் செல்ல வாய்ப்புக்கிட்டவில்லை; முறைசார் கல்வி பயிலவில்லை. அவர் இளமையிலேயே இறைவனடி சேர்ந்தவர்; எனினும் இன்றுமுதல் "திருச்சபையின் மறை வல்லுநராக"ப் புகழப்படுகின்றார். எந்த ஒரு கல்விப் பட்டங்களும் வழங்க முடியாத உயர்ந்த நன்மதிப்பைப் பெற்று, கிறிஸ்தவ சமுதாயத்தினர் அனைவரிலும் தன்னிகரற்றவராக உயர்த்தப்படுகின்றார்.

ஒருவரைத் திருச்சபையின் மறை வல்லுநராகத் திரு ஆட்சி பீடம் அறிவிக்கின்றது என்றால், அதற்கான காரணத்தை இறை மக்களுக்கும் மற்றும் திருச்சபையின் அடிப்படைப் பணியான போதிக்கும் பணியாற்றுவோருக்கும், இறையியல் கல்வி பயிற்றுதல் மற்றும் ஆய்வு செய்தல் போன்ற சிக்கலான பணியாற்றுவோருக்கும் தெரியப்படுத்த விரும்புகின்றது. காரணம், இவர்களைப் போன்றவர்களால் அறிவிக்கப்பட்ட, மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மறைக் கோட்பாடுகள், குறிப்பிடதக்கவை. அம்மறைகோட்பாடுகள், வெளிப்படுத்தப்பட்ட மறை உண்மைகளோடு இயைந்து செல்வதால் மட்டுமல்ல; பற்றுறுதி குறித்த மறை பொருளின் மீது தெளிவு ஏற்படுத்துகிற புத்தொளி வீசுவதாலும், கிறிஸ்துவின் மறை பொருளைப் பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்துவதாலும், அவை சிறப்புடையவை என திருச்சபை சுட்டிக் காட்ட விரும்புகிறது. தூய ஆவியின் உதவியினால் "ஏற்கெனவே நமக்குள்ள விசுவாசத்தைப் பற்றிய புரிதல் திருச்சபையில் தொடர்ந்து வளர்ச்சியடைகின்றது. இவ்வளர்ச்சிக்கு உதவுபவர்கள் தெளிவான,



ஆழமான கருத்துக்களை ஆய்ந்து உணர அழைக்கப்பட்ட இறையியலாரும், "உண்மையின் உறுதிநிறை அருட் கொடைகளை" நிறைவாகப் பெற்றுள்ள திருப்பணியாளர்களும் மட்டுமல்ல, அனுபவத்தின் வாயிலாகப் பெறப்பட்ட ஆன்மீகச் செல்வங்களைப் பற்றிய ஆழமான புரிதல்களினாலும், இறைவனின் ஆவியினால் வழிநடத்திச் செல்லப்பட முழுமையாகத் (இ.வெ.எண் 8) தம்மையே கையளித்தவர்களின் பல்வேறுப்பட்ட சிறப்புக் கொடைகளினாலும் இவ்வளர்ச்சிக்கு உதவுகின்றார்கள் என்பதைத் திருச்சங்கம் நமக்கு நினைவூட்டுகின்றது. "திருச்சபை" என்ற ஏடும், தமது தூயவர்களின் வழியாகக் கடவுளே "நம்மோடு இருக்கின்றார்" என்று அறிவுறுத்துகின்றது. (எண் 50) இறைவனது மறை பொருளைப் பற்றிய நமது அறிவு ஆழப்படுத்தப் படுத்தப்படுவதற்குத் தூயவர்களின் ஆன்மீக அனுபவங்கள் நமக்குச் சிறப்பாக உதவுகின்றன. இந்த அனுபவங்களினால் பெறும் அறிவு நமது எண்ணங்களை விட என்றும் மிகச்சிறப்பாக இருக்கின்றன. இந்தக் காரணத்தால் தான் திருச்சபை "மறை வல்லுநரை" மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காட்ட விரும்புகின்றதே தவிர, ஏதோ தற்செயலாக ஒருவரை மறை வல்லுநராக உயர்த்த விரும்புவதில்லை!

## அன்பின் உண்மையைத் தீவிரமாய் வாழ்ந்து காட்டிய தெரேசு.

தூய முகத்தாள், குழந்தை இயேசுவின் தூய தெரேசு, 'திருச்சபையின் மறை வல்லுநர்களில்' மிக இளைய வயதினர். ஆனால் அவரது ஆர்வம்மிக்க ஆன்மீக பயணம், அநுபவ முதிர்ச்சியைச் சித்திரித்துக் காட்டுகிறது. அவருடைய எழுத்துக்கள் புலப்படுத்தும் பற்றுறுதியின் உள்ளொளி ஆழமானது; பரந்து விரிந்தது; மகத்தான ஆன்மீக ஞானிகளது வரிசையில் சிறப்பானதொரு இடம் பெறத் தகுதியுடையனவாக ஆக்குகின்றது.

இப்பெரு நிகழ்வின் நினைவாக நான் எழுதிய திருத்தூது மடலில் தூய தெரேசுவின் கோட்பாடுகளில் காணப்பெறும் சிறப்பியல் அம்சங்களை வலியுறுத்தி எழுதினேன். எனினும் அதன் தலையாய கருத்தினை மீண்டும் நினைவுப்படுத்தாமல் இருக்க முடியுமா? திருச்சபையில் அவருக்குரிய சிறப்பு அழைத்தலைக் கண்டு பிடித்தார். 'மானிட அன்பே' (Charity) அவருக்கு அழைப்பின் வாசலைத் திறக்கும் திறவுகோலாயிற்று என அவரே எழுதினார். பலவேறு உறுப்பினர்களைக் கொண்ட ஒரே உடலாகத் திருச்சபையைக் கருதினால், அனைத்தையும் விட மிகச்சிறந்ததும் முக்கியமானதுமான ஒன்றை இடிக்கக் கூடாது என நான் புரிந்து கொண்டேன். எனவே திருச்சபைக்

கென ஓர் இதயம் உண்டு. அந்த இதயம் அன்பினால் பற்றி எரிந்து கொண்டிருந்தது எனவும் உணர்ந்து கொண்டேன். அன்பு ஒன்றே திருச்சபையின் உறுப்பினர்களை இயக்குவித்தது. அந்த அன்பின் தீ அணைந்திருந்தால் இயேசுவின் சீடர்கள் நற்செய்தியை அறிவித்திருக்க மாட்டார்கள்; மறைத்தியாகிகள் தங்களது குருதி சிந்த மறுத்திருப் பார்கள். அன்பு அனைத்து அழைத்தல்களையும் உள்ளடக்குகின்றது. . . . என்றும் உணர்ந்து கொண்டேன். எனவே தாங்க இயலா மகிழ்ச்சி வெள்ளத்தில் "என் இயேசுவே! என் அன்பே. . . இறுதியாக என் அழைத்தலைக் கண்டு கொண்டேன்; அன்பே . . . எனக்கான அழைத்தல்!" எனத் தூய தெரேசு எழுதுகின்றார். "தந்தையே, விண்ணுக் கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும், அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். (மத் 11 : 25) என்ற நற்செய்தியின் வரிகள் தூய தெரேசுவிற்கு மிகவும் பொருத்தமானவை.

லிசியூ நகர் தெரேசு அன்பின் ஆழமான உண்மையை உணர்ந்து உள்வாங்கி அதுவே திருச்சபையின் மையம். . . என விவரித்ததுடன், அதுவே திருச்சபையின் இதயம் எனத் தமது குறுகிய கால வாழ்விலே ஆழ்ந்து வாழ்ந்து காட்டியுள்ளார். இந்தத் தூயவரின் வாழ்க்கையில் காணும் கோட்பாட்டிற்கும், நடைமுறை அனுபவத்திற்கும் உள்ள இணைவு, உண்மைக்கும் வாழ்க்கைக்கும் உள்ள இணைவு; போதனைக் கும் சாதனைக்குமுள்ள இணைவாக ம ங்காத ஒளி வீசுகின்றது. இந்த ஒருங்கிணைந்த வாழ்வே இன்றைய இளம் உள்ளங்களுக்கும், வாழ்வுக்கு உண்மையான அர்த்தம் தேடும் மனிதருக்கும், தூய தெரேசுவைச் சிறந்த 'முன்மாதிரிகையாக' ஏற்றுக் கொள்ளத் தூண்டுகிறது.

வறிதாகிப் போன பல்வேறு சொற்களுக்கு முன்னர் தெரேசு மீட்புக்கான ஒரு சொல்லைத் தீர்வாக முன்வைத்தார். அச்சொல் மௌனத்தில் வாழ்ந்து வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ள உதவும் மூல ஊற்றாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். தமது 'சிறிய வழி' என்னும் எளிமையினால் பகுத்தறிவுக் கலாச்சாரத்தையும், நடைமுறை உலகாய தத்தையும் வென்றெடுத்தார். அந்த எளிமையே வாழ்வின் நிலையான உண்மைகளை நோக்கித் திரும்பச் செய்து வாழ்வின் ஒட்டுமொத்த அந்தரங்கத்தை நோக்கி இட்டுச் செல்கின்றது. அந்தத் தெய்வீக அன்பே, சவால் நிறைந்த அனைத்து மனிதத் துணிகர முயற்சிகளையும் ஆட் கொள்கின்றது; ஊடுருவிச் செல்கின்றது. நாம் வாழும் நிலையற்றதும் இன்பியல்சார் கலாச்சாரம் நிலவுகின்றதுமான இந்தக் காலக்கட்டத்தில், அன்புக்காகவும் உண்மைக்காகவும் ஏக்கம் கொண்டவர்களின்



உள்ளங்களையும், எண்ணங்களையும் புத்தொளியால் நிரப்பப் முடியும் என்பதை இந்தத் திருச்சபையின் மறை வல்லுநர் நிரூபித்துக் காட்டுகின்றார்.

## இன்றைய கிறிஸ்தவர்களின் தலைசிறந்த முன் மாதிரி - வழிகாட்டி

அகில உலக மறைபரப்பு ஞாயிறை நாம் கொண்டாடி மகிழுகின்ற இன்று தூய தெரேசு திருச்சபையின் மறை வல்லுநராக அறிவிக்கப் படுகின்றார். அவர் நற்செய்தி அறிவிப்புப் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கத் தணியாத தாகம் கொண்டிருந்தார். அப்பணிக்காகத் தம்மையே இழந்து மறைத்தியாகி நிலையை அடையவும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆப்பிரிக்காவில் பணிபுரிந்த அருட்பணியாளர் பெல்லியேர், மற்றும் சீனாவில் பணிபுரியும் அருட்பணியாளர் ஆதோல்ப் ரூலான் போன்ற மறைப் பணியாளர்களது தூதுப் பணிகளுக்குத் துணையாக நிற்க அவர் துணிந்து முன் வந்த துணிச்சலை அனைவரும் அறிவர். நற்செய்தி அறிவிப்புப் பணியில் கொண்டிருந்த தீர்க்கமான அன்பில் தெரேசு தமக்கென ஓர் குறிக்கோளைக் கொண்டிருந்தார். அவரே கூறுகின்றார் "அவர் மகிமைக்காக உழைப்பது, அவர்பால் அன்பு செலுத்துவது மற்றவரும் அவர்மீது அன்பு செலுத்தச் செய்வது" ஆகிய வற்றுக்கான அருளையே தர வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

இந்த வாழ்வின் குறிக்கோளை அடைவதற்காக அவர் பயன் படுத்திய வழி, ஒரு சில ஆன்றோர்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. மாறாக அனைவராலும் அடையக் கூடிய ஒன்று. அது, இறைக் கருணைக்கு முழுமையாகத் தம்மையே கையளிக்கும் சிறியவழி; நேர்மை வழி. அதிக வேலையில்லாத மிகச் சாதாரண வழியல்ல அது. நற்செய்தி வழக்கமாகக்கோருவது போல இதுவும் துன்பம் நிறைந்த பாதைதான்! ஆனால் நம்பிக்கை உணர்வோடு தெய்வீகக் கருணைக்குத் தம்மையே கையளிக்க ஒருவரை ஊக்குவிக்கும் வழி இது; கடினமான ஆன்மீகப் பொறுப்புகளையும் எளிதாக்கும் சிறந்த வழி இது!

இவ்வழியில் பயணம் செல்லும் போது அவர் பெற்றுக் கொண்ட நலன்கள் அனைத்தையும் 'அருட்கொடையாக'வே எண்ணினார். இயேசுவோடு அவர் கொண்டிருந்த அன்புறவும், அன்பே அனைத்திற்கும் மையம் என அவர் கொண்டிருந்த உயர் எண்ணமும் அவரை அவ்வாறு எண்ணத் தூண்டின. அவரது ஆன்மீக பயணத்தில் அவர் கொண்டிருந்த இத்தகைய தீராத இதயத் தூண்டுதலே இன்றும் அவர், இறந்து ஆண்டுகள் நூறு கடந்தாலும், லிசியூநகர் தெரேசுவை இளமையாகத்

திகழச் செய்துள்ளது. மூன்றாயிரமாவது ஆண்டுத் தொடக்கத்தை நெருங்குகின்ற இன்று அவர் கிறிஸ்தவர்களின் பாதையில் தலைசிறந்த முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் கருதப்படுகின்றார்.

எனவே, திருச்சபை இன்று அக்களித்து அகமகிழ்கின்றது. தெரேசுவை நன்கு புரிந்து கொண்ட பலருடைய எதிர்ப்பார்ப்புக்கும் மன்றாட்டுகளுக்கும், விண்ணப்பங்களுக்கும் வெற்றி கிடைத்துள்ளது. இறைவனின் தனிக் கொடையான "மறைவல்லுநர்" என்ற பெரும் நிலையை அவர் பெறும் பொருட்டு இறைவன் திருவுளம் கொண்டார். எனவே நாம் அனைவரும் உரோமை நகர் குருகுலப் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், புதிய கல்வியாண்டினைத் தொடங்கியுள்ள மாணவர்களோடு இணைந்து இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

ஆம். அன்புத் தந்தையே! இயேசுவோடு இணைந்து உம்மைப் போற்றுகின்றோம். (மத் 11 : 25). "உமது திருவுள இரகசியங்களை ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் மறைத்து" அவற்றைக் "குழந்தைகளுக்கு" (எங்களை ஈர்த்து, நாங்கள் பின்பற்றவும் இன்று உயர்த்தியுள்ளவருக்கு) வெளிப்படுத்தினீர்.

அவருக்கு நீர் வழங்கிய ஞானத்திற்கு நன்றி கூறுகின்றோம். அனைத்துத் திருச்சபைக்கும் தனிப்பட்ட சாட்சியமாகவும், வாழ்வின் ஆசிரியராகவும் அவரை உருவாக்கியதற்கு நன்றி.

அவர் மீது நீர் பொழிந்த அன்புக்காக நன்றி. அந்த அன்பே, இதயங்கள் அனைத்தையும் அன்பினால் பற்றி எரியச் செய்கிறது; தூய வாழ்க்கைக்கு விரைவில் அழைத்துச் செல்கின்றது.

"நன்மை புரிவதிலேயே என் விண்ணக வாழ்வைச் செலவிடுவேன் எனத் தெரேசு மொழிந்த விருப்பங்கள், வியத்தகு முறையில் செயலாக்கம் பெறுவதை உணர முடிகின்றது.

தந்தையே! புதிய பட்டத்துடன் அவர் எங்களை நெருங்கி வரச் செய்தமைக்கு நன்றி கூறுகின்றோம். உமது பெயருக்குப் புகழும், மகிமையும் என்றென்றும் உண்டாகுக. ஆமென்.

உரோமை **திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்**
19 - 10 - '97



# அணிந்துரை

**வா**னமே எல்லையாகக் கொண்ட மனிதர்கள்,

வானையும் கடந்து வலம் வந்து விட்டனர்.

தம்மை உயர்த்திக் கொள்ளத்

தரையிலே வானவில்லை கொண்டு வந்து விட்டனர்.

எண்ணங்களால் உயர்ந்து

ஏடுகளை அடுக்கிவிட்டனர். ஆனால். . . வாழ்வில் மட்டும்

அமைதியில்லை. உறவில்லை. உறக்கமில்லை. மகிழ்ச்சியில்லை.

மனிதம் . . . அது இயந்திரம் அல்ல.

உணர்வுண்டு, இதயமுண்டு. மனிதத்தை மதித்து வளர்க்கும் சமூகம் இறையரசின் பிரதிபலிப்பு. மனித உணர்வுகளைச் சிதைக்கின்ற, மனித மாண்புகள் அழிக்கப்படுகின்ற இக்காலக் கட்டத்தில் ஒளிமயமான எதிர்காலத்தைச் சந்திக்க முடியுமா? என்ற எண்ணத்தில் நம்பிக் கையிழந்து மனிதர் நிற்கின்றனர்.

ஆனால் இன்று. . .

உள்ள உரத்தால்

உடையாத திட்டத்தால்

உவந்த உழைப்பால்

உயர்ந்த நெறியால்

தணியாத தாகத்தால்

இறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும்

குணசீலி நம்

குழந்தை இயேசுவின் தெரேசு, நமக்கோர் எடுத்துக்காட்டு மட்டுமல்ல, குழந்தை உள்ளத்தோடு வாழ நமக்கோர் சவாலும் கூட. தமது 24 வயது உலக வாழ்விலே ஒன்பது ஆண்டுகளை நான்கு சுவர்களுக்குள், புனித வாழ்வில் செலவிட்டுத் திருச்சபையில் மேன்மைக்குரிய உயர்ந்த புனிதையாக இன்று போற்றப்படுகிறார்.

சிறுமலர் "நவீன உலகின் பெரும் புனிதை" என்றார் திருத்தந்தை பத்தாம் பத்திநாதர். "என் பணி வாழ்வில் வழிகாட்டும் விண்மீன்" என்றார் திருத்தந்தை பதினோராம் பத்திநாதர். 1927 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14 ஆம் நாள் மறைபரப்பு பணியின் பாதுகாவலியாக அறிவிக்கப்பட்டார். குழந்தை யேசுவின் தெரேசுவின் இறந்த முதல் நூற்றாண்டாம் 1997, அக்டோபர் திங்கள் 19 ஆம் தேதி மறைபரப்பு ஞாயிறன்று திருச்சபையின் மறைவல்லுநராக அறிவிக்கப்பட்டார். இன்று திருச்சபை சிறுமலரை மறைவல்லுநராக, பேராசிரியராக, மறை சாட்சியாகப் போற்றிப் புகழ்கிறது. தெரேசு அமரராகி 100 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், சிறுமலரின் சிறிய வழி பலருக்கும் பாதை காட்டும் விளக்காகச் சுடர் விடுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

அவர்தம் மறைந்த முதல் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் நாம், திருச்சபையின் மறைவல்லுநராக அறிவிக்கப்பட்டுப் போற்றப் பெறும் இவ்வேளையில் இப்புனிதையின் வாழ்கை வரலாற்றுப் படிப்பினைகளைத் தாங்கி "மௌனப் புன்னகையாள்" என்ற நூல் பலருடைய கரங்களில் தவழ்கிறது.

சிறுமலரின் ஆன்மீகப் புதையலை ஆழமாய் அலசி, புத்தகவடிவில் வெளியிடும் ஏற்காடு கார்மல் சபைச் சகோதரிகளின் பெரும் முயற்சிக்கும், அதை அழகிய தமிழில் மொழி பெயர்த்து தமிழ் வாசகர்களுக்கு அளித்துள்ள அருட்தந்தை ஆல்பர்ட் அவர்களுக்கும் எனது அன்பார்ந்த பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகுக.

இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவர் வாழ்விலும், உண்மையான அமைதி, அன்பு, மகிழ்ச்சி நிறைந்து சிறந்திட மனதார வாழ்த்துகிறேன். சிறுமலர் மௌனப் புன்னகையால் நம்மோடு பேசட்டும்.

உரோமை
12 - 12 - '97

இறையாசீர்
அன்புடன்

**அருட்தந்தை தோமினிக் நிர்மல் குமார் OCD**

அகில உலக கார்மல் சபை தலைமைத் தந்தை ஆலோசகர்



# வாழ்த்துரை

குழந்தை இயசுவின் தெரேசு மண்ணில் உதித்த 125 ஆம் ஆண்டு நிறைவு நினைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இதன் நினைவாக எழுதப்பட்டதே "மௌனப் புன்னகையாள்" என்னும் குழந்தை தெரேசு வாழ்க்கை வரலாறு. அருட்தந்தை ஆல்பர்ட் அவர்களின் கைவண்மையை இதில் கண்டேன்.

இதை நான் படித்தேன்; ஆம். இது 'ஒருபடி' தேன் தான். சுவைத்தேன்; ஆம். இது 'சுவையான' தேன் தான். மலைத்தேன்; ஆம் இது மலையிலிருந்து எடுக்கப்பட்ட மலைத்தேன் தான்! இந்நன்நூலைத் தமிழகத்திற்குத் தந்துள்ள கார்மேல் கன்னியர்களை வாழ்த்துகின்றோம்.

கன்னியர்கள் மனம் வைத்தால் காவியம் எழுதச் செய்ய முடியும் என்பதற்கு இந்நூல் ஒரு சான்று. இது கவிதையில் ஆன காவியம் மட்டுமல்ல, இது ஓர் ஒப்பற்ற ஓவியம். என்றோ இருந்து நம்மை விட்டுப் பிரிந்த தெரேசு என்ற மலர் இந்நூலின் வழியாக இறவாத எழில் காரிகையாக நம் முன் தோன்றுகிறாள். அவளது ஆன்மீக வாழ்வை நாம் பின்பற்றுவதற்காக எழுதப்பட்ட பயனுள்ள பாடப் புத்தகம் இந்நூல்.

புனித குழந்தை தெரேசு ஒரு மலர். நாம் அனைவரும் போற்றும் மலர்; நன்மை வரங்களை நாம் பெற உதவும் நன் மலர்; நறுமலர். தன் இதழ்களை விரித்துப் புன்னகை பூக்கும் புதுமலர்; சிறுமலர்; எனினும் சக்தியும் கீர்த்தியும் வாய்ந்த இனிய மலர்.

கார்மல் சபையில் தெரேசுவின் வாழ்வு மலர்ப் படுக்கையன்று; கல்லும் முள்ளும் நிறைந்த மரணப் படுக்கை. உடல் வேதனை அவளது உணவானது. உளப் போராட்டம் அவளை வாட்டி வதைத்தது. இளைப்பு நோயும், என்புருக்கி நோயும் அவளது உடலைத் தின்றன. அவளது வாழ்வில் இருள் சூழ்ந்தது; அலகையும் ஆர்ப்பாட்டம் செய்தது; அவநம்பிக்கை என்ற நஞ்சை நெஞ்சில் பாய்ச்ச வலை விரித்தது; அவ்வேளையில் தெரேசு எழுதிய கவிதை:

"புன்னகையில் தோட்டாக்களைச் சந்திப்பேன்;
படைக்கலன்களை என் கரங்களில் தாங்கி நிற்பேன்;
போர்க் களத்தில் உன் புகழ்பாடிக் கொண்டே

## உள்ளே. . .


திருத்தந்தையின் உரை

அணிந்துரை

வாழ்த்துரை

பாராட்டுரை

உட்புகுமுன்

எனது வரிகள்


### பகுதி ஒன்று

அலென்சோனில் 1873 - 1877


1. அலென்சோனில் (1873 - 1877) .......... 3


### பகுதி இரண்டு

லெ புய்ஸ்ஸொனேவில் 1877 - 1888


2. பள்ளிப் பருவத்துக்கு முன்னால் .......... 37
(16 நவம்பர் 1877 முதல் 3 அக்டோபர் 1881 முடிய)

3. கல்விக் கூடத்திலே . . .......... 49
(3 அக்டோபர் 1881 முதல் மார்ச் 1886 முடிய)

4. இனிக்கும் இளமை .......... 84


### பகுதி மூன்று

கார்மலில் 1888 - 1897


5. தேர்வு நிலையாளர் .......... 121
(9 ஏப்ரல் 1888 முதல் 10 சனவரி 1889 முடிய)

6. புகுமுகத் துறவு நிலையாளர் .......... 142
(10 சனவரி 1889 முதல் 24 செப்டம்பர் 1890 முடிய)

7. மரணம் ஓர் தொடர் கதை .......... 162
(24 செப்டம்பர் 1890 முதல் 20 பிப்ரவரி 1893 முடிய)

என் இனியவா! உன் கரத்தில் நான் உயிர் துறப்பேன்"

இதைப் போன்ற தெரேசுவின் ஆன்மீகக் கவிதைகள் பல இந்நூலில் புது அனுபவங்களாகின்றன.

எந்நிலையிலும் தன் கடமையைச் செய்வதில் கருத்தாயிருந்த இக்காரிகை ஒரு முறை தன் அறையிலிருந்து கோவிலுக்கு நடந்து செல்லத் தடுமாறினாள். இதைக் கண்ட ஒரு சகோதரி, "ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று உபதேசம் செய்தாள். ஆனால் தெரேசுவோ, "நான் இன்று திருப்பலிக்குச் செல்ல எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் மறைபரப்பும் தொண்டர்களின் வெற்றிக்காக ஒப்புக் கொடுக்கிறேன்." என்றாள். இந்நூலில் காணப்படும் இவை போன்ற நிகழ்ச்சிகள் நமது ஆன்மீக வாழ்க்கைக்குப் புதிய திசைகளைச் சுட்டுகின்றன.

நான்கு சுவர்களுக்கிடையே வாழ்ந்த இக்கன்னிகை நற்செய்திப் பணியில் தனக்குள்ள ஆர்வத்தைக் குறிப்பிடுகிறார்:

"இவ்வுலகில் நன்மை செய்வதில்
என் வாழ்நாளைக் கழிக்க விரும்புகிறேன்;
மீட்கப்பட வேண்டிய ஆன்மாக்கள் இருக்கும் வரை
நான் ஓய்வெடுக்க மாட்டேன்;
ஆனால் 'இனி நேரம் இல்லை' என
வான தூதர் கூறும் போது ஓய்வெடுப்பேன்."

இவை போன்ற தெரேசுவின் இலட்சியப் பயணம் இந்நூலில் அருமையாக ஆதாரங்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு புனிதருக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. இன்பத்திலும், துன்பத்திலும், வறுமையிலும், வளமான வாழ்விலும், நோயிலும், சாவிலும், இருளிலும், ஒளியிலும் எதற்கும் அஞ்சாது இயேசுவில் சரண் அடைந்து குழந்தை போல் அவரது தோளில் சாய்ந்து குழந்தையாகவே மாறி இன்று விண்ணிலே மின்னும் வீரப்பெண்மணி தெரேசு.

தெரேசு தனக்கெனத் தனிவழி வகுத்துக் கொண்ட தங்கமகள்;
சிறுவழி கண்டு பிடித்த சின்ன ராணி;



புது வழி கண்டு பிடித்த புதுமைச் செல்வி;
கலையுள்ளம் கொண்டு கவிதை புனைந்த கவிமணி;
குழந்தையுள்ளம் கொண்ட இளவரசி;
வேதனை என்ற நெருப்பில் தீக்குளித்துத் தீட்டு நீங்கிய திருமகள்;
அணுயுகத்தின் நுழைவாயிலில் கடவுளின் கரங்களால்
ஏற்றி வைக்கப்பட்ட கலங்கரைத் தீபம் தெரேசு.

கார்மல் சபை அருட்தந்தை ஆல்பர்ட் இனிய சரள நடையில் தமிழாக்கியுள்ள இக்காவியத்தை புத்தகமாக்கி உலாவரச் செய்துள்ளனர் கார்மல் சபைக் கன்னியர்கள். பாராட்டுக்கள். தந்தை அவர்களின் சேவை மகத்தானது! நெஞ்சார அவர்களை வாழ்த்துகின்றேன். இந்நூலைப் படிப்பவர்கள் இந்நூலாகவே மாறி மற்றவர்களுக்கு ஒரு பாடப் புத்தகமாக விளங்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சென்னை
01. 12. '97.

**சி.கே. சுவாமி சே.ச.**
லொயோலா கல்லூரி

# பாராட்டுரை

புனித சிறுமலர் தெரேசு என்றவுடன் நம் கண்முன் நிற்பது பிரான்சு நாட்டிலுள்ள லிசி என்னும் சிற்றூர். இப்புனிதையின் வாழ்க்கையை எடுத்துரைக்க எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான நூல்களில் அவளது லிசி நகரத்து வாழ்வுதான் அதிக அழுத்தம் கொடுத்து எழுதப்பட்டுள்ளது.

பயிரின் வளர்ச்சிக்கும், விளைச்சலுக்கும் நாற்றங்கால் எவ்வளவு சிறப்பு மிக்கதாக அமைகிறதோ அதுபோல் நம் புனிதையின் வாழ்வில் நாற்றங்காலாக இருந்தது அவள் பிறந்தது முதல் ஐந்து ஆண்டுகள் வரை வாழ்ந்த அலென்சோ நகர்.

"மௌன புன்னகையாள்" என்னும் இந்நூலின் முதல் பகுதி அலென்சோவில் தெரேசுவின் வாழ்கையை மிக அழகாகச் சித்திரிக்கிறது. பள்ளிப் பருவம், கார்மலில் அவரது வாழ்க்கை போன்ற எஞ்சியுள்ள பகுதிகளைச் சுவாரசியமாக வாசித்து மகிழ ஒரு முன்னுரையாக ஆசிரியர் எழுதி இருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு. மற்றொரு சிறப்பு தெரேசுவின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகளை, மூலக் கையெழுத்துப் பிரதிகளைச் செம்மையாகப் பயன்படுத்தி நாள், மாதம், ஆண்டு போன்றவற்றைத் துல்லியமாகக் குறிப்பிட்டிருப்பது, சுவையான கதை வடிவில் ஆசிரியர் வடித்திருப்பது நெஞ்சில் நிலைக்கிறது.

சுருங்கச் சொல்வதென்றால் புனித சிறுமலர் தெரேசு பற்றித் தமிழ் மொழியில் வெளிவந்த நூல்களில் 'மௌன புன்னகையாள்' தனித் தன்மையான படைப்பு.

இந்த அழகிய நூலை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஏற்காடு கார்மல் சபை அருட்சகோதரிகளுக்கும், எல்லோருக்கும் எளிதில் சீரிய செந்தமிழில் மொழி பெயர்த்த அருட்தந்தை ஆல்பர்ட், கார்மல் சபை அவர்களுக்கும் என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

திருச்சி
25. 12. '97.

S. அருள்ராஜ் O.C.D.
கார்மல் மாநிலத் தலைவர்.



# உட்புகுமுன்

"உண்மையையன்றி வேறு எதனாலும்
என்னை நிறைவு படுத்த இயலாது."

"எனது உண்மையைப் பற்றி உங்களுக்குத் தெரியாது". இவ்வுலகிலிருந்து விடைபெறுவதற்கு, சில மாதங்களுக்கு முன்பு சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசு, தமது ஆன்மீக சகோதரரான அருட்பணியாளர் பெல்லியேருக்கு எழுதிய வரி இது. இந்தத் தோழமைக் குற்றச்சாட்டு ஐயப்பாட்டிற்கு இடமின்றி நமது சம காலத்தவருக்கும் பொருந்தும். லிசியூ நகருக்கு வரும் திருப்பயணிகள், சுற்றுலாப் பயணிகள் அல்லது "ஓர் ஆன்மாவின் கதை"யின் வாசகர்கள் "சிறிய புனிதை"யைப் பற்றித் தங்களுக்குத் தெரியும்; 'அவர் மிக எளியவர்' என்று எண்ணுகின்றார்கள். எனினும் இந்த எளிமைதான் தவறான புரிதல்களையும் வளர்த்து விடுகின்றது.

120 பக்கங்களைக் கொண்ட இரண்டு பள்ளிப் பயிற்சி ஏடுகள் முழுவதும் எழுதிய தன் வரலாற்றுக் கையெழுத்துப் பிரதிகளில் (ஓர் ஆன்மாவின் கதையின் முதல் பாகம்) தெரேசு தமது வாழ்க்கைக் கதையைப் பற்றிக் கூறவில்லை. அவரது துறவற இல்லத் தலைவியான, தலைமைச் சகோதரி இயேசுவின் ஆக்னெசுக்கு (அவரது மூத்த சகோதரி பொலின்) தமது எண்ணங்களைத் தெளிவாக விளக்குகின்றார்: "என் மனத்தில் எழும் அனைத்து எண்ணச் சிதறல்களையும் எவ்வித நிர்ப்பந்தமுமின்றி முழு மன விருப்பத்துடன் எழுதும்படி என்னைப் பணித்தீர்கள். எனவே, எழுதப் போவது என்னுடைய வாழ்க்கைக் கதை அல்ல; இறைவன் எனக்கு அருளிய அருட்கொடைகளைப் பற்றிய எனது 'எண்ணங்களையே எழுதப் போகின்றேன்."

எனவே, கீழ்ப்படிதலின் பொருட்டு எழுதப்பட்ட இவ்வெழுத்துக்களில் இடைவெளிகள் பல காணப்படுகின்றன. உதாரணமாக, பெரும் பான்மையான அவரது துறவற வாழ்வின் நிகழ்வுகளைச் சுருக்கமாக எழுதிவிட்டதாகக் கூறுகின்றார். அவரது புகுமுகத் துறவு நிலைப் பயிற்சிக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் கூறுகிறார்: "ஒரு சில வார்த்தைகளில் நான் தற்போது எழுதியவற்றை விளக்கு வதற்குப் பக்கங்கள் பல தேவைப்படலாம்; ஆனால் அவையனைத்தும் இம் மண்ணில் ஒருபோதும் வாசிக்கப்படாமல் போய்விடும்." இவ்வார்த்தை

இன்று நம்மில் பொய்த்து விட்டது. அவருடைய வாழ்க்கையின் அந்தரங்கங்கள் பல அவருடைய "கடிதங்கள்" வழியாகவோ அல்லது தூயவர் நிலைக்கு அவர் உயர்த்தப் பெற எடுத்த இரு நடவடிக்கைகளின் வழியாகவோ அனைவருக்கும் தெரியவரும் என்பதை இந்த இளம் கார்மல் துறவினி கற்பனை கூடச் செய்திருக்க வாய்ப்பில்லை! எவராலும் அறிப்படக்கூடாது என்று விரும்பி மறைவாகவே வாழ்ந்து வந்த அவர், ஆண், பெண் வேறுபாடின்றிக் கோடிக்கணக்கான மனித இதயங்களில் இடம் பிடிப்பார் என்பதையும் எண்ணிப் பார்த்திருக்க மாட்டார். நம் சிறுமலரின் வாழ்க்கை நிலையைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் பல இன்று நமது கைகளில் தவழ்வதற்குக் காரணம் சகோதரி செலின் தான். லிசியூ கார்மல் இல்லத்தின் உட்பகுதியிலும் நிழற்படங்கள் எடுத்து நல்கிய செலினுக்கு நன்றிகள் பல நாம் கூறியே ஆக வேண்டும்.

இரு பயிற்சி ஏடுகளுடன் தெரேசு மார்ட்டின் கடிதங்கள், கவிதைகள், துறவற நாடகங்கள், மன்றாட்டுகள் மற்றும் பல்வேறு குறிப்புகளையும் நமக்காக விட்டுச் சென்றுள்ளார். அனைத்தும் அவருடைய வாழ்வின்நினைவலைகள். அவையே எழுத்து வடிவம் பெற்று ஓர் ஆன்மாவின் கதையாக முழுமை பெறுகின்றன.

இன்று லிசியூ நகர் தெரேசின் உண்மை 'வாழ்க்கைக் கதை'யை எழுத வேண்டுமென்றால் இந்த அதிகாரப்பூர்வமான நூல்கள் அனைத்தையும் கால வரிசைப்படுத்தி, அவற்றுக்கிடையே காணப்படும் ஒருங்கமைவையும், தொடர்பையும் வெளிக் கொணர வேண்டும். தெரேசுவினுடைய கடிதங்கள், கடைசி உரையாடல்கள், தனிக்குறிப்புகள், தூயவர் நிலைக்கு உயர்த்தப்பட எடுத்த நடவடிக்கைகளின் போது எழுத்துக்களால் தெளிவுப்படுத்தப்பட்ட கருத்துக்கள், தெரேசின் காலத்தில் இருந்த கோப்புகள் காப்பகம், மற்றும் கார்மல் கோப்புகள் காப்பகத்தில் சேகரித்து வைக்கப்பட்ட குறிப்புகள் போன்றவற்றில் காணப்படும் அவருடைய சம காலத்தவருடைய சான்றுகளை அவருடைய கையெழுத்துப் பிரதிகளோடு ஒப்புமைப்படுத்திப் பார்க்க அவற்றிற்கிடையே காணப்படும் ஒருங்கமைவையும், தொடர்பையும் வெளிக் கொணர வேண்டும்.

தெரேசுவினுடைய அனைத்து எழுத்துக்களையும் பிரான்சு நாட்டில் அச்சேற்றி உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கு ஏறக்குறைய 85 ஆண்டுகள் ஆயின. இந்த அரும்பெரும் பணி 1956 ஆம் ஆண்டில் கார்மல் சபையைச் சார்ந்த அருட்பணியாளர்கள் பிரான்சுவா தே



சேன்த் மர் அவர்களால் தொடங்கப் பட்டது. மூலப் பயிற்சி ஏடுகள், தன் வரலாற்றின் கையெழுத்துப் பிரதிகள் போன்றவை நிழற்பட படிவங்களாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. தெரேசுவினுடைய கடிதங்கள், கவிதைகள், இறுதி உரையாடல்கள், தூயவர் நிலைக்கு உயர்த்தப்படுவதற்கு முன் தயாரிப்பாக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் போன்றவை 1971 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு வெளிவந்தன. அந்நேரத்தில் தெரேசுவினுடைய எழுத்துக்கள் அனைத்தும் ஆங்கில மொழியில் மொழியாக்கம் செய்யப்படவில்லை.

எனினும் தெரேசுவினுடைய 'உண்மை நிலை'யைப் பெரும்பான்மையான மக்கள் அறிந்து கொள்ளவில்லை. அவருடைய சம காலத்தில் வாழ்ந்த தூய உள்ளத்தினர் பலரும் தவறாகப் புரிந்துக் கொள்ளப்பட்டனர். அதுபோலவே தெரேசின் இறப்பிற்குப் பிறகு அவரைப் பற்றியும் மக்கள் தவறான புரிதல் கொண்டிருந்தனர். மக்கள் அவர் மீது கொண்டிருந்த 'உணர்ச்சி மைய' பக்தியும், அவரைத் தவறாகப் புரிந்துக் கொள்வதற்கு வழிகாட்டின. மேலும் அவருடைய எண்ணங்கள் மற்றும் மொழி நடை அனைத்தும் அவருடைய காலத்தில் இருந்த, 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலவிய ஆன்மீகத் தாக்கங்களிலிருந்து உயிர் பெற்றவையாதலால், அவருடைய எழுத்துக்களே அவரைத் காட்டிக் கொடுத்தன. இக்குறைகள் அனைத்தும் தீர்க்கப்பட வேண்டும். எனவே, ஆவணத் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு புதியதொரு 'குழந்தை இயேசுவின் தூய தெரேசுவினது வாழ்க்கை வரலாறு' எழுதப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இந்நூலின் வரிகள் கற்பனையில் உதித்த கோடுகள் அல்ல; மாறாக எவ்வித மன உறுத்தலுமின்றி, முழுமையாக அதிகாரப்பூர்வமான நூல்களையே அடிப்படையாக கொண்டு எழுதப்பட்ட வாழ்க்கை நிஜங்களின் வடிவங்கள். 'நான் எளிமை'யையே நேசிக்கின்றேன்; போலி நடிப்பு என்னில் பேரச்சத்தையே உருவாக்குகின்றது." என்று தெரேசு, தான் மரணப்படுக்கையில் இருந்த போது உதிர்த்த வார்த்தைகளை மனத்திற் கொண்டே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

தெரேசுவினுடைய காலத்தில் எழுதப்பட்ட "புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை"ப் பற்றிக் குறிப்பிடுகையில், "நமக்கு அறியாதவற்றைப் பற்றியோ, நிகழ்வதற்கு இயலாதவற்றைப் பற்றியோ நாம் எந்தக் கருத்தும் கூறக்கூடாது. அவர்களுடைய கற்பனை

வாழ்க்கையை அல்ல, உண்மை வாழ்க்கையையே நாம் காண வேண்டும்" என்று தெரேசு தமது கருத்தைக் கூறுகின்றார். எனவே, இந்நூலின் வழியாகக் குழந்தை இயேசுவின் தூய தெரேசு பேசட்டும்.

அடிப்படைக் கூறுகளையே கொண்டு எழுதப்பட்டுள்ள இந்நூலைப் படிப்பவர்கள், 24 வயதில் எலும்புருக்கி நோயினால் இம்மண்ணுலகை விட்டுப் பிரிந்த புரியாப் புதிரான இளம் நங்கை தெரேசின் உண்மை நிலையினை மீண்டும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே எமது ஆதங்கம்.

யாருமறியா மாநிலத்துறவகத்தில் பிற சகோதரிகளைப் போன்று மறைந்த வாழ்க்கை வாழ்ந்த இந்தக் கார்மல் துறவினியைப் பற்றிச் சொல்வதற்கு 1897 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாளில், பெரும் 'சிறப்பாக' அவரில் எந்தப் பண்புகளையும் காணவில்லை. எனினும் 1899 ஆம் ஆண்டு தெரேசுவின் அத்தை எலீசா கேரென், தெரேசின் சகோதரிகளிடம், "தெரேசுவினால்" தாங்கள் லிசியூவை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மக்கள் கேரென் குடும்பத்தினருக்கு ஏற்படுத்திய அன்புத் தொல்லைகளினால் அவதியுற்றனர். மார்ட்டின் சகோதரிகள். கம்பிச் சன்னல்களின் உள்ளே பாதுகாக்கப்பட்டதால் அவர்களிடம் மக்கள் அணுக முடியவில்லை. எனவே, மக்கள் கூட்டம் கேரென் குடும்பத்தினரைக் கண்டு, அவர்களிடம் கேள்விகளுக்கு மேல் கேள்விகளைக் கேட்டு அன்புத் தொல்லை கொடுத்தனர். பிரான்சு மற்றும் பல இடங்களிலிருந்தும் தெரேசுவின் கல்லறைக்குத் திருப்பயணமாக வந்தவர்கள், அங்குள்ள செடிகளிலிருந்து மலர்களையும், கல்லறை மண்ணையும், மற்றும் அங்கே கிடைத்த அனைத்துப் பொருட்களையும் புனிதப் பொருட்களாக எண்ணி எடுத்துச் சென்றனர். எனவே, குழந்தை இயேசுவின் தெரேசு அவர்கள் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தைப் பாதுகாக்க வேண்டியது தவிர்க்க இயலாத செயலாகி விட்டது. 1898 ஆம் ஆண்டு முதல் ஒரு ஆன்மாவின் கதை, ஆண், பெண் வேறுபாடின்றி அனைத்து மொழி, இனம், நாடுகளைச் சார்ந்த கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டுள்ளது.

ஏன்? எளிய, அமைதியான சிறிய 'கல்வதோஸ்' நகரத்தில், மிகவும் எதார்த்தமான வாழ்க்கை வாழ்ந்து வந்த மார்ட்டின் குடும்பத்தில் பிறந்து, முற்றிலும் மறைந்த, எளிமையான வாழ்க்கை வாழ்ந்த தெரேசு,



இத்தனை குறுகிய காலத்தில் தடைகள் அனைத்தையும் தாண்டி "மாட்சிமைப் புயலாக" (பதினொன்றாம் பத்திநாதர்) மாறியது ஏன்?

ஞானமுள்ளோர் யார்?

அவர்கள் இவற்றைக் கவனத்தில் கொள்ளட்டும்!

அவர்கள் ஆண்டவரின் பேரன்பை

உணர்ந்துக் கொள்ளட்டும்!

(திபா 107 : 43)

**கிகோஷே**

## எனது வரிகள். . .

நாம் வாழும் பூமிக்குத் தேவை
புன்னகைத் தவழும் முகங்களே!
மானுடத்துக்குச் சவக்குழி தோண்டும்
அணு ஆயுத முகாரிகள் அல்ல!!

மண்ணுலக வாழ்க்கையே
சில ஆண்டுகள் தாம்!
ஏன் அதில் இத்தனை நெருடல்கள்?!
மன நிம்மதியைக் குலைக்கும் காரணிகள்?!

பற்றுறுதி மிக்க செபவழிப்பாட்டின் மூலம்
பஞ்சமா பாதகர் மனத்தை மாற்ற முடியும்
எவரும் கடைசி நம்பிக்கையைக் கடவுள் மேல்
இழக்கத் தேவையில்லை! என்று உணர்த்த
இந்த நூற்றாண்டின் வரலாற்று முகங்களுக்கு
முகவரி ஆகிறார் குழந்தை தெரேசு.

நிழல்களில் தங்களையே தொலைத்த
மானிடரின் நந்தவனத்தில்
நிஜங்களின் வேர்களை அடையாளம் காட்டி
நினைவுச் சின்னமாய்த் திகழ்கிறார் சிறுமலர்!

சாதாரண அன்றாட நிகழ்வுகளை
அசாதாரண மனநிலையுடன்
அசாத்தியமாய்ச் செயல்படுத்துவது
சாத்தியம் என்கிறது மௌனமாய் வரலாறாகிவிட்ட
சிறுவழித் தெரேசுவின் பெருங்கதை!



சொந்தக் கதையே சோகக்கதை
என்பவர் நடுவே
சோகக் கதையே சொந்தக் கதையாய்
சுகமான அனுபவக் கதையாய்க்
கற்றுக் கொடுத்ததும்
சிறகடித்துப் பறந்து விட்ட
சிறுமலரின் கதை இது!

மறைந்தே வாழ்ந்த தெரேசுவின்
வாழ்வியல் நடைமுறைகள்
புது யுகத்துக்கும் வழிகாட்டும் பாடங்கள்
மானிட நேயத்தின் அன்றாட வேதங்கள்!

தெரேசுவின் வாழ்க்கையை
உள்வாங்கும் உள்ளங்கள்
உயர்நிலையில் நிலைக்க வேண்டும்
என்பதே இம்மொழிபெயர்ப்பாளர் ஆதங்கம்!

நம் தாய் தமிழில் வார்த்தெடுக்க
வழி வகுத்துத் தூண்டுதல் புரிந்து
நூலாக்கம் பெற வழிவகுத்த
ஏற்காடு, கார்மல் சபைச் சகோதரிகளுக்கு
என் முதல் மரியாதை!

நூல் செம்மையாக்க
உருவாக்கத்தில்
ஏற்றங்களுக்கான மாற்றங்கள் புரிந்த
என் ஆர்வமிகு ஆசான்

முனைவர். அ. அந்தோனி குருசு
அவர்களுக்கு என்றும் என் நன்றி.
அணிந்துரை வழங்கிப் பெருமையளித்த
அகில உலகக் கார்மல் சபைத் தலைமைத் தந்தையின்
ஆலோசகர் அருட்பணி. தோமினிக்,
வாழ்த்துரை வழங்கி உற்சாகப் படுத்திய
அருட்பணி. சி.கே. சுவாமி சே.ச.,
பாராட்டுரை வழங்கி ஊக்கமுட்டிய
எமது தமிழகக் கார்மல் சபை தலைமைத் தந்தை
அருட்பணி. அருள்ராஜ் ஆகியோருக்கு
அலைகளாய் எழும் நெஞ்சின் நன்றிகள்!

பிரெஞ்சு மொழி பெயர்களைத்
தமிழ் ஒலி பெயர்ப்புச் செய்து உதவிய
அருட்பணி. பவுல் லியோன்,
இம்முயற்சியில் உடன் நின்று உதவிக் கரம் நீட்டிய
அருட்பணி. அமல்ராஜ் OCD, அருட்பணி. பீட்டர் ஜீலியன் OCD,
இந்நூலை கணினிப்படுத்த உதவிய தோழர் ஆண்டோ,
அச்சு அமைப்புகளைத் திறம்பட செய்து தந்த
அருட்பணி. அ. மரிய சார்லஸ் ச.ச., மற்றும் சிகா அச்சகத்தினர்
என் வளர்ச்சியைத் தமதாக்கிக் கொள்ளும்
அன்பு உள்ளங்கள் அனைவருக்கும்
இதயம் நிறைந்த நன்றிகள்!!!

கார்மல் இறையியல் கல்லூரி
திருச்சி 12
02 - 01 - '98

புன்னகையுடன்
ஜோ. ஆல்பர்ட் OCD





15 வயதில் தெரேசு (ஏப்ரல் 1888)

# 1

## அலென்சோனில்

1873 - 1877

*"மண்ணில் மலர்ந்தவை யாவும்*
*புன்னகை செய்து என்னில் குதூகலித்தன"*

### விருட்சமாகும் விதை (2 சனவரி 1873)

"என் குட்டி மகள் பிறந்து விட்டாள். என்ன அழகு! எத்துணை அழகு! நேற்று வியாழன் மாலை 11.30 மணிக்குப் பிறந்த அவள் நலமாகவும் வலுவாகவும் இருக்கிறாள். எடை எட்டுப் பவுண்டு என்றார்கள். ஆறு பவுண்டு என்றுரைத்தாலும் தவறில்லை. என் உள்ள மெல்லாம் ஆனந்த துள்ளல்கள். முதலில் எனக்கு ஆச்சரியம் தான். ஆண் குழந்தை என்று தான் எதிர்ப்பார்த்திருந்தேன். காரணம் வயிற்றுக்குள் அவ்வளவு கிளர்ச்சி. மற்றக் குழந்தைகளைச் சுமந்த போது இல்லாத பாரம். பிரசவ நேரம் முப்பது நிமிடங்கள் தாம். ஆனால் அதற்கு முன்பு அனுபவித்த வேதனைகள் எண்ணிலடங்கா! எண்ண இயலா!"

1873 ஆம் ஆண்டு சனவரி மூன்றாம் நாள் செலிமார்ட்டின் தன் ஒன்பதாவது குழந்தையின் மகிழ்ச்சியான பிறப்பைக் குறித்துத் தன் தம்பி இசிதோர் கேரெனுக்கும், மைத்துனி எலீசாவுக்கும் வரைந்த மடல் இது.


அதே மாதம் நான்காம் நாள் பிற்பகல் தூய மரியன்னை ஆலயத்தில் அருட்பணியாளர் த்யூமேன் (Dumaine) குழந்தைக்கு மரி பிரான்சுவாஸ் தெரேசு மார்ட்டின் (Marie - Francoise - Therse Martin) என்னும் பெயரில் திருமுழுக்கு அளித்தார். 13 வயது நிரம்பிய தமக்கை மரியாவே அவருக்கு

ஆன்மீகத் தாயானார். அதே வயதுள்ள பவுல் அல்பேர் பூல் (Paul - Albert Boul) ஆன்மீகத் தந்தையானார்.

பாரம்பரியமாகவே குடியானவர்களையும், இராணுவ வீரர்களையும் கொண்ட குடும்பம் அது. சாதாரணம் என்றாலும் அசாத்தியப் பின்னணி கொண்ட அக்குடும்பத்தில் விருட்சமாகும் விதையும் எழுந்து முளைத்தது.

## ஆதர்ச இளைஞன்

லூயி மார்ட்டின் (Louis Martin) 1823 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22 ஆம் நாள் போர்தோ (Bordeaux) என்னுமிடத்தில் பிறந்தார். அவருடைய தந்தை ஓர் இராணுவ வீரர். தந்தையின் இராணுவப் பாசறையிலேயே தனையனும் துடிப்புடன் வளர்ந்தார். கைக்கடிகாரம் உருவாக்கும் பணியில் தனியார்வம் இருந்தது. அதையே வாழ்க்கைத் தொழிலாக மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். ஆனால் 22 ஆவது வயதில் இளமை இதயத்தில் தணியாத இன்னுமோர் தாகம் உதித்தது. அது "இறைவனே வாழ்வின்



நாற்பது வயதில் தெரேசாவின் தந்தை (1863)



இலக்கு; மையம். அவரது பணியை உலகிற்கு ஆற்ற நான் துறவியாய் மாற வேண்டும்" என்பது. சிறு பொறி பெரு நெருப்பானது. ஆல்ப்ஸ் மலை உச்சியில் அமைதியான சூழலில் தனித்து நின்ற தூய பெர்னார்து இல்லத்தை அணுகினார். காடுகளிலும் மலைகளிலும் வழி தவறியோரைக் கரை சேர்க்கக் காத்திருக்கும் கலங்கரை விளக்கம் அது. அவரும் அதனை நாடிச் சென்றார். வழி தவறிய அகதியாய் அல்ல! தடம் தெரிந்து துறவியாய் வாழ. ஆனால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. துறவியாய் வாழ விரும்புவோர் இலத்தீன் மொழிப்புலமை பெற்றிருக்க வேண்டும் என்கிற சட்டம் உண்டே! அம்மொழியைக் கற்றறியாத அவரது இதயம் கனத்தது. ஏமாற்றத்துடன் இல்லம் திரும்பினார். தீவிரமாய் அம்மொழியைக் கற்கத் தொடங்கினார்.

பாரீஸில் மூன்று ஆண்டுகள் வாழ்ந்தார். இளமை ததும்பிய தனி மனிதன் மார்ட்டினுக்கு "நவீன பாபிலோன்" எனக் காட்சி விரித்தது பாரீஸ் நகரம்; எனினும் 1850 ஆம் ஆண்டு பெற்றோருடன் அலென்சோன் நகருக்குச் சென்று தங்கினார். அங்கே அவர்களுக்குச் சொந்தமான அழகிய நகைக் கடை ஒன்று போன் நெஃப் (Pont - Neuf) என்ற 'ஒன்பதாவது பால வீதி'யில் 15ஆம் எண்ணில் இருந்தது. ஆனால் அதில் பணிபுரிய அவருக்கு விருப்பமில்லை. தியானம், உழைப்பு, மௌனம் இவையே அடுத்து எட்டு ஆண்டுகளின் தொகுப்பு. அவருக்குப் பிடித்த பொழுது போக்கான மீன்பிடித்தல் மட்டுமே மாற்றுவேலை. விட்டால் ரொமே (Vital Romet) எனும் நண்பன் தொடங்கிய கத்தோலிக்கக் குழு இளைஞர்களுடன் பொழுதினைக் கழித்தார். எனினும் 'இறைவனில் இணைதல்' என்கிற இலக்கிலிருந்து அவரது சிந்தனை சிதறவேயில்லை.

இலத்தீன் கல்வியைக் கைவிட்டார். நம்பிக்கையில் உயிரோட்டம் பெற்றார். ஞானத்தில் வீரியம் கொண்டார். பொருள் இழப்பு, வியாபாரச் சரிவு ஏற்படும் எனத் தெளிவாகத் தெரிந்தாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் வியாபாரம் செய்ததில்லை. தினமும் திருப்பலி, இரவு ஆராதனை, புண்ணியத் தலங்களுக்குத் திருப்பயணங்கள் என்று வாழ்க்கை தொடர்ந்தது. இல்லறத்தில் துறவறமே வெற்றி நடைபோட்டது. தாம் ஒரு கிறிஸ்தவர் என்பதை வெளிக்காட்ட வாழ்வில் ஒருபோதும் வெட்கப்பட்டதில்லை. அவரது உடல் தோற்றம், பண்பு, ஒழுக்கம், செயல்பாடுகள் அனைத்தும் அலென்சோன் நகர் இளம் மங்கையரைக் கவர்ந்தன. எனினும் அவர் அதைக் கண்டு கொண்டதில்லை. இருமாடிக் கட்டடம், அழகிய மாளிகை, அறுங்கோண கோபுரம், கண்கவர் தோட்டம், திறந்தவெளி அரங்கம் ஆகியவை அவரைக்

கவரவில்லை; மாறாக, தனிமைப்படுத்தின. பண்பு நிறை இளம் பெண் ஒருவர் அன்பளிப்பாய் அளித்த தூய அன்னையின் திருவுருவச் சிலையைத் தினமும் தாம் பார்க்கும் வண்ணம் பொது இடத்தில் நிறுவி மலர்களால் அலங்கரித்து வந்தார்.

மார்ட்டினின் அன்னைக்கோ வருத்தம். மகனுக்கு வயதோ முப்பத்து நான்கு. மணம் செய்து கொள்ளும் எண்ணமே அவனது சிந்தனையில் எழவில்லையே! என்ற ஏக்கம். காலம் கனிந்தது. அலென்சோனில் நடை பெற்ற நூற் பின்னல் பயிற்சிப் பாசறையில் மார்ட்டினின் அன்னையும் பங்கு பெற்றார். அங்கு அழகு, கவர்ச்சி, கிறிஸ்தவப் பண்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற இளம் நங்கை ஒருவர் எதார்த்தமாய் அவர் கண்ணில் பட்டார். உள்ளத்தைக் கொள்ளை கொண்டார். இதயத்தின் ஆழத்தில் அன்பு மொழி பேசினார். அவர் பின்னல் கலையில் பெரும் தேர்ச்சி பெற்றவர். அலென்சோன் நகர் முகவரிக்கு ஐரோப்பிய நாட்டில் முகம் காணச் செய்தவர் அவர். அன்னையின் மனம் குளிர்ந்தது. முகம் மலர்ந்தது. இனியும் அவரைத் தம் மகனின் வாழ்க்கைத் துணைவியாகத் தேர்ந்தெடுப்பதில் தடை ஏற்படவில்லை.

## மங்கையருள் மாணிக்கம்

மரி அசேலி கேரென் (Marie - Azelie Guerin) 1831 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23 ஆம் நாள் காந்தலேன் (Gandelain) எனும் நகரில் பிறந்தார். இளமையின் செழிப்பு குறையின்றிப் பொங்கும் வயது. அவர் தந்தை இசிதோர். முன்னாள் வாக்ராம் இராணுவ வீரர். ஸ்பெயின், போர்த்துக்கல் நாடுகள் உள்ளிட்ட பன்னாடுகளில் பயணித்து, இறுதியில் தூய தெனி (St. Denis) என்னுமிடத்தில் காவலராக வாழ்ந்தார். 1828 ஆம் ஆண்டில் லூயிஸ் இஷ்ஷான் மஸ்ஸே (Loius - Jeanne - Mace) என்னும் துணைவியுடன் இல்லறமாம் நல்லறம் மேற்கொண்டார். இஷ்ஷான் மஸ்ஸே எழுத்தறிவு இல்லாத கிராமவாசி. எனினும் இருவரது ஒன்றுப்பட்ட உறவில் பண்பாடு பரிணமித்தது. இனிமையான குழந்தைப் பருவத்தை அனுபவிக்காத செலி அதற்கான காரணத்தைத் தன் தம்பிக்கு இவ்வாறு எழுதினார்: "என் குழந்தைப் பருவம், இளமைப் பருவம் சோகத்தையே சொந்தமாக்கியது. மரணம் அடைந்தவரை மூடி மறைக்கும் துணி உண்டாக்குகிற சோகத்தைப் போல என் வாழ்வு பிறருக்குச் சோகத்தையே தந்தது. வெறுமை, சலனம், சஞ்சலம் இவையே உள்ளத்தை நிறைத்தன. அன்னை உனக்குச் சுதந்திரம் கொடுத்தார். செல்லமாய் உன்னை வளர்த்தெடுத்தார். எனக்கோ வரம்பு மீறிய கட்டுப்பாடு. வாழ்வோ பெரும் சுமை. . . இடுகாடு என ஆயிற்று.





*தெரேசுவின் தாய், மாமா, பெரியம்மா (1857)*

அவர் நல்லவர். எனினும் அவருக்கு என்னைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லை. இதனால் வருந்தினேன்; துன்புற்றேன்; சோர்ந்து கண்ணீர் உகுத்தேன்."

எழுத்தாற்றல், நுண்ணறிவு இவை செலிக்குப் பிறப்பிலேயே கிடைத்த கொடை. கடின உழைப்பு, எளிமை, நல்லொழுக்கம் போன்ற நற்பண்புகளில் சிறந்து விளங்க முயற்சி செய்தார். ஆனால், மனத்தில் வறுமை, வெறுமை போன்றவை நீங்கா இடம் பெற்றன; 'தாம் செய்தது சரியா ? தவறா ? தீயதா ?' எனப் பகுத்தறிய இயலா அங்கலாய்ப்பு, சஞ்சலம் ஆறா வடுவாய் நின்று அவருள் நிலைத்தது. அன்றைய ஆன்மீகம் அவரை ஆற்றுப்படுத்த இயலவில்லை. மனிதர் எளிதில் பாவம் செய்யக் கூடியவர்கள் என்ற கருத்தை அன்றைய திருச்சபை அதிகம் வலியுறுத்தியது. அதன்படி 'தாம் செய்யும் பணிகள் அனைத்திலும்' குறை இருப்பதாகக் கருதிக் கடிந்து கொள்வார். எனினும் அவரது பாமர அறிவு இத்துயர்களிலிருந்து விரைவில் அவரை விடுவித்தது. "நானோ புனிதராக விரும்புகிறேன். அது எளிதல்ல. தீய

குணங்களாகிய கிளைகள் பல என்னில் உண்டு. கவனமுடன் அவற்றை நான் களைந்திட வேண்டும். அதுவும் எளிதல்ல. ஏனெனில் கிளைகள் கல்லினும் கடினமாய்த் தென்படுகின்றன."

செலியும் துறவி ஆக எண்ணினார். தன் அன்னையுடன் த்யூ (Hotel - Dieu) துறவகத்தின் இல்லத்தலைவியை அணுகினார். தொலை நோக்குப் பார்வை கொண்ட அவருக்குத் துறவியாகும் வாய்ப்பு அங்கு மறுக்கப் பட்டது. ஏமாற்றமே சொந்தம் கொண்டாடியது. மனம் அயர்ந்தாலும் நம்பிக்கை இழக்கவில்லை. துணிவுடன் அன்றாட வாழ்க்கையை மேற்கொண்டார். அலென்சோன் நகரில் நூற்பின்னல் தொழிலில் மதி நுணுக்கத்துடன் தம்மையே ஈடுபடுத்திக் கொண்டார். 1853 இல் சுயமாய் வியாபாரம் மேற் கொள்ளும் அளவுக்குக் கலையைக் கச்சிதமாய்க் கற்றுத் தேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 22. ஆரம்பத்தில் மூத்த சகோதரி மரி-லூயிஸ் செய்த பணி உதவி கிடைத்ததால் சுமை எளிதானது. விரைவில் மரி லூயிஸ் மாதா மினவுதல் சபையில் துறவியாகச் சேர்ந்தார். செலி தனிமையானார். கடிதத் தொடர்பே இருவரையும் இணைத்தது.' செலியை ஆற்றுப்படுத்தியது. ஆனால் அந்தச் சகோதரியின் மரணம் அதற்கும் முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

மார்ட்டின் - செலி இருவரும் சந்தித்துக் கொண்டனர். அது தான் முதல் சந்திப்பு! ஓர் எதார்த்தமான சந்திப்பு. ஆனால் ஆழமான சந்திப்பு. மூன்றே மாதத்தில் இருவரையும் நிரந்தரச் சந்திப்பாளர்களாக்கியது. 1858 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் நாளில் அன்றைய வழக்கப்படி நள்ளிரவில் தூய மரியன்னை ஆலயத்தில் திருமண வாக்குறுதி செய்து கொண்டார். நூற்பின்னல், கைக்கடிகாரக் கலைஞர் ஆகிய இருவர், இல்லறத்தில் இணைந்து புதுக் கலைக் குடும்பத்தை உருவாக்கிடத் துணிந்தனர். மகிழ்ச்சி நிறைந்ததும், வியப்பானதுமான முறையில் திருமண வாழ்வு தொடங்கியது. அண்ணன் - தங்கை சகோதர உறவுடன் வாழ விரும்புவதாக மார்ட்டின் தம் மனைவியிடம் கூறினார். மனமோ மறுத்தது. எனினும் கீழ்படிதலுடன் செலியும் இசைந்தார். பத்து மாதங்கள் வரை இல்லறத்துறவறமும், துறவற இல்லறமும் மேற்கொண்டனர். ஆன்மீக ஆலோசகர் ஒருவரது ஆலோசனை அவர்கள் வாழ்வில் மாற்றம் கொணர்ந்தது. கணவன் மனைவி உறவில் நிறைவை எய்தினர். அந்நிறைவான வெளிப்பாடு மழலையாகப் பரிணமித்தது. ஒன்பது குழந்தைகளை உலகம் காண வழிவகுத்தனர். ஏழு பெண்கள், இரண்டு ஆண்கள்.

19 ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் குழந்தைகள் எளிதில் இறந்துபட்ட




காலம். 1860 முதல் 1870 வரை பிறப்பும் இறப்பும் தொடர் நிகழ்வுகள் ஆயின. மார்ட்டினின் குழந்தைகள் மூவர் சிசுக்களாய் இறந்தனர். ஐந்தரை வயதில் அழகிய சிறுமி ஹெலனும் உலகினின்று விடை பெற்றாள்.

1859 மற்றும் 1868 இன் இடைப்பட்ட காலத்தில் செலி தன் பெற்றோரை இழந்தார். துயர நினைவுகள் செலியைத் துரத்தின. கடைக்குட்டி தெரேசு பிறந்த பிறகு தம் தம்பிக்கு எழுதிய மடலில் "துயரங்கள் பல அனுபவித்து விட்டேன்" எனச் செலி உளக் கவலையை வெளிப்படுத்துகிறார்.

ஹெலனின் இறப்பு மாபெரும் வெற்றிடத்தை இதயத்தில் உருவாக்கியது. இதனை நிரப்பிட இன்னும் ஒரு "சிறிய தெரேசு' வேண்டுமெனக் காத்து ஏங்கியிருந்தார். தெரேசினது பிறப்பு அந்த ஏக்கத்தைத் தணித்து மகிழ்வை அளித்தது. அவரே தமது இறுதிக் குழந்தையாய் இருப்பார் எனச் செலிக்கு உறுதியாகத் தெரிந்திருந்தது. ஏனெனில் மார்பில் தோன்றிய கட்டியொன்று அவருக்குப் பெருந்துயர் தந்தது. ஆண்டுகள் கடந்த பின்பும் நோய் நீங்கும் அறிகுறி இல்லை. பணியில் ஆர்வம் குன்றவுமில்லை. 'இறைவன் என் மழலையை ஆதரித்து அன்பு செய்ய அருள் புரிவாரெனில் பெரிதும் மகிழ்வேன். குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்காகவே பிறவி எடுத்துள்ளேன். இந்த ஆற்றலும் விரைவில் குன்றிப் போகும். வயதும் இம்மாதத்தில் நாற்பத்தொன்று ஆகிவிடும். இது தாயாகும் வயதா? பாட்டியாகும் வயதல்லவா?' எனச் செலி தமக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

## நல்லறமே இல்லறமாய் அலென்சோனில்

கடைக்குட்டி கண்மணி ஆனது. செல்லக்குட்டி தங்கக்கட்டி ஆனது. குழந்தையைக் கையில் எடுப்பதில் போட்டி, கொஞ்சுவதில் போட்டி, பராமரிப்பதில் போட்டி. மூத்த சகோதரிகள் அனைவரும் குழந்தையின் மீது பாச மழை பொழிந்தனர். நால்வரின் ஆளுமையும், இயல்பும் வெவ்வேறானது. மூத்தவர் மரியா பதின்மூன்று வயதினர். இதுவரை தந்தையின் செல்லப்பிள்ளை. சுய செயல்வாதி. விடுதலை விரும்பி. இயல் பாகச் செயல்படக்கூடியவர். திருமணம், துறவறம் எதைப் பற்றியும் பேச விரும்பாத மெல்லியர். பன்னிரெண்டு வயது நிரம்பிய பொலீன் (Pauline) லெமான் (Le Mans)நகர் மாதா மினவுதல் இல்லத்தில் உள் விடுதி மாணவி யாகத் தங்கிக் கல்வி பயின்றார். மன உறுதிப்பாடும், கல்வியறிவும் கொண் டவர். இதுவரை தாயின் செல்லப் பிள்ளையான லேயோனி (Leonie)க்கு வயது பத்து. இல்லத்தில் நடுக்குழந்தை. இருவர் பெரியோர்; இருவர் சிறியோர். இவர்களுக்கிடையே தான் நெருக்கப்படுவதால் உள்ளுக்குள்




தெரேசு பிறந்த இடம்.



ஓர் சிறிய எண்ணம். 'பாவம். . . லேயோனி' அவளுடைய உடல் நோய், கவர்ச்சியற்ற தன்மை, பள்ளியில் துடிப்பற்ற போக்கு போன்றவை அவரைத் தனிமைப்படுத்தின. பள்ளிக்கு அனுப்புவதிலும் தயக்கம். எனினும் செலி தம் தமக்கை துறவியாய் இருந்த மாதாமினவுதல் இல்லத்திற்கு லேயோனியை அனுப்பிய போது ஆறு மாதமே அங்குத் தங்கினார். 'என்ன செய்வது? எனக்குக் கிடைத்த சிலுவை!' என்று எண்ணிச் செலி நொறுங்கினார். செலின் துடிப்பு மிக்க நான்கு வயதினள். மென்மை யானவள். குணங்களில் புதிய வரவான தெரேசைப் போன்று இருந்தாள்.

மார்ட்டின் இல்லத்தில் குடும்பத் தலைமைப் பொறுப்புகளைச் செலி ஏற்றுக் கொண்டார். கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றினார். ஆயினும் கணவரின் அமைதிப் போக்கை என்றுமே குறை கூறியதில்லை. "என் கணவர் தூய மனிதர். எனக்குக் கிடைத்தது போலவே எல்லாப் பெண்களுக்கும் வாழ்க்கைத் துணைவர் அமையப் பெற வேண்டும் என விரும்புகிறேன்." என்றார். அவர்களது கடின உழைப்பும், நிர்வாகத் திறனும் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையச் செய்தன. திருமணத்தின் போது மார்ட்டின் தம்பதியரிடம் 34,000 பவுண்டுகள், இரண்டு வீடுகள், அரங்கம் எனச் செல்வங்கள் இருந்தன. செலி தம் தொழிற்கூடத்தில் இருபது பணியாளர்களை வேலைக்கு அமர்த்தியிருந்தார். அவர்கள் ஒவ்வொரு வாரமும் பின்னல்களைக் கொணர்ந்து ஒப்படைத்தனர். எட்டு சென்டிமீட்டர் சதுரத் துணியின் பின்னல் வேலையை முடிக்க 60 மணி நேரம் ஆகியது. முன் எழுந்து, பின் அயர்ந்து உழைப்போருடன் தம்மையும் பணியில் இணைத்துக் கொண்டார். வியாழன் தோறும் வாடிக்கையாளர்கள் வருகை தந்தனர். 1872 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் செலி இவ்வாறு குறிப்பிடுகின்றார்: 'இப்பணியில் அடிமையாய் என்னையே ஈடுபடுத்திக் கொண்டேன். தொடர்ந்து என்னுடைய பின்னலைப் பெற ஆள்கள் வருவதால் சிறிது நேர ஒய்வும் கிடைப்பதரிது. இன்னும் நூறு மீட்டர் நூற் பின்னல்களைத் தயார் செய்ய வேண்டியுள்ளது.' லூயிஸ் தமது கைக் கடிகாரப் பணியைக் கைவிட்டார். 1870 ஆம் ஆண்டில் அதைத் தம் சகோ தரன் மகன் அடோல்ஃப் லெரிஷெக்கு (Adolf Leriche) விற்றுவிட்டார். செலியின் பணியில், நிர்வாகம், மற்றும் விற்பனைப் பொறுப்புகளை ஏற்று அவருடைய பணி வெற்றி பெற மார்ட்டின் ஒத்துழைத்தார்.

1870 இல் நடைபெற்ற பிரான்ஸ் - ஜெர்மனி போருக்குப் பின் அலென்சோன் பகுதி விடுதலைக் காற்றைச் சுவாசித்தது. சற்று அமைதி நிலவினாலும் மக்கள் மனத்திலிருந்து போரின் அச்சங்கள் மறைய நாள்கள்



செமால் -இல் தெரேசு வளர்ந்த இல்லம்.

சிலவாயின. மார்ட்டின் குடும்பத்தினரின் உள்ளங்களினின்று 'அலென் சோன்' நகரை ஆட்டிப்படைத்த அப்போர் ஏற்படுத்திய தாக்கம் மறைந்ததாகத் தெரியவில்லை' ஏனெனில் ஒன்பது இராணுவ வீரர்களுக்குப் புகலிடம் அளிக்கும் கடமை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர்கள் 'கொள்ளையருமல்ல, கொடியவருமல்ல'. ஆனால் செலி அவர்கள் மீது கோபப்படுவதற்குக் காரணம் அவர்களது உணவுப் பழக்கம். 'எதையும் விழுங்கக் கூடியவர்கள்'. அவர்கள் வெளியேறிய பின்பு தொழில், முந்திய நிலையைப் போல் சிறப்பாக நடைபெற்றது.

1873 ஆம் ஆண்டில் கத்தோலிக்கர் கலங்கித் தவித்தனர். கம்யூனிசத்தின் கொடுமைகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரு புரட்சி வெடிக்கக் கூடும் எனப் பயந்தனர். 1872 மே திங்களில் 20,000 பேருடன் லூயி மார்ட்டின் ஷார்த்தெர் (Chartres) என்ற இடத்திற்குத் திருப்பயணம் மேற்கொண்டார். அடுத்த ஆண்டும் அதே இடத்திற்கு மீணடும் பயணித்து, கோடையில் லூர்து நகர் சென்றார். எந்த நேரத்தில் என்ன நிகழும் என்கிற உறுதிப்பாடற்ற காலம் அது. அச்சுறுத்தும் 'முன்னுரைப்பாளர்கள்' தோன் றினர். அலென்சோனில் அதிபயங்கர நிகழ்வுகள் நடைபெறப் போவதாக முன்மொழிந்தனர்.

16,000 மக்கட் தொகை கொண்ட அலென்சோன், சிறு நகரம். ஆனால் 'சீமான்களின் நகரம்; சிற்றரசர்களின் நகரம்' அழகிய கண்கவர் கவர்ச்சி



நகரம், அமைதி நகரம், நூற்பின்னல், பைகள் போன்றவற்றிற்குப் பெயர் பெற்ற நகரம். வாரச் சந்தைகள் மூன்று நாள்கள், ஆண்டுக் கண்காட்சிகள் ஏழு முறை நடைபெற்றன. இந்நகரில் ப்ரியாந்த் (Briante) மற்றும் சார்த் (Sarthe) ஆகிய இரு நதிகள் பாய்கின்றன. படைத் தளங்கள் கொண்ட இரு கோட்டைகள் உள்ளன. தற்போது இந்நகரம், ஆட்சித்துறைத் தலைவரின் பணிமனையாக்கப்பட்டுள்ளது. மன்னன் நான்காம் ஹென்றியின் இல்லமும், திரையரங்கும் கண்கவர் காட்சிகளும் நிறைந்த பழைய வீடுகளும், அலென்சோனின் பெருமையைப் படம் பிடித்துக் காட்டின.

கீழ் நடுத்தர வர்க்க நிலையினின்று மேல்மட்ட நடுத்தர நிலைக்கு உயர முயன்று வந்த குடும்பமே மார்ட்டினின் குடும்பம். திறந்த, பரந்த வெளியுடன் அமைந்த கிராமப் பகுதியைத் தொடர்ந்து இருந்தது இந்நகரம். இதன் அமைதியும், ரம்மியமுமான சூழ்நிலையே அவர்களின் மனங்களைக் கவர்ந்தது. சிறிய தெரேசு மூன்றரை ஆண்டுகளே இம்மண்ணில் தவழ வாய்ப்புப் பெற்றாள். இக்குழந்தைப் பருவ காலங்களே அவரது ஆளுமையைக் கணித்தன.

## நிழலே நிஜமானது (1873 மார்ச் முதல் 1874 ஏப்ரல் 2 ம் நாள் வரை)

'இது என்ன மத்தாப்புச் சிரிப்பு. . . மலர்களின் கொண்டாட்டமோ? அழகு என்பதற்கு இத்தனை ஆழமான அர்த்தங்கள் உண்டோ?' என எல்லோரும் வியக்கும் அளவுக்குக் குழந்தை தெரேசு உருவாகிக் கொண்டிருந்தாள். அவளது பிறப்பால் அனைவரது உள்ளத்திலும் அக்களிப்பு. செலியின் மனம் ஆனந்தக் களிப்பில் திளைத்தது. மகிழ்ச்சியோ நெடுநாள் நீடிக்கவில்லை. கலக்கங்களும் தலை தூக்கின. செலியின் நோய் அதிகரித்தது. மார்பு வறண்டது. குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவது கடினமானது. குடல் கோளாறுகளும் வலுத்தன. இரவுகள் நீண்டன. குடல் அழற்சி; பல குழந்தைகளின் உயிரைப் பறித்த நோய் இது. இந்தக் குழந்தையும் இறந்து விடுமோ? என அன்னையின் அச்சம் பெரிதானது. 'தம் மழலைகளுக்குப் பாலூட்டி மகிழும் அன்னையரை எண்ணி நான் மகிழ்வதுண்டு. என் கண் முன்பே என் மழலைகள் மரண பாதையைப் பார்க்கும் நிலை எனக்கு நிகழ வேண்டுமா?' என்று மனம் கசிந்தார். தாய்ப்பால் மறுப்பு, நோய் எதிர்ப்புச் சக்தியின்மை போன்றவை தெரேசைத் தொடர் நோயாளியாகவே மாற்றப் போகிறது. இந்த உண்மையைச் செலி அந்நேரம் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

1873 ஜனவரி மற்றும் பிப்ரவரியில் குழப்பங்கள் நீடித்தன. ஒரு நாள்

இரவு குழந்தை, மரணத்தின் விளிம்பைத் தொட்டுத் திரும்பியது போல் தோன்றியது. மருத்துவர் பெல்லோக் (Dr. Belloc) எச்சரித்தார். தாய்ப்பால் புகட்டவில்லையேல் குழந்தை இறந்துவிடும். எனவே உடனடியாகச் செவிலித்தாய் ஒருவர் தேவை என உணர்த்தினார். மறுநாள் செலி மனச்சுமையுடன், அழுகையுடன் எட்டுக் கிலோ மீட்டர் நடந்து பயணித்து செமால் (Semalle) என்னும் ஊரை அடைந்தார். செவிலி ரோஸ் தாய் (Rose Taille) உதவியை நாடினார். செலியின் இறந்து போன இரு குழந்தைகளுக்குப் பாலூட்டியவர் ரோஸ். மறுப்பேதும் மொழியாமல் செலியுடன் புறப்பட்டுக் கால்நடைப் பயணமாகவே திரும்பினார். வந்ததும் பால் ஊட்டினார். தெரேசின் கண்கள் மலர்ந்தன. அவளது முகம் புன் முறுவல் பூத்தது. குழந்தை அமைதியாகக் கண் அயர்ந்தது. அனைவரும் ஆனந்தப் பெருமூச்சு விட்டனர்.

குழந்தை, செவிலித் தாயுடன் செல்வதே நல்லது என எல்லோரும் தீர்மானித்தனர். ரோஸ் முழு மனத்துடன் இணங்கிவிட்டார். ஆனால் ரோஸ்-இன் கணவர் மோசே (Moise) மறுத்தார். ஏனென்றால் அத் தம்பதியருக்கு நான்கு குழந்தைகள் இருந்தனர். கடைசிக் குழந்தை பிறந்து பதின்மூன்று மாதங்களே நிறைவெய்திருந்தது. பின்பு எவ்வாறு தெரேசையும் கூடுதலாகப் பராமரிப்பது? ஆனால் ரோஸ் தாம் கொடுத்த வாக்குறுதியில் உறுதியாயிருந்தார். எனவே கணவரும் இணங்கினார். நார்மனியில் உள்ள அந்தச் சிறிய குடிசையிலே தெரேசு ஓர் ஆண்டுக் காலம் வளர வேண்டி யிருந்தது.

கிராம வாழ்க்கை தெரேசுக்கு இன்பமாக இருந்தது. காற்று, மழை, வெயில், நிழல், கிராமச் சூழல் உள்ளத்திற்கு நிறைவு தந்தது. நோய்கள் நீங்கி வளர்ச்சி தொடர்ந்தது. மரங்கள், மலர்கள், இயற்கை, பறவைகள், விலங்குகள், அனைத்தோடும் அன்புறவு கொண்டாள். ஜுலைத் திங்க ளுக்குள் நதியில் நீந்தி மட்டுமல்ல, கதிர் ஒளியிலும் நனைந்து விளையாடி மகிழ்ந்தாள். மார்ட்டின் குடும்பத்தினர் கிராமத்துக்கு வருவது அதிகரித்தது. அலென்சோனின் வியாழக்கிழமைச் சந்தைக்குச் சிறுமி தெரேசு தன் செவிலித் தாயுடன் வெண்ணெய், முட்டை, காய்கறிகள் ஆகியவற்றையும் ரோஸின் செல்ல மாடான ரூஸ்ஸெத் (Roussette) தரும் பால் போன்ற வற்றையும் விற்பனை செய்யச் சென்றாள். தெரேசைச் சந்திக்கக் கிராமத்திற்கு வரும் போது மரியா, பொலீன், லேயோனி, செலின் அனைவரும் இயற்கையின் வனப்புகளைக் கண்டு இரசித்தனர். கிராமத்து உணவான கருமை நிற ரொட்டிகளைச் சுவைத்து உண்டனர். ரோஸின் குழந்தைகள்,



மார்ட்டின் குடும்பத்தினர் கொண்டு வந்த நகரத்து மக்களின் வெள்ளை ரொட்டிகளை உண்டு மகிழ்ந்தனர்.

தெரேசு வாழ்க்கையில் ஓர் கிராமத்து அத்தியாயம் தொடர்ந்தது. வைக்கோல் நிரம்பிய வண்டியின் மேல் அமர்ந்து வயலுக்குச் செல்வது போன்ற செயல்களால் தன்னைக் கிராமத்துப் பெண்ணாகவே மாற்றிக் கொண்டாள். நகர வாழ்வு அவளுக்கு அறவே பிடிக்கவில்லை. நகரத்துக் கலாச்சாரத்துடன் தன்னை இணைத்துக் கொள்ள அஞ்சினாள். ஆனால் அடிக்கடி பெற்றோரைக் காண நகரத்திற்குச் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் போது அன்னையின் அலுவலகத்தில் வாடிக்கையாளர் ஒருவர் அவளைப் பாசத்துடன் தூக்க முயலுகிறபோது வீறிட்டு அழுவாள். காரணம் அவரது கூந்தல் அலங்காரமும், தொப்பியும் அவளுக்கு அச்சத்தை உண்டாக்கின. கிராமமே சொந்த இருப்பிடமானது. அதை விட்டுப் பிரியவே மனம் இல்லை. செவிலித் தாயே உண்மை அன்னையானார். நிழலே நிஜமானது. வீட்டில் தெரேசின் அழுகையையும் கடும் சினத்தையும் கட்டுப் படுத்த மீண்டும் அவரைச் சந்தையில் தன் செவிலித் தாயுடன் இருக்கச் செய்ய வேண்டியதாயிற்று.

## மீண்டும் சொந்த மண்ணில்

சின்ன குட்டிப் பெண் நடைபயிலத் தொடங்கிவிட்டாள் ஒரு வயதில். ஆனால் வீட்டிற்கு இன்னும் வந்து சேரவில்லை. அனைவரும் இல்லத்தில் ஆவலோடு காத்திருந்தனர். 1874 ஆம் ஆண்டு ஏப்ரல் இரண்டாம் நாள் ரோஸ் வீட்டிலிருந்து பிறந்த வீட்டுக்கு அழைத்து வரும் நாள் குறித்தனர். அந்த நாளும் வந்தது- அழகிய புத்தாடை, நீலநிறக் காலணிகள், வெண்ணிறத் தொப்பி அணிந்து அந்த மகிழ்ச்சியான நாளில் குட்டித் தேவதையாகக் காட்சி தந்து வலம் வந்தாள். 'என் முதல் குழந்தைக்குப் பிறகு இதுவரை தெரேசைப் போல எந்தக் குழந்தையும் இவ்வளவு வலிமையாய் இருந்ததில்லை. அவள் அழகில் மிளிர்ந்தாள். அருளில் ஒளிர்ந்தாள்' எனச் செலி மகிழ்ந்து கூறினார்.

ஓராண்டுக் கிராம வாழ்க்கை தெரேசுவின் உள்ளத்தில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்திய தடப்பதிவுகள் நிலைத்தன. பதினைந்து மாதங்கள் கடந்தன. தனது குடும்பச் சூழலை விழிதிறந்து ஆராய்ந்தாள். மனத்தில் நிலைநிறுத்தினாள். அடித்தளத்தில் மூன்று அறைகள், படுக்கை அறைகள் மேல் மாடியில் தந்தை அமைத்துத்தந்த ஊஞ்சல், அது அமைந்திருந்த சிறிய தோட்டம் எல்லாம் மனத்தில் பதிந்தன. குட்டிக் குழந்தை தெரேசு

எனும் இளவரசியை ஊஞ்சலில் கயிற்றால் கட்டி வைத்து ஆட்டி விடுவார். உயரே செல்வதை ரசிக்கக் கற்றுக் கொண்டாள். ஆனால் 'உயரே செல்லாத போது அழுது தனது காரியத்தைச் சாதித்துக் கொள்வாள்' வீட்டுச் சன்னல் வழியாகத் தெருவின் மறுபக்கம் இருந்த ஆட்சித்துறைத் தலைவரது அலுவலகத்தைக் கண்டாள். சில சமயங்களில் செலினுடன் அங்கே ஆட்சியாளர் மகள் ஜெனி பெஷார்டுடன் (Genny Bechard) விளையாட செல்வதுண்டு. அங்குக் காணப்படும் பெரிய அறைகள், தாழ்வாரம், பூங்கா போன்ற சொகுசுகள், அச்சத்தையே அவளுக்கு ஏற்படுத்தின. அங்குச் செல்வதைவிடத் தனது சிறிய தோட்டத்தில் விளையாட விரும்பினாள். அச்சுறுத்தும் பிறரது பெரிய பூங்காவை விடச் சுகம் தரும் சொந்த சின்னஞ் சிறு நந்தவனமே சிறந்தது என எண்ணி நிறைவு கொண்டாள்.

விடுதியில் தங்கிக் கல்வி பயிலும் தன் இரு பெண்மக்களுக்கும் தவறாமல் ஒவ்வொரு ஞாயிறும் கடிதம் எழுதும் பழக்கத்தை மேற் கொண்டார் செலி. கடிதங்களின் பெரும்பகுதி கடைக்குட்டி தெரேசுவின் அழகு, அன்பு, கவர்ச்சி, செயல்பாடுகளின் விளக்கவுரையாகவே இருந்தன.

## குழந்தைப் பருவக் கனவுக் குமிழ்கள்

தெரேசுவின் அமைதியான வாழ்வில் மறக்க இயலாத் தருணங்கள் மெல்ல மெல்லத் துளிர்விட்டன. விடுதியில் படிப்போர் விடுமுறைக்கு வீடு திரும்பும் போது மகிழ்ச்சிக்கு எல்லையே இருப்பதில்லை. நகைச்சுவையும், நையாண்டியும், குதூகலிப்பும், கும்மாளமும் வீடு முழுவதையும் மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வைத்தன.

மற்றச் சகோதரிகளை விட, பொலீனைத் தெரேசு அதிகம் விரும்பி னாள். தன் 'வாழ்க்கையின் மாதிரியாக' அவரையே தேர்ந்தெடுத்தாள். வாழ் வில் சோர்வுறும் போது பொலீனைப் பற்றிச் சிந்தித்து ஆறுதல் அடைந்தாள்.

மார்ட்டின் குடும்பத்தின் வாழ்வு, சுற்றி வாழ்வோரின் கடுமையான எளிய வாழ்வைப் போல அமையவில்லை. வழக்கமாகச் சில அறைகள் மட்டும் வெப்பமாக்கப் பெற்றன. எளிய உணவே அன்றாட உணவு. இருந்தாலும் விழா நாள்கள் வித்தியாசம் பெற்றன. உணவு, உடை, உறவாடல் புதுப்பொலிவு பெற்றன. கிறிஸ்துமஸ், புத்தாண்டு நேரங்களில் பெற்றோர், உறவினர்கள் பிள்ளைகளுக்கு அன்பளிப்பு வழங்கினார்கள். அவை அனைத்தும் வீட்டின் நெருப்புக் கூடத்தின் முன்பு வைக்கப்படும். அனைவரும் கூடிக் கும்மாளம் அடித்துக் கதை அளந்த நாள்கள் எத்துணை இனிமையானவை! என்றும் மறக்க இயலாதவை! அலென்சோனிலிருந்து



முதன் முதலாகப் புகைவண்டிப் பயணமாக லெமானில் உள்ள மாதா மினவுதல் சபை இல்லத்திற்குச் சென்று பெரியம்மாவைச் சந்தித்து மகிழ்ந்தது என்றும் மனத்தை விட்டு நீங்கா நினைவாயின.

குழந்தை தெரேசு இயற்கையை நேசித்து ரசித்தாள். நந்தவனத்தில் ஓடி விளையாடினாள். மலர் பறித்தாள். பழம் சுவைத்தாள். படகில் தந்தையுடன் சென்று மீன் பிடித்தாள். மலர்கள் நிறைந்த புல் தரை மீது நடந்து மகிழ்ந்தாள். இவை போன்றவை தெரேசின் மனத்துக்குப் பிடித்த பொழுது போக்குகள். ஒரு நாள் செவிலித் தாயைச் சந்திக்கச் சென்ற போது சூறாவளிக் காற்றில் அனைவரும் சிக்கிக் கொண்டனர். உடலெல்லாம் தூசி, மழையில் நனைந்து உடைகள் நாசமாயின. தெரேசுவினுடைய உள்ளமெல்லாம் பரவிய மகிழ்ச்சி இயற்கையோடு இயைந்திருந்தது. இத்தகைய நினைவுகள் பல தெரேசுவின் நெஞ்சத்தில் நீங்கா நிலை இடம் பெற்றன.

குழந்தைப் பருவ நோய்களுக்கும் தெரேசு தப்பவில்லை. இரண்டு



மழலை தெரேசு மூன்றரை வயதில்.

வயதில் மேசையின் கால் மீது விழுந்த போது நெற்றியில் பயங்கர காயம் ஏற்பட்டது. 'எலும்பு வெளியே தெரியும்' அளவுக்குச் சதை கிழிந்தது. பல்வலி, அம்மை காய்ச்சல், சளி போன்றவை தொடர் தாக்குதல் நடத்தின. இந்நிலையைக் கண்டு அன்னை செலி வருந்தினார். 'பிறந்த நாள் முதல் நோய்களுக்குக் குறைவில்லை. நோய் எதிர்ப்புச் சக்தி குறைவினால் எளிதாக நோய் அவளைத் தாக்கி வருகிறது. அவற்றால் அவள் படும் வேதனைகளை எண்ணித்தான் என் உள்ளம் சுக்கு நூறாகி விடுகின்றது' எனச் செலி தம் குழந்தையின் நிலை கண்டு வருந்தினார்.

ஆனால் குறும்புக்குக் குறைவில்லை. இரண்டு வயது ஆனபோது ஒரு நாள் மழையில் மரியன்னையின் ஆலயத்திற்கு ஓடினாள். பணிப்பெண் லூயிஸ் அவளைப் பிடித்து அழைத்து வந்தார். ஓவெனக் கதறி அழத் தொடங்கியவள் ஒரு மணி நேரம் கழித்தும் அழுகையை நிறுத்தவில்லை. இந்தப் பிடிவாத குணமே தெரேசுவின் பிற்காலச் செயல்பாட்டுக்கு வித்திட்டது.

தெரேசுவின் முகத்தை முதன்முதல் படமாக்கியபோது அவளுக்கு வயது மூன்றரை தான்! வழக்கமாகக் புன்னகை பூரிக்கும் அவள் அன்று ஒத்துழைக்க மறுத்தாள். புகைப்படக் கலைஞரும் புதியவர். அவர் பயன்படுத்திய கருந்திரையும் புதிது; அதைக் கண்டு அச்சம் மேலோங்க அரண்டு அடங்கிப் போனாள்.

கருங்கூந்தல் சுருள்கள் நீல வண்ணக் கண்களுடன் இருந்த சுட்டிக் குழந்தை தெரேசு 'பருவத்திற்கு முன்பாகப் பக்குவமான' கனியாகத் தோற்றமளித்தாள். 'வயதை வெல்லும் வளர்ச்சி அடைந்து விட்டாள்' என்பதைச் செலி கண்டறிந்தார். 'அளவுக்கு மீறி அறிவுத் திறன். . . ஆறு மாதங்களுக்குள்ளே தங்கு தடையின்றி எளிதாக வாசித்து விடுவாள்' என மரியா நம்பிக்கையுடன் கூறினார். மூன்று வயதைத் தாண்டும் முன்பே தாய் மொழியின் நெடுங்கணக்கைத் தெளிவாகக் கற்றுக் கொண்டாள். ஆறரை வயதான செலினுக்குப் பொலின் கற்றுத் தந்த பாடங்களை மூன்று வயதான தெரேசு புரிந்துக் கொள்ளும் திறன் பெற்றிருந்தாள். 'தன் வயதிற்கும் அப்பாற்பட்ட அசாதாரணக் காரியங்களைச் சாதாரணமாகப் பேசுகிறாள்' என அன்னை பெருமிதம் கொண்டார். எல்லாக் குடும்பங்களையும் போலத் தெரேசின் மழலை மொழிகள் இந்தக் குடும்பத்திலும் அடிக்கடி நினைவில் கொணரப்பட்டன. சிறுவயதிலேயே தன் சகோதரிகளைக் கிண்டல் செய்தாள். 'ஒவ்வொரு நாளும் திரை அரங் கிற்குத் தந்தை உங்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக



அவர் முன் நல்லவர் போல் நடிக்க வேண்டாம்' என்று மாற்றுக் குரலில் உடன் பிறந்தோரை அதட்டினாள்.

தெரேசின் பிறவிகுணங்களில் ஒன்று 'கூர்நோக்குப் பார்வை'. அருகிலிருப்பவருக்குத் தெரியாமலே சுற்றி நடக்கும் நிகழ்வுகள் அனைத்தையும் உள்வாங்கிக் கொள்வாள். 'அவளது கற்பனா சக்திக்கு என்றுமே வளர்பிறை தான்'! அவள் சிறந்த சிந்தனைவாதி 'கருத்தாக்கம்' அதிகம் கொண்டிருந்தாள். நான்காம் வயதிலேயே விவாதத்தில் ஈடுபட்டாள். ஏன் கடவுள் எல்லாம் வல்லவர்? அண்டை வீட்டார் நற்பெயருடன் வாழ இயலாமைக்கான காரணிகள் என்ன? போன்ற வினாக்களை எழுப்பினாள். செலின் அவற்றுக்கு விளக்கம் தரப் பக்குவம் பெற்றிருந்தார்.

தெரேசுவின் நினைவாற்றலும் வியப்புக்குரியதே. தொடக்க காலத்திலேயே கவிதை வரிகளை அச்சரம் மாறாமல் சொல்லுகிற புலமை பெற்றிருந்தாள். அவளைச் சந்திப்பவர்களது செய்கைகளை அப்படியே திரும்பச் செய்து காட்டுவாள். அவர்கள் பேசுவதைப் போன்றே பல குரலுடன் பேசி நடித்தும் காட்டுவாள். தோட்டக்காரரும் அவளது கிண்டலுக்குத் தப்பவில்லை. 'அவரது இறந்து போன மனைவி கனவில் தோன்றித் தோட்டக்காரருக்கு வருத்தம் கொடுத்துள்ளார்' என்று கூறினால் மட்டும் அவர் மீது இரக்கம் கொண்டு கிண்டல் செய்வதை நிறுத்துவாள்.

அவளது குறுகுறுத்த நடையும், கலகலப்புமான பேச்சும் குடும்பத்தில் உள்ள அனைவரையும் மகிழ்வித்தன. 'காலை முதல் இரவு வரை சிரிப்பதும், வாழ்க்கையை அணுஅணுவாக ரசிப்பதுமே அவளது வேலை' எனச் செலி மகிழ்ந்து கூறுவார். இதயம் நெகிழப் பாடுவாள். சுட்டித்தனத்தில் கெட்டிக்காரி. உடன் பிறந்தோரைத் தன் தந்திரச் செய்கையால் சிக்க வைத்து மகிழ்வாள். 'மிகவும் முற்போக்காளராகவே இருந்தேன்' எனத் தெரேசு பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

## மென்மையிலும் பெண்மை

தெரேசுவின் குடும்பச் சூழல் பாசம், நேசம், அன்பு, பற்று, அணைப்பு, கரிசனை இவைகளின் கலவையாக இருந்தது. அச்சூழல் அவளின் மெல்லியல்புக்குத் துணை நின்றது. அனைவரும் அவள்மீது அன்பு பாராட்டினர், பரிவு காட்டினர். 'இதமான தோழமை, சீராட்டல், அரவணைப்பு, புன்னகை ஆகியவை என் இதயம் விட்டு அகலாத முதல் நினைவலைகள். இறைவன் தன் அன்பினால் என்னை ஆட்கொண்டார். என் சின்ன



அன்னை அரவணைப்பில்

திருத்தினர். அல்லது அதன் அறிகுறிகள் தென்பட்டாலே தடுத்து நிறுத்தினர். மார்ட்டின் குடும்பத்தில் 'கரிசனையுடனான கண்டிப்பு' குழந்தையின் எதிர்காலத்தைச் சிறப்பாக நிர்ணயிக்கும் என்பதைப் பெற்றோர் அறிந்திருந்தனர். ஒரு நாள் தெரேசின் தந்தை "சின்ன ராணி என்னிடம் வந்து எனக்கு ஒரு முத்தம் கொடு" என்று தெரேசிடம் கேட்டார். அதற்கு அவள் ஊஞ்சலில் அமர்ந்து கொண்டே, "நீங்கள் வந்து பெற்றுக் கொள்ளுங்கள் அப்பா" என்றாள். உடனே மரியா "குறும்புக்காரி! அப்பாவுக்கு இவ்வாறு பதில் சொல்வது தவறு" என்று சுட்டிக் காட்டினார். இந்தப் பாடம் தெரேசுவின் உள்ளத்தில் பதிந்தது.

தவறுதலாக ஒருமுறை பூப்பாத்திரத்தை உடைத்தபோதும், சுவர் அலங்காரத்தாளைக் கிழித்த போதும் மன்னிப்புக் கேட்க ஓடோடிச் சென்றாள்



தெரேசு. இவ்வாறு எந்தச் சின்ன தவறுகள் புரிந்தாலும் மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்பாள். 'மன்னித்து விட்டோம் என்று கூறினாலும், திருப்தியடையாமல் அழுது தீர்ப்பாள். 'தவற்றை ஒப்புக் கொண்டால் எளிதாக மன்னிப்புக் கிடைக்கும்' என்பது அவளது அசையா நம்பிக்கை. 'என் அனைத்துத் தவறுகளுக்கும் அடிப்படைக் காரணமே எனது அளவு கடந்த தன்னலம் தான்' என்று தெரேசு ஒப்புக் கொண்டாள். 'அன்று என்னுள் இருந்த மமதைக்கும் குறைவில்லை; வீண் ஆடம்பரங்களில் என்னை ஈடுபடுத்திக் கொள்வது எனக்கு ஆனந்தமே; வானத்து நீலநிறப் பின்ன லாடை அணிந்திருந்த போது வெயிலின் வெப்பத்திலிருந்து காத்துக் கொள்ளக் கரங்கள் மறைக்கப்பட்ட போது அழகிய எனது கரங்கள் மறைக்கப் படுகிறதே என்று வருந்திய நாள்கள் உண்டு எனத் தெரேசு தமது கடந்த கால அனுபங்களைப் பகிர்ந்து கொண்டார்.

## வாழ்க்கையின் நோக்கும் போக்கும்

மார்ட்டின் குடும்பத்தினர் இறை நம்பிக்கை உடையவர்கள். ஆனால் குருட்டுப் பக்தர்கள் அல்ல. சிறுமிகள் வளர வளர ஆடை அலங்காரத்திலும், உடையழகிலும் அதிக ஈடுபாடு காட்டினர். 'ஆடம்பரத்துக்கு அடிமைகள் ஆகிறோம்' என்றுகூறி அன்புடன் 'அது தவறு' எனச் செலி சுட்டிக் காட்டினார். மரியா, பொலீன் இருவரையும் விடத் தெரேசு அழகாக உடை அணிவதையே செலி விரும்பினார். இதைக் கண்டு மற்றவர்கள் பொறாமை கொண்டதில்லை. மரியா விருந்துகளில் கலந்து கொள்ளும் பழக்கத்தைக் கைவிடுமாறு அறிவுறுத்தும்படி சிறுமிகளின் பெரியம்மா செலியைக் கேட்டுக் கொண்டார். அதற்குச் செலி 'அடைப்பட்ட மடத்தில் வாழ்வதைப் போல நாங்களும் வீட்டிற்கு உள்ளேயே அடங்கி கிடக்க வேண்டுமா? இவ்வுலகில் வாழ்ந்தால் தனித்து வாழ முடியாது. ஊரோடு இணைந்து தான் போக வேண்டும்!' என்று பதிலளித்தார்.

சுற்றி வாழ்வோர் தினமும் தெரேசுவின் பெற்றோர் அதிகாலை 5.30 மணிக்குத் தெரு வழியே ஆலயம் செல்வதைக் காண்பது வாடிக்கை. ஒவ்வொரு நாள் திருப்பலியிலும், ஏழைகளுக்காகவும், தங்களது பணியாளர்களுக்காகவும் மன்றாடினர். தீவிர உண்ணாநோன்பு குடும்பத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஓய்வு நாள், குடும்ப மன்றாட்டு, ஆண்டு வழிபாட்டுச் சடங்குகள் போன்றவற்றைச் செவ்வனே கடைப்பிடித்தனர். "நான் அனைத்துச் சமூகங்களுக்கும் உரியவள், இறைவனுக்கும் உலகிற்கும் உரியவள்' எனப் பறைசாற்றினார் செலி. உய்த்துணரும் அறிவும் ஆற்றலும் ஒருங்கே பெற்றதால் திறந்த மனமும், ஒளிவு மறைவற்ற இனிய பண்பும்

அவருக்கே உரியனவாயின. "கடந்த எட்டுத் திங்களாக இரு மறை பணியாளர்கள் தினமும் மூன்று மறையுரைகள் வழங்கி வருகின்றனர். எனது கருத்துப்படி இருவரும் சிறப்பாகப் போதிக்கவில்லை. கடமைக்காகத் தான் அதனைக் கேட்கச் செல்கின்றோம். எனக்கோ இது ஓர் ஒறுத்தல் முயற்சி தான்' என்று எதார்த்தமாகத் திறந்த மனத்தோடு செலி கூறினார்.

மார்ட்டின் குடும்பத்தாரது பக்தி முயற்சிகளில் கெடுபிடித்தனமோ, பரிசேயத்தனமோ இருந்ததில்லை. சமய நெறிகளைச் சரிவரக் கடைப்பிடிக்கும் வழியை அறிந்திருந்தனர். அயலாரை வரவேற்று ஆதரவாய்த் தங்களோடு உணவருந்தச் செய்து மகிழ்ந்தனர். பிணியாளரை நேயத்தோடு கண்காணிப்பதிலும்," காப்பகத்தில் சேர்ப்பதிலும் ஆர்வம் காட்டினர்; தனிமையில் உழல்வோர், முதியோர், பிணியாளர், கைவிடப்பட்டோர், இறக்கும் நிலையிலிருப்போர் ஆகிய அனைவரையும் அன்புடன் சந்தித்து ஆறுதல் கூறி ஆதரவு காட்டினர்; துயரில் தவித்த மகளிருக்கும், அன்னையர்க்கும் துணை புரிவதில் செலி சிறப்பு ஆர்வம் காட்டினார். அனுபவமில்லாப் பணிப் பெண்களுக்கு உதவி புரிந்தார். எட்டு வயது நிரம்பிய அர்மாந்தீன் (Armandine V) என்ற சிறுமியை மிரட்டிக் கொடுமைப் படுத்தி வந்த இரு கன்னியர்களின் அட்டூழியங்களை வெளிச்சம் போட்டுக் காட்டவும் தயங்கவில்லை. அச்சம் தோன்றினாலும் ஆர்வம் குறையவில்லை. இவ்வாறு அவர்களது வாழ்வே வழிபாடாகத் திகழ்ந்தது.

தெரேசு 'இயேசுவை அனைத்திலும் மகிழ்விக்க' விரும்பினாள். அதுவே அவளது கரிசனையாகியது. "என்னில் இயேசு மகிழ்கின்றாரா? நான் செய்வது நல்லதல்ல என்று யாராவது அறிவுறுத்தினால் போதும். அதைப் போன்ற தவறை மறுபடியும் செய்ய நான் விருப்பம் கொள்ளவே மாட்டேன்" எனத் தெரேசு கூறினாள். இத்தகைய கருத்தமைவுகள் அச்சத்தால் உருவானவை அல்ல. தான் செய்யும் தவறுகள் அனைத்திற்கும் மன்னிப்பு உறுதியாய் உண்டு என்று நம்பினாள். எனினும் எப்போதும் உண்மையின் வழியில் செல்லும் பண்பும் அவளிடம் இருந்தது. 'உலகில் செல்வம் அனைத்தையும் வாரி வழங்கினாலும் பொய் பேச அவள் நா எழாது' எனச் செலி பெருமையோடு கூறினார். அவளது மென்மையான மனச்சாட்சி ஒளியையே நாடியது.

ஆனால் எப்போதும் பிறருக்கு முன் மாதிரியான சிறு குழந்தையாக வாழவில்லையே என்கிற ஆதங்கம் உள்ளத்தில் இருந்தது. பிற்காலத்தில் 'இவரைப் போன்றுதான் இருக்க வேண்டும்' என்று பிற சகோதரிகள் அவரையே தங்களது குறிக்கோளின் மாதிரியாகக் கருதும் வண்ணம்



தெரேசு மாறி இருந்தாள். எப்போதும் துடிப்புடன் செயல்பட்டாள். நினைத்த காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்று துடித்தாள். இதற்கு ஒரு சான்று: ஒரு நாள் அவளை மன்றாட விடாமல் குளிர் நிறைந்த படுக்கையில் மரியா கிடத்தினார். "வெப்பமுள்ள படுக்கையே வேண்டும் எனக் கேட்டு அழுது நச்சரித்தாள்". என் மன்றாட்டுக்களைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தெரேசுவின் அழுகை ஓசையை நான் கேட்டேன். இறுதியில் பொறுமை இழந்து, அவளது கன்னத்தில் சிறிய ஒரு அறை கொடுத்தேன்; அழுதாள். . . இறுதியில் அழுது அழுது அலுத்துப் போனாள். ஓய்வெடுக்கப் படுக்கைக்குச் சென்றேன். அவளோ என்னிடம், நான் இன்னும் செபிக்கவில்லை!" என்றாள். "காலையில் செபிக்கலாம் இப்போது நன்கு தூங்கு!" என்றேன். அவளோ கேட்பதாக இல்லை. தானாகவே எழுந்து செபம் சொல்லி விட்டுத்தான் தூங்கினாள்.

மற்றொரு முறை தன்னைத் திருப்பலிக்கு அழைத்துச் செல்லும்படி மீண்டும் மீண்டும் வற்புறுத்தினாள் தெரேசு. "நீ ஆலயத்தில் அமைதியாக அடங்கி இருப்பது இல்லை! எனவே நான் ஆலயத்திற்கு உன்னை அழைத்துச் செல்ல மாட்டேன்!' என்று மறுத்தேன். ஞாயிறு மாலை வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றிருந்த போது அவளும் அமைதியாய் இருந்ததில்லை. என்னையும் அமைதியாக வழிபட அனுமதித்ததுமில்லை. பொதுவாக ஆராதனை வழிபாட்டிற்குச் செல்வதே வழக்கமாக இருந்தது. பின்னர் அவள் தன்னை லிசியூவுக்கு அழைத்துச் செல்லுமாறு என்னை வற்புறுத்தினாள். அவள் வாயாடியாக இருந்ததால்தான் அதையும் மறுத்தேன். என்னுடைய பதில் அவளுக்கு அமைதி அளிக்கவில்லை. அழத் தொடங்கினாள். அவளுக்கு நான்கு வயதான போது ஆலயத்தில் நீண்ட மறையுரை நடைபெறும் போது கொட்டாவி விடுவது தெரேசின் வழக்கம். அவள் சோர்ந்து போய் இருப்பது தெளிவாகத் தெரியும். ஆனால் அவளோ 'இது வழக்கமான மறையுரைகளை விட நன்றாக இருக்கிறது. ஆனால் எனக்குத் தான் கொட்டாவியாக வருகிறது' என்று கூறி விரக்தியின் வெளிப்பாடாகப் பெருமூச்சு விடுவாள். இறுதியாக நடைபெறும் மெழுகுதிரி ஊர்வலம் அவளது நெஞ்சைத் தொட்டது என மரியா விளக்கினார்.

விரைவில் அவளது "உள்ளார்ந்த ஆர்வம்" வான் நோக்கித் திரும்பியது. அங்கே அவளால் நுழைய இயலுமா? என்கிற எண்ணத்தை வெளிப்படுத்தும் வண்ணம் பின்வரும் கவிதை வரிகளைப் பாடினாள்:

'தங்க வண்ணக் கூந்தலுக்குச் சொந்தமான குழந்தையே!
எங்கே கடவுள்? உடனே பதிலைச் சொல்வாயா?

இவ்வுலகில் எங்கும் அவர் இருக்கின்றார்
அவ்வுலகில் நீலவானிலும் நிறைகின்றார்.'

நான்கரை வயதில் அருட்சகோதரியாக நடித்துக் காட்டினாள். தன்னையே தலைமைச் சகோதரியாய் மாற்றிக் கொண்டாள். துறவற இல்லத்தில் எல்லோரும் அமைதியாக இருப்பார்கள். 'நீயோ பேசி அடங்குவதில்லை!' எனப் பொலீன் குறை கூறுவார். "பேசமால் எப்படிச் செபிக்கிறார்கள் ?' என்று வியப்புடன் கேட்டாள் தெரேசு. "பொலீன்! தற்போது அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நான் சிறிய வயதினள் தானே. மரியாவையும் உங்களையும் போலப் பெரியவள் ஆகி, துறவற இல்லத்தில் நுழையும் முன்பு நாவடக்கம் பற்றி யாராவது எனக்குக் கற்றுக் கொடுப்பார்கள்" என்று எதார்த்தமாய்த் தன் ஆவலை வெளியிட்டு உரையாடலை முடித்தாள்.

தெரேசு தம் மரணத்திற்கு முன்பு "எனது குணநலன்களில் எத்தனை முரண்பாடுகள்" எனக் கூறினார். தேவைக்கு உதவும் பண்பு ஒருபுறம்; உணர்ச்சி வயப்படுகிற எழுச்சி இன்னொருபுறம், தியான மனம் ஒருபுறம்; கிண்டல் கேலி மறுபுறம், தலைக்கனம் ஒருபுறம்; பெருந்தன்மை வேறுபுறம். எனினும் உள்மனப் போராட்டம் தன்னுள் பெரும் மாற்றம் கொணர்வதாக உணர்ந்தார். பிறர் பார்வைக்கு இம்மாற்றம் தெளிவாகத் தெரியவில்லை.

"ஏற்கெனவே நான் முழுக் கட்டுப்பாடுடன் தான் செயல்பட்டுக் கொண்டிருந்தேன்'' என்றாள் தெரேசு. ''எதற்கும் குறை கூறாப் பெருங்குணத்தையும் கொண்டிருந்தாள்." தனக்குச் சொந்தமான பொருளைப் பிறர் எடுத்துக் கொண்டாலும் பிறர் தன் மீது பழி சுமத்திய போதும் குறைகூறியதில்லை. "சாக்குப் போக்குச் சொல்வதை விட அமைதி காப்பதே நலம்" என்று நினைத்துச் செயல்பட்டாள்.

தெரேசு எழுதிய தன் வரலாற்று நூல் "ஓர் ஆன்மாவின் கதை". அந்நூலில் அலென்சோனில் தமது குழந்தைப் பருவத்தை விளக்கப் பதினைந்து பக்கங்களே ஒதுக்கினார். 'மண்ணில் மலர்ந்தவையாவும் புன்னகை செய்து என்னில் குதூகலித்தன. என் பாதச் சுவடுகளில் வண்ண மலர்கள் கண்டேன். என் இயற்கையான மகிழ்ச்சி நிறைந்த மனப்பாங்கு என் வாழ்வை வளமாக்கும் வாய்க்காலாகியது'' எனக் கூறி நூலை முடிக்கின்றார். குடும்பத்தில் பெரும் பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பு மரியா பொலீனுக்கு எழுதிய மடலில் தெரேசைப் புகழ்ந்து இவ்வார்த்தைகளை எழுதினார். இன்னும் தொடர்ந்து அவர் பின்வருமாறு எழுதுகிறார்.



"அவள் எவ்வளவு குறும்புத்தனம் கொண்டவள் என்பது உமக்குத் தெரியும்; ஆனால் விவேக மற்றவள் அல்ல. அவள் 'ஓர் மலர்க் கொத்து! நான் அவளை நினைத்து மனம் மகிழ்கின்றேன். வீட்டில் உள்ள அனைவரும் அவளை முத்த மழையினால் நனைக்கின்றார்கள். முத்தங்களுக்குக் குறைவில்லை! ஆதலால் அவற்றைப் பெரிதாக அவள் கருதவில்லை. அசட்டை செய்தாள். ஒரு நாள் செலின் அவளிடம், 'இத்தனை முத்தங்களும் சின்னராணிக்கு மட்டும் உரித்தான உரிமைச் சொத்து என்று நினைப்போ ?" என்று இகழ்ந்து பேசினார். தெரேசின் முகத்தை அன்று பார்க்க வேண்டுமே!"

## பட்டகாலிலே படும்

பொலீன் மட்டுமே விடுதியில் தங்கிப் படித்தார். அவருடைய கடிதங்களில் முன்பு இருந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடுகள் தற்போது மறைந்து போயிருந்தன. காரணம் 'மாதா மினவுதல் சபை'யிலிருந்த பெரியம்மா மரி தோசித்தே (Marie - Dosithee) உடல் நலம் குன்றத் தொடங்கியிருந்தது. எலும்புருக்கி நோயினால் துன்புற்று இறந்து கொண் டிருந்தார்.

இந்த நீண்ட நாள் நோயினால் செலி பெரிதும் கலக்கமுற்றார். அவருடைய நோயும் குறைந்தபாடில்லை. குறிப்பாகத் தவக்கால நோன்பின்போது ஏற்பட்ட தலைவலி, கண்வலி, பார்வைத் தெளிவின்மை, வயிற்றுக் கோளாறுகள் போன்றவை மேலும் உடலை வருத்தின. 1876 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் மருத்துவர் பிரெவோஸ்ட்டைச் (Prevost) சந்தித்து ஆலோசனை பெற்றார். "நோய் முற்றிய நிலையில் உள்ளது. கட்டியை அகற்ற மேற்கொள்ளும் அறுவை சிகிச்சையும் பலனளிக்காது!" என்று வெளிப்படையாகவே மருத்துவர் கூறி விட்டார்.

குடும்பமே திகைத்து வருந்தியது. சிறுமிகள் இருவருக்கும் உண்மை நிலை கூறப்படவில்லை. லூயி செய்வதறியாது வாயடைத்துப் போனார். அவர் மனைவி அனைவரையும் அதிர்ச்சியிலிருந்து மீளச் செய்து, "முன்கூட்டியே உண்மையை மனம் திறந்து கூறிய மருத்துவருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். என் பணிகளைத் திட்டமிட்டுச் செய்து முடிப்பேன். எனது குடும்பத்தை எந்தவொரு பொருளாதார நெருக்கடியிலும் சிக்க விட மாட்டேன்' என்று கூறி அமைதிப்படுத்தினார்.

செலியின் தம்பி இசிதோர் ஒரு வேதியியல் வல்லுநர். மருந்து பொருட் கள் செய்வதில் லிசியூவில் பெரும்புகழ் பெற்றுத் திகழ்பவர். லிசியூ சென்று

அறுவை சிகிச்சை நிபுணரான மருத்துவர் நோத்தா (Notta) வை அணுக வழிவகை செய்தார். அவரும் 'அறுவை சிகிச்சை செய்யும் காலம் கடந்து விட்டது. அதனால் பலன் ஒன்றுமில்லை!' என்றார். செலி தம் கணவரைத் தேற்றிக் கடிதமொன்று எழுதினார்: "அறுவை சிகிச்சையின்றி இப்போது இருக்கும் நிலையிலேயே சில நாள்களை கழிக்கலாம் என மருத்துவர் தெளிவுறுத்தியிருக்கிறார். எனவே, நம்மைக் கடவுளின் கரங்களில் ஒப்படைத்துக் கவலையைத் தவிர்ப்போம். நமக்கு என்ன தேவை என்பதை நம்மை விட அவர் நன்கறிவார்: *'அவரே நம்மைக் காயப்படுத்துபவர். காயங்களை நியாயப்படுத்திக் குணப்படுத்துபவரும் அவரே!"*

ஓரளவு குணம் பெற்று லிசியூவிலிருந்து திரும்பினார் செலி. வேதனைகளை மறைத்துப் புன்முறுவலுடன் தமது பணியைத் தீவிரப்படுத்தினார். 1877 பிப்ரவரி திங்கள் 24 ஆம் நாள் இவ்வுலகை விட்டுப் பிரிந்த 'மாதா மினவுதல் சபை'ச் சகோதரியாக இருந்த அவருடைய அக்காவின் நினைவு அவரை வாட்டியது. உயிருக்கு உயிரான பாசத் தொடர்பு துண்டிக்கப் பட்டுவிட்டது. வாழ்வின் நெளிவு சுழிவுகளைச் சுட்டிக் காட்டித் தன்னை ஆற்றுப்படுத்திய ஆசானின் இழப்பை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "பெரியம்மாவின் மறைவிற்குப் பின் அன்னையின் நிலை மிகக் கவலைக்கிடமானது." எனப் பின்னர் பொலின் எழுதினார்.

செலி தன் தொழிலையே விற்றுவிட எண்ணினார். ஆனால் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகள் அதிகரிக்க அத்திட்டத்தைக் கைவிட்டார். நான்கே மாதத்தில் பதினைந்து மீட்டர் நீளம் கொண்ட பின்னல் ஒன்று முடித்துத் தர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. "என் வாழ்வின் இறுதி வரை நான் உழைக்க வேண்டியிருக்கும்" என்றார். நம்பிக்கையும், அச்சமும் மாறி மாறி அவரை அலைக்கழித்தன. ஐந்து பெண் மக்களையும் எப்படித் திருமணம் செய்து தருவது? என்பதே அவரது மிகப் பெரிய ஏக்கமாக இருந்தது. மரியா கடுமையானவர். ஆனால் வெட்கப்படுகிற குணமுடையவர். திருமணம் செய்து கொள்வதை விரும்பவில்லை. அருட்சகோதரியாக மாறும் எண்ணத்தையும் மறுத்தார். எனினும் பின்னர் அவருக்கு அதில் ஆர்வம் உள்ளது போன்ற அறிகுறிகள் காணப்பட்டன. லேயோனி துறவறத்தில் நுழைய விரும்பினார். ஆனால் 'சிறப்பு அருங்குறி' ஒன்று நிகழ்ந்தாலன்றிக் குழுவாழ்க்கை அவரால் வாழ முடியாது என்பது செலியின் உறுதியான நம்பிக்கை. லேயோனி, நோயில் தவிக்கும் அம்மாவை அடிக்கடி முத்தங்களால் நிறைத்தார். அதுவே இழந்த நம்பிக்கையை அன்னை திரும்பப் பெற வழி வகுத்தது. "இதற்காகவே நான் வாழ வேண்டும்



என்கிற ஆசை என்னில் தற்போது துளிர்க்கிறது. இப்படிப்பட்ட ஆசை என்னில் இதுவரை கிடையாது. இக்குழந்தைக்கு என் அரவணைப்புத் தேவை" என்றார் செலி. உண்மை நிலை எதிர் மறையாக இருந்தது. நோயின் கொடுமை அதிகரித்ததால் அஞ்சும் நிலை ஏற்பட்டது. மெல்லத் மெல்லத் தம்மையே இழந்தார். ஆனால் தொலை நோக்குப் பார்வையில் சிந்தித்தார். "நோயுற்றோர் பலர் தங்கள் நிலையைக் கண்டு கொள்ளாமல் கவலைப் படாமல் இருப்பதைக் கண்டிருக்கிறேன். தங்கள் நாள்கள் எண்ணப் பட்டிருக்கின்றன என்று அறிந்த பிறகும் நீண்ட நாள்கள் வாழப்போவதாக எண்ணிக் கொள்வார்கள். இது வியப்பாகத் தோன்றினாலும் நடைமுறை நிகழ்வு அதுதான். என் நிலையும் இப்போது அவ்வாறே" என்று சொல்லிச் செலி வருத்தமுற்றார்.

"நீ என் தோழி" என்று தம்மை அழைக்கும் அளவுக்கு அவரை நெருங்கி இருந்த பொலின், மாதா மினவுதல் சபையில் சேர விரும்பித் தீவிரமாகச் சிந்தித்தார். செலினும் குறிப்பாகத் தெரேசுவும் அம்மாவுக்கு வருத்தம் கொடுக்கவில்லை. சில குறும்புத் தனங்கள் செய்தாலும் உடனே திருத்திக் கொள்வாள். "நல்லவளாகத் திகழ்வாள். அதற்கான தொடக்கத்தை இப் போதே காணலாம். இறைவனைப் பற்றியே உரையாடுகிறாள். இக்குட்டி மகள் எதையும் சமாளிப்பாள்; எப்படியும் சமாளிப்பாள்" எனச் செலி மகிழ்வுடன் முன்னுரைத்தார்.

வசந்தம் வந்தது. தோட்டத்தில் மலர்கள் பூத்துக் குலுங்கின. செலின், தெரேசு இருவரையும் மீண்டும் இணைத்தது. அவர்கள் தங்கள் நற்செயல்களால் மணிமாலை தொடுக்கவும் தொடங்கினர். தெரேசு தவறுகள் புரிந்தால், அதனையும் கணக்கில் எடுத்துக் கொண்டாள். 'ஒநாய்' விளையாட்டு விளையாடினர். சோப்பு நீர்க்குமிழிகளைப் பறக்க விட்டு மகிழ்ந்தனர். வாழ்க்கை, விதியை விட வலிமையானதாகவே இருந்தது.

## பணயம் வைத்து லூர்து நகர் பயணம்

(1877 ஜூன் 17 முதல் 23 முடிய)

லூர்து நகர் அன்னையைத் தரிசிக்க ஆவல். ஆனால் பயணம் செய்ய அச்சம். அச்சத்தை ஆவல் வென்றது. தம் மூத்த மூன்று பெண் மக்களுடன் பயணம் செல்ல முடிவு செய்தார். தந்தையிடம் தெரேசு இருந்து விட்டாள். 1877 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை அலென்சோனிலிருந்து பயணம் புறப்படத் திட்டமிட்டனர். மருத்துவர் பிரெவோஸ்டிடம் இறுதி ஆலோசனை பெறப்பட்டது. அவரிடம் செலிக்கு

அதிக நம்பிக்கை கிடையாது. அவர் கொடுத்த மருந்துக் குறிப்பைக் கூட படித்துப் பார்க்காமலே தீயிலிட்டு எரித்தார். அருங்குறி மட்டுமே அவரை மீட்க முடியும். அதற்காக அவர் ஏங்கித் தவித்தார்.

லெ மானில் உள்ள மாதா மினவுதல் இல்லத் துறவியரின் அன்பும், மன்றாட்டும் செலிக்கு எப்போதும் நம்பிக்கையூட்டின. அவருடைய உடல் நலத்திற்காகச் சிறப்பு மன்றாட்டு வழிபாடு நடத்தினார். இல்ல அருட் பணியாளர் நன்றித் திருப்பலி அர்ப்பணிக்கவும் தயாரானார்.

"யாரேனும் இத்தகைய மோசமான பயணம் செய்திருப்பாரா ?" எனத் தம்பிக்கு ஜூன் 24 ஆம் நாள் எழுதிய கடிதத்தில் செலி குறிப்பிட்டுள்ளார். புகை வண்டியில் நீண்ட நேரப் பயணம் களைப்பையும் வேதனையும் அதிகரித்தது. காலதாமதமும் பல்வேறு இடையூறுகளும் ஏற்பட்டன. இறந்து போன சகோதரி அன்புடன் கொடுத்த செபமாலையைத் தொலைத்து விட்டார். லூர்து நகரிலிருந்து எடுத்து வந்த தூய நீர்ப்புட்டிகள் கசிந்ததால் உணவுப் பொருள்கள் வீணாயின. ஆடைகள் கிழிந்தன. புகைவண்டியையும் தவறவிட்டனர். குழந்தைகளும் பலவாறு குறை கூறினர். எல்லாம் இணைந்து புனிதப் பயணத்தை துன்பப் பயணமாய் மாற்றி விட்டன.

லூர்து நகர் நீரில் மூழ்கி எழுந்தால் நோய்கள் குணமாகும் என்பது நம்பிக்கை. செலியும் அங்குத் தங்கிய மூன்று நாள்களில் நான்கு முறை குளிர்ந்த நீரில் மூழ்கி எழுந்தார். ஒவ்வொரு முறையும் மூழ்கி எழும் போது 'நோய் நீங்கி விட்டதா? எனக் குழந்தைகள் ஆவலாய்க் கேட்டனர். செலியின் வேதனை தான் பெருகியது. குழந்தைகள் ஏமாற்றமும் அவரை வாட்டி எடுத்தது. வீட்டுக்குத் திரும்பினர். அவரைப் பேட்டி காண வந்த பெரும் கூட்டம் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். அலென்சோனில் வாழும் இறை நம்பிக்கையற்றவர்கள், லூர்து நகர் சென்று குணம் பெறாத செலியைக் கண்டு லூர்து நகர் புதுமைகள் பற்றி அவநம்பிக்கை கொண்டனர். "நோயினின்று நான் குணமாகவில்லை; மாறாகப் பயணம் எனது நோயை அதிகரித்துள்ளது. களைப்பு நிலைமையைப் பாழாக்கியுள்ளது. . . எனினும் நான் லூர்து நகர் சென்றது குறித்து வருத்தமுறவில்லை. குணமடைய வில்லையெனினும் நான் எடுத்த முயற்சியே எனக்கு மகிழ்ச்சி தந்துள்ளது. விரைவில் குணமடைவேன். நம்பிக்கையில் தளராது நடைபோடுவோம்" எனத் தன் குடும்பத்தாரிடம் மட்டும் செலி குறிப்பிட்டார்.

இரண்டே மாதங்கள். செலியின் நாள்கள் எண்ணப்பட்டன. மரியாவின் துணையுடன் தொழிலையும் வீட்டுத் தேவைகளையும் தொடர்ந்து கவனித்துக்



கொண்டார். "அம்மா, இன்னும் அதிகாலைத் திருப்பலியில் பங்கு பெற விரும்பினார். இதற்கு மனபலமும், அசாதாரண முயற்சியும் தேவைப்பட்டன. ஆனால் அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், அவரது கழுத்து வரை பயங்கர வலியை ஏற்படுத்தியது. சில சமயங்களில் ஆற்றல் அனைத்தையும் இழந்து அடுத்த அடி எடுத்து வைக்கும் முன்பு நீண்ட நேர ஓய்வு தேவைப்பட்டது" என மரியா கவலையுடன் கூறினார்.

வேதனைகள் இரவில் சாதனைகள் புரிந்தன. சகிப்பது சாத்தியமற்றுப் போனது. கத்தினார், கதறினார்; கடைசிவரை அனைத்தையும் அனுபவித்துத் தானே ஆக வேண்டும். ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் மகிழ்ச்சியான இறுதி நிகழ்வொன்றில் பங்கெடுக்க வாய்ப்புக் கிட்டியது. மாதா மினவுதல் பள்ளியில் இரு "ஆசிரியர்களால்" ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பரிசளிப்பு விழாவில் தன் கணவருடன் தலைமை தாங்கினார். அவர்களது இரு குழந்தைகளும் பரிசு பெற்றனர். "வெண்ணிற ஆடையில் ஜொலித்தனர். பரிசுகளையும், மகுடங்களையும் பெற மேடையேறி வந்தபோது அவர்கள் முகத்தில் வெற்றிக் களிப்பு மின்னலிட்டது" எனப் பெருமையுடன் செலி கூறினார்.

இடையில் தோன்றிய இந்த இன்ப நிகழ்வு, பின்னர் நிகழ்ந்த துயரத்திற்கு முகவுரையாகவும் அமைந்தது. துன்பம் மிகுந்த விடுமுறை நாள்கள் தொடங்கின. இளைய குழந்தைகளைப் படகுப் பயணத்திற்கு அழைத்துச் செல்லும்படி செலி தன் கணவரைக் கேட்டுக் கொண்டார். இல்லத்திலிருந்து செலின் மற்றும் தெரேசு இருவரும் வெளியேற்றப்பட்டனர். 'என் அன்னையின் நோயின் விவரங்கள் அனைத்தும் இன்னும் என் இதயத்தில் இறவாது இருக்கின்றன. இவ்வுலகில் அவர் வாழ்ந்த இறுதி வாரங்கள் என் மனத்தில் இன்னும் நிழலாடுகின்றன. செலினும் நானும் அகதிகள் போலானோம். அண்டை வீட்டுப் பெண்மணி லெரிஷ் எங்களை தினமும் காலையில் அவரது இல்லத்திற்கு அழைத்துச் செல்வார். அவரோடு அந்த நாளைக் கழிப்போம்" என்று தனது பழைய நினைவுகளைத் தெரேசு பகிர்ந்து கொண்டார்.

ஞாயிற்றுக் கிழமை 26 ஆம் நாள் ஆகஸ்ட் மாதம் வழங்கப்பட்ட நோயில் பூசுதல் அருட்சாதனத்தை என்றும் மறக்க முடியாது! "இன்னும் அந்த இடத்தை நான் பார்க்க முடியும், செலின் அருகில் நான் நின்று கொண்டிருந்தேன். வயதின் அடிப்படையில் நாங்கள் ஐவரும் வரிசையில் நின்றோம். பாவம்! என் தந்தை அங்கே நின்று தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்" எனத் தெரேசு தமது உள்ளத்தில் நிலைபெற்றிருந்த

நினைவுகளைக் குறிப்பிட்டாள்.

கேரென் குடும்பத்தினருக்குத் தொலைவுத் தந்தி வழியே செய்தி அனுப்பினர். 27 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை அவர்கள் அலென்சோன் வந்து சேர்ந்தனர். இறந்து கொண்டிருந்த செலி அவர்களுடன் பேசவும் முடியவில்லை. அதன்பின் அவர் வாய்திறந்து பேசவே இல்லை.

## அன்னைக்குக் கடைசி முத்தம் (1877 ஆகஸ்ட் 28)

மறுநாள் செவ்வாய்க் கிழமை. அன்று மதியம் பன்னிரெண்டரை மணிக்குச் செலி இறைவனடி சேர்ந்தார். அவர் இறக்கும் போது அவருடைய கணவரும், சகோதரரும் உடனிருந்தனர். அப்போது அவருக்கு வயது நாற்பத்தாறு.

நான்கரை வயது கடைக்குட்டி தெரேசைக் கரங்களில் தாங்கியவராய், "வந்து கடைசியாக உன் அன்புள்ள அம்மாவுக்கு முத்தம் கொடு! உன் அம்மாவுக்கு கடைசி முத்தம் கொடும்மா" என்றார். 'வார்த்தை ஏதும் பேசாமல் என் இதழ்களை என் பாசம் நிறை அம்மாவின் உச்சந்தலையில் பதித்தேன்.' எனத் தெரேசு பிற்காலத்தில் குறிப்பிட்டார். எதற்கும் எளிதில் அழும் குணம் கொண்ட தெரேசு அப்பொழுது அழுகையை மறந்தவர் போல் காணப்பட்டாள். "நான் அனுபவித்துக் கொண்டிருந்த உள்ளத் துயரம் பற்றி எவரிடமும் பேசவில்லை. அனைத்தும் அமைதியில் மூழ்கியிருக்கக் கண்டேன், கேட்டேன்". அன்னையின் இறப்பு அனைவருக்கும் இழப்பு. அந்த ஆழ்ந்த துயரில் எவருமே தெரேசைக் கண்டு கொள்ளவில்லை. பலவற்றை அவரிடமிருந்து மறைக்க விரும்பினர். ஆனால் 'அவற்றையெல்லாம் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். நீண்ட நேரமாக அதையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். அதுபோன்ற மரணத்தை இதுவரை நான் பார்த்தது கிடையாது. ஆனால் அது என்ன என்பதைத் தெரிந்திருந்தேன். நான் மிகச்சிறியவளாக, உயரம் குறைந்தவளாக இருந்தேன். என் அம்மா உடலும் சிறியது தான். எனினும் அம்மாவின் தலையைப் பார்ப்பதற்கு என் தலையை உயர்த்த வேண்டியதாயிற்று. அம்மா உடல் மிகப் பெரியதாகவும், கவலைக்குரியதாகவும் எனக்கு தோன்றியது' என்று மனந்திறந்து தெரேசு கூறினார்.

இதுவே தெரேசுவுக்கு மரணத்தைப் பற்றிய முதல் அனுபவம். ஒரு கொடிய அனுபவம். அம்மாவின் மரணம் அவரை எவ்வளவு பாதிப்பிற்குள்ளாக்கியது என்பதை யாரும் அறியவில்லை. *"என் வாழ்வின் முதல்*



*பகுதி அன்று தான் முடிந்தது!"* எனத் தெரேசு பின்னர் குறிப்பிட்டார். அன்பும், மகிழ்ச்சியும் நிறைந்த குழந்தைப் பருவத்தின் மீது சாவின் திரை வந்து படிந்து விட்டது.

**அன்னை இல்லாத வாழ்க்கை! அதுவும் குடும்பப் பொறுப்பை முழுமையாக ஏற்று நடத்திய அன்னை இல்லாமல் வாழ இயலுமா? வாழ்க்கை வெறுமையானது. இணைந்து சென்ற குடும்ப வாழ்க்கை துண்டிக்கப்பட்டது. புது வழியில் ஒருங்கமைக்கப்பட வேண்டும். கடந்த காலம் போல் எதிர்காலம் அமையச் சாத்தியமில்லை.**

புதன் கிழமை ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாள் தூய மரியன்னை கல்லறைத் தோட்டத்தில் செலியின் உடலை அடக்கம் செய்தனர். அடக்கத்திற்குப் பின்பு பணிப்பெண் லூயிஸ் மரே (Louis Marais) அம்மாவை இழந்து நின்ற இரண்டு குழந்தைகளையும் வருத்தத்துடனும், வாஞ்சையுடனும் நோக்கினார். அன்புப் பிள்ளைகளே! இனிமேல் உங்களுக்கு அம்மா இல்லை! என்றார். செலின் மரியாவின் கரங்களில் வீழ்ந்தபடி "நீங்க எனக்கு அம்மாவா இருங்க' என்றார். தெரேசு பொலீனிடம் சென்று, "எனக்குப் பொலீன்! நீங்கள் தான் அம்மா" என்றாள். அந்நேரத்திலேயே மரியாவும், பொலீனும் அவர்களை ஏற்றுக் கொண்டனர்.

## பிறந்த மண்ணுக்கு இறுதி அஞ்சலி (15 நவம்பர் 1877)

அவர்களுடைய தந்தைக்கு வயது ஐம்பத்து நான்கு. துணைவியின் பிரிவுத் துயரம் கடுமையாய் அவரைத் தாக்கியது. ஐந்து பெண் மக்களைப் பேணி வளர்ப்பவர் யார்? கரை சேர்ப்பவர் யார்? செலியின் இறப்பின் போது அவருடைய மைத்துனி எலிசாவும் உடனிருந்தார். செலியின் கடைசிப் பார்வை அவரது எண்ண எழுச்சிகளை எலிசாவிற்கு எடுத்து இயம்புவதைப் போல உணர்ந்தார். "என் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்ததைப் போலப் புரிந்துக் கொண்டார். எனவே, சிறந்த ஓர் ஆலோசனை வழங்கினார். மார்ட்டின் குடும்பத்தினர் அலென்சோனைவிட்டு லிசியூவில் அவர்களோடு இணைந்து வாழலாம் என்பதே அது!

அலென்சோன்: இனிய நகரம், வளர்ந்த பூமி. வளர்த்த பூமி. எவ்வாறு இந்த பிறந்த மண்ணிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்வது? லூயிக்கு அறவே விருப்பம் இல்லை. எனினும் இங்கிருந்து செல்வது கட்டாயமானது. எலிசாவின் ஆலோசனையை நடைமுறைப்படுத்த ஒப்புக் கொண்டார்.

"எங்களுக்காக எந்தத் தியாகத்தையும் செய்ய முன்வந்தார் என் தந்தை. தேவைப்பட்டால் அவரது உயிரையும் எங்களது மகிழ்ச்சிக்காக இழக்கத் தயாரானார். எங்களுக்காக எதையும் இழக்கத் தயங்கியதில்லை. 'தன் நாடு' துறப்பதையும் கூடத் தம் கடமை என்றே நினைத்தார். எங்கள் நலம், மகிழ்ச்சி இதுவே அவரது நோக்கு! உயிர் மூச்சு! நிறைவு!" என மரியா எழுதினார்.

துடிப்பு மிக்க மாமா இசிதோர் அவர்களுக்கென வீடொன்றைத் தேடினார். இருபத்தைந்து வீடுகளைப் பார்வையிட்டப்பிறகு ஒரு வீட்டைத் தேர்ந்தெடுத்து அதைப் பற்றிய ஆர்வமிக்க வருணனையைச் செப்டம்பர் 10 ஆம் நாள் மார்ட்டினுக்கு அனுப்பினார். அம்மாதம் 16 ஆம் நாள் குடும்ப கூட்டாலோசனைக்குப் பின் மார்ட்டின் லெ புய்ஸ்ஸொனே (Les Busissonnnets) குடும்பத்தினரின் பத்திரத்தில் கையொப்பமிட்டார். அத்துடன் தன் அன்புப் பெண் மக்கள் ஐவருக்கும் இசிதோர் 'பாதுகாவலராக' நியமிக்கப்பட்டார்.


1877 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் நாள் லூயி மார்ட்டின் கறுப்பு உடை அணிந்த தம் அன்புக் குழந்தைகளுடன் தம் மனைவியின் கல்லறைக்குச் சென்று இறுதியாகச் செபித்து இதய அஞ்சலி செலுத்தினார். பின்னர் தாம் பிறந்த மண்ணுக்கும் அஞ்சலி செலுத்தி விட்டுப் புகைவண்டியில் ஏறினார். நான்கு மணி நேரப் பயணத்திற்குப் பின்பு குழந்தைகளுடன் லிசியூவை அடைந்தார். கேரென் குடும்பத்தினருடன் இரவைக் கழித்தனர். சிறிது நாள்கள் கழித்து மார்ட்டின் மட்டும் அலென்சோனுக்குத் திரும்பிச் சென்றார். நூற் பின்னல் தொழிலை 3,000 பவுண்டுக்கு விற்றார். பணம் தவணை முறையில் ஐந்து ஆண்டுகளில் தர வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டது. அனைத்துப் பணிகளையும் முடித்த பின்னர் நவம்பர் மாதம் 30ஆம் நாள் தம் குழந்தைகளோடு புய்ஸ்ஸொனேவில் நிரந்தரமாகக் குடியேறினார்.

அதற்குப் பிறகு ஆறு ஆண்டுகளுக்குத் தெரேசு தம் பிறந்த மண்ணைக் காணவே இல்லை. அந்த இன்ப நந்தவனத்தை விட்டுப் பிரிந்தாள். "எத்துணை வேகம்! எத்துணை விரைவு! என் குழந்தைப் பருவத்தின் கதிரொளி ஆண்டுகள், மின்னலாய் மறைந்து விட்டனவே!"

# பகுதி இரண்டு

## லெ புய்ஸ்ஸொனேவில் 1877 - 1888





லெ பூய்ஸ்லெவானே - வீட்டின் முன்பகுதி



# 2

## பள்ளிப் பருவத்துக்கு முன்னால்

(16 நவம்பர் 1877 முதல் 3 அக்டோபர் 1881 முடிய)

*". . . வேள்வித் தீயில் - வாழ்வின் இரண்டாம் பகுதி"*

### சொர்க்க வாசல் திறந்தது

"அலென்சோனுக்கு விடை கொடுத்து விட்டேன். நெஞ்சில் சோகமில்லை. எதிர்பார்ப்பும் ஏமாற்றங்களும் இல்லை. மாற்றத்தை விரும்பும் சராசரிக் குழந்தைகள் தாமே அவர்களும்? சுகமான எண்ணங்களுடன் தான் லிசியூ வந்து சேர்ந்தேன்' எனத் தந்தை மார்ட்டின் தம் உள்ளக் கருத்தை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

புதிய காற்று, புதிய உலகு, புதிய வாழ்வு, பதினொரு ஆண்டுகள் தெரேசு இப்புதிய மண்ணிலே வாழ வேண்டியிருந்தது. அவர்களது வீடு சர்த(ன்) தே லெத்வால் (Jardin De L'etolic) என்னும் அழகிய பூங்காவுக்கு அருகிலிருந்தது. அங்கிருந்து டெலனாய் ராணுவப் பாசறை வெகு தூரத்தில் இல்லை. வீட்டுக்கு இடப்புறமிருந்த செங்குத்தான குறுகிய சாலையைச் 'சொர்க்கத்திற்குச் செல்லும் வழி" என்று பெயரிட்டு அழைத்தார் மார்ட்டின். முன் கதவுக்கு எதிரே தெரு விளக்குக் கம்பம் இருந்தது. அதைச் சுற்றிலும் இயற்கை விரித்திருந்த பசுமையான புல்தரை; அதனையும் கடந்து சென்றால் ஒரு நடு வர்க்கத்தினர் வீடு. இரண்டு மாடிகளைக் கொண்டது. ஓர் வேனில் மாடம், நான்கு படுக்கையறைகள், மூன்று பரண்கள், வீட்டுக்குப் பின்புறம் பூந்தோட்டம், சலவைக் கூடம், பந்தல், இளஞ்செடிகொடிகளை வளர்ப்ப

தற்கான கண்ணாடி அறை; மதில்களும், மரங்களும் சூழ அழகிய சிற்பமாய் நின்றது அந்த வீடு. நகரத்தை விட்டுத் தள்ளி இருந்தாலும் வீட்டின் மேல் பகுதியிலிருந்து பார்த்தால் நகரின் சில பகுதிகள் தெளிவாய்த் தெரியும்.

மார்ட்டின் குடும்பம் புதுமனை புகுந்தது. வீட்டின் கீழ்ப் பகுதியில் சமையல் அறை. அதனைத் தொடர்ந்து நெருப்புக் கூடம்; சில அடிகள் கடந்து சென்றால் தொடர்ந்து ஆழ்கிணறு ஒன்று தோட்டத்தில் இருந்தது. உணவறை சன்னல்களைத் திறந்தால் முன்புறத் தோட்டத்தின் தென்றல் மெல்லத் தவழ்ந்து வந்து உணவறையை நிறைக்கும். வயது வந்த பெண்களுக்கெனத் தனிப் படுக்கையறை; அங்குச் செல்லக் குறுகிய படிக்கட்டுகள். மார்ட்டினின் படுக்கையறையைத் தொடர்ந்து லேயோனியினுடைய சிறிய அறை. அதனையடுத்துச் செலினுக்கும் தெரேசுவுக்கும் ஓர் அறை. அங்கிருந்து பின்புறத் தோட்டத்திற்குச் செல்ல வாசல் இருந்தது. நிலா மேடையினின்றும் பார்த்தால் லிசியூ நகர் முழுமையும் கண்கொள்ளாக் காட்சியாய் வலம் வரும். மறை மாவட்டத் தலைமை ஆலய கோபுரங்கள், தூய ஜாக் (Saint Jacrue's) ஆலய மணிக் கூண்டு, பங்கு ஆலயம் எனப் பல்வேறு இடங்களைக் காணலாம். மூன்றாவது மாடியில் நிலா மேடையிலிருந்து பார்த்தால் ஓர்பிக்கே (Orbiquet) தூக் (Touques) மற்றும் சிரியூ (Ciricux) பள்ளத்தாக்கிலிருந்து மேலெழும் மூடு பனித்திரை காரணமாக நகர்புறக் காட்சிகளைத் தெளிவாகக் காண இயலாது. எனினும் தொழிற்சாலைகளிலிருந்து எழும் புகை மூடுபனியை உருகச் செய்யும் போது காட்சிகள் மீண்டும் தெளிவுறத் தெரியும். அந்த அழகிய இல்லத்தில் மார்ட்டின் குடும்பத்தினர் புது வாழ்க்கையைத் தொடங்கும் போது அது குளிர்காலம்.

## சின்ன பௌர்ணமி காலம் (1877)

18,600 'லிசியூ'வினது மக்கள் தொகை. சணல் ஆலைகள், நெசவாலைகள், ஆப்பிள் பழ இரச ஆலைகள், தோல் பதனிடும் ஆலைகள், வடிநீர் ஆலைகள் எனப் பல்வேறு ஆலைகள் அமைந்து முதன்மைத் தொழில் நகரம் என்று பெயர் பெற்றது லிசியூ தான்! சனிக்கிழமைகளில் நோர்மான் (Norman) கிராமப்பகுதியில் உற்பத்தியான பொருட்கள் சந்தைகளை நிறைத்தன. லிசியூவில் தெருக்கள் "காய்ச்சல் நோய்த் தெரு", "சொர்க்கத் தெரு", "இறைச்சித் தெரு" எனப் பிரிக்கப்பட்டிருந்தன. நகரத்தில் மரங்களால் அமைக்கப்பட்டிருந்த வீடுகளைக் காணும் போதெல்லாம் லிசியூ மத்திய கால நகரமாகவே திகழ்ந்தது என்றே கூறத் தோன்றுகிறது. விழாக் காலங்களில் மறைமாவட்டத் தலைமை ஆலய வளாகத்தில் பொதுப் பூங்கா



வில் 119 காலாள் படையினர் அணி வகுத்து இசைக்கும் இராணுவ இசை நகரெங்கும் இனிமையாக எதிரொலிக்கும்.

1870 இல் நடந்த போருக்குப் பிறகு நகரின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றது. நெசவு ஆலைகளில் பெரும் சரிவு ஏற்பட்டது. வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் வெடித்தன. பிறப்பு விகிதம் குறைந்தது. ஆனால் இச்சூழலின் விளிம்பிலேயே மார்ட்டின் குடும்பத்தினர் தங்களது வாழ்க்கையைத் தொடர்ந்தனர்.

## தொலைந்து போன புன்னகை

லிசியூவுக்குப் புதிதாக வருகை தந்த நான்கரை வயதுச் சிறுமி தெரேசுக்கு இப்புதிய இடத்தின் அனுபவம் விடுமுறை நாள்களின் மகிழ்ச்சியை அளித்தது. தெரேசுவின் குடும்ப வாழ்க்கை நிலை, மாமாவின் பத்து வயது மகள் ஜானி மற்றும் ஏழரை வயது மரியா போன்றவர்களுடன் விளையாட்டு - இவைகள் தெரேசின் நேரத்தைச் சூறையாடின. மாமா இசிதோரும் அவருடைய பங்குக்கு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் அவளை மகிழ்வித்தார். மூக்குக்குக் கண்ணாடி அணிந்து தெரேசைத் தமது மடியில் அமர்த்தி, தடித்த குரலில் 'நீலதாடி' என்கிற பாடலைப் பாடிப் பரவசப் படுத்த முயன்றார். அவளுக்கோ மகிழ்ச்சியை விட அச்சமே மேலோங்கி நின்றது. ஆனால் அவர் கூறிய நேர்த்தியான கதைகள் தெரேசுக்கு மிகவும் பிடிக்குமாதலால் அதனைக் கவனமுடன் கேட்பாள். மாமாவின் மருந்தகத்தில் பல்வேறுபட்ட மக்களைச் சந்திக்க வாய்ப்புப் பெற்றாள்.

சிறுமி தெரேசு முற்றிலும் மாறுபட்ட சூழல் அங்கு நிலவுவதை உணர்ந்தாள். அலென்சோனின் இல்லம் தெருவிலேயே அமைந்திருந்தது. இல்லத்தைக் கடந்து செல்பவை அனைத்தும் தெரேசுவின் கண்களுக்குத் தப்பியதில்லை. பெண் பணியாளர்களும், வாடிக்கையாளர்களும் தங்களது வருகையால் இல்லத்திற்கு உயிரூட்டிக் கொண்டிருந்தனர். ஆனால் இங்குச் சோலைகளாலும், மலர்களாலும் நிறைந்த அழகிய பெருந்தோட்டம் அமைந்திருந்ததில் தெரேசுக்கு ஆனந்தம். கோழிகள், வாத்துக்கள், பறவைகள், கூண்டுகள் ஆகிய அனைத்தும் தோட்டத்தை நிறைத்தன. ஆனால், அலொன்சோனில் தங்கள் இல்லத்தில் துடிப்பு மிக்க அன்னையின் முயற்சியால் நிலவி வந்த உயிரோட்டமான வாழ்க்கை எங்கே? எங்கும் என்றும் எப்போதும் பரவி வந்த கலகலப்பான சிரிப்பும் கும்மாளமும் எங்கே தொலைந்து போயின?

வாழ்க்கை முற்றிலும் மாறுபடுவதனைத் தெரேசு உணர்ந்தாள்.

நிறைவாக ஒழுங்குபடுத்தப்பட்ட, வரையறுக்கப்பட்ட வாழ்க்கையில் குடும்பத்தைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கிய அம்மாவின் இழப்புக்குப் பிறகு குடும்பச் சிறப்பு குன்றி விட்டது. விருந்தினர் சிலரே இல்லம் தேடி வந்தனர். அவர்களும் அறிமுகமற்றவர்கள். தந்தையும் தம் நண்பர் குழுவிலிருந்து அந்நியமானார். தனிமையை இரசிக்க முனைந்தார். மேல் மாடியிலேயே அதிக நேரம் செலவழித்தார். நூல்கள் வாசிப்பது, எழுதுவது, அனைத்தையும் அங்கேயே நிகழ்த்தினார். கடமைக்காகத் தோட்ட வேலை செய்தார். விறகு சேகரிப்பதிலும், கோழிப் பண்ணையைக் கண்காணிப் பதிலும் ஆர்வம் காட்டினார். ஐம்பத்தைந்து வயதைக் கடக்கும் முன்பே ஒய்வு பெற்றவராகக் கருதிக் கொண்டார். அவரது சொத்தாக இருந்த 1,40,000 பவுண்டுகளைப் பராமரிப்பதே தமது பெரும் பணியென எண்ணினார். அவரது வெண்ணிறத்தாடியும், அவருக்கு முதுமைத் தோற்றம் தந்தது. அவருடைய பிள்ளைகளுக்காக உண்மையிலேயே 'தந்தைமைப் பண்பு'டன் (Patriarch) செயலாற்றினார்.

மரியாவுக்கு வயது பதினேழு. குடும்பப் பராமரிப்புப் பொறுப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். பதினாறு வயதான பொலீன் அவருக்கு உதவி புரிந்தார். சிறுமிகள் இருவருக்கும் குறிப்பாகத் தெரேசுவுக்குக் கல்வி கற்பிக்கும் பணியை மேற்கொண்டார். பதினான்கு வயது நிறைந்த லேயோனி நகரின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த தூய ஆசீர்வாதப்பர் இல்லத்துப் பள்ளியில் தங்கிப் படித்தார். செலினும் அதே பள்ளிக்கு அன்றாடம் சென்று கல்வி கற்றுத் திரும்பினார்.

தன் விளையாட்டுத் தோழி செலின் பள்ளிக்குச் சென்றதால் தெரேசு வீட்டிலிருந்த இளம் பெண்களுடன் தனது நேரத்தைச் செலவழிக்க வேண்டியதாயிற்று. அவ்வீடு அவளுக்கு மிகவும் பெரியதாகத் தென்பட்டது. அவ்வீட்டுக்கு விக்டோரியா பஸ்கெ (Victorie Pasquer) என்ற பணிப்பெண் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து ஏழு வருடங்கள் மார்ட்டினுடைய குடும்பச்சுமையைப் பகிர்ந்து கொண்டவர் அவர். அனைவரும் அவரிடம் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர் சொன்னபடி நடந்தனர்.

இவ்வாறான் புதிய சூழலில் தெரேசுவின் மனநிலையில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டது. "அன்னையின் பிரிவுக்குப் பின் என் மகிழ்ச்சியான மனநிலை முற்றிலும் மாறி விட்டது. உயிர்த்துடிப்புடன் அனைவரிடமும் இயல்பாக பழகிய நான் வெட்கப்பட்டேன். பேசா மடந்தையானேன். எளிதில் உணர்ச்சிவசப்படுபவளானேன். யாராவது என்னை உற்றுப் பார்த்தாலே போதும் ! அழுது விடுவேன். எவரும் என்னைக் கண்டுகொள்ளாதிருப்பதே



மகிழ்ச்சி தந்தது. அறிமுகமில்லாதோர் நடுவேயிருப்பதைப் பெரும் சுமையாகக் கருதினேன். குடும்பத்தினரது நெருக்கமான உறவு மட்டுமே என் மகிழ்ச்சியைப் புதுப்பித்தது" எனக் கூறிய தெரேசு கடந்த காலங்களை மனத்தில் அசை போட்டவளாய்த் தொடர்ந்து கூறுகிறாள்: "அவை மிகவும் மகிழ்ச்சி யானவை. 'புய்ஸ்ஸொனே'வில் எனது வாழ்க்கை துயர் நிறைந்ததாகவே தோன்றியது. இங்கு தான் என் வாழ்வின் முப்பெரும் காலக் கட்டங்களில் மிகவும் துயரங்கள் நிறைந்த இரண்டாவது பருவம் தொடங்கியது. இப்பருவம் எனது நான்கரை வயது தொடங்கி பதினான்கு வயது வரை தொடர்ந்தது. இப்பருவத்திலே தான் எனது குழந்தைப் பருவ அனுபவங்களை ஆய்ந்து எனது குணநலன்களைக் கண்டறிந்தேன். வாழ்வின் மிக இன்றியமையாத மறு பக்கத்தில் காலடி எடுத்து வைத்தேன்"

## சிறகு முளைத்த சிட்டுக்குருவி

இல்லத்தில் இப்போது பெண்மைச் சூழல் நிலவியது. அந்தச் சூழ்நிலையில் தெரேசுடன் இருந்த ஆண்களுள் ஒருவர் தந்தை மார்ட்டின், மற்றொருவர் மாமா இசிதோர்.

தமது வாழ்வின் முதல் மூன்று ஆண்டுகளை நினைத்துப் பார்த்தார் தெரேசு. "அம்மா" பொலீன் துயிர் எழுப்புவார். எழுந்ததும் தெரேசு செபம் செய்வாள். ஆடை அணிவாள்; காலை உணவு "சூப்" அருந்துவாள். காலையில் மரியா மூலமாக எழுத வேண்டிய பாடங்களைக் கற்றுக் கொள்வாள். அம்மாவிடமிருந்து வாசிக்கவும் திருமறைப் பாடத்தையும் கற்றுக் கொண்டாள். முடிவாக மேல்மாடியில் தங்கியிருந்த அப்பாவிடம் போவாள். புத்திசாலி மாணவி தெரேசுக்கு நல்ல நினைவாற்றல் இருந்தது. அவளுக்குத் திருவிவிலியத்தின்பால் பாசம் இருந்தது. ஆனால் இலக்கணம் பயில்வது, எழுத்துக் கூட்டி வாசிப்பது போன்ற பயிற்சிகள் அவளது கண்களில் நீரை வரவழைத்தன. நண்பகலுக்குப் பிறகு மழை பெய்யாத நாள்களில் தந்தையும் மகளும் பூங்காவுக்கு உலாவச் செல்வார்கள்; ஆலயத்திற்கும் போவார்கள்; கடையில் சின்னச் சின்ன பரிசுப் பொருட்களும் வாங்கி வருவாள் அவள். கோடைக் காலத்தில் பக்கத்து ஊரான ரோக் (Roques) அல்லது எர்மிவால் (Hermival) போன்ற பசுமை சூழ்ந்த கிராமப் பகுதிகளுக்கு மீன்பிடிக்கப் போய்வருவார்கள்.

"அழகிய கிழவர்" மார்ட்டினுடன், 'அலையலையாய்க் கூந்தலுள்ள அழகி' தெரேசு தினமும் உலாவச் செல்வதை லிசியூ மக்கள் பார்த்து ரசித்தார்கள். தெரேசு தன் அப்பாவை 'ராசா!' என்றழைக்க அவரும் பதிலுக்குத் தெரேசை



லெ புய்ஸ்ஸொனே - இல்லத்து உணவறை

"என்ன ராணி?" என்பார். "என்குட்டிச் சாம்பல் நிற ஒநாயே," 'பெரசினாவின் அநாதைப் பிள்ளையே', 'புகழின் மகுடமே', 'சிதறும் சிந்தனையாளே' என்றெல்லாம் பல்வேறு செல்லப் பெயர் கூறி அழைத்தார். வீட்டுப் பாடங்கள் செய்ய வேண்டியிருந்தால் விரைவிலேயே இருவரும் இல்லம் திரும்பிவிடுவர். இரவு உணவுக்குப் பிறகு அனைவரும் நெருப்பைச் சுற்றி உட்காருவார்கள். கருத்துப் பரிமாற்றம் தடபுடலாக நடைபெறும். மார்ட்டின் 'நாடு கடத்தப்பட்ட பிரெட்டோன் (Breton) அல்லது 'வானவர் கீதம்' எனும் பாடலைப் பாடுவார். விக்டர் ஹியூகோ (Victor Hugo) லாமர்த்தீன் (Lamartine) போன்ற கவிஞர்களின் கவிதை வரிகளைப் பாடுவார். தோம் கொராஞ்சேர் (Dom Guearanger) அண்மையில் வெளியிட்ட 'வழிபாட்டு ஆண்டு' என்ற நூலிலிருந்து ஆன்மீகப் பகுதிகளை வாசிப்பார். கடிகாரம் உருவாக்குபவரான மார்ட்டின் செய்து கொடுத்த சிறு பொம்மைகளை வைத்துச் செலினும், தெரேசும் விளையாடுவார்கள். இரவு நேர செபம் முடிந்ததும் அனைவரும் இரவு முத்தம் பரிமாறிக் கொள்வார்கள். சூடுபடுத்தப்படாத பெரிய அறையில்



தான் அனைவரும் தூங்குவது வழக்கம். பொலீனுக்கு மட்டும் கடைசி முத்தம். எண்ணெய் விளக்கு அணைக்கப்படுவதற்கு முன்பு தெரேசு தன் கட்டிலில் படுத்துவிட விரும்புவாள். ஏனென்றால் தெரேசுக்கு இருட்டு என்றாலே பயம்.

ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் விழா நாள்களில் மட்டும் வழக்கமான வாழ்க்கைப் பாணி மாறும். புது நிறம் சேரும். தெரேசு வழக்கமாகத் தாமதித்துத் துயில் எழுவாள். காலை உணவாகச் சூடான "கோகோ" வைப் படுக்கையிலேயே பருகுவாள். மரியா, தெரேசுக்கும் உடையணிவித்துத் தலைவாரி விடுவார். முடியைச் சுருட்டி அழகுப்படுத்தும்போது முடிச்சுக்களை எடுப்பார். அப்போது ஏற்படுகிற வேதனையைத் தாங்க முடியாமல் தெரேசு அழுவாள். காலையில் அனைவரும் மறை மாவட்டத் தலைமை ஆலயத் திற்குத் திருப்பலியில் பங்கு பெறச் செல்வார்கள். பங்கு ஆலயத்திற்குச் செல்வதைக் காட்டிலும் தலைமை ஆலயத்திற்குச் செல்வதையே தெரேசு விரும்பினாள். காரணம், கேரென் குடும்பத்தினரை அங்குதான் சந்திக்க முடியும். ஆலயக் கண்காணிப்பாளர் இருக்கையில் அமர்ந்து கொண்டு மாமா இசிதோர், தெரேசைப் பார்த்துப் புன்னகை செய்வார். புய்ஸ்ஸொனே வந்து சில மாதங்களுக்குப் பிறகே அருட்பணியாளர் தியூசெல்லியெர் (Ducellier) - மறையுரையை முதன்முறையாகப் புரிந்து கொண்டாள். மெல்லிய குரலில் சிறப்பான முறையில் அவர் பேசுவார். அன்றொரு நாள் இயேசுவின் பாடுகள் பற்றி உருக்கமாக மறையுரை ஆற்றினார்.

திருப்பலிக்குப் பின் வழக்கமாகக் கேரென் இல்லத்தாருடன் அவள் காலை உணவு உண்பாள். அறுசுவை உணவுடன் இனிய உரையாடலும் கலந்து அனைவரும் மகிழ்ச்சி பூரிப்பார்கள். நகரின் மையப் பகுதிகளில் வாழ்வதே அலாதியானது தான். தெரேசு சிலவேளை அங்கேயே தங்கி விடுவாள். அப்போது மரியாவோ செலினோ உடன் இருப்பார்கள். மாலையில் அப்பா மீண்டும் வந்து அவர்களை அழைத்துச் செல்வார். 1878 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கேரென் குடும்பத்தினரின் உறவினரான ஃபுர்னே (Forunets) மற்றும் மோதெலோந்த் (Maudelondes) குடும்பத்தினரும் அவர்களோடு பழகத் தொடங்கினர். சொந்தங்கள் கூடிவரச் சுகமும் கூடியது.

அழகிய இன்ப நாள்கள் அவசரமாய்க் கடந்து சென்றன. மீண்டும் திங்கட்கிழமை; மீண்டும் படிப்பு. பொலீன் தன் "அம்மா" பொறுப்பை தீவிரமாகச் செயல்படுத்தினார். தெரேசுவின் மனம் போன போக்கில் அவளை நடக்க அனுமதிக்கவில்லை. தெரேசு காலைப் பாடங்களைச் சரியாகச் செய்யாவிட்டால் மாலை நேர நடைபயணத்தைப் பொலீன் தடுத்து விடுவார்.

தந்தை தலையிட்டுத் தெரேசுவுக்காகப் பரிந்து பேசி அனுமதி பெறுவார். பொலீன் தெரேசை ஒரு முறை கூடப் பாராட்டியதே இல்லை! அத்தகைய பாராட்டு சிறுமியில் உள்ளத்தில் ஆணவத்தை உருவாக்கி விடும் என்பது அவர் எண்ணம் போலும்.

இயற்கை விரும்பியான தெரேசுவின் உள்ளத்தைப் புய்ஸ்ஸொனேவின் பூந்தோட்டம் கொள்ளைக் கொண்டது. மலர்ப் படுக்கை விரித்தது போன்று அமைந்திருந்த தூய மார்ட்டின் தே லா லீவ் (Martin De la Lieue) அல்லது ஊய்லி லெ விக்கோந்த் (Quilly - le - Vicomte) என்ற மலர்வனத்தைக் கண்டு மயங்கி விட்டாள். தெரேசு சுற்றிலும் பார்த்து விட்டு யாரும் கவனியாத நேரத்தில் மலர்களைப் பறித்து விடுவாள். "என் எண்ணங்கள் அப்போது உன்னதத்தை நாடும்; தியானம் என்றால் என்னவென்று அறியாமலேயே என் ஆன்மா உண்மை செபத்தில் ஆழ்ந்து விடும். அப்போது உலகம் எனக்கு அந்நியமாய்த் தோன்றும். அப்போது விண்ணகத்தைக் கனவு கண்டேன்." எனத் தெரேசு பிற்காலத்தில் கூறினார். தெரேசு கருத்துப்படி அவர் அன்னையும் நான்கு அன்புச் சகோதரர்களும், சகோதரிகளும் வாழும் இடம் விண்ணகம். சாவு பற்றிய எண்ணம் அச்சத்தையே அவளிடம் உண்டாக்கியது. தந்தையின் இறப்பு பற்றிச் சிந்திப்பதை அவள் அறவே விரும்பவில்லை. அவ்வாறு நினைப்பதை விட அவருடன் இறப்பதே சிறந்தது என்பது அவள் விருப்பம். "என் அப்பா மீது எவ்வளவு கொள்ளைப் பாசம் வைத்திருந்தேன் என்பதை என்னால் சொல்ல இயலாது. அவரில் கண்ட அனைத்துமே, அவரை அன்பு செய்ய என்னைத் தூண்டின" எனத் தெரேசு பெருமையுடன் கூறுகிறார். அவள் தந்தையும் "தெரேசு விருப்பங்கள் அனைத்தையும்" நிறைவேற்றினார். தமது மனக் கருத்துக்களையும், தெரேசிடம் பகிர்ந்துக் கொள்வார். அவர் ஆலயத்திலும், வீட்டில் மாலையிலும் எவ்வளவு உருக்கமாகச் செபித்தார் என்பதைத் தெரேசு மட்டுமே அறிந்திருந்தார்.

ஆண்டின் முதல் நாளிலும், தந்தையின் நாம விழாவான ஆகஸ்ட் இருபத்தைந்தாம் நாள் தூய லூயிஸ் விழா நாளிலும், தெரேசு தன் தந்தைக்கு வாழ்த்துக் கவிதை பாடினாள். பொலீன் எழுதிய அழகிய கவிதை வரிகளை இசையுடன் பாடத் தெரேசு தயாரிப்புகள் பல செய்தாள். அவளிடம் இருந்த மிகச் சிறந்த ஆடையை அணிந்து கொண்டாள். முடியைச் சுருட்டி விட்டு அழகாக ஒப்பனை செய்து கொண்டாள். ஆண்டு தோறும் மாறாத சடங்குகளாக இவை நடைபெற்றன. கவிதையுடன் மேல் மாடிக்குச் சென்று தன் தந்தையை வாழ்த்துவாள். அப்போது ஐவரும் "மன்னனோடு இணைந்து



வைரங்களாக' மின்னி ஜொலிப்பர்.

இன்பச் சுற்றுலாப் பயணத்தை மார்ட்டின் விரும்பினார். புய்ஸ்ஸொனேவின் முதற்கோடை காலத்தில் தம் மூத்த பெண் மக்கள் இருவருடன் பாரீஸ் நகரைச் சுற்றிப் பார்க்க விரும்பினார். பயணமானார். அங்கு நடைபெற்ற உலகக் கண்காட்சியையும் விலங்குக் காட்சிகளையும் கண்டு களித்தனர். ஜூன் மாதம் 17 ஆம் நாள் முதல் ஜூலை மாதம் 2ஆம் நாள் வரை தெரேசு தன் அத்தையின் இல்லத்தில் தங்கினார். "அங்கு அவர் மகிழ்ச்சியாக இருந்தார். சோர்வுற்றதில்லை. களைப்படைந்ததில்லை. அவரைக் கண்காணிப்பது கடினமாகவுமில்லை. எதிலும் அவர் தம்மை எளிதாக ஈடுபடுத்திக் கொண்டு மகிழ்ச்சி அடைந்தார். புன்னகையை எப்போதும் தமது சொந்தமாக்கிக் கொண்டார்" என அத்தை எலீசா தெரேசைப் புகழ்ந்து பொலீனுக்கு எழுதிய கடிதத்தின் கடைசி வரியைத் தெரேசின் கையைப் பிடித்து எழுத வைத்தார்.

கேரென் குடும்பத்தினர் த்ருவில் (Trouville) என்னுமிடத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தனர். கடற்கரைவாழிடங்கள் அப்போது நாகரிகமாகத் திகழ்ந்தன. தெரேசு மற்றும் அவளுடைய உடன் பிறப்புகள் மாறி மாறி அங்குத் தங்கினர். கடலின் அலையை இரசித்து மகிழ்ந்த அவர்கள் மாமாவின் பிள்ளைகளுடன் கடலில் சிறு படகுகளில் பயணம் செய்தனர். விலாங்கு மீன் பிடித்தனர். 1878 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் நாள் தெரேசின் வாழ்வில் மறக்கமுடியாத நாள். த்ருவில்லில் தங்கியிருந்த மார்ட்டின் தன்னோடு தெரேசையும் அழைத்துச் சென்றார். லிசியூவிலிருந்து 30 கிலோ மீட்டர் புகைவண்டிப் பயணம் மேற்கொண்டார். "கடல் என்னில் பதித்த அழியாத சுவடுகள் என்றும் என்னால் மறக்க இயலாதவை". அதே நாளில் நிகழ்ந்த பிறிதொரு நிகழ்வும் என் நினைவிலிருந்து நீங்காத ஒன்றே. புகைவண்டியில் உடன் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு தம்பதியினரின் கண்கள் என்னையே நோக்கிய வண்ணமாக இருந்தன. அவர்கள், "நீ, மிகவும் அழகாக இருக்கின்றாய்" என்று பாராட்டினர். நான் அழகாக இருக்கிறேன் எனப் பிறர் கூறக்கேட்பது அதுவே முதல் தடவை. இவ்வார்த்தை எனக்கு மகிழ்ச்சித் தந்தது. அதுவரை நான் ஓர் அழகியென்று நினைத்ததேயில்லை." ஆனால் வீட்டிலுள்ள அனைவரும் அவளைப் பற்றி எதிர்மறையாகவே கூறி இருந்தனர்.

தெரேசு கோபம் கொண்டதாக ஒரே ஒரு நிகழ்வு பற்றிய தகவல் மட்டுமே கிடைத்துள்ளது. அது அவரது ஆறாவது வயதில் நடந்தது. வீட்டுப் பணிப்பெண் விக்டோரியா, தெரேசைத் தொல்லைப்படுத்தப் பெரிதும்

விரும்பினாள். தெரேசு பொறுமையைக் கடைபிடித்தாள். அப்படி ஒருமுறை கிண்டல் செய்தபோது கடும் கோபமுற்ற தெரேசு 'விக்டோரியா நீ நாகரிகமற்றவள்' என்று திட்டித் தீர்த்தாள். பணிப்பெண் தலைகுனிந்தாள். வழக்கமாகப் பொறுமையைக் கடைப்பிடித்து இனிமையாகவும், சாந்தமாகவும் பழகும் பண்புடைய தெரேசு மீண்டும் விக்டோரியாவுடன் உறவுடன் பழகினாள். சில சமயம் நீர் நிறைந்த வாளிக்குள் தெரேசு விழுந்து சிக்கிக் கொள்வாள். அல்லது நெருப்புக் கூண்டில் தீ இல்லாத இடத்தில் விழுந்து சாம்பலால் குளித்திருப்பாள். விக்டோரியா ஓடிச் சென்று அவளை உடனே காப்பாற்றுவாள்.

## விடியலைத் தேடிய நெஞ்சம் (13 மே 1880)

1880 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாள் செலின் முதல் திருவிருந்தில் பங்கு கொள்வதாக நாள் குறிக்கப்பட்டது. அதே ஆண்டு தெரேசுவுக்கு மறை மாவட்டத் தலைமை ஆலயத்தில் அருட்தந்தை தியூஸெல்லியெர் (Ducellier) ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கினார். அதனைப் பெறுவதற்காகத் தெரேசு முழந்தாளிட்ட போது அருட்பணியாளர் அவரைக் காண இயலவில்லை. எனவே, எழுந்து நின்று கொண்டே பாவங்களை அறிக்கையிட வேண்டியதாயிற்று. பொலீன் அவருக்கு அதற்கான பயிற்சிகளை அளித்திருந்தார். இறைவனின் இடத்தில் இருந்து மன்னிப்பு வழங்கும் அந்த அருட்பணியாளரிடம் "என் முழு இதயத்தோடு உங்கள் மீது அன்பு பாராட்டுகிறேன்" என்று கூறலாமா? வேண்டாமா? என்று தெரேசு சிந்தித்தாள். அந்த நிகழ்விற்குப் பிறகு எல்லாப் பெருவிழாவின் போதும் ஒப்புரவு அருட்சாதனச் சடங்கில் பங்கு பெற்றார். ஒவ்வொரு முறையும் அது உண்மையான கொண்டாட்டமாகவே திகழ்ந்தது. அந்நேரத்தில் அச்சம், மனக்கலக்கம் போன்றவை அவருக்குத் தோன்றவில்லை.

பல பெருவிழாக்களும், நற்கருணைப் பேரணிகளும் நடந்த போது தெரேசு ரோசா இதழ்கள் தூவினாள். மே மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை செலின் முதல் திருவிருந்தில் பங்கு கொண்டபோது பொலீன் கூறிய வார்த்தைகள் தெரேசுவின் செவியிலும் ஒலித்தன. திருவுணவைப் பெறச் செலின் அனுப்பப்பட்ட போது தெரேசு மிகவும் கவலையுற்றாள். சிறுமியாக இருந்ததால் தனக்குத் திருவுணவைப் பெறும் வாய்ப்பு என்றைக்குக் கிடைக்குமோ? என ஏங்கினாள். எனினும் செலினின் மகிழ்ச்சியைத் தனதாக்கிக் கொண்டாள். "நானே முதல் திருவிருந்தில் பங்கு கொள்ளப் போவதாக எனக்குத் தோன்றியது. அரும்பெரும்



கொடைகள் எனக்கு உறுதியாக அன்று கிடைத்தன என்று நான் நம்பு கிறேன். அந்நாளை என் வாழ்வின் பொன்னாளாக மதிக்கின்றேன்" என்று கூறினாள். அந்நேரம் முதல் புது வாழ்வு வாழத் தனக்குள்ளே தெரேசு முடிவெடுத்தாள். மூன்று ஆண்டுகள் அவளது முதல் திருவிருந்திற்காகத் தயாரிக்க வேண்டும். அந்நாளில் விடியலுக்காகக் காத்திருந்தாள். ஆனால் அதற்கு முன்பாகக் கிறிஸ்துமஸ் அன்று திருவிருந்தில் பங்கு கொள்ள விரும்பினாள். 'நான் மிகச் சிறியவள். எவரும் கவனிக்க மாட்டார்கள் என்று எண்ணிப் பெரியவர்களுடன் இணைந்து செல்ல முயன்றாள்.' மரியா அவளது எண்ணத்தை அறிந்து தடுத்து விட்டார்.

## அர்த்தம் தேடும் ஆதங்கம்

மகிழ்ச்சி நிறைந்த அந்த ஆண்டுகளில் நடந்த புதிரான நிகழ்வொன்று தெரேசுவின் உள்ளத்தில் ஆழமான வடுவை ஏற்படுத்தியது. 1879 அல்லது 1880 ஆம் ஆண்டு கோடையில் ஒருநாள் நண்பகல் நேரம். "அப்பா! அப்பா!" எனத் தெரேசு அழைப்பதை மரியாவும், பொலீனும் கேட்டார்கள். தன் நண்பர்களைச் சந்திக்க வழக்கமாகச் செல்வதைப் போல இம்முறையும் மார்ட்டின் அலென்சோனுக்குச் சென்றிருந்தார். 'தந்தையைப் போல உடையணிந்த ஒரு மனிதர்' குனிந்தவாறு, தன் தலையைச் சிறிய துண்டுத் துணியால் மூடியவாறு தோட்டத்தின் கீழ்பகுதியைத் தாண்டி புதர் வேலிக்குப் பின்புறமாய் மறைந்து சென்றார். தன் அறையின் சன்னல் வழியாக இந்தக் காட்சியைக் கண்டதாகச் சகோதரிகளிடம் தெரேசு கூறினாள். விக்டோரியாதான் நகைச்சுவைக்காக இவ்வாறு செய்திருப்பாரோ? என்று எண்ணி விசாரித்த போது அவர் மறுத்தார். விக்டோரியாவோ சமைய லறையை விட்டுத் தாம் வெளியே செல்லவில்லை என்றார். தோட்டத்தின் அனைத்து இடங்களிலும் தேடிப்பார்த்தனர். யாரெனப் புலப்படவில்லை. நிகழ்வின் அர்த்தம் மறை பொருளாகவே இருந்தது. தெரேசின் மனத்தில் ஆதங்கம் பெருக அவளின் சகோதரிகள் அவரைத் தேற்றினார்கள். 'அதைப்பற்றி எண்ணாமல் இருப்பது என் சக்திக்கு அப்பாற்பட்டது' என்றாள். பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்துச் சகோதரிகளும் கார்மல் சபையில் இருந்தபோது இப்புதிர் நிகழ்வு ஏற்படுத்திய ஆதங்கத்திற்கு அர்த்தம் புரிந்தது.

புய்ஸ்ஸொனேவில் முதல் மூன்று ஆண்டுகள் தெரேசின் வாழ்வில் வசந்தத்தையே கொணர்ந்தன. உள்ளத்தை மகிழ்ச்சியால் நிறைத்தன. சூழமைவு அமைதியையும், பெண்மைக்குரிய மென்மையையும், தாய்மைக்குரிய பண்பினையும் தெரேசுவுக்கு உணர்த்தின. மார்ட்டினின்

மென்மையான இதயம் தாய்மைக்குரிய பாசத்தையும், தந்தைக்குரிய அன்பையும் பொழிந்தது. தெரேசின் அன்புத் தாகம் தணிக்கப்பட்டது. அவ்வனுபவத்தைக் குறித்து "மிக நுண்ணிய மென்மையான அன்பினால் தொடர்ந்து சூழப்பட்டேன்" எனத் தெரேசு குறிப்பிடுகின்றார்.

அந்த மகிழ்ச்சியான காலமும் முடிவுக்கு வந்தது.

# 3

# கல்விக் கூடத்திலே. . .

(1881 அக்டோபர் 3 ஆம் நாள் முதல் 1886 மார்ச் வரை)

*'சோகத்தின் சுகங்களை*
*என் வாழ்வில் சொந்தமாக்கிய*
*பள்ளிப் பருவத்தின் ஐந்து ஆண்டுகள்"*

## முதல் அனுபவம்

**1881** ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 3ஆம் நாள் சிறுமி தெரேசின் வயது எட்டரை. லேயோனி படித்து முடித்த தூய ஆசிர்வாதப்பர் பள்ளிக்குத் தெரேசு செல்ல வேண்டிய நேரம் அது. தெரேசு அங்கே நான்காம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். அதைப் 'பச்சை வகுப்பு' எனவும் கூறுவர். சீருடைக்கு மேல் பச்சை நிற இடைக்கச்சை அணிந்ததால் அப்பெயர் வந்தது. தெரேசு தினமும் ஒன்றரை கிலோமீட்டர் தூரம் நடந்து பள்ளிக்குச் சென்றாள். மாமாவின் குழந்தைகள் இஷ்ஷானுடனும் (Jeanne), மரியாவுடனும் சேர்ந்து சென்றாள். கேரென் குடும்பப் பணிப்பெண் மார்செல்லினும் அவர்களோடு இணைந்து சென்றாள். ஏறக்குறைய எட்டு மணிக்குப் பள்ளியை அடைந்தனர். நண்பகலுக்குப் பின் தந்தை அல்லது மாமா அவர்களை வீட்டுக்கு அழைத்து வந்தனர். "பள்ளியில் பயிலும் நாள்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் வசந்தமானவை. மகிழ்ச்சியானவை; இனிமையானவை என்று பிறர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், என் வாழ்வில் அவ்வார்த்தைகள் பொய்த்தன. பள்ளியில் கழித்த ஐந்து ஆண்டுகளும் என் வாழ்வின் சோகம்

நிறை நாள்களாக அமைந்தன. என் அன்பு செலின் மட்டும் என்னோடு இல்லாதிருந்தால் ஒரு மாதம் கூட நோயின்றி நான் அங்கே தங்கியிருக்க மாட்டேன்" என்று தெரேசு அங்கலாய்த்தாள்.

மரியாவும், பொலீனும் கற்பித்த பாடங்கள் பயன் அளித்தன. கணிதம் மற்றும் எழுத்துப் பயிற்சி தவிர மற்ற அனைத்துப் பாடங்களிலும் தெரேசு முதல் மாணவியாகத் திகழ்ந்தாள். ஆனால் புதிய பொது வாழ்வை (Com-



அக்காள் செலினுடன் எட்டுவயதில் (1881)



mon Life) அவளால் ரசிக்க முடியவில்லை. திறமை குறைந்த மாணவிகள் சிலர் அவள் மீது பொறாமை கொண்டனர். பதின்மூன்று வயது நிரம்பிய மாணவி ஒருத்தி பொறாமையால் தெரேசை அதிகமாகக் கிண்டல் செய்தாள், மிரட்டினாள். அதனை யாரிடமும் சொல்லத் தெரியாமல் தெரேசு அழுதாள். அவர்கள் பொழுது போக்கு நேரத்தில் விளையாடிய மூர்க்கத்தனமான விளையாட்டுகள் தெரேசுவுக்கு அச்சமளித்தன. ஓடி விளையாடுவதை அவள் விரும்பவில்லை. பொம்மை விளையாட்டுக்கள் பற்றியும் அவளுக்குத் தெரியவில்லை. கதை சொல்லும் ஆற்றல் அவளிடம் இருந்தது. எனவே, கதைகள் சொல்வதில் ஆர்வம் காட்டினாள். இறந்த பறவைகளைப் புதைத்தல், மழலைகள் வகுப்பில் உள்ள குழந்தைகளைக் கண்காணித்தல் போன்ற மென்மையான பணிகளில் ஈடுபாடு காட்டினாள். வயதில் மூத்த மாணவிகள் பல வகைகளில் தெரேசை மிரட்டினார்கள். 'துணிச்சல்காரி' எனப் பெயர் பெற்ற செலின் அவளுக்குத் துணை நின்றார். முன்னாள் ஆசிரியை ஒருவர் தெரேசின் குணநலன்களை இவ்வார்த்தைகளில் வர்ணிக்கிறார்: "அவள் கீழ்ப்படிதல் உள்ளவள். சட்டத்தின் மிகச்சிறு நுணுக்கங்களையும் கடைப் பிடிப்பவள். தவறு செய்ய நேரும் வாய்ப்புகளை எண்ணிக் கலக்கமுறுவாள். இக்கலக்கம் பலமுறை அவளைப் பெரும் கவலைக்குள்ளாக்கியது. அமைதி, சாந்தம், மனத்தில் உள்ளதை வெளிக்கூறாமை, அவள் வயதுக்கும் மீறிய மௌனம் போன்றவை அவளுடைய பெருங்குணங்களாக இருந்தன. சில வேளைகளில் கனவு காண்பவராகக் காணப்பட்டாள். அவளது முகம் ஒருவித கவலையைப் பிரதிபலித்துக் காட்டியது".

கல்வி கற்று முடிந்து மாலை நேரங்களில் புய்ஸ்ஸொனேவுக்குத் திரும்பும் போது அவள் உள்ளத்தில் எவ்வளவு ஆனந்தம்! தன் தந்தை, உடன்பிறப்புகள், அவரது தனி உலகம், தோட்டத்தில் சலசலவென ஒலி உண்டாக்கிக் கொண்டே தெரேசைப் பின் தொடர்ந்து வரும் பறவைகள் கூட்டம் போன்றவை அவளைப் பேரானந்தத்தில் மூழ்கடித்தன. 'என் இதயம் ஆனந்தக் கூத்தாடி விரிந்தது' எனத் தெரேசே கூறுவார். ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் வியாழக்கிழமைகள் சிறுமிக்கு மன அமைதியைத் தரும் மிக முக்கிய நாள்களாயின. தன் மாமாவின் மகள் மரியாவுடன் புது விளையாட்டு ஒன்றைக் கண்டுபிடித்தாள். தோட்டத்தின் கீழ்ப்பகுதியில் துறவிகள் போல் இருவரும் இருந்தனர். சலவைக் கூடத்தில் எழுப்பப் பட்டிருந்த சிறு பீடத்தில் சடங்குகளுக்கான உடைகள் அணிந்தனர். எனினும் ஒருநாள் தன் அன்னை பொலீனிடம் தான் துறவியாக விரும்புவதாகவும் அவரோடு ஓர் பாலைவனத்திற்குச் செல்ல விரும்புவதாகவும் கூறினாள். இளம் பெண் பொலீன் புன்னகைத்தவாறே 'உனக்காக நான் காத்திருப்பேன்'

என்றார். தெரேசு அதை முழுமையாக நம்பினாள்.

கேரென் குடும்பத்தினர் மற்றும் மோதெலோந்த் குடும்பத்தினருடன் வியாழன் தோறும் நண்பகலில் நடைபெறும் 'சமூகத் தோழமை' விருந்தில், நடனமும் இடம் பெறும். ஆனால் தெரேசு அதில் ஆர்வம் காட்டவில்லை. அத்தகைய விழாக்கள் அவளுக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை. மற்றப் பிள்ளைகளைப் போலத் தனக்கு விளையாடத் தெரியவில்லை எனத் தெரேசு ஒப்புக் கொண்டாள்.

நூல்கள் வாசிப்பதை அவள் பெரிதும் விரும்பினாள். 'என் கைகளைக் கடந்து சென்ற நூல்களின் எண்ணிக்கையை என்னால் வரையறுத்து கூற இயலாது.' வீர சாகசக் கதைகள் அவருக்குக் கிளர்ச்சியை உண்டாக்கின. அனைத்துக் கதைகளையும் விட பிரான்சு நாட்டு வீராங்கனை ஜோன் தார்க்கின் கதையைப் பெரிதும் விரும்பினாள். அப்போது ஜோன் 'புனிதை'யாக அறிவிக்கப்படவில்லை. தானும் பெருஞ் சிறப்பு அடைவதற்காகவே பிறவி எடுத்துள்ளதாகத் தெரேசு கருதினாள். வெளி ஆடம்பரமான மாட்சியல்ல, மாறாக மறைவான மகிமையுடைய 'சிறந்த புனிதை' என்கிற மகிமையை அடைய விரும்பினாள்.

தெரேசு தனது மனத்தைக் கவர்ந்த சித்திரங்களையும், ஓவியங்களையும் ரசித்துப் பார்ப்பதில் பல மணி நேரங்களைச் செலவழித்தாள். திருவிருந்துப் பேழைக் கம்பி சன்னலின் உள்ளே "சிறைக் கைதியாக" இயேசுவைச் சித்தரித்திருந்த ஓவியம் அவளைப் பெரிதும் கவர்ந்தது.

மீண்டும் பள்ளிக்குச் செல்வது எவ்வளவு கடினமானது! அங்கு அவள் மகிழ்ச்சியை அனுபவித்தது மன மகிழ்ச்சி முடிவதற்கு முன்பு கிடைத்த பத்து நிமிடங்கள் தாம். ஆலயத்திற்குச் சென்று மன்றாடுவதில் செலவழித்த நிமிடங்களே அந்த அலாதியான மகிழ்வைத் தந்தன.

## பிரிவு இன்னும் சூழலும் (15 அக்டோபர் 1882)

பொலீன், தெரேசுவினுடைய இரண்டாம் வளர்ப்புத் தாய். தந்தையின் 'இனிய பவழம்'. தூய ஜாக் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியின் போது இவர் கார்மல் துறவியாகும் அழைத்தலை உணர்ந்து முடிவெடுத்தார். தெரேசு இதனை அறியவில்லை. இது ஒரு உடனடி மனத்தூண்டுதல். பொலீன் லெ மானில் உள்ள மாதா மினவுதல் சபையில் சேருவதாக முன்பு எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் தற்போது கிடைத்த உட்தூண்டுதலைத் தன் தந்தையிடமும் மரியாவிடமும் எடுத்துரைத்தார். தந்தையும் தனது



சம்மதத்தைத் தெரிவித்தார். உடனடியாகக் கார்மல் இல்லத்திற்குச் சென்று தலைவி மரி தே கொன்சாக்- கைச் சந்தித்தனர். அவரும் பொலீனின் முடிவை ஏற்றுக் கொண்டார். பொலீனுக்கே இது வியப்பாக இருந்தது. ஏனெனில் கயென் நகரிலுள்ள கார்மலில் சேரவே எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் லிசியூவிலேயே அவருக்கு ஓர் இடம் கிடைத்தது. வீட்டில் அனைவரும் இச்செய்தியை அறிந்தனர். சிறுமி தெரேசு மட்டும் பொலீனின் முடிவை அறியாதிருந்தாள்.

1882 ஆம் ஆண்டு கோடையில் பொலீனும் மரியாவும் நிகழப் போகும் பிரிவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். தெரேசுவின் செவிக்கு இவ்விவரங்கள் எட்டின. "வாளொன்று என் இதயத்தைப் பிளப்பது போல் இருந்தது. கார்மல் என்றால் என்னவென்று எனக்கு அப்போது தெரியாது. ஆனால் பொலீன் எனக்காகக் காத்திருக்க மாட்டார். நான் என் இரண்டாம் அன்னையை இழக்கப் போவதைப் புரிந்து கொண்டேன். என் இதய வேதனை வடுக்களை வார்த்தையால் எப்படி வடிப்பது? ஒரு சிறு நொடிப் பொழுதில் வாழ்வின் அர்த்தம் புரிந்தது. வாழ்க்கை இவ்வளவு சோகமயமாக இருக்கும் என்று இதுவரை நான் எண்ணியதில்லை. *ஆனால் வாழ்க்கை தன் விறைப்பான எதார்த்தத்தோடு என் கண் முன் நின்றது. வாழ்வு என்பது பிரிவு; தொடர் சோகம் என்பதைக் கண்டுணர்ந்தேன். நான் கலங்கிக் கண்ணீர் வடித்தேன்"* எனத் தெரேசு தனது மன ஏக்கத்தைக் கூறினாள்.

பொலீன் தன் அழைப்பின் ஆரம்ப கால ஆர்வத்தில் மகிழ்ந்தார் என்றாலும் தன் தங்கையின் மனநிலை பெரிதும் பாதிக்கப்படுமே என அவர் உணரவில்லை. பின்னர் தன் செயலுக்காக வருந்தினார். "என் தங்கை இவ்வளவு சோகத்தால் பாதிக்கப்படுவார் என்பதை அப்போதே அறிந்திருந்தால் சபையில் சேர வேறொரு வழியைக் கையாண்டிருப்பேன். தெரேசுவிடம் அனைத்தையும் கூறியிருப்பேன்" என்றார்.

பின்னர் பொலீன் தன் தங்கை தெரேசுவுக்குக் கார்மல் சபை வாழ்க்கை நிலையை விளக்கிக் கூறி அவரை ஆற்றுப்படுத்த முயன்றார். குழந்தையும் கண்ணீருடன் கவனமாகக் கேட்டது. "கார்மல் என்கிற ஓர் "பாலைவனத்திற்கு"ச் சென்று என்னையே நான் மறைத்துக் கொள்ள வேண்டும் என இறைவன் விரும்புவதாக என் உள்ளத்தில் உணர்ந்தேன். இவ்வுணர்வு என்னில் உறுதியாய் நின்றது. எள்ளளவும் சந்தேகம் எழவில்லை" என்று கூறிய தெரேசு பதின்மூன்று ஆண்டுகள் கழித்துத் தன் தூண்டுதலைப் பற்றித் தெளிவாக மேலும் பின்வருமாறு விளக்கம் அளித்தார். 'குழந்தையின் மனத்தில் எழுந்து விரைவில் கரையும் கனவு

போல அந்த எண்ணம் உதிக்கவில்லை. மாறாக இறை அழைத்தலின் உறுதியாலும், வலிமையாலும் அடித்துச் செல்லப்பட்டேன். நான் கார்மலில் நுழைய ஆவல் கொண்டேன். அன்னை பொலீனோடு ஒன்றித்து வாழ அல்ல. மாறாக 'இயேசுவுக்காக மட்டுமே' வாழ நான் துறவியாக எண்ணினேன். வார்த்தைகளால் விவரிக்க முடியாதவைகளை நான் எண்ணினேன். அது என் ஆன்மாவில் அமைதியை ஏற்படுத்திச் சென்றது. இந்நினைவே என் மனத்தை முழுமையாக ஆட்கொண்டது".

மறுநாள் தெரேசு தன் இரகசியத்தைப் பொலீனுக்குத் தெரியப் படுத்தினாள். அப்போது தெரேசுவின் வயது ஒன்பது. ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று கார்மல் இல்லத்தில் வரவேற்பறையில், அன்றைய இல்லத் தலைவி மரிதேகொன்சாக் (Marie De Gonzague)- கைத் தனிமையில் சந்தித்தாள். மரிதேகொன்சாக் அவர்கள் தெரேசுவுக்கு இறையழைப்பு உண்டு என நம்பினார். எனினும் பதினாறு வயது நிரம்பாத எவரையும் இல்லத்தில் அனுமதிக்க இயலாது என்றும் கூறினார். எனவே தெரேசு காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அன்றிலிருந்தே தன் வாழ்வின் இலக்கு என்னவென்பதைத் தெளிவாக அறிந்திருந்தாள்.

பொலீனைப் பிரிவதற்குச் சில வாரங்களுக்கு முன்பே தெரேசு அவரை முத்தங்களால் நிரப்பத் தொடங்கினாள். பரிசு மழை பொழிந்தாள். இனிய தின்பண்டங்களை அவருக்கு ஊட்டி மகிழ்ந்தாள். பிரியும் நாள் நெருங்க நெருங்கத் துக்கம் தொண்டையை அடைத்தது. நெஞ்சம் கனத்தது. இதயம் வலித்தது. 1882 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் திங்கட்கிழமை வழக்கம் போல் எல்லோருக்கும் ஓர் இனிய நாள். கதிரவன் ஒளிவீசி மகிழ்வித்தது. ஆனால் தெரேசுவுக்கு மட்டும் அது "கண்ணீர் நாளாக" அமைந்தது. இருள் படர்ந்தது.

அவளுடைய பிரிய அன்னை பொலீன் அவரை விட்டுப் பிரிந்தார். தந்தை லூயிஸ் அவரைக் கார்மல் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே இல்லத்தின் ஆன்மீக இயக்குநர் அருட்பணியாளர் தியூஸெல்லியெர், (Ducellier), தலைமைத் தந்தை அருட்பணியாளர் தெலாத்ரோயெத் (Delatroeitte) மற்றும் தூய ஜாக் பணித்தளப் பணியாளரும் அவர்களை வரவேற்றனர். கேரென் குடும்பத்தினர் மற்றப் பிள்ளைகள் அனைவரையும் திருப்பலிக்கு அழைத்துச் சென்றனர். இவ்விளம் சிட்டுக்கள் அனைவரும் கண்ணீர் விட்டு அழுவதைக் கண்ட இறைமக்கள் அனைவரும் வியந்து நின்றனர். உள்ளத்தில் வேதனையை அதிகரித்த சடங்குகள் முடிந்தன. தெரேசு மீண்டும் புதிய ஆண்டு படிப்பைத் தொடரப் பள்ளிக்குச் செல்ல



வேண்டும். அவளுக்கு அதை நினைத்தாலே கசந்தது. மீண்டும் பள்ளிக்குச் செல்ல வேண்டுமே என்ற கவலையுடன் கார்மல் இல்லத்திலிருந்து வெளி வந்தாள். கார்மல் சபையை உருவாக்கியவரும், அதன் பாதுகாவலருமான அவிலா நகர் தெரசாவின் விண்ணக பிறப்பு மூன்றாம் நூற்றாண்டுக் கொண்டாட்டத்திற்கான தயாரிப்புகள் நடந்து கொண்டிருந்தன. தெரேசு அதைக் கண்டு கொண்டதாகவும் தெரியவில்லை.

தெரேசு பள்ளிக்குச் சென்றாள். 'சிவப்பு நீல வண்ணம்' வகுப்புக்கு அனுப்பப்பட்டாள். முதல் திருவிருந்திற்காகச் சிறுவர், சிறுமியருக்கு அங்கே தான் பயிற்சி தந்தார்கள். துறவற அறிவு அங்கே முக்கிய இடம் பெற்றது. வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வாரந்தோறும் நாற்பது வயதான அருட்பணியாளர் தோமென் (Domain) சிறுவர், சிறுமியருக்கு அறிவுரை வழங்கினார். முதல் திருவிருந்தில் பங்கு கொள்வோருக்கெனத் தனி ஆசிரியர் ஒருவர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் வாரந்தோறும் மூன்று முறை பாடங்கள் நடத்தினார். தெரேசு மறைக் கல்வியில் அதிக ஆர்வம் காட்டிப் படித்து முதல் மாணவியாகத் திகழ்ந்தாள். துயர் நிறைந்த இந்நாள்களில் தான், 'முதல் விருந்தில் பங்கு பெறப் போகிறோமே' என்கிற ஆவல் அவள் உள்ளத்தில் நம்பிக்கை கதிரொளியை வீசச் செய்தது. அந்த நேரத்தில் மறை ஆயரிடமிருந்து வந்த சட்டம் தெரேசை முதல் திருவிருந்து பெறத் தகுதியற்றவள் ஆக்கியது. அதற்கான தகுதி வயதிலிருந்து இரண்டு நாள்கள் குறைவாக இருந்தாள். தெரேசு வருந்திக் கலங்கினாள். செய்தி யறிந்த மாமா கேரென் மறை ஆயரைச் சந்தித்து விதி விலக்குப் பெற விரைந்தார். ஆயர் அவர்கள் அன்புடனும், உறுதியுடனும் விதிவிலக்குத் தர மறுத்தார். லிசியூவில் பெரும் புகழுடனும், பெருமையுடனும் புகழ்பெற்று இருந்தாலும், கேரெனின் வேண்டுகோளுக்கு ஆயர் அவர்கள் இணங்க மறுத்தார். தெரேசின் கண்களில் கண்ணீர் கடலாய்ப் பெருக்கெடுத்தது. மென்மையான பெண்மை மனம் கொண்ட தெரேசு இதனைத் தாங்குவது பெரும் கடினம் தான்!

## விரைந்து செல்லும் வினாடிகள்

அனைத்து வியாழக்கிழமைகளிலும் மார்ட்டின் குடும்பத்தினர் பொலீனைச் சந்திக்கும் சிறப்புச் சலுகையை இல்லத் தலைமைச் சகோதரி மரிதெகொன்சாக் வழங்கி இருந்தார். ஆனால் அச்சந்திப்பும் துயரை அதிகரிக்கவே செய்தது. இரட்டைக் கம்பி சன்னல்கள், திரைச் சீலைகள் போன்றவற்றைக் கொண்டிருந்த அந்த அறை சிறையைப் போன்றே காட்சி தந்தது- அரைமணி நேரச் சந்திப்பிற்கு அனுமதி கிடைத்திருந்தாலும் மனல்

கெடிகாரம் காட்டும் அரைமணிநேரம் விரைந்து விடுவது போன்ற உணர்வு அனைவருக்கும் இருந்தது. மரியாவும் கேரென் குடும்பப் பெண்களும் பேசியபடி இருப்பர். தெரேசுவுக்குப் பேசுவதற்கு வாய்ப்பே கிடைக்காது. அப்படியே கிடைத்தாலும் கடைசி நேர இரண்டு அல்லது மூன்று நிமிடங்களே கிடைக்கும். பொலீன் அப்போது சகோதரி ஆக்னெசு (Agnes) என்ற புதிய பெயர் பெற்றிருந்தார். உரையாடலில் மூழ்கிப் போயிருந்த அவர், தெரேசு அணிந்திருந்த புதிய உடையைக் கண்டுக் கொள்ளவே இல்லை. மன வெறுப்படைந்து கண்ணீரோடு வரவேற்பறையை விட்டு வெளியேறிய தெரேசு, "இந்தக் கார்மல் வரவேற்பறையில் எத்தனை வேதனைகளை அனுபவிக்க வேண்டியுள்ளது. பொலீன் சபையில் சேரும் போது அனுபவித்த வேதனைகளை விட தற்போது அனுபவிக்கும் வேதனைகள் கொடுமையானவை" என்று வருத்தத்துடன் தமது குறிப்பேட்டில் எழுதி வைத்தார்.

இந்த வரிகளைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு பொலீன் வாசிக்க நேர்ந்த போது 'இதெல்லாம் எனக்கு தெரியமாற் போனதே' என்று மனம் வருந்தினார். தெரேசின் உணர்வுகள் பாதிக்கப்பட்டன. இதயத்தின் ஆழத்தில் உணர்ந்து தெரேசு கூறினாள்: "என் அன்னை பொலீனை இழந்து விட்டேன் உள்ளத்தில் புதைந்து கிடந்த அன்னையின் இழப்பின் போது நேர்ந்த துயரங்கள் மீண்டும் என்னைத் தாக்கின." தமது பத்து வயதுக்கு முன்பாகவே தம் இரு அன்னையரை இழந்து விட்டார் தெரேசு.

## வலம் வரும் வேதனை

சிறுமி தெரேசு ஆர்வத்தோடு 'சிவப்பு நீல வண்ண வகுப்பில் பள்ளிப்படிப்பை' அவ்வருடம் தொடங்கிய நேரம். டிசம்பர் மாதம், தெரேசுவுக்குத் தொடர் தலைவலி, விலாவலி, வயிற்று வலி எனப் பல்வேறு நோய்களும் வரத்தொடங்கின. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எரிந்து விழுந்தாள். பசியின்மையால் வாடினாள். தூக்கமின்மை துன்புறுத்தியது. கார்மல் வரவேற்பறையில் தன் குழந்தையின் நிலைகண்டு சகோதரி ஆக்னெசு கலங்கினார். "தெரேசுவின் முகம் எப்போதும் வெளிறிப் போயிருந்தது." அவரது ஆளுமையும் பாதிக்கப்பட்டது. இந்த முறை தெரேசு தன் மூன்றாவது அன்னையாக மரியாவைத் தேர்ந்தெடுக்கவில்லை. ஆனால் மரியாவே சிரமத்துடன் அந்தப் பொறுப்பை ஏற்றிருந்தார். மரியா ஏதேனும் கட்டளையிடும் போது தெரேசு மறுத்துப் பதில் கூறினார். செலினுடன் சின்ன சின்ன வாக்குவாதங்கள், சண்டைகள் மூண்டன. சகோதரி ஆக்னெசு கடிதத்தில் தன் அன்புக் குழந்தைக்கு அன்பான மிரட்டல்கள்,



அறிவுரைகள் வழங்கினார். இல்லத் தலைவி மரிதேகொன்சாக் அவர்களும் கடிதம் எழுதினார். ஆனால் அக்கடிதம் தெரேசுவின் மனத்திலே வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல் அமைந்தது. "என் குட்டி மகளாகிய குழந்தை இயேசுவின் தெரேசு, சரியாகத் தூங்குவது இல்லை என்றும், நோயுற்றி ருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். நீ நாள் முழுவதும் சகோதரி ஆக்னெசைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. அது உன் இதயத்தைப் பாதித்துப் புண்ணாக்கி விடும். துன்பத்தில் ஆழ்த்தி உடல் நலத்தைக் கெடுக்கும்" என்று எழுதினார்.

## ஓசையின்றி ஓர் தாக்குதல் (1883 மார்ச் 25 முதல் மே 13 வரை)

"மனத்துயர் உடல் நலத்தைப் பாதிக்கும்" எனத் தலைமைச் சகோதரி மரிதே கொன்சாக் கூறியது சரியே. பத்து வயது சிறுமி தெரேசு குறைகள் கூறுவதில்லை. பதில் வார்த்தை பேசுவதில்லை. வீண் சண்டைக்குப் போவதில்லை. அமைதியாகவே தன் வாழ்வைத் தொடர்ந்தாள். ஆனால் இதுவரை அமைதியாயிருந்த பதினான்கு வயது நிரம்பிய செலின் குறும்புக்காரி ஆகிவிட்டாள். "குட்டிப் பெண் தெரேசு அளவுக்கதிகமாக அழுதாள்" எனச் சகோதரி ஆக்னெசு கேள்விப்பட்டதால், செலி - தெரேசு இருவருக்கிடையே சண்டைகள் எழுந்தால் தெரேசுவுக்காக விட்டுக் கொடுக்கும்படி செலினை அவர் கேட்டுக் கொண்டார்.

1883 ஆம் ஆண்டு உயிர்ப்பு விழா விடுமுறையில் மார்ட்டின், தம் பெண் மக்கள் மரியாவுடனும், லேயோனியுடனும் புனித வாரத்தைப் பாரீஸ் நகரில் செலவிடத் திட்டமிட்டார். கேரென் தம்பதியரின் மகள் மரியா சிறுமி தெரேசைப் பார்த்துக் கடுஞ்சொல் ஒன்றை ஒரு நாள் கூறினாள். அதாவது தெரேசு தன் அத்தை எலிசாவை 'அம்மா' என அழைத்தாள். மரியா அதனை எதிர்த்து, "அவர் எனக்குத்தான் அம்மா! உனக்கல்ல! உன் அம்மா இறந்து விட்டார்கள்!" என்றாள். இவ்வார்த்தை தெரேசுவின் இதயத்தைக் கொடூரமாகக் குத்திக் கிழித்தது.

மார்ச் திங்கள் 25ஆம் நாள் உயிர்ப்பு ஞாயிறு; அன்று அனைவரும் ஒன்றாய் அமர்ந்து உணவருந்தினர். அப்போது இசிதோர் சிறிதும் சிந்திக்காமல் இறந்த தன் சகோதரியைப் பற்றியும் அலென்சோனில் வாழ்ந்த வாழ்க்கை பற்றியும் கடந்த கால நினைவுகளை மீண்டும் அசை போட்டார். தெரேசு அதனைக் கேட்டதும் சோகம் தாளாமல் விம்மி விம்மி அழுதாள். இசிதோர் அவளைப் படுக்க வைத்து விட்டுத் தன் பெண் மக்களுடன் கத்தோலிக்க மையம் சென்றார். அன்றிரவு தூக்கத்திலேயே தெரேசு உடல்

நடுங்கத் தொடங்கியது. காய்ச்சல் அடித்தது. இல்லம் திரும்பிய இசிதோர் தன் மருமகளின் நிலை கண்டு பெரிதும் வருந்தினார். மறுநாள் நோத்தா (Notta) என்னும் மருத்துவரை அழைத்து வந்தார். அவரால் தெரேசைப் பரிசோதித்த பிறகும் நோயைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் "இதுவரை எந்தக் குழந்தையையும் தாக்காத ஒரு கொடிய நோய்" என்று அவநம்பிக்கையுடன் கூறினார். 'நீர் மருத்துவம்' ஒரு வேளை குணமாக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார். மார்ட்டின் குடும்பத்திற்குச் செய்தி தெரிவித்தார் இசிதோர். அவர்களும் விரைந்து கேரென் இல்லத்தை அடைந்த போது சோகமே உருவான முகத்துடன் பணிப்பெண் ஏமே (Aimee) அவர்களை வரவேற்று, 'ஒரு கணம் தெரேசு இறந்து விட்டார்' என்று எண்ணும் அளவுக்கு இருந்தார் என்றார். அவரை அசைக்க முடியா அளவுக்கு உடல் கனத்திருந்தது. எலீசாவும், மரியாவும் தொடர்ந்து பராமரித்து வந்தனர்.

"நரம்புத் தளர்ச்சி, அதனைத் தொடர்ந்து அச்சம், மனமாயை போன்றவை அடிக்கடி தோன்றி மறைந்தன. தெரேசு மிகவும் வலிமை குறைந்தவராகக் காணப்பட்டதால் தனிமையில் அவரை விட்டுச் செல்ல இயலவில்லை. இத்தகைய குழப்பச் சூழலிருந்து மீண்டு வந்த போது தமக்கு நேர்ந்தவற்றையெல்லாம் தெளிவாக அவர் நினைவு கூர்ந்தார்" எனப் பணிப்பெண் மார்செல்லின் யூஸ் (Marcelline Huse) சான்று பகர்ந்தார். "அவரது இயக்க நரம்புகள் பாதிக்கப்பட்ட போது பெரிதும் தாக்கப்பட்டவராய்த் தன் முழு உடலையும் சக்கரம் போலத் திருப்பி உடல் வலியிலிருந்து விடுதலை பெறப் பெரும் முயற்சி எடுத்தார். நலமுடன் இருக்கும் போது அவ்வாறு உடலை வளைப்பதற்கு அவரால் முடியாது" என்று இஷ்ஷான் கேரென் கூறினார். "நான் இனி இந்நிலையிலிருந்து மீளவே மாட்டேன் என மனிதர்கள் அனைவரும் நம்பும் அளவிற்கு நோய் முற்றியதாக மாறிவிட்டது!" என்றாள் தெரேசு.

பொதுவாகக் குழப்பச் சூழ்நிலை உருவானது. ஏப்ரல் மாதம் 6ஆம் நாளில் நடைபெற இருக்கும் பொலீன் திருவுடை பெறும் நிகழ்வுகளில் தானும் கலந்து கொள்ள விரும்புவதாக மீண்டும் மீண்டும் தெரேசு விருப்பம் தெரிவித்தாள். எனவே, பொலீனைப் பற்றித் தெரேசு முன்னிலையில் பேசுவதைக் குடும்பத்தில் தவிர்த்தனர்.

ஏப்ரல் திங்கள் ஆறாம் நாள் வெள்ளிக்கிழமை காலை எதிர்பாராத நெருக்கடி நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் அனைவரின் எதிர்பார்ப்பிற்கும் முரணான வகையில் முழுமையான குணம் பெற்று எழுந்தாள் தெரேசு. குடும்பத்தினரோடு இணைந்து கார்மல் இல்லம் சென்றாள். திருவுடை பெறும் சடங்கில் பங்கு பெற அவளை அனுமதிக்கவில்லை. வெளி வரவேற்பறையில் அமர்ந்திருந்தாள். சடங்குகள் முடிந்த பின் சகோதரி ஆக்னெசைச் சந்தித்தாள். அவரது மடியில் அமர்ந்து முத்தங்களால் அவரை நிறைத்தாள். அந்த நாள் முழுவதும் மகிழ்ச்சியோடும் உயிரோட்டத்துடனும் காணப்பட்டாள் தெரேசு. சூழ்ந்திருந்த அனைவரும் தாங்கள் காண்பவை கனவா? நடப்பவை அனைத்தும் உண்மைதானா? என்கிற வியப்புடன் தங்கள் கண்களைக் கசக்கிப் பார்த்தனர். "நான் முழுவதும் குணமடைந்து விட்டேன்! என்று தெரேசு தொடர்ந்து கூறினாலும் அவளைப் படுக்க வைத்து வண்டியொன்றில் புய்ஸ்ஸொனேவுக்கு அழைத்து வந்தனர்.



மறுநாள் நிலைமை இன்னும் மோசமாகியது. மிகப் பெரும் மாற்றம் ஏற்பட்டது. "என் மனத்தில் இல்லாதவற்றைச் செய்தேன், பேசினேன். சித்தபிரமை பிடித்தவள் போல் காணப்பட்டேன். பொருளற்ற சொற்கள் என் வாயினின்று வெளி வந்தன. ஆனால் சிறிது நேரம் கூட என் அறிவைப் பயன்படுத்த இயலாத நிலையை மட்டும் அடையவில்லை என்பது எனக்குத் தெரியும். அடிக்கடி மயக்க நிலையில் இருப்பதாய் எனக்குத் தோன்றியது. என் உடலைச் சிறிதளவு கூட அசைக்க முடியவில்லை. அந்நிலையில் என்னைக் கண்டவர் எதுவும் செய்திருக்கலாம், கொலையும் செய்திருக்கலாம். எனினும் என்னைச் சுற்றி நடந்த உரையாடல்கள் என் காதில் தெளிவாக விழுந்து கொண்டிருந்தன" எனப் பின்னர் தெரேசு உணர்ந்தாள்.

மரியா எப்போதும் தெரேசுவுக்கு அருகிலேயே இருந்து தாய்க்குரிய பாசத்துடன் கண்காணித்தார், தேற்றினார், ஆற்றுப்படுத்தினார். அவரின் மனப்பிரம்மையைக் கண்கூடாகக் கண்டார். மருத்துவர் நோத்தா (Notta) அவநம்பிக்கையுற்று எல்லாம் கைநழுவிப் போவதாக எண்ணினார். இது 'மூர்ச்சை நோய்' அல்ல என்பது அவருக்குத் தெளிவாக தெரிந்தது. காக்காய் வலிப்பு நோயினின்று அற்புத குணமளிக்கும் 'தூய விட்டல் நடனம்' (St. Vitus Dance) ஆக இருக்குமோ? எனக் குழம்பிப் போய் இருந்தார். வாய்க்கு வந்தவற்றைப் பிதற்றிக் கொண்டிருந்த தன் இனிய எளிய சிறுமி இறந்து விடுவாளோ அல்லது வாழ்நாள் முழுவதும் இதே நிலையிலேயே இருந்து விடுவாளோ? எனத் தந்தை மார்ட்டின் அங்கலாய்த்தார்.

குடும்பத்தினருடன் இணைந்து கார்மல் சகோதரிகளும் மன்றாடினர். மார்ட்டின் மற்றும் கேரென் குடும்பத்தினரால் அதிகம் விரும்பப் பட்ட, பாரீஸ் நகரில் புகழ் பெற்றிருந்த 'வெற்றிகளின் அன்னைக்கு' (Our Lady of victories) நவநாள் வேண்டுதல் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலிகளும் ஒப்புக்கொடுக்கப்பட்டன. அருங்குறி ஒன்று நிகழ்த்தும்படி வேண்டினர்.

குடும்பத்தினரோடு எப்போதும், எங்கும் எடுத்துச் செல்லப்படும் தூய வெற்றி அன்னையின் திருஉருவச் சிலை மரியாவின் அறையில் வைக்கப் பட்டிருந்தது. தெரேசு அந்த அறைக்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

பொலீன் கடிதம் எழுதிய போது மட்டும் தெரேசின் நிலைமையில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. அக்கடிதங்கள் மேலும் மேலும் வாசிக்கப்பட்டு மனப்பாடம் செய்யப்பட்டன. தெரேசின் விளையாட்டுப் பொம்மை யொன்றிற்குக் கார்மல் உடை அணிவிக்கப்பட்டிருந்தது. அதைக் கண்ட இசிதோர் கோபமுற்றார். கார்மல் சபையைப் பற்றிய எண்ணத்தை அவரின் மனத்திலிருந்து அகற்றுவது மிக இன்றியமையாததாகக் கருதினார்.

ஆனால் அது நடைமுறையில் இயலாத ஒன்றாக இருந்தது.

## விடியலில் விழித்த புன்னகை (13 மே 1883)

இயேசுவின் உயிர்ப்பு விழாவுக்கு அடுத்த ஞாயிறு தூய வெற்றியன்னையின் நவநாள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. லேயோனி தெரேசைக் கண்காணித்துக் கொண்டிருந்தார். வழக்கம் போல் நோயுற்றிருந்த தெரேசு "அம்மா! அம்மா" என்று தொடர்ந்து அழைத்துக் கொண்டேயிருந்தாள். தோட்டத்திலிருந்த மரியன்னையின் திருவுருவச் சிலையை நோக்கித் திரும்பினாள்.

இவ்வுலகில் எந்த உதவியும் பெற இயலாத எளிய தெரேசு, "விண்ணக அன்னையிடம் சரணடைந்து தன் மேல் இரக்கம் காட்டும்படி முழு இதயத்தோடு மன்றாடினேன். உடனடியாக அருள்நிலை அன்னை எனக்குத் தோன்றினார். அழகுடன் எங்கும் இதுவரை கண்டிராத அழகுடன் காட்சி கொடுத்தார். அவரது திருமுகம் வருணிக்க இயலா மென்மை, அருள், கருணையைக் வெளிக் கொணர்ந்தது. ஆனால் என் இதயத்தின் ஆழம் வரை பாய்ந்து சென்று என்னைப் பரவசப்படுத்தியது- *அன்னை புன்னகைத்தார். என் வேதனைகள் அனைத்தும் மறையச் செய்தார். கண்ணீர்த் துளிகள் இரண்டு என் கண் இமைகளின் மேல் திரண்டு எழுந்து மெதுவாக என் கன்னங்களின் வழியே உருண்டோடின. அவை சோகக் கண்ணீர் அல்ல. ஆனந்தக் கண்ணீரே! தூய கன்னி மரியா என்னை நோக்கிப் புன்னகை புரிந்ததை எண்ணினேன். எண்ணில்லா இன்பம் என் மனத்தில் நிறைந்தது. ஒருவருக்கும் இதை நான் வெளிப்படுத்த மாட்டேன். அப்படிக் கூறினால் என் மகிழ்ச்சி மறைந்து விடும்"* எனத் தெரேசு தம் தரிசனம் பற்றி எழுதுகிறார். கடும் நோயால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த தெரேசு நற்சுகம் பெற்றதை, மரியா, லேயோனி, செலின்





புன்னகை அரசியின் திரு உருவச் சிலை

ஆகிய மூவரும் கண்கூடாகக் கண்டனர். மறுநாள் தன் வழக்கமான வாழ்வைத் தொடர்ந்தாள். அடுத்து வந்த மாதங்களில் லேயோனி இருமுறை தோட்டத்தில் தெரேசின் கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் கூறினார். அப்போது தரையில் வீழ்ந்து உடலைப் பரப்பிச் சில நிமிடங்கள் அசைவற்றுக் கிடந்தாள். ஆனால் நினைவுத் தடுமாற்றமோ, கடும் தசைப்பிடிப்போ ஏற்படவில்லை. அதுவே கடைசி நிகழ்வு! அது போன்று எவ்வித நோயும் அவரை அதற்குப் பின் தாக்கவில்லை.

எனினும் அவரின் உளநிலை மிகவும் மென்மையானதாகவே இருந்தது. அவருடன் இருந்தவர்கள் அந்த நோயினால் அவர் அடைந்த துயரங்களைப் பற்றி அறிந்திருந்தனர். அவருக்குத் தீங்கிழைக்கும்படியான, கடும் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய வார்த்தை அல்லது செயல்பாடுகள் சிறுமியின் உடல் நலத்தைப் பெரிதும் பாதிக்கும் என மருத்துவர் எச்சரித்திருந்தார். எனவே, குடும்பத்தினர் ஒவ்வொருவம் மிகவும் பாசமாக அவளைப் பேணிப் பாதுகாத்தனர். 'மீண்டும் பழைய நிலைக்குச் சென்று விடக்கூடாது; அவளிடம் மறுத்துப் பேச வேண்டாம்' என்பது தான் அவர்கள் தங்களுக்குள்ளே விடுத்த ஆணைகள். ஆனால் இத்தகைய சூழ்நிலை சிறுமியின் வளர்ச்சிக்கு உறுதுணை புரியுமா ? என்பது கேள்விக்குறியே.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தெரேசு தமது நோயைப் பற்றி இவ்வாறு விளக்கம் கொடுக்கின்றார்: "கார்மல் சபையில் சேருவதைக் கண்டு சினம் கொண்ட அலகையிடமிருந்துதான் அந்த நோய் அனுப்பப்பட்டது. எதிர்காலத்தில் எங்கள் குடும்பம் அவனுக்குச் செய்யவிருந்த பெரும் தீமையினால் என் மீது பழி வாங்க விரும்பினான்" இன்னும் தொடர்ந்து எழுதுகிறார்: "என் ஆன்மா முதிர்நிலைக்கு வெகு தொலைவில் இருந்தது".

இறுதியாக மே மாதக் கடைசியில் கார்மல் வரவேற்பறைக்குத் தெரேசு செல்லும் சக்தி கிடைத்தது- அங்கே அருட் சகோதரி ஆக்னெசைச் சந்தித்தாள். கறுப்பு உடை அணிந்து தெரேசு அன்று அழகாகக் காட்சியளித்தாள். நோயுற்றிருந்த தெரேசுவின் பாட்டியான மார்ட்டினின் தாய் இறந்த ஆண்டு நினைவு நாள் ஏப்ரல் 8, அன்று இறந்தவர்களுக்காக வருத்தம் தெரிவிக்கும் வகையில் கறுப்பு உடை அணிவது அவர்களது வழக்கம்.

## நெஞ்சைச் சுட்ட நெருப்பு

தெரேசு நலமடைந்தாள். நல்ல சுகமே. ஆனால் அச்சுகமே இரு சோக விதைகளை அவரில் விதைத்து விட்டன.





*தெரேசு அற்புத குணம் பெற்ற அறை (13 மே 1883)*

தூய மரியன்னையின் புன்னகைக் காட்சிகளை ரகசியமாகவே வெளிப்படுத்தாமல் வைத்திருப்பதாகத் தன் மனத்திற்குள் உறுதி பூண்டிருந்தார். ஆனால் அக்காள் மரியா அவளது துயரைப் போக்கிய துணைவர் யார்? எனக் கூறும்படி கட்டாயப்படுத்தினார். எனவே, அதைப் பற்றி அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவரும் இணங்கி விட்டார். "அந்தரங்க அருங்குறி அம்பல அறிக்கையாகிவிட்டது." வரவேற்பறையில் சகோதரிகள் சிறுமியைக் கேள்விக் கணைகளால் துளைத்தனர். "தூய அன்னையாரைப் போல் இருந்தார்கள்? எவ்வித வண்ண ஆடை அணிந்திருந்தார்கள்? லூர்து நகரில் காட்சியளித்த போது அணிந்திருந்த ஆடைதானா? அல்லது வேறு விதமான ஆடையா? அவர் தோன்றிய போது அருள் ஒளி வீசியதா?" இவை போன்ற எண்ணற்ற கேள்விகளால் சிறுமி தெரேசு கலக்கமுற்றாள். அவளது இன்ப மகிழ்ச்சி துன்ப துயரமாக மாறியது. அவள் மரியன்னையைக் காட்டிக் கொடுத்து விட்டதாக உணர்ந்தாள். "பேரச்சஉணர்வின்றி"த் தன்னையே பார்க்க அவளால் முடியவில்லை. அவள் மனத்தில் குற்ற உணர்வு மற்றுமொரு சந்தேகத்தால் அதிகரித்தது. அதுவே அவளை ஐந்து ஆண்டுகள் வாட்டி வதைத்தது. அவளுக்கு வந்த நோய் அவளாலேயே ஏற்பட்டதென அவள் எண்ணினாள். அவளது நோயின் வெளியடையாளங்கள் அவற்றையே அவளுக்கு வெளிப்படுத்துவதாக எண்ணினாள். நோயைத் தானே வரவழைத்துக் கொண்டு பிறரிடம் பொய்யுரைத்து ஏமாற்றியதாக எண்ணிக் கலங்கினாள்.

மரியாவிடம் இதைப் பற்றி பேச முயன்று தோல்வியுற்றாள். ஒப்புரவு அருட்சாதனத்தில் அருட்பணியாளர் தியூஸெல்லியெரிடம் கூற முயற்சி எடுத்தும் தோற்றுப் போனாள். அவளது மனத்தை அமைதிப்படுத்த வழி இல்லாமற் போனது. "நான் அனுபவித்த துயரங்களை விண்ணகத்திலன்றி வேறு எங்கும் விவரிக்க இயலாது" எனத் தெரேசு கூறினாள்.

## வானமே எல்லை (1883 ஆகஸ்ட் 20 முதல் செப்டம்பர் 3 வரை)

நோய் நீங்கி உடல் நலம் பெற்ற தெரேசு பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதே விவேகம் எனக் குடும்பத்தில் அனைவரும் முடிவு செய்தனர். அவள் நலம் பெற்ற மகிழ்ச்சியைக் கொண்டாடத் தெரேசுவுக்கு நீண்ட விடுமுறை கிடைத்தது லிசியூவின் அடைப்பட்ட உலகினின்று "புதியதொரு உலகில் அடி எடுத்து வைத்தாள்".

முதல் முறையாகத் தன் குழந்தைப் பருவத்தில் அனுபவித்து மகிழ்ந்த இடங்களை மீண்டும் ரசித்துப் பார்க்க அலென்சோனுக்குப் பயணமானாள். அலென்சோன் தெரேசுவுக்குப் புதிதல்ல. எனினும் வளர்ந்த பருவத்தில் புதிய அனுபவத்தைப் பெறலாம் அல்லவா? அம்மாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்குப் புனித பயணம் சென்றாள்.

மார்ட்டின், தெரேசைத் தன் நண்பர்கள் குழுவினருக்கு அறிமுகப் படுத்தினார். அலென்சோனின் முக்கிய நடுத்தர வர்க்கத்தினரது இல்லங்களுக்கு அழைத்துச் சென்றார். ஒவ்வொரு பெரிய இல்லங்களுக்கும் சென்றார். தூய தெனி ஸ்யூர் ஸர்த்தோனி (St. Denis - Sur - Sarthon) லிருக்கும் ரொமே (Romets) இல்லம், குதிரைச் சவாரி செய்யும் இடமான க்ரோஞ்ஞி (Grogny) யில் உள்ள திருமதி மொன்னியேர் (Mme. Monnier) இல்லம், ரபினல்ஸ் இல்லம் (Rabinels), ரோஸ் தாய் குடும்பத்தைச் சந்தித்த லங்கால் (Zanghal) இல்லம் என மாளிகைதோறும் சென்றார். அனைத்தும் அவருக்கு மகிழ்ச்சியையும் வனப்பையும் கொடுத்தன. 'என்னைச் சுற்றி எல்லாமே கொண்டாட்டங்களாய் அமைந்தன. நான் மகிழ்ச்சியாக நடத்தப்பட்டேன். வரவேற்கப்பட்டேன். செல்லமாகப் பேணப்பட்டேன், புகழப்பட்டேன்' 'எனத் தமது பிறந்த மண் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். மார்ட்டினின் நண்பர்கள் தெரேசைக் கண்டு வியப்புற்றனர். "மழலையாய் இங்கிருந்து சென்றவள், அழகிய கவர்ச்சி மிகு இளம் நங்கையாய்த் திரும்பி வந்துள்ளாள்." எனக்கூறி மகிழ்ந்தனர். மார்ட்டின் தன் மகளை நினைத்துப் பெருமையடைந்தார். "உண்மையில் என் சின்ன ராணி அருமையான இளம் நங்கை தான்" எனத் தன் நண்பர் நோக்ரி



(Nogrix)- வுக்குக் கடிதம் எழுதினார்.

நீண்ட அழகிய கூந்தல்; சாம்பல் நிறக் காந்தக் கண்கள்; இவை கொண்ட பத்தரை வயது சிறுமி தெரேசு பார்ப்போர் அனைவரையும் கவர்ந்தாள். அவளைப் பார்த்தவர்களது உள்ளத்தில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினாள். அவளது கொடிய நோயைப் பற்றி எவருக்கும் தெளிவாக வெளிப்படுத்தாமல் மறைவான வார்த்தைகளில் மார்ட்டின் கூறினார். தெரேசு நல்ல உடல் நலத்துடனும், மகிழ்ச்சியுடனும், இயற்கைத் தன்மையுடனும், புதுப் பொலிவுடனும் புது உலகை ரசிப்பவளாய்க் காணப்பட்டாள். "இவ்வாழ்வு எனக்குப் புத்துயிர் தருகிறது என்பதை நான் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். பத்து வயதில் இதயம் ஆடம்பரங்களுக்குத் தன்னைக் கையளித்து விடுகிறது" என்று கூறிய தெரேசுவுக்கு அலென்சோன் அதிசய உலகமாகத் தெரிந்தது.

அலென்சோனில் தன்னைச் சுற்றி இருந்த இளம் பெண்கள் தேர்ந்தெடுக்கும் பாதையைத் தெரேசு எளிதாகத் தேர்ந்தெடுத்திருக்கலாம். கார்மல் சபையில் துறவியாய் இருக்கும் தன் எளிய சகோதரி பொலினை நினைத்தாள். 'இயேசு என்னை 'முதன்முறை' சந்திக்கும் முன்பு 'உலகை' எனக்குத் தெளிவாகக் காட்ட விரும்பினார் போலும். அதன் விளைவாகத் நான் பின்பற்றுவேன் என உறுதிப்பாடு கொடுத்த வாழ்வை முழுமையாகச் சுதந்திரத்துடன் தேர்ந்தெடுக்கலாம் அல்லவா?' இதுவே அவளுக்கு விடுமுறை உணர்த்தும் பாடமாக அமைந்தது.

ஆகஸ்ட் திங்கள் 22 ஆம் நாள் தெரேசு இயேசு சபை அருட் பணியாளர் பிஷோன் (Pichon) என்பவரைச் சந்தித்தாள். அவரே மரியாவின் ஆன்மீக அருட்பணியாளர். அவரைப் பற்றி மரியா வானளாவப் புகழ்ந்து பேசுவதுண்டு. இளம் பெண் தெரேசு நோயில்லாமல் நல்ல வலிமையுடன் தென்படுவதாக அவர் கூறினார். தெரேசு நோயால் வாடித் துடித்துக் கொண்டிருந்தபோது அவளுக்காக அருட்பணியாளர் சிறப்பாக வேண்டிக் கொண்டார். அதற்கு நன்றி கூறும்படி மார்ட்டின் தன் மகளைக் கேட்டுக் கொண்டார். தெரேசு அவருக்கு அன்பு முத்தம் தந்து நன்றிக் கடன் செலுத்தினாள்.

1883 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் ஆசிர்வாதப்பர் மடத்தில் அடுத்த பள்ளியாண்டு தொடங்கியது. தெரேசு 'சிவப்பு நீலம்' வகுப்பில் தான் சேர்ந்தாள். ஆனால் அது சிவப்பு நீல வகுப்பின் இரண்டாம் பிரிவு. தெரேசின் முதல் திருவிருந்திற்கான ஆண்டும் இதுதான்! அதற்கான தயாரிப்புகளில் முழுமனத்துடன் ஈடுபட்டாள். மறைக்கல்வியில் எப்பொழுதும்

முதன்மைப் பெற்றாள். அருட்தந்தை தோமென் (Domin) தெரேசைப் பாராட்டிச் 'சிறுமுனைவர்' என்றழைத்தார். ஆனால் அவாது கருத்துக்களில் சிலவற்றை ஏற்றுக் கொள்ளத் தெரேசு சிரமப்பட்டாள். திருமுழுக்குப் பெறாமல் இறக்கும் குழந்தைகள் விண்ணகம் செல்வதில்லையென்று கூறிய அருட்பணியாளரின் கருத்தைக் கேட்டுத் தெரேசுவுக்கு கோப உணர்வு கொப்பளித்துக் கொண்டு வந்தது.

கார்மல் இல்லத்திலிருந்தும் தெரேசுவுடைய தயாரிப்புகள் முழுமையாக இருக்க உதவிகள் கிடைத்தன. 1884 ஆம் ஆண்டு பெப்ருவரி முதல் மே வரை ஒவ்வொரு வாரமும் பொலீன் புய்ஸ்ஸொனேவுக்குக் கடிதம் எழுதினார். ஒவ்வொரு நாளும் செபத்துடன் இணைந்து யேசுவுக்காகப் புரியும் தியாகங்களையும் குறித்து வைக்கும் வகையில் ஒரு சிறு புத்தகமொன்றைத் தெரேசுவுக்கு அனுப்பி வைத்தார். பொலீன் இதனைச் சரிவர இல்லத்தில் செயல்படுத்த மரியா உதவி புரிந்தார். தெரேசுவின் அறிவுக்கும், வயதுக்கும் மேலான முறையில் 'பற்றின்மை' பற்றித் தியானிக்க மரியா அவருக்குக் கற்பித்தார். ஒரு சிறு நூலை மையமாகக் கொண்டு தியானம், மனனம், போன்றவற்றில் ஈடுபடச் செய்தார். தெரேசு மரியா கூறியவை அனைத்தையும் எள்ளளவும் பிழையின்றிச் செய்து வந்தாள். "கிடைத்த வாய்ப்புகளை நழுவ விடாமல் ஒவ்வொரு நாளும் நான் என்னால் செய்ய இயன்ற எல்லா நற்செயல்களையும் செய்ய முயற்சி செய்து வருகிறேன்." எனத் தெரேசு ஆக்னெசுக்கு எழுதினார். தினம் ஒன்றுக்கு சரசாரி 28 என்னும் விதத்தில் மார்ச் மாதம் முதல் தேதி தொடங்கி மே மாதம் 7 ஆம் நாள் வரை 1949 தியாகங்கள் செய்தாள். நாளுக்கு சராசரி 40 என்னும் கணக்கில் 2773 முறை இறை உதவியை நாடி மன்றாடினாள்.

கார்மல் சகோதரி பொலீனும் தமது உறுதிமொழி அளிப்புக்காகத் தம்மையே தயார் செய்து கொண்டிருந்தார். இரு சடங்குகளும் மே மாதம் எட்டாம் நாள் நிகழ்த்தலாம் என முடிவெடுக்கப்பட்டது. தெரேசுவுக்கு மேகமில்லா வானமாய் அனைத்தும் தெளிவாகத் தெரிந்தன.

## முதல் முத்தச் சந்தம் (1884 மே 8)

அன்பென்னும் தீ வளர்த்தாய் - அதை
என் இளம் நெஞ்சில் எரிய வைத்தாய்
உனதாக்க உளம் கொண்டாய் - என்றும்
உனில் நான் எனில் நீயானாய்.



தெரேசு மென்மையாகவே இருந்தாள். ''அவளது வாழ்வின் பொன்னாளான' முதல் திருவிருந்து நாளுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே அதற்கான பயிற்சி பெறச் சிறுவர், சிறுமியர் பள்ளிலேயே தங்கினர். ஆனால் தெரேசு மட்டும் சிறப்பு விலக்குப் பெற்றாள். பலவிதமான முன் ஏற்பாடுகளுடனும், சலுகைகளுடனும் மே மாதம் நான்காம் தேதி முதல் எட்டாம் தேதி வரை மூன்று நாள் தியானம் செய்தாள். சிறு தலைவலியோ, அல்லது இருமலோ ஏற்பட்டவுடனேயே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். தினமும் தெரேசைச் சந்தித்து வரச் செலீனுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அருட்பணியாளர் தொமென் அவர்களின் அறிவுரைகளைச் சிறு பயிற்சியேட்டில் தெரேசு குறித்து வைத்தாள். சிறப்புத் தலைப்புகளில் அவர் அருமையாகப் பேசினார். நரகம், இறப்பு, தூய்மையற்ற முறையில் திரு உணவு உட்கொள்வதால் ஏற்படும் விளைவுகள், இறுதித்தீர்ப்பு போன்ற தலைப்புகளில் மிகவும் அச்சுறுத்தும் வகையில் அறிவுரைகள் கூறினார். ''இந்தத் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் யாராவது வருகின்ற வியாழக்கிழமைக்குள் இறப்பீர்களா? யாருக்குத் தெரியும்'" என்று அவர்களைக் கேட்டு அச்சுறுத்தினார். அப்போது கன்னியர் இல்லத் தலைவியாக இருந்த அருட் சகோதரி எக்ஸூப்பெர் (Exufere) திடீரென இறந்து விட்டதால் அருட்பணியாளரின் அறிவுரைகள் நிறைவு பெறவில்லை.

நான்கு ஆண்டுகள் தயாரிப்புகளுக்குப் பிறகு இறுதியாக அந்த நாளும் வந்தது. நற்செயல்களைக் குறிப்பெடுத்து வைக்கும்படி பொலீன் அளித்த ஆலோசனையைத் தெரேசு மறந்து விட்டாள். அருட்பணியாளரின் மறையுரைகளால் ஏற்பட்ட அச்சம் அகன்றது. இயேசுவோடு அவரது முதல் சந்திப்பை விளக்கும் மொழி முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. "*இயேசுவின் முதல் முத்தம் எத்துணை இனிமையானது. அது ஓர் அன்பின் முத்தம்! அன்பு செலுத்தப்படுவதை உணர்ந்தேன். நான் என் மீது அன்பு செலுத்துகிறேன். என்னை முற்றிலும் கையளிக்கிறேன்! என்றேன். அந்த முதல் சந்திப்பில் வேண்டுதல்கள் கிடையாது. போராட்டங்கள் இல்லை. தியாகங்கள் இல்லை. நீண்ட நேரம் இயேசு - சிறிய தெரேசு இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்நாளில் அது வெறும் பார்வை மட்டுமல்ல. அதுவோர் இணைவு, கலப்பு, பிணைப்பு, அதன்பின் நாங்கள் இருவரல்ல, ஒருவரே. சிறிய நீர்த்துளி கடலின் ஆழத்தில் விழுந்து அமிழ்ந்து சங்கமித்து மறைவது போலத் தெரேசு இயேசுவில் ஒன்றித்து, தான் என்று இல்லாமல் போய் விட்டாள். இயேசு மட்டும் நிலைப்பவர்,*

*நீடிப்பவர். அவரே என் மன்னர், ஆசான்."*

அன்று முதல் "பிரிவு" பற்றிய கவலை அவளுக்கில்லை. இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக் கொண்ட போது விண்ணில் உள்ள தன் அன்னையோடும், கார்மல் மடத்தில் உள்ள சகோதரி பொலீனோடும் இணைந்த ஓர் நிறைவு. எனவே, திருப்பலியின் போது பொலின் கண்ணீர் வடித்தார். அந்த ஆனந்தக் கண்ணீரை அவர் தோழியர் தவறாகப் புரிந்து கொண்டனர்.

"அவை பூரிப்பின் கண்ணீர்! வேதனையின் கண்ணீர் அல்ல!" இந்த நாளில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சகோதரி ஆண்ட்ரியெத் (Henriette) விவரிக்கிறார். "திருப்பலிக்குப் பிறகு நடந்த இரண்டு மணி நேரக் கொண்டாட்டத்தில் சிறுமி ஒருத்தி என்னிடம் வந்து, "தெரேசு நன்றி கூறும் போது, 'இறைவனிடம் கேட்டது என்னவென்று தெரியுமா ? இறக்கும் வரம் கேட்டாள் !' என்று கூறினாள். அது எவ்வளவு அச்சத்திற்குரியது ! ஆனால் தெரேசு கனிவுடன் அவர்களைப் பார்த்தாள்; எந்த வார்த்தையும் பேசவில்லை. பின்னர் நான் அங்கே இருந்தவர்களிடம் 'உங்களுக்குப் புரியவில்லை. தெரேசு தனது தூய பாதுகாவலரைப் போல் உண்மையிலேயே அன்பில் இறக்கும் வரம் வேண்டினாள்' என்று விளக்கமளித்தேன். உடனே தெரேசு என்னிடம் வந்து கனிவுடன் என் கண்களைப் பார்த்து 'சகோதரி! நீங்கள் என்னைப் புரிந்து கொள்கிறீர்கள். ஆனால் அவர்கள். . .' என்று சகோதரி ஆண்டரியெத் சாட்சியம் பகர்ந்தார்.

அவரைச் சுற்றி வாழ்ந்த எவரிடமும் இல்லாத ஆழமான உள்ளம் தெரேசுவிடம் இருந்தது. தினமும் உருக்கமாகச் செபிக்கும் பழக்கத்திலிருந்தே அந்த ஆழமான உணர்வு கிடைத்தது என்பதில் சந்தேகம் இல்லை. அருட்பணியாளர் தொமென் அளித்த அறிவுரைகளை விடச் சிறந்த அறிவுரைகளை ரகசியமாக இறைவனிடமிருந்தே பெற்றாள். தெரேசு தம் ஆசிரியர்களில் ஒருவரிடம் 'மார்கரித்'! (Marguerite) எப்படித் தியானிப்பது? என்பதை நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுப்பதால் நான் உங்களை அதிகம் விரும்புகிறேன்." என்று பல தடவைகள் கூறினாள். அவளின் இந்தப் பரவச பக்தியைக் கண்டு மரியா வழக்கமாகத் தெரேசைக் கேட்டுக் கொண்ட அரை மணி நேர செபத்தையும் செபிக்க அனுமதிக்கவில்லை. ஆனால் தெரேசு தனது படுக்கைக்கும், சுவருக்குமிடையே இடைவெளி உண்டாக்கித் திரைச் சீலையால் மறைத்து அதன் பின்புறம் அமர்ந்து தியானிப்பதை யார் தடுத்து நிறுத்த முடியும்? இறைவன், உலக வாழ்வு, 'நிறைவாழ்வு' பற்றித் தியானித்தாள்.



முதல் திருவுணவின் போது கிடைத்த ஒன்றிப்பு அனுபவம் தெரேசை இவ்வுலக வாழ்விலிருந்து பிரித்து விடவில்லை. குடும்பக் கொண்டாட் டங்களை ரசித்தாள். அவளுக்குக் கிடைத்த எண்ணிலடங்கா அன்பளிப்பு கள், அழகிய கைக்கடிகாரம் போன்றவற்றில் மகிழ்ச்சி கண்டாள். 'குறிப்பாகச் செந்நிற மென்பட்டுத் துணியால் கலைநயத்துடன் நெய்யப்பட்டிருந்த இளம்பால் நிறக் கம்பளி உடையும், அதே நிறத்தில் செந்நிற இறக்கைகள் பொருத்தப்பட்டிருந்த தொப்பியும் அவளைப் பெரிதும் கவர்ந்தன.

தெரேசு தாயில்லாப் பிள்ளை. மறைக்கல்வியில் முதல் மதிப்பெண்கள் பெற்றிருந்தாள். எனவே, மாலை வழிபாட்டின்போது பயிற்சி பெறும் மற்ற ஐவரின் பெயராலும் தூய மரியன்னைக்கு அர்ப்பணிக்கும் மன்றாட்டைச் செபிக்கும் உரிமை பெற்றாள். அருட்பணியாளர் தொமென் அவர்களின் இரு பெண் மருமக்களும் அக்குழுவில் இருந்தார்கள். அருட்பணியாளரை மகிழ்விக்க இவ்விருவரில் ஒருவருக்கு அந்த வாய்ப்பை வழங்கக் கன்னியர் இல்லத்தில் இருந்த கன்னியர் சிலர் விரும்பினர். தெரேசு அதற்கு இணங்கவில்லை. எலிசாவும், மரியாவும் கன்னியர் இல்லத்தின் தலைமைச் சகோதரி தூய பிலாசித் (St. Placid) திடம் சென்றனர். குடும்பத்தில் உள்ள அனைவரும் அருட்பணியாளரிடம் சென்று தெரேசு உரிமை பாதிக்கப் படக்கூடாது! என்று வேண்டினர். இறுதியாகத் தெரேசு அனுமதி பெற்றாள்.

தெரேசு இறை அனுபவம் பெற்றவராயினும் எதார்த்தவாதியாகவும் இருந்தார். அவருடைய குறிப்பேடுகளில் ஒன்றில் இவ்வாறு எழுதினார். "செலினுக்குப் (20 பிராங்குகள்) பணம் கொடுங்கள். எனக்கு யேசுவே! எல்லாம் நீதான். நீ மட்டும் எனக்குப் போதும்", திருவிருந்திற்கான ஆன்மப் பசி அதிகம் அதிகரித்தது. இயேசு! இயேசு மட்டுமே தன்னை நிறைவு செய்ய முடியும் என்று நம்பினாள். அந்நாள்களில் திருவிருந்தில் பங்கு பெற ஒப்புரவு அருட் சாதன அருட்பணியாளர்களின் அனுமதி தேவைப்பட்டது. தெரேசுவின் அருட்பணியாளர் தாராள குணமுடையவர். அவர் தெரேசுக்கு அனுமதியளித்தார். காரணம் 1885 ஆம் ஆண்டு மே எட்டாம் நாள் முதல் ஆகஸ்ட் 28 நாள் வரை தெரேசு 22 முறைகள் திருவிருந்தில் பங்கு பெற்றதாக எழுதி வைத்திருந்தாள்.

## மீண்டும் மீண்டும் வேண்டும் முத்தம் (1884 மே 22)

இயேசுவின் விண்ணேற்பு வியாழன் தெரேசு இரண்டாம் முறை திருவிருந்து பெறும் நாள். முதல் நாளில் பெற்ற அதே கிளர்ச்சி அவள் உள்ளத்தில் நீடித்தது. எதிர்பார்ப்புகளுக்கு மேலாக அருட்பணியாளர்

தொமென் இரண்டே வாரங்களுக்குப் பிறகு திருவிருந்து அருந்த தெரேசுக்கு அனுமதி கொடுத்தார். தெரேசு "ஆனந்தக் கூத்தாடினாள்". கண்ணீர் ஆனந்தமாகப் பொங்கி எழுந்தது. தூய பவுல் அடியாரின் வார்த்தைகள் அவள் இதயத்தில் ஆழப்பதிந்தன. "வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்" (கலா 2: 20) மறுநாளே தனது வாழ்வின் பெரும் அருட்கொடைகளில் ஒன்றைப் பெற்றாள். மீண்டும் ஒரு நாள் தெரேசு திருவிருந்துக்குப் பிறகு மரியா கூறிய வார்த்தைகளை நினைவு கூர்ந்தாள். தெரேசை இன்னும் குழந்தையாகவே எண்ணியிருந்த 24 வயது நிரம்பிய மரியா, "துயரப் பாதையினின்று இறைவன் உன்னைக் காத்துக் கொள்வார்" என்று முன்னுரைத்தார். ஆனால் அவர் முன்மொழிக்கு எதிர்கூற்றாகவே அனைத்தும் நிகழவிருந்தன. "துயரத்தை அனுபவிப்பதற்கான பெரும் ஆவல்' தன் உள்ளத்தில் அன்றைய தினமே பிறந்ததாகத் தெரேசு உணர்ந்தாள். எண்ணிலடங்காச் சிலுவைகள் அவளுக்காக காத்திருப்பது உறுதியாயிற்று.

அவளது படுக்கையில் எப்பொழுதும் இருக்கும் 'கிறிஸ்து வழி வாழ்வு' என்னும் நூலில் இருந்த ஒரு மன்றாட்டை மீண்டும் மீண்டும் சொன்னாள். ''இயேசுவே! விவரிக்க இயலா இனிமையே! இவ்வுலகின் ஆற்றல்களையெல்லாம் கசப்பாக எனக்கு மாற்றியருளும்." அர்த்தங்கள் அறியாமலும் முழுமையாகப் புரியாமலும் இவ்வார்த்தைகளைக் கூறினாள். "அன்பு பாராட்டுபவர் சொல்லிக் கொடுக்கும் அதே வார்த்தைகளை மீண்டும் சொல்லும் குழந்தைப் போல. . அந்நேரம் வரை நான் துன்பங்கள் மீது அன்பு செலுத்தாமல் வாழ்வை அனுபவித்தேன். ஆனால் அன்று முதல் துயர்கள் மீது உண்மையான காதல் கொண்டேன்." என்றார் தெரேசு.

தொடர்ந்து வந்த பன்னிரெண்டு மாதங்களாக எண்ணற்ற திருவிருந்து அருளைப் பெற்றுக் கொண்டாள். நோயின் காரணமாக ஏற்பட்ட அவளது உள் மனக்குமுறல்கள் திருவிருந்தினால் முற்றிலுமாக மறைந்து விட்டன.

## உதயம் காணும் இதயம் (1884 ஜூன் 14)

மூன்று வாரங்களுக்குப் பின் கன்னியர் இல்லத்தில் இரண்டு நாள் தியானத்தில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டாள் தெரேசு. ஏனெனில் பேராயர் யுகோனின், அவளைத் தூய ஆவியால் திடப்படுத்த இருந்தார். லோயோனி அவளின் ஆன்மீகத் தாய் ஆனார். ''அன்பின் அருள் அடையாளம்' தெரேசை வியப்பினால் நிறைத்தது. துயர் தாங்கும் ஆற்றலைத் தூய ஆவி அவளுக்களித்தார்.

அதே மாதம் 26 ஆம் நாள் தெரேசு தன் தந்தையிடம் கேட்டிருந்த



நீண்ட முடியையும் தொங்கிய காதையும் கொண்ட அழகான நாய் ஒன்றைப் பெற்றுக் கொண்டாள். அதன் பெயர் 'தோம்' (Tom). அது தெரேசை விட்டு அகன்று செல்வதில்லை. புய்ஸ்ஸொனின் காப்பாளராக மாறியது. தெரேசு மாலையில் உலாவச் செல்லும் போது அவளுக்குத் துணையாக உடன் நடந்து செல்வதும் தோம் தான்.

1884 ஆம் ஆண்டின் கோடைக்காலம் மிக இனிமையானதாக இருந்தது. மே மாதம் முதல் தெரேசு அதிகமாக இருமிக்கொண்டிருந்ததால் அது கொடும் இருமலாக மாறிவிட்டது. ஆகஸ்ட் திங்களில் அவள் விடுமுறைக்காக லிசியூவுக்குப் பத்து கிலோ மீட்டர் மேற்கில் இருந்த தூய ஊஎன் லெ பேன் (Saint Oven - le -pin) னில் உள்ள எலீசாவின் அன்னை ஃபுர்னே (Fournet) இல்லத்திற்கு அனுப்பப்பட்டாள். நோர்மாண்டி கிராமத்தில் பசுமைப் பகுதிகளையும், ஆற்றுச் சலசலப்புகளையும் வயல்வெளிச் செழுமையினையும் கண்டு ரசித்து மகிழ்ந்தாள். அருகே இருந்த பண்ணையிலிருந்து தினமும் காலையில் கிடைத்த சூடான பாலை அருந்தினாள். அங்கிருந்த வீட்டு நாய் 'பிரிபி' (Biribi)யுடன் விளையாடினாள். காட்டு வழியே நடந்தாள். லூயிஸ் ஃபிலிப்பின் முன்னாள் அமைச்சரான கிஸோ (Guizot) என்பவரின் கிராமத்தையும் அவரது கல்லறையும் கண்டாள். 'தெரேசின் வதனம் எந்நேரமும் அகக்களிப்பால் மிளிர்ந்து கொண்டிருக் கிறது" என எலீசா தன் கணவருக்குக் கடிதம் எழுதினார்.

இந்த அமர்க்களமான விடுமுறை முடிந்து இரண்டாம் வகுப்பான 'செம்மஞ்சள்' நிற வகுப்பிற்குச் சென்றாள் தெரேசு. தலைமைச் சகோதரி தூய லெயோன் (Saint Leon) தான் அவளுக்கு ஆசான். முதல் திருவிருந் திற்காக முழுக்கவனம் செலுத்திய நாள்கள் கடந்து விட்டன. தெரேசு இன்னும் வகுப்பில் இளையவள்! பெரிய மாணவியர், அவளைப் பார்த்துக் கேலி பேசி வந்ததால் தெரேசு அதிகம் கவலையடைந்தாள். அங்கு வரலாறு, மறைக்கல்விப் பாடங்களை அதிகம் விரும்பிப்படித்தாள். முதல் மாணவியாகவும் திகழ்ந்தாள். கணிதமும், எழுத்துக் கூட்டலும் இன்னும் கடினமாகவே இருந்தன. தேர்வுகளில் வெற்றி பெற்று முதல் மதிப்பெண்கள் பெறும் மாணவியருக்குக் 'கருஞ்சிவப்பு' நிறப் பதக்கம் வழங்கப்பட்டது. தெரேசு அதைப் பெறவில்லையென்றால் கண்கலங்கி விடுவாள். அவளை ஆற்றுப்படுத்துவது அந்த நேரத்தில் இயலாத காரியம்.

ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு நன்றாகப் படிக்கும் மாணவிகளால் பதில் கூற முடியவில்லையென்றால் தெரேசு மெதுவாக அவர்களது காதுகளில் சொல்லி விடுவாள். தலைமைச் சகோதரி தூய லெயோன்

தெரேசுவின் மென்மையான குணத்தையும், இனிய எண்ணத்தையும் பற்றி அறிந்திருந்ததால் அதைப்பற்றிக் குறை எதுவும் கூறவில்லை.

உயிர்ப்புப் பெருவிழா விடுமுறைகள் மே மாதம் 3 ஆம் தேதி முதல் 10 தேதி வரை வந்து போயின. தெரேசு, கேரென் குடும்பத்தினருடன் சென்று தோவில் (Deau Ville) என்னுமிடத்திலுள்ள கடல், ஷ லெ தே ரோஸ் (Chalet Des Roses) என்னுமிடத்தில் அவர்கள் வாடகைக்கு ஏற்பாடு செய்திருந்த இல்லத்தையும் கண்டாள். அவளுக்கு வயது பன்னிரண்டரை தான். புய்ஸ்ஸொனேவில் தங்கியிருந்த மரியாவுக்குத் தெரேசு இன்னும் "பெரிய குழந்தை தான்". உண்மையும் அது தான். தெரேசு தனது செயல்களினால் அதனை நிரூபித்தாள். மரியாகேரென் தன் அன்னையிடம் செல்லமாகப் பழகிய போது கேரென் தட்டிக் கொடுப்பது வழக்கம். தானும் அவ்வாறே தட்டிக் கொடுக்கப்படுவோம் என்ற எண்ணத்தில் சிணுங்கிப் பழகினாள். ஆனால் அவளது முயற்சி பலனற்றுப் போனது! அன்று முதல் 'பிறர் கவனத்தைக் கவரும் ஆசை' என்ற எண்ணத்தை மாற்றிய அந்தப் பாடத்தைத் தன் மனத்தில் நிறுத்திக் கொண்டாள். கடல் காற்றின் காரணமாக அவருக்குப் பலத்த தலைவலி ஏற்பட்டது.

### மனத்தில் ஓர் புற்று நோய் (மே 1885 முதல் நவம்பர் 1886 வரை)

இரண்டாம் திருவிருந்து அல்லது புதுப்பித்தலுக்கான தயாரிப்புக்காகத் தெரேசு விசியூ திரும்பினாள். துறவி தொமென் வழிநடத்தும் தியானத்தில் மீண்டும் பங்கெடுக்க ஓர் வாய்ப்பு; கடந்த ஆண்டுத் தியானத்தின் போது எழுதிய சிறு குறிப்புகளைப் படித்துப் பார்த்தாள். அறிவுரை தரும் அடிகளாரின் குரல் வளம் மாறவேயில்லை. எனவே, இரண்டாம் முறை யாகத் தெரேசு தனது குறிப்பேட்டில் இவ்வாறு எழுதினாள்: "அருட்பணி யாளரின் அறிவுரைகள் அச்சம் தருபவைகளாக அமைந்திருந்தன. அவர் சாவான பாவத்தைப் பற்றிப் பேசினார். மரணத்திற்குப் பின் தோன்றும் 'மூன்றாம் வாசல்' இந்த முறை மரணம் கூட அந்த அறிவுரைகளுக்குத் தடையாக இருக்க முடியாது. தற்போது ஏற்பட்ட அனுபவம் திருவிருந்தின் போது ஏற்பட்ட அனுபவத்தை விட முற்றிலும் மாறுப்பட்டது. நான் தோல்வியைக் கண்டு துவண்டு விட மாட்டேன். தினமும் அன்னை மரியா வுக்கு நினைவு மன்றாட்டு சொல்வேன். என் தற்பெருமையை எளிமையால் வெல்வேன்!" எனக் கடந்த ஆண்டு எடுத்த உறுதிப்பாட்டைப் புதுப்பித்துக் கொண்டாள்.


மென்மையான குணம் கொண்ட தெரேசுவுக்கு இப்போதனைகள்



பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. அவளது உள்ளத்தின் தடைகள் களையப் பட்டன. கொடிய கவலை நோயால் தாக்கப்பட்டுத் தெரேசு சுருங்கிப் போனாள். "நான் அனுபவித்த துயர்கள் எண்ணிலடங்கா! அவை எப்படிப் பட்டவை எனப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் நீயும் அதே துன்பத்தை அனுபவித்திருக்க வேண்டும். பதினெட்டு மாதங்கள் எத்தகைய துன்பங்களால் அலைக்கழிக்கப்பட்டேன் என்பதை வார்த்தைகளால் வடிக்க இயலாது."

தெரேசுவின் கடைசி வளர்ப்புத் தாய் மரியாதான் அவளது புகலிடம். மரியா இன்னும் புய்ஸ்ஸொனேவில் இருந்தார். தன் துயரங்களைப் பொலீனிடமாவது வெளிப்படுத்த விரும்பினாள். ஆனால் கார்மல் வரவேற்பறையில் அது சாத்தியப்படுமா? குறிப்பாகத் 'தூய்மை' பற்றிய தனது கவலைகளை வெளிப்படுத்த முடியுமா? பொலீன் ஓர் கார்மல் துறவி. தூயவர். தெரேசிடமிருந்து தம்மை அந்நியப்படுத்திக் கொண்டவர். எனவே, தெரேசு அவரை இறந்தவராக, இழந்தவராக எண்ணியிருந்தாள்.

தனது "தவிர்க்க முடியா ஒரே ஆலோசகர்' மரியாவிடம் தனது மனக்கவலையை எடுத்துக் கூறினாள். தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி அவரை மகிழ்விப்பதற்காக மரியா, தெரேசின் தலையைத் தினமும் அலங்கரிப்பார். அவ்வேளையில் மனக்கவலையைப் பேசித் தீர்ப் பார். எதையும் மரியாவிடம் கூறுவது தெரேசுவுக்குக் கடினமாகவே இருந் தது. அனைத்தையும் வெளியிடாமல் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்



தெரேசுவின் கை வண்ணத்தில் திருவில் - வில்லா ரோஸ் இல்லம்

தவறாகப் புரிந்துக் கொள்ளப்பட்டது" என ஆதங்கப்பட்டாள் தெரேசு.

1886 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் தெரேசு "மரியாவின் குழந்தைகள் தோழமைச் சங்கத்தில்' உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட்டாள். ஆனால் அவளைத் தொடர்ந்து துன்புறுத்திய தலைவலி காரணமாக கூட்டங்களுக்குத் தவறாமல் செல்ல இயலவில்லை. மார்ச் மாதத் தொடக்கத்தில் மார்ட்டின் தன் மகளைப் பள்ளியிலிருந்து நீக்க முடிவு செய்தார். எனவே, செலின் படித்து முடித்ததைப் போன்று தெரேசு படிக்க இயலவில்லை. அவ்வாறு மேற்கொண்டு படிக்க விரும்பியிருந்தால் மேலும் இரண்டு ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும்.

## நிறைவு தரும் தனிக்கல்வி (மார்ச் 1886)

பதின்மூன்றரை வயது மாணவி தெரேசின் கல்வி முறையில் ஓர் திருப்பம் நிகழ்ந்தது. வாரத்தில் பல நேரங்களில் கல்வி கற்கும் வகையில் 50 வயது நிரம்பிய பெண் ஒருவர் அமர்த்தப்பட்டார். பப்பினோ (Papinau) எனப் பெயர் கொண்ட அவர் கேரென் குடும்பத்தினர் வீட்டிற்கு அருகிலேயே வாழ்ந்து வந்தார். வாரத்தில் மூன்று அல்லது நான்கு முறை தெரேசு அவரது இல்லம் சென்றாள். அவர் நல்ல பெண்மணி, சான்றோர், கல்வி கற்போர் கருத்துப்படி பழக்கங்களில் மரபுகளைப் பின்பற்றியவர். அவருடன் துணையாக வாழ்ந்தவர்கள் அவருடைய தாயும், பூனையும் மட்டுமே. அவரது ஓவிய அறை பழங்காலக் கலைப் பொருட்களால் அழகு செய்யப்பட்டிருந்தது. பள்ளியை விட அந்த வீட்டில் தெரேசு முற்றிலும் மாறுபட்ட உலகைக் கண்டாள். அங்கு வருகை தரும் விருந்தினர்களால் கல்விக்குத் தடைகள் ஏற்பட்டன. வருவோரது உரையாடல்களில் லிசியூவின் வதந்திப் பேச்சுகள் சில இடம்பெற்றன. வந்தவர்களில் ஒரு சிலர், தெரேசைப் பார்த்தபடியே 'இந்த அழகிய இளநங்கை யார்?' என்று கேட்டனர். 'என்னே கூந்தலின் அழகு!' என்று வியந்தனர். தெரேசு நூலை முகத்தருகே வைத்துப் படிப்பது போல நடித்தபடி அங்கு நடைபெற்ற உரையாடல்கள் அனைத்தையும் கவனித்து மனத்துக்குள் பூரித்துப் போனாள்.

தெரேசுவுக்கு ஓய்வு நேரம் அதிகம் கிடைத்தது. புய்ஸ்லொனேவின் மூன்றாவது மாடியில் தனது கலை ரசனைக்கேற்பத் தெரேசு பரண் ஒன்று அமைத்தாள். அது "ஓர் அங்காடி போல்' காட்சியளித்தது. அங்குப் பறவைகள் நிறைந்த ஒரு பெரிய பறவைக் கூண்டும், செடிகளும், பொன் மீன்களும் கொண்ட காட்சிப் பேழைகள் அமைத்தாள். தூயவர்களின் திருஉருவச் சிலைகளையும், பல்வேறு பெட்டிகள், கூடைகளையும், பொம்மைகளையும்,



புத்தகங்களையும் ஒழுங்குற அமைத்தாள். சுவரின் மீது பொலீன் புகைப்படத்தைப் பதித்தாள். அங்குப் பலமணி நேரங்கள் தெரேசு தான் விரும்பிய நூல்களை வாசித்தாள். பாடங்களைப் படித்தாள், தியானித்தாள், மன்றாடினாள்.

ஜூன் மாதத்தில் மீண்டும் த்ரூவிலுக்குச் சென்றாள். குறுகிய காலமே அங்குத் தங்கினாள். புய்ஸ்லொனேவிலிருந்து யாரும் அவளுடன் த்ரூவிலுக்குச் செல்லாததால் தனிமையில் இருந்தாள். அடிக்கடி கோபமுற்று நோய்வாய்ப்பட்டாள். அத்தை எலீசா வருத்தமடைந்து அவளை லிசியூவுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அங்குச் சென்றவுடன் நலமடைந்தாள். 'புய்ஸ்லொனே வர வேண்டும் என்ற ஏக்கத்தினாலேயே' நோயினால் பாதிக்கப்பட்டாள் என்பதைத் தெரேசு உணர்ந்து கொண்டாள்.

## பிரிவுக்கு முடிவில்லை (1886 அக்டோபர் 15)

மீண்டும் ஒரு பிரிவா? தெரேசுவின் மென்மை உணர்வுகளுக்கு மீண்டும் ஒரு சோதனை. அவளுக்கு ஒரே துணையும் உற்ற உயிர்த் தோழியுமான மூன்றாம் வளர்ப்புத் தாய் மரியாவும் அவளை விட்டுப் பிரியப் போகின்றார். மரியா தனது நேரம் வந்தபின் லிசியூ கார்மலில் அவர் சேரப் போகிறார் என்பதை ஆகஸ்டு மாதத்தில் தெரேசு அறிய வந்தார். மரியாவின் இம் முடிவுக்கு அருட்பணியாளர் பிஷோன் ஆதரவளித்தார். இது மிகவும் கொடுமை. 'என் வளர்ப்பு அம்மா மரியா என் அறையை விட்டுப் பிரியப் போகிறார் என்பதை அறிந்தவுடனே என் அறை களையிழந்து காணப் பட்டது' எனத் தெரேசு கூறினாள்.

தெரேசு கார்மேல் இல்லத்தை வெறுத்திருப்பாள். காரணம் அவளது நெஞ்சுக்கு நெருக்கமாக இருந்த அனைவரையும் ஒருவர் பின் ஒருவராகக் கார்மல் மடம் தன்னிடம் ஈர்த்துச் சேர்த்துக் கொண்டது. அந்த மடத்தையும் அதன் வரவேற்பு அறையையும் வெறுத்து ஒதுக்கியிருக்கலாம். அந்த வரவேற்பு அறை பொலீனைச் சந்திக்கச் சென்றபோது பெரும் வேதனையைத் தந்தது. எனினும் தெரேசு தானும் அங்குச் சேர வேண்டுமென்று எண்ணினாள். பொலீனையும், மரியாவையும் சந்திக்க அல்ல. மாறாக இயேசுவே அவளை அங்கு அழைத்துக் கொண்டிருந்தார்.

பொலீனைப் பிரிந்தபோது ஏற்பட்ட துயரங்கள் தெரேசு மனத்தில் தற்போது உயிர் பெற்றன. மரியாவைப் பிரிய அவருக்கு மனமில்லை. மீண்டும் மீண்டும் மரியாவின் அறைக்குச் சென்று தட்டினாள். ஒவ்வொரு முறையும் முத்தங்களால் நிறைத்தாள். மார்ட்டினும் மிகவும் சோர்வுற்றுத்

அழுததற்காக அழுதாள். "விவாதங்கள் அனைத்தும் வீணாயின. எனது மிதமிஞ்சிய முன்கோபம் காரணமாக நான் அவர்களால் சகித்துக் கொள்ளப் பட இயலாதவளாக மாறிவிட்டேன்" என வருந்தினாள்.

அவளது வயது பதினான்கு. நல்ல உடல் வளர்ச்சி பெற்றிருந்தாள். கூன் முதுகு ஏற்படாதவாறு உடற்பயிற்சிகள் அவளுக்கு அளிக்கப்பட்டன. ஆனால் அவள் தீவிர செயல்பாடு உள்ளவளாகக் காணப்படவில்லை. செலின் அதிக வேலை செய்தாள். படுக்கையறைகளையும் அவளே சுத்தம் செய்து ஒழுங்குப் படுத்தினாள். தெரேசு இல்லப் பணிகளில் ஆர்வம் காட்டவில்லை! சில வேளைகளில் படுக்கையறையைச் சரி செய்யச் செலினுக்கு உதவி செய்தாள். மாலை வேளைகளில் பூந்தோட்டத்திலிருந்து சில செடித் தொட்டிகளை எடுத்து வந்து இல்லத்தை அழகுப்படுத்தினாள். இச்செயல்களுக்காகச் செலின் அவளுக்கு நன்றி கூறவில்லையென்றால் அழத் தொடங்கி விடுவாள். 'எனக்கென மன உறுதி இல்லாமல் பிறருடைய மன உறுதியைச் சார்ந்து வாழ்வது குழந்தைப் பருவ வாழ்க்கை போன்றது. அக்குழந்தை வாழ்க்கையையே நான் வாழ்கின்றேன் என எனக்கு எண்ணத் தோன்றுகிறது." என்று தெரேசு கூறினாள். அவளாகவே வெளியே வர வழி வகை தெரியாமல் ஓர் ஒடுங்கிய வட்டத்தினுள் சுற்றிக் கொண்டிருந்தாள். மீண்டும் வர இயலாத குழந்தைப் பருவக் கட்டுகளுக்குள் சிறைப் பட்டிருந்தாள்.

குமரிப்பருவத்துத் தெரேசு கார்மல் சபையில் கடின வாழ்வை மேற்கொள்ள விரும்பிக் கனவு கண்டு கொண்டிருந்தாள். "மன உறுதியுடன் வாழ வேண்டும்!' என அவிலா தெரசாள் தன்னுடனிருந்த துறவியரை வற்புறுத்தினார். ஆனால் தெரேசுவிடம் அந்த மனவலிமை இல்லையே. இந்நிலையில் அவள் எவ்வாறு மடத்தில் சேர்ந்து வாழ இயலும்? தெரேசு மென்மையானவள். மடத்தில் அப்படிப்பட்டவர்களை விரும்புவதில்லை. இந்நிலையில் எப்படி அவிலா தெரசாளின் அன்பு மகளாகத் தெரேசு மாற முடியும்? எனவே ஓர் அருங்குறி மட்டுமே அவளை மாற்ற இயலும்!

23 வயது நிரம்பிய லேயோனி டிசம்பர் மாதம் முதல் நாள் துறவற இல்லத்திலிருந்து திரும்பி வந்தார். சிரங்கு நோயினால் தாக்கப்பட்டிருந்தார். தலையையும், தோள்களையும் மறைக்கும் தலை மறைப்புத் துணி அணிந் திருந்தார். துறவற வாழ்வு என்பது எளிதான ஒன்றல்ல என்பதை லேயோனி யின் வாழ்வு நிரூபித்துக் காட்டியது. ஏழு வாரத் துறவு வாழ்வு லேயோனிக்கு முற்று பெற்றது. அவருக்கு ஏற்பட்ட இழிவையும், தோல்வியையும் மேற் கொண்டு அவரைத் தேற்றுவதற்காக தெரேசுவும், செலினும் தங்களால்



இயன்றவை அனைத்தையும் செய்தனர்.

குடும்பக் கடமைச் சடங்குகள் தொடர்ந்தன. ஆனால் 1886 ஆம் ஆண்டு இறுதியில் அவர்கள் மனங்களில் உறுதியும், நிறைவும் சிறிதளவே நின்றன. கிறிஸ்மஸ் அன்று மாலை மார்ட்டின் தமது மூன்று பெண் மக்களையும் அழைத்துக் கொண்டு தலைமை ஆலயத்தில் திருவிழிப்புத் திருப்பலிக்குச் சென்றார்.

## ஏமாற்றமில்லா மாற்றம் (கிறிஸ்து பிறப்பு இரவு 1886)

செலின், தெரேசைக் குழந்தையென்றே நினைத்து மதித்து வந்தார். அதற்கான சான்று நிகழ்ந்தது: அவர்களது குடும்பத்தில் ஓர் பழக்கம் உண்டு. திருவிழிப்புத் திருப்பலிக்குப் பிறகு குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தங்களது இல்லத்தில் உள்ள நெருப்புக் கூண்டைச் சுற்றி அமர்வர். அங்குப் புதிய காலணிகளும் நிறையப் பரிசுப் பொருட்களும் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பரிசாக வெளியே எடுக்கப்படும் பொழுது அனைவரும் மகிழ்ச்சி யடைவர். இது குழந்தைகளை மகிழ்விப்பதற்காகக் கடைப்பிடித்து வந்த ஒரு பழக்கம். தெரேசுவின் வயது இப்போது பதினான்கு. இந்த வயதிலும் அதனைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்தினாள் தெரேசு. ஆனால் தந்தை மார்ட்டினுக்கு இதில் சிறிதும் உடன்பாடு இல்லை. எனவே சலிப்படைந் தவராகச் செலினிடம், "நல்லது! உங்களுக்குச் சாதகமாகச் செய்வோம்! ஆனால் இந்தப் பழக்கத்திற்கு இதுவே கடைசி ஆண்டு!" என்றார். இதனைக் குறுகிய படிகளின் வழியே மேலே சென்று கொண்டிருந்த தெரேசு கேட்டு விட்டாள். தந்தையின் வார்த்தைகள் அவளது உள்ளத்தை வன்மையாகத் தாக்கின. கண்ணீர் வடித்தாள். அழுது தீர்த்தாள். இச்சூழலைக் கண்டு செலின் இரவுணவின் மகிழ்ச்சி பாதிக்கப்பட்டு விடுமே என்று அஞ்சி உடனடியாகக் கீழிறங்கிச் செல்ல வேண்டாம் என்று ஆலோசனை கூறினார். ஆனால் உடனடியாக ஏற்றத்திற்கான மாற்றம் தெரேசுவின் உள்ளத்தில் தோன்றியது. அது ஏமாற்றமில்லா மாற்றமாகவும் அமைந்தது. பிடிவாதத் தினின்று விடுபட்டாள். அழுகையை நிறுத்தினாள். கீழே இறங்கிச் சென் றாள். நிறைந்த மகிழ்ச்சியுடன் பரிசுப் பொருட்களை திறந்து பார்த்தாள். செலினுக்குத் தெரேசின் செயல்களைக் கண்டு நம்ப முடியவில்லை.

படிகளில் ஏற்பட்ட மாற்றம் சாதாரண மாற்றம் அல்ல; முழுமையான மனமாற்றம்! அதனால் புதியதோர் ஆற்றல் பெற்றாள். "அதற்குப் பிறகு அவள் பழைய தெரேசு அல்ல. இயேசு அவளது இதயத்தை மாற்றி விட்டார்." அவள் வாழ்ந்து கொண்டிருந்த இருள் சூழல் அனைத்தும் ஒளி வெள்ளமாக

மாற்றம் கண்டது. தெரேசின் வாழ்வில் திருப்புமுனையாக அமைந்த இந்த "மாற்றத்தின் நிலைப்பாட்டை" ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1895 ஆம் ஆண்டில் சகோதரி குழந்தை யேசுவின் தெரேசு சீர்தூக்கிப் பார்த்தார். அவரால் சந்தேகப்பட முடியவில்லை. "அதுவோர் சிறு அருங்குறிதான்! என் மனத்தில் நிறைவு கண்ட இயேசு, பத்து ஆண்டுகளாக என்னால் சாதிக்க இயலாத பணியை ஒரு சிறிய நிகழ்வால் நிறைவேற்றி விட்டார்" எனத் தெரேசு குறிப்பிட்டாள். 1886 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் நாள் தெரேசு தன் வாழ்வில் மிகப்பெரும் தொலைதூரத்தைக் கடந்தாள். அதுவே அவளது வாழ்வின் மூன்றாம் பகுதியின் தொடக்கம்! அனைத்துப் பகுதிகளையும் விட மிகச் சிறந்தது. தன்அன்புத் தாய் இறந்த போது 'இழந்த ஆன்ம வலிமையை' ஒன்பது துயர் நிறை ஆண்டுகளுக்குப் பிறகு அவள் திரும்பப் பெற்றாள். 'அவ்வலிமையை இறுதிவரை காத்துக் கொள்ள வேண்டும்' என்று தெரேசு குறிப்பிட்டாள்.

ஒரு வியப்பு மிகுந்த மாற்றம் நிகழ்ந்தேறியது! நிறைவான ஆற்றல் நிறை இறைவன், குறைவான மனித இயல்பை ஏற்றுக் கொண்டார். சிறிய தெரேசு தற்போது வலிமை மிக்கவரானார். அது ஒரு அருட்திருவிருந்து! *"வலிமையும் ஆற்றலும் நிறைந்த இறைவனை அடைந்த பெரும் மகிழ்ச்சி என்னில் நிறைந்திருக்கிறது"* என அன்றிரவு குறிப்பிட்டாள் தெரேசு.

உடனடியாகக் குழந்தைப் பருவத்தின் தவறுகளிலிருந்தும், குறை களிலிருந்தும் விடுதலையடைந்தாள்.இறையருள் அவளை வளரவும் முதிர்ச்சி அடையவும் செய்தது. கண்களில் நீர் வற்றிப் போயின. சுயஇரக்க உணர்ச்சியின் தாழ்வு மனநிலை குணமாக்கப்பட்டது- புதிதாக வாழும் உணர்வு பெற்றாள். 'அது ஓர் அருள் பொழிவு நிகழ்ந்த இரவு! அந்த இரவி லிருந்து நான் மேற்கொண்ட எந்தப் போராட்டத்திலும் தோல்வியைச் சந்திக்கவில்லை. மாறாக வெற்றி மேல் வெற்றி நடை போட்டுள்ளேன்.' அதாவது "பந்தயத்தில் ஒடும் வீரரைப் போல்" (திருப்பாடல்கள் 19 : 5) ஒடினேன் என்று பிற்காலத்தில் குறிப்பிடுகின்றார்.

அன்று இரவு புதியதொரு தெரேசு மார்ட்டின் பிறந்து விட்டாள். 'என்னையே நான் அடையாளம்கண்டு கொள்ள இயலாத வகையில் இயேசு என்னை மாற்றி விட்டார். இயேசு திரும்பவும் அவரை எனக்காகத் தந்து விட்டார்.' பல ஆண்டுகளாகக் தொடர்ந்து துன்புறுத்திய தீய கனவுகளில் இருந்து, வித்தியாசமான நோய்களிலிருந்து, மனக் கவலைக் குழப்பங் களிலிருந்து இயேசு அவளை விடுவித்து விட்டார். அழுவது, கனவு காண்பது, மனத்திண்மையற்றவளாகச் செயல்படுவது போன்றவை அவளின்



உண்மை குணங்களல்ல! அலென்ஸோனில் அவள் அவ்வாறு செயல் படவுமில்லை! கன்னி மரியா அவளிடம் தோற்றுவித்த புன்னகை, அவளு டைய சிறிய சகோதர சகோதரிகளின் வேண்டுதல்கள், குழந்தை யேசுவின் சக்தி ஆகியவை அனைத்தும் அவளைச் சுதந்திர மனுஷி ஆக்கி விட்டன. தெரேசு சுய ஆளுமை நிறைந்தவளாக மாறி விட்டாள். அது அவளது வாழ்வைத் தீர்மானித்த முக்கிய நிகழ்வு! இவ்வாறு இறைவனே தெரேசைத் தடுத்து ஆட்கொண்டார்! தெரேசு என்னும் உடைபட்ட கப்பலைக் காப்பாற் றினார். அது திருமபவும் அனுபவித்தறிய முடியாத அனுபவம்! இப்போது அவள் களம் நோக்கிப் போராட ஆயுதங்கள் தரித்துக் கொண்டு விட்டாள்!

*தவழ்ந்து இன்புற விரும்பினாள். "என் கனவுகள் நனவானால், ஒரு நாள் நான் கிராமப் புறத்திற்குச் சென்று வாழ்வேன். என் திட்டம் பற்றி எண்ணு கின்றபோதே ஆதவனின் கதிர் அலைகள் ஊடுருவிச் செல்லும் சிறிய இல்லத்திற்கு என் இதயம் ஈர்த்துச் செல்லப்படுகின்றது. அங்குள்ள அறைகளில் இருந்து கொண்டே கடல் அலைகளை ரசிக்க முடியும்" என்றாள் தெரேசு. தனிமையில் இருக்கவே விரும்பினாள். பசு, கழுதை, ஆடுகள், கோழிகள், பறவைக்கூடு போன்றவைகளோடு வாழ்வைச் செலவிட விரும் பினாள். அவளது சிறிய இல்லம், ஆலயத்திற்கு அருகில் அமைந்திருந்தது. அங்குத் தினமும் காலையில் திருப்பலியில் பங்கு பெறுவாள். அதன்பிறகு ஏழை, எளிய குடியானவர்களைச் சந்திக்கத் தனது கழுதை மேல் அமர்ந்து பயணம் செய்தாள். அங்கு அவர்களுக்கு "உணவு, மருந்துப் பொருட்களை கொடுப்பாள். சுருங்கச் சொன்னால் சிறந்த நார்மன் மரபின் அடிப்படையில் செபம், மற்றும் பிறர் நலப் பணிகள் நிறைந்த ஏகாந்த வாழ்வே அவளது கனவாக இருந்தது.*

ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை கலைஞானி கோதார்த்தின் (Godard) மாணவியான செலின், தெரேசுவுக்குச் சித்திரக் கலையைக் கற்றுக் கொடுத்தார். தெரேசு தன் முயற்சிகளைத் திரட்டி வாழ்க்கை நிகழ்வு கள், உருவப்படங்கள், கிராமப்புற இயற்கைக் காட்சிகள் போன்றவற்றைச் சித்திரமாக்கினாள். செலினும், தெரேசுவும் இணைந்து களிமண்ணால் உருவங்களை உருவாக்கினர். எனினும் தெரேசு கலைஞானி கோதார்த்தி டமிருந்து இன்னும் இக்கலையைச் சிறப்பாகக் கற்றுக் கொள்ள விரும்பினாள். செலினைப் போன்று சித்திரக்கலைத் திறமை அவளிடம் இல்லையெனச் சிலர் கூறியதால் அமைதியாகி விட்டாள்.

'மரியாள் குழந்தைகள் சபையில்' தெரேசுவும் பங்கு பெற விரும்பினாள். அதற்கு முன்பயிற்சிக்காக வாரம் இருமுறை கூட்டங்களில் அவள் கலந்து கொள்வது கடமையாக இருந்தது. இறுதியில் மே 31 ஆம் நாள் உறுப்பினராகத் தெரேசு ஏற்றுக் கொள்ளப்பட்டாள்.

பள்ளியில் உடன் பயில்பவர்களைப் பற்றித் தெரேசு அறிந்து கொள்ளவே இல்லை. அவளுடைய ஒரே புகலிடம் ஆலய இருக்கைதான்! அங்கே திரு விருந்துப் பேழையின் முன்பாகப் பல மணிநேரங்கள் செலவிட்டாள். அவளு டைய "ஒரே நண்பனை" அங்குத்தான் கண்டாள். அவர்களுடைய சந்திப்பின் தரம் தன்னையே அவள் கேள்வி கேட்கும் பாணியிலேயே அமைந்தது. வழக்கத்திற்கு மாறாக மே மாதத்தில் ஒருமுறை தன் தந்தையிடம்



"படிப்பதற்கான ஒரு நூல் வேண்டும்" என்று துணிச்சலுடன் கேட்டாள். அண்மையில் வெளியிடப்பட்ட அந்த நூலைக் கார்மல் இல்லத்திலிருந்து இரவலாக மார்ட்டின் வாங்கி வந்திருந்தார். 'இன்றைய உலகின் முடிவும், நாளைய உலகின் மறை உண்மைகளும்" என்பதே அந் நூலின் பெயர். விவிலியப் பேராசிரியர் அருட்பணியாளர் ஆர்மிஞ்ஞோன் (Arminjon) ஆற்றிய ஒன்பது சொற்பொழிவுகளின் தொகுப்பே அந்நூல்.

280 பக்கங்களைக் கொண்டிருந்தது அந்நூல். 'நித்திய பேரின்பமும், இறைவனது இயற்கைக்கு மேலான இலட்சியமனக்காட்சியும்' என்கிற அவரது ஏழாவது உரை தெரேசை மிகவும் கவர்ந்தது. அவ்வுரையில் அருட்பணியாளர் தொமேனின் உரைகளை விட, வெளிப்பாடு மற்றும் திருமரபின் முழுமையான தொகுப்புக் கருத்துக்கள் தெளிவாக இருந்தன எனக் குமரிப்பெண் தெரேசு கூறினாள். "சமயத்தின் அனைத்து நிறை உண்மைகளும், நிறைவின் மறைபொருள்களும் என் ஆன்மாவை இன்ப நிலையில் மூழ்கடித்தன. அவ்வின்ப நிலை இவ்வுலகம் தர இயலாத பேரின்ப நிலையாகும்" எனத் தொடர்ந்து கூறினாள். அந்நூலிலிருந்து அவள் நெஞ் சைத் தொட்ட பக்கங்களுள் குறிப்பாக 'முழுமை அன்பு' பற்றிய கருத்துக் களை, நகலெடுத்துப் பதிவு செய்தாள். இந்நூலை வாசிக்க அவளுக்குக் கிடைத்த வாய்ப்பை "அவளது வாழ்வில் கிடைத்த பெருங்கொடைகளில் மகத்தானதாகக்' கருதினாள்.

இவ்வாறு தெரேசு தனது கண்டுபிடிப்புகள் அனைத்தையும் தன் புதிய அந்தரங்கத் தோழியான செலினுடன் பகிர்ந்து கொண்டாள். தெரேசின் திடீர் மாற்றம் இருவரையும் ஒன்றிணைய வைத்தது. "ஒரே ஆன்மாவே எங்கள் இருவரையும் இயக்கியது. இளம் பெண்கள் கனவு காணும் இன்பமயமான வாழ்வைச் சில மாதங்கள் நாங்களும் அனுபவித்தோம். எங்களைச் சூழ்ந்திருந்தவை அனைத்தும் எங்கள் விருப்பங்களுக்கு இயைந் தவைகளாகவே இருந்தன. மாபெரும் விடுதலை எங்களுக்கு வழங்கப் பட்டிருந்தது. எங்களது இம்மண்ணக வாழ்வு இன்பத்தின் இலட்சியமாகவே இருந்தது எனக் கூறுவேன்" எனத் தெரேசு மொழிந்தாள்.

கோடைக்கால மாலை நேரங்களில் அவர்கள் மேல் மாடிக்குச் சென்று நிலவொளியில் குளிர்காய்ந்து கொண்டே உறவாடினர். "பெரும் தூயவர் களுக்கு அளிக்கப்பட்ட அருட்கொடைகளைப் பெற்றது போல் எங்களுக்கு தோன்றியது" எனக் கடந்த காலத்தை நினைவு கூர்ந்தாள் தெரேசு. ஒஸ்தியா வில் (Ostia) தாய் மோனிக்காவும் மகன் அகுஸ்தீனும் மனம் விட்டு உரையா

முன்னே இயேசுவின் நாமம் கேட்டாள்; சிலுவை
மூர்த்தியாய்க் குருதி கொட்டும் நிலையைக் கண்டாள்;
பின்னே அதைச் சேகரிக்க முடிவும் செய்தாள்.
பாவிகள் மனமாறத் தாகம் கொண்டாள்
மனிதரைத் தேடிட முடிவும் செய்தாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே!

## குற்றம் தான்... குற்றவாளி அல்ல (1887 மார்ச் முதல் ஆகஸ்ட் வரை)

மார்ச் மாதம் 19 மற்றும் 20 ஆம் நாள்களுக்கு இடைப்பட்ட இரவு நேரம். இரு பெண்களும் ஒரு சிறுமியும் கொடூரமாகக் கொலை செய்யப் பட்டனர். பாரீஸ் நகரில் உள்ள மொன்தேஞ்(Montaigne) 17 ஆம் எண் தெருவில், சாலையின் நடுவில் இவர்கள் மூவரும் கொலை செய்யப்பட்டுக் கிடந்தனர். அவ்விரு பெண்மணிகளில் ஒருவர் ரெஜின் தே மொன்தெல் (ReginDe Montelle) என்கிற மரியா ரெஞ்ஞாத் (Marie Regnaud). இவர் ஆடம்பரத்திற்குப் பெயர் போனவர். விதவிதமாய் உண்டு, விதவிதமாய் உடுத்தி நாகரிக மோகம் கொண்டு சொகுசாய் வாழ்ந்து வந்தவர். மற்றொருவர் அவருடைய பணிப்பெண். வேறொருவர் 12 வயதுச் சிறுமி. அவர் ரெஞ் ஞாத்-தின் குழந்தை என்பதில் சந்தேகமில்லை. நகைகள் அனைத்தும் காணாமற் போயி ருந்தன.



ஹென்றி பிரான்சினியின் மெழுகு உருவம்.

இந்தக் கொலைச் சம் பவம் உலகெங்கும் பரவலாகப் பேசப்பட்டது. இரண்டு நாள் களுக்குப் பிறகு காவலர்கள் மார்சேய் (Marseilles) என்னு மிடத்தில் சந்தேகத்திற்குரிய ஒருவனைக் கைது செய்தனர்.



அவனது பெயர் ஹென்றி பிரான்ஸினி (Henri Preanzini). அலெக்சாந்திரியாவில் பிறந்த 30 வயது இளைஞன். உயரமானவன், அழகும், துணிச்சலும் ஒருசேரப் பெற்றவன். இவனுக் கெதிராகக் குற்றச்சாட்டுகள் குவிந்தன. ஆனால் அவை அனைத்தையும் மீண்டும் மீண்டும் அவன் மறுத்தான். அவன் சாதாரண குற்றவாளி யாகப் பார்வைக்குப் பட வில்லை. விவாதங்களையும், சாட்சியங்களையும், நீதிபதி களையும் துணிவுடன் எதிர் கொண்டான். பிரான்ஸ் மற்றும் வெளிநாடுகளிலுள்ள பத்திரிக் கைகள், நாளிதழ்கள் மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரை பல விளக்கச் செய்தி களை வெளியிட்டன. அவ னது வழக்கு ஜூலை மாதம் 9ஆம் நாள் விசாரணைக்கு வந்தது. அதே மாதம் 13 ஆம் நாள் பிரான்ஸினிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தெரேசு இவையனைத்தையும் கேள்வியுற்றாள். ஆனால் அவளது இதயத்தில் ஒரு சின்ன ஆசை! அவனையும், அவனது ஆன்மாவையும் அழிவினின்று மீட்க வேண்டும். அனைத்துப் பத்திரிக்கைகளும் அவனைக் 'கொடியவன்', 'கயவன்', 'இரக்கமற்றவன்', 'வஞ்சகன்', 'காட்டுமிராண்டி' என்றெல்லாம் வருணித்திருந்தன. எனினும் இளம் நங்கை தெரேசு பிரான்ஸினியை தன் 'முதல் குழந்தையாக'த் தத்து எடுத்துக் கொண்டாள். நாளடைவில் தெரேசிடமிருந்து உண்மையைச் செலின் இறுதியாக அறிந்து கொண்டார். இருவரும் இணைந்து தங்களது முயற்சிகளை முனைப்பாக்கிக் கொண்டனர்.

"எங்கள் இதய ஏக்கங்கள் ஏற்று அருளப்படும் என்று என் இதயத்தின் உள் ஆழத்தில் உறுதியாக நம்பியிருந்தேன். ஆனால், தொடர்ந்து குற்றம் புரிவோருக்காக மன்றாடும் திடத்தை இறைவன் எனக்கு அருள வேண்டும் என விரும்பினேன். பிரான்ஸினி தனது குற்றங்களை ஒப்புரவு அருட் சாதனத்தின் வாயிலாக அறிக்கையிட வில்லையெனினும், மனமாற்றத்திற் கான அடையாளத்தைக் காட்டவில்லையெனினும், அவன் மனம் திருந்தினால், அவனது குற்றங்களை இறைவன் மன்னிப்பார் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். ஏனெனில் இயேசுவின் அளவு கடந்த இரக்கத்தில் எனக்கு அத்தனை நம்பிக்கை இருந்தது. ஆனால் என் மன ஆறுதலுக்காகப், பிரான்ஸினி மனம் மாறியதற்கான அடையாளம் ஒன்று தர வேண்டும் என வேண்டினேன்" என்று தெரேசு குறிப்பிட்டாள்.

விடிந்தது ஆகஸ்ட் 31 ஆம் நாள். கிரான்த் ரொக்கெத் (Glande Roqutte) என்ற சிறைச்சாலையில் பிரான்ஸினி கொலை இயந்திரத்திற்கு முன்பு நிறுத்தப்பட்டான். தான் நிரபராதி என வாதிட்டுக் கூறினான். சிறைச்சாலை

அருட்பணியாளர் ஃபோர் (Faure) அவர்களின் திருப்பலிகளை மறுத்தான். நேரம் நெருங்க நெருங்க அனைவரின் உள்ளமும் பதைத்தது. ஆனால் பிரான்ஸீனி அந்தக் கடைசி நேரத்தில் இயேசுவின் பாடுபடும் திருஉருவச் சிலையொன்றைக் கேட்டான். அவனது ஆவல் நிறைவேற்றப்பட்டது. அதனைப் பெற்ற அவன் இருமுறை முத்தம் கொடுத்து விட்டு அமைதியாக மரணத்தை ஏற்றுக் கொண்டான்.

பிரான்ஸீனியின் இம்மனமாற்றச் செயல் மிகப் பெரும் செய்தியாக மறுநாள் நாளிதழ்களில் வெளிவந்தன. செய்தித்தாளை வாசிக்கக் கூடாது என்று மார்ட்டின் விடுத்திருந்த கட்டளையையும் மீறிச் 'சிலுவை' எனப் பொருள்படும் 'லா க்ரூவா' (La Croix) எனும் நாளிதழில் பிரான்ஸீனியின் மரணம் பற்றிய செய்தியைப் படித்தாள். கண்ணில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழிந்தது. அதனை அடக்கிக் கொள்ள முயற்சி செய்தாள். அவளது ஒவ்வொரு மன்றாட்டையும் 'துல்லியமாக இறைவன் கேட்டருளினார்', அவள் கேட்டிருந்த அடையாளம் அருளப்பட்டது. குற்றம் புரிவோருக்காக மன்றாடும் அழைப்பை இறைவன் தருகின்றார் என்பதன் வெளி அடையாளமே பிரான்ஸீனியின் மனமாற்றம். பிரான்ஸீனி முத்தம் செய்து சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் காயங்களிலிருந்து வழியும் குருதி யைத் தெரேசு உலகனைத்திற்காகவும் சேகரிக்க விரும்பினாள்.

இந்தத் 'தனிப்பட்ட அருட்கொடை' நிகழ்வு கார்மல் சபையில் சேருவ தற்கான தெரேசின் உறுதிப்பாட்டை அதிகரித்தது. குற்றம் புரிவோருக்காக மன்றாடுவதும் அவர்களுக்காகத் தம் உயிரைப் பணயம் வைப்பதுமே இயேசுவின் அழைப்பு என உணர்ந்தாள். இறைவன் தெரேசுவுக்குப் பிரான் ஸீனியை அவளுடைய முதல் ஞானக் குழந்தையாகக் கொடுத்தார் என்றால் பலரும் அவளுக்குக் குழந்தையாகக் கிடைப்பர் என்பது உறுதியாயிற்று.

## தடைகள்... படிக்கற்கள்தாம்! (மே 1887 முதல் ஜனவரி 1888 வரை)


இழப்பதற்கு அதிக நேரம் இல்லை. தெரேசின் ஆவல் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே, கார்மல் மடத்தில் நுழைவதற்கான நாள் குறித்து விட்டாள் தெரேசு. நாள்கள் மற்றும் ஆண்டுகளில் ஏற்படும் இணைக் கருத்து நிகழ்வுப் பொருத்தங்களை நம்பினாள். 1887 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25 ஆம் நாள் கிறிஸ்துமஸ் இரவே அவரது மனமாற்றத்தின் ஓராண்டு நினைவு நாள். எனவே, அன்றைய தினமே கார்மல் சபையில் நுழைவற்கு விரும்பினாள்.



ஆனால் இடர்கள் தொடர்களாய் வந்து திட்டத்தைக் கைவிடத் தூண்டின. ஒவ்வொரு தடையையும் படிப்படியாகத் தெரேசு கடந்து சென் றாள். 'இயேசுவின் நம்பிக்கைக்குரியவளாக இருக்க, நெருப்புக் கனலையும் கடக்க வேண்டியிருந்தாலும் நான் கடந்திருப்பேன். இறையழைத்தல் என்னிடம் அவ்வளவு தீவிரமாக இருந்தது. கார்மல் சபை என்னும் கோட்டையைப் பிடிக்க வாள் முனையில் அவள் போராட வேண்யிருந்தது."

## தந்தை சொல் மிக்கதோரு மந்திரமில்லை (29 மே 1887)

தந்தையின் சம்மதம் பெறுவதே அவள் கடக்க வேண்டிய முதல்படி. தந்தையிடம் தனது இரகசிய முடிவை வெளியிட உயிர்ப்பு ஞாயிற்றுக்குப் பின் வந்த ஞாயிற்றுக் கிழமையைத் தேர்ந்தெடுத்தாள். பொலீனும், மரியாவும் அழைத்தலை ஏற்று இளமையின் மகிழ்ச்சியை இறைவனுக்குக் கையளித் திருக்கின்றனர். எளிய கிளாரா சபையிலிருந்து திரும்பி வந்த லேயோனி,



அருட்பணி. லெ பெலேத்தியே வரைந்த ஓவியம்:
மலர்களைப் பறிக்கும் செலின், தெரேசு, லேயோனி

கயென் நகரில் உள்ள மாதா மினவுதல் சபையில் சேரத் தந்தையிடம் அனுமதி கேட்டுக் காத்திருக்கின்றார். இந்நிலையில் பதினைந்து வயது நிரம்பிய தெரேசைக் கார்மல் சபையில் சேர அனுமதிப்பாரா? மே திங்கள் முதல் நாள், பக்க வாதத்தால் மார்ட்டின் தாக்குண்டார். அவரது இடப் பக்க உறுப்புகள் பல மணி நேரங்களாகச் செயல் இழந்து விட்டன. அவரு டைய மைத்துனரது உடனடி நடவடிக்கையால் மீண்டும் உடல் நலம் அடைந் தார். இவ்வாறு தெரேசு உடல் நலம் குன்றிச் சோர்வடைந்திருந்த தந்தை யிடம் தனது கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய நிலையி லிருந்தாள். பதற்றம் அவளைப் பற்றிக் கொண்டது. தயங்கினாள். துணிந்து பேசும் ஆற்றலும் வலிமையும் தருமாறு அன்றைய தினம் முழுமையும் இறைவனிடம் மன்றாடினாள்.

மாலை நேரம் தோட்டத்தில் மார்ட்டின் தமது மாலை வழிபாட்டை முடித்துவிட்டு அமர்ந்திருந்தார். தெரேசு தனது விருப்பத்தை அவரிடம் வெளியிட்டாள். சிறுவயதினர் சபையில் சேர்ந்து வாழ்வதற்கான முதிர்ச் சியை இன்னும் அடையவில்லை என்று கூறித் தந்தை மறுத்தார். தனது அழைத்தலின் நேர்மையையும் உடனடித் தேவையையும் தந்தைக்குப் புரியும்படி எடுத்துரைத்தாள். இவ்வாறு தமது ஆசைக் குழந்தைகளைக் கேட்பதன் மூலம் இறைவன் தம்மை மேன்மைப்படுத்துவதாக உணர்ந்து 'தெரேசின் அரசர்' மார்ட்டின் அனுமதி அளித்து விட்டார். பின்னர் தோட்டத்தில் தாழ்மதில் சுவரில் வளர்ந்திருந்த பாறைகளுக்கிடையே வளரும் செடி ஒன்றிருந்து லிலி மலர் போன்ற ஒரு வெண் மலரினைப் பறித்துத் தெரேசிடம் கொடுத்தார். அச்சிறு வெண்மலர் எவ்வாறு அவளது முழு வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுகின்றது என்று விளக்கம் தந்தார். தெரேசு அம்மலர்ச் செடியைத் தன் தந்தையிடமிருந்து தூய நினைவுச் சின்னமாகப் பெற்றாள். எப்போதும் தன்னுடன் வைத்திருந்த 'கிறிஸ்து வழி வாழ்வு' என்னும் நூலில் வைத்தாள். தந்தையின் இசைவால் தெரேசு அளவற்ற மகிழ்ச்சியடைந்தாள். ஆனால் அம்மகிழ்ச்சி நிரந்தரமல்ல. விரைவில் முடிவுக்கு வரும் என்றும் சந்தேகித்தாள்.

மீண்டும் கோடை விடுமுறை நாள்கள் வந்தன. இதுவே தனது இறுதிக் கோடை விடுமுறை எனத் தெரேசு நம்பினாள். கேரென் குடும்பத்தினர் மற்றும் தெரேசின் நண்பர்கள் யாரும் இந்நிகழ்வுகள் பற்றி எதுவும் அறிந்தி ருக்கவில்லை. வாழ்க்கைச் சக்கரம் உருண்டது. மார்ட்டினின் பிள்ளைகள் தங்கள் தந்தையுடன் கிராமப் பகுதிக்கு உலாவச் சென்றனர். தெரேசுவும், செலினும் ஒப்புரவு அருட்சாதன அருட்பணியாளர் லெபெல்லேத்தியேரு டன் சென்றனர். 34 வயது நிரம்பிய அருட்பணியாளர் சிறந்த ஓவியர்.



மூன்று சகோதரிகளும் வயலில் இருப்பதாக ஓவியம் ஒன்றை வரைந்தார். அதில் தெரேசு வழக்கம் போல் மலர் பறிப்பதாகவும், லேயோனி நூல் ஒன்றைப் புரட்டுவதாகவும், செலின் சித்திரம் தீட்டுவதாகவும் வரைந்தி ருந்தார். பின்னர் அவர்கள் ஒன்ஃப்ளோர் (Hon Fleur) என்னுமிடத்திற்குத் திருப்பயணம் சென்றனர். அதைத் தொடர்ந்து விசைப்படகில் 'லே ஆவ்ர்' (Le Havre) என்னுமிடத்தில் நடைபெற்ற அகில உலகக் கண்காட்சியைக் காணச் சென்றனர். இறுதியில் த்ரூவில் கடற்கரையில் கேரென் குடும்பத்தினர் வாடகை இல்லத்தில் ஒரு வாரம் தங்கினர்.

'நெட்டை ஆங்கிலச் சிறுமி' விடுமுறையை நன்கு பயன்படுத்திக் கொண்டாள். இஷ்ஷானுடன் தன் தோழியரைச் சந்திக்கச் சென்றாள். தினமும் இருமுறை கடற்கரைக்கு அவர்கள் சென்றார்கள். "நேற்றுக் கடல் நீர் சேகரிக்கப் பாறைகளுக்குச் சென்றோம். மிதியடிகளைக் கழற்றி விட்டுக் கடல் நீரில் தெரேசு விளையாடி மகிழ்ந்தாள்" "நெட்டையான தெரேசு இயற்கையை ரசித்து மகிழ்ந்து மெய்ம்மறந்தார்" என்பது இஷ்ஷானின் கூற்று.

அக்டோபர் மாதம் ஆறாம் நாள் முதல் 15 ஆம் நாள் வரை இயேசு சபை அருட்பணியாளர் பிஷோன் (Pichon) கார்மல் சபையினருக்குத் தியான மறையுரைகள் ஆற்றினார். சகோதரி தூய இதய மரியா அவரைப் பெரிதும் மதித்தார். மறையுரைகளுக்குப் பின் புய்ஸ்ஸொனேவுக்குச் சென்றார். செலின் அவரிடம் தனக்கு வழிகாட்டும்படி வேண்டினார். ஜூலை 16 ஆம் நாள் லேயோனி கயென் நகரிலுள்ள மாதாமினவுதல் சபையில் சேர்ந்தார். தெரேசு தனது முடிவில் உறுதியாய் இருந்து விரைவில் கார்மல் சபையில் சேர முனைந்தாள். ஆனால் அதற்குக் குடும்பத்தினர் அனைவரின் ஒருமித்த சம்மதத்தைப் பெறுவது கடினம் என்பதையும் அறிந்திருந்தாள். ஓராண்டு காலக் கார்மல் வாழ்வை அனுபவித்திருந்த மரியா, ஓர் ஆண்டிற்குப் பிறகு தெரேசு கார்மல் சபையில் சேர்ந்தால் நல்லது என அறிவுறுத்தினார். பொலீன், தெரேசின் முடிவை ஆதரித்தார். ஆனால் அவரும் சிறுமியின் ஆர்வத்தைக் கட்டுப்படுத்தினார். தன் தங்கையின் முடிவை அறிந்த செலினும் புய்ஸ்ஸொனேவில் தனிமைப் படுத்தப்பட்டு விடுவோமே! என்ற உணர்வில் வருந்தினாலும் அவளுக்குத் துணை நின்றார். செலின் ஏற்கெனவே, கார்மல் சபையில் இருப்பதாகவும், அவர் தனது பெயரை 'மூவொரு இறைவனின் மரியா' என மாற்றிக் கொண்டதாகவும் தெரேசு கனவு கண்டார்.

## **மாமாவின் மறுப்பு** (8 - 22 அக்டோபர் 1887)

தெரேசின் அனைத்துத் திட்டங்களும் ஒரு பெரும் தடையைச்

சந்தித்தன. மாமா இசிதோர் தெரேசின் விருப்பத்திற்கு மறுப்பாணையிட்டார். தன் தந்தையிடம் பேசி ஆறு மாதங்கள் கழித்த பின் அவள் மாமா இசிதோரிடம் தெரேசு பேச விரும்பினாள். அக்டோபர் திங்கள் 8ஆம் நாள் சனிக்கிழமை இசிதோரின் படிப்பகத்திற்குச் சென்றாள். மனக்கலக்கத்துடன் தன் விருப்பத்தை வெளியிட்டாள். இசிதோர் மிகுந்த கனிவிரக்கத்தோடு பேசினார். ஆனால் சமரச உடன்பாடின்றி, விவேகத்தோடு பல கருத்துக்களை வெளியிட்டார். அந்த அறிவு ஜீவியின் வாதங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய வயதைத் தெரேசு எய்தவில்லை. நகரம் முழுவதுமே இசிதோரின் முடிவைப் பற்றிப் பேசும். அவர் லிசியூ நகரில் பெரும் புகழ் பெற்றவர். தன் மருமகளின் விருப்பத்திற்கு மறுப்புத் தெரிவித்து அவரது இறையழைத்தலைத் தடைச் செய்து விட்டார் என்கிற பேச்சு நகர் முழுவதும் பரவும். அது தனக்கு அவமானத்தை வருவித்துவிடும் என அவர் உணர்ந்தார். எனவே 'தெரேசுக்கு இறை அழைத்தல் உண்டு என எனக்குத் தெரியும். எனினும் பதினேழு வயது நிரம்ப வேண்டும்" என்று கூறினார். வணங்காக் கழுத்தினர் இசிதோர் மனத்தை 'அருங்குறிதான்" மாற்ற இயலும்!

மாமா இசிதோரிடம் பேசும்படி தெரேசுக்கு அறிவுறுத்தியது சகோதரி ஆக்னெசு. மாமாவின் பிடிவாதத் தன்மையை விளக்கி அன்றைய தினமே சகோதரி ஆக்னெசுக்குக் கடிதம் எழுதினாள். மீண்டும் "வளர்ப்புத் தாய்" ஆக்னெசு - மகள் தெரேசு உறவு நெருக்கமாகியது. "உங்கள் தெரேசுவுக்காக மன்றாடுங்கள். உங்களை எவ்வளவு நேசிக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவளுடைய நம்பிக்கைக்கு உரியவர் நீங்களே" எனக் கடிதத்தில் எழுதினாள். பொலின் மீண்டும் தங்கையின் மனப்போராட்டங்களில் முன்வந்து அவளுக்கு வழிகாட்டினார். தேர்வு நிலையில் இருந்த தெரேசு மன நம்பிக்கை அடைந்தாள். இறைவன் தன்னைக் கைவிட மாட்டார் என்கிற மனவுறுதி பெற்றாள்.

அக்டோபர் 19 ஆம் நாள் முதல் 22 ஆம் நாள் வரை தெரேசு முதன் முறையாக உள்ளார்ந்த வறட்சியை அனுபவித்தாள். தன்னுள் கடவுளின் செயல்படாநிலையையும் உணர்ந்தாள். "இருள், காரிருள். . ஆன்மாவின் இருள்நிறை இரவு. தோட்டத்தில் இயேசு அனுபவித்தது போன்ற வேதனை. மண்ணகத்திலிருந்தோ, விண்ணகத்திலிருந்தோ ஆறுதல் கிடைக்கவில்லை. ஏகாந்தத்தை உணர்ந்தேன். கடவுள் என்னைக் கைநெகிழ்ந்து விட்டது போன்று தோன்றியது!" என்றாள் தெரேசு. கிறிஸ்துமஸ் இரவு முதல் புத்தொளியை அனுபவித்து வந்த தெரேசுவுக்கு இந்த இருள் திகைப்பூட்டும் அனுபவமாகத் திகழ்ந்தது. அதன் அர்த்தத்தை அவளால் புரிந்து கொள்ள



இயலவில்லை. இந்தச் சோகத்தையே சொந்தமாக்கிய நிலையில் தெரேசு 21 ஆம் நாள் வியாழன் அன்று வரவேற்பறையில் சகோதரி ஆக்னெசைச் சந்தித்தாள். பெரிதும் கலக்கமடைந்த சகோதரி ஆக்னெசு தன் மாமாவுக்குக் கடிதம் எழுதினார். அவருடன் வாதாட விரும்பவில்லை. ஆனால் தான் கண்ட காட்சியைத் தெளிவாக விவரித்தார். அவரின் அமைதியின்மையை தெரிவித்தார். "அவரின் போராட்டம் குழந்தைத்தனமான உணர்ச்சி அல்ல. மாறாக அதையெல்லாம் கடந்த ஆன்மீகப் போராட்டம்" என்பதை விளக்கினார்.

கேரென் எப்போதும் தன் ஆன்மீகக் குழந்தையாகிய ஆக்னெசுக்கு மதிப்பளித்தார். அந்த வாரம் சனிக்கிழமையே தனது கருத்துக்களை மாற்றிக் கொண்டார். தெரேசு கார்மல் சபையில் சேர அனுமதியளித்தார்.

## தொடரும் தடைகள் (23 அக்டோபர் 1887)

தேர்வு நிலையாளர் தெரேசின் மகிழ்ச்சி குறுகிய கால மகிழ்ச்சியாயிற்று. மறுநாள் ஞாயிற்றுக் கிழமை மாலை மீண்டும் ஒரு தடையைச் சந்தித்தாள். 1870 ஆம் ஆண்டு முதல் கார்மல் சபையின் தலைமைத் தந்தையாக இருந்தவர் அருட்பணியாளர் தெலாத்ரோயெத் (Delatroette). 69 வயது நிரம்பிய அவரிடம் சிறுமியின் விருப்பம் தெரிவிக்கப் பட்ட போது 21 வயதை நிறைவு செய்யும் வரை கார்மல் சபையில் அனுமதிப்பது என்கிற பேச்சுக்கே இடமில்லை எனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

தெரேசிடம் இது குறித்து அறிவிக்கப்பட்ட போது உடனடியாக அவரைச் சந்தித்து அவரது மனத்தை மாற்ற விரும்பினாள். எனவே, மறுநாள் 24 ஆம் தேதி திங்கட்கிழமை தன் தந்தையுடனும், செலினுடனும் அவரைச் சந்திக்கச் சென்றார். அந்த அருட்பணியாளர் இத்தகைய செயல்பாடு ஒன்றில் ஏற்கெனவே ஈடுபட்டு அவமானத்தை அடைந்திருந்தார். லிசியூ மக்கள் இன்னும் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். எனவே, மீண்டும் ஒரு முயற்சியில் ஈடுபட விரும்பவில்லை. தனது கருத்தில் மாற்றம் இல்லை என உறுதியாகக் கூறி விட்டார். இவரது தீர்ப்புக்குப் பின் இறுதித் தீர்ப்பு ஆயரின் கையில் இருந்தது. இவர் மட்டும் இணங்கிவிட்டால். . .!?

தெரேசு கண்ணீர் மழையில் நனைந்தாள். தந்தை அவரை ஆற்றுப் படுத்த முயன்றார். மறை மாவட்டப் பேராயரிடம் அழைத்துச் செல்வதாக உறுதி அளித்தார். "ஆயர் அனுமதிக்காவிட்டால் நான் திருத்தந்தையிடம் கேட்பேன். என் இலக்கை அடைந்துவிடத் தீர்மானித்து விட்டேன்" என்று

தெரேசு மனவலிமையுடன் கூறினாள். அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையா ? அவளுடைய தந்தை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் உரோமை நகருக்குத் திருப்பயணம் செல்ல விரும்பினார். திருத்தந்தை 13 ஆம் சிங்கராயரின் குருத்துவ ஆண்டு ஜூபிலி விழாவில் கலந்து கொள் வதற்காகக் கூன்தான்ஸ் (Coutances) மறை மாவட்டம் அத்திருப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தது.

அடுத்த வியாழக்கிழமை மீண்டும் ஒரு வரவேற்பறைச் சந்திப்பு சோகமயமாக நிகழ்ந்தது. அருட்பணியாளர் தெலாத்ரோயெத் தமது முடிவில் உறுதியாயிருந்து தம் நிலையைத் தக்க வைத்துக் கொண்டார். எனவே, வித்தியாசமான பொது இயக்கமொன்று இயக்கிவிடப்பட்டது. சகோதரி இயேசுவின் ஆக்னெசு, தலைமைச் சகோதரி மரிதேகொன்சாக், தூய வாழ்க்கை வாழ்ந்து கார்மல் இல்லத்தை உருவாக்கிய தலைமைச் சகோதரி ஜெனெவியேல் (Genevieve) மற்றும் கார்மல் இல்ல அருட்பணியாளர் யூஃப் (Youf) ஆகியோர் இணைந்து மன்றாடினர். எவரையும் சபையில் சேர்க்கும் உரிமை கார்மல் இல்ல அருட்பணியாளருக்கு இல்லாததால், "அந்தக் குழந்தை இனியவள்; அவள் சபையில் சேர வேண்டுமென்பதே என் விருப் பம்" என்று தனது கருத்தை அருட்பணியாளர் யூப் வெளியிட்டார். எனவே இத்தாலியப் பயணத்திற்கு முன்பே பேராயர் யுகோனினைச் சந்தித்துப் பேசும்படி தெரேசுவின் தந்தை மார்ட்டினிடம் அவர் ஆலோசனை வழங்கினார்.

## ஆயருடன் சில நிமிடங்கள் (31 அக்டோபர் 1887)

அக்டோபர் 31 ஆம் தேதி திங்கட்கிழமை தெரேசு தனக்கு விருப்பமான வெண்ணாடையை அணிந்து கொண்டாள். வயது முதிர்ந்தவராய்த் தோன்றும்படி கூந்தலைச் சரி செய்து முடிந்து கொண்டை போட்டுக் கொண்டாள். அவளுடைய தந்தை அவளைப் பய்யே (Bayeux) பேராயரின் இல்லத்திற்கு அழைத்து சென்றார். "என் வாழ்வில் முதன்முறையாக என் சகோதரிகள் துணையின்றி வெளியே சந்திப்புக்குச் சென்றேன். அச் சந்திப்போ ஓர் ஆயருடன்!" என்றார் தெரேசு.

அந்நாளின் நிகழ்வுகள் அனைத்தும் துல்லியமாகத் தெரேசின் நினைவில் நிலைத்தன. அடைமழை பெய்து கொண்டிருந்தது. பேராலயத் தைச் சந்திக்கச் சென்றாள். அங்கே நடைபெற்ற அடக்கச் சடங்கில் பங்கு பெற்றாள். அப்போது அவள் அணிந்திருந்த வெண்ணாடையும் தொப்பியும் ஒருவித கிளர்ச்சியை ஏற்படுத்தின. ஆயரைச் சந்திப்பதற்காகக் காத்திருந்



தனர். உணவு விடுதியில் அருஞ்சுவை உணவு உண்டனர். குருகுல முதல்வர் ரெவரோனி (Reverony) அனைவரையும் வரவேற்றார். இறுதியாக நீண்ட நடை பாதையைக் கடந்து சென்று ஆயரைச் சந்தித்தனர்.

மிகப்பெரிய நாற்காலியொன்றில் ஆயருக்கு எதிர்ப்புறத்தில் அமர்ந்தாள். வெட்கம் பொங்க அழுகுரலுடன் அச்சந்திப்பின் நோக்கத்தை வெளிப் படுத்தினாள். மிகுந்த கருணையுடன் எவ்விதக் குறுக்கீடுமின்றி ஆயர் அவர்கள் தெரேசுக்குச் செவி சாய்த்தார். இறுதியில் அருட்பணியாளர் தெலத்ரோயெத் அடிகளாரைச் சந்தித்து பேசுவதாக வாக்களித்தார். சிறுமியின் கண்கள் குளமாயின. சந்திப்பு நிறைவுற்றது. ஆயர் அவர்கள் மார்ட்டினை மீண்டும் தோட்டத்தில் சந்தித்துத் தன் பிள்ளையை இறைப் பணிக்காகக் கார்மல் இல்லத்திற்கு அனுப்புவதில் அவருக்கிருந்த ஆர்வத்தைக் கண்டு வியந்து பாராட்டினார். "இத்தாலித் திருப்பயணத்தின் போது எனது பதிலைக் கூறுவேன்" என வாக்குறுதி தந்தார். வயது முதிர்ந்தவராகத் தோன்றுவதற்காகத் தெரேசு மேற்கொண்ட கொண்டை அலங்காரச் செயல் ஆயர் அவர்களைப் பேருவகையடையச் செய்தது. திருத்தந்தை சந்திப்பு பற்றிய விவரங்களை மார்ட்டின் அறிந்து கொண்டு இதைக் குறித்துத் தான் திருத்தந்தையிடம் பேச முடியுமா? என்பதைக் கேட்டு அறிந்துக் கொண்டார்.

நல்ல காரியத்திற்கு நானூறு இடையூறுகளா? சந்திப்பு முடிந்து வெளியே வந்ததும் தெரேசு குமுறி அழுதாள். "என் எதிர்காலம் நிலையாகப் பாழாகி விட்டது. விடியல் காணா இருளாகி விட்டது போல் தோன்றியது. இலக்கை நான் நெருங்க நெருங்க, இடையூறுகளும் என்னை நெருக்கிக் கொண்டிருந்தன. என் ஆன்மா துயரத்தில் அமிழ்ந்தது. ஆனால் அமைதியில் திளைத்தது. காரணம் நான் இறை விருப்பத்தையே தேடிக் கொண்டி ருந்தேன்" எனப் புலம்பினாள்.

மறுநாள் மீண்டும் துயர் நிறைந்த வரவேற்பறைச் சந்திப்பு நிகழ்ந்தது. ஒரேயொரு நம்பிக்கை மட்டும் எஞ்சியது! 'திருத்தந்தை 13 ஆம் சிங்கராயரைச் சந்திப்பது! இதைப்பற்றிச் சகோதரி ஆக்னெசிடம் பேசினாள். அவர் இத்தகைய சந்திப்பு முயற்சியில் இறங்க வேண்டாம் என ஆலோசனை கூறினார். தெரேசு மிக்க கவலையுடன் கார்மல் வரவேற்பறையை விட்டு வெளியேறினாள். செலினுடன் 'அந்த நிகழ்வுக்கு'த் தக்க தயாரிப்புகளில் ஈடுபட்டாள். இன்னும் இரண்டே நாள்கள் எஞ்சியிருந்தன. இத்தாலித் திருப் பயணமே அந்த நிகழ்வு.

**பயணம் . . . பணயம் காணும் பயணம்** (4 நவம்பர் முதல் 2 டிசம்பர் 1887 வரை)

கூன்தான்ஸ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. ஜெர்மென் (Germain) அவர்கள் தலைமையில் 197 பிரெஞ்சு திருப்பயணிகளைக் கொண்ட குழு திருத்தந்தை 13 -ஆம் சிங்கராயரின் குருத்துவ ஆண்டு ஜுபிலி விழாவில் கலந்து கொண்டு அவரை வாழ்த்தப் பயணம் மேற்கொண்டது. அக்குழுவில் 75 அருட்பணியாளர்களும் இருந்தனர். அப்போது இத்தாலியை பிரான்கோ க்ரிஸ்பி (Frances Chrispi) என்பவர் ஆண்டு வந்தார். அவர் ஒரு மறுநெறித் திருச்சபையாளர். அவரது நடவடிக்கைகள் கத்தோலிக்க கிறிஸ்தவர்களை அச்சுறுத்தி வந்தன. இச்சூழலில் அவர்கள் மேற்கொண்ட திருப்பயணம் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்பட்டது. இத்தாலி மற்றும் பிரெஞ்சு பத்திரிக்கைகள் இத்திருப்பயணத்தைத் தலையங்கச் செய்திகளாக வெளியிட்டன. திருத்தந்தையின் அதிகாரத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம் என்ற கத்தோலிக்கர்களின் எண்ணத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வெளிப்பாடாக இப்பயணம் அமைந்தது.

பிரெஞ்சு கத்தோலிக்கர்களில் பெரும்பான்மையோர் அரசின் ஆதரவாளர்களாகவும் இருந்தனர். கைத்திறனில் அல்ல, மாறாக மெய்யியல் அறிவில் வல்லவர்களாகத் திகழ்ந்து, உலகெங்கும் பரவியிருந்த ஃபிரிமேசன்றி (Free Masonary) என்ற ரகசிய அமைப்பு முறையை எதிர்ப்பவர்களாகவும் இருந்தனர். ஆனால் தெரேசின் இலக்கு, குறிக்கோள் தன் அழைத்தலுக்காகப் போராடுவது ஒன்றே; அதற்காகத் திருத்தந்தையுடன் பேசுவது என்பதே அது! அரசியல் பிரச்சனைகள் சமயப் பிரச்சனைகளோடு கலந்து இருப்பதை, திருப்பயணத்தின் போது நடந்த உரையாடல்களைக் கொண்டு தெரேசு அறிந்து கொண்டாள். உரோமையில் புகைவண்டி நிலையத்திற்கு வெளியே கிளர்ச்சியாளர்களைக் காவலர்கள் கைது செய்தனர். அவர்கள் திருத்தந்தைக்கு எதிராகப் போராட்டக்குரல்கள் எழுப்பினர். 13 ஆம் சிங்காரயர் ஒழிக. . . முடியாட்சி ஒழிக! என்று பலத்த குரல் எழுப்பினர்.

தெரேசு புதிய குமரிப் பெண். எனவே இப்பயணம் அவருக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனால் லிசியுவின் நாக்குகள் பலவாறு பேசின. மார்ட்டின் குடும்பத்தைப் பற்றி வதந்திகள் கிளம்பின. தன் கடைசி மகளின் கார்மல் செல்லும் எண்ணத்தை மறக்கடிப்பதற்காகவே மார்ட்டின் தெரேசைத் திருப்பயணத்திற்கு அழைத்து சென்றுள்ளார் என்ற புரளி நகர் முழுவதும் பரவியது.



**விந்தை நிறை பாரீஸ்** (4 -7 நவம்பர் 1887)

திருப்பயணிகளின் முதல் இணைவுச் சந்திப்பு மோன் மார்த்தர் (Mont Marter) பேராலய நிலவறையில் நவம்பர் திங்கள் 6 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை ஒன்பது மணிக்கு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் மார்ட்டின் தம் இளம் பிள்ளைகளுடன் நான்காம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை மூன்று மணிக்குப் பாரீஸ் நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்.

பாரீஸ் நகரின் விந்தைகளைக் கண்டு ரசிக்க இரண்டு நாள்கள் மிகக் குறைவே. பிரான்ஸ் நாட்டின் குடியரசுத் தலைவர் மாளிகை அமைந்துள்ள 'எலிசே வளாகம்' என்றழைக்கப்படும் 'ஷாம்ப் எலிஸ்சே' (Champs - Elysees), அங்கே நடைபெற்ற பஞ்ச் மற்றும் ஜீடி பொம்மலாட்டம், 'தூய லெரி' (Tuilerries) பூந்தோட்டம், 'வெற்றி வளைவு' எனப்படும் திரியோம்ஃப் (Triomphe) வளைவு, 14 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு, பிரெஞ்சுப் புரட்சியின் போது 1789 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14 ஆம் நாள் அழிக்கப்பட்ட சிறைக்கூடம், அரசு மாளிகை, லூவர் (Loure) என்ற பிரான்சு நாட்டின் தேசிய அருங்காட்சியகம், கடைகள் அவற்றிலிருந்த இளவேனிற் பருவ ஆடையணிகள், இயங்கு மின் ஏணிகள் எனப் பல்வேறு காட்சிகளைக் கண்டு சிறுமிகள் களைத்துப் போயினர். குதிரை இழுவண்டிகளும், மின்விசை உந்து வண்டிகளும் அவர்களுக்கு அச்சமளித்தன. சென்ற இடமெல்லாம் அவர்கள் நசுங்கிப் போவோமோ? என அஞ்சியதுண்டு.

தெரேசு அங்கே கண்ட 'அனைத்துக் அழகிய காட்சிகளும்' அவளுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. எனினும் அவள் மனத்தில் தாய்நாட்டின் தலைநகர் நீங்கா இடம் பெற்றுவிட்டது. காரணம் இன்றியமையாத அருளைப் பெற்ற இடம் அல்லவா அது? மார்ட்டின் 'வெற்றி அன்னை" ஆலயத்திற்கு அருகிருந்த பூளுவா (Bouloi) என்ற விடுதியில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அன்னையின் ஆலயம் புனித இடமாகக் கருதப்பட்டு அனைவருக்கும் 1883 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாள் முதல் மிக முக்கியமான இடமாகக் கருதப்பட்டது. காரணம் அன்று தான் வெற்றியன்னை தெரேசுக்குக் காட்சியளித்தார். அவளது கடினமான நோயைக் குணப்படுத்தினார். நவம்பர் 4 ஆம் நாளன்று அவ்வாலயத்தில் நடைபெற்ற திருப்பலியின் போது வெற்றி அன்னையின் புன்னகை பற்றிக் கொண்டிருந்த ஐயங்களின்று விடுபட்டாள். நான்கு ஆண்டுகள் இத்தகைய ஐயப்பாடுகளால் வாட்டி வதைக்கப்பட்டாள். அங்கு அன்னையின் பாதம் பற்றி மன்றாடியபோது இழந்த மகிழ்ச்சியை நிறைவோடு பெற்றாள். "அம்மகிழ்ச்சி . . . . அன்னையின் மகிழ்ச்சி; என்னைப் பார்த்துப் புன்ன

கைத்துக் குணப்படுத்திய அன்னையின் . . . அதே அன்னையின் மகிழ்ச்சி" எனத் தெரேசு வியந்து கூறினாள். அன்னை மரியா, தெரேசின் உண்மை அன்னையாகத் திகழ்ந்தார். விரைவில் கார்மல் இல்லம் செல்ல அருள் தருமாறு இறைஞ்சினாள். தன் தூய்மைப் பண்பைப் பற்றி அன்னையிடம் நம்பிக்கையோடு தெளிவாக்கினாள். ஏனெனில் அப்பயணம் தனது அழைத்தலுக்கு எதிராகச் சில சோதனைகளை உருவாக்கலாம் என எதிர்பார்த்தாள். அவள் எண்ணியதும் சரியே!

மறுநாள் திருப்பயணிகள் மோன்மோர்த்தீர் ஆலயத்தில் கூடி முதல் குழுத் திருப்பலியை நிறைவேற்றினர். அதன் பின்னர் சிறு குழுக்களாகப் பிரிந்தனர். 15 வயதான தெரேசுவும் 18 வயதான செலினும் தங்கள் மெல்லாடைகளுடன் அழகாகவும், மகிழ்ச்சியோடும் காட்சியளித்தனர். குழுவில் அவர்களைக் கவனியாத ஆட்களே இல்லை எனலாம். திருப்பயணிகள் அனைவரிலும் அவர்களே இளையவர்கள்.

செல்வச் செழிப்புள்ளவர்களும், பொருளாதாரத்தில் மேல் நிலையில் உள்ளவர்களும் செல்வதற்கான முறையில் பயணக் கட்டணம் பெறப் பட்டது. எனவே, பயணிகளில் பலர் செல்வச் சீமான்கள்! பயணத் தொடக்கத்தில் சற்று வெட்கப்பட்டு ஒதுங்கியே இருந்த தெரேசு, பின்னர் குழுவினருடன் தன்னை எளிதாக இணைத்துக் கொண்ட பாங்கு அவளுக்கே வியப்பளித்தது.

அத்திருபயணத்தை லூபின் எனும் நிறுவனம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது. இரவில் புகைவண்டிப் பயணம் தவிர்க்கப்பட்டது. சிறப்பு விடுதிகளில் திருப்பயணிகள் தங்கினர். புய்ஸ்ஸொனேவின் எளிய வாழ்க்கை நிலைக்குப் பழக்கப்பட்டிருந்த மார்ட்டினுடைய பிள்ளைகள் இத்தகைய ஆடம்பர சொகுசு நிலை கண்டு ஆச்சரியப்பட்டு நின்றனர்.

## இத்தாலிப் பயணம் (8 - 28 நவம்பர் 1887)

நவம்பர் திங்கள் 7ஆம் நாள் திங்கட்கிழமை காலை 6.35 மணிக்குச் சிறப்புப் புகைவண்டி மழையில் நனைந்தபடி கிழக்குப் புகைவண்டி நிலையத்தை விட்டுப் புறப்பட்டது. மறுநாள் பயணிகள் ஸ்விஸ் ஆல்ப்ஸ் மலைத் தொடர்களைக் கண்டனர். பனியடர்ந்த மலைச்சிகரங்கள்! ஏரிகள்! நீர் அருவிகள்! நீர் வீழ்ச்சிகள்! பாறை இடுக்குகள்! அவற்றை கடக்க உதவும் பாலங்கள் போன்றவற்றைக் கண்டு வியந்தனர். தெரேசு வண்டியின் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்கு ஓடிக் கொண்டிருந்தாள். எதிர்காலக்



கார்மல் சபைத் துறவினி தெரேசு, இயற்கையின் எழில் அழகைக் காண மறுத்துக் கண்களை மூடிக் கொள்ளவில்லை. மாறாக ரசித்தாள்; நிறைவாக ரசித்து இறைவனைப் புகழ்ந்தாள்.

அனைத்து இடங்களையும் கண்டு ரசித்த பிறகு இறுதியாக இத்தாலியை அடைந்தனர். அன்று மாலை வேளையிலேயே அனைவரும் மிலான் நகருக்குச் சென்றனர். அந்நகர் முழுவதுமே ஒளி வெள்ளத்தில் மிதந்தது. மாலை 7 மணிக்கு அங்குள்ள பேராலயத்தில் அமைந்துள்ள தூய சார்லஸின் கல்லறையில் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர். அந்த ஆலயத்தில் 6,000 திருவுருவச் சிலைகள் இருந்தன. தெரேசுவும் செலினும் 484 படிகள் ஏறி அந்த ஆலயத்தின் குவிந்த கூரையை அடைந்தனர். நவம்பர் 10 ஆம் நாள் வியாழன் கதிரவன் ஒளி வீசினான். தெரேசு, செலின், மார்ட்டின் மூவரும் 'பெருமூச்சுகளின் பாலத்தை'க் கடந்தனர். ஆனால் தெரேசுவுக்கு வெனிஸ் நகர் அதிக சோகம் நிறைந்ததாகத் தென்பட்டது. பொலோஞ்ஞா (Bologna)வுக்குச் செல்வதற்கு முன்பு பதுவா நகர் சென்று அங்குச் சிறிது நேரம் செலவிட்டனர்.

இளநங்கை தெரேசு அந்நகரை மறக்கவில்லை. அவரது சிறப்பு புகைவண்டி அந்நகரை அடைந்தபோது இத்தாலிய இளம் மாணவர் கூட்டமொன்றைக் கண்டாள். பெண்கள் புகைவண்டியிலிருந்து கீழே இறங்கியதும், அவர்கள் எழுப்பிய சீழ்க்கை ஒலியும், கூவல் சப்தமும் வானைப் பிளந்தன. இவ்விரு அழகிய இளம் பெண்களையும் குறிப்பாக வட்டமிட்டுக் கவனித்தனர். அந்நிகழ்வைப் பற்றிச் செலின் இவ்வாறு நினைவு கூறுகிறார்: "எங்களது பயணத்திற்கு வாகனம் ஒன்றை ஏற்பாடு செய்யத் தந்தை சென்றிருந்தார். தெரேசுவும் நானும் நிலையத்தில் நின்று கொண்டிருந்தோம். தெரேசு மிக அழகாகத் தென்பட்டதால் காண்போரின் கண்கள் அவள் மீது கவிந்தன. பெரும்பாலான வழிப்போக்கர்கள் அவளைப் பார்த்து அவளது அழகைப் பாராட்டிக் கொண்டே சென்றனர். திடீரென ஒரு மாணவன் அவளிடம் விரைந்து வந்து, அவளைத் தன் கைகளில் ஏந்திப் புகழ்ந்து பேசினான். அவளை எங்கேயோ கொண்டு சென்று விட்டான்" ஆனால் தெரேசு கூறுகிறாள்: "நான் அவனைப் பார்த்த பார்வையில் அவன் பயந்து நாணமடைந்து என்னைக் கீழே விட்டு விட்டு ஓடியே விட்டான்".

தெரேசு இதுவரை குமரிப்பருவத்து இளைஞர்களுடனோ, ஆண்களுடனோ நெருங்கிப்பழகியதில்லை. பயணத்தின் போது குறிப்பாக இத்தாலியில் பயணிகளின் உள்ளங்களில் பலவித தாக்கங்களை ஏற் படுத்தினாள்; எனினும் பயணத்தின் போதே "தெரேசின் திருமணத்திற்கான

இரகசியத் திட்டங்கள் பல தீட்டப்பட்டன. அவளும் அதனை அறிந்து கொண்டு விட்டாள்" என்று செலின் குறிப்பிட்டார்.

லோரேட்டோவில் திருப்பயணத்தை முடித்து விட்டு 13 ஆம் நாள் ஞாயிறு மாலையில் இறுதியாகத் தங்கள் இலக்காகிய உரோமை நகரை அடைந்தனர். மார்ட்டின் குடும்பத்தினருக்கு த்யு சுத் (Hotel Du Sud) விடுதியில் 10 நாள்கள் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது. உடன டியாகத் திருத்தலங்கள் சந்திப்பு தொடங்கியது. 'கொலோசியம்' திடலுக்கு முதலில் சென்றனர். அதன் உள்ளே நுழைய இயலாதபடி அமைக்கப் பட்டிருந்த வேலிகளையும் தாண்டிச் செலின் மற்றும் தெரேசு இருவரும் சென்றனர். தந்தை திரும்பும்படி அழைப்புகள் பல விடுத்தும் அதனைப் பொருட்படுத்தாது உள்ளே சென்று அம்மண்ணை முத்தமிட எத்தனித்தாள் தெரேசு. மறை சாட்சிகள் மறைக்காகக் குருதி சிந்திய இடமல்லவா அது! செலின் வலுக்கட்டாயமாக அவளை வெளியே அழைத்து வந்தார். வெளியே வந்ததும் முழந்தாற்படியிட்டு 'இயேசுவுக்காக மறைத்தியாகியாகும் அருள்' தரும்படி மன்றாடினாள். " என் மன்றாட்டு கேட்கப்பட்டதாக ஆன்மாவின் ஆழத்தில் உணர்ந்தேன்." என்று தெரேசு குறிப்பிட்டாள்.

அனைத்தையும் கண்டு ரசிக்க நாள்கள் குறைவாகவே இருந்தன. உரோமையில் நாட்டுப்புறங்கள் அவளது மனத்தில் தாக்கத்தை உண்டாக் கின. குறிப்பாக நிலத்தடிக் கல்லறைகள், தூய செசிலியா ஆலயம் (இந்த இளம் தூயவர் அன்று முதல் தெரேசு நண்பரானார்), தூய ஆக்னெசு ஆலயம் போன்றவற்றைக் கண்டு மகிழ்ந்தனர்.

"நான் உண்மையிலேயே மிகுந்த துணிவோடிருந்தேன்" என்கிறாள் தெரேசு. அருட்பணியாளர் ரெவரோணி அவர்கள், தன் செயல்களைப் பார்த்துக் கொண்டும், தன் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டும் வருகிறார் என்றும், இவர் தான் ஆயரிடம் தன்னைப் பற்றிய கருத்து தெரிவிக்க வேண்டும் என்பதையும் தெரேசு அறிந்திருந்தாள். எனினும் இந்தத் தேர்வு நிலையாளர் தெரேசு அஞ்சித் தன் இயல்பு வாழ்க்கையிலிருந்து பின்வாங்கவில்லை. அனைத்தையும் கண்டு ரசிக்க விரும்பினாள். தொட்டுப் பார்க்க முனைந்தாள். தூய நினைவுப் பொருட்களைச் சேகரிக்க விரும்பினாள். தெரேசு சென்று பார்வையிடாத வளை கூரைகள் இல்லை! ஏறி இறங்காத கோபுரங்கள் இல்லை. . .! உள்ளே நுழைந்து பார்க்காத சுரங்கங்கள் இல்லை!

வெற்றி அன்னை (Santa Maria Della Vittoria) கார்மல் துறவறத்திற்குச்



சென்று அங்குள்ள அடைப்புப் பகுதியிலும் தெரேசு நுழைந்து விட்டாள். வயது முதிர்ந்த துறவி ஒருவர் தெரேசுவுக்கு வெளியே செல்லும் வழியைக் காண்பித்து அவரை வெளியே அனுப்ப முயற்சி செய்தார். ஆனால் பலன் இல்லை. "இத்தாலியில் பெண்கள் எளிதாக ஏன் ஒதுக்கப்படுகிறார்கள்? என்பதை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. ஒவ்வொரு நேரமும் யாராவது ஒருவர் எங்களிடம் சொல்வது இதுதான். இங்கே செல்லாதீர்கள்! அங்கே செல்லாதீர்கள்! சமூகத்திலிருந்து அந்நியப்படுத்தப்படுவீர்கள்! அந்தோ பரிதாபம். . . பெண்களைப் பற்றிய தவறான புரிதல்களை என்னவென்பது! எனத் தெரேசு அங்கலாய்த்தாள்.

தெரேசு மற்றும் செலினின் இளமைத் துடிப்பு மிக்க செயல்கள் அங்கிருந்த சில அருட்பணியாளர்களுக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை. காரணம் மாலை வேளைகளில் விடுதியின் அறையில் தரையில் அமர்ந்து அந்நாளின் நிகழ்வுகளைப் பற்றி இருவரும் இரவு நெடுநேரம் வரை உரையாடிக் கொண்டிருந்தனர். அருட்பணியாளர் வோக்லேன் (Vauquelin) இடைச் சுவரைத் தட்டி, வாயாடிகளின் வாயை அடக்கச் சொல்லுவார்.

## அருட்பணியாளர்களின் நிலைப்பாடு

எதிர்காலக் கார்மல் துறவி தெரேசு பயணத்தின் போது ஒரு முக்கிய மான எதார்த்தத்தைக் கண்டுபிடித்தாள். அருட்பணியாளர்கள் வான தூதர்களோ அல்லது தெய்வப் பிறவிகளோ அல்ல. வெறும் சாதாரண மனிதர்களே! இந்நேரம் வரை அவர்களைத் தங்களது குருத்துவ பணிகளை நிறைவேற்றும் போதே சந்தித்திருந்தாள். புய்ஸ்ஸொனேவில் வழக்கமாக அருட்பணியாளர்களை விருந்துக்கு அழைப்பது கிடையாது.

தற்போது ஒரு மாத காலமாக 75 அருட்பணியாளர்களோடு புகைவண்டியிலும், விடுதிகளிலும், உணவு மேசையிலும் பேசிப் பழக வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவர்களது உரையாடல்களுக்குச் செவி கொடுத்தாள். உணவுக்குப் பின்பு அவர்கள் பேசிய வார்த்தைகள் ஒழுக்கம் நிறைந்தவைகளாக அமையவில்லை. அவர்களது குறைகளைத் தெரேசு நேரடியாகவும் கண்கூடாகவும் கண்டுவிட்டாள். அனைத்துத் திருத்தலங் களிலும் இத்தாலிய அருட்பணியாளர்களை அவள் சந்தித்தாள். சிறிய ஊர் ஒன்றின் பங்குப் பணியாளராக இருந்த துறவி லெகோன்ந்த் (Leconte) என்பவர் செலினுடனும், தெரேசுடனும் அடிக்கடி பேசி மகிழ்ந்தார். 29 வயது நிரம்பிய இளைஞர் அவர். செலினுடன் இனிமையாகப் பேசிப் பழகியதைப் பலரும் தவறாக எண்ணினர். வதந்திகளைப் பரப்பினர். திருப்பயணங்களின்

போது அவை தொடர்ந்தன.

இத்தகைய அனுபவங்கள் வாயிலாக அரிய பல படிப்பினைகளைத் தெரேசு பெற்றுக் கொண்டாள். 'இத்தாலியில் என் அழைத்தலை உணர்ந்து புரிந்து கொண்டேன்' என்றாள். பிரான்ஸினி போன்ற குற்றம் புரிவோருக் காக மன்றாடுவதும் தனது உயிரை கொடுப்பதும் தன் கடமை என உணர்ந்து கொண்டாள். ஆனால் கார்மல் துறவிகள் குறிப்பாக அருட்பணியாளர் களுக்காக மன்றாடுவது தெரேசுவுக்கு வியப்பை அளித்தது. அருட் பணியாளர்களின் ஆன்மாக்கள் "பளிங்கு போல் தூய்மையானவை" என்று தவறாகக் கருதியிருந்தாள். பின்னர் ஏன் கார்மல் துறவிகள் அவர்களுக்காக மன்றாட வேண்டும்? என்பதே அவளது கேள்வியாக இருந்தது. ஆனால் அருட்பணியாளர்கள் பலருடன் ஒரு மாத காலத்தைக் கழித்த போது தான் புரிந்தது! அவர்களும் 'வலிமை குறைந்தவர்கள் தாம்! பலவீனர்கள் தாம்! ஆற்றல் குறைந்தவர்கள் தாம்!' எனவே தூய்மை நிறைந்த அருட்பணியாளர் கள் என்று கருதப்படுவோருக்கே மன்றாட்டு அவசியமானதாக இருக்கிறது. இவர்களுடைய நிலையே இவ்வாறிருக்க அரைவேக்காடு ஆன்மீக வாழ்வு வாழ்வோரது நிலையைப் பற்றி எப்படிச் சொல்வது?' என்று மனத்திலே நினைத்தாள். இத்தகைய பலனுள்ள வாழ்க்கை அனுபவம் தெரேசுக்கு மிக எளிதாகவே கிடைத்தது.

## 100 சதவீதம் தோல்வி ஞாயிறு (20 நவம்பர் 1887)

பயணத்தின் இலக்கைத் தெரேசு மறந்துவிடவில்லை. ஆவலுடன் எதிர் நோக்கிக் காத்திருந்த திருத்தந்தையின் சந்திப்பு நாள் 20 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என அறிவிக்கப்பட்டது. "அந்நாள் ஆவலோடு பெரிதும் ஏங்கிக் கிடந்த நாள்! அச்சம் கொண்ட நாளும் அதுவே! காரணம் எனது அழைத்தல் அந்த நாளில் திருத்தந்தையிடமிருந்து கிடைக்கப் போகும் பதிலைப் பொறுத்தே அமைந்திருந்தது" எனத் தெரேசு குறிப்பிட்டாள். பேராயர் யுகோனின் இதுவரை எந்தப் பதிலையும் அனுப்பவில்லை.

லிசியூவுக்கும் திருப்பயணிகளுக்குமிடையே மனம் திறந்த கடிதத் தொடர்பு இருந்தது. தெரேசு திருத்தந்தையுடன் பேசத் தீர்மானித்திருப்பதைக் கேரென் குடும்பத்தினரும், கார்மல் சகோதரிகளும் அறிந்திருந்தனர். ஆக்னெசு தமது மனத்தை மீண்டும் மாற்றிக் கொண்டார். 'திருத்தந்தையிடம் பேச வேண்டாம்!" என முதலில் கூறியிருந்த அவர், நவம்பர் 10 ஆம் நாள் தெரேசுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் எவ்வாறு திருத்தந்தையிடம் பேசுவது என்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். லிசியூவில் அவர்கள்





*திருத்தந்தை 13 ஆம் சிங்கராயரிடம் 14 வயதில் கார்மல் இல்லத்தில் சேர அனுமதி கேட்கும் தெரேசு*

'மண்டியிடும் பலகை உடைந்து போகுமளவிற்கு" மன்றாடுவதாக மரியா கேரென் தெரேசுக்குக் கடிதம் எழுதினார்.

நவம்பர் திங்கள் 12 ஆம் நாள் சனிக்கிழமை தெரேசு அவர்களுக்குப் பதில் எழுதினார். "நாளை ஞாயிற்றுக் கிழமை திருத்தந்தையிடம் நான் பேசுவேன்."

நவம்பர் திங்கள் 20 ஆம் நாளும் புலர்ந்தது. பலத்த மழை உரோமை நகரைக் குளிப்பாட்டியது. அது ஓர் தீய அடையாளம். அபசகுனம். . தெரேசு தனது வாழ்க்கையில் நிகழ்ந்த அனைத்துச் சிறப்பு நிகழ்வுகளிலும் இயற்கைச் சூழல் தனது ஆன்மாவின் நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக உணர்ந்தாள். அவரது சோகத்தில் மேகமும் சொந்தமும் கொண்டாடி அழுதது. இன்ப நாள்களில் ஆதவன் ஒளி உமிழ்ந்து மகிழ்ந்தான்.

காலை 7.30 மணிக்கெல்லாம் நாண்ட் (Nantes) மறை மாவட்டத் திருப்பயணிகளும் மற்றும் அனைத்துத் திருப்பயணிகளும் திருத்தந்தையின் சிற்றாலயத்தை நிரப்பினர். திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் ஆலயத்தினுள் நுழைந்தார். கருமையான, வெளிறிய, ஒடுங்கிய முகத்தோடு எழுபத்தேழு வயது நிரம்பியவராய்த் திருத்தந்தை தோன்றினார். அங்கே குழுமியிருந்த அனைவரையும் ஆசீர்வதித்தார். நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கும் போது அவர் செய்த உருக்கமான செயல்கள் அனைத்தும் மக்களை மிகவும் கவர்ந்தன. பின்னர் திருப்பயணிகள் ஒருவர் ஒருவராகப் பார்வையாளர் அறையினுள் நுழைந்தனர். ஒவ்வொரு ஆயரும் தங்களது மறை மாவட்டப் பயணிகளைத் திருத்தந்தைக்கு அறிமுகப்படுத்தினர். கூன்தான்ஸ் மறை மாவட்ட இறை மக்கள் திருத்தந்தையிடம் சென்ற போது அவர்களது பேராயர் யுகோனின் அங்கு இல்லாததால் அருட்பணியாளர் ரெவரோணி அம்மக்களைத் திருத்தந்தைக்கு அறிமுகப்படுத்தினார். அவர் 8,000 நாள்கள் உழைத்து உருவாக்கிய வெண்ணிற நூற்பின்னலால் அழகு செய்யப்பட்ட தளர் மேலாடையைத் திருத்தந்தைக்கு அன்பின் சின்னமாக வழங்கினார். பின்னர் பய்யே (Bayeux) மறை மாவட்ட மக்கள் பவனியாக வந்தனர். பெண்கள், அருட் பணியாளர்கள், என வரிசையாக வந்தனர். முதலில் திருத்தந்தை 13 ஆம் சிங்காரயர் ஒவ்வொருவரிடமும் ஒரு சில வார்த்தைகள் பேசினார். ஆனால் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. திருத்தந்தையும் களைப்புற்றிருந்தார். எனவே, குருகுல முதல்வர் பயணிகளைத் திருத்தந்தையிடம் பேச வேண்டாம் எனத் தடுத்தார். இத்தடை குறிப்பாகப் பெண்கள் மத்தியில் பெரும் சலசலப்பை உருவாக்கியது. செலின், வரிசையில் கடைசியாக நின்றார். தெரேசு அவருக்கு முன்பாக நின்றாள். தெரேசு, திருத்தந்தையை அணுகிய போது பேசும் மன உறுதியை இழந்தது போல் உணர்ந்தாள். 'பேசு' எனத் துணிச்சல்காரி செலின் மெதுவாகக் கூறினார்.



அங்குச் சென்ற ஒவ்வொருவரையும் போலத் தெரேசு மார்ட்டின் திருத்தந்தை முன் மண்டியிட்டு, திருத்தந்தையின் கரங்களை முத்தமிடுவ தற்குப் பதிலாக அவரது காலணிகளை முத்தமிட்டாள். கண்ணீர் வடித்துக் கொண்டே அவரிடம் பேசினாள்: 'மிகவும் அன்பிற்குரிய திருத்தந்தையே! உங்களிடம் நான் சிறந்த ஒரு வரம் கேட்க வேண்டும்". திருத்தந்தையின் கண்ணுள்ளிருந்த கருவிழிகள் தெரேசைத் துல்லியமாக உற்று நோக்கின. தெரேசு மீண்டும் தனது கோரிக்கையை எடுத்துரைத்தாள். திருத்தந்தை அருட்பணியாளர் ரெவரோனியை நோக்கி, "இந்த குழந்தை கூறுவது எனக்குச் சரியாகப் புரியவில்லை" என்றார். குருகுல முதல்வர் ரெவரோனிக்கு இச்செயல்பாடு பிடிக்கவில்லை. எனவே, அவர்களது உரையாடலை முடிக்க விரும்பினார். 'திருத்தந்தையே! இந்தக் குழந்தை தனது பதினைந்தாவது வயதிலேயே கார்மல் சபையில் சேர விரும்புகிறாள். ஆனால் இல்லத் தலைவர்கள் தற்போது இந்தப் பிரச்சனையைப் பற்றி ஆராய்ந்து வருகிறார்கள்" என்றார். 'மிகவும் நல்லது குழந்தாய்! இல்லத்தலைவர்கள் சொல்வது போல் செய்' என்று திருத்தந்தை கூறிவிட்டார். மீண்டும் தெரேசு 'திருத்தந்தையே! நீங்கள் அனுமதி கொடுத்து விட்டால் அனைவரும் உடன்பட்டு விடுவார்கள்' என்று வலியுறுத்தினாள். "அப்படியே ஆகட்டும் குழந்தாய்! இறைவன் இதனை விரும்பினால் உறுதியாக நீ கார்மலில் நுழைவாய்" என்று கூறிமுடித்தார்.

தெரேசு தனது கரங்களைச் சேர்த்துத் திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் முழங்கால் மேல் பதித்தவாறு தனது கோரிக்கைக்குச் சாதகமான பதிலை அவரிடமிருந்து எதிர்பார்த்தாள். திருத்தந்தையின் காவலர் இருவர் இவரை எழுப்ப முயன்று தோற்றனர். எனவே, வலுக்கட்டாயமாக அவளைத் தூக்கிக் கொண்டு வாயிற்பகுதிக்குக் கொண்டு வந்தனர். பின்னர் செலின் மிகுந்த வருத்தத்துடன் திருத்தந்தை முன் மண்டியிட்டார். லிசியூவில் இருக்கும் கார்மல் இல்லத்திற்கு ஆசீர் வழங்கும்படி திருத்தந்தையிடம் வேண்டினார். அருட்பணியாளர் ரெவரோணி தன் சினத்தை அடக்கிக் கொண்டு "கார்மல் ஏற்கனவே ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது" என்று எரிச்சலுடன் கூறினார்.

ஆண்கள் குழுவிலிருந்த லூயிஸ் மார்ட்டின் இந்தக் காட்சி களையெல்லாம் காண இயலவில்லை. அவர் திருத்தந்தையை அணுகி அவர் முன் மண்டியிட்ட போது குருகுல முதல்வர், "மூன்று அருட்சகோதரிகளின் தந்தை இவர்!' என அறிமுகப்படுத்தினார். ஆனால் சற்று முன்பாக ஒரு நாடகத்தையே அரங்கேற்றிய இரு சிறுமிகளின் தந்தை எனக் கூறவில்லை. திருத்தந்தை 'குல முதுவர்' மார்ட்டினின் தலை மீது கரங்களை வைத்து ஆசீர்வதித்தார்.

தந்தை தன் சின்ன ராணி கண்ணீர் வடிப்பதைக் கண்டார். அவரை ஆற்றுப்படுத்த முயன்றார். எல்லாம் முடிந்து விட்டது. திருப்பயணம் ஒன்றும் பயன்படாது போய்விட்டது எனத் தெரேசு வருந்தினாள். ஏன் அத்தனை இடர்களையும், தடைகளையும் அவள் தாண்டி வந்தாள்? அவள் மாமா, அருட்பணியாளர் தெலாத்ரோயெத், ஆயர் இவர்களையெல்லாம் கடந்து வந்தது இறுதி நம்பிக்கையான திருத்தந்தையின் தடைவிழத்தானா? அன்று மாலையே லிசியூவுக்குக் கடிதம் ஒன்று எழுதினாள். இது ஒரு மாபெரும் தோல்வி, வெட்கப்படக்கூடிய, தங்களைத் தாழ்வுபடுத்திய நிகழ்வு எனச் செலின் இருபது ஆண்டுகள் கழித்துத் தன் கார்மல் சகோதரிகளிடம் எடுத்துரைத்தார். தெரேசு, இந்நிகழ்வுகள் பற்றித் தனது கருத்தைப் பின் வருமாறு எடுத்துரைத்தார்: 'திருத்தந்தை வயது முதிர்ந்தவர், பார்த்தால் இறந்தவர் போன்று தான் எண்ணத் தோன்றும். . . அவரால் ஒன்றுமே சொல்ல இயலவில்லை. அருட்பணியாளர் ரெவரோணி தான் பேசினார். பொலின்! நான் அனுபவித்த உணர்வுகளை என்னால் கூற இயலாது. நான் முற்றிலும் நொறுக்கப்பட்டேன். நான் கைவிடப்பட்டதாக உணர்ந்தேன். என் இதயம் துயரத்தால் நிறைந்துள்ளது. நான் இதனை எழுதும் போதே என் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. எனினும் என் வலிமைக்கு அப்பாற்பட்ட சோதனையை இறைவன் அளிக்க மாட்டார். என் துயரைத் தாங்கும் ஆற்றலை, வலிமையை எனக்குக் கொடுத்து இருக்கிறார். இச்சுமை மிகவும் கொடுமையானதே. ஆனால் பொலின்! நான் குழந்தை இயேசுவின் சிறிய பந்து. அவர் தம் விளையாட்டுப் பொருட்களை உடைக்க விரும்பினால் உடைக்கட்டும். அத்தகைய செயலைச் செய்யவும் அவருக்கு உரிமை உண்டு. ஆம் அவர் விரும்பும் அனைத்தையுமே நானும் விரும்புகிறேன். அவர் விருப்பமே எனது விருப்பமும்".

பயணம் தொடர்ந்தது. மார்ட்டின் உரோமை நகரிலேயே தங்கினார். அவரது இரு பெண் மக்களும் பொம்பேயி மற்றும் நேப்பிள்ஸ் நகரங்களைக் கண்டுகளித்தனர். திருப்பயணக் குழுவிற்குத் தெரேசின் இரகசியம் தெரியவந்தது. 'பாருலகம்' எனப் பொருள்படும் லூனிவேர் (L'univers) என்ற நாளிதழ் திருத்தந்தையின் பார்வையாளர் அரங்கில் தெரேசுவுடன் நடந்த நிகழ்வை வெளியிட்டது. ஆனால் 23ஆம் நாள் புதன் கிழமைக்குப் பிறகு நம்பிக்கைக் கதிரொன்று தோன்றியது. உரோமையில் தங்கியிருந்த மார்ட்டின் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அங்கிருந்த கிறிஸ்தவ சகோதரர் பள்ளியில் தலைவராய் இருந்த சகோதரர் சிபியோனைப் பார்க்கச் சென்றார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக மார்ட்டின் பங்கு பெற்ற



ஐரோப்பிய பயணத்தின்போது இந்தச் சகோதரரையும் சந்தித்திருந்தார். அவரிடம் ஞாயிற்றுக் கிழமை நடந்த நிகழ்வைப் பற்றி எடுத்துரைத்தார். 73 வயது நிரம்பிய சகோதரர் தெரேசினுடைய அழைப்பைப் பற்றி வியப்படைந்தார். அப்போது ஆச்சரியம் ஒன்று நடந்தது. அருட்பணியாளர் ரெவரோணியும் அங்கு வந்தார். மார்ட்டினுடன் மிகவும் நட்புறவோடு உரையாடினார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மார்ட்டின் தன் மகளுக்காகப் பரிந்து பேசினார்.

நவம்பர் திங்கள் 24ஆம் நாள் காலை உரோமைக்குப் பிரியாவிடை சொல்லும் நேரம். அசிசியில், தெரேசு தன் இடைக்கச்சையின் வார்ப் பூட்டைத் தொலைத்து விட்டாள். அதை அவள் தேடிக் கொண்டிருந்ததால் குழுவோடு இணையக் காலம் தாழ்ந்தது. அருட்பணியாளர் ரெவரோனி யின் வாகனத்தைத் தவிர மற்ற ஊர்திகள் அனைத்தும் சென்று விட்டன. அவரும் கருணையுடன் இழந்த ஆட்டைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். தெரேசுவும் சான்றோர் முன்பு சாதாரண பெண்ணாகத் தன்னை எண்ணி நடந்து கொண்டாள்.

பீசா, ஜெனோவா நகரங்கள் வழியாக அவர்கள் திரும்பினர். நீஸ் (Nice) நகரைக் கடந்த போது குருகுல முதல்வர் இளம்பெண் தெரேசு கார்மலில் நுழைவதற்கான கோரிக்கையில் தாமும் உதவி செய்வதாக வாக்குறுதி அளித்தார். மீண்டும் நம்பிக்கை தெரேசின் மனத்தில் துளிர்த்தது.

மார்சேய் (Marseilles) என்னுமிடத்தில் உள்ள நோத்ர்ரு தோம் தெ லா கார்து (Notre - Dame - de - la garde) என்னுமிடத்தை அடைந்தனர். அங்கே இருந்த ஃபூர்வியேர் (Fourviere) பேராலயத்தில் நன்றித் திருப்பலி நிறைவேற்றினார். இறுதியாக டிசம்பர் திங்கள் 2ஆம் நாள் காலையில் பாரிஸ் நகரில் உள்ள வயன் என்னுமிடத்தில் திருப்பயணம் நிறைவுற்றது. அது ஓர் நீண்ட பயணம்! குழப்பம் நிறைந்த பயணம்! கொடிய பயணம்! வந்து சேர்ந்த உடனே விரைவாகக் கார்மல் இல்லம் சென்றனர். நீண்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு இன்னும் 23 நாள்களே இருந்தன. தெரேசின் மாபெரும் மனமாற்ற நாளின் முதல் ஆண்டு நிறைவு நினைவு நாள். உரோமை நகர் 'தோல்வி'க்குப் பிறகு எப்படி இன்னும் தான் ஓர் கார்மல் துறவியாக நம்பிக்கை கொள்ள முடியும்? இழப்பதற்கான நேரமல்ல அது!

## புரட்சிப் போராட்டம் (3 டிசம்பர் 1887 முதல் 1 ஜனவரி 1888 வரை)

கடந்த கால நிகழ்வுகளை அசை போட்டுக் கார்மல் வரவேற்பறையில் காலம் தாழ்த்துவதைத் தவிர்த்து வருங்காலத் திட்டங்களைப் பற்றிக் கலந்தாலோசித்தனர். அருட்பணியாளர் லெபெல்லேத்தியேர் 'லூனிவேர்' எனும் நாளிதழில் வெளியிடப்பட்டிருந்த செய்தியைப் படித்தார். தமது ஒப்புரவு அருட்சாதனச் சிறுமி கார்மல் சபையில் சேர விழைகிறாளா? தெரேசு தனது எதிர்காலத் திட்டம் பற்றித் தம்மிடம் கூறாமல் அமைதி காத்ததை மனத்தில் கொள்ளாமல் அவளது உறுதிப்பாட்டைப் பாராட்டினார். ஆனால் தலைமைத் தந்தைக்கு இச்சூழ்நிலை மேலும் இறுக்கத்தைக் கொடுத்தது. கார்மல் சகோதரிகளின் விவேகமான, புத்திக்கூர்மையான திட்டங்களால் தமது நிலைப்பாட்டில் மாற்றம் வந்துவிடுமோ! என்ற சந்தேகம் அவர் மனத்தில் எழுந்தது. தலைமைச் சகோதரி ஜெனவியேவ், கிறிஸ்மஸ்க்கு முன்பே தெரேசைக் கார்மலில் சேர்க்க அருட்பணியாளரிடம் அனுமதி கேட்டார். டிசம்பர் திங்கள் 8 ஆம் தேதி குழுவில் இருந்த அனைவரின் முன்னிலையில் தெளிவாகத் தமது கருத்தை வெளியிட்டார். "இன்னுமா நீங்கள் என்னிடம் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? இந்தக் கோரிக்கைகளிலிருந்து பார்த்தால் உங்கள் குழுவின் மீட்பு, இக்குழந்தையின் கார்மல் நுழைவைப் பொறுத்தே அமைந்துள்ளதோ? என்று கேட்கத் தோன்றுகிறது. காலம் தாழ்த்துவதால் ஆபத்து எதுவும் இல்லை. இருபத்தியொரு வயது ஆகும் வரை அவருடைய தந்தையோடு அவர் இருக்கட்டும். அதைப் பற்றி இனி மேல் என்னிடம் பேச வேண்டாம் என உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

மீண்டும் 10 ஆம் நாள் கார்மல் வரவேற்பறையில் அருட்பணியாளர் தெலாத்ரோயெத்துடன் நிகழ்ந்த சந்திப்பு ஒரு மகிழ்ச்சியற்ற சந்திப்பாகவே அமைந்தது. சந்திப்பின் போது தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் கண்ணீரோடு வெளியேறி விட்டார். இசிதோரும் தம்முடைய கடமைகளை ஆற்றினார். ஆனால் தலைமைத் தந்தையுடன் அவர் நடத்திய பேச்சு வார்த்தையும் தோல்வியாகவே அமைந்தது. தெரேசு பேராயர் யுகோனின் அவர்களுக்குக் கடிதம் ஒன்று எழுதினாள். இதை இசிதோர் படித்துத் திருத்தங்கள் செய்து கொடுத்தார். இந்தக் கடிதத்தின் நகல் ஒன்று அருட்பணி யாளர் ரெவரோனிக்கும் அனுப்பப்பட்டது. நீஸ் (Nice) நகரில் அவர் கொடுத்த வாக்குறுதியை அவருக்கு இக்கடிதம் மூலம் நினைவூட்டினார். இறுதி முடிவுக்கு 10 நாள்களுக்கு முன்பாகவே அனைத்துக் கடிதங்களையும் அனுப்பிவிட்டார். நம்பிக்கையில் நாள்கள் நகர்ந்தன.



தினமும் திருப்பலிக்குப் பிறகு தெரேசு உருக்கமாக வேண்டினாள். அதன்பிறகு கடிதத்திற்குப் பதில் வந்துள்ளதா எனக் காணும் பொருட்டுத் தன் தந்தையுடன் அஞ்சலகத்திற்குச் சென்றாள். ஒன்றும் பலனில்லை!

1887 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் வந்தது. நள்ளிரவு திருப்பலியில் தெரேசிடம் கண்ணீர் பெருகியது. ஆனால் சோதனைகள் தன்னிடம் நம்பிக்கையையும், இறைவிருப்பத்திற்கான சுய கையளிப்பையும் அதிகப்படுத்தியுள்ளதாக அறிந்து கொண்டாள். இறைவனுக்கு நாம் நாள் குறிக்க முடியாது. எனினும் கசப்பு மிகுந்த ஏமாற்றங்களுக்கு மத்தியிலும் முதன் முறையாக ஒரு வெண்புறாவினால் அலங்கரிக்கப்பட்ட அழகிய நீலநிறத் தொப்பியைத் தான் அணிந்திருந்ததை எண்ணி மகிழ்ந்தாள்.

இறுதியாக, சனவரி முதல் நாள் தெரேசுவின் பதினைந்தாவது பிறந்தநாளுக்கு முந்தின மாலைப் பொழுதில் அவருக்கு மகிழ்ச்சியூட்டும் செய்தியொன்று வந்தது. தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் பேராயர் யுகோனின் பதிலை வெளியிட்டிருந்தார். ஆம், நேர்முறை பதில்; டிசம்பர் 28 ஆம் நாள் கடிதம் எழுதியிருந்தார். அதில் சிறுமியின் விருப்பத்திற்கு இசைவு அளித்திருந்தார். 'அவரே அவருக்குரிய முடிவை உருவாக்கிக் கொள்ளட்டும்!" எனக்கூறிச் சிறுமியின் விவேகத்திற்கு விட்டுவிட்டார்.

தெரேசு அக்களித்து அகமகிழ்ந்தாளா? இறுதியாக நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்ததா? இல்லை. இறுதித் தடை ஒன்று கார்மல் இல்லத்திலிருந்தே எழுந்தது. ஏப்ரல் திங்களின் தவக்காலக் கடின நோன்பு நாள்களுக்கு பிறகே இளம் தேர்வு நிலையாளர் தெரேசை உள்ளே அனுமதிக்க முடியும் என்ற கருத்து மேலோங்கி நின்றது. "அது ஓர் நீண்ட நாள்கள் காத்திருப்பு! அதை உள்ளத்திலே நான் நினைக்கையிலே என் கண்ணீரை என்னால் அடக்கிக் கொள்ள முடியவில்லை!" எனத் தெரேசு கூறினாள். தந்தை மார்ட்டி னுக்கோ, நிலைமாறும் அல்லது எண்ணங்கள் மாறும் தன்மை கொண்ட பொலின் மீது அடக்க முடியாத கோபம்! ஏனென்றால் தன் இளைய சகோதரியின் கார்மல் நுழைவைத் தாமதப்படுத்தும்படி இல்லத் தலைமைச் சகோதரியைத் தூண்டி விட்டதே பொலின் தான்.

"எனது மூன்று மாத நாடு கடத்தப்பட்ட வாழ்க்கையை நான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் நான் அர்த்தமற்றவள்! வரம்பு மீறியவளாகக் கருதப்படுவேன் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் இந்தச் சோதனை மகத்தானது. இந்த வேதனை என்னைச் சுய கையளிப்பிலும் மற்றும் பல நற்பண்புகளிலும் வளர வைத்தது என்று உறுதியாக நம்புகிறேன். ஆனால்

பார்ப்பவர்கள் கண்களுக்குப் பெரும் சுமையாகத் தோன்றலாம். எனக்கோ இந்தக் காத்திருப்பு சுகமான சுமையாகவே இருந்தது" என மகிழ்வுடன் தெரேசு குறிப்பிட்டாள். இந்த நீண்ட தொடர் போராட்டம் அவளைப் பலவிதங்களில் உறுதிப்படுத்தியது. அவள் தனது மனக்குழப்பங்களைத் தெளிவாக உணர்ந்து புரிந்து கொள்ள முடிந்தது. கார்மல் சபையில் மறுமலர்ச்சியைக் கொணர்ந்த சீர்திருத்தவாதியான அவிலா நகர் தூய தெரேசாளே எதிர் நோக்காத அசாதாரண நிலைக்குத் தன்னையே அமைதியாகத் தயார்ப்படுத்திக் கொண்டாள். அதாவது 15 ஆண்டுகள் 3 மாதங்கள் நிறைவுற்ற போதே அடைப்புக் கார்மலில் நுழைவது மற்றும் ஏற்கெனவே இரண்டு உடன் பிறப்புகள் வாழ்ந்து வந்த அதே கார்மல் இல்லத்தில் மூன்றாவதாகத் தன்னையே இணைத்துக் கொள்வது என்பதுவே அந்த அசாதாரண நிலை.

## வாழ்க்கைப் பயணங்கள் முடிவதில்லை (1 ஜனவரி முதல் 9 ஏப்ரல் 1888 வரை)

அகமகிழ்வு அக்களித்து கொப்பளித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில் லேயோனி மீண்டும் வீட்டிற்குத் திரும்பினார். கயென் நகரில் உள்ள மாதா மினவுதல் சபை வாழ்க்கை முறையை அவரால் பின்பற்ற இயலவில்லை. இந்த இரண்டாவது முயற்சியும் தோல்வியடைந்ததால் அவருடைய உடல் நலமும், உள்ளத்திடனும் பாதிக்கப்பட்டன. தன் சகோதரியைப் பழைய நிலைக்குக் கொண்டு வரத் தெரேசு ஆர்வமாகத் தன்னையே பல வழிகளில் ஈடுபடுத்திக் கொண்டாள்.

புய்ஸ்ஸொனேவில் வாழ்க்கைப் படகு அமைதியான நதியினிலே நகர்ந்து சென்றது. ஆசிரியை பப்பினோ மீண்டும் தெரேசுவுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார். "நீண்ட ஆண்டுகள் படித்துப் பெற்ற கல்வியை விட திருப்பயணம் அவளுக்கு வாழ்க்கைப் பாடத்தைத் தெளிவாகவே கற்றுத் தந்திருந்தது." வரலாற்றுக் கல்வியில் இயல்பாகவே ஆர்வம் கொண்டிருந்த அவள் நாடுகளின் வரலாற்றையும், திருச்சபையின் வரலாற்றையும் எளிதாகப் புரிந்து கொண்டாள். ஆனால் அவளுக்குத் தேவையான தெளிவுகள் வழங்கப்படவில்லை. எனினும் பிற்காலத்தில் கார்மல் இல்லத்தில் இத்தாலிய வழிகாட்டிகளின் தவறுகளை நகைச்சுவையாகச் சுட்டிக் காட்டினாள். இத்தகைய நிலைக்கு ஆழமான கருத்துக்களை அனுபவங்களிலிருந்து பெற்று உள்ளடக்கிக் கொண்டாள்.

திருப்பயணம் தெரேசுக்கு ஒரு மாபெரும் இயற்கை அனுபவத்தை இயல்பாகக் கொடுத்தது- அப்பயணமே அவரது முதலும் முடிவுமான நீண்ட



பயணம். ஆனால் அப்பயணத்தின் போது இயற்கையின் அதிசயங்களைக் கண்டு அதிர்ந்து போனாள். ஸ்காட்லாந்து மற்றும் இத்தாலிய மலைப் பகுதிகள், உரோமை மற்றும் உம்ப்ரியன் (Umbrain) நாட்டுப்புறப் பகுதிகள், ரிவியேரா (Riviera), மற்றும் 'நீலக் கடற்கரை' எனப்படும் கோத்த சூர் (Cote - d- Azur) போன்ற பகுதிகளில் இயற்கை வனப்புகளைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தாள். பாரீஸ், மிலான், வெனிஸ், பொலொஞ்ஞான், உரோமை, நேப்பிள்ஸ், ப்ளாரன்ஸ், ஜெனோவா, நீஸ், மார்சேய்லெஸ், லையனீஸ் போன்ற நகர்ப்புறங்களையும் கண்டு மகிழ்ந்தாள். பல்வேறுபட்ட சமூக வகுப்பினரோடு பழகியதால் பலவிதமான கண்டுபிடிப்புகளில் வெற்றி கொண்டாள். "நீ இந்த உலகை விட்டுப் பிரியும் நேரம் நெருங்கும் போது எத்தனை விதமான மகிழ்ச்சிப் பாடங்களை அது உனக்குக் கற்றுத் தருகின்றது! ஆடம்பரமான மக்கள் வாழ்க்கை நிலையைக் கண்டு தெரேசு திகைப்படையவில்லை. "மானிடரின் உண்மை உயர்வு பெயரிலும் புகழிலும் இருப்பது அல்ல! . . . ஆன்மாவில், இதயத்தில் காணப்பட வேண்டும் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்" என்று தெரேசு மொழிந்தாள்.

தெரேசு பெற்றுக் கொண்ட "தன் அறிவு" மிகவும் சிறப்பு வாய்ந்தது. அவள் தான் வெட்கப்படும் குணமும் தன்னுணர்வும் கொண்டவளென எண்ணியதுண்டு. ஆனால் மற்றவர்களோடு தன்னை எளிதாக இணைத்துக் கொள்ளும் அளவுக்குத் தன்னில் மாற்றம் அடைந்துள்ளதை உணர்ந்தாள். தெரேசு துடிப்பானவள்! உயிரோட்டத்துடன் வாழ்வதில் இன்பம் கண்டாள். நகைச்சுவை உரையாடல்களைச் செலினுடன் பகிர்ந்து கொண்டாள். தனது பெண்மையையும், அழகையும் பற்றி உணர்ந்திருந்தாள். ஆடம்பரத்துடன் வாழ்வதற்காகத் திருமணத்தின் பல வழிகள் அவள் முன்பாகத் திறந்திருக்கக் கண்டாள். அதனை அவரும் 'விரும்பித் தேர்ந்தெடுத்திருக்கலாம்"- ஆனால் தற்போது மறைந்து வாழ்வதற்காக இறைவன் விரும்பிய பாலைவனமான கார்மல் இல்லத்தின் சன்னல் கம்பிகளுக்குப்பின் "அன்பின் கைதியாக'த் தனது முழு விருப்பத்துடன் தன்னையே மாற்றிக் கொண்டாள்.

தெரேசு தனது அழைத்தலில் தெளிவான முடிவை எடுப்பதற்கும் அதில் உறுதிப்பாடு எய்துவதற்கும் காத்திருக்க வேண்டிய 29 நாள்கள் போதுமானவையே என்று எண்ணினாள். தனது அழைத்தல் உறுதியானதாக இல்லாதிருந்தால் கிடைத்த அனுபவங்கள் அவ்வழைத்தலைத் தவிடு பொடியாக்கியிருக்கும் என்று தெரேசு உணர்ந்திருந்தாள். "அவள் பதினைந்து வயது மட்டும் நிரம்பியவள். ஆனால் திருப்பயணம் அவளுள் உண்டாக்கிய தாக்கங்க்ள் அவளது வாழ்க்கையின் இறுதிப்பக்கம் வரை எதிரொலிக்கும்.

அவளது 'ஆன்மா ஏற்கெனவே முதிர்ச்சி அடைந்துள்ளது' எனச் சகோதரி ஆக்னெசு எழுதிய வரிகள் மெய்யானவை! ஓர் ஆண்டுக் காலம் அவளை ஒரு புதிய படைப்பாகவே மாற்றியிருந்தது.

பயணத்தில் அதிக ஆர்வம் கொண்ட மார்ட்டின் இந்தக் காத்திருப்பு நேரத்தைப் பயனுள்ள முறையில் செலவிட எண்ணினார். மீண்டும் ஒருமுறை திருப்பயணம் செல்லாம் என்ற எண்ணத்தை எடுத்துரைத்தார். "சின்னராணி, எருசேலம் செல்ல உனக்கு விருப்பமா?" என்று கேட்டார். தன் அன்பர் இயேசு வாழ்ந்த இடத்தைக் காணத் தெரேசுவுக்கு ஆசை தான். ஆனால் அப்பயணம் கார்மலில் நுழையும் நாள்களைத் தள்ளிப் போட்டு விடும் என்று உணர்ந்து எருசலேம் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டாள். இயேசு அவளுக்காகக் காத்திருக்கும் இடத்திலேயே அவரைக் காண்பது மிகவும் சிறந்தது என்று தன்னையே தேற்றிக் கொண்டாள்.

கார்மல் வாழ்வு மிகவும் கடினமானது. எனவே, அதற்கு முன்பாகத் திருப்பயணம் சென்று மகிழ்ந்து வரலாம்! என்ற சோதனை உள்ளத்தில் தெரேசுக்கு எழுந்தது. ஆனால் உடனடியாகத் தன்னையே கட்டுப்படுத்திக் கொண்டாள். "காலத்தின் மதிப்பீடுகளை" அறிந்து கொண்டு கார்மல் நுழைவுக்குத் தன்னையே தயார்படுத்திக் கொண்டாள். "வெறுமைப்" பண்பை அதிகம் தன்னுள் வளர்த்துக் கொண்டாள். தன் விருப்பத்தைக் களைதல், குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்தல், பிறர் கவனத்தைக் கவராது சிறு நற்செயல்கள் புரிதல் போன்ற பல பண்புகளைத் தன்னுள் வளர்த்துக் கொண்டாள். இறுதியாக, தெரேசு தனது வாழ்வில் மறக்க முடியாத இன்ப மாதத்தைச் சந்தித்தாள். மார்ச் மாதம் இறுதியில் தெரேசு கார்மல் இல்லத்திற்குச் செல்லும் நாள் குறிக்கப்பட்டது. இயேசுவின் பிறப்பு அறிவிப்பு விழா நாளன்று ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாள் தெரேசு ஆவலோடு காத்திருந்த கார்மலில் நுழைய வேண்டும்.

அதே நாளில் பத்தொன்பது வயது நிரம்பிய செலினுக்குத் திருமணக் கோரிக்கையொன்று வந்தது.

ஆசிரியை ப்ப்பினோவின் இளம் மாணவர் ஒருவர், தெரேசு குடும்ப உறவுகளுக்கெல்லாம் பிரியாவிடை பெற்றுக் கார்மல் இல்லத்திற்குச் செல்வதற்குச் சில நாள்கள் முன்பு தெரேசுவைப் பார்த்த காட்சியைப் பின் வருமாறு நினைவு கூறுகிறார்:

"அன்று தெரேசு தன் தந்தைக்காகக் காத்திருந்தாள். தந்தையோ பெரிய தெருவிலுள்ள மளிகைக் கடைக்குள் சென்றிருந்தார். தெரேசு சாலை




நடைபாதை விளிம்பில், வரிசையாகக் கற்களைப் பதிக்கத் தோண்டப் பட்டிருந்த பள்ளத்தில் நின்று தனது குடை முனையை இயந்திரம் போல் சுழற்றிக் கொண்டிருந்தாள். தடித்த விளிம்புகளைக் கொண்ட நவீன ஒப்பனைகள் நிறைந்த பச்சை நிற உடை அணிந்திருந்தாள். அவளது கூந்தல் ஆகாய நீல நிற நாடாவால் அழகாக முடியப்பட்டிருந்தது. அவளது இந்தக் கவிதைத் தோற்றத்தை என் மனக்கண்களில் என்றும் நிலைப் பெறச் செய்தேன்."



# பகுதி மூன்று

## *கார்மலில் 1888 - 1897*



லிசியூ நகர் கார்மல் இல்லம் (1888)

# 5

# தேர்வு நிலையாளர்

(9 ஏப்ரல் 1888 - 10 ஜனவரி 1889)

*"எனது கார்மல் நுழைவு உடன் பிறப்புகளுடன்*
*வாழ்வதற்காக அல்ல*
*இயேசுவின் அழைத்தலுக்கு மறுமொழி சொல்லவே!"*

## மெல்லத் திறந்தது கதவு

பொலீனுக்கு அவரது இருபதாவது வயதிலும், மரியாவுக்கு அவரது இருபத்து ஆறாவது வயதிலும் கிடைத்த அனுபவம் தெரேசுக்கு அவரது பதினைந்தாம் வயதிலேயே கிடைத்தது. தெரேசின் மனத்தில் மணமகள் உடுத்தும் ஆடை தயாரிப்பது, அறையை விட்டு வெளியே வருவது, அன்பு நாய் 'தோம்' தன்னைச் சுற்றி சுற்றி ஒடி வர, தோட்டத்தைச் சுற்றி இறுதியாக நடந்து வருவது போன்றவை நெஞ்சில் ஓயாத அலைகளாக அசைவாடிக் கொண்டிருந்தன. ஏப்ரல் திங்கள் 8 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று கேரென் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து உணவறையில் அமர்ந்து இறுதி உணவருந்தினர். பத்து ஆண்டுகளுக்கு மேல் துள்ளிப் பறந்து திரிந்த புய்ஸ்ஸொனேவுக்குப் பிரியா விடை கூறும் நேரம் வந்தது. லேயோனி, செலின் அனைத்திற்கும் மேலாகத் தந்தை மார்ட்டின் அனைவரையும் விட்டுப் பிரிய வேண்டும். நெஞ்சம் கனக்கும் இந்தப் பிரிவு அனுபவம்! அதனைத் தமது பதினைந்தாம் வயதிலேயே தெரேசு பெற்றுக் கொண்டாள்.

மறுநாள் காலையில் 7 மணி திருப்பலிக்கு 'லிஸேரோ'வில் உள்ள கார்மல்

சிற்றாலயத்திற்கு அனைவரும் சென்றனர். தெரேசைத் தவிர அனைவரும் கண்ணீர் உகுத்தனர். ஆனால் அவளது இதயம் கனத்தது. 'எத்தனை துயரம் நிறைந்த தருணமது! அதனுடைய பாதிப்பை அனுபவத்தால் மட்டுமே அறிந்து கொள்ள இயலும். அனுபவமே அறிவு புகட்ட வேண்டும்' எனத் தெரேசு பின்னர் குறிப்பிட்டாள்.

இரு அடைப்பான்கள்; இரு தாழ்ப்பாள்கள் கொண்ட கதவு; அதன் முன்னே தந்தை மார்ட்டின் ; அவர் முன்பு இளம் பெண் தெரேசு மண்டியிட்டாள். தந்தையும் குழந்தையை ஆசீர்வதிக்க மண்டியிட்டார். கண்களில் நீர் பெருக்கெடுத்தது. கதவு மெல்லத் திறந்தது. குழுவில் இருந்த அனைத்துச் சகோதரிகளும் கறுப்புத் தலையணி அணிந்தவர்களாய் அங்கு வந்து குழுமினர். அருட்பணியாளர் தெலாத்ரோயத் அவர்களால் தெரேசுவின் நுழைவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரது வரவேற்பு வார்த்தைகள் குடும்பத்தினரின் தேம்புதல்களைக் குறைத்தன. அவருடைய ஆறுதல் வார்த்தைகள் அனைவரையும் சிலைகளாக்கின: "நல்லது! தலைமைச் சகோதரிகளே 'தெ தேயும்' என்ற நன்றிப் பாடலை இப்போது நீங்கள் பாடலாம்! ஆயரின் பிரதிநிதியாகப் பதினைந்து வயதுக் குழந்தையை உங்களுக்குத் தருகிறேன். அவருடைய நுழைவை நீங்கள் விரும்பி எதிர்பார்த்து இருந்தீர்கள். அவரும் உங்களுடைய நம்பிக்கையை வீணடிக்க மாட்டார் என நம்புகிறேன். அவ்வாறு அவர் நம்பிக்கைத் துரோகம் செய்தால் அச்செயல்களுக்கு நீங்களே பொறுப்பாளிகள் என்றும் உங்களுக்கு நினைவுறுத்துகின்றேன்."

தெரேசு வாயிற்படிகளைக் கடந்தார். வலிமையான வாயில் கதவு மூடப்பட்டது. தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் அவளைச் செப அறைக்கு அழைத்துச் சென்றார். அதன் பின்னர் இரண்டாவது மாடியில் உள்ள தெரேசுவுக்குரிய சிற்றறையைக் காண்பித்தார். அவ்வறை 2.10 மீட்டர் அகலமும், 3.70 மீட்டர் நீளமும் கொண்டது. அதில் காவி வண்ணத்தில் ஒரு சிறு படுக்கையும், சிறிய ஒரு இருப்புப் பலகையும், ஒரு எண்ணெய் விளக்கும், ஒரு மணற் கடிகையும் இருந்தன. வெள்ளைச் சுவரில் மரத்தால் செய்யப்பட்ட சிலுவையொன்று தொங்கியது. சன்னல் வழியே ஒரு தட்டையான கூரையும் வானமும் தெளிவாகத் தெரிந்தன.

கார்மல் இல்லம் நோக்கிய பயணத்தில் தேர்வு நிலையாளருக்கு அனைத்தும் மகிழ்ச்சியை அளித்தன. 'நான் இங்கு என்றென்றும் இருப்பேன்!' இவ்வார்த்தைகளை மீண்டும் மீண்டும் கூறுவதில் என்னே மகிழ்ச்சி! அவருக்குள் என்னே நெகிழ்ச்சி!'



தொடர்ந்த மறுநாளன்று தந்தை மார்ட்டின் தன் நண்பர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்: "என் சின்ன ராணி நேற்று கார்மலில் புகுந்தார். இறைவன் மட்டுமே இத்தகைய தியாகத்தை விரும்ப இயலும். ஆனால் அவர் எனக்கு மிகுந்த வலிமையுடன் துணை புரிகிறார். என் இதயம் துன்பத்தாலும், துயரத்தாலும் வேதனைக் கண்ணீராலும் அலைக்கழிக்கப்பட்டாலும் மகிழ்ச்சியில் திளைத்து நிற்கின்றது."

## புகுந்த வீடு 1888

'சிறியது மற்றும் எளியது'. மரியா கார்மல் இல்லத்தில் புகுந்த போது கூறிய வர்ணனை இது. செங்கற்களால் கட்டப்பட்ட அடைப்புப் பகுதிகள், உணவறை, தோட்டம் மற்றும் அதன் நடைபாதை; இவைகளே அவ்வில்லத்தின் வெளிப்புறத் தோற்றமாயின. விரைவில் பொன் விழாவைக் கொண்டாட இருந்த அவ்வில்லம் உண்மையிலேயே மரியாவின் வார்த்தைக்கு வடிவம் கொடுக்கும் இல்லமாகவே இருந்தது.

இருபத்தாறு அருட்சகோதரிகளைக் கொண்ட அக்குழுமம் தெரேசை உற்சாகத்துடன் வரவேற்றது. அவர்கள் அனைவரும் தெரேசுவுக்கு அந்நியமானவர்களல்ல; மாறாக அறிமுகமானவர்களே. ஆறு ஆண்டு உறவுகளில்



கார்மல் இல்லத்தின் உள் தோற்றம்.

அனைவரின் வதனங்களும் நினைவில் என்றும் நின்றன. இதுவரை 'சந்திப்பு உறவுகளே' இருந்தன. ஆனால் இனி இணைந்து 'வாழும் உறவு'' ஒரு புதிய அனுபவமே. தெரேசு கார்மலில் புகுந்தபோது 'எவ்வித மாயை எண்ணங் களாலும் ஆட்கொள்ளாதபடி சிறப்பு அருளை' இறைவன் அவருக்கு அளித்தார்.

கார்மல் வாழ்க்கை பதினாறாம் நூற்றாண்டில், தேர்வு நிலையாளர்களின் பாதுகாவலியான தூய அவிலா தெரசாள் அவர்களால் சீர்திருத்தம் செய்யப்பெற்றது. அவர் ஓர் அசாதாரண பெண்மணி. இறை அனுபவமும், செயல்பாட்டுப் பண்பும் ஒருங்கிணையப் பெற்றவர். சிறிய 'பாலைவனங்களைத்' தோற்றுவித்தார். அடைப்புப் பகுதியில் வாழும் துறவியர் அங்கே குழுவாகவும், தனியாகவும் இறைவனோடு உரையாடினர். தினமும் இரண்டு மணி நேரம் அமைதிச் செபத்தில் மூழ்கினர். அன்புறவுடனும், மகிழ்ச்சியுடனும் தங்களது அன்றாடப் பணிகளைச் செய்தார்கள். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அவிலா தெரசாள் மிகுந்த பாமர அறிவோடு உலகின் சூழலை நன்கு அறிந்தவராய் மண்ணிலே காலூன்றி, நடுநிலையான வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுத்தார். அன்பே அனைத்திலும் மேலானதாகக் கருதப்பட வேண்டும்; தன் ஒறுத்தல் தியாகங்களிலும் கூட அன்பின் குரலே எதிரொலிக்க வேண்டும்; அன்பின் வழியிலே தான் அனைத்து உயர் நெறிகளையும் அடைய முடியும் என்று வலியுறுத்தினார். மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்பு சில கார்மல் துறவியர் அவிலா தெரசாளின் கருத்தியல்களினின்று மாறுபட்டு விவேகமற்ற கடுந்தவங்களில் தங்களையே ஈடுபடுத்திக் கொண்டனர். சில சமயங்களில் குறுகிய எண்ணங்களோடு அறநெறிகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். லிசியூ கார்மலும் இந்தத் தாக்குதலிலிருந்து தப்பவில்லை. எதிர் மரபு வழிக்கோட்பாடுகளை வலியுறுத்தி 1627 ஆம் ஆண்டு, பிளெமிங் கொர்னே லியஸ் ஒட்டோ ஜேன்சன் எழுதிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 'ஜேன்சனிஸம்' என்ற துறவற அமைப்பு உருவாக்கப்பட்டது. பிரெஞ்சு கிறிஸ்துவமும், இந்த ஜேன்சனிசக் கருத்தியல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. தன் ஒறுத்தல், தியாகம், கடுந்தவம் போன்றவை அதிகமாக வலியுறுத்தப்பட்டன. அன்பின் பேராற்றலைச் செயலிழக்கச் செய்யும் அளவுக்கு ஜேன்சன் கொள்கைகள் பரப்பப்பட்டன. ஒருவரைத் தவிர மற்றக் கார்மல் துறவியர் அனைவரும் இறைவனைத் தீர்ப்பு வழங்கு பவர் என்று எண்ணிக் கலக்கமடைந்தனர். அந்த ஒருவர் தான் தெரேசு.

இளம் தேர்வு நிலையாளரின் இதயம் தலைமைச் சகோதரி மரி தே



கொன்சாக்கை நாடியது. அப்போது அவருக்கு வயது ஐம்பத்து நான்கு. அவர் தாவி தே விர்வீல் (Davy De Virville) - க்கும், மரி அதேல் ரோசலி (Marie - Adele - Rosalie) க்கும் புதல்வியாகப் பிறந்தவர். தெரேசை அவர் 'தெரேசித்தா' என அன்போடு அழைத்தார். தெரேசித்தாவின் நலனில் அக்கறை கொண்ட அவர் தெரேசுவின் கார்மல் நுழைவுக்காகப் போராடினார். இல்லத் தலைவியாக இருந்த மரி தே கொன்சாக் அவர்களின் நடத்தை, உயரம், உடல் அமைப்பு, இயல்பான கவர்ச்சிகள், மார்ட்டின் குடும்பத்தின ரோடு அவர் கொண்டிருந்த நல்லுறவு, சீர்தூக்கும் திறன், நடுநிலை தவறாமை, போன்றவை தெரேசை அவரிடம் கொண்டு சென்றன. அவரு டைய சீர்தூக்கும் திறனை லிசியூவில் இருந்த அருட்பணியாளர்கள் பெரிதும் மதித்தனர். முந்தைய தலைமைச் சகோதரி ஜெனவியேவ் அவர்களைத் தெரேசு முன்பே அறிந்து அன்பு செய்து வந்தார். 1833 ஆம் ஆண்டில் லிசியூ கார்மலை நிறுவியவர்களுள் இவரும் ஒருவர். தற்போது கடந்த நான்கு ஆண்டுகளாக உடல் நலக் குறைவினால் பாதிக்கப்பட்டுத் துன்புறு கிறார். ஆனால் குற்றம் குறைகள் எதுவும் சொல்வதில்லை. துறவற குழுமத் தில் மருத்துவர் உட்படப் பலரும் அவரைத் 'தூயவர்' என்றே கருதி மதித்து வந்தனர். குழுவில் அனைவரிலும் வயது முதிர்ந்த சகோதரி இயேசுவின்



குழு மன மகிழ்வு - தெரேசு நடுவில் இடப்பக்கத்தில்

தூய வளனார் மற்றும் உதவி இல்லத் தலைவியான சகோதரி தூய மழலைப் பருவத்தின் பெப்ரோனியும் இருந்தனர். இவர்களோடு வெண் தலையணிச் சகோதரிகள் என அழைக்கப்பட்ட பொதுநிலைச் சகோதரிகள் ஐவரும் குழுவில் இருந்தனர். இவர்கள் குழுவோடு இணைந்து செப அறையில் திருப்புகழ் மாலை பாட அனுமதிக்கப்படவில்லை. துறவற அடைப்புப் பகுதிக்கு வெளியில் பணிபுரிய இரண்டு சகோதரிகள் இருந்தனர். வெளியுலகத் தொடர்பு கொண்டு மடத்தின் அன்றாடத் தேவைகளை அவர்கள் கவனித்துக் கொண்டனர்.

தெரேசுவின் வாழ்வு ஆரம்பத்தில் புகுமுகத் துறவு நிலையில் (Novitiate) இருந்த நான்கு சகோதரிகளோடு மட்டுமே தொடர்புடையதாக அமைந்தது. சகோதரி வானதூதர்களின் மரியா அவர்களில் ஒருவர். இஷ்ஷான் தே ஷோ மொன்த்தேல் (Chaumontel) எனும் ஊரில் பிறந்த இவரே புகுமுகத் துறவு நிலைப்பயிற்சி உருவாக்குநர். நாற்பத்து மூன்று வயதுடைய இவர் தினமும் சிறிய குழுவினைத் திரட்டி உரையாடினார். மற்றொருவர் சகோதரி மரீ ஃபிலோமேன். நாற்பத்தெட்டு வயது நிரம்பிய இவர் "தூயவராகவும், கட்டுப்பாடு கொண்டவராகவும்" இருந்தார். இன்னொருவர் சகோதரி தூய இதய மரியா. தெரேசுவின் சகோதரியும், ஆன்மீக அன்னையுமாக இருந்த இவர் மீண்டும் தெரேசுவுடன் இணைந்து வாழ்வதில் பெருமகிழ்ச்சி கொண்டார். இறுதியாக இருபத்து மூன்று வயது நிரம்பிய சகோதரி இயேசுவின் மார்த்தா. இவர் தம் பெற்றோரை இழந்தவர். கடந்த மூன்று மாதங்கள் வெள்ளைத் தலையணி அணிந்து ஏற்புத் தேர்வு நிலையாளராகப் பயிற்சி பெற்றிருந்தார். தலைமைச் சகோதரி ஆக்னெசின் கருத்துப்படி அவர் "எளியவர்; அறிவுத் திறனற்றவர்".

இக்குழுவில் இயல்பான திறமைகள் கொண்டவர்கள் வெகு சிலரே. இல்லத் தலைவியும் மார்ட்டின் சகோதரிகளும் மற்றும் ஒரு சில சகோதரிகள் மட்டுமே திறமை மிக்கவர்களாக இருந்தனர். அந்தக் காலத்தில் பெண்கள் தங்கள் பதினைந்தாவது வயதிலேயே பள்ளிப் படிப்பை முடித்தனர். குழுவில் இருந்த பெரும்பாலோர் மிகச் சிறு வயதிலேயே கடின உடல் உழைப்பில் ஈடுபடும் கிராமத்துப் பெண்களே. அவர்களின் கண்களுக்கு இந்தத் திறமை வாய்ந்த ஒரு சில சகோதரிகள் 'அறிவாளிகளாக'த் தென்பட்டனர்.

நீண்ட நீல நிற உடையும், கறுப்பு நிறக் கையில்லா மேலாடையும் தெரேசு அணிந்திருந்தார். கறுப்பு நிறத் தலை அணியால் தன் இளம் பொன் நிறக் கூந்தலை மறைத்து வைத்திருந்தார். ஏற்புத் தேர்வு நிலையாளர் தெரேசு மெல்ல மெல்லக் கார்மல் சபை வாழ்க்கை முறைகளைத் தனதாக்கிக்



கொள்ள முயன்றார். செப அறையில் ஆறுமணி நேரம் செபம், காலை 10 மணிக்கும் மாலை 6 மணிக்கும் உணவுப் பரிமாற்றம். (உடல் நலம் பாதிக்கப்பட்ட நேரத்தில் மட்டும் இறைச்சி உண்டு) இருவேளை உண விற்குப் பிறகு ஒரு மணி நேரக் குழு மனமகிழ்வு இருந்தது. குளிர் காலத்தில் ஏழு மணி நேரம் துயில்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. நெருப்புக் கூடம் அமைந்திருந்த மனமகிழ்வு அறை தவிர மற்ற எந்த அறையிலும் அடுப்பு கிடையாது. திருப்பலிக்கான அப்பம் செய்தல், சித்திரங்களுக்கு வண்ணம் தீட்டுதல், தையல், சலவை மற்றும் வீட்டுப் பணிகள் என ஐந்து மணி நேரம் உடல் உழைப்பில் சகோதரிகள் ஈடுபட்டனர். சிறப்பாக ஒருங்கிணைக் கப்பட்ட குழுவில் இருந்த உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் வாழ்வை அமைதியிலும், தனிமையிலும் செலவிட்டனர். இத்தகைய கார்மல் வாழ்வின் பழக்க வழக்கங்களையே தெரேசு தனதாக்கிக் கொள்ள முயற்சி எடுத்தார்.

## அட்டகாசமான ஆரம்பம் (1888 ஏப்ரல் முதல் ஜூன் வரை)

தேர்வு நிலையாளரின் பணி கிழிந்துபோன துணிகளைத் தைத்துச் சரி செய்வதே! தெரேசு புய்ஸ்ஸொனேவில் கையில் ஊசியை மிக அரிதாகவே பயன்படுத்தினார். அவரது புகுமுகத் துறவு நிலைப் பயிற்சி உருவாக்குநர், தெரேசு மிக மெதுவாகப் பணிபுரிவதைக் கண்டார். சகோதரி களின் அறைகள் அமைந்திருந்த நடைபாதையையும், படிக்கட்டுக்களையும் துப்புரவு செய்வதும் தெரேசுவின் பணியாக இருந்தது. உடற்பயிற்சிக்காக மாலை வேளைகளில் சிறிது நேரம் தோட்ட வேலையும் செய்தார். அதன் பிறகு அவர் கல்வி எதுவும் கற்கவில்லை. புகுமுகத் துறவு நிலையில் சகோதரி வானதூதர்களின் மரியா ஒவ்வொரு நாளும் சபையின் சட்டங்கள், பொது வாழ்வின் பழக்க வழக்கங்கள், உடையணியும் முறை, உணவருந்தும் முறை, மற்றச் சகோதரிகளுடன் பழகும் முறை போன்ற நடை முறை ஒழுக் கங்களைக் கற்றுக் கொடுத்தார். சபையின் பழக்கவழக்கங்களில் ஈடுபடப் பயிற்சி கொடுப்பதற்காகச் சகோதரி தூய இதய மரியா, தெரேசுவுக்குத் "தூதராக" நியமிக்கப்பட்டார். அவரும் கடமையைச் செவ்வனே செய்து முடித்தார். திருப்புகழ் மாலை பாடுவதற்குப் பயன்படுத்தப்படும் கனமான இலத்தீன் திருப்புகழ்மாலை அடங்கிய நூலைக் கையில் எவ்வாறு தாங்கிப் பிடிக்க வேண்டும் என்பதை அவருக்குக் கற்றுக் கொடுத்தார்?

புய்ஸ்ஸொனேவின் ''வாழ்க்கை'' முறையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சபை வாழ்வு முற்றிலும் மாறுபட்டுக் கடினமானதாகத் தோன்றியது. எனினும் துறவறத்தில் புகுந்துள்ள தெரேசை பெரிதாகப் பாதித்ததாகத் தெரியவில்லை. ஆனால், அனைவராலும் நேசிக்கப் பெற்ற

இந்தச் சிறிய கார்மல் துறவியால் குழுவில் பிளவுகள் உண்டாகவில்லை. தன் இரு உடன்பிறப்புகளாலும் சூழப்பட்டு தெரேசு "கார்மல் மடத்தின் விளையாட்டுப் பொம்மை" ஆகப் போகின்றாரா?

மே திங்கள் 17 ஆம் நாள் இல்லத் தலைவி கேரென் குடும்பத்திற்குக் கடிதம் எழுதினார். "இந்தச் சிறுமி நிறைவாக இருக்கின்றார். பதினைந்து வயதே நிரம்பிய இந்தச் சிறுமியிடம் இத்தகைய சீர்தூக்கும் திறனை நான் எதிர்பார்க்கவே இல்லை. ஒரு வார்த்தையும் அவரிடம் சொல்ல வேண்டிய தேவையில்லை. அனைத்தும் அவரில் நிறைவாக உள்ளன."

முதல் மூன்று மாதங்கள் உண்மையிலேயே தெரேசுவை மகிழ்ச்சியிலே திளைக்கச் செய்தன. "என் மிகவும் அன்புநிறை செலின்! நான் உண்மையிலேயே கார்மலில் இருக்கின்றேனா என்று வியக்குமளவுக்கு மகிழ்ச்சியான தருணங்கள் உள்ளன" எனச் செலினுக்கு கடிதம் எழுதினார். அவரது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் வகையில் வசந்தம் தோட்டத்தில் நிலவியது; மலர்கள் பூத்துக் குலுங்கின. மலர்களை அதிகம் நேசிக்கும் அவருக்கு இது ஓர் இனிய கொண்டாட்டமே. மே மாதம் 22 ஆம் நாள் சகோதரி மரியா, அருட்பணியாளர் பிஷோன் முன்னிலையில் தமது துறவற உறுதிமொழியை அளித்தார். சபையின் வழக்கப்படி தெரேசு சகோதரி மரியாவுக்கு ரோசா மலர்க் கீரிடம் அணிவித்தார்.

இயேசு சபையைச் சேர்ந்த அருட்பணியாளர், கார்மல் சகோதரி களுக்குப் பல நாள்கள் மறையுரை ஆற்றினார். அதுவரை தெரேசுவுக்கு ஆன்மீக இயக்குநராக எவரும் இருந்தது இல்லை. கடந்த அக்டோபரில் தெரேசு வெளிப்படுத்தியிருந்த ஆவலை நினைவு கூர்ந்தார்: "என் சகோதரிகளாகிய மரியா மற்றும் செலினை நீங்கள் இயக்கி வருவதால், இளையவராகிய என்னையும் ஏற்றுக் கொள்ள விருப்பம் கொள்வீர்கள் என நம்புகிறேன்." மார்ட்டின் "குடும்ப இயக்குநர்" எவ்விதத் தயக்கமும் இன்றி ஏற்றுக் கொண்டார்.

## விடியலுக்கான ஒத்திகை (28 மே 1888)

தெரேசு தம் உள்ளார்ந்த வாழ்வைப் பற்றி எடுத்துரைக்க அறிந்திருக்க வில்லை. இதன் விளைவாக மே மாதம் 28 ஆம் நாள் அவருடைய புதிய ஆலோசகரைச் சந்தித்த போது அவரால் பேச முடியாமல் கண்ணீர் விட்டார். வழக்கமான முறையில் ஒப்புரவு அருட்சாதனச் சடங்கை மட்டும் நிறைவேற்றினார். முன்தினம் மாலை நேரத்தில் செப அறையில் தெரேசு



செபித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த அருட்பணியாளர் 'பிரச்சினைகள் இல்லாத குழந்தை' என்று மனத்தில் எண்ணினார். எனவே, தெரேசுவிடம் "இறைவன் முன்னிலையிலும், தூய கன்னி மரியா மற்றும் அனைத்துத் தூயவர்கள் முன்னிலையிலும் நான் அறிவிக்கிறேன். நீர் எந்தவொரு கொடிய குற்றத்தையும் இதுவரை புரிந்ததில்லை' என்று அந்த அருட்பணியாளர் வெளியிட்டார். தெரேசு மனசஞ்சலத்தால் உழன்று விடக்கூடாது என்ற எண்ணத்தோடு இந்த ஆடம்பர வாய்ப்பாட்டின் வழியாக அவரை ஆற்றுப்படுத்தினார். ஏனென்றால் அருட்பணியாளர் தாமே இத்தகைய பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தார். பின்னர் விடுதலையும் அடைந்தார். இவர் முதலில் ஜேன்சனின் கொள்கைகளுக்கு அடிமை யாயிருந்தார். அக்கொள்கை தமக்கு அழிவைக் கொணரும், சஞ்சல மன நிலையைத் தன்னில் உருவாக்கி விடும் என்று அறிந்தவுடன் அன்பின் கடவுளைப் பற்றி மறையுரை ஆற்றினார். மீண்டும் அவர் தெரேசுவிடம் கூறினார்: 'இறைவன் உமக்கு அருளிய வரங்களுக்காக நன்றி கூறவும். ஏனெனில் அவர் உம்மை கைவிட்டிருந்தால் வான தூதராக உருவாகுவதற்குப் பதிலாக அலகையாக உருவாகியிருப்பீர்'. அதற்கு தெரேசு 'இதை நம்புவதில் எனக்கு எவ்வித பிரச்சனையுமில்லை" என்றார். ஆலோசகர் தொடர்ந்து கூறினார்: 'என் அன்புக் குழந்தாய்! நம் இறைவனே எப்பொழுதும் உனக்குத் தலைவராகவும், புகுமுகத் துறவு நிலைப் பயிற்சி உருவாக்குநராகவும் இருக்கட்டும்.' தன் ஆன்மாவை ஐந்து ஆண்டுகளாகச் சித்ரவதைப்படுத்தி வந்த கொடிய துன்பத்தினின்று அன்றைய தினம் விடுதலை பெற்றார் தெரேசு. இனி ஒரு புதிய ஆரம்பம்; அட்டகாசமான ஆரம்பம்; 'அமைதியின் நிறைவை நோக்கிச் செல்லும் பயணத்தின் ஆரம்பம்.'

இந்த இனிய மன விடுதலைக்குப் பின் தெரேசு இல்லத் தலைவியின் முரட்டுத்தனங்களுக்கு அஞ்சவில்லை. வரவேற்பறையில அன்பாகப் பேசிப் பழகிய மரி தெ கொன்சாக் இப்போது முற்றிலும் மாறி விட்டார். தெரேசு அவரை அடிக்கடி சந்திப்பது கிடையாது. ஆனால் அவர் தெரேசுவைப் பார்க்கும் போதெல்லாம் ஏதேனும் ஒரு வகையில் தரக்குறைவாக நடத்தினார். அடிக்கடி தெரேசுத் தரையை முத்தமிடும் தண்டனை பெற்றார். இளம் சிறுமி தெரேசுவினிடம் தற்பெருமை நாட்டங்கள் இருப்பதாகக் கருதினார் போலும்! எனவே, மாறும் தன்மை கொண்டவரும், நோயாளியுமான தலைமைச் சகோதரி மரி தெ கொன்சாக் அவரை 'உடைத்து' உருமாற்ற விரும்பினாரா? அல்லது அவருடைய மற்ற இரு சகோதரிகளும் தெரேசு வுக்கு அளித்த ஆதரவைச் சமனப்படுத்தும் பொருட்டு அப்படிச் செய்தாரா?

முன்பு எளிதாக எவ்விதத் தயக்கமுமின்றித் தலைமைச் சகோதரியிடம் சென்று பழகி வந்த தெரேசு, இப்போது அவரைச் சந்திக்கவே தயங்கினார். அவ்வாறு அவரைச் சந்திக்க முனைந்து அவரது அறைக்குச் சென்ற போது, அறைக் கதவைத் தட்டி அவரது அனுமதியைப் பெற மாட்டார். மாறாகத் தலைமைச் சகோதரியே அவரது அறையை விட்டு வெளியே வரும் வரை படிக்கட்டுகளின் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு காத்திருப்பார். அப்படியாவது "ஓரளவுக்கு ஆறுதல் வார்த்தைகள் அவரிடமிருந்து கிடைக்குமா ?" என்று ஏங்கினார்.

புகுமுகத் துறவு நிலைப் பயிற்சி உருவாக்குநரோடு உரையாடச் செல்வது அவருக்குப் பெரும் போராட்டமாகவே அமைந்தது. தெரேசுவுக்கு அவரிடம் என்ன பேசுவது என்றே தெரியாது. வான தூதர்களின் மரியாவோ அவரிடம் தொடர்ந்து பேசினார்: கேள்விகள் பல கேட்டார். ஒரு நாள் கேள்விக் கணைகள் அதிகமாகி விட்டன. இனிமேல் என்ன செய்வது என்றே தெரியாமல் போனதால் தேர்வுநிலையாளர் தெரேசு அவரைக் கழுத்தோடு கட்டி அணைத்து முத்தமிட்டார்.

அடைப்புப் பகுதிக்குள் வாழ்ந்த இருபத்து ஆறு பெண்களிடையே பலவிதமான பிரச்சனைகள் இருக்கின்றன என்பதைத் தெரேசு கண்டுபிடித்தார். அவர்களது மனப்போக்குகள், சமூகப் பின்னணி, அன்றாட மனப்போக்குகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளாகவும் இருந்தன. "கார்மல் இல்லத்தில் எவருக்கும் பகைவர்கள் இல்லையென்பது உண்மையே, எனினும் இயல்பு நாட்டங்கள் அதிகம் காணப்பட்டன. ஒருவரிடம் அதிகமாக ஈர்க்கப்படுவதும், வேறொருவரைச் சந்தித்து உரையாடத் தயங்கும் பழக்கமும் துறவியரிடையே காணப்பட்டன." ஒன்பது ஆண்டுகள் துறவறக் குழும வாழ்க்கை அனுபவத்திற்குப் பின்பு தெரேசு துணிந்து கூறுகிறார்: "சீர் தூக்கும் திறனின்மை, கல்வியறிவின்மை, எளிதில் சினம் கொள்ளும் தன்மை போன்றவை வாழ்வை இன்பமயமாக்குவதில்லை. இத்தகைய அறநெறிக் குறைபாடுகள் என்றும் தீராத நோய்களே என்று எனக்கு நன்றாகத் தெரியும். அவற்றைக் குணப்படுத்த இயலும் என்கிற நம்பிக்கை கிடையாது." பிற்காலத்தில் மூன்று சகோதரிகள் குழுவை விட்டு வெளியே சென்றனர். அவர்களில் ஒருவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக ஒரு மனநோய் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

ஆரம்ப கால "ஏளனப் பேச்சுகள் சில அவரது மெல்லிய உணர்வினைப் புண்படுத்தின. சகோதரி தூய வின்சென்ட் - தே பவுல் என்னும் பொது நிலைச் சகோதரி, புதிதாகச் சபையில் சேர்ந்த தெரேசை ஏற்றுக் கொள்ள



இயலாதவராக அவருக்குத் தீங்கிழைத்தார். தெரேசு அவருக்குக் "கம்பீர பெண்மணி" என்று பெயரிட்டு அழைத்தார். அந்த முதிய சகோதரியின் தோற்றம் பிறரை அச்சுறுத்தும் வகையில் அமைந்திருந்தது. சில சமயம் அவர் குத்தலாகப் பேசும்போது, அவரைப் பார்த்துத் தெரேசு சிரித்து விட்டுப் போய்விடுவாள். அதே சகோதரி பூப்பின்னல் கலையில் சிறந்து விளங்கினார். எனினும் தெரேசைப் பற்றித் தலைமைச் சகோதரியிடம் புகார் கூறத் தவறவில்லை. இயல்பான உழைப்புத் திறன் தெரேசுவுக்கு இல்லை யென்றும், இப்படிப்பட்டவர் குழு வாழ்க்கைக்குப் பயனற்றவர் என்றும் வெளிப் படையாகவே கூறினார். ஆனால் உடன்பிறப்புகளான சகோதரி இயேசுவின் ஆக்னெசு மற்றும் சகோதரி தூய இதய மரியாவும் தங்கள் குடும்பத்தின் கடைக்குட்டியைக் கண்ணும் கருத்துமாகப் புய்ஸ்ஸொனேவில் பராமரித்தது போலக் காக்க விரும்பினர். இதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபட்ட போது ஒரு சில விரிசல்கள் உருவாயின.

ஒருநாள் சகோதரி மரியாவின் உள்ளம் பாதிக்கும் வண்ணம் அவருடைய ஆன்மீகக் குழந்தையிடமிருந்து பதில் வந்தது: 'உங்கள் அன்புக்கு நன்றி. . . உங்களோடு வாழ்வதில் எனக்குப் பெருமகிழ்ச்சியே! ஆனால் என்னையே நான் மறுப்பது நல்லது. ஏனெனில் நாம் வாழ்வது நமது இல்லத்தில் அல்ல. சகோதரி ஆக்னெசு தனக்கென ஒரு முடிவை அப் பொழுதே எடுத்தார்: இந்தச் "சிறிய நாணலின் காரியத்தில் தன்னைக் குழப்பிக் கொள்ளக் கூடாது" என்பதே அந்த முடிவு. ஆனால் அதனை இறுதி வரை கடைப்பிடிக்க முடியவில்லை. "நம்மைக் கண்காணித்து கொள்வதற்கே நமக்குப் போதிய சிரமங்கள் உள்ளன. நாம் நமது வழியே செல்வோம். இல்லையெனில் தாங்க இயலாத தொல்லைகளுக்கு ஆளாவதை நாம் காண்போம்." எனக்கூறிச் சகோதரி ஆக்னெசு தம்மைத் தெரேசுவிடமிருந்து பிரித்துக் கொள்ள முயன்றார்.

தெரேசு கார்மல் சபைக்கு வந்தது இயேசுவுக்காக. ஆனால் அங்கு இரு "அன்னையர்களால்" பராமரிக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. கடினமான சூழ்நிலையை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர் தாம் திக்குமுக்காடும் அபாயத்தில் இருப்பதாக உணர்ந்தார். தமது உரிமையைத் தாமே கண்டு கொள்ளவும் விழைந்தார். தாம் இரு சகோதரிகளைப் பின்பற்றி வாழ்வதை அவர் எப்பொழுதுமே வெறுத்தார்.

**தந்தையின் தலைமறைவு** (1888 ஜூன் 23 முதல் 27 ஆம் நாள் வரை)

1888 ஆம் ஆண்டில் புய்ஸ்ஸொனேவின் அமைதியான கோடை வானில்

இடிமுழக்கமொன்று வெடித்தது.

செலினின் பத்தொன்பதாவது பிறந்த நாள் ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் கார்மல் வரவேற்பறையில் கொண்டாடப்பட்டது. அவரைத் தேடி வந்த திருமணக் கோரிக்கையை எண்ணி வருத்தமுற்றார். பெரும் போராட்டத்திற்கு பின்பு உறுதிப்பாடு ஒன்றை எடுத்தார். கார்மல் சபையில் சேர்வதே அந்த உறுதிப்பாடு. ஜூன் 15 ஆம் தேதி தமது முடிவைத் தந்தைக்குத் தெரியப்படுத்தினார்.

அண்மையில் தம் இளைய மகள் சின்ன ராணியின் இழப்பினால் ஏற்பட்ட தாக்கமே இன்னும் தணியவில்லை. அத்தியாகத்தினால் ஊற்றெடுத்த கண்ணீரே இன்னும் வற்றவில்லை; இந்நிலையில் ஏகாந்த வாழ்வுக்காக இந்த மகளின் பிரிவையும், அதனால் தனது முதிர்ந்த வயதில் ஏற்படும் தனிமையையும் மார்ட்டின் எண்ணிப் பார்த்தார். லேயோனியும் மூன்றாம் முறையாகத் துறவறத்தில் சேர எண்ணம் கொண்டிருந்தார். கடந்த கோடைக் காலத்தில் சகோதரி பொலின் தந்தை மார்ட்டினுக்கு இவ்வாறு கடிதம் எழுதியிருந்தார்: "நாங்கள் ஐவரும் இறைவனின் இல்லத்தில் இருப்பதை நீங்கள் காண வேண்டும். இவ்வின்பத்தை விட வேறு எதுவும் இவ்வுலகில் உங்களுக்குத் தேவையில்லை என்பதே என் விருப்பம். நான் கூறும் இப்பெரு மகிழ்வை விட வேறு எதையும் நீங்கள் விரும்ப மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்."

இத்தாலியப் பயணம் புறப்பட்டதிலிருந்தே மார்ட்டின் தாம் முதுமையின் பிடியில் இருப்பதை உணர்ந்திருந்தார். செலின் தெரேசுவுக்கு எழுதிய கடிதத்தில், "நமது அன்புநிறை தந்தை மிகவும் முதிர்ந்தவராகவும் தளர்ந்தவராகவும் காணப்படுகிறார். திருவிருந்தின் போது நீ அவரைப் பார்த்தால் . . அவர் சாய்ந்து கொண்டு தம்மைத் தாமே தாங்கிக் கொள்ள இயலாமல் தடுமாறி, தடுமாறி முயற்சி செய்கிறார். இந்நிலையைக் காணும் போது எனக்கு அழுகை தான் வருகிறது. துயரம் என் நெஞ்சைப் பிளக்கிறது. விரைவில் அவர் இறந்து விடுவார் என்றே நான் நினைக்கின்றேன்" என்று உருக்கமாகக் குறிப்பிட்டார். அலென்சோனில் நச்சுப்பூச்சி ஒன்று அவரது இடக்காதின் பின்புறம் கடித்து விட்டது. இதனால் ஏற்பட்ட புண் ஆறாமல் உடல் முழுவதும் பரவி விட்டது. உள்ளங்கை அளவுக் பெரிதாக பரவிய அந்தப் புண்ணினால் ஏற்பட்ட வேதனையை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அத்தோடு நாடியிறுக்க நோயினாலும் (Arterio - Sclerosis), குருதிச் சோகை நோயினாலும் (Uraemia) பாதிக்கப்பட்டுத் துன்புற்றார். இவைகளின் காரணமாக, தலைச்சுற்றல், குறைவான நினைவாற்றல், உடனடி



மனநிலை மாற்றங்கள் போன்றவை ஏற்பட்டன. இத்தகைய வேதனைகள் எங்காவது ஓடிவிட வேண்டும் என்ற உந்துதலை அவரது மனத்தில் ஏற்படுத்தின.

ஜூன் திங்கள் 23 ஆம் நாள் விடியற்காலையில் பேரச்சமும், குழப்பமும் ஏற்பட்டது. லேயோனியும் செலினும் தங்களது பணிப்பெண்ணின் உதவியோடு மார்ட்டினைத் தேடி அலைந்தார்கள். 'எங்கோ அவர் தலைமறைவாகி விட்டார். கேரென் குடும்பத்தினருக்கு இச்செய்தி தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர்களும் மருந்தகத்தில் அவரைக் காணவில்லை. பதற்றமான இரவு தொடர்ந்தது. 24 ஆம் நாள் லே ஆவ்ர் (Le Haure) என்ற இடத்திலிருந்து தந்தியொன்று வந்தது. லூயிஸ் மார்ட்டின் பணம் கேட்டுத் தந்தி அனுப்பியிருந்தார். இறுதியாகக் கார்மல் இல்லத்திற்கும் இச்செய்தி அறிவிக்கப்பட்டது. 25 ஆம் நாள் செலின் தன் மாமா இசிதோர் மற்றும் ஏர்னேஸ்ட் மோதெலோன்துடன் (Ernest Maudelonde) லே ஆவ்ர் எனும் இடத்திற்கு மார்ட்டினைத் தேடிச் சென்றனர். கவலை முகவரிகளோடு கையில் முகவரி இல்லாமல் மார்ட்டினைத் தேடி அலைந்தனர்.

மறுநாள் புய்ஸ்ஸொனேவில் உள்ள மார்ட்டின் இல்லத்தில் தனிமையாய் இருந்த லேயோனிக்கு மேலும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இவர்களது வீட்டிற்கு அருகிலிருந்த ப்ரெவோஸ்ட் (Prevost) என்பவரின் வீடு தீப்பிடித்து எரிந்து சாம்பலானது. மார்ட்டின் இல்லத்தின் மேல்பகுதியிலும் தீ பரவியது. ஆனால் தீயணைப்புப் படையினரின் உதவியால் மேலும் பரவாமல் தீ அணைக்கப்பட்டு விட்டது. நல்ல வேளையாகப் பெரும் பாதிப்பு ஏற்படவில்லை.

பதற்றம் நிறைந்த நான்கு நாள்கள் தேடலுக்குப் பின் மார்ட்டின் லே ஆவ்ர் அஞ்சலகத்தில் காணப்பட்டார். அவர் மனம் தெளிந்த நிலையில் இருந்தது. ஆனால் 'துறவியைப் போல் வாழ்ந்து ஏகாந்தத்தில் நிறைந்திட வேண்டுமென்ற' எண்ண ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்டார். இந்தச் செயல் உறுதியாக மீண்டும் அவர் நலம் பெற வழி செய்யும் என்று கூற இயலாது.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் குடும்பத்தில் அதிர்ச்சியை உண்டாக்கின. மார்ட்டினின் பெண் மக்களில் இளையவரான தெரேசுவின் இதயம் கலக்கமடைந்தது. தந்தையை அதிக நெருக்கமாக நேசித்த அவர், தன் தந்தைக்குத் தேவைப்படும் நேரத்தில் தான் உதவாமல் 'சிறை' யில் இருப்பது போன்ற உணர்வே அவரிடத்தில் மேலோங்கி இருந்தது. இந்நிகழ்வைப் பற்றிச் சில துறவிகள் எழுப்பும் விவேகமற்ற கேள்விகளை

எப்படி அவர் தவிர்ப்பது? பயனற்ற கருத்துரைகள் பல வழங்கினர். அவை அனைத்துமே லிசியூவின் வதந்திகளின் எதிரொலிகளாகவே இருந்தன. மார்ட்டின் 'மனநிலை பாதிக்கப்பட்டால். . . அவருடைய அன்புப் பிள்ளைகள் இறைப்பணியாற்ற அவரை விட்டுப் பிரிந்து சென்றதால் தானே? குறிப்பாக அவர் அதிகம் அன்பு செய்த கடைக்குட்டியின் பிரிவினால் வந்த பின் விளைவுகள் தானே?' போன்ற கேள்விகள் எழுந்தன.

இத்தகைய கடினமான தொடக்கத்தினால் தேர்வு நிலையாளரின் மனவலிமை குறையவில்லை. தன் தந்தைக்கு எழுதும் கடிதங்கள் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும், எளியதாகவும் இருக்க வேண்டும் என உறுதி பூண்டார். இத்தாலியப் பயணத்தின் போது விளைந்த இன்ப நிகழ்வுகளையும், மகிழ்ச்சியான அனுபவங்களையும் நகைச்சுவையுடன் நினைவு படுத்தினார். அப்போது விளையாடிய குறும்பு விளையாட்டுக்களை நினைவூட்டி மார்ட்டின் தன் மனத்தில் மகிழ்ச்சியடைய முயற்சி செய்தார். ஆனால் செலினுக்கு எழுதிய கடிதங்கள் முற்றிலும் மாறுபட்டவைகளாக இருந்தன. இத்தகைய கொடுந்துயரங்களுக்கு மேல் தீவிர துயர் அடையும் பொருட்டு, செப வாழ்வில் வறட்சியை அனுபவித்தார். அதுவரை செபம் என்பது அவரது இன்ப அனுபவமாகவே இருந்தது. திடீரெனக் கடுமையான இருளை அவர் உணர்ந்தார். "வாழ்க்கை என்பது பெரும்பான்மையான நேரங்களில் சுமைகள் நிறைந்தது. எத்துணை கசப்பு உணர்வுகள்! அதே சமயம் என்னென்ன இன்ப நெகிழ்வுகள். ஆம்! வாழ்க்கை ஒரு முயற்சியே. ஒரு நாளின் பணியைத் தொடங்குவது கடினமானதே. . . எனினும் இயேசுவைப் பற்றிய உள்ளுணர்வில் நாம் நிலைத்திருத்தல் அவசியம். . அவருக்காக எதையும் செய்வோம். ஆனால் அவர் ஆயிரம் மைல்கள் தூரத்தில் இருப்பதாய் தோன்றுகிறார். . . அவர் தம்மையே மறைத்துக் கொள்கிறார்" என வாழ்க்கைத் தத்துவங்களைக் கூறுகின்றார். ஆனால் அந்த இருள் அனுபவத்தால் தெரேசு தளர்ந்துவிடவில்லை. "போர் புரியப் படைக் கலன்கள் அணிந்து புறப்படும் போராளியைப்" போன்று துடித்து எழுந்தாள். தெரேசுவின் மனப் போராட்டங்கள் பற்றிய வெளி அடையாளங்கள் எதுவும் வெளிப்படவில்லை.

அப்போது மேரி கேரென் தன் தந்தைக்கு மரபுரிமை ரீதியில் கிடைத்திருந்த லமூஸ் (La Musse) என்கிற வளமான பண்ணையில் தமது விடுமுறை நாள்களைக் கழித்துக் கொண்டிருந்தார். அந்நேரத்தில் தெரேசு அவருக்கு நகைச்சுவைகள் பல அடங்கிய கடிதம் ஒன்று எழுதினார். அவரது புகுமுகத் துறவுநிலை உருவாக்கப் பயிற்சியாளரையும் திகைக்க வைத்தார்.



ஜூன் திங்களில் ஒரு நாள் மாலையில் தெரேசுவுக்கு ஊக்கம் வழங்கும் எண்ணத்துடன் அவாது அறைக்குப் புகுமுகத் துறவுநிலை உருவாக்கப் பயிற்சியாளர் சென்றார். அங்குத் தெரேசு தமது நீண்ட இரவுடையில், விரித்து போட்ட கூந்தலுடன் இருக்க கண்டார். அவருக்குத் தெரேசு கொடுத்த மறுமொழி இதுதான். "ஆம் நான் அதிகம் துன்புறுகிறேன். ஆனால் இவற்றை விட இன்னும் கொடிய இடர்களையும் தாங்கிக் கொள்ள என்னால் இயலும் என எண்ணுகிறேன்."

## விடியலுக்கான ஒத்திகை (அக்டோபர் 1888 முதல் ஜனவரி 1889 வரை)

செலின் மற்றும் லேயோனியுடன் தந்தை மார்ட்டின் அலென்சோனில் சிறிது காலம் தங்கியிருந்தார். அதன்பிறகு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாள் மார்ட்டின் மீண்டும் பக்கவாத நோயினால் தாக்கப்பட்டார். குடும்பச் சூழல் நிலையற்றதாகிப் போனது. தெரேசு தமது ஆறுமாத தேர்வு நிலைப் பயிற்சிக்குப் பின் அக்டோபர் திங்களிலேயே திருவுடையைப் பெற்றிருக்க வேண்டும். பேராயர் யுகோனின் அவர்களின் அனுமதியோடு துறவியர் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் அனைவரும் தெரேசுவுக்குத் திருவுடை வழங்க இசைந்தனர். ஆனால் அருட்பணியாளர் தெலாத்ரோயெத் மட்டும் இன்னும் சில நாள்கள் காத்திருக்கும்படி கூறித் தடையாயிருந்தார். தந்தை மார்ட்டினுக்குக் கார்மல் சபை மீது என்றுமே பற்று உண்டு. தன் 'சின்ன ராணி' தெரேசு திருச்சடங்கின் போது அணியும் திருவுடையை அழகு செய்வதற்காக அலென்சோனின் நூற்பின்னல் சிலவற்றை ஏற்கெனவே அனுப்பி விட்டார்.

அருட்பணியாளர் பிஷோன் கனடாவுக்குச் சென்றுவிட்டதால், இந்தத் திட்டங்களிலிருந்து மாற்றம்பெற அவரால் உதவி செய்ய இயலாமற் போய்விட்டது. செலின் தம் ஆன்மீக இயக்குநரின் பிரிவால் வருந்தி ஏக்கமுற்றார். மேலும் செலினே வீட்டின் முழுப் பொறுப்புகளோடு தந்தையைக் கண்காணித்துக் கொள்ளும் பணியையும் ஏற்றுக் கொண்டார். லேயோனி, மாதா மினவுதல் சபையில் மீண்டும் சேர்வதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார். "இயேசு இன்னும் நம்மோடு இருக்கிறார்" என்று ஆறுதலாகத் தெரேசு செலினுக்குக் கடிதம் வரைந்தார். தமது உள்ளார்ந்த வளர்ச்சியை எடுத்துரைப்பதற்காக இயேசு சபையைச் சார்ந்த அருட்பணியாளர் பிஷோனுக்குத் திங்கள் தோறும் ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். எட்டு வருடங்களில் ஏறக்குறைய 50 கடிதங்கள் எழுதி யிருந்தார். ஆனால் அவற்றில் ஒன்று கூடப் பாதுக்காக்கப்படவில்லை.

செலின் தன் தந்தை மற்றும் லேயோனியுடன் அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் லே ஆவ்ருக்கு சென்றார். அங்குப் புதிய உலகம் காணப் புறப்பட்ட தன் ஆன்மீக இயக்குநர் அவர்களுக்குப் பிரியாவிடை கொடுத்து அனுப்ப முயற்சி செய்தார். ஒன் ஃப்ளேர் (Hon Fleur) என்னுமிடத்தில் மார்ட்டின் கடுமையான மனத் தாக்குதலுக்குள்ளாகித் துயரமடைந்தார். அது ஓர் கொடிய பயணம். உடல் நலம் குன்றிய மார்ட்டின் விம்மினார். 'மரணம் தன் முழு வலிமையுடன் என்னை இழுக்கின்றது" என்ற கவிதையை அசைபோட்டுக் கொண்டிருந்தார். அருட்பணியாளர் பிஷோன் லே ஆவ்ரில் இல்லை. இறுதியாக அவரைப் பாரீசில் கண்டு கொண்டனர். மார்ட்டினின் மனநிலை அருட்பணியாளர் மனத்தை நெகிழ வைத்தது: "பெரு மதிப்பிற்குரிய முதிர்ந்தவர் தமது இரண்டாம் மழலைப் பருவத்தை அடைந்து விட்டார். அவர் விண்ணகம் செல்லும் நாள்கள் வெகு தொலை வில் இல்லை" எனச் சகோதரி தூய இதய மரியாவுக்கு கடிதம் எழுதினார்.

இந்த இக்கட்டான சூழலில் திருவுடை பெறும் நாள் தள்ளிப் போடப்பட்டது. ஆயர் அவர்களுக்குச் ஜனவரித் திங்களில்தான் நேரம் கிடைக்கும் எனச் செய்தி கிடைத்தது. "சிறிய செம்மறி (தெரேசின் மற்றுமொரு செல்லப் பெயர்) எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் தடைக் கற்களைச் சந்தித்தது என்று பின்னர் மொழியப்படும்" என்று அருட்பணியாளர் பிஷோன் குறிப்பிட்டார்.

டிசம்பர் திங்களில் மார்ட்டின் உடல்நிலையில் மாற்றம் ஏற்பட்டது. மறைமாவட்டத் தலைமை ஆலயப் பங்குப் பணியாளர் மையப்பீடம் ஒன்று வாங்குவதற்காக நிதி திரட்டத் தொடங்கியிருந்தார். மார்ட்டின் அதற்கான மொத்தத் தொகையான 10,000 பவுண்டுகளையும் கொடுத்தார். இசிதோர் தமது மருந்தகத்தைச் சில நாள்களுக்கு முன்பாகத் தான் விற்றார். மார்ட்டின் ஆலய நலன்களுக்காகக் கொடுத்த தொகை அவருடைய தாராள குணத்தின் எல்லை மீறிய ஒன்றாக இசிதோர் கூறினார். தெரேசு தந்தையின் பரந்த உள்ளத்தைப் பாராட்டினார். ஆனால் பனாமா கால்வாய் என்ற முதலீட்டுப் பங்கில் 50,000 பவுண்டுகளை மார்ட்டின் இழந்தது பெரும் வருத்தத்திற்குரியது. அம்முதலீட்டுப் பங்கில் அப்போது நடந்த பொருளா தார ஊழல் பிரெஞ்சுக் குடியரசையே நிலைகுலையச் செய்தது.

இறுதியாக 1889 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் ஒன்பதாம் நாள் புதன்கிழமை தெரேசு திருவுடை பெறுவதற்கான நாள் என அறிவிக்கப் பட்டது. இயேசுவின் பிறப்பு அறிவிப்பு நாளன்று தெரேசு கார்மல் இல்லத் தில் சேர்ந்தார். அதன் ஒன்பது மாத நிறைவு நாளன்று திருவுடை பெறும்



வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. தேர்வு நிலையாளர் தெரேசுவுக்குப் பூரண மகிழ்ச்சி. காரணம் தான் எதிர்பார்த்தபடியே நாள்களும் நிகழ்வுகளும் பொருத்தமாக அமைந்திருந்தது தான்!

## சாதனை புரிந்த வேதனை ( 5 - 9 ஜனவரி 1889)

ஜனவரி 2 ஆம் நாள் தெரேசு தமது பதினாறாவது பிறந்த நாளினைக் கொண்டாடினார். அதே மாதம் 5 ஆம் நாள் மாலை தியானத்தைத் தொடங்கினார். இன்னல் இடையூறுகள், தனிமையில் வாழும் போது ஏற்படும் துன்ப துயரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பதினான்கு குறிப்புகளைத் தம் சகோதரிகளுடன் பகிர்ந்து கொண்டார். கடந்த சில மாதங்களாக அவர் அனுபவித்து வந்த வறட்சி, மூன்று அல்லது நான்கு மணி நேரத் தின செபத்தின் போது உச்ச நிலையை அடைந்தது. "இயேசுவின் அனுபவத்தோடு இணைந்துப் பார்க்கும் போது இவ்வறட்சி வெறுமையானது தான்!" என்றார் தெரேசு. வறட்சி! தூக்கம்! மாறி மாறித் தெரேசை வாட்டியது. காலம் தாழ்த்தித் துயில் எழ அனுமதி பெற்றிருந்தும் தேவையான தூக்கத்தை அவர் பெறவில்லை. "அனைத்து ஆறுதல்களும் பறிக்கப்பட்டன. இருளில், இருண்ட நிழலில். . . உரையாடலைத் தொடர இயேசு ஒரு வழிவகையும் செய்வதில்லை!" எனத் தெரேசு மொழிந்தார்.

அருட்பணியாளர் தொமெனினது தியான உரைகள் ஆழமான தாக் கத்தைத் தெரேசுவின் உள்ளத்திலே ஏற்படுத்தியிருந்தன. எனவே, அதன்பிறகு தனிமைத் தியானமோ அல்லது குழுத்தியானமோ, எதுவென்றாலும் அச்ச உணர்வையே அவருக்குக் கொடுத்தது. ஆனால் சகோதரி ஆக்னெசு செல்லமாக அழைக்கும் "சிறிய பந்து" (தெரேசு) இத்தகைய இடர்களின்றித் துணிந்து மேலே எழுந்தது.

"இயேசு அமைதியாகத் தூங்கி இளைப்பாற விரும்பினால் ஏன் நான் அவரைத் தடுக்க வேண்டும்? சடங்கின் போது என்னோடு அவர் இல்லாமற் போனாலும் நான் மகிழ்ச்சியே அடைவேன். . . நான் அவரை அதிகமாக நேசிக்க விரும்புகிறேன். இதுவரை அவர் பிறரால் நேசிக்கப்பட்டதை விட அதிகமாக நான் அவர்மீது அன்பு பாராட்ட விழைகின்றேன். . . என் இதயம் அவருக்காகப் பரந்து விரிவதை என்னாலேயே நம்பமுடியவில்லை. . . இம்மண்ணில் வாழும் குற்றம் புரிவோர் அனைவரையும் மாற்ற விரும்புகிறேன். மேலும் கழுவாய் நிலையிலிருக்கும் அனைத்து ஆன்மாக் களையும் மீட்க விழைகின்றேன்" எனத் தெரேசு தமது ஆவலை வெளியிட்டார்.

ஒரு நெருக்கடியான உணர்வுப் போராட்டத்தினால் இன்னலுற்ற தெரேசு கூறினார்: "எந்தவொரு படைப்புப் பொருட்களோடும் பிணைத்துக் கொள்ள அனுமதிக்காமல் விரைவில் தமக்குத் துணைவராகப் போகும் ஒருவருக்கு நன்றி கூறினார். மகிழ்வின் நிழலை எனக்குக் கொடுத்தாலும் என் முழு ஆற்றலோடு அதனைப் பற்றிக் கொள்வேன். என் முழு இதய வலிமையோடு எனதாக்கிக் கொள்வேன் என்பதை அவர் நன்றாகவே அறிவார்."

அந்தத் தியான நாள்களில் மரணம் ஒன்று நிகழ்ந்தது. அதன் விளைவாகத் திருவுடைச் சடங்கு பத்தாம் நாளுக்கு மாற்றப்பட்டு விட்டது. என்பதைத் தெரேசு அறிந்தார். நாள் ஒரு பொருட்டல்ல! இயேசுவே காலத்தின் தலைவர்; அதன் ஆசான்.

"உடன் வாழ்வோரிடமிருந்து வந்த ஏளனப் பேச்சுக்கள்" தரக் குறைவாக இருந்தன. மகிழ்ச்சியைக் கெடுக்கும் கருத்துக்களைக் கூறுவதற்குச் சகோதரி வின்சென்ட் தே - பவுல் கிடைத்த வாய்ப்புகளைத் தவறவிடுவதில்லை. எனினும் தெரேசு அவரைப் பார்த்துப் புன்னகைப்பார். "என்னைச் சூழ்ந்திருப்போர் அனைவரும் நல்லவர்களே. ஆனால் எனக்குத் தெரியாமலே ஏதோவொன்று என்னை வெறுக்க வைக்கிறது" என்றார் தெரேசு.

தந்தை உடல்நிலை குறித்து இன்னும் பதற்ற நிலை நீடித்தது. சடங்கின் போது அவர் உள்ளத்தில் எழும் உணர்ச்சிக் கொந்தளிப்பை அவரால் தாங்கிக் கொள்ள இயலுமா ? அதைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்க யாரும் துணியவில்லை. தலைமைச் சகோதரி இயேசுவின் ஆக்னெசு 25 ஆண்டுகளுக்குப் பிறகு அன்று அவருக்கிருந்த அச்ச உணர்வுகளை நினைவு கூர்ந்தார்: "எங்கள் இனிய தந்தை எந்த நொடியிலும் நோயினால் தாக்கப்படக்கூடிய ஆபத்து நிலையில் இருந்தார். சடங்கின் போது ஏதேனும் விபரீதம் நிகழக்கூடும் என அஞ்சினேன். அதனை நினைவில் நிறுத்திச் சிந்தித்தால் தற்போது கூட நான் நடுநடுங்குகின்றேன். சடங்கின் முன்தினம் மாலை சிற்றாலயத்தில் அமர்ந்து, தந்தை அழுது கண்ணீர் வடிக்காமலிருக்க வேண்டும் என்று கடவுளிடம் மன்றாடினேன்."

கார்மலில் தமது ஒன்பது மாத வாழ்க்கையைத் தெரேசு திரும்பிப் பார்த்தார். "பதினாறு வயது மணமகளான" அவர் எடுத்து வைத்த துறவு வாழ்வின் முதல் அடிகளில், "மலர்களை விட முட்களையே" சந்தித்தாகத் தெரேசு அறிக்கையிட்டார். புது உணவு முறை, தூக்கமின்மை, உடல் நலமின்மை இவைகளை விட அவமானங்கள், அமுக்கப்பட்ட மனவெழுச்சி



கள், குழு வாழ்க்கையின் வேதனைகள் போன்றவைகளே முட்களாக மாறிச் சோகத்தை அவருக்கே சொந்தமாக்கி விட்டன. "தந்தை மட்டும் நோயினால் பாதிக்கப்படாதிருந்தால் இத்தகைய வேதனைகளையெல்லாம் ஒரு பொருட்டாகவே கருதியிருக்க மாட்டார். அவர் உடன் வாழ்வோர், அவரைச் சிறிய செம்மறி, இயேசுவின் விளையாட்டுப் பொருள், சிறிய பந்து, சிறிய நாணல், அணு என்னும் செல்லப் பெயர் சொல்லி அழைத்ததை மகிழ்வுடன் தெரேசு ஏற்றுக் கொண்டார். இவை அனைத்தும் அவரை மறைவான வாழ்வுக்கும், எளிய நிலைக்கும், சுய கையளிப்பிற்கும், அமைதிக்கும் அழைக்கும் அறை கூவல்களாக எண்ணினார். ஆனால் அவர் இதயத்தில் நெருப்புப் பொறி ஒன்று கனன்று கொண்டிருந்தது.

தெரேசு தமது திருவுடையைப் பெறுவது, தமது அன்புடை நெஞ்சமாம் இயேசுவுக்கு முழுமையாகத் தம்மையே கொடையெனக் கொடுப்பதால் வெளி அடையாளமெனக் கருதினார். அவர் விழிக்காதிருந்தால் என்ன கவலை ? அவர் கடந்து வந்த துயரம் நிறைந்த நாள்களை இந்தக் கண்ணோட்டத்திலே தான் பார்த்தார். "அவரையன்றி மற்ற அனைத் திலுமிருந்தும் எனது உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும். இதுவே இந்தத் தியானத்தின் பொழுது இயேசு எனக்குச் செய்த பெரும் பணியாகும்" என உறுதி எடுத்தார்.

இவ்வாறு அவருடைய தேர்வு நிலைப் பயிற்சி நிறைவடைந்தது. கார்மலில் நுழைந்தவுடன் "வேதனை தனது கரங்களை நீட்டியது. நானும் அன்புடன் என்னையே கையளித்தேன்" எனத் தெரேசு உறுதியாகக் கூறினார். இத்தகைய ஆரம்ப காலத் துயர்களை வேறு எந்த ஒரு இளம் பெண்ணாவது அனுபவித்து இருந்தால் தமது இலக்கிலிருந்து விலகி இருப்பார்.

## வானம் இறங்கி வந்தது (ஜனவரி 10, 1889)

தெரேசு அழகிய நீண்ட வெண்மை நிறப் பட்டாடை அணிந்திருந்தார். அவரது அழகிய கூந்தல் தோளைத் தொட்டுத் தழுவியது. அத்தை கொடுத்த லீலி மலர்கள் கிரீடமாக வனப்புத் தந்தன. தந்தையின் கரங்களைப் பற்றிக் கொண்டு புதுமணமகள் போன்று மகிழ்ச்சி அடைந்தவராய்த் தெரேசு கார்மல் சிற்றாலயத்தின் நடைபாதையில் சென்றார். பேராயர் யுகோனின் சிறிய உரையொன்று ஆற்றினார். திருவுடைச் சடங்கில் ஒரு தவறு புரிந்தார். அதாவது தூய ஆவியின் பாடலைத் தொடங்குவதற்குப் பதிலாக நன்றிப் பாடலைத் தொடங்கி விட்டார். புகுமுகத் துறவுநிலை பயிற்சியைத் தொடங்க இருந்த தெரேசுவின் முகம் ஒளிமயமாய்த் தோற்றமளித்தது. உள்ளம்

மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்து. வானமே கீழே இறங்கி வந்தது போன்ற உணர்வு அனைவரின் மத்தியிலும் திகழ்ந்தது. மார்ட்டின் "என்றுமே இல்லாத அளவுக்கு அழகாக, மதிப்பு மிக்கவராகத் திகழ்ந்தார். அனைவராலும் அவர் புகழப் பெற்றார்."

மீண்டும் அடைப்புப் பகுதி நோக்கித் தெரேசு அடி எடுத்து வைத்த தற்கும் இயற்கையின் சூழலுக்கும் இயைபு இருப்பதாக கண்டுணர்ந்து பேருவகைக் கொண்டார். பூந்தோட்டத்தின் மீது வெண்திரை போட்டிருந்தது பனி.

தெரேசு இதனை மிகவும் விரும்பினார். இதனையே இறைவனிடமும் கேட்டார். இத்தகைய மிதமான ரம்மியமான சூழல் உருவாவதற்கான அறிகுறியே தெரியவில்லை. தெரேசு தமது இனிய துணைவரின் கரிசனை அந்த இயற்கைச் சூழலில் வெளிப்பட்டதாக உணர்ந்தார். தெரேசுவின் துணைவர், நுண்ணிய விருப்பங்களை கூட அவருக்கு நிறைவேற்றித் தந்தார். "என் ஆடையில் வீழ்ந்த பனித்துளி ஓர் அருங்குறியாகத் தோன்றியது- நகரம் முழுமையும் ஆழ்ந்த வியப்பில் மூழ்கியது" என்றார் தெரேசு.

அந்த நொடி முதல் தெரேசு கார்மல் உடையை பெரு மகிழ்வுடன் அணிந்தார். கையினால் நூற்று நெய்த வழுவழுப்பற்ற ஆடை, காவி நிற உத்திரியம், வெள்ளை நிற முக மூடாக்கு, தலையணி, செபமாலையுடன் சேர்ந்த தோல் இடைக் கச்சை, கம்பளிக் காலுறைகள், கயிற்றுச் செருப்புகள் அனைத்தும் அணிவிக்கப்பட்டார். கொண்டாட்டங்களுக்குப் பிறகு அன்றாட வாழ்க்கை மீண்டும் தொடங்கியது.

திருவுடை அணிந்தபிறகு தெரேசு எழுதிய கடிதங்களில் சிறிய மற்றும் சிறப்பு மிக்க மாற்றம் காணப்பட்டது. அதன்பிறகு தன்னுடைய கடிதத்தில் "சகோதரி குழந்தை இயேசுவின் தூய திருமுகத்தின் தெரேசு" என்றே பெரும்பாலும் கையொப்பமிட்டார். 1885 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் நாள் முதல் டூர் நகர் தூய திருமுகத் தலைமை அறச் சங்கத்தில் தெரேசுவின் பெயரும் இணைத்துக் கொள்ளப்பட்டது. டூர் நகரத் திருமுகம் என்ற ஓர் பக்தி முயற்சி, சகோதரி தூய பியேரின் மரியா (Marie of St. Pierre) மற்றும் தியூபோன் (Dupont) போன்றவர்களால் பரப்பப்பட்டது. லிசியூ கார்மல் சிற்றாலயத்தில் இரவும் பகலும், திருமுகப் படத்திற்கு முன்பாக எண்ணெய் விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. தனது பெயருக்கேற்றபடி, எவ்வாறு குழந்தை இயேசு புல் அணையிலிருந்து கல்வாரி வரை தியாக வாழ்வு வாழ்ந்தாரோ அவ்வாறே தாமும் வாழ வேண்டும்



என்ற கண்டுபிடிப்பைத் தமது ஒன்பது மாத அனுபவத்திலிருந்து பெற்றுக் கொண்டார். 1886 டிசம்பர் 25 ஆம் நாள் முதல் கிறிஸ்மஸ் என்பது ஒரு சோகக் கதையல்ல; மாறாக வல்மையின் மறைபொருள் என்பதை உணர்ந்து கொண்டார். அவரது துறவற வாழ்வின் வைகறையிலேயே தான் தேர்ந்தெடுத்த பெயரின் நிறைவை எய்த விரும்பினார். இயேசுவின் பாதச் சுவடுகளைத் தொடர உண்மையாகவே, உறுதி கொண்டிருந்தார். "சிலுவையின் முத்திரையே உன் உறுதி மொழியை அருளுடையதாக்குகிறது. . . இயேசு தமது மழலைப் பருவத்தையும், துயர்களையும் உனக்குத் தந்திருக்கிறார். எப்படிப்பட்ட நற்பேறு உடையவர் நீர்? என்னே ஈடு இணையற்ற திருக்கொடை! என அருட்பணியாளர் பிஷோன் கனடாவிலிருந்து தெரேசுவுக்குக் கடிதம் எழுதி அவரது தேர்ந்தெடுப்பைப் பாராட்டித் திடப்படுத்தினார்.

6


# புகுமுகத் துறவு நிலையாளர்

(10 சனவரி 1889 முதல் 24 செப்டம்பர் 1890 வரை)

*"அவரது திருமுகம் மறைக்கப்பட்டது. எனவே, அவர் தாழ்த்தப்பட்டார்; எவரும் அவரை அறிந்து கொள்ளவில்லை. நானும் என் முகத்தை மறைக்க விரும்புகிறேன்."*

## புதிய பாதை

புகுமுகத் துறவு நிலையாளர் (Novice) தெரேசுவுக்கு புதிய பணியொன்று தரப்பட்டது. உணவறையில் நீரையும் மற்றும் ''வாற் கோதுமை பானத்தையும்", மாடிப்படிகளுக்குக் கீழ் "தூய அலெக்ஸ்' என அழைக்கப் பெற்ற மறைவான பகுதியில் ரொட்டியையும் எடுத்து வைக்க வேண்டும். இருள்நிறைந்த அவ்விடத்தில் உள்ள கரும் சிலந்திகள் அவருக்குப் பேரச்சத்தை விளைவித்தன. தொடக்க நேரமுதல் குழுப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். பலவித மணிகளால் ஓசை எழுப்புதல், உணவருந்தும் போது நூல்கள் வாசித்தல், செப அறையில் திருப்புகழ் பாடுதல் போன்றவற்றில் ஆர்வமாக தம்மையே ஈடுபடுத்திக் கொண்டார். சகோதரி இயேசுவின் ஆக்னெசு உணவறைப் பொறுப்பாளராக இருந்ததால் இரு உடன்பிறப்புகளுக்கும் பேசி மகிழ வேண்டும் என்கிற எதிர்பார்ப்புப் போராட்டம் மனத்தை வாட்டி வதைத்தது. ஆனால் புகு முகத்துறவி துணிவுடன் அவ்ஆவலை எதிர்த்து நின்றார். குடும்பச் சூழல்



புகுமுகத் துறவு நிலையில்.

கார்மல் இல்ல வாழ்வில் புத்துயிர் பெற்று விடக்கூடாது என்கிற அச்ச உணர்வு அவரது மனத்தில் மேலோங்கி நின்றது.

பிப்ரவரித் திங்கள் பதின்மூன்றாம் நாள் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு இல்லத் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார். சகோதரி மரி ஃபிலமேன் (Marie Philomene) புகுமுகத் துறவுநிலைப் பயிற்சியை முடித்துச் சென்றுவிட்டார். சகோதரி மார்த் (Marthe) மற்றும் சகோதரி தூய இதய மரியாவும் தெரேசுவுடன் இணைந்து அங்கிருந்தனர்.

1889 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் இரு புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. தெரேசு, தமது புதிய - பெரிய திருவுடையில் பொதியப் பட்டவராய், கொழுத்த கன்னங்களில் புன்னகை கொப்பளிக்க அடைப்புப் பகுதியில் சிலுவையருகில் நிற்கும் போது புகைப்படங்கள் எடுக்கப்பட்டன.

கார்மல் சபையினர் தங்கள் உணவாக அதிக மாச்சத்து நிறைந்த உணவுப் பொருட்களையே உண்டனர். எனவே, தெரேசுவின் உடல் பெருத்து, உடல் எடையும் கூடியது. மேலும் அவருடைய 21 வயது வரை எந்த நோன்பும் கடைப்பிடிக்கவில்லை. எனவே தினமும் செரிமான மின்மையால் அவதியுற்றார். தெரேசு நோயுறும் போது தம்மிடம் தெரிவிக் கும்படி சகோதரி வான தூதர்களின் மரியா கட்டளையிட்டிருந்தார். எனவே, தெரேசு தினமும் அவரது அறையின் கதவைத் தட்டினார். ஆனால் தனது கட்டளையை மறந்தவராக சகோதரி மரியா, அவரின் தீரா நோயைப் பற்றிக் குறை கூறினார். இருவரிடையே கலந்துரையாடல் கசந்தது. உறவுப் பரி மாற்றம் கடினமாகி விட்டது.

## பெரும் தலைக்குனிவு (12 பிப்ரவரி 1889)

மார்ட்டின் தமது சின்னராணியின் திருவுடை நிகழ்வைக் கண்டு "வெற்றிக் களிப்பில்" மிதந்தார். அதன்பிறகு பன்னிரெண்டு நாள்கள் கழித்து அவரது உடல்நிலை மோசமாகியது. அவர் படுத்த படுக்கையானார். செலின் தமது பராமரிப்புப் பணியைச் செவ்வனே செய்து வந்தார். திடீரென மனப் பாதிப்பால் குழப்பநிலை உருவானது. எதிர்பாராத நெருக்கடி ஏற்பட்டது. "நோயாளி அவரது கற்பனையில் அச்சமூட்டும் நிகழ்வுகளைக் காட்சிகளாகக் கண்டார்; கொலைகளையும், போர்களையும் பார்த்தார்; போர்ப்பறை ஒலி மற்றும் பீரங்கிகள் முழக்க ஒலிகளைக் கேட்டார்; எங்களைப் பாதுகாக்கத் தமது கைத்துப்பாக்கிகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். அதனைக் கீழே வைக்க இணங்கவில்லை" என்று செலின் கூறினார். இசிதோர் கேரெனுக்குச்



செய்தி அறிவிக்கப்பட்டது. தம் மருமக்கள் மற்றும் மரியா கொசெரோன் (Maria Cosseron) என்ற பணிப்பெண்ணின் உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்தார். எனவே அவருடைய மருத்துவ நண்பர் ஒகுஸ்த் பெனுவா (AGuste Benoit) என்பவரின் உதவியுடன் மார்ட்டின் கையிலிருந்த கைத்துப்பாக்கியைக் கைப்பற்றினார். அவரை மருத்துவரின் விருப்பப்படி கயென் (Caen) நகரிலுள்ள போன் சோவேர் (Bon Sauveur) மனநோய் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல முடிவெடுக்கப் பட்டது.

மார்ட்டின் மீண்டும் அமைதியானார். எனினும் உலாவச் செல்லும் எண் ணத்தில், மனநோய் இல்லத்திற்கு அவரை அழைத்துச் சென்றனர். வெளியே பனி பெய்து கொண்டிருந்தது. செல்லும் வழியில் கார்மல் இல்லத்தின் உள்ளே சென்றனர். அங்குப் பொலீன் மட்டும் தந்தையைக் கண்டார். தமது கைக்குட்டையில் சுற்றி வைத்திருந்த சிறிய மீன்களை அவருக்குக் கொடுத்தார். இவர் பலமுறை இவ்வாறு தாம் பிடித்த மீன்களைக் கொண்டு வந்து வெளியில் இருக்கும் சகோதரிகளுக்குக் கொடுத்திருக்கிறார்.

கயென் மனநோய் இல்லத்தின் ஒரு பகுதியைக் கண்காணித்து வந்த சகோதரி கோஸ்டார்டு (Costard) அவர்களின் பொறுப்பில் மார்ட்டின் இருந்தார். அங்கே அவர் மூன்று ஆண்டுகள் தங்கியிருக்க வேண்டி யதாயிற்று. ஒரு வாரத்திற்குப் பின் லேயோனியும் செலினும் மனநோய் இல்லத்திற்கு அருகிலிருந்த வின்சென்ட் தே பவுல் விடுதியில் சேர்ந்தனர். அங்கிருந்து பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாள் முதல் மே திங்கள் 5 ஆம் நாள் வரை தினமும் மனநோய் இல்லத்திற்குச் சென்று தந்தையின் உடல் நலம் பற்றி விசாரித்து வந்தனர். வாரம் ஒரு முறை மட்டுமே நோயாளியான தந்தையைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் கயெனுக்கும், லிசியூ வுக்குமிடையே கடிதப் பரிமாற்றங்கள் பெருகின.

கற்பனைக்கு எட்டாத ஆனால் உண்மையில் நடந்த நிகழ்வு; 'குலமுதுவர்" (Patriarch) "மனநிலை பாதிக்கப்பட்டவர்களோடு" வாழ்ந்து வந்தார். "எனது திருவுடை பெற்று ஒரு மாதம் முடிந்த பிறகு, அதாவது பிப்ரவரி 12 ஆம் நாள், என் அன்புத் தந்தை மிகவும் அவமானமும், சோகமும் நிறை கிண்ணத்திலிருந்து வாழ்வைப் பருக நேரிடும் என்பதை நான் எண்ணிப் பார்க்கவே இல்லை. இதைவிட மிகுதியான துயரத்தை என்னால் தாங்கியிருக்க இயலுமா? என என்னால் அன்றையத் தினம் கூற முடிய வில்லை" எனத் தெரேசு கலக்கமடைந்து கூறினார்.

மார்ட்டின் குடும்பம் சிதறியது. லிசியூ நகரைச் சுற்றிப் பரவலான பரிதாப

உரையாடல்களும், அவமானப் பேச்சுகளும் பரவின. நிகழ்வுக்கெதிரான வதந்திகளும் பரவின. இவையனைத்தும் விவேகமற்ற முறையில் கார்மல் இல்லத்திலும் எதிரொலித்தன. மூன்று சகோதரிகளும் உறுதியாய் நிலைத்து நின்று ஒருவரையொருவர் ஆற்றுப் படுத்திக் கொண்டனர். இத்தகைய சோதனைகள் உணர்த்தும் அர்த்தம் என்ன?

இரண்டு நெருக்கடி நிலைமைகள் தீர்ந்தவுடன் மார்ட்டின் இழந்துள்ள அமைதியை மீண்டும் பெற்றார். அவர் தமது மென்மைக் குணத்தாலும், பணிவு இணக்கத்தாலும் தமக்கு மருத்துவ உதவி புரிந்த மருத்துவர் குழுவையே வியப்பில் ஆழ்த்தினார். அவரது அவமானத்தையும், தலைக்குனிவையும், துயரத்தினையும் யார் சொல்லத் துணிவர்? ஒரு மருத்துவரிடம் மார்ட்டின் இவ்வாறு கூறினார்: "நான் பிறரைக் கட்டளையிட்டுப் பணி செய்ய வைத்தே பழக்கமுற்றவன். ஆனால் இப்போது பிறருக்குப் பணிந்து அவர் சொல்வதைக் கேட்கும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டேன். இது மிகவும் கடினமானது. ஆனால் கடவுள் ஏன் எனக்கு இந்தத் துயரங்களைத் தந்துள்ளார்? என் வாழ்வில் ஒருபோதும் அவமானம் என்பதையே அறிந்ததில்லை. அந்த அனுபவம் தற்போது எனக்குத் தேவை தான்". "நல்லது! நீங்கள் கூறுவதும் சரியே!" என்று மருத்துவர் பதில் கூறினார்.

தெரேசு, பதினைந்து மாதங்களாகச் செலினைச் சந்திக்காமல் பிரிந்திருந்தார். இந்தப் பிரிவு அவரை ஆழ்ந்த அமைதிக்கு இட்டுச் சென்றது. திருவழிப்பாடு மற்றும் அவரது ஆன்மீக வாசகம் பேன்றவை வழியாக இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தித் தியானித்து அக மகிழ்ந்தார். இளம் நங்கை தெரேசுவின் நெஞ்சுரம் வியப்புக்குரியது. எனினும் சில நேரங்களில் அவரால் தமது கண்ணீரை அடக்க முடியவில்லை. புகுமுகத்துறவு நிலைப் பயிற்சி நாள்கள் முழுவதுமே இத்தகைய இடையூறுகள் அவரைத் தாக்கின. இதயத்தைப் பிளந்தன.

ஏப்ரல் திங்கள் கேரென் குடும்பத்தினர் லிசியூவில் ஷோஸ் (Chaussee) என்ற தெருவில் உள்ள 19 ஆம் எண் வீட்டை விலைக்கு வாங்கினர். அங்குச் செல்வதற்கு முன்பு புய்ஸ்ஸோனேவில் லேயோனி மற்றும் செலினுடன் தங்கினர். கயென் விடுதியில் தங்குவதால் எவ்விதப் பலனும் இல்லை என்பதை உணர்ந்த இவர்கள் இருவரும் புய்ஸ்ஸோனேவுக்குத் திரும்பி இருந்தனர். ஜூலை மாதத்தில் அனைவரும் புது மனை புகுந்தனர்.

ஜூலை 18 ஆம் நாள் மார்ட்டினது "துயரம்" உச்ச நிலையினை எட்டியது. தமது உடைமைகளின் மீது அவருக்குரிய பொருளாதார, நிர்வாக உரிமையைத் துறந்து விடுவதாகச் சட்டச் செயற்குறிப்பில் கையெழுத்திடும்படி இசிதோர் கோரினார். அவரது விவேகமற்ற பரந்த தாராள குணத்தினால் பொருளாதார நிலைமையில் குடும்பம் முழுவதையுமே அழிவுக்கு உட்படுத்தி விடுவார் என்று அஞ்சியே இசிதோர் இந்த முடிவுக்கு வந்தார். அன்றைய தினம் நோயாளி மார்ட்டின் முழு மனத் தெளிவுடன் இருந்தார். "ஓ என் குழந்தைகள் என்னைக் கைவிடுகிறார்கள்" என்று தேம்பித் தேம்பி அழுதார்.



## சிறகின் நிழலில்

தெரேசு நீண்ட கால வேதனைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வழி தெரியாமல் தவித்தார். துயரங்கள் மனத்தைக் கசக்கிப் பிழிந்து கண்ணீர்க் கடலில் தவிக்க விட்டதைத் தமது பல கடிதங்கள் மூலம் விளக்கினார். எனினும் ஜூலைத் திங்கள் ஆரம்ப நாள்களில் எதிர்பாராத அருள் ஒளி அவருக்குக் கிடைத்தது. அந்த ஞான ஒளியின் வெளிப்பாடு ஒரு வாரகாலம் நீடித்தது. பூந்தோட்டத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு குகை இருந்தது. அது "தூய மகதலேன் நினைவு தனிமை மனை' என அழைக்கப்பட்டது. அங்கு தெரேசு புதிய அருளை அனுபவித்தார். "எனக்காகப் பூமியில் உள்ள அனைத்துப் படைப்புகளின் மீதும் திரையொன்று விரிக்கப்பட்டாற்போல் தோன்றியது. நான் முழுவதுமாகத் தூய மரியன்னையின் தலையணியின் கீழ் மறைக்கப்பட்டேன். அந்தச் சந்தர்ப்பத்தில் உணவறைக்குப் பொறுப்பாளாராக நியமிக்கப்பட்டிருந்தேன். பல பணிகளை நான் செய்தாலும், பணி செய்யாத எண்ணமே என்னில் எழுந்தோங்கி நின்றது. யாரோ எனக்கு ஒரு உடலை வாடகைக்கு அளித்தது போலத் தோன்றியது. அந்த வாரம் முழுமையுமே அதே நிலையில் நான் இருந்தேன்." என எழுதுகின்றார்.

வழக்கமாகச் செப நேரத்தில் தூக்கம் அவரை ஆட்கொண்ட போது துன்ப துயரங்களை அனுபவித்தார். சில வேளைகளில் தூங்குவதற்கு முயற்சி எடுத்தாலும் பலனின்றிப் போயின. இதுவும் ஓர் தனிப்பட்ட அருட்கொடை என்றே தெரேசு கருதினார். தெரேசு சகோதரி ஆக்னெசுடன் உணவறையில் பணிபுரியும் போது இருவரும் உரையாடுவதற்கு அனுமதி பெற்றிருந்தனர். சகோதரி ஆக்னெசு பேசுவதைக் கவனத்துடன் தெரேசு செவி மடுத்தார். ஆனால் அவர் நம்பியிருந்த எதிர்ப்பார்ப்புக்கிணங்க தெரேசு அவருக்குப் பதில் மொழி கொடுக்கவில்லை. இந்நிலையை மனத்தில் நிறுத்தி ஒரு நாள் சகோதரியிடம், "என்னை அறியாதவர் போல் காட்டிக்கொள்ளும்

நிலைக்கு நீர் வந்துவிட்டீர்!' என்று சகோதரி ஆக்னெசு கூறினார்.

பாவம் செய்தல் பற்றிய அச்சம் தெரேசை விட்டு அகலவில்லை. தொடர்ந்து மனப்போராட்டம் அவருக்கு ஏற்பட்டது. சில வேளைகளில் சஞ்சல மனத்தால் தாக்கப்பட்டார். அருட்பணியாளர் பிஷோன் எழுதிய கடிதம் ஒன்று இம்மன நிலைக்கு சான்றளிக்கிறது: "உன் ஆன்மாவின் நிலை பற்றிக் கேள்விக்குட்படுத்த வேண்டாம் என இறைவனின் பெயரால் உனக்கு ஆணையிடுகிறேன். அலகை இதயம் பூரித்துச் சிரித்துக் கொண்டிருக்கிறது. உம் நம்பிக்கையிழப்பு குறித்து நான் கண்டனம் செய்கிறேன். என்ன நேர்ந்தாலும் இறைவன் உம்மை நேசிக்கிறார் என்பதில் நம்பிக்கை கொள்ளவும்."

மரிய கேரென் சஞ்சல மனத்தால் அலைக்கழிக்கப்பட்டபோது தெரேசுவும் இதைப் போன்றே இரண்டு கடிதங்கள் எழுதி அவரை நெறிப்படுத்தினார். லேயோனி மற்றும் செலினுடன் பாரீஸ் சென்றபோது மரிய கேரென் அகில உலகக் கண்காட்சி ஒன்றைப் பார்வையிட்டிருந்தார். அங்கேயிருந்த கலைக் கூடங்களில் வைக்கப்பட்டிருந்த 'ஆடையற்ற சில நிர்வாண உரு ஓவியங்களைக்' காண நேர்ந்தது. அவை அவளுக்கு மனக்கலத்தை உருவாக்கிச் சஞ்சல மனத்தை உண்டாக்கிப் பாதித்து நிம்மதியை இழக்கச் செய்தது. எனவே, திருஉணவு அருந்துவதை நிறுத்தி விட்டார். இளம் புகுமுகத் துறவினி தெரேசு தமது அனுபவத்தை மனத்தில் நிறுத்தி, அவரைத் திடப்படுத்தப் பின்வருமாறு எழுதினார்:

"அனைத்தையும் தெளிவாக நான் புரிந்து கொண்டேன். உனது அன்பு தெரேசுவினால் எல்லாற்றையும் அனுமானிக்க முடிகின்றது. உனது ஒரே உண்மை நண்பரைத் திருவிருந்தில் எவ்வித அச்சமுமின்றிப்பெற்றுக் கொள்ளலாம் என நான் உறுதி கூறுகிறேன். அவரும் உம்மைப் போன்றே சஞ்சல மனத்தால் வேதனைகளைக் கடந்தே வந்துள்ளார். ஆனால் இயேசு உமக்களிப்பதைப் போன்று திருவிருந்தைப் பெறுவதற்கான அருட் கொடையை அவருக்கும் அள்ளி வழங்கினார்... உமது இதயம் இயேசுவின் பால் முழு உணர்ச்சியுடன் அன்பு பாராட்டவே உருவாக்கப்பட்டுள்ளது. உருக்கமாக மன்றாடு; உம் வாழ்க்கையின் சிறப்பு மிக்க ஆண்டுகள் வீண் அச்சங்கள் நிறைந்த கற்பனைகளில் கழிந்துவிடக் கூடாது. அடிக்கடி திருவிருந்தில் பங்கு கொள்ளவும். ஆம், அடிக்கடி பங்கு கொள்ளவும். நீர் குணமடைய விரும்பினால் இதுவே சிறந்த வழி, சிறந்த மருந்து."

தெரேசுவின் தந்தை தமது இடர்ப்பாடுகளால் இரவில், துயர்களின்



விளிம்பில் தெரேசுவை விட்டுத் தொலைவில் இருந்தார். அதே வேளையில் தெரேசு தம்மை வெறுமையாக்கிக் கொள்ளுகின்ற துறவற அழைத்தலில் மிக ஆழமாக ஈடுபட்டார். "நேசிப்பதற்காகவே தெரேசு மறைவாகிட விரும்பினார். மறைவாக, எவராலும் அறியப்படாமல், எண்ணிக்கையில் சேர்க்கப்படாமல், பாதங்களுக்கு அடியில் மிதிப்படுகின்ற மணல்துகளாய் இருக்க விரும்பினார். எவராலும் எண்ணப்படாமல் மறைவாக இருப்பதில் என்னே ஆனந்தம்! உடன் வாழ்வோராலும் கூட அறியப் படாமல் வாழ்வதில் என்னே மகிழ்ச்சி!" என்றார்.

குழு வாழ்வின் "போர்கள்" தொடர்ந்தன. பெரும்பான்மையான நேரங்களில் தெரேசு "சுய அன்பைத் தமது பாதங்களுக்கிடையில் மிதிக்க வேண்டியிருந்தது.". இதன் பயனாகத் தெரேசு இறுதியில் முதிய சகோதரியான தூய பியர் (Pierre) அவர்களின் இதயத்தைக் கவர்ந்தார். அவர் பலவித நோய்களினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தார். எனவே, அவரைக் கண்காணிப்பதை மிகப் பெரும் பணியாகச் சகோதரிகள் கருதினர். ஆனால் ஒவ்வொரு நாள் மாலையிலும் உணவறைக்கு உடன் அழைத்துச் செல்வது, அவர் உணவருந்த உதவி செய்வது, அதற்கான சடங்குகளை நிறைவேற்று வது போன்ற அனைத்துப் பணிகளையும் இன்முகத்துடன் செய்து தெரேசு அவரை மகிழச் செய்தார். சின்னஞ்சிறு செயல்கள் வழியாகவே அன்பு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை ஏற்கெனவே தெரேசு அறிந்திருந்தார். எளிமை வாழ்வில் அவருக்குச் சிறப்பான ஈடுபாடு இருந்தது. அனைவராலும் வெறுக்கப்பட்ட பொருள்களையும், வசதியற்ற நிலைகளையுமே அவர் தேர்ந்து கொண்டார். "மிகப் பெரும் சாதனைகளைப் புரியும் ஆற்றல் என்னிடம் இல்லை. ஆனால், சாமானிய நற்செயல்களைப் புரிவதில் என்னையே ஈடுபடுத்திக் கொண்டேன்" என்றார்.

தெரேசு தம்மோடு வாழ்ந்து வந்த சகோதரி ஆக்னெசு உடன் கொண்டிருந்த பாச உறவுப் பிணைப்பு தளர்வடைந்தது. ஆனால் "உலகில் வாழ்ந்த' செலினுடன் கொண்டிருந்த உறவு வலுவடைந்தது. வரவேற்பறைச் சந்திப்புகள், கடிதப் பரிமாற்றங்கள் அடிக்கடி நிகழ்ந்தன. இயேசுவுக்காகத் துயர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஏழ்மையில் துன்புறுதல், வலிமையின்றி எளிமையில் இழிவுறுதல் போன்ற தங்களுக்குச் சாதகமான கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். செலின், தெரேசு இருவரும் உலக வாழ்க்கையின் குறுகிய காலம், அதன் நிலையற்ற தன்மை, விண்ணக இன்பம், சிதறுண்ட அனைத்துக் குடும்பங்களின் இறுதி ஒன்றிணைவு போன்ற கருத்துக்கள் பற்றியும் உரையாடினர். "வாழ்க்கை மிக விரைவில் கடந்து விடும்"

விண்ணகத்தில் புய்ஸ்ஸோனேவின் நினைவுச் சின்னங்கள் இங்கே எடுத்து வரப்பட்டனவா? அல்லது அங்கே கொண்டு செல்லப்பட்டனவா? என்பதைக் குறித்து அதிகம் சிந்திக்க மாட்டோம். இம்மண்ணுலகால் என்ன பயன்? எனத் தெரேசு வினாவை எழுப்பினார்.

## முற்றுப்புள்ளி உறுதியே

தெரேசு அனைத்தையும் துறக்க வேண்டியிருந்தது. மழலைப் பருவத்தைப் பிரதிபலிக்கும் அவரது அனைத்துச் செயல்பாடுகளும் மறைந்து போயின. அவரது குடும்பம் பிரிக்கப்பட்டது. புய்ஸ்ஸோனே பாழடைந்து போனது. அக்டோபரில் துயரம் நிறைபயணம் ஒன்று புய்ஸ்ஸோனேவை விட்டு அகல்வதை அயலார் கண்டனர். மரப்பொருட்கள் எடுத்துச் செல்லப் பட்டன. ஒரு சில பொருட்கள் கார்மல் இல்லத்திற்குச் சொந்தமாயின. சிறிய வண்டியில் பொருட்கள் ஏற்றப்பட்டு, "பணியாளர்கள் நுழைவு வாயில்" வழியாகக் கார்மல் இல்லத் தோட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. நம்பிக்கை நிறைந்த "தோம்" என்ற நாயும் அவர்களைத் தொடர்ந்தது. அது அடைப்புப் பகுதியை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றது. அங்கே கன்னியர்கள் பலரும், நீண்ட தலையணியைக் களைந்தவாறு வண்டியின் வரவுக்காகக் காத்திருந்தனர். பொருட்கள் அனைத்தும் பாதுகாப்பாக உள்ளே சேரும்படி துணைபுரிந்தனர். வெள்ளை நாய் தனது தலைவியை இனம் கண்டு கொண்டது. அவர் மேல் பாய்ந்து அவரது கண்ணீரை நாவினால் துடைத்தது.

அந்நேரம் முதல் புய்ஸ்ஸோனேவின் கடிகார மணியோசையைக் கேட்டுத் தான் கார்மல் இல்லச் செபங்கள் நடைபெற்றன. தெரேசுவின் மனமாற்றம் மூன்றாம் ஆண்டு நிறைவு (கிறிஸ்மஸ்) வரை வீட்டைக் குத்தகைக்குக் கொடுக்க முடிவெடுத்தனர். செலின் இறுதியாகத் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றபோது இலையுதிராக் கொடி ஒன்றைத் தன் தங்கைக்காகப் பறித்து வந்தார். புகுமுகத் துறவினியின் வாழ்க்கைப் புத்தகத்தில் பக்கம் ஒன்று துல்லியமாகத் திருப்பப்பட்டது. அதாவது தெரேசு பதினேழு வயதை எய்தினார். உண்மையிலேயே அவருக்காக "இயேசு மட்டுமே" எஞ்சினார். தமது துயரங்களைக் கண்ணுற்ற சுய இரக்கத்தில் தம்மையே தெரேசு ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அவை அனைத்தையும் "ஆன்மாக்களை மீட்க" அர்ப்பணித்தார். 'நாம் திருத் தூதர்களாவோம்! எல்லாவற்றிற்கும் மேலாக அருட்பணியாளர்களின் ஆன்மாக்களை மீட்போம். .. அந்தோ பரிதாபம்! எத்தனை தீய அருட் பணியாளர் உள்ளனர்! போதிய தூய்மையற்ற அருட்பணியாளர்கள்!! அவர்களுக்காக மன்றாடுவோம்;



அவர்களுக்காகத் துயர்களைச் சந்திப்போம்." ஒரு புகுமுகத் துறவினியாக அவர் எழுதிய கடிதங்கள் இந்த அறிவுரையைத் தொடர்ந்து எடுத்துரைத்துக் கொண்டேயிருந்தன. வெண்மை நிற முக்காட்டின் உள்ளே அவரது புன்னகை மிளிர்ந்தது. ஆனால் இந்த இளம் மங்கை எத்தகைய உள்ளுணர்வுப் போராட்டங்களோடும் எரிமலைகளோடும் வாழ்ந்து கொண்டிருந்தார் என்பதை யார் கனவு கண்டிருக்க முடியும்?

## மாற்றம் ஒரு தொடர்வினை (1890 ஜனவரி முதல் செப்டம்பர் வரை)

இயேசுவின் அன்புக்காகத் தெரேசு ஏங்கித் தவித்தார். இவ்வுண்மையைத் தெரேசு தம் சகோதரி செலினிடம் தொடர்ந்து வெளிப்படுத்தினார். தம்மை முழுமையாக அவருக்கே விரைவில் அர்ப்பணிக்க ஆசை மேல் ஆசை கொண்டுள்ளதையும் எடுத்துரைத்தார். 1889 ஆம் ஆண்டு தொடக்கத்தில் தூய்மை வாழ்வு வாழத் தனிமை உறுதிமொழி எடுத்திருந்தார்.

வழக்கமான புகுமுகத் துறவு நிலை ஓராண்டு நீடித்தது. இறுதியில் துறவற உறுதிமொழியளிக்கும் சடங்கு நடைபெற்றது. தெரேசு தமது இறுதி மொழியை 1890 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் நாள் அல்லது அதன் பிறகு அளிக்கலாம் என நம்பியிருந்தார். ஆனால் மேலும் ஒரு தடைவிழுந்தது. சகோதரி ஆக்னெசின் இணக்கத்துடன் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக், தெரேசிடம் அந்த இன்ப நிலையைத் துறக்கும்படி பணித்தார். தெரேசு குற்றங்கள் அனைத்தையும் கடந்தவர் என்பதை அனைவரும் அறிந்திருந்தனர். எனினும் அருட்பணியாளர் தெலாத்ரோயெத், இந்த வேண்டுகோளுக்கு இணங்க மாட்டார் என நினைத்தனர். தலைமைத் தந்தையும் அவர்கள் கருத்துக்கு ஆதரவாக இருந்தார். "தெரேசு இறுதி உறுதி மொழியளிக்க கூடிய பருவத்தை இன்னும் அடையவில்லை. அவர் மிக இளையவர், மேலும் அவருடைய தந்தையின் உடல்நலமின்மையும் பிறிதொரு காரணமாகக் கருதப்பட்டது. ஆனால் யார் அதனை வெளிப் படையாகத் துணிந்து கூறுவது?

புகுமுகத் துறவினி பெருத்த ஏமாற்றத்தைச் சந்தித்தார். காத்திருப்பு - எப்பொழுதும் அவரது தலைவிதியாகத் தென்பட்டது. "உறுதி மொழி அளிப்பதற்கான பேராவலோடு அவரிடத்தில் மிகுந்த தன்னன்பும் கலந்திருப்பதை' அவரது மன்றாட்டு வேளையில் உணர்ந்தார். அவர் தம் அன்பரிடம் சரணடைந்தார். "நீர் விரும்பும் வரை நான் காத்திருப்பேன்" என்றார். எனினும் இந்தக் காலத்தை வீணடிக்காமல் தமது மணத்துறவு



லிசியூ கார்மலின் உணவறை

விழாவிற்காகத் தீவிரமாகத் தம்மையே தயார்ப்படுத்த வேண்டும். எப்படி? இயேசுவின் விருப்பத்திற்குத் தெரேசு தம்மையே முற்றிலும் கையளிக்க வேண்டும்.

"ஆம் நான் மறக்கப்பட வேண்டும்! படைப்பு பொருட்களினால் மட்டுமல்ல, என்னாலேயே நான் மறக்கப்பட வேண்டும். வெறுமையின் நிலையை அடையும் வரை நான் விருப்பங்களுக்கு அடிமையாகாமல் என்னையே இழக்க வேண்டும். என் இயேசுவின் மகிமையே எனக்குப் போதும். அவருக்காக என் புகழைக் கைநெகிழ்கின்றேன். என்னை அவர் மறந்துவிட எண்ணினால் மறந்துவிடட்டும், நல்லது. அப்படிச் செய்யும் உரிமை அவருக்குண்டு- காரணம் நான் என்னுடையவரல்ல. அவர் என்னைக் காக்க வைப்பதால் விரைவில் சோர்வடைந்து விடுவார்" என்றார்.

இயேசு சபையைச் சார்ந்த அருட்பணியாளர் பிளினோ (Blino) கார்மல் இல்லத்திற்கு மறையுரை ஆற்ற வந்தார். அவரிடம் தெரேசு தமது வாழ்வின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை வெளியிட்டார். அவிலா தெரேசாளைப் போல இறைவனை அன்பு செய்யும் சிறந்த தூயவராக வேண்டும் என்பதே அப்பேராவல். இளம் சகோதரியிடமிருந்து இத்தகைய ஆவலைக் கேட்டறிந்தவுடன் மறையுரையாளர் அதிர்ச்சியடைந்தார். அந்த ஆவலில் தற்பெருமை மற்றும் அகந்தையின் தடயங்கள் இருப்பதாகக் கண்டுணர்ந்தார். 'உன் விருப்பங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும்' என்று



தெரேசுவுக்கு ஆலோசனை வழங்கினார். 'ஏன் இத்தகைய ஆவல் என்னிடத்தில் எழக் கூடாது? எங்கள் வானகத்தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவராக இருங்கள் என்று நம் போதகரே கூறியிருக்கிறாரே?' என்று கேட்டு எதிர்ச் சவால் இட்டார். இந்தக் கேள்வி விவிலிய அருட் பணியாளருக்கு மனநிறைவளிக்கவில்லை. எனினும் பின்னர் பாரிஸ் நகரில் உள்ள கார்மல் இல்லத்தில் இந்தப் புகுமுகத் துறவியினைப் பற்றி மிகப் பெருமையாகப் பேசினார்.

ஆனால் அருட்பணியாளர் பிளினோவின் மாற்றுக் கருத்துக்கள் தெரேசுவின் மனத்தில் எந்த ஒரு மாற்றமும் கொணரவில்லை. தூர் மற்றும் லூர்து நகர்களுக்குத் திருப்பயணம் சென்று திரும்பியிருந்த செலினிடம் "தூய அவிலா தெரேசாவுக்கு அருட்கொடைகள் வழங்கப்பட்டன. ஆனால் உங்களுக்கு அருளப்பட்டவைகளை விட மேலானவை என நினைக்கிறீர்களா? அவருடைய தெய்வீகத் தூய நிலையை அடைவதே நமக்கு இலக்கு என்று நான் கூறவில்லை. ஆனால் உம் வானகத்தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல, நீரும் நிறைவுள்ளவராய் இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். செலின்! நம் எல்லையற்ற விருப்புக்கள், ஏக்கங்கள் வெறும் கற்பனைகளல்ல; கனவுகளல்ல; ஏனெனில் இயேசுவே இந்தக் கட்டளைகளை நமக்குக் கொடுத்துள்ளார்" என்று வெளிப்படுத்தினார்.

பதினேழாம் வயதில் தெரேசு தமது இதயத்தைத் திறந்து பேசினார். தான் எண்ணியதைத் துணிவுடன் எப்போதும் எடுத்துக் கூறி விடுவார்: 'தூய இதயத்தை மற்ற எவரும் காண்பதைப் போல் நான் காண்பது இல்லை என்பது உமக்குத் தெரியும். என் அன்பரின் இதயம் எனக்கு மட்டுமே சொந்தம். என் இதயம் அவருக்கு மட்டுமே சொந்தம் என எண்ணுகிறேன். எனவே, நான் அவருடன் தனிமையில் உரையாடுகின்றேன். இதயத்தோடு இதயம் இணைந்து இதமாக உறவாடுகின்றேன். நேருக்கு நேர் கண்டு அவரில் இன்பம் காணும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.'

நீண்ட இந்தப் புகுமுகத்துறவுநிலைக் காலத்தில் இரண்டு இன்றியமையாத உள்தூண்டல் கூறுகள் பெரிதும் உதவின. இரு வாசகங்கள் தெரேசுவுக்கு அருள் ஒளி வழங்கின. மேலும் இறைவார்த்தையிலும், கார்மல் சபை மரபிலும் தெரேசு உறுதியாய் ஊன்றி நிற்கும் வழி செய்தன.

## சிறந்த சிற்பி:-

தெரேசு சில மாதங்களாகத் தன் கண்களைத் தாழ்த்தியவாறு

இயேசுவின் திருமுகத்தைக் கண்டு ஆழ்நிலை உரையாடல் நடத்தினார். 'இயேசுவின் கண்களைக் கண்டால் மகிழ்ச்சியால் மரணித்து விடுவோம்' என்பதால் கண்களைத் தாழ்த்தித் தியானம் செய்தார். அவருடைய அன்பரின் திருமுகம் கவர்ந்திழுத்து அவரை மயக்கி விட்டது. நோன்பு காலத்தில் வாசிக்கப்பட்ட திருவழிபாட்டுப் பகுதிகள் அவருக்குப் புதிய உள்ஒளியை அளித்தன. அவர் வாசித்தார். மீண்டும் வாசித்தார். அதனைப் பற்றிச் சிந்தித்துத் தியானித்தார். ஜூலைத் திங்களில் அவர் எழுதிய கடிதங்கள் அனைத்திலும் இறை வார்த்தைகளே காணப்பட்டன. தெரேசுவின் ஆன்மாவோடு உரையாடிய, 'ஆன்மாவின் ஆதங்கத்திற்கு' உணவளித்த இறை வார்த்தைகளை எழுதிச் செலினுக்குக் கடிதமாக அனுப்பினார். விவிலியக் கல்வித் தனிப்பயிற்சி எதுவும் தெரேசு கற்கவில்லை. ஆனால் விவிலியத்தில் உறுதியான இயல்பூக்க அறிவு கொண்டிருந்தார்.

இறைவாக்கினர் எசாயா நூலில் உள்ள சில பகுதிகள் (அத்தியாயம் 53) 'துன்புறும் ஊழியனான' இயேசுவின் வாழ்க்கையை வாசித்து அறிய உதவும் திறவுகோலை அவருக்குத் தந்தன. "இயேசுவின் தூய திருமுகப் பக்தி நெறிகளுக்கு அடித்தளமாகவும், ஏன் எனது அனைத்துப் பக்தி நெறிகளுக்கும் அடித்தளமாக அமைந்தவை எசாயாவின் வார்த்தைகளே" என்றார் தெரேசு. தற்போது புறம்பாக்கப் பட்டவராக, தனிமையில் உழலும் அவருடைய தந்தையின் துயரங்கள் அனைத்திற்கும் அர்த்தம் கொடுக்கும் அருமருந்தாக இவ்வார்த்தைகள் அமைந்தன. "நம் தந்தையும் இயேசுவைப் போன்று நீதி நெறியுள்ள மனிதர், துன்புற்றார். கயென் நகரிலேயே அடைப்பட்டுக் கிடந்தார். செலின்! தந்தையைப் பற்றி நான் எண்ணும் எண்ணங்கள் அனைத்தையும் கூற இயலாது. . . என் ஆன்மாவின் உள் ஆழத்தில் அமிழ்ந்து கிடக்கும் உணர்வுகளை என்னால் எப்படிக் கூற இயலும்! . . இயேசு தேர்வு பெற்ற சிறந்த சிலுவையை நமக்குத் தந்துள்ளார். அவர் தமது ஆழ்ந்த அன்பில் சிலுவையை அவரால் கண்டு கொள்ள முடிந்தது. அவரே கடவுளால் கைவிடப்பட்டதாக, பாதிக்கப்பட்டவராகக் கருதப்படும்போது, எவ்வாறு நாம் முறையிட இயலும்?"

தெரேசு தம் தந்தையை எப்போதும் வானகத் தந்தையின் வெளிப்பாடாகக் கருதினார். ஆனால் இப்போது அவமானப்படுத்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, அடையாளம் கண்டு கொள்ள இயலாத, மகனையும் வெளிப்படுத்துபவராகவே மார்ட்டின் திகழ்வதாகத் தெரேசு உணர்ந்தார். துன்பங்கள் மகனின் சுய இழிவுக்கும், சிலுவையின் மறை உண்மைக்கும் தெரேசை மீண்டும் இட்டுச் சென்றன. அன்பின் நிறைவான இயேசுவே



இந்த அடிப்பகுதியற்ற ஆழத்திற்குச் சென்று விட்டார். "நாம் இப்போது ஆதரவற்ற அனாதைகள்: ஆனால் அன்புடன் நாம் 'வானகத்திலுள்ள எங்கள் தந்தையே' என்று அழைக்கலாம். ஆம் நம் ஆன்மாக்களுக்கு அவரே எல்லாம்! இந்த இதயத்தின் தூய்மையாக்கப் பணி உறுதியான வாயிற்படியைக் கடக்க அவருக்கு உறுதுணையாய் அமைந்தது. . .

## நம் தந்தை தூய சிலுவை யோவான்

தெரேசு, செலினுக்கு எழுதிய அதே கடிதத்தில் முதன் முறையாகத் தூய சிலுவை யோவானின் கருத்துக்களை மேற்கோள் காட்டி எழுதினார்: "நமது தூய தந்தை சிலுவை யோவானின் நூல்களிலிருந்து என்னே அரும்பெரும் உள்ளொளியைப் பெற்றுள்ளேன்! நான் பதினேழு மற்றும் பதினெட்டு வயதுப் பருவத்தில் இருக்கும் போது அவரது நூல்களைத் தவிர வேறெந்த ஆன்மீக உணவையும் தேடவில்லை. . . அவர் எழுதிய வார்த்தைகள் என் வாழ்க்கையின் வடிவம் பெற்று நிறைவாகும்படி இறைவனை வேண்டினேன்."

லிசியூ கார்மலில் இருந்த புகுமுகத் துறவினிகளில் ஒருவரும் தெரேசுவை போல நூல்கள் பலவற்றைப் படித்ததில்லை. மேலும் இது போன்ற அசாதாரண வாசகங்களை எவருமே படித்திருக்க வாய்ப்பில்லை. ஒருநாள் மனமகிழ்வு நேரத்தில் அவிலா தெரேசாவின் நூல்கள் பற்றிய கருத்துக்கள் சிலவற்றிற்கு விளக்கம் கொடுத்தார். அதைக் கேட்ட தலைமைச் சகோதரி கோயெ தே இயேசு (Coeur De Jesus) வியப்பில் ஆழ்ந்தார். சகோதரி வான தூதர்களின் மரியாவும் தமது ஆன்மீக உரையாடலின் போது இதனைக் கண்டு வியப்புற்றார். அக்காலக்கட்டத்தில் பிரெஞ்சு கார்மல் இல்லங்களில் தூய சிலுவை யோவானின் நூல்களைப் படிப்பது அபூர்வமே. ஆனால் அவரது மறைவின் மூன்றாம் நூற்றாண்டு (1591 - 1891) அவருடைய நூல்களின் மீது ஓர் புதிய தாக்கத்தை ஏற்படுத்தியது. பாரீஸ் நகர் கார்மல் இல்லத்தினர் அவரது படைப்புகளின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டனர்.

தெரேசு, தூய சிலுவை யோவானை 'அன்பின் முனைவர்" (The Doctor of love) என்றழைத்தார். தெரேசுவின் ஆழமான இதய ஏக்கங்களை அவரே நிறைவு செய்தார்.

"என் இனிய மரியா! அன்பின் வழி சென்று நிறைவடைவதைத் தவிர வேறு எவ்வழியும் எனக்குத் தெரியாது. அன்பு செய்வதற்காக, நம் இதயங்கள் நிறைவாகப் படைக்கப்பட்டுள்ளன. சில வேளைகளில் அன்பை வெளிப்

படுத்த வேறு சில சொற்பதங்கள் கிடைக்குமோ என்று முயற்சி செய்தேன். ஆனால் கடந்து போகும் இவ்வுலகில், ஆன்மாவின் எல்லா எழுச்சிகளையும், அதிர்வுகளையும் முழுமையாய் வெளிப்படுத்த வார்த்தைகள் வலிமையற்ற வைகளாகி விடுகின்றன. எனவே, இந்த வார்த்தையோடு நான் நிறை வடைந்து விட வேண்டியது தான். "அன்பு" என்பதே அந்தத் தெய்வீக வார்த்தை".

சில சகோதரிகளிடத்தில் காணப்பட்ட "இறை அச்சம்" தெரேசை வலுவிழக்கச் செய்தது. 'அச்சம் என்னை உள்நோக்கிச் சுருங்கச் செய்கின்றது. இதுவே என் இயல்பான உணர்வு. ஆனால் அன்பினால் முன்னேறிச் செல்வது மட்டுமல்ல, முன்னேறி வானில் பறக்கவும் செய்வேன்' என்றார் தெரேசு.

புகுமுகத் துறவுநிலைப் பயிற்சியின் எட்டு மாதங்கள் நீட்டிப்புக்குப் பிறகு அருட்பணியாளர் தெலாத்ரோயெத் கடிதம் ஒன்று எழுதினார். அதில் அவர் தெரேசுவின் உறுதி மொழி அளிப்பில் தமக்கு மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும் ஆயரின் அனுமதியைக்கோரி தெரேசு கடிதம் எழுதுவதற்கு தடை எதுவும் கூற மாட்டேன் எனக் குறிப்பிட்டார்.

கார்மல் சபை மரபுப்படி, குழு உறுப்பினர்கள் மூன்று முறை கூடிக் கலந்தாலோசித்து இக்கருத்தை எற்றுக் கொண்டனர். பேராயர் யுகோனின், தமது இசைவை ஆகஸ்ட் திங்கள் முதல் வாரத்தில் தெரியப்படுத்தினார்.

அக்காலக் கட்டத்தில் கார்மல் சபை உறுதிமொழி அளிப்பு இரு சடங்குகளைக் கொண்டிருந்தது- முதற் சடங்கு அடைப்புப் பகுதியில் துறவினியர்குழு ஆலோசனை நடத்தக் கூடும் அறையில் செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாள் திங்கள் கிழமை நடைபெறுவதாக நாள் குறிக்கப்பட்டது. செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள் இறை மக்களின் முன்னிலையில் 'தலை யணி அணியும் சடங்கு' என்னும் இரண்டாம் சடங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

சகோதரி குழந்தை இயேசுவின் திருமுகத் தெரேசு இறுதியில் அவர் இலக்கை நெருங்கிக் கொண்டிருந்தார். விரைவில் அவரது பதினேழரை வயதில் கார்மல் அருட்சகோதரியாக மாறவிருந்தார்.

### வெறுமையிலும் வறுமை (28 ஆகஸ்ட் முதல் 7 செப்டம்பர் 1890 வரை)

துறவற உறுதி மொழி மாற்ற இயலாதது. அதற்காகத் தம்மையே



தயார்படுத்திக் கொள்ளப் பத்து நாள்கள் தியானத்தில் ஈடுபடவேண்டும். எனவே, ஆகஸ்ட் திங்கள் 28 ஆம் நாள் வியாழன் தெரேசு தியானத்தை மீண்டும் தொடங்கினார். தனிமை, தெரேசுவுக்கு ஆறுதல் தரவில்லை. 'முழு வறட்சி, முற்றிலும் கைவிடப்பட்ட நிலையுமே எனது வாழ்க்கை முறையாகி விட்டது' எனக் கூறினார். தெரேசு தமது திருமணப் பயணத்தை, 'மிதமான காலச் சூழல் கொண்ட நில அறையினுள் காலடி வைப்பதற்கு' ஒப்பிட்டுக் கூறினார். 'அந்த இடத்தில் ஒரு பகுதி திரையிடப்பட்ட வெளிச்சத்தையன்றி வேறு எதையுமே காண முடியவில்லை. இந்த ஒளி என் அன்பரின் திருமுகத்தில் உள்ள சோர்வுற்ற கண்களிலிருந்து வருகின்றது. அவரும் பேசவில்லை, நானும் அவரிடம் எம்மொழியும் பேசவில்லை. நான் என் மீதே அன்பு செலுத்துவதை விட அவர் மீது நான் மேலாக அன்பு செலுத்துகின்றேன்." என்றார் தெரேசு.

செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாள் காலை வழிபாட்டு மன்றாட்டு முடிந்த பின் தெரேசு தனிமையில் சிலுவை வழிபாடு நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது பேரச்சம் அவரைச் சூழ்ந்தது. அவரது துறவற அழைத்தலைப் பற்றிப் பயங்கரமான சந்தேகம் அவரை வாட்டி வதைத்தது. இதைப் போன்ற தாங்க இயலாத உளவேதனையை அவர் இதுவரை அனுபவித்தது கிடையாது! 'எனக்கு அழைத்தல் கிடைக்கவே இல்லை! நான் அனைவரையும் ஏமாற்ற விழைகின்றேன்' என்று அவர் இதயத்தில் ஒரு பெரும் குழப்ப நிலையே நிலவி வந்தது.

உறுதி மொழி அளிக்கும் நாளின் முன்மாலைப் பொழுதில் தொடங்கிய மன்றாட்டு நடு இரவு வரை செப அறையில் தொடர்ந்தது. அனைத்துச் சகோதரிகளும் தெரேசுவுக்காக இறைஞ்சினர். தெரேசு தமது புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி உருவாக்குநரை மன்றாட்டு அறையிலிருந்து வெளியே அழைத்து வந்து தமது அச்சத்தைக் கூற முனைந்தார். சகோதரி வான தூதர்களின் மரியா அவரை உறுதிப்படுத்தினார். தொடர்ந்து கார்மல் இல்லத் தலைவியின் உறுதிப்பாட்டையும் பெற விரும்பினார். அவரும் வெளியே வந்து தெரேசுவினுடைய நிலை கண்டு சிரித்தார்.

மறுநாள் விடியலில், "அமைதியின் நதி" ஒன்று பெருக்கெடுத்து அவரில் பாய்ந்தோடியது. தெரேசு தரையில் நெடுஞ்சாண்கிடையாய் வீழ்ந்தார். தமது குழுவைச் சார்ந்த சகோதரிகள் சூழ்ந்து நிற்க, தெரேசு தமது இறுதி உறுதி மொழியை அறிக்கையிட்டார். அவரது வாழ்க்கை நிலையினை எடுத்து ரைக்கும் 23 வரிகள் கொண்ட குறிப்பு அட்டையை அவரது நெஞ்சுக்கருகில் தாங்கியிருந்தார். அவர் தம்மை முற்றிலும் இயேசுவுக்கு அர்ப்பணித்தார்.

தம் விருப்பத் தூண்டுதலால் பாவங்கள் புரிவதிலிருந்தும் தம்மைக் காக்கும்படி இறைவனை வேண்டினார் தெரேசு. 'இதயத்தின் அல்லது உடலின் அல்லது இரண்டின் வீரத் தியாகத்தைப் புரியும் வாய்ப்பினை வேண்டினார். அதைச் செய்யும் நன்னாளில் பல ஆன்மாக்கள் மீட்கப்படும் என்ற நம்பிக்கை அவரில் காணப்பட்டது.

அவரது குறிப்பு அட்டையில் எழுதப் பெற்றிருந்த சொற்றொடர்களை ஆய்ந்தறிந்த கையெழுத்துக் கலைஞர் ஒருவர், அவருடைய வேண்டுதல், 'உருக்கமானது, நெஞ்சை நெருடுவது' என்று குறிப்பிடுகிறார். தொடர்ந்து, 'அவரது ஏற்பியலின் எல்லையை, வலுவின்மையை, அச்சங்களை, மாறும் மனநிலையை, தன் ஆற்றல்களின் மீது நம்பிக்கையில்லாமையை, மன உளைச்சல்களை மற்றும் மன வேதனைகளை உம்மால் கணிக்க முடியும்'. ஆனால் 'திடமான உறுதிப்பாடும், போராடும் குணமும், தீவிரமான ஆற்றலும், குழந்தையின் அச்சங்களும், போராளியின் தீர்மானமும் அவரில் ஊன்றி யிருப்பதையும் கூடக் கண்டுணர முடியும்' என்றும் தெளிவாக எடுத்துரைக் கிறார்.

செப்டம்பர் திங்கள் இரண்டாம் நாள்: உறுதியளிப்பு விழா நடைபெறும் நாள். தெரேசு வெளிப்புறச் சிற்றாலயத்திற்குச் சென்றார். செலின் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவருடைய கன்னங்களில் தமது இதழ்களை ஆழமாகப் பதித்து எடுத்தார். ''கன்னங்கள் மென்மையாகவும், புத்துணர்ச்சியாகவும் இருந்தன' என்றார் செலின். தெரேசு ஒரு சில சட்டதிட்ட வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்; "எதற்காக நீர் கார்மல் சபைக்கு வந்தீர் ?" என்ற கேள்விக்கு, 'ஆன்மாக்களை மீட்கவும், குறிப்பாக அருட்பணியாளர்களுக்காக மன்றாடவும் வந்தேன்" என்று பதில் அளித்தார். அவருடைய வாழ்வின் இலக்கு நிலைத்து நின்றது. அது தொடர்ந்து நிகழ்ந்தது.

தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் தெரேசுவிடம் உறுதி மொழியளிப்புச் சடங்கு முடிந்தவுடன், அவருடைய தந்தையின் உடல் நலத் திற்காக மன்றாடும்படி ஆலோசனை கூறினார். ஆனால் உறுதிமொழி அளித்த சகோதரி தெரேசு, 'என் இறைவனே! என் தந்தை உடல் நலமடை வது உமது விருப்பமாக இருந்தால், அப்படியே ஆகட்டும்! இதற்காகவே உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்' என்று மன்றாடினார். அவர் தம் தந்தையை மறக்கவில்லை. செப்டம்பர் திங்கள் தொடக்கத்தில் திருத்தந்தை 13 ஆம் சிங்கராயரின் ஆசியைப் பெற்றிருந்தார். உரோமையில் இருந்த சிமியோன் என்னும் சகோதரரிடம் தெரேசு இந்த உதவியைக் கேட்டிருந்தார். 'தனக்காக



வும், துயர்களினால் அதிகமாகப் புடமிடப்பட்ட தூயவரான முதியவருக்காக வும்' இந்தச் சிறப்பு ஆசீரைத் திருத்தந்தையிடமிருந்து பெற்றுத் தர வேண்டியிருந்தார்.

பொதுச் சடங்கிற்கு முன்பாகத் தெரேசுவும் செலினும் விருப்பமான நம்பிக்கையொன்று வைத்திருந்தனர். அதாவது தங்கள் தந்தையைக் கயென் நகரிலிருந்து அழைத்து வந்து விடலாம் என்பதே அந்த நம்பிக்கை. இந்தத் திட்டத்தை 23 ஆம் நாள் செவ்வாயன்று வரவேற்பறையில் அனைவர் முன்னிலையிலும் வெளிப்படுத்தினர். ஆனால், அவர்களின் மாமா இசிதோர் கேரென் அதற்குச் செவிமடுக்கவில்லை.

## சாத்தியப்படுமா அனுபூதி (24 செப்டம்பர் 1890)

நகைச்சுவை ஒரு பாதி, செய்திகள் மறுபாதியுமாக இளம் மணமகள் தன் திருமண அழைப்பிதழைத் தயாரித்திருந்தார். இந்த ஆலோசனை தெரேசுவுக்கு இஷ்ஷான் கேரெனிடமிருந்து கிடைத்தது. அக்டோபர் முதல் நாள் தெரேசுவின் மாமா மகளான இஷ்ஷான் கேரென் (Jeanne Guerin) மருத்துவர் பிரான்ஸிஸ் லா நீல் (Francis La Neele) என்பவரைத் திருமணம் செய்து கொள்ளவிருந்தார். தெரேசுவின் அசாதாரண திருமண அழைப்பிதழ் இவ்வாறு தான் தயாரிக்கப்பட்டிருந்தது. "எல்லாம் வல்ல இறைவா! விண்ணையும் மண்ணையும் உருவாக்கியவரே! உலகின் ஈடுஇணையற்ற மன்னவா! மகிமை நிறை கன்னி மரியே! விண்ணக அரசவையின் அரசியும், இளவரசியுமானவரே! உங்கள் அனைவரையும் தங்கள் மகனும், மன்னவருக் கெல்லாம் மன்னவரும், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவருமான இயேசுவுக் கும், தெரேசு மார்ட்டினுக்கும் நடைபெறும் திருமணத்தில் கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றேன்."

ஆனால் மறுநாள் முழுமையும் கண்ணீரால் திரையிடப்பட்டது. தெரேசுவின் தந்தை அங்கு இல்லாததால் அவர் கதறி அழுதார். செப அறைக்குப் புகுவதற்கு முன்பு சகோதரி ஆக்னெசு தெரேசுவைக் கடிந்து கொண்டார். 'ஏன் நீர் அழுகின்றீர்? என்பதை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. நோயினால் அவதியுறும் நம் தந்தை இச்சடங்கில் கலந்து கொள்வார் என எப்படி நீர் எதிர்பார்க்க முடியும்? அவ்வாறு அவர் இங்கு வந்திருந்தால், . . அவர் இல்லாமையினால் உண்டாகும் துயரை விட அதிக வேதனைகளை நாம் அனுபவிக்க வேண்டியிருந்திருக்கும்' என்றார். ஆம், இயேசுவைப் பின்பற்றுவதற்காகத் தம்மையே அர்ப்பணித்திருக்கும் தெரேசு இனி தனிமையில் தான் வாழ வேண்டும். அவருடைய தந்தை வெளியே

7

# மரணம் ஓர் தொடர் கதை

(24 செப்டம்பர் 1890 முதல் 20 பிப்ரவரி 1893 வரை)

*'கிறிஸ்துவே என் அன்பு;*
*அவரே என் நிறைவாழ்வு'*

## புன்னகையில் புதுமை

குழந்தை இயேசுவின் தெரேசு தமது உறுதிமொழியளிப்பிற்குப் பின் மறைவாயிருந்த தம் அன்பரோடு மறைந்து வாழ விரும்பினார். அவரோடு இரண்டறக் கலந்து அனுபவம் பெறச் சாதகமான பாலை நிலத்திற்குச் செல்ல விரும்பினார். அவருடைய தந்தையை அமைதி சூழ்ந்து கொண்டது. உடல் நிலையும் ஆபத்தான நிலையிலே இருந்தது. கயென் நகருக்கு அவரைக் காண்பதற்காக லேயோனியும், செலினும் அடிக்கடி சென்றனர். லிசியூவுக்கு உடனடியாகத் திரும்பி வருவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை. கார்மல் இல்லத்தில் அருட்சகோதரிகள் அவருடைய பெயரை மெதுவாக உச்சரித் தனர். அவருடைய புகழ்சிதைப்பினால் அதிகம் பாதிக்கப்பட்ட நிலையில் அவர் இருப்பதாக கருதினர். இஷ்ஷான் ப்ரான்சிஸ் திருமணம் கேரின் குடும்பத்தில் மிக்க மகிழ்ச்சியைக் கொணர்ந்தது. எனவே, வரவேற்பு அறைக்குச் சென்று சந்திப்பது அரிதாகிவிட்டது. இளம் கார்மல் துறவினி தெரேசுவுக்கு அந்த ஆண்டு ஒரு மறைந்த வாழ்வின் ஆண்டு எனலாம்.

தெரேசின் செபம் தூய பேதுருவின் செபம் போல் அமைந்தது-



கெத்சமேனித் தோட்டத்தில் தூய பேதுரு தூங்கி இளைப்பாறினார். அது போன்றே தெரேசுவும் செப வேளையில் தூங்கிச் சுகம் காண்பார் அல்லது அக இருளில் நிலைத்திருப்பார். அருட்பணியாளர் யூஃப் (Youf) தெரேசைக் கடிந்து கொண்டார். ஆனால் தலைமைச் சகோதரி மரி கொன்சாக் மீண்டும் உறுதியளித்து ஊக்கமூட்டினார். ஆறுதலை எதிர்பார்க்காமல் தொடர்ந்து முன்னேறிச் செல்லப் பணித்தார். இவ்வாறு நீர் இரவின் இருளிலும், பாலை வனத்தின் தொலைவிலும் வாழ்ந்து உண்மைக் கார்மல் துறவியாக உருவாக வேண்டும் என்று கூறி ஊக்கமூட்டினார். 1890 - 91 ஆம் ஆண்டு குளிர்ப் பருவம் கடினமானதாக இருந்தது. 'உயிரைப் பறிக்கும் குளிர். . . கடுங்குளிர் அனுபவித்தேன்' எனத் தெரேசு பின்னர் வெளிப்படுத்தினார்.

தெரேசு அன்றாட வாழ்வில் ஆற்றிய சிறிய செயல்களையும் அன்பினால் நிறைத்து வந்தார். 'சகோதரிகள் மடித்து வைக்க மறந்து போன போர்வைகளை மடித்து வைக்க விரும்பினேன். என்னால் இயன்ற சிறிய பணிகளை அவர்களுக்குச் செய்து கொடுத்தேன். சிறு தியாகச் செயலும் கூட ஒரு பார்வை, ஒரு வார்த்தை கூடத் தவறாமல் கவனமாகப் புரிய முயற்சி எடுத்தேன். எந்த ஒரு எளிய செயலையும் அன்பை எண்பிக்கச் செய்வதற்குக் கிடைத்த வாய்ப்புகளாக எண்ணி எனக்குச் சாதகமாக்கிக் கொண்டேன்' எனத் தெரேசு சான்று பகர்ந்தார்.

சிறிய செயல்களில் அமிழ்ந்து கிடக்கும் வீரத்தன்மையை யாரும் கவனிக்கவில்லை. குழுவில் பேசப்படும் கட்டுக்கதைகளில் தெரேசு தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. நீதியற்ற முறையில் அவர் குற்றம் சாட்டப்பட்டபொழுது தமக்காக வாதாடவும் முயற்சிக்கவில்லை. தம்முடன் முரண்பாடு கொண்டுள்ள சகோதரிகளைக் கண்டால் புன்னகை புரிந்தார். வழங்கப்பட்ட உணவு வகைகள் அனைத்தையும் எவ்வித மறுப்புமின்றி உண்டு மகிழ்ந்தார். மற்ற எவரும் விரும்பாத மீதியான உணவினைத் தெரேசுவுக்கு வழங்குவதில் சகோதரி மார்த்தா எவ்விதத் தயக்கமும் காட்ட மாட்டார். அப்படி வழங்கப்பட்ட உணவுகளில் குப்பையில் எறியும் நிலையடைந்த உலர்ந்து போன முட்டை ஊத்தாப்பமும் இருந்ததைத் தெரேசு நினைவு கூர்ந்தார். சகோதரி ரஃபேல் (Raphael) உணவறையில் தெரேசுவுக்கு அருகே அமர்ந்திருந்தார். தெரேசு அருகில் அமர்ந்திருப்பதைக் கூட உணராமல் மேசையில் வைக்கப்பட்ட ஆப்பிள் பழ இரசம் அனைத்தையும் குடித்து விடுவார்.

தெரேசுவின் ஒவ்வொரு நாள் வாழ்வின் நிகழ்வுகள் இவ்வாறே அமைந்தன. இயல்பான வாழ்வு வாழ்ந்தார்; எளிதில் வளைந்து கொடுத்தார்.

நேர்மையானவராய்த் திகழ்ந்தார். எப்பொழுதும் புன்னகை புரிந்தார். சில வேளைகளில் தம்முள் எழும் கோப உணர்வுகளை நெறிப்படுத்த அதிக முயற்சிகள் எடுக்க வேண்டியிருந்தது. உண்மையான கோப உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் ஒரு பண்பாளராகவே திகழ்ந்தார்.

தெரேசுவின் 18 ஆவது வயதுக்குப் பின் அவருக்குப் பணி மாற்றம் கிடைத்தது. சகோதரி ஸ்தனிஸ்லாக்குத் துணையாக ஆலய உதவிப் பணியாளர் பணி ஒப்படைக்கப்பட்டது. இனிமை குணம் படைத்த இந்த முதிய சகோதரி தெரேசுவைக் 'குட்டி சகோதரி ஆமென்' எனச் செல்லப் பெயர் கொண்டு அழைத்தார். யார் எதைச் சொன்னாலும் மறுத்துப் பேசாமல் பணிபுரியும் தெரேசுக்கு அப்பெயர் பொருத்தமானதே. உணவறையில் பணி புரியாமையால் சகோதரி ஆக்னெசை அதிகமாகச் சந்திக்க இயலவில்லை. 1896 ஆம் ஆண்டு ஜூலையில் சகோதரி தூய இதய மரியா புகுமுகத் துறவு நிலையிலிருந்து மாற்றம் பெற்றார். தெரேசு, சகோதரி மார்த்தாவுடன் மேலும் மூன்று ஆண்டுகள் பயிற்சிகளை அங்குத் தொடர வேண்டியிருந்தது. இல்லத் தலைவியுடன் சகோதரி மார்த்தா தனிப்பட்ட பற்றுக் கொண்டிருந்ததைத் தெரேசு கண்டார். ஒரு நாள் இதைக் குறித்து சகோதரி மார்த்தாவிடம் பேச வேண்டும் என்கிற உணர்வு பெற்றார். அமைதியான சூழலிலும் செப உணர்வு நேரத்திலும்தான் இந்த உள்ளத்தூண்டல் அவர் மனத்தில் ஏற்பட்டது. இத்தகைய பற்றுணர்வு ஒருவர் தம் எசமானிடம் காட்டும் பரிவு போன்றது. எனினும் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான காலம் இன்னும் கனியவில்லை என்றெண்ணி அமைதியானார். தெரேசுவின் தனிமை அதிகரித்தது. இயேசுவுக்காக மட்டுமே இதனை விரும்பினார். அவருக்காக ஆன்மாக்களை மீட்க, குறிப்பாக குருக்களின் ஆன்மாக்களை மீட்கவே தனிமையை விரும்பினார். அந்த நாள்களில் குறிப்பாக ஒரு அருட்பணியாளர் பிரான்சு நாட்டில் பெரும் குழப்பதை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

## கொள்கை மாறலாமா?

அருட்பணியாளர் இயசிந்த் லுவாசோன் (Hyacinthe Loyson) பாரீசு நகரில் நோத்ரதாமில் (Dotre - Dame)சிறந்த மறையுரையாளராகத் திகழ்ந்து வந்தார். சல்பீசியன் சபையில் பயிற்சி பெற்றுப் பின்னர் சாமிநாதப்பர் சபையில் புகுமுகத் துறவு நிலைப் பயிற்சி பெற்று, பின்னர் கார்மல் சபையில் அருட்பணியாளரானார். 1869 ஆம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபையை விட்டு வெளியேறுவதற்கு முன்பு கார்மல் மாநிலத் தலைவராகத் திகழ்ந்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்க நாட்டைச் சார்ந்த இளம் விதவையைத் திருமணம் புரிந்தார். அந்த விதவையோ பிரிவினைச்



சபையைச் சேர்ந்தவர். இவர் வழியாக ஒரு மகனுக்குத் தந்தையுமானார். 1879 ஆம் ஆண்டில் அவர் கத்தோலிக்க ஆங்கிலேயத் திருச்சபையை நிறுவினார். 1870 ஆம் ஆண்டில் வத்திக்கான் சங்கம் திருத்தந்தையின் வழுவா வரத்தை வெளிப்படையாக அறிவித்தது. இதனை இவர் எதிர்த்தார். ஆயர்களின் தேர்வு அருட்பணியாளர்களாலும், பொது நிலையினராலும் நடத்தப்பட வேண்டும் என்று உரைத்தார். அருட்பணியாளர்களின் திருமணத்தை ஆதரித்தார். பிரெஞ்சு மொழியிலேயே வழிபாடுகள் நடத்தப்பட வேண்டும் என விரும்பினார். எனவே, அவர் திருச்சபையை விட்டு விலக்கப்பட்டார். அதையும் அவர் பெரிதுபடுத்தாமல் பிரான்சு நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் பயணம் சென்று தொடர்ந்து சொற்பொழிவாற்றினார். 1891 ஆம் ஆண்டில் நோர்மாண்டி (Normandy) கூன்தான்ஸ் (Countances) மற்றும் கயென் ஆகிய நகரங்களில் பயணம் செய்தார். அவருடைய செயல்பாடு குறித்து செய்திப் பத்திரிக்கையாளர்கள் அதிக ஆர்வம் காட்டினர். கட்டுரைகள், அவரைப் பற்றிய செய்திகள் பல வெளியாயின. லா க்ரூவா த்யு கல்வதோஸ் (Lacroix Du calvados) என்ற நாளிதழில் அவரைக் குறித்து வெளியான கட்டுரைகள் பலவற்றைச் செலின் சேகரித்துத் தெரேசுவுக்கு அனுப்பி வைத்தார். அருட்பணியாளர்களின் செய்தித் தாள்கள் அவரைக் 'கொள்கை மாறிய துறவி' என்றழைத்தன. அருட்பணியாளர் லெயோன் ப்ளுவா (Leon Bloy) அவரைக் கடுமையாகச் சாடினார். தெரேசு அவரைத் தன் சகோதரராக ஏற்று அவருக்காக மன்றாடுகிறேன் என்று செலினுக்கு கடிதம் எழுதித் தெரிவித்தார். இறைவன் பிரான்ஸினிக்குச் செய்தது போல மீண்டும் ஒரு கிளர்ச்சியாளரான அருட்பணியாளரிடத்தில் அருங்குறி நிகழ்த்த மாட்டாரா? 'தொடர்ந்து இடைவிடாது மன்றாடுவோம். நம்பிக்கை அருங்குறிகளை உருவாக்கிவிடும்!' எனத் தெரேசு உறுதியாக நம்பினார். அந்நேரம் முதல் தெரேசு தம் வாழ்க்கையின் இறுதி நொடி வரை அவருக்காகத் தொடர்ந்து மன்றாடத் தவறியதில்லை. அவரின் நாமத்தை உச்சரிப்பதற்கே கார்மல் இல்லத்தில் யாரும் துணியவில்லை. ஆனால் தெரேசு 1897 ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் 19 ஆம் நாள் அவரது கடைசித் திருவிருந்தை அவருக்காக அர்ப்பணித்தார். இந்த மனமாற்ற முயற்சி அவருடைய வாழ்க்கை முழுவதையுமே ஆக்கிரமித்தது எனச் சகோதரி ஆக்னெசு தெரிவித்தார்.

மேலும் கேரென் குடும்பத்தினர் மீதும் தெரேசு தமது கவனத்தைச் செலுத்தினார். அவர்களது உறவினரான மர்கரீத் மரி (**Marguerite Marie**) ரெனேதொஸ்தேன் (Rene Tostain) என்ற கடவுள் மறுப்பாளரைத் திருமணம் செய்து கொண்டார். அவர் ஒரு இளம் நீதிபதியாக இருந்ததால் எளிதாகத்

தமது கருத்துக்களை மர்கரீத் மனத்தில் புகுத்தினார். அவருடைய கருத்தியல்களால் கவரப்பட்ட மர்கரீத்தும் தமது கிறிஸ்தவ விசுவாசத்தின் மீது ஐயுறத் தொடங்கினார். நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக அருட்பணியாளர் அர்மிஞ்ஞோன் (Arminjon) எழுதிய ஒரு நூல் தெரேசுவுக்கும் செலினுக்கும் பேருதவியாக இருந்தது. அதனை மர்கரீத்திடம் கொடுக்கும்படி தெரேசு செலினுக்கு அறிவுறுத்தினார். செலின் 'ஆன்மாக்களை நாம் மறக்க வேண்டாம்! ஆனால் அவர்களுக்காக நம்மையே நாம் மறப்போம்!' என்றார். பாவிகளின் மறு வாழ்வுக்கான கரிசனை தெரேசிடம் என்றுமே தணிந்ததில்லை.

## எங்கும் எதிலும் கரிசனம்

செலின் மீது தெரேசுவுக்குக் கரிசனை அதிகரித்தது. தெரேசுவுக்கு அறிமுகமானவர்கள் அனைவருக்கும் திருமணம் நிறைவேறிக் கொண்டிருந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் நான்கு திருமணங்கள் நிகழ்ந்தன. 22 வயது நிரம்பிய செலின் கவர்ச்சி மிக்க இளம் நங்கை. கயென் நகரில் உள்ள ஆன்றி மோதெலோன்த் (Hendry Maudelonde) என்பவர் செலினின் குணத்தால் கவரப்பட்டார். அவர் மீது தணியாத காதல் கொண்டிருந்தார். லா மூஸ் சாத்தோ (La Musse Satho) என்னுமிடத்தில் கேரென் குடும்பத்தினர் ஒவ்வொரு கோடையிலும் சிறப்பு விருந்து அளித்தனர். செலின் அதில் தவறாது கலந்து கொள்வார். ஆன்றியும் அங்கு வருவதுண்டு. விருந்தின் போது ஆன்றி ஒரு முறை தன் உள்உணர்வுகளைத் திறந்த மனத்தோடு செலினிடம் கூறவும் துணிந்தார். 1889 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் நாள் தூய்மை வாழ்வு வாழ்வதற்கான உறுதிமொழியைத் தனக்குள்ளே செலின் எடுத்துக் கொண்டு தாம் கன்னிகையாக ஆர்வம் கொண்டிருப்பதாக அறிவித்தார். ஆனால் அவர் பெரும் போராட்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. அதன் விளைவாக அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. புன்னகை மரியன்னையிடம் உருக்கமாக மன்றாடினார். தெரேசு இதனை அறிந்து கவலையுற்றார். ஆனால் செலின் உறுதியாகக் கார்மல் இல்லத்தில் தம்மோடு இணைந்து வாழ்வார் என்ற உறுதிப்பாட்டில் நிலைத்து நின்றார். அதனைச் செயல்படுத்துவதற்காக அவரால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். இயேசு செலினை அங்கு அழைத்துக் கொண்டிருந்தார்.

சகோதரி தெரேசு தமது புகுமுகத் துறவு நிலையின் பயிற்சியாளரான மர்த்தாவுக்காகவும் போராடினார். அவர்கள் இருவரும் ஒரே நோத்தில் தனித்தனியாக ஆண்டு தியானம் செய்ய விரும்பினர். அதற்காகத் தமது



ஆண்டு தியான நாள்களை மாற்றி அமைத்துக் கொண்டார். இது அவருடைய இளைய கன்னிகைக்காக அவர் புரிந்த உண்மைத் தியாகச் செயலே. வெவ்வேறு நேரங்களில் தியானம் செய்ய நேரிட்டால் தெரேசுவுக்கு அரிதாகக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் வீண்பேச்சுக்கள் பேசியே வீணடித்து விடுவார். இருவரும் சகோதரிகள் உறவுப் பரிமாற்றம் செய்து கொள்ள இல்லத் தலைவி வழங்கியிருக்கும் சிறப்பு அனுமதியைத் தவறாகப் பயன்படுத்த நேரிடும். எனவே இருவரும் ஒரே நேரத்தில் ஆண்டுத் தியானம் செய்வதற்கு முடிவெடுத்தனர்.

தெரேசு தம்மைப் பற்றிய நினைவிழக்க எண்ணினார். எனவே 1861 ஆம் ஆண்டில் லிசியூ கார்மலின் உதவியால் தொடங்கப்பட்ட இந்தோ - சைனாவிலுள்ள சைகோன் (Saigon) கார்மல் இல்லத்திற்கு செல்லத் துணிந்தார். அதைப் பற்றி ஆழமாகச் சிந்தித்துச் செயல்படுத்த விரும்பினார். அங்கு அவர் உண்மையிலேயே அனைவராலும் மறைக்கப்படலாம்; மறக்கப்படலாம்; புறம்பாக்கப்படலாம்.

## அன்பின் அலைகள் (7 - 15 அக்டோபர் 1891)

தியான நாள்கள், புதிதாக உறுதிமொழியளித்த சகோதரிக்கு அமைதியற்ற நாள்களாகவே அமைந்தன. அந்நாள்களில் மறையுரையாற்றியவர்கள் பாவத்தின் விளைவுகள், கழுவாய் நிலையின் வேதனைகள், நரகத்தின் கொடுமைகள் ஆகியவற்றைப் பற்றியே கருத்துக்கள் தெரிவித்தனர். இவை சஞ்சல மனநிலை கொண்டவர்களுக்கு ஆறுதல் வழங்காது. மேலும் அவர்களைத் திகிலுறச் செய்து அச்சத்தில் ஆழ்த்தின. மறையுரையின் போது தெரேசுவின் செவியில் விழுந்த ஒரு சொற்றொடர் அவருக்கு கண்களில் கண்ணீரை வரவழைத்தன. அன்பு செலுத்தவோ, பிறரை வெறுக்கவோ நாம் தகுதியுடையவர்களா? என்பது ஒருவருக்கும் தெரியாது. அந்நேரத்தில் அனைத்து வகையான கடினமான மனப் போராட்டங்களையும் அனுபவித்தார். சில வேளைகளில் விண்ணுலகு என்ற ஒன்று இருக்கின்றதா? என்று வியக்கும் அளவுக்கு மனப்போராட்டங்கள் அதிகரித்தன. எல்லாப் பக்கங்களிலிருந்தும் பாவங்கள் அச்சம் விளைவித்ததால் தூயராகும் இலக்கை அடைவது எவ்வாறு சாத்தியமாகும்?

கார்மல் இல்லத் தந்தை அருட்பணியாளர் யூஃப் (Youf) மன சஞ்சலமுடையவர். சகோதரி தூய அகுஸ்தினாரின் தெரேசு, கடுமையாக நோன்பு புரிபவர். தூய நெறியில் வழுவாதவர். ஒரு நாள் ஒப்புரவு அருட்சாதனச் சடங்கை நிறைவேற்றியவுடன் அழுது கொண்டே இல்லத்

தலைவியின் அறைக்குச் சென்று கதவைத் தட்டினார். தலைமைச் சகோதரி அறைக்குச் சென்று நான் ஏற்கெனவே எனது ஒரு பாதம் நரகத்தில் இருப்பதாகவும், நான் இப்படியே தொடர்ந்து சென்றால் மறுபாதத்தையும் விரைவில் அங்கே வைத்து விடுவேன் என ஒப்புரவு சாதனத்தில் அருட்பணியாளர் கூறியதாகவும் சொன்னார். அதற்குத் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் "கவலைப்படாதீர்! என்னுடைய இரு பாதங்களும் ஏற்கெனவே அங்கு இருக்கின்றன" என்று பதில் கூறி அவரை ஆற்றுப் படுத்தினார்.

1891 ஆம் ஆண்டு தியானம் குறித்து தெரேசு கலக்கம் அடைந்தாரா? ஆன்மீகப் பயிற்சிகளின் போதும் அவர் தளர்ச்சியடைந்தவராகவும் உறங்குவதற்குரிய உள் ஈர்ப்புக் கொண்டவராகவும் தோன்றினார். அவரால் உறங்கவோ உண்ணவோ இயலவில்லை. இந்நிலையே தொடர்ந்திருந்தால் அவரது உடல் நிலை உறுதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் என்று சகோதரி இயேசுவின் ஆக்னெசு பின்னர் கூறினார்.

அந்த ஆண்டு தியானம் உறுதியளிப்பதாகத் தோன்றவில்லை. பிரான்சிஸ்கன் சபை மாநிலத் தலைவர் அருட்பணியாளர் பேனிஞ்சேதே ஷான்வீல் மாநிலத் தலைவர் என்பவரைத் தான் இல்லத் தலைவி அழைத்திருந்தார். ஆனால் இறுதி நேரத்தில் அவருடைய வருகை ஒரு சில காரணங்களினால் தடைப்பட்டது. அதனால் அவருக்குப் பதிலாகத் தூய நசேர் (Nazaire) என்ற இடத்தைச் சார்ந்த பிரான்ஸிஸ்கன் அருட்பணியாளர் அலெக்ஸி ப்ரு (Alexis Prou) அனுப்பப்பட்டார். 46 வயது நிரம்பிய இந்தச் சிறந்த மறையுரையாளர் சிறந்த வரவேற்பை லிசியூவில் பெறவில்லை. மிகப் பெரும் தொழிற்கூடங்களில் மறையுரை ஆற்றியுள்ளார். அதைப் போன்று அவர் பெருங்கூட்டத்திற்கு மறையுரை ஆற்றும் புலமை பெற்றிருந்தார். ஆனால் கார்மல் இல்லச் சகோதரிகளுக்கு மறையுரையாற்றுவதற்கு உகந்த வராக அவர் தோன்றவில்ல! அக்குழுவில் அவரது உரையிலிருந்து பெரும் ஆறுதலை அடைந்த ஒரேயொரு சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசு மட்டுமே.

அருட்பணியாளர் ப்ரு ஆற்றிய தற்கையளிப்பு, 'பரிவிரக்கம்' பற்றிய தீவிர மறையுரைகள் தெரேசுவின் இதயத்தை விரிவாக்கின. 'ஆன்மீக வழிகாட்டுதலை' விடப் பெரும் பயன் தருபவைகளாக அம்மறையுரைகள் மாறின. தமது அகவாழ்வைப் பற்றி உரையாடுவதில் வழக்கமாகத் தயக்கம் காட்டும் தெரேசு, இந்த அருட்பணியாளரிடம் சில வார்த்தைகள் உரையாடிய உடனே தாம் வியப்பிற்குரிய முறையில் புரிந்து கொள்ளப் பட்டதாக



உணர்ந்தார்.

"என் ஆன்மா ஒரு நூலைப் போன்றது. அதை நான் வாசித்ததைவிட தெளிவாக அருட்பணியாளர் வாசித்தார். என்னைக் கவர்ந்து ஆட் கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் அன்பின் அலைகளில் எனது வாழ்க்கைப் படகை நிறைவாகச் செலுத்துமாறு இயக்கி விட்டார். ஆனால் அத்தகைய முயற்சியில் இயக்கப்பட எனக்குத் துணிவில்லை. என் குறைகள் இறைவனைத் துயரத்தில் ஆழ்த்தவில்லை என்று அவர் என்னிடம் கூறினார். கடவுள் இடத்தைத் தனதாகக் கொண்டு அவரது பெயரால் அருட் பணியாளர் கூறினார்: 'இறைவன் உன்னில் மிகவும் பேரானந்தம் அடை கின்றார்!" எனத் தெரேசு அருட்பணியாளர் ப்ரு பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

இந்த அனுபவம் தெரேசுவுக்குப் புத்தொளியும் மனமகிழ்வும் கொணர்ந்தது. "குற்றங்கள் இறைவனை வருத்தத்தில் ஆழ்த்தாது" என்ற உண்மையை அவர் கேட்டறிந்ததில்லை. நம்பிக்கையும் அன்பும் தெரேசைப் பெரிதும் கவர்ந்தன. ஆனால் அவரைச் சூழ்ந்திருந்த சூழல்கள் அவ்வழியில் அவர் தொடர்ந்து செல்லத் துணிவு ஏற்படுத்தவில்லை. அவரில் விடுதலை உணர்வை தூண்டி எழுப்பிய இந்த முதல் உரையாடலுக்குப்பின் அவருக்கிருந்த ஒரேயொரு ஆசை அருட்பணியாளர் ப்ருவுடன் மீண்டும் உரையாடுவது தான்! தமது அதிகாரத்தை அளவுக்கு மீறிய முறையில் பயன்படுத்தி இல்லத்தலைவி மரி தே கொன்சாக் விண்ணகம் ஈந்த இந்த மறையுரையாளரை மீண்டும் நான் சந்திக்க ஏன் மறுப்புத் தெரிவிக்க வேண் டும்? என்பதை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை என்றார் தெரேசு. இந்த அனுமதி மறுப்பு அவர் உள்ளத்தை வாட்டி வதைத்தது. உதவி ஆலய பணியாளரான தெரேசு, அருட்பணியாளர் ப்ரு மேலும் கீழும் நடந்து கொண்டே திருப்புகழ் மாலை மன்றாட்டைச் சொல்வதைக் கேட்டார். அவரிடம் சைகையினால் பேசுவதற்கு அவருக்கு அனுமதி உண்டு. எனினும் கீழ்ப்படிதலைக் கடைப்பிடிக்க விருப்பம் கொண்டார். இந்த அருட் பணியாளர் அவர் உள்ளத்தில் வளர்த்திருந்த நம்பிக்கை, அன்பு போன்றவற்றை எவரும் அவரிடமிருந்து பறிக்க இயலாது. அவரைத் தெரேசு மீண்டும் தமது வாழ்க்கையில் சந்திக்கவே இல்லை.

கனடாவில் இருக்கும் ஆன்மீக இயக்குநர் அருட்பணியாளர் தெரேசு வுக்கு அதிகமாக ஆன்மீக உதவிகள் அளிக்கவில்லை. தமது மறைப் பணியில் துடிப்புடன் அவர் செயல்பட்டார். தெரேசு எழுதிய 12 ஆண்டு கடிதங்களுக்கு ஒரேயொருமுறை பதில் மடல் அனுப்பினார். இறுதியில்

இயேசுவே அவருக்கு இயக்குநரானார்.

## சாவின் நிழலில் (5 டிசம்பர் 1891)

1891 - 92 ஆம் ஆண்டின் மிகக் கடுமையான குளிர் காலம்! கார்மல் இல்லக் கதவை மரணம் வந்து தட்டியது. கடுமையான நோயினால் அவதியுற்ற தலைமைச் சகோதரி தூய தெரேசுவின் ஜெனெவியேவ் அவர்களை 1891 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் மரணம் தன்னிடத்தில் அழைத்துக் கொண்டது. லிசியூவின் கார்மல் இல்லத்தை நிறுவிய இச்சகோதரியை அனைவரும் தூயவர் என்றே கருதி மதித்து வந்தனர். தமது துறவற வைர விழாவினைச் சிறிது நாள்களுக்கு முன்பாகத்தான் கொண்டாடினார். 1884 ஆம் ஆண்டு முதல் கடுமையான உடல் மற்றும் ஆன்மீக வேதனைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தார்.

தெரேசு கார்மல் சபையில் காலடி எடுத்து வைத்த நாளிலிருந்து இந்தச் சகோதரியினால் ஈர்க்கப்பட்டிருந்தார். 83 வயது நிரம்பிய அவரின் அனுபவங்கள், உய்த்துணரும் திறன், பெருந்தன்மை போன்றவை தெரேசுவின் பாதையில் ஒளிரும் தீபங்களாய் மிளிர்ந்தன. முதிர்ந்து, பழுத்த துறவினியான அவர் தெரேசுக்குப் பலவித நெறிகளைக் கற்றுத் தந்தார்.

'தலைமைச் சகோதரி ஜெனேவியேவ் அவர்களை அறிந்திருப்பதும், அத்தூயவரோடு இணைந்து வாழ்வதும் விலைமதிப்பற்ற அருட்கொடையாகும். எவரும் அவர் வழிச் செல்லாம். சாமானிய செயல்களை மறைவாகச் செய்து தூயவரான இவர் வழிச் செல்வது எளிதே. இயேசுவே அவரில் வாழ்ந்தார். அவர் செயலாற்றவும், பேசவும் ஆற்றல் அளித்தவர் இயேசுவே! இத்தகைய தூய நிலையே உண்மையானது; தூய்மை நிறைந்தது. இதனையே நானும் விரும்புகிறேன். ஏனெனில் இது மாயைத் தோற்றங்களிலிருந்து விடுதலை பெற்றது" எனச் சகோதரி ஜெனெவியேவ்வுக்குத் தெரேசு புகழாரம் சூட்டினார்.

சில வேளைகளில் தெரேசுவின் இருள் அனுபவத்தின் போது 'நம் இறைவன் அமைதியின் தலைவன்' என நினைவுறுத்தி உடன்நின்றவர் தான் தலைமைச் சகோதரி ஜெனெவியவ். அவருடைய கூற்றுகள் சிலவற்றைத் தெரேசு கவனமுடன் எழுதி வைத்தார்.

கார்மலில் தெரேசு கண்ட முதல் மரணம் அதுவே. அந்த மரணம் அவரில் அச்ச உணர்வைத் தூண்டவில்லை. மாறாக அவரில் புன்னகைக் கீற்றுகளை ஏற்படுத்தியது. ஒருவரும் கவனியாத நிலையில் தமது முதிர்ந்த



வயதுத் தோழியின் கடைசிக் கண்ணீர்த்துளிகளைச் சேகரித்தார். சில நாள்கள் கழித்து அவரது கனவில் தலைமைச் சகோதரி ஜெனேவியேவ் தோன்றி, உனக்கு என் இதயத்தை அளிக்கிறேன்!' என்று மூன்று முறை கூறியதாகத் தெரேசு வெளிப்படுத்தினார்.

## மரணமே வெல்லும் (குளிர்காலம் 1891 - 92)

தலைமைச் சகோதரி ஜெனெவியேவ் தமது கல்லறையில் துயில் கொண்டிருந்தார். ஆனால் நீர்க் கோப்புடன் கூடிய கொடிய தொற்றுக் காய்ச்சலொன்று பிரான்சு நாட்டையே கலக்கியது. லிசியூ கார்மல் இல்லத்தையும் தாக்கியது. மரணம் விரைவில் தொடர் வினையாயிற்று. 82 வயது நிரம்பிய மூத்த சகோதரி தெரேசுவின் 19 ஆவது பிறந்த நாள் விழாவின் போது இறந்தார். அவரைத் தொடர்ந்து நான்காம் நாள் இல்லத் துணைத் தலைவியும், ஏழாம் நாள் ஒரு பொதுநிலைச் சகோதரியும் மரணம் அடைந்தனர். பொது நிலைச் சகோதரி தமது அறையில் இறந்து கிடந்ததைத்



மார்ட்டின் - இயங்கும் நாற்காலியில். (இடமிருந்து வலம்:) மரியா கேரென், லேயோனி, பெண் பணியாளர், செலின், ஆண் பணியாளர், திரு. இசிதோர், திருமதி. இசிதோர், தெரேசுவின் அன்பு நாய் தோம். (1892)

தெரேசு தான் முதலில் பார்த்தார்.

சகோதரி தூய இதய மரியா, மார்த்தா, மற்றும் குழந்தை இயேசுவின் தெரேசு ஆகிய மூன்று இளம் சகோதரிகளைத் தவிர மற்ற அனைவரும் படுக்கையில் வீழ்ந்தனர். எனவே, குழு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மணிகள் ஒலிக்கவில்லை. திருப்புகழ்மாலை வாசிக்கப்படவில்லை. உணவறையில் உணவு பரிமாறப்படவும் இல்லை.

தெரேசு தமது கடமைகளை விரைவில் ஆற்றமாட்டார் என்று கருதியே அனைத்துப் பணிகளிலும் அவரை உதவியாளராக நியமித்து வந்தனர். இந்த நெருக்கடியான சூழலில் தமது ஊக்கத்தையும், அறிவுத் தெளிவையும் உறுதியுடன் எண்பித்தார். இறுதியாக சுதந்திரமாக 'முன் நின்று செயலாற்றும் நிலை' அடைந்தார். தமது ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்தினார். இச்சூழல் அவரைச் சோர்வடையச் செய்யாமல் அவரது உயிர்த் துடிப்பைத் தூண்டியது. அமைதியில் அவர் பணியாற்றினாலும் ஆர்வம் அவரைத் தொடர்ந்தது. அனைத்துப் பணிகளையும் கண்காணிக்கும் பொறுப்பு தெரேசுவினுடையது. இறந்த சகோதரிகளை அடக்கம் செய்யத் தயார்ப் படுத்தல், நோயாளிகளைக் கண்காணித்தல், அடக்கச் சடங்குகளுக்கு ஒழுங்கு படுத்துதல் போன்ற பணிகள் அனைத்தையும் தெரேசு மட்டுமே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று. ஆனால் அவரது ஆற்றலும் திறனும் அவரோடிருந்து மரணத்தின் மீதும் ஆட்சி செய்தன. வழக்கங்கள் வழிவகுத்தன! நோயுற்றோர் திருவிருந்தில் பங்கு பெறும் வாய்ப்பு மறுக்கப் பட்டிருந்தாலும் அவர்கள் தினமும் அதனைப் பெற்று இன்பம் துய்க்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். தெரேசுவின் அரிய விருப்பங்களின் ஒன்றான நோயாளிகளைப் பாராமரிக்கும் பணியைச் சிறப்புடன் செயல் படுத்திய நிறைவு தெரேசுவின் முகத்தில் மிளிர்ந்தது.

கார்மல் சபைத் தலைமைத் தந்தை அருட்பணியாளர் தெலாத்ரோயெத் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தெரேசுவைப் பற்றிச் சில குறுகிய கண்ணோட்டம் கொண்டிருந்தார். இறுதியில் தெரேசு அந்த எண்ணங்கள் மீது வெற்றி கொள்ளச் செய்தார். வேதனைகள் 19 வயது நிரம்பிய கன்னிகையின் ஆற்றல்களை வெளிக் கொணர்ந்தன. அது முதல் தெலாத் ரோயத் 'இந்தக் குழுவிற்குப் பெரும் நம்பிக்கையைத் தெரேசு வெளிப் படுத்துகிறார்' என்று கூறத் தொடங்கினார். 'சிறிய ஆமென்' என்று தெரேசு வைப் பாராட்டத் தொடங்கினார். தெரேசுவும் தாம் அனுபவித்த அனைத்து வேதனைகளின் வழியாக மன உறுதியை வெளிக்காட்டி, தாம் ஒரு ஆற்றல் மிக்க பெண்மணி என எண்பித்தார்.



கார்மல் இல்ல உறுப்பினர்கள் எண்ணிக்கை 22 ஆகக் குறைந்தது. பெரும் வேதனையினின்று அனைவரும் மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்தனர். பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் இல்லத் தலைவியின் தேர்வு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த அசாதாரண சூழலில் தலைமைச் சகோதரிகள் அனைவரும் தற்போதைய தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கையே மேலும் ஓராண்டிற்கு பணியைத் தொடர வேண்டினர்.

## இல்லம் தேடி (மே 1892)

பிறிதொரு பெரும் வேதனை இறுதி எல்லை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. 39 நீண்ட மாதங்களுக்குப் பிறகு மார்ட்டினை மனநோய் இல்லத்திலிருந்து அழைத்துவர இசிதோர் மே 10 ஆம் நாள் கயென் நகருக்குச் சென்றார். மே 12 ஆம் நாள் மார்ட்டின் தம் பெண் மக்களை வரவேற்பறையில் சந்தித்தார். கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவே முதல் சந்திப்பு! அது, இறுதிச் சந்திப்பாகவும் அமைந்தது. அவர்களின் தந்தை அதிகம் மாற்றம் பெற்றவராகவும், உடல் மெலிந்தும் இருக்கக் கண்டனர். அன்று அவருடைய மனநிலை தெளிவுடன் இருந்தது. இருப்பினும் அவர் ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லை. அங்கிருந்த அவர் கண்ணீருடன் விடைபெற்றபோது அவருடைய ஆள்காட்டி விரலை மேல் நோக்கிக் காண்பித்து 'விண்ணுக்கு' என்ற ஒரு வார்த்தையை மட்டும் முனைந்து உச்சரித்தார். அதுவே தெதேசுவின் பாசமிகு தந்தையது நெஞ்சை நெருடும் கடைசிப் பார்வை.

மார்ட்டின் முதலில் கேரென் குடும்பத்தினருடன் தங்கினார். பின்னர் ஜூலையில் லேயோனி மற்றும் செலினுடன் வாழ லபே (Labbey) சாலைக்குச் சென்றார். இரு சகோதரிகளுக்கும் துணையாக ஒரு பணியாளருடன் ஒரு பணிப்பெண்ணும் இருந்தனர். மார்ட்டின் தனிமையாக எந்தச் செயலையும் செய்ய இயலாத காரணத்தினால் அவருக்கு உணவளிக்க, உடன் உலாவச் செல்ல இந்தப் பணியாட்களின் பணி உறுதியாகத் தேவைப்பட்டது. எனினும் புறக்கணிக்கப்பட்டோர் வாழும் மனநோய் இல்லத்திலிருந்து வெளியே கொண்டு வந்து குடும்பத்தினர் பாசவலைகளுக்குள் இருப்பதால் மூன்று கார்மல் சகோதரிகளும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். தந்தையைக் கவனிப்பதிலேயே தம்மை முழுமையாகச் செலின் ஈடுபடுத்திக் கொண்டார். கார்மலில் நுழைவதைப் பற்றி அவர் மனம் எண்ணினாலும் தற்போது தமது பணி இல்லத்தில் தந்தைக்குத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து வாளாவிருந்தார். தெரேசு தமது தாய்மைக்குரிய கரிசனையைத் தொடர்ந்து

கடிதங்களாலும், வரவேற்பறை உரையாடல் மூலமாகவும் செலினுக்குக் கொடுத்து வந்தார். ஒரு நாள் தெரேசு செலினிடம் ஆன்றி மோதெலான்த் திருமணத்தின் போது, 'நடனத்தில் பங்கு பெற வேண்டாம்' என வேண்டினார். ஆனால் அடைப்புப் பகுதியில் வாழும் தன் சகோதரி சில வேளைகளில் மிகவும் கண்டிப்புடன் இருப்பதாகவும், பிறிதொரு இறுதி எல்லைக்குச் சென்று விடுவதாகவும் செலின் நினைத்தார். திருமண வரவேற்பு நிகழ்ச்சி ஆரம்பமானது! அனைவரும் நடனமாடத் தொடங்கினர். செலின் சிறந்த நடனக் கலைஞர். ஆயினும் தன்னோடு ஆடவந்த இளைஞனுக்கு இணையாகச் சுழன்று நடனமாட இயலவில்லை. நாணத்தால் மேடையிலிருந்து கீழே இறங்கி வந்து விட்டார். இந்நிகழ்ச்சி அறிந்த தெரேசு மகிழ்ச்சியடைந்தார். இயேசு செலினுக்காகக் காத்திருந்தார்.

கார்மல் சபைத் தலைமைத் தந்தை ஒரே குடும்பத்திலிருந்து நான்காவது உடன் பிறப்பும் கார்மல் இல்லத்தில் புகுவதை அனுமதிக்க மாட்டார் என்பது செலினுக்குத் தெரியும். அருட்பணியளார் பிஷோன் செலினுக்காகப் பிற திட்டங்கள் வைத்திருந்தார். செலின் திறன் பல கொண்டவர். துடிப்பானவர். எனவே கனடாவில் அவர் தொடங்கவிருந்த புதிய சபை ஒன்றில் சேர்ப்பதென முடிவெடுத்துச் செலினிடம் கூறினார். ஆனால் அதனைக் குறித்து எவரிடமும், தெரேசுவிடம் கூடத் தெரிவிக்க வேண்டாம் என்று கூறியிருந்தார். தமது விடுமுறையைக் கழித்து வந்த லமூவிலிருந்து குழப்பம் நிறைந்த கடிதங்களை எழுதினார். அவருடைய உள்ளம் இருள் படர்ந்த நிலையில் இருந்தது.

செலினது குழம்பிய நிலைக்குத் தெளிவு கிடைக்கும் வண்ணம் ஒளி நிறைந்த பதில் கடிதங்களைத் தெரேசு கார்மல் இல்லத்திலிருந்து அனுப்பினார். மேன்மேலும் தமதுஆன்மீக உணவினைத் தெரேசு 'இறை வார்த்தையில்' கண்டு தெளிந்தார். கார்மல் கன்னிகைக்கு இதைவிடச் சிறந்தது வேறெதும் இருக்க இயலுமா? அவர்களது சட்டத்தின் மையப் படிப்பினையே' அல்லும் பகலும் இறைவார்த்தையைத் தியானிப்பது' தான். இறை வார்த்தையின் வெளிப்பாட்டு மூலக் கூறுகளை விட, அதன் விளக்கவுரைகளால் மக்களை வழி நடத்துவதே அன்றைய ஆன்மீகமாக இருந்தது. தம் விருப்பம் போல் எந்நேரத்திலும் எடுத்துப் படிக்கும் வகையில் திருவிவிலியம் தம்மிடம் இல்லாததால் நற்செய்திகளையும் தூய பவுல் அடியாரின் மடல்களையும் சிறிய நூல்களாக ஒன்றிணைத்துத் தரும்படி தெரேசு தம் சகோதரி செலினிடம் வேண்டினார். அவரும் அதற்கு உடன் பட்டார். அத்திருவிவிலியத்தைத் தெரேசு எப்பொழுதும் தமது நெஞ்சுக்கு



நெருக்கமாக வைத்துக் கொண்டார். ஆனால் சில கன்னியர்கள் இதனை விந்தையாக நோக்கினர்! ஆனால் பலரும் அதனைச் சிந்தையாக்கிச் செயல்படுத்தினர். 'எனது மன்றாட்டு நேரங்களில் எனக்கு வலிமையளித்தது இந்நற்செய்தி நூல்களே! எனது எளிய சிறிய ஆன்மாவின் தேவைகள் என்ன என்பதை அவற்றில் கண்டுக் கொண்டேன். மறைவானதும், புதிரானதும் ஆன அர்த்தங்களையும் நான் பெற முடிகின்றது. மற்ற நூல்கள் அனைத்தும் தமக்கு உற்சாகம் அளிக்கவில்லை எனத் தெரேசு குறிப்பிட்டார்.

'இயேசுவே "வார்த்தை" என்று எனக்குத் தோன்றியது' எனக் கூறிய தெரேசு 'அவரே மானிடமகன்: மனித உடல் ஏற்ற வார்த்தை!' என்பதை ஆழமாக விசுவசித்தார். அந்த வார்த்தையைப் படித்தார். மேலும் படித்துத் தியானித்தார். தமது வழியைத் திருநூல் வழியாகக் கண்டடைந்தார். 'இயேசுவே! உம் வார்த்தையே என் பாதங்களுக்கு விளக்கு' என அடிக்கடி கூறினார். பல்வேறு மொழிகளில் இறைவார்த்தை மொழியாக்கம் செய்யப் பட்டது அவருடைய மனத்திற்கு வேதனை தந்தது. 'நான் ஒரு அருட்பணி யாளராக இருந்திருந்தால் எபிரேயம், கிரேக்கம் போன்ற மொழிகளைக் கற்றுத் தேர்ந்திருப்பேன்! நம் மனித மொழி வாயிலாகக் கடவுள் அறிவிக்க விரும்பிய தெய்வீகச் சிந்தனைகளை எளிதாக்கியிருப்பேன்.' என்று கூறி விவிலியத்தின் மீது அவருக்கிருந்த ஆவலை வெளிப் படுத்துகின்றார்.

மேன்மேலும் உயர்ந்த ஆன்மாக்கள் எனக்கூறி உயர்வாகப் புகழப் படுவோர் மீது தெரேசுவுக்கு ஈடுபாடோ கவர்ச்சியோ ஏற்படவில்லை. 1892 ஆம் ஆண்டு அக்டோபரில் அவர் செய்த தனித்தியானம், 'கீழ் நோக்கிய' பாதையைச் சுட்டிக் காட்டியது. "இயேசு நம்மிடம் கூறும் வார்த்தைகளுக்கு நாம் செவி மடுப்போம் (சக்கேயுவிடம் அன்று இயேசு கூறிய அதே வார்த்தைகள்): விரைவாய் இறங்கி வாரும்! இன்று நான் உமது இல்லத்தில் தங்க வேண்டும். . . மன்னர்க்கெல்லாம் மன்னராகிய அவர் தம் முகத்தை எவரும் அறியாதவாறு மறைந்திருக்கும் வண்ணம் தம்மையே தாழ்த்திக் கொண்டார். அதுபோன்றே என் முகத்தையும் மறைக்க நான் விரும்புகிறேன். என் அன்பர் மட்டும் என்னைக் காண வேண்டும்" என்றார் தெரேசு.

## சாத்தியமாகுமா சத்தியம்?

சில நாள்கள் கடந்த பிறகு இறுதியாக ஒரு முடிவு எடுத்தார் தெரேசு. அதனை உடனடியாகச் செயல்படுத்தினால் பெருந்துயரைக் கொணர்ந்துவிடும் என்றெண்ணிச் செபத்திலும், பொறுமையிலும் ஆறு மாதங்கள் நிலைத்திருக்க முடிவு செய்தார். இப்போராட்டம் உண்மையின்

போராட்டம்; நீதி, நேர்மையின் போராட்டம்! சுருங்கக் றின் அறப்போராட்டம். உண்மையின் மீது அவர் கொண்டிருந்த அன்பையும் அவரது பண்புகளின் திறனையும் எண்பிக்கும் வகையில் அமைந்து விட்டது இப்போராட்டம்! 'என் இறைவா! உள்ளதை உள்ளபடியே நான் காணச் செய்தருளும்' என மன்றாடி இப்போராட்டத்தைத் தொடங்கினார். சகோதரி மார்த், தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கிடம் கொண்டுள்ள வரை முறையற்ற பற்றுணர்வு பற்றிச் சுட்டிக் காட்டிப் பேச வேண்டிய நேரம் கனிந்து விட்டது என்று எண்ணினார். விவிலிய மறைக் கோட்பாடு உண்மைகளைப் பின்பற்ற விழைந்தார். "உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால் நீங்களும் அவரும் தனித்திருக்கும் போது அவரது குற்றத்தை எடுத்துக் காட்டுங்கள்' (மத் 18 : 15) தெரேசு ஒரு பெரிய துணிச்சலான செயலில் ஈடுபட்டார். சகோதரி ஆக்னெசிடம் இதனைப் பற்றி வெளியிட்டு 'எனக்காக மன்றாடுங்கள்! சகோதரி மார்த்திற்குப் புத்தொளி புகட்டத் தூய மரியன்னையிடமிருந்து நான் அகத்தூண்டல் பெற்றேன். அவரைப் பற்றி நான் கொண்டுள்ள எண்ணங்களை அவரிடத்தில் எடுத்துரைக்கப் போகின்றேன். ஆனால் நீங்கள் பலவகையிலும் காட்டிக் கொடுக்கப்படுவீர்கள். அதன் பின்னர் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் உங்களைக் காணும் சந்தர்ப்ப சூழல்களைத் தவிர்த்து விடுவார். மேலும் நீங்கள் வேறு ஒரு துறவற இல்லத்திற்கு அனுப்பப்படலாம்! இவ்வயனைத்தும் எனது புரிதல்களுக்கு அப்பாற்பட்டவையல்ல. எனினும் இதைப் பற்றிப் பேசுவது எனது கடமை என எனக்குத் தெளிவாகத் தெரிகின்றது. விளைவுகளைப் பற்றி நாம் கவலைப்படக் கூடாது!' என்றார்.

அன்று மாலை சகோதரி மார்த்திற்கு அன்பு நிறைந்த உள்ளத்துடன், 'உண்மையான அன்பு என்றால் என்ன?' என்று விளக்கினார். 'உண்மை அன்பு என்பது பற்றுணர்வு அல்ல. மாறாகப் பிறர் நலனுக்காகத் தன்னையே தியாகப் பலியாக்குவது! அன்பு தனக்கெனத் தன்னையே தேடாதபோது, மென்மை வன்மையாகின்றது. விருப்பமற்ற நிலை உண்டாகிறது" என்றார். தெரேசு உதிர்த்த இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவரது அனுபவத்திலிருந்து ஊற்றெடுத்தவையே! இந்தச் சகோதரியின் பாச உணர்வு உடனடியாகப் பலனைத் தந்தது. சகோதரி மார்த் தமது தவறுகளை நிறைவாக உணர்ந்தார். அன்று அவருக்குக் கிடைத்த உள்ளார்ந்த விடுதலை உணர்வைத் தம் வாழ்வில் என்றுமே மறக்க இயலாது என அவரே கூறுகின்றார். ஐந்து ஆண்டுகள் நிறைவுற்ற பிறகு இந்நிகழ்வு பற்றி அனைத்தையும் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கிடம் தெரிவிப்பதில்



தெரேசு தயக்கம் காட்டவில்லை. பிறிதொரு சந்தர்ப்பதில் அவருக்குக் கடிதம் எழுதினார். எங்குமே பொய்ம்மை வஞ்சகமின்றி ஆட்சி செய்தது. தெரேசுவும் தம் 'மேய்ப்பரை' அகவொளியால் நிரப்புமாறு இயேசுவிடம் மன்றாடினார். அம் மேய்ப்பரைச் சுற்றி எங்குமே வீண் புகழ்ச்சியும் பொய்மையும் வஞ்சகமின்றி ஆட்சி செய்தன. 'இந்த வீண் புகழ்ச்சிக் குணத்தைப் போலத் துறவறக் குழுவை அழிக்கும் நச்சுப் பொருள் வேறு ஒன்றும் இல்லையென்பது தெரேசுவின் கணிப்பு.

1893 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் நாள் சகோதரி குழந்தை இயேசுவின் திருமுகத் தெரேசு 20 வயதைக் கடந்தார். ஐந்து ஆண்டுகள் கார்மல் வாழ்க்கை வாழ்ந்து கார்மல் இல்ல அனுபவம் பெற்றிருந்தார். ஐந்து ஆண்டுத் துன்பங்களை எதிர் கொண்டு விட்டார். இயேசுவின் அன்புக்காக அனைத்தையும் ஏற்றுக் கொண்டார். நீண்ட கடுங்குளிர்ப் பருவத்தினின்று மெல்ல விடுபட்டு வந்து கொண்டிருந்தார். ஒரு முக்கியமான நிகழ்வு அவருக்கு வசந்தத்தை வழங்கக் காத்திருந்தது.

8

# நிறைவை நோக்கி

## (20 பிப்ரவரி 1893 முதல் மார்ச் 1896 வரை)

*"அன்பின் வழிகளில் நான் பயணித்துள்ளேன்"*

### என் அக்கா - என் அன்னை (20 பிப்ரவரி 1893)

ஓராண்டு இடைவேளைக்குப் பிறகு இல்லத் தலைவிக்கான தேர்தல் நடத்த வேண்டியிருந்தது. தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கின் பதவிக் காலம் முடிவுக்கு வந்தது. அவர் மீண்டும் தேர்வு பெறத் தகுதி கிடையாது. தெரேசுவுக்கு ஒட்டுரிமை கிடையாது. எனவே, அவர் வாக்களிக்கவில்லை! ஆனால் தேர்தல் முடிவுகள் அவரை அளவில்லா ஆனந்தத்தில் ஆழ்த்தின. 'அவருடைய சகோதரி ஆக்னெசு இல்லத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். எனினும் இரகசிய வாக்களிப்பு முழுமையடையாதிருந்தது. விரைவில் வாக்குகள் பலவாறு சிதறுண்ட நிலை அறிய வந்தது. பொலின் குழப்பமுற்றவராய் அழுகையைத் தவிர எப்பணியும் தொடர ஆற்றல் இழந்தவராய்க் காணப்பட்டார். அவருடைய குடும்பத்தினர் அனைவரும் ஆக்னெசை வாயாரப் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தனர்.

பொலினைத் தெரேசு தம் அன்னையாக அலென்சோனில் தேர்ந்து கொண்டார். புய்ஸ்ஸொனேவில் அவரை இழந்தார். மீண்டும் பொலின் தமது 32 ஆவது வயதில் தெரேசுக்கு அன்னையாக மாறிவிட்டார். அன்னை என்கிற வார்த்தையின் ஆழமான அர்த்தத்தில் தாயாகவே மாறிவிட்டார்.



ஆம் கார்மல் இல்லத்தின் தலைவியாகி விட்டார். ஆனால் தெரேசு தமது சொந்த நலன்கள் பற்றி எண்ணம் கொள்ளவே இல்லை. அடைப்புப் பகுதிக் குள் வாழும் மார்ட்டின் சகோதரிகள் நிலை இத்தேர்தலின் முடிவினால் பாதிக்கப்படும் என்பதைத் தெளிவாகவே தெரேசு உணர்ந்திருந்தார். எனவே, அன்றைய தினம் மாலையே புதிய இல்லத்தலைவிக்குக் கடிதம் எழுதினார்: 'என் அன்பு நிறை அன்னையே! உம்மை இந்தப் பெயர் சொல்லி அழைப்பது எனக்கு எவ்வளவு எளிது! . . . இன்று இறைவன் என்னைத் திரு நிலைப்படுத்தியுள்ளார். உண்மையிலேயே நீர் என் அன்னை தான்! என் அன்னையாகவே என்றும் இருப்பீர்! என்னே அழகிய நன்னாள் இது! உம் குழந்தைக்கு இன்பப் பொன்னாள் இது. . .

தெளிந்த பார்வையுடன் மீண்டும் தொடர்கிறார்: 'தற்போது உள்ளங்களின் உள் ஆழுங்களை ஊடுருவிப் பார்க்க வேண்டிய நேரம். இயேசு உம்மில் பொங்கி வழியச் செய்துள்ள அருளின் புதையல்களை ஆன்மாக்களில் பொழிய வேண்டும்: உறுதியாக நீர் துயரைச் சந்தித்தே ஆக வேண்டும்.'

தெரேசுவின் முன்மொழியைத் தலைமைச் சகோதரி ஆக்னெசு விரைவில் கண்டுணர்ந்தார். அனுபவமற்ற இளம் வயதினராகிய ஆக்னெசு முந்தைய தலைமைச் சகோதரியின் நிலையான தூண்டுதலுக்கு மத்தியில் அவரது பணிப் பொறுப்பை உறுதிப்படுத்துவது எளிதானதல்ல! அவரது பணி, அவரது இயல்புக்கு எதிராக 'அவரை மாற்றிக் கொள்ளச் செய்தது: வளைந்து கொடுக்கும் தன்மை, மிகையான அறிவுத்திறன் போன்றவற்றைச் செயற்கையாக்கிக் கொண்டாலும் கடினமானதாக அவருக்கு தோன்ற வில்லை. குழுவில் இரு ஆளுமைகளுக்குமிடையே நடைபெறும் மோதல்கள் தவிர்க்க இயலாதவையாகிவிட்டன. முன்னாள் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கின் செயல்பாடுகள் ஆக்னெசைப் பெரிதும் பாதித்தன. வேதனைக்குள்ளாக்கிப் பெரும்பாலும் கண்ணீரை வரவழைத்தன. அவை ஒரு தொடர்கதையாகி விட்டன.

குழுவில் இருந்து வந்த மாற்று அதிகாரம் வழங்கும் முறையை மதித்து, ஓய்வு பெற்ற தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கைப் புகுமுகத் துறவுநிலையின் பயிற்சி உருவாக்குநராக ஆக்னெசு நியமித்தார். ஆனால் அதே நேரத்தில் எதிர்பாராத பிறிதொரு செயலைச் செய்யவும் முன்வந்தார். அதாவது பழைய தலைமைச் சகோதரியின் புதிய பணிப் பொறுப்பில், 'துணையாளராகப்' பணிபுரியச் சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசை நியமித்தார். தெரேசு தமது இக்கட்டான நிலையை நன்கு உணர்ந்திருந்தார்.

பழைய இல்லத்தலைவியின் மாறும் மனப்போக்கு, எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடிய தன்மை போன்ற அவரது மனநிலையை நன்கு புரிந்து வைத்திருந்தார். அதற்கேற்றாற்போல் தம்மை மாற்றிக் கொண்டு அவரது மனம் வேதனையடையாது பார்த்துக் கொள்ள முயன்றார். ஆக்னெசு இல்லத் தலைவியாகத் தேர்ந்து கொள்ளப்பட்டால் தமது எண்ணங்களை அவர் வழியாகச் செயல்படுத்தி விடலாம் என்றெண்ணி முதலில் சகோதரி ஆக்னெசுக்கு ஆதரவாக மரி தே கொன்சாக் செயலாற்றினார். ஆனால் சகோதரி ஆக்னெசு அவரது ஆளுமையின் தனித்துவத்தினாலும், விடுதலை உணர்வோடு செயல்படும் ஆற்றலாலும் சிறப்பாகச் செயல்படுகின்றார் என்பதை உணர்ந்து கொண்டதால் மரி தே கொன்சாக்கின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகவே மாறிவிட்டது- இவர்கள் இருவருக்குமிடையே மதில் மேல் பூனையாகத் தெரேசு செயல்பட வேண்டியதாயிற்று.

தெரேசுவின் பொறுப்பில் பயிற்சி பெற்று வந்த இரு சகோதரிகளும் ஒத்துழைப்புத் தராததால் அவருடைய பணியினை மிகவும் கடினமானதாக்கி விட்டனர். அவர்களில் ஒருவரான சகோதரி மார்த்தாவைப் பற்றித் தெரேசுவுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் ஜூலை 22 ஆம் நாள் இல்லத்தில் சேர்ந்த புதிய சகோதரி திருஉணவின் மரிய மக்தலேன் ஒரு பொதுநிலைச் சகோதரியாகப் பயிற்சி பெற்றார். அவர் 'தம்மைப் பற்றிய சுய சார்பு நோக்கு' எண்ணம் கொண்டிருந்தார். நீண்ட நாள்களாகப் தமக்கு முன்பு பயிற்சி பெற்றவர்களின் தூண்டுதல்களைத் தெரேசு தவிர்த்தார்.

தெரேசு ஆலய உதவிப் பணியாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப் பட்டார். பயிற்சி உருவாக்குநராகவும் சித்திரக் கலைப் பணிப் பொறுப்பாள ராகவும் செயல்பட்டார். ஓவியக் கலையில் சிறப்பு ஆர்வம் கொண்டிருந்ததால் அப்பொறுப்பினை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார். துணிகளில் சித்திரம் வரைந்து வண்ணம் தீட்டினார். சுவரோவியமும் தீட்ட விழைந்தார். அந்தக் கோடையில் நோயுற்றோர் வழிபாட்டு அறையிலிருந்து திருஉணவுப் பேழையைச் சுற்றியுள்ள சுவரின் மீது ஓவியம் தீட்டினார். 12 குட்டி வான தூதர்கள் திரு உணவுப் பேழையைச் சூழ்ந்து பறக்கின்றனர். ஒரு குழந்தை மட்டும் தனியே திரு உணவுப் பேழையின் அருகே உறங்குவதாக அருமை யாக ஓவியம் தீட்டப்பட்டிருந்தது. அந்தக் குழந்தை வேறு யாருமல்ல! தெரேசுவேதான்.

இந்த மாற்றங்களால் அவருடைய வாழ்வின் 'தெளிவின்மையிலிருந்து' விடுபட்டுக் கொண்டிருந்தார். அவரது குழுவில் தமது 'சித்திரக் கலை'யினால் மட்டுமல்ல; 'கவிதைப் புலமை'யினாலும் தமது ஆற்றலை



வெளிக் கொணர வாய்ப்புகள் பல அவருக்குக் கிடைத்தன. 1893 பிப்ரவரி 23 ஆம் நாள் தமது கவிதையின் முதல் அரங்கேற்றம் நடந்தது. சகோதரி தூய அகுஸ்துவின் தெரேசு என்ற சகோதரியின் வேண்டுதலுக்கிணங்கப் பொழுது போக்குக் கவிதை ஒன்றை எழுதி அனைவர் முன்பும் வாசித்தார். அவருடைய எழுத்துத் திறனுக்குச் சிறப்புப் பாராட்டு முத்திரைகள் கிடைத் தன. தலைமைச் சகோதரி ஆக்னெசு தமது புதிய பணிப் பொறுப்புகளில் தீவிரமாக ஈடுபட்டதால் எழுத்துப் பணியினைத் தற்காலிகமாகக் கை விட்டார். கவிதைகள் திருப்பாக்கள், குழு மனமகிழ்ச்சி நேரத்தில் நடிப்பதற் கான நாடகம் போன்றவற்றை அதுவரை படைத்திருந்தார்.

நடைமுறையில் பயன்படுத்தாத நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்திக் கவிதைகள் புனைவதில் தெரேசு வல்லவர். இந்தப் பாணியில் அவர் இயற்றிய சமயப் பாக்கள் வழியாகத் தெரேசு தமது இதயத்தின் உள் ஆழச் சுமைகளை வெளிப்படுத்தினார். அதனை வெளிப்படுத்தும் வழிகள் மிக அரிதாகவே கிடைத்தன. எனினும் பிறரது வேண்டுதலுக்கிணங்க அவருக்குள் எரிந்த எண்ணங்களை, அழுத்திய சுமைகளை வார்த்தைகளால் வடிக்க முனைந்தார்.

சகோதரி வானதூதரின் மரியா லே மான் (Lemans) என்ற இடத்தில் உள்ள மாதா மினவுதல் சபை இல்லத்திற்கு அனுப்பிய 23 கடிதங்களில் ஒன்று தெரேசுவின் குண நலன் குறிப்பு நிறைந்ததாக அமைந்தது. அன்றைய நிலவரப்படி தெரேசு எப்படியிருந்தார் என்பதைத் தெளிவாக அக்கடிதம் படம் பிடித்துக் காட்டுகிறது:

"நல்ல உயரத்துடன் உடற்கட்டுடையவர்; அழகு நிறைந்தவர்; குழந்தை உள்ளம் கொண்டவர்; இனிய குரல் வளமும், மொழி நயமும் கொண்டவர். 50 வயதுக்குரியவரிடம் காணப்படும் திறனாய்வுத் தன்மை, நிறைவு, நடுநிலைத் திறன், ஞானம் போன்ற குணங்கள் அவரில் மறைந்திருந்தன. எந்தச் சூழ்நிலைகளிலும் அமைதியாக இருப்பார். தமது உணர்வுகளைக் கட்டுப்பாட்டோடு வைத்திருந்தார். அனைத்திலும், அனைவரோடும் பழகும் விதத்திலும் பண்பாடு மிளிர்ந்தது. கள்ளம் கபடமற்றவர்; ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்கு பெறாமலே திருவிருந்தில் பங்கு பெறத் தகுதியுடையவர். ஆனால் தந்திர எண்ணங்கள் அவர் சிந்தனையை நிறைத்தன. தமது குறும்பு மற்றும் நகைச்சுவைச் செயல்களால் தமக்கு விருப்பம் உள்ளவர்களை மயக்கமடித்து விடுவார். இறைவனுடன் பக்தியுறவு கொண்டவர். நகைச்சுவையானவர்; அனைத்தும் அவர் எண்ணம் போல் நடந்தன. எவரையும் பக்திப் பரவசத்தில் கண்ணீர் வடிக்க வைக்கவும், மனமகிழ்ச்சி நேரத்தில் நகைச்சுவையை உதிர்த்து நாடித் துடிப்பை அடங்க


செய்யவும் வல்ல ஆற்றல் தெரேசுவிடம் இருந்தது."

## கோடையில் ஒரு கடிதம் (1893)

அக்கோடைப் பருவத்தில் பல்வேறு மாற்றங்கள் குடும்பத்தில் நிகழ்ந்தன. லமூஸ்இல் (La Musse) உள்ள ஷேத்தாவுக்கு (Cheteau) மார்ட்டின் அழைத்துச் செல்லப்பட்டார். அமைதியான அழகிய அந்தக் கிராமம், நகரைவிட அவர் உடல் நிலைக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கியது. ஆனால் லேயோனி தந்தையோடு அங்குத் தங்க விருப்பம் கொள்ளவில்லை. ஜூன் மாத இறுதியில் கயென் நகரில் மீண்டும் ஒரு தியானம் மேற்கொண்டார். துறவறத்தில் புகுவதற்காக மீண்டும் ஒருமுயற்சி எடுப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். தலைமைச் சகோதரி ஆக்னெசு மற்றும் சகோதரி தெரேசு இம்முயற்சியைப் பாராட்டி ஆதரித்தனர். ஆனால் செலின் தாம் மட்டும் தனிமையில் இருக்கப் போவதை எண்ணி வருத்தமுற்றார். "இவ்வுலகில் எனக்கென ஒருவரும் இல்லை. வெற்றிடமே என்னைச் சூழ்ந்துள்ளது. வெறுமை என்னைப் பின்தொடர்கின்றது. சிதைந்த கப்பலிலிருந்து தப்பிய கடைசிப் பயணியைப் போல் நம் குடும்பத்தில் நான் மட்டும் தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்கின்றேன். என் வாழ்வு சோக ரேகைகள் நிறைந்ததாகக் காணப்படுகின்றது" எனச் செலின் அங்கலாய்த்தார். செலினுடைய மாமா மகள் மரி கேரெனும் லிசியூ நகர் கார்மலில் புகுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார். எனவே அவருடைய சோகநிலை இன்னும் அதிகமாக ஆழப்படுத்தப்பட்டது. செலின் தமது எதிர்காலம் குறித்துப் பலவிதக் கேள்விக்குறிகளை எழுப்பிக் கொண்டிருந்தார். எனவே, தெரேசு இறைவார்த்தையை உள்ளத்தில் இருத்தி ஆழ்நிலையில் தியானித்தபோது தமக்குக் கிடைத்த அகவொளியை நீண்ட கடிதங்களாகச் செலினுக்கு எழுதினார். விவிலியத் திருவரிகள் மடை திறந்த வெள்ளம் போல் தங்குதடையின்றி எழுத்துக்களாகப் பரிணமித்தன. தமது ஆன்மீக நெருக்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளைப் பகிர்ந்து கொண்டு தம் சகோதரியைத் துறவறத்தில் சேர அனுமதித்தார். "என் ஆன்மாவின் நிகழ்வுகள் பற்றி உம்மிடம் நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்" எனத் தெரேசு செலினுக்கு எழுதினார். "உமது வார்த்தைகள் எனது ஆன்மாவிற்கு உணவாக உள்ளன" எனச் செலின் பதிலளித்தார்.

ஆவியின் அருட்செயல்கள் எப்படி இந்த இளம் சகோதரியின் நெஞ்சத்திலே செயலாற்றின என்பதை விளக்க இக்கடிதச் சான்றே போதுமானது: "செலின்! இயேசுவை இன்புறச் செய்வது, அவரது இதயத்தை மகிழ்வால் நிரப்புவது எவ்வளவு எளியது! நாம் ஆற்ற வேண்டிய கடமை




Vivre d'Amour!

தெரேசுவின் கவிதை - கையெழுத்துப்படி :
**அன்பினால் வாழ்வோம் (1895)**

ஒன்றேயொன்று தான். நம்மைப் பற்றி அக்கறை கொள்ளாமல், நம் குற்றங்களைப் பற்றி அதிகம் சிந்திக்காமல் அவரை அன்பு செய்ய வேண்டும். உம் தெரேசு தம்மை உயர்ந்த இடத்தில் இருப்பதாக எண்ணியதில்லை. ஆனால் அனைத்திலுமிருந்து நன்மைகளைக் கவர்ந்திழுக்க இயேசு அவருக்குக் கற்றுத் தருகின்றார். தன்னுள் இருக்கும் நன்மை, தீமை களினின்றும் நலன்களையே பெறச் செய்கின்றார். 'அன்பு வங்கி' விளை யாட்டை எவ்வாறு விளையாடுவது என்று இயேசு அவருக்குக் கற்றுத் தந்தார். அவருக்காகத் தாமே சில சமயம் விளையாடினார். எப்படி அவர் செயல்படப் போகின்றார் என்பதைத் தெரியப்படுத்தாமலே செயல்பட்டார். ஏனெனில் அது அவருடைய பணி! தெரேசுவுக்குரியது அல்ல. தெரேசுவினுடைய பணி தம்மையே முழுமையாகக் கைநெகிழ்வதே. தம்மை அவர் கையளிக்க வேண்டும். தமக்காக எதனையும் பாதுகாத்துக் கொள்ளா மல் தம்மையே வெறுமையாக்க வேண்டும். அவரது வங்கி எவ்வளவு அவருக்குத் தருகின்றது என்பதை அறியும் மகிழ்வைக் கூட இழக்க வேண்டும். . . பல்வேறு சிறந்த நற்பண்புகள் புரிவதன் மூலம் முழுமையின் நிறைவை இதயங்கள் பல அடைய அதன் இயக்குநர்கள் அரிய பல பணியாற்று கின்றார்கள். ஆனால் என் இயக்குநர் இயேசு எனது செயல்களை நான் எண்ணிப் பார்க்க எனக்குக் கற்றுத் தருவது இல்லை. அனைத்தையும் அன்புக்காகச் செய்யுமாறு எனக்குக் கற்பிக்கிறார். நான் அவர்மீது அன்பு பாராட்டுகிறேன் என்பதை அவருக்கு எண்பித்துக் காட்ட அவர் எனக்கு வழங்கும் ஒவ்வொரு வாய்ப்பின் போதும் நான் மகிழ்வுற எனக்குக் கற்பிக்கிறார். ஆனால் இவையனைத்தும் அமைதியில் செயல்படுகின்றன. 'கைநெகிழ்விலே' (கையளிப்பு) நிகழ்கின்றன. நான் செய்வது எதுவுமில்லை. இயேசுவே அனைத்தையும் செயல்படுத்துகிறார்."

தெரேசு முதன்முறையாகக் கையளிப்பு பற்றிய கருத்தியலை இங்குக் கூறுகின்றார். ஆனால் என்னே நெகிழ்வுத் தன்மை என்னே பற்றின்மை அவரிடத்தில் காணப்படுகின்றது! அதே நேரம் தம் குழந்தைப் பருவத்திற்கும் தம்மை அழைத்துச் செல்கின்றார். சகோதரி மார்த்தாவுக்குத் தேவையான தம் குழந்தைப் பருவத்தில் பயன்படுத்திய 'நற்செயல்களின் மாலை' என்ற முறையைக் கடைப்பிடிக்கக் கற்றுத் தருகின்றார். தெரேசு எடுத்த முயற்சிகள் அனைத்தும் ஓரளவுக்குத் தான் மார்த்தாவுக்கு உதவின. காரணம் மார்த்தா விழுந்த "வலை" அவ்வளவு சக்தி வாய்ந்தது எனத் தெரேசு ஏற்றுக் கொண்டார். எனினும் தெரேசு சகோதரிக்குரிய அன்புடன் அவருக்கு உதவி புரிந்தார்.

தொடர்ந்து தெரேசு மனம் திறந்து செலினோடு பேசினார்: 'செலின்!



இறைவன் என்னிடம் எதையும் கேட்கவில்லை. தொடக்கத்தில் (தேர்வு நிலையாளர் பருவம், புகுமுகத் துறவுநிலைப் பருவம்) எண்ணிலடங்காத வற்றை என்னிடம் வினவினார். சிறிது நேரம் எண்ணிப் பார்த்தேன். என்னிடம் எதுவும் தற்போது கேட்காததால், முன்பு அவர் என்னிடம் கேட்டு வந்தவற்றையே அமைதியிலும், அன்பிலும் செய்து கொண்டே செல்ல வேண்டும் என முடிவெடுத்தேன். தூய அவிலா தெரசாள் கூறுகின்றார்; 'அன்பின் தீயை நாம் வளர்க்க வேண்டும். அதில் எண்ணெய் ஊற்றி வார்க்க வேண்டும். நாம் இந்த அன்புத் தீயை வளர்க்க வேண்டும்" இயேசுவை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் சிறிய வாய்ப்பினையும் தேடிக் கண்டுபிடித்துச் செயல்படுத்தி அன்புத் தீயை வளர்க்க வேண்டும். . . "உதாரணமாக நான் எதுவும் கூறவிழையாத போது ஒரு புன்னகையோ, யாராவது சோர்வுற்றிருக்கும் போது அவருடன் ஒரு நட்புறவு வார்த்தையோ பேசினாலும் போதுமே !".

உண்பதற்குப் பயன்படும் உட்கருவை விட அதனை மறைத்திருக்கும் வெளிப்புற ஓடு சிறந்ததல்ல. அதுபோல, புறத்தோற்றமல்ல ! அகத்தூய்மையே இன்றியமையாதது. இயேசு நம்மை, நமது புறத்தோற்றத்தைக் களைந்து விடுகின்றார்: ஏனென்றால் நம்முள் செயலாற்றுபவர் அவரே ! என்பதை எண்பிப்பதற்காக, *"இந்த ஏழை இதயங்கள், இத்தகைய எளிய நிலையில் தங்களைக் கண்டு அச்சமுறுகின்றார்கள். பிறருக்குக் கொடுக்கத் தங்களிடம் எதுவும் கிடையாது, அனைத்தையும் பிறரிடமிருந்தே பெற வேண்டிய நிர்ப்பந்த நிலை உள்ளதால், தாங்கள் ஒன்றுக்குமே உதவா தவர்கள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்."* எனத் தெரேசு கூறுகிறார்.

தெரேசு தாம் எதைப் பற்றிப் பேசுகின்றார் என்பதை அறிந்திருந்தார். தமது உள் ஆதங்கத்தையே வெளிப்படுத்துகின்றார். குழுவில் மற்றவர் களோடு இணைந்து, குழுவின் கடுமையான பணிகளிலே ஈடுபட இயலாத தெரேசு ஓவியப் பணிகளிலே முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அப்போது அவருடன் வாழும் சகோதரிகள் பலர் அவரை ஒன்றுக்கும் உதவாதவர் என்றே எண்ணினர். 'பல சகோதரிகள், அவர் எதுவுமே செய்வதில்லை. தம்மை மகிழ்வித்துக் கொள்ள மட்டுமே அவர் கார்மல் சபைக்கு வந்திருக்கிறார் என்று குற்றம் சாட்டினர்" எனத் தலைமைச் சகோதரி ஆக்னெசு கூறினார்.

## இறைமையில் என்றும் இளமையே! (8 செப்டம்பர் 1893)

உறுதி மொழியளித்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கார்மல்

கன்னியர் தங்களது புகுமுகத் துறவுநிலையை விட்டுப் பிரிவது வழக்கம். 1893 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் நாள், நிரந்தரமாகப் புகுமுகத் துறவுநிலையிலேயே இருக்குமாறு தெரேசுவைப் பணித்தனர். ஏற்கெனவே அவருடைய இரு உடன்பிறப்புகளும் இல்லத்துக் கன்னியர் குழுக் கூட்டத்தில் உறுப்பினர்களாய் இருந்தனர். எனவே, சட்ட விதிகளின்படி தெரேசு அதில் உறுப்பினராய்ச் செயல்படும் உரிமை கிடையாது. மேலும் எந்தவிதமான முக்கிய பணிப் பொறுப்புக்களும் ஏற்கத் தேர்வு செய்யப்படும் உரிமையும் அவருக்குக் கிடையாது. அப்படியென்றால் அனைவரிலும், இளையவராக, கடையவராக இருக்க வேண்டும். அலென்சோனிலும், புய்ஸ்ஸொனேவிலும் இருந்தது போன்றே கார்மலிலும் இருக்க வேண்டும். இந்தத் தியாகத்தை அவர் செய்ய வேண்டும் என்றே தலைமைச் சகோதரி ஆக்னெசு விரும்பினார். அவர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட இருபுகுமுகக் கன்னியரையும் தொடர்ந்து பராமரிக்கும் பணியைத் தெரேசுவிடமே தலைமைச் சகோதரி ஒப்படைத் தார்.

சகோதரி மரிய மக்தலேன் ஓராண்டுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை யும், அரை மணி நேரம் சகோதரி தெரேசுவைச் சந்தித்தே ஆகவேண்டும். இது தலைமைச் சகோதரி ஆக்னெசு மரியமக்தலேன் மீது ஒரு கடமை யாகவே திணித்தார். ஆனால் குறிப்பிடப்பட்ட இடத்திற்குச் செல்வதற்குப் பதிலாகச் சகோதரி மரிய மக்தலேன் தலைமறைவாகி விடுவார். தெரேசு அவரைத் தேடிக் கண்டுபிடித்து, "நான் உம்மைத் தேடிக் கொண்டிருந்தேன்" என்று கூறும் போது, "நான் பணிகளில் அதிகமாக ஈடுபட்டிருந்தேன்." என்று பதிலளித்தார். சில வேளைகளில் மேல் மாடியிலுள்ள பரணில் ஒளிந்து கொள்வார். தெரேசுவின் அன்பும், நுண்ணறிவும் நிறைந்த வழிகாட்டுதலுக்கு அஞ்சியே அவர் அவ்வாறு தம்மையே மறைத்துக் கொண்டார்.

தற்காலிக இல்லத் தலைவியாகப் பொறுப்பேற்றிருந்த சகோதரி ரஃபேலுக்கு உதவியாளராக, வாயிற்காப்புப் பணியும் தெரேசுவுக்குக் கொடுக் கப்பட்டது. சகோதரி ரஃபேல் மிகவும் மென்மையானவர்,வேகம் குறைந்தவர், ஆனால் நினைத்ததைச் சாதிக்கும் தனி மனப்போக்குடையவர். எனவே, தெரேசு வியத்தகு முறையில் பொறுமை காக்க வேண்டியிருந்தது. தான் தாழ்த்தப்பட வேண்டும் என்பதே தெரேசுவின் ஆவல். இத்தகைய சிறு பணிகளை நிறைவாகச் செய்வதன் மூலமே அவரது ஆவல் நிறைவேறும் என்பதைக் கண்டுணர்ந்தார். தமது விருப்பம் இங்குச் செயல்பட வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. அவரது மனத்தின் தீரச் செயல்கள், அவரோடு வாழ்ந்து வந்த சகோதரிகளின் கண்களுக்குக் கூட மறைக்கப்பட்டு விட்டன.



"கொடுமையிலும் கொடுமையான வேதனை என்னவென்றால் அவர் யாராலும் புரிந்து கொள்ளப்படாமையே!"

1894 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் நாள் தெரேசு தமது 21 ஆவது வயதை அடைந்தார். எனவே, மற்றக் கன்னியர் போல் தெரேசுவும் உண்ணா நோன்பிருக்கத் தொடங்கினார். தெரேசு தமது தனித்துவத்தை வெளிக் காட்டக் கிடைத்த ஒரே வாய்ப்பு இது. தெரேசுவின் ஆசிரியை பொலீன் கற்றுக் கொடுத்தது போலக் குழந்தை பருவம் முதல் இந்நாள் வரை எழுத்துக்களைச் சாய்வாக எழுதி வந்தார். ஆனால் தற்போது இயற்கையாக அவருக்கு எளிதாக இருக்கும் முறையை அதாவது நேராக, செங்குத்தாக, எழுதும் முறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்.

ஜனவரி திங்கள் 21 ஆம் நாள் இல்லத் தலைவி ஆக்னெசின் பெயர் கொண்ட விழாவைக் கொண்டாட இருந்தனர். அதற்காக இரு கலைப் படைப்புகளைத் தயார் செய்தனர். தலைமைச் சகோதரி ஆக்னெசின் வெவ்வேறு கவிதைத் தொகுப்பினால் தூண்டப் பெற்றுத் தயாரிக்கப்பட்ட "குழந்தை இயேசுவின் கனவு" என்ற (பேசாத ஓரங்க நாடகம்) (Tableau) மற்றொன்று அவருடைய முதல் நாடகம். அன்றைய நடைமுறைச் செய்தி களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட "ஜோன் தார்க்" (John of Arc) நாடகம்.

## நிழல் தேடும் நிஜங்கள் (1894)

அந்நாள்களில் பிரான்சு நகர் முழுவதும் ஜோன் தார்க் பற்றிப் பரபரப்பாகப் பேசப்பட்டது. லொரேன் (Lorraine) நகர் இளம் நங்கையாகிய அவரைத் தூயவர் நிலைக்கு உயர்த்தும்படி ஆர்லியன்ஸ் (Orleens) மறை ஆயர் த்யூபான்லூப் (Dubanloub) இருபது ஆண்டுகளாகப் போராடி வந்தார். 1869 ஆம் ஆண்டில் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் இதற்கான தயாரிப்பு நிலை நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் ஜோனின் விசாரணைகள் (1841 - 9) என்னும் நூலினைக் கிஷொரா (Quicherat) வெளியிட்டார். மிஷெலோ (Michelot 1841)வின் நூல் மற்றும் எண்ணிலடங்கா வெளியீடுகள், கவிதைகள், நாடகங்கள் போன்றவை நாடெங்கும் பரவலாக ஜோனின் புகழைப் பரப்பின.

1894 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் நாள் திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் ஜோன் தார்க் வணங்கத்தக்கவர் என்று கூறுவதற்கான முன்னுரையை அங்கீகரித்தார். அன்று முதல் அவர் வணக்கத்திற்கு உரியவர்: மக்கள் முன்னிலையில் பொது இடங்களில் போற்றப்படலாம், அவரிடத்தில்

மன்றாடலாம் என்று அறிவிக்கப்பட்டது. அந்த ஆண்டு மே திங்கள் 8 ஆம் நாள் பிரான்சு நாடெங்கும் தேசிய விழாவாக அவரைப் புகழ்ந்து கொண்டாடினர். குடியரசாளர்கள், அரச பரம்பரையினர், கத்தோலிக்கர்கள், குருக்கள், எதிர்ப்பாளர்கள் அனைவரும் தேசிய வீராங்கனையைப் புகழ்ந்து போற்றி வணங்கினர். லிசியூவில் செலினும், மரிய கேரென் மற்றும் நண்பர்களும் தூய பியெர் (St. Bierre) மறை மாவட்டப் பேராலயத்தை அழகுபடுத்த 12 வெள்ளைக் கொடிகள் தயாரித்தனர். இப்பேராலயத்தின் புகழ் பீடத்தில் ஆயர் பியெர் கொஷோன் (Bierre cauchon) அவர்களின் உடல் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. இவர் முன்னிலையில் தான் ஜோன் தார்க் புலன் விசாரணை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்பேராலயத்தில் அந்த ஆண்டு ஐயாயிரம் மக்கள் ஒன்று கூடினர்.

தெரேசு தம் குழந்தைப் பருவம் முதலே ஜோன் தார்க் மீது அன்பு செலுத்தி 'என் அக்கா' என்றே அழைத்து வந்தார். அவரது வீரச் செயல்களை வாசித்தறியும் போதே ஓர் அருட்கொடையும் பெற்றார். அவ்வருட்கொடை அவருடைய உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது; 'ஜோன் தார்க்கைத் தூண்டி எழுப்பிய அதே எரியும்ஆவல் என்னுள்ளும் பற்றி எரிவதாக நான் உணர்கிறேன். . . நான் மகிமையடைவதற்காகவே பிறப்பெடுத்திருப்பதாக எண்ணினேன். எனது மகிமை அழியக்கூடிய மானிடக் கண்களுக்கு வெளிப்படுத்தப்படாது என்பதையும், ஒரு பெரும் புனிதை ஆவதில்தான் அந்த மகிமை அடங்கியிருக்கிறது என்பதையும் கடவுள் வெளிப்படுத்தினார். 19 வயதிலேயே மறைத் தியாகியான, அச்சம் அறியாத இந்த இளம் நங்கை மீது ஆழமான பாசம் தனக்குண்டு என்பதைத் தெரேசு உணர்ந்தார். உரோமை நகரத்தின் கொலோசியத்தில் உள்ள வீர மண்ணை முத்தம் செய்தது முதல் மறைத் தியாகத்தைப் பற்றி அடிக்கடி சிந்தித்தார். 1891 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் மாசோனின் லாட்ஜஸ் (Masonic Lodses) என்ற எதிர்த் திருச்சபை அமைப்பு எதிர்க் குருகுலப் போராட்டத்தைத் தூண்டி விட்டுக் கலக்கியது. மீண்டும் ஒரு மறைத்துயர் (வேத கலாபனை) நிகழப் போகின்றதோ ? என்று அனைவரும் கலக்கமடைந்தனர். அதே 1894 ஆம் ஆண்டில், 1794 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17 ஆம் நாள் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியின் போது தலை வெட்டப்பட்ட பதினாறு கார்மல் துறவிகளின் மறைத் தியாகத்தைச் சிறப்பிக்கும் நூற்றாண்டு விழாவும் நடந்தது.

அந்த மறைத் தியாகிகளுக்காகச் சில கொடிகளைத் தயாரிக்கத் சகோதரி தூய அகுஸ்துவின் தெரேசுவுக்குக் குழந்தை இயேசுவின் தெரேசு உதவி புரிந்தார். அப்போது மிகுந்த வெட்கத்துடன் இவ்வாறு கூறினார்:



'என்னே மகிழ்ச்சி, இதே அருட்கொடை, இதே நிலை நம்முடையதானால் எப்படி இருக்கும்!'

தமது முதல் அரங்கேற்றத்திற்குக் தெரேசு மிகப் பெரும் திட்டங்களை யெல்லாம் தீட்டினார். ஜோன் தார்க் பற்றி இரண்டு நாடகங்கள் அரங்கேற்றத் திட்டமிட்டார். அதற்காக இரண்டு மன மகிழ்ச்சி நேரங்களை ஒதுக்க வேண்டும் எனவும் திட்டமிட்டார். ஒன்று ஜோனின் அழைத்தல் பற்றியது; மற்றொன்று அவரது பாடுகள், இறப்பு மற்றும் வெற்றியை அடிப்படையாகக் கொண்டது. இன்னும் அதிகமாக ஜோனைப் பற்றி அறியும் பொருட்டு அண்மையில் ஹென்றி வால்லோன் (Henri Wallan) வெளியிட்ட (1877) நூல் ஒன்றை ஆழமாகப் படித்தார். அந்நூலில் ஜோனின் புலன் விசாரணையின் முக்கிய பகுதிகளைப் பற்றி ஆசிரியர் விரிவாக எழுதியிருந்தார். தெரேசு தாம் அவரது படைப்பின் கதாசிரியர், தயாரிப்பாளர், நடிகை. அவர் படைப்பின் வெற்றிக்காக ஓய்வின்றி உழைத்தார். மூலக் கதையை மையமாகக் கொண்டு, தெரேசு கார்மல் சகோதரியின் உணர்ச்சி ஆழங்களைத் தமது கதாநாயகி யின் பண்பாக மாற்றி எழுதினார். 'ஜோன் தார்க்கின் பணி' அல்லது 'டோம் ரெமியின் (Domremy) ஆய மகள் தமது குரல்களுக்குச் செவி மடுக்கிறார்' என்பதே அவரது முதல் படைப்பின் தலைப்பு. இப்படைப்பில் தனிமை, செபம் இவற்றால் கவரப்பட்ட ஒரு குழந்தைக்கு வானதூதர் மிக்கேல் ஒரு வாளைக் கொடுக்க முயற்சி செய்தபோது குழந்தை அனுபவித்த அச்சங்களை விவரித்தார். நீண்ட மறுப்புக்குப் பிறகு இறுதியாக அதனை ஏற்றுக் கொள்கிறார். அனுப்புநரின் ஆணை, பல்லவியாகப் பலமுறை ஒலிக்கிறது; "நீர் புறப்பட வேண்டும்."

யார் புறப்பட வேண்டும் ? ஷான் ஜோனுக்கு (Joan for Chinon) ஜோன் தார்க் புறப்பட வேண்டுமா ? அல்லது இந்தோ சீனாவுக்குத் தெரேசு புறப்பட வேண்டுமா ? அல்லது அன்பு மற்றும் நம்பிக்கை அலைகளில் பயணிக்கும் வலிமை மிக்க வீரப்பயணம் மேற்கொள்ள வேண்டுமா ?

நாடகம் அரங்கேற்றப்பட்ட நாளில் குழுவில் இருந்த அனைவருக்கும் ஒரு சந்தேகம். உண்மையிலேயே லொரேன் நகர் நாயகியே நாடகத்தில் கதாநாயகியாகத் தோன்றியது போல் அனைவரும் உணர்ந்தனர். தமது கதாபாத்திரத்தைச் சிறப்பாக நடித்துக் காட்டிய தெரேசு அனைவராலும் பாராட்டப் பெற்றார்.

இந்த நீண்ட பணி சகோதரி தெரேசுவை உற்சாகப்படுத்திக் கிளர்ச்சி யூட்டியது. அவருடைய புதிய முயற்சியான இக்கலையில் இன்னும் சிறந்து

விளங்க இந்நாடகம் உதவியது. 1894 ஆம் ஆண்டு இளவேனிற் பருவத்தில் தெரேசுவின் திறமைகளைக் கண்டுணரத் தொடங்கிய சகோதரிகளின் வேண்டுகோளுக்கிணங்க எண்ணிக்கையற்ற கவிதைகளை எழுதத் தொடங்கினார். அவரின் அனைத்துக் கவிதைகளும் எளிதாக இசையமைத்துப் பாடக் கூடியவையாக அமைந்தன. ஏப்ரல் மற்றும் மே திங்களில் நான்கு கவிதைகளை எழுதி முடித்தார். செலினின் 21 ஆம் பிறந்த நாள் விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் "தூய செசீலியா" (St. Cecilia) என்ற தலைப்பில் இயற்கையாக 112 வரிகளைக் கொண்ட நீண்ட கவிதைகளை வரையவும் துணிந்தார். தமது எதிர்காலம் பற்றித் தெளிவான கருத்துக்களைக் கொண்டிராத செலின் அன்பின் இனிய கொடையான நிறைகையளிப்பில் வாழும் வரம் அருளத் தற்கையளிப்பின் இலக்கணமான தூய செசீலி உதவி புரிவார் எனத் தெரேசு நம்பினார்.

## பீடித்த பிணியுடன் ஒரு போராட்டம்

இல்லத்தைத் தூய்மைப்படுத்தும் போது எழும்பும் தூசியும், வெள்ளாவி வைத்துச் சலவை செய்யும் போது உண்டாகும் நீராவியும் தெரேசுவுக்கு அடிக்கடி இருமலை வரவழைத்தன. பலமுறை மருந்துகள் தடவிய பின்பும் அவருடைய தொண்டை வலி குணமாகவில்லை. நெஞ்சு வலியும் சில வேளைகளில் ஏற்பட்டு அவரை வாட்டி வதைத்தன. கோடை நாள்களில் நோய் கடுமையாகத் தாக்கத் தொடங்கியது. குடும்பத்தில் அனைவரும் கவலையடைந்தனர். கார்மல் இல்லத்தில் சகோதரிகள் அனைவரும் பிரான்ஸிஸ் நீல், தெரேசைப் பரிசோதித்துப் பார்ப்பது நல்லது என எண்ணினர். ஆனால் தலைமைச் சகோதரி ஆக்னெசுக்கு அதில் உடன்பாடு இல்லை. முன்னாள் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கின் நண்பரான மருத்துவர் தே கொர்னியேர் (De Corniere) என்பவரே குழு மருத்துவராகப் பணி புரிந்து வந்தார். திறமை வாய்ந்தவராக இருந்தாலும் தமது அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த ஆக்னெசு தயங்கினார். "ஏனெனில் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்தான் என்னைப் புதிய இல்லத் தலைவியாகத் தேர்ந்தெடுக்க உழைத்தார். எனது அதிகாரத்தை அதிகமாகப் பயன்படுத்தினால் அவரது மனம்தான் புண்படும். அந்த மூன்று ஆண்டுகளில் எப்படியெல்லாம் துன்புற்றுக் கண்ணீர் வடித்தேன்" என்று ஆக்னெசு வருத்தத்துடன் எழுதுகின்றார்.

இவர்கள் இருவரிடையே நடைபெறும் போட்டிகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டது ஆக்னெசுவின் இளைய தங்கை தான். பிரான்சிஸ் நீல், தெரேசுவுக்கு ஒரு சில மருந்துகளைக் கொடுப்பதோடு நிறைவடைய வேண்டியதாயிற்று.



## கலங்கரை தீபம் கண்களை மூடியது (29 ஜூலை 1894)

குழு வாழ்க்கையில் ஏற்பட்ட இக்கட்டு இடையூறுகள் ஒருபுறம் பதற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. ஆனால் தற்போது வெளியிலிருந்து வரும் வேதனை மனத்தை உலுக்கி எடுத்தது. தந்தை மார்ட்டினின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது. அவருடைய பணியாளர் அகுஸ்தே, மதுவுக்கு அடிமையாகிக் கொண்டிருந்தார். இது செலினை மேலும் கவலையடையச் செய்தது, மார்ட்டின் தம்மைச் சுற்றி என்ன நடைபெறுகிறது என்பதைக் கூட அறிய இயலாத நிலையை அடைந்தார். எனவே, அடுத்து என்ன செய்வது என்ற ஆழ்ந்த சிந்தனையில் கேரென் குடும்பத்தினர் மூழ்கினர். பால் பானஸ்தோனில் (Paul - Banaston) உள்ள அவர்களது இல்லத்திற்கு மீண்டும் சென்றார். மே திங்கள் 27 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை, அவர் மீண்டும் பக்கவாதத்தால் கடுமையாகத் தாக்கப்பட்டதால், அவரது இடக்கரம் செயலிழந்து விட்டது. அவர் இறுதிப் பயண அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார். ஜூன் 5 ஆம் நாள் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. எனினும் ஜூலை 4 ஆம் நாள் லாமூன் என்னும் இடத்திற்கே மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டார். ஜூலை திங்கள் 29ஆம் நாள், ஞாயிற்றுக் கிழமை, அங்கேயே குல முதல்வர் மார்ட்டின் அமைதியில் இளைப்பாறினார். இயற்கை எய்தினார். கலங்கரை விளக்கு கண்களை மூடியது. செலின் அவரது மரணப் படுக்கையில் உடன் இருந்தார். "அவரது கண்கள் அனைத்தையும் தெளிவாகவும், மென்மையாகவும் காண்பது போல் காட்சியளித்தன. அனைத்தும் தெளிவாகப் புரிந்தது போல அவரது முகம் காட்சியளித்தது. அந்தக் கடைசி நொடிகளில் என் அன்புத் தந்தை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் போல மலர்ந்த முகத்துடன் இருக்கக் கண்டேன்" எனச் செலின் குறிப்பிடுகின்றார்.

ஆகஸ்ட் இரண்டாம் நாள் லிசியூவில் நல்லடக்கம் நடைபெற்றது. இவ்வாறு அக்குடும்பத் தலைவர், குல முதுவரின் கொடுமையான மறைத் தியாகங்களும், மாட்சிமை நிறை இடர்ப்பாடுகளும் நிறைவுக்கு வந்தன.

செய்தி அறிந்தவுடன் தெரேசு முதலில் அமைதியாயிருந்தார். ஆனால் ஆகஸ்ட் இறுதியில் தம் சகோதரிகளுக்குக் கடிதம் எழுதினார்; செலினுக்கு எழுதிய கடிதத்தில், "ஐந்து வருடங்களுக்கு மரணம் ஏற்படாமல் நோய் நீடித்தாலும், மாறாத முகம் கொண்ட அவரைக் காண்பதில் எத்தனை மகிழ்ச்சி! நமக்கு முன்பு கொடுத்த இன்பத்தைப் போலவே, இன்னும் தொடர்ந்து கொடுப்பதற்கான வழிகளைத் தேடிக் கொண்டிருந்தார்" எனக்

குறிப்பிட்டார். கயெனில் உள்ள மாதா மினவுதல் சபையில் மீண்டும் துயர்களை அனுபவித்துக் கொண்டிருந்த லேயோனிக்கு எழுதிய கடிதத்தில், 'தந்தையின் மரணம் எனக்கு மரணத்தைப் போன்று தோன்றவில்லை. மாறாக அவர் உண்மையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. ஆறு ஆண்டுகள் கழிந்த பிறகு நான் அவரைக் கண்டேன். அவர் என்னைச் சுற்றிலும் இருப்பதாக, என்னைக் கண்டு கொண்டிருப்பதாக, பாதுகாத்துக் கொண்டிருப்பதாக என்னால் இன்னும் உணர முடிகின்றது" எனக் குறிப்பிட்டார்.

தந்தையின் மரணத்தை அடுத்து வந்த வாரங்களில் தந்தையின் வாழ்க்கை நெறிகளையும், மரணத்தையும் பற்றிச் சிந்திக்கையில், இயல்பாகத் தெரேசு சிந்தனையில் எழுந்த வரிகளைத் "தூயவரின் மழலை மன்றாட்டு" எனும் தலைப்பில் கவிதையாக எழுதினார். அதில், குல முதுவர் தம் குழந்தைகளின் நடுவில் இருப்பதை, ஒன்பது வரிகளில் வருணித்தார். இறுதி நான்கு வரிகளில் தம்மைப் பற்றி எழுதியுள்ளார்;

வத்திக்கானில் திருத்தந்தையின் கை
உம் தலை மேல் தொட்டதை மறவாதே!
தெய்வீக முத்திரை உம்மில் பதிந்த
மறை பொருள்தான் உமக்குப் புரியவில்லை!
உம் பிள்ளைகள் உமக்காக வேண்டுகிறார்
சிலுவைத் துயரும் கடின வேதனையும் நீங்கிடவே
உந்தன் நிறை மாட்சியை நெற்றியில் பதித்திட
விண்ணக ஒளியில் சுடரொளி வீசும்
ஒன்பது லீலிகள் மலர்ந்து சிரிக்கும்!!!

தெரேசின் தந்தை பல ஆண்டுகளுக்கு முன்பாகத் தெரேசை 'பெரசீனாவின் அனாதை' (The Orphan of Berezina) என்று அழைத்தது இன்று உண்மையாயிற்று, எனவே, தமது கவிதையின் கீழ் இப்பெயரையே எழுதிக் கையெழுத்திட்டார். அவருடைய உள்மன வேதனையை வெளிப்படுத்தும் வாய்க்காலாக அமைந்தது இந்நிகழ்வு. அன்று புய்ஸ்ஸொனேவில் கண்ட காட்சியின் அர்த்தத்தை ஒரு நாள் திடீரெனப் புரிந்து கொண்டார். இந்த மறை உண்மை நிகழ்வைச் சகோதரி தூய இதய மரியாவோடு இணைந்திருந்து சிந்திக்கையில் உண்மை அவர்களுக்குப் புலப்பட்டது: "வணங்குவதற்கு உரிய இயேசுவின் திருமுகம்



அவரது பாடுகளின்போது திரையிடப்பட்டிருந்தது- அவ்வழியில், அவருடைய உண்மை ஊழியனின் முகமும் துயர நாள்களின் போது மறைக்கப்பட்டிருந்தது. வாழ்வு தரும் வார்த்தையாம் இறைவனின் விண்ணக வீட்டில் அவரோடு இணைந்து ஒளி வீசுவார் என்பதன் அடையாளமாகவே இவ்வாறு நிகழ்ந்தது." எனத் தெரேசு உணர்ந்து கூறினார். அவருடைய மழலைப் பருவக் காட்சியின் அர்த்தம் புரிய 15 வருடங்கள் நிறைவுற வேண்டியிருந்தது. " ஏன் இறைவன் எனக்கு அந்த ஒளியைக் கொடுத்தார்? . . . அவர் நமக்கு அளிக்கும் வலிமைக் கேற்றபடியே துயர்களைத் தருகின்றார். எதிர்காலம் எனக்கென இருப்பில் வைத்திருந்த கொடிய துயர்களையும், கசப்புவேதனைகளையும் பற்றிய எண்ணங்களைக் கூட என்னால் அந்தச் சிறிய பருவத்தில் தாங்கியிருக்க முடியாது. எனவேதான் எனக்கு அதனைக் காட்சியின் வழியாக வெளிப் படுத்தினார்.' என இறைவனின் கருணையை எண்ணி வியந்து கூறினார் தெரேசு.

### திசை மாறாப் பறவை (14 செப்டம்பர் 1894)

இரண்டு ஆண்டுகளாகச் செலின் அரும்பாடு பட்டு மறைத்து வைத்திருந்த தனது எதிர்காலக் கனவுகளை இறுதியில் வெளிப்படுத்தும் நேரம் வந்து விட்டது- அவருடைய தந்தையின் மரணம் தற்போது இதனை வெளியிடப் பணித்தது. தாமும் துறவினியாக வேண்டும் என்ற விருப்ப வெளியீடு தந்தையின் உடல் நலத்தைப் பாதித்து விடுமோ என்கிற அச்சமே அவரை அனைத்தையும் மறைவாக வைத்திருக்கச் செய்தது. இப்போது தடைகள் நீங்கினாலும் எந்தத் துறவற இல்லத்தில் சேருவது என்ற குழப்பம் நிலவியது- செலின் ஆன்மீக இயக்குநர் அருட்பணியாளர் பிஷோன், செலினைக் கனடாவுக்கு அழைத்தார். அங்கிருந்த பெத்தானி துறவற இல்லத்தில் சேர்ந்து பொது நலப் பணிகளில் ஈடுபடுவதா? அல்லது லிசியூவில் உள்ள கார்மலில் சேர்ந்து மறைவு வாழ்க்கை வாழ்வதா? குழப்பங்கள் தீரவில்லை. ஆனால் கார்மல் இல்லத்தில் இருந்த செலினின் உடன்பிறப்புகள் மூவரிடமும் தமது குழப்பத்தைத் தெரிவித்த போது, அருட்பணியாளர் பிஷோனின் திட்டத்தை எதிர்த்தனர். கார்மலில் சேர்வதில் குழப்பமே கிடையாது எனப் பல வகையிலும் எடுத்துரைத்தனர். தெரேசு கலங்கி அழுததன் விளைவாகத் தலைவலியால் துடித்தார். "இதைப் பற்றி அவர் ஆழமாக உணர்ந்து" தம் ஆன்மீக இயக்குநர் அருட்பணியாளர் பிஷோனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவருடைய கருத்துக்கு கண்டனம் தெரிவித்தார். ஆனால், அவர் மீது எவ்விதமான கசப்புணர்வும் கொள்ளவில்லை. மாறாக, செலினின் அழைத்தலில் எவ்வித ஐயப்பாட்

டிற்கும் இடம் இல்லை. அவருடைய அழைத்தல் கார்மல் இல்லத்தில் தான் என்று உறுதியாகக் கூறினார். செலினின் மனக் கவலைகளை அறவே துடைத்தெடுத்து விட்டார். அச்சம் அறவே நீங்கிச் சகோதரியின் பாசத்திற் கிணங்கும்படி தெரேசு வழி செய்தார். "நான் உமக்காக எவ்வளவோ துயரங் களை அனுபவித்துள்ளேன். உமது அழைத்தலுக்கு நான் தடையாக நிற்க வில்லை என நம்புகிறேன். நெருப்பில் புடமிடும் பொன்னைப் போல நமது அன்பும் புடமிடப்பட வேண்டாமா?' எனச் செலினிடம் கூறினார். செலின் தாம் நீண்ட நாள்கள் நினைத்து வந்த வழியைப் பின்பற்ற அதாவது கார்மலில் சேர முடிவெடுத்தார்.

கார்மல் இல்லத்தில் புதிய போர்கள் தொடங்கின. ஆகஸ்ட் திங்கள் 8 ஆம் நாள் செலின் அருட்பணியாளர் தெலேத்ரோயெத்திற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் ஒரு பொதுநிலைச் சகோதரி என்கிற முறையிலாவது தான் கார்மலில் வாழ அனுமதிக்கும்படி கேட்டிருந்தார். அவருடைய பதில் எதிர்மறையாகத்தான் இருந்தது. இருப்பினும் அதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தன. ஏற்கெனவே, ஒரு குடும்பத்தைச் சார்ந்த மூன்று சகோதரிகள் உண்டு. நான்காவது சகோதரியையும் சேர்த்துக் கொள்வது சபையின் சட்டத்திற்கு புறம்பாகி விடுமோ? அல்லது சபை உணர்விற்கு எதிரானதாகி விடுமா என்ற அச்சம் அவரில் நிலவியது. முன்னாள் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் செலினின் கார்மல் வருகைக்கு தமது முழு ஆதரவையும் தெரிவித்தார். ஆனால் சகோதரி யேசுவின் ஏமே (Aimee) "மார்ட்டின் வம்சம்" கார்மலில் வலிமையடைவதைக் கடுமையாக எதிர்த்தார். மேலும் ஓர் சித்திரக் கலைஞரின் வருகையினால் குழுவிற்கு எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை என்று எதிர்த்தார். அவர்களது குடும்பத் திற்குள்ளேயும், இஷ்ஷான் (Jeanne) மற்றும் பிரான்சிஸ் இருவரின் தொடர்ந்த எதிர்ப்புகளைச் செலின் சமாளிக்க வேண்டியிருந்தது. மாமா இசிதோரும் முதலில் தயக்கம் காட்டினார். அனைத்தையும் தாண்டி வரும் ஆற்றல் செலினிடம் இருந்தது.

விரைவில் அனைத்துத் தடைகளும் தகர்ந்தன. அருட் பணியாளர் பிஷோன் தமது திட்டத்தைக் கைவிட்டார். "எனக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை. அவர் கார்மல் சேருவதால் எவ்விதத் தயக்கமும் நான் காட்ட வில்லை. இறைவிருப்பம் எனக்குத் தெளிவாகத் தென்படுகிறது" என்றார். தலைசைத்துத் தந்தை தெலத்ரோயெத் பச்சைக் கொடி காட்டினார். பேராயர் யுகோனின் தமது இசைவை அளித்தார். 1894 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாள், வெள்ளிக் கிழமை, தூய சிலுவையின் மகிமை



விழா அன்று செலின் மார்ட்டின் தேர்வு நிலையாளராகக் கார்மல் இல்லத்தில் நுழைவார் என அறிவிக்கப்பட்டது. தூய அவிலா தெரசாளின் காலத்திலிருந்தே இதுவரை எந்தக் கார்மல் இல்லமும் ஒரே குடும்பத்தைச் சார்ந்த நான்கு உடன்பிறப்புகளை ஏற்றுக் கொண்டதில்லை. ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கார்மல் சபை மறுமலர்ச்சியாளரான அவிலா தெரசாளே 1579 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22 ஆம் நாள் எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: 'எந்த துறவற இல்லத்திலும் மூன்று உடன் பிறப்புக்கள் ஒன்றாக இருக்கக் கூடாது'. அவர் உயிரோடு இருந்திருந்தால் செலின் கார்மலுக்குள் காலடி வைத்திருக்க முடியாது.

சகோதரி இயேசுவின் ஏமேவின் எதிர்ப்பு தொடர்ந்தது. திருப்பலி நேரத்தில் தெரேசு இயேசுவிடம் அடையாளம் ஒன்று வேண்டினார். என்ன அடையாளம்? அவருடைய தந்தை மார்ட்டின் நேரடியாக வானத்திற்குச் சென்றிருந்தாரென்றால், சகோதரி ஏமே செலினின் கார்மல் வருகையை ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரேசு கேட்ட அடையாளம் தரப்பட்டது. அவர் சிற்றாலயத்தை விட்டு வெளியே வரும்போது சகோதரி ஏமே, தெரேசை அழைத்துக் கொண்டு இல்லத் தலைவியிடம் சென்றார். செலினின் கார்மல் வருகைக்கு எந்தவிதமான எதிர்ப்பும் தாம் தெரிவிக்கவில்லை. அவரது வருகையை மனமுவந்து ஏற்றுக் கொள்கிறேன் என்று இல்லத் தலைவி முன்பாகக் கூறினார். தெரேசு அவருக்கு நன்றி கூறி மகிழ்ந்தார். இவ்வாறு தெரேசுவின் மன்றாட்டு தூபம் போல் மேலெழும்பி அதன் பதில் மின்னலைப் போன்று மண்ணகம் வந்தடைந்தது.

இவ்வாறு தெரேசுவினுடைய பேராவல்களில் ஒன்று நிறைவேறியது. 'நடைபெற இயலாது!' என்று எண்ணியிருந்த இந்த ஆவல் நம்பிக்கை யையெல்லாம் கடந்து நிறைவேறியது. தந்தை இறைவனே பலவித ஆவல் களைத் தம் பிள்ளைகளின் உள்ளத்தில் விதைத்து அதனைக் கனி கொடுக்கச் செய்கின்றார். "ஏக்கங்களை உருவாக்குவதே அதனை நிறை வேற்றுவதற்காகத் தான்' என்ற உண்மையை மீண்டும் தமது அனுபவத்தால் அவர் அறிந்து கொண்டார். "எவ்வளவு கொடைகளை இறைவன் நமக்கு அருள வேண்டுமென விரும்புகின்றாரோ, அவ்வளவு அதிகமாக அதற்காக நம்மை ஏங்க வைக்கின்றார்" என்ற தூய சிலுவை யோவானின் கூற்றில் இருந்த உண்மையைத் தெரேசு மெய்ப்பித்தார்.

## நோயின் வெளிச்சப் புள்ளிகள்

தந்தையின் இழப்பு, செலினின் வாழ்க்கைத் தெளிவின்மை, புகுமுகத்

துறவு பயிற்சி உருவாக்க கவலைகள், உடல் நலம் தொய்வு இவை அனைத்தும் தெரேசைப் பாதித்தன. வரவிருக்கும் நோயின் விளைவுகளை முன்னறிவித்தன. அவர் செலினுக்கு எழுதிய கடிதங்கள் நாளை நிகழ்வுகளை இன்றே முன் அறிவிப்பவைகளாக அமைந்தன: "அஞ்சாதே, கலங்காதே, வேறெங்கும் காண்பதை விட அங்கு அதிகமான சிலுவைகளையும், மறைத் தியாகங்களையும் நீர் அனுபவிப்பீர். இடர்பாடுகளின் நேரங்களில், இணைந்து நின்று மனவலிமையுடன் தங்களையே இழக்கத் துணிந்த முற்காலத்துக் கிறித்தவர்களைப் போன்று நாமும் இணைந்து நின்று வேதனையுறுவோம்" என்று அவருடைய கடிதத்தில் குறிப்பிட்டார். மேலும் தொடர்ந்து, "அதன்பிறகு இயேசு வருவார், நம்மில் ஒருவரை தம்மிடம் அழைத்துக் கொள்வார். . . நான் உனக்கு முன்பாக இறந்தால், உன் ஆன்மாவை விட்டு வெகு தொலைவில் இருப்பேன் என எண்ண வேண்டாம்" என எழுதினார். செலினுக்கு அச்சம் ஏற்படுத்தி விட்டதாக எண்ணித் தொடர்ந்து, "எல்லாவற்றையும் நினைத்துக் கலக்க மடைய வேண்டாம். நான் நோயாளியல்ல". என்று கூறி ஆற்றுப்படுத்தினார்.

அருட்பணியாளர் பிஷோனுக்கும், இதைப் போன்றே கடிதங்கள் எழுதியிருக்கக் கூடும். ஏனெனில் மார்ச் 19 ஆம் நாள் அவர் எழுதிய பதில் கடிதத்தில், 'தெரேசு! இறைவனை நேருக்கு நேர் காணும் நிலையான நிலையை அடைய அதிவேக அவசரம் கொள்ள வேண்டாம்' என்று எழுதியுள்ளார். பின்னர் சில நாள்கள் கழித்து, "விண்ணகம் செல்லத் தீராத ஆவல் கொண்டிருப்பது உண்மைதானா?. . . இயேசு உம்மை அழைக்க வந்தால் என் அன்புச் செல்வமே, நீ விண்ணிலே நிலைத்திருப்பாய்" என்று எழுதி அவரைத் திடப்படுத்தினார். தெரேசு எழுதிய ஒரு கவிதையின் கடைசி வரிகள் ஏன் இவ்வாறு அமைந்தன? என்பது புரியாத புதிராகவே இருந்தது.

இரவின் நிழலின்றி அந்நாள் உதிக்கும்
என் ஆன்மா உன் புகழ் பாடி மிதக்கும்
வானவரின் இசையில் என் கீதம் ஒலிக்கும்
இன்று எனும் நிகழ்காலம் என்றும் நிலைக்கும்

இவையனைத்தையும் கண்ட அவருடைய குடும்பத்தினர் கலக்க மடைந்தனர். எனவே, ஆக்னெசு 'குழந்தை இயேசு தெரேசுவின் உடல்நிலை பாதிப்படையவில்லை. ஆனால் சில நேரங்களில் அவரது தொண்டை நோய் அவருக்குத் தொல்லையளித்தது. ஒவ்வொரு நாளின் காலை நேரத்திலும்,



மாலை 8.30 மணி அளவிலும் அவரது தொண்டை வலி அதிகரிக்கும். அப்போது அவரது குரல் கரகரப்பானதாக மாறும். நாங்கள் அவரைச் சிறந்த முறையில் பராமரிக்க எங்களால் இயன்றதைச் செய்து வருகிறோம்.' எனச் செலினுக்குக் கடிதம் எழுதினார். பராமரிப்புகள் அனைத்தும் நிறைவை அளிக்கவில்லை. மீண்டும் நான்கு மாதங்கள் கழித்து மரியா கேரென், தெரேசுவின் நிலை கண்டு வருத்தமுற்றார்.

'என் அன்புத் தெரேசு தமது உடல்நிலையைக் கவனித்துக் கொள்ள வேண்டும். நேற்று அவருடைய குரலில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு, பிரான்ஸிஸ் இடம் ஆலோசனைக் கேட்டேன். . . அவர் தம்மை முழுமையாக கவனித்துக் கொள்வது மிகவும் இன்றியமையாதது. தற்போது இதனால் ஆபத்தொன்றுமில்லை, ஆனால் என்றைக்காவது ஒரு நாள் கடினமானதாகி விடும். நலமடைவதற்குச் சாத்தியக்கூறுகளே இல்லாமற் போய்விடும். தொடர்ந்து அவரே தம்மைக் கவனித்துக் கொள்ள வேண்டும். மருத்துவர் களின் ஆலோசனைகளைக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டும்' என அறிவுரைக் கூறினார். பிரான்சிஸ், இத்தகைய நோய்களின் நிபுணராகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் அது எத்தகைய நோய் என்பதைக் குறிப்பிடவில்லை.

## விரியும் உருவாக்கம்

சகோதரி தெரேசு தமது உடல்நிலை குறித்து அக்கறை கொண்டிருந்தார். எனினும் புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி உருவாக்கப் பணியில் அவர் காட்டிய ஆர்வம் தணியவில்லை. மாறாக அதிகமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அவரிடம் உருவாக்கப் பயிற்சி பெறுபவர்கள் எண்ணிக்கையும் பெருகியது. சூன் 16 ஆம் நாள் மரி லூயி காஸெல் (Marie Louise Castel) என்று அழைக்கப்பட்ட அழகிய இருபது வயது நங்கை லிசியூ கார்மலில் நுழைந்தார். பாரீஸ் நகரைச் சார்ந்த அவர் ஏற்கெனவே இரண்டு ஆண்டுகள் பாரிசில் உள்ள மெசேன் (Massine) கார்மலில் வாழ்ந்து அனுபவம் பெற்றிருந்தார். எனவே, இந்தப் புதிய குழுவில் தம்மை இணைத்துக் கொள்வது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. தலைமைச் சகோதரி ஆக்னெசு அவரைத் தெரேசுவின் பொறுப்பில் ஒப்படைத்தார். "வானதூதர்" என்ற பொறுப்பு நிலையில் இருந்த தெரேசுவுக்குப் பணிகள் பல இருந்தன. சகோதரி தூய வதன மரி ஆக்னெசு (பிற்காலத்தில் மூவொரு இறைவனின் மரி என அழைக்கப் பெற்றார்.) கற்றுக் கொள்ள வேண்டியவை அதிகம் இருந்தன. தம் 'ஞான மகளான' அவருக்கு உருவாக்கப்

## லிசியூ கார்மல் குழுமம் 15 ஏப்ரல் 1895



1. சகோ. குழந்தை இயேசுவின் தெரேசு
2. சகோ. தூய இதயத்தின் மரியா (மரீ)
3. த.சகோ. இயேசுவின் ஆக்னெசு (பொலீன்)
4. சகோ. திருமுகத்தின் ஜெனிவியேவ் (செலின்)
5. சகோ. நற்கருணையின் மரியா (மரீ கேரென்)
6. த.சகோ. மரி தே கொன்சாக்
7. சகோ. தூய ஸ்தனிஸ்லாஸ்
8. த. சகோ. இயேசுவின் இதயத்தின் ஹெர்மான்ஸ்
9. சகோ. வானவர்களின் மரியா
10. சகோ. தூய ரஃபேல்
11. சகோ. தூய திருமுழுக்கு யோவான்.
12. சகோ. இயேசுவின் ஏமே.
13. சகோ. இயேசுவின் தெரேசு
14. சகோ. மார்கீத் மரியா
15. சகோ. தூய அகுஸ்தீனின் தெரேசா
16. சகோ. தூய சிலுவை யோவான்.
17. சகோ. மரி இம்மானுவேல்
18. சகோ. தூய வளனாரின் மரியா
19. சகோ. இயேசுவின் மரியா.
20. சகோ. மரி ஃபிலமேன்
21. சகோ. மூவொரு இறைவனின் மரியா
22. சகோ. திரு இதயத்தின் ஆன்.

<u>பொது நிலைச் சகோதரிகள்</u>

23. சகோ. மனித அவதாரத்தின் மரியா
24. சகோ. தூய வின்சென்ட் தே பவுல்
25. சகோ. இயேசுவின் மார்த்தா
26. சகோ. மரிய மக்தலேன்.

<u>த. சகோ.</u> - தலைமைச் சகோதரி,
<u>சகோ</u> - அருட் சகோதரி



மேலே பெயர் குறிப்பிட்டுள்ள நான்கு சகோதரிகள் (5,10,12,16) படத்தில் இடம் பெறவில்லை. சகோ. தூய பியோ மருத்துவ அறையில் இருந்தார். சகோ. நற்கருணை மரியா 15 ஆகஸ்ட் 1895 இல் தான் கார்மலில் சேர்ந்தார்.

பயிற்சியளிப்பது எவ்வளவு கடினம் என்பதை ஒரு மாதம் கழித்துத் தெரேசு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்: "அவர் இங்கே தொடர்ந்து நம்மோடு வாழ்வார் என எண்ணுகிறேன். நமது கல்வி முறையும், பயிற்சியும் சிறு வயதில் அவருக்குக் கிடைக்கவில்லை. இது அவருக்கு ஒரு பெரும் இழப்பு. அவருடைய வரையறையற்ற, குழு வாழ்க்கைக்குத் தகாத செயல்பாடுகள், அவரது பயிற்சியின் விளைவாக அமைந்தவையே. ஆனால் அவர் நல்லவர். அவருடைய உள்ளம் தூய்மையானது. என் மீது அவருக்கு அன்பும் நம்பிக்கையும் உண்டு. எனினும் நான் அவருக்கு மிகக் கடினமாகவே பயிற்சியளித்து வருகிறேன்."

தெரேசின் இளைய சகோதரி கார்மல் இல்லத்தில் புகுமுகத் துறவு நிலையில் இணைந்து விட்டதால் தெரேசு இதுவரை அடைந்து வந்த இளையவர் என்ற நிலை மாறியது. அவர்களிடையே நிலவிய ஆழமான நட்புறவு இருவரையும் நெருங்கிய நண்பர்களாக்கியது.

செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாள், நான்காவது தேர்வு நிலையாளர், அதாவது தெரேசுவுக்கு மிகவும் நெருக்கமானவர் கார்மலில் இணைந்தார். அவர் வேறு யாருமல்ல. . . தெரேசுவின் அக்கா செலின் தான். இவ்வாறு இறுதியாகச் செலின் தமது இலக்கை அடைந்து விட்டார். மகிழ்ச்சியால் அனைவரும் நிறைந்தனர். ஆறு வருட நீண்ட பிரிவுக்கு பிறகு அனைவரும் ஒன்றிணைந்ததே அவர்களது மகிழ்ச்சிக்கான முதற்காரணம். செலின் மிகக் கடுமையான துயர்களையெல்லாம் சந்தித்தவர். இருபத்தைந்து வயதான இளம் பெண் அவர். துணிவு மிக்கவர். சுய செயல்பாடுகள் கொண்டவர். உணர்ச்சிகளை ஆய்ந்தறிந்து வெளிப்படையாகப் பேசுபவர். தம் தந்தையை ஒரு அன்னையின் நிலையில் இருந்து பாசமுடன் பராமரித்தவர். குடும்பத் தலைவியைப் போன்று குடும்பப் பொறுப்புகளை ஏற்று நடத்தியவர். இரு திருமணக் கோரிக்கைகளுக்கு மறுப்புத் தெரிவித்தவர். இத்தகைய செயல் திறமிகு இளம் நங்கைக்கு, கார்மல் வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படும் சிறுசிறு ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பது எளிதல்ல. நவீன இளம் மங்கையாகத் திகழ்ந்த அவர், க்ரூக் (Krug) என்ற புகழ்பெற்ற சித்திரக் கலைஞரிடம் பயிற்சி பெற்றிருந்தார். இக்கலையில் அதிக ஈடுபாடு கொண்டதுடன் நவீன கலை நுணுக்கங்களையும் கற்றிருந்தார். புகைப்படக் கலையையும் அறிந்திருந்தார். அவர் கார்மல் சபைக்கு வரும்போது அவருடைய புகைப்படக் கருவியையும் தம்முடன் கொண்டு வரத் தலைமைச் சகோதரி ஆக்னெசிடம் சிறப்பு அனுமதி பெற்றிருந்தார். 13/18 குவி மைய தூர ஆற்றலுள்ள கண்ணாடி வில்லையைக் கொண்ட அது ஒரு பெரிய



இயந்திரம் போன்றே தோன்றியது- அத்துடன் புகைப்படம் தயாரிக்கத் தேவையான அனைத்துப் பொருட்களையும் கொண்டு வந்திருந்தார். விழா நாள்கள், உறுதி மொழியளிப்பு, மன மகிழ்ச்சி விளையாட்டுகள் முதலிய வற்றைச் சகோதரி தூய திருமுக மரி படம் பிடித்தார்.

'சிறிய' சகோதரி தெரேசு, செலினைத்துறவற வாழ்வுக்கு அறிமுகப் படுத்தினார். ஆறு ஆண்டுகளில் தெரேசு பல வழிகளில் மிகவும் முன் னேற்றம் கண்டிருப்பதைச் செலின் கண்ட போது வியப்படைந்தார். இரு உடன்பிறப்புகளும் தங்களது ஆன்மீகப் பொழிவுகளைக் கடிதங்கள் வழியாகப் பரிமாறிக் கொண்ட நாள்கள் எங்கே போயின ? இங்கே, ஓரிடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்குக் கடந்து செல்லும் போது விழிகள் தாழ்த்த வேண்டும். ஓடாமல் நடக்க வேண்டும். அமைதிக் காக்க வேண்டும்; மரியாதையற்ற வார்த்தைகளுக்குக் கூடப்பதிலளிக்காமல் சகித்துக் கொள்ள வேண்டும். பொறுமை காத்துக் கீழ்ப்படிய வேண்டும். "என்னால் ஒரு போதும் இது இயலாது" எனச் செலின் வேதனைக் குரல் எழுப்பினார். மாற்றம் பெற வேண்டும் என்ற நல்லெண்ணம் அவரிடத்தில் இருந்தாலும், அவருடைய கடின மனப்போக்கைக் கடந்து செல்ல இயலாது தவித்தார். தெரேசு அவருக்குத் துணை நின்றார். அவரை உற்சாகப்படுத்தி வழி காட்டி னார். தளர்வுறாமல் வாழ்வை மன உறுதியோடு சந்திக்கும் வழிகளைக் கற்பித்தார்.

இவ்வாறு புகுமுகத்துறவு நிலைப் பயிற்சி பெறுவோர் படிப்படியாக முன்னேற்றப் பாதையில் சென்றனர். நவம்பர் திங்கள் 20 ஆம் நாள் சகோதரி மரிய மக்தலேன் தமது முதல் உறுதிமொழியை அளித்தார். டிசம்பர் திங்கள் 18 ஆம் நாள் பாரீஸ் நகர் இளம் சகோதரி மரி ஆக்னெசு திருவுடை அணியப் பெற்றார். இருவருக்கும் அவர்களுடைய மூத்த சகோதரி தெரேசு சாதகமான சொற்றொடர்களை எழுதிப் பரிசாக அளித்தார். அவற்றில் தம் உடன் வாழ் சகோதரிகளைப் பற்றி அவர் கொண்டிருந்த புரிதல்கள் புலப்பட்டன.

## மாபெரும் கண்டுபிடிப்பு: 'முற்றிலும் புதிய சிறு வழி"

(1894 இறுதி முதல் 1895 ஆரம்பம் வரை)

1894 ஆம் ஆண்டு இறுதியில் சகோதரி, குழந்தை இயேசுவின் தெரேசின் உள்ளத்தில் சில வினாக்கள் விடை தேடி அலைந்தன. ஆறு ஆண்டுகளாக அவர் கார்மல் கன்னிகையாக வாழ்ந்து வருகின்றார். துயரங்கள் பலவற்றைச் சந்தித்தார். போராட்டங்களையும் எதிர் கொண்டார்.

தூயவர் ஆக வேண்டும் என்கிற ஆவலைக் கைவிடாமல் அனைத்தையும் கடந்து வந்தார். ஆனால், தம்முடைய வாழ்க்கையைச் சில சிறந்த தூயவர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெரிய இடைவெளி இருப்பதை உணர்ந்தார். அத்தூயவர்களின் வாழ்க்கை வரலாற்றை உணவறையிலோ, அல்லது காலை வழிபாட்டின்போதோ வாசிக்கக் கேட்கும் போது இந்தச் சிந்தனை அவருடைய மனத்தை அரித்துக் கொண்டே இருந்தது. பவுல், அகுஸ்தினார், அவிலா தெரசாள் போன்றவர்கள் தன்னடக்கச் செயல்கள், தன் ஒறுத்தல் செயல்கள், நற்பண்புகள், அறச் செயல்கள் போன்றவற்றாலும், மற்றும் அவர்களது தனிப்பட்ட கொடைகளாலும் பேராற்றல் வாய்ந்தவர்களாயினர்; எட்ட முடியாத சிகரங்களாக அவர்கள் திகழ்கின்றார்கள். தெரேசு மிகச் சிறிய மணற்துகள் மட்டுமே. அவர் அடிக்கடி குற்றங்குறைகள் புரியவில்லையா? இத்தகைய குற்றச் சான்றுகள் கண்முன்னே நிற்கும் போது தளர்ச்சியடையாமல் அவரால் இருக்க முடியுமா? என்ற கேள்விகளைத் தமக்குள் கேட்டுக் கொண்டார். புகுமுகத் துறவுநிலைப் பயிற்சியின் போது தூயநிலை அடைவது எளிது என்று எண்ணியிருந்தார். ஆனால் இப்போது அந்நிலையை அடைவது உண்மையிலே எளிதல்ல என்றே தோன்றியது- இந்தத் தவிர்க்க இயலா அனுபவத்திற்குப் பிறகு, தூயவர் ஆகும் ஆவலைக் கைவிட்டு விட்டு ஒன்றுமில்லாத நிலைக்கு எண்ணற்ற துறவிகள் தள்ளப்பட்டு விடுகிறார்கள். ஆனால் தெரேசு என்றும் தளர்ந்து போவதில்லை" என்று தமது முதல் திருவிருந்தின் போது எடுத்த உறுதிப்பாட்டை மனத்தில் நிறுத்தினார்.

"நிறைவேற்ற இயலாத ஆவல்களை இறைவன் தம் அன்பர்களின் இதயத்தில் தூண்டுவதில்லை" என்று தூய சிலுவை யோவான் ஏற்கெனவே அவருக்குக் கற்றுக் கொடுத்துள்ளார். அப்படியென்றால் 'நான் சிறுமைத்தனம் நிறைந்தவளாயிருந்தாலும் தூய்மை நிலை அடைய முடியும்'' என அறிவுப்பூர்வமாகச் சிந்தித்தார். ஆனால் அப்பெரும் தூயவர்கள் நிலையினை அடைய அவர் என்ன செய்ய வேண்டும்? தமது விருப்ப முயற்சியாலோ அல்லது முழுமையாக வலிந்து செய்யும் பலவந்த முயற்சியினாலோ தூயவர் நிலையினை அடைய இயலாது என்பதை அவர் நன்கு அனுபவித்திருந்தார். 'தம்மிடம் உள்ள அனைத்துக் குறை பண்புகளோடு தம்மையே ஏற்றுக் கொள்ள வேண்டும்: பின் தொடர்ந்து என்ன செய்வது? இதற்குரிய விடைக்காகக் காத்திருந்தார்.இந்த வினாவுக்கு விடை காண்பதில் முனைந்தார். அருட்பணியாளர் ப்ரு (Prou) தெரேசுவுக்கு ஒரு சிறுவழியைச் சுட்டிக் காட்டியிருந்தார். அவ்வழி நேரானது, சிறியது, முற்றிலும் புதியது. அருட்பணியாளர் பிஷோனிடமிருந்து எவ்வித வழிகாட்டுதலும், உதவியும்



கிடைக்கவில்லை. அவர் கடிதம் எழுதுவதும் இல்லை. கார்மல் இல்லத்திலிருந்தும் எவ்வித உதவியும் தெரேசுவுக்கு கிடைக்கவில்லை. இவ்வழிகளில் செல்வது ஆபத்தானது என்கிற அச்ச உணர்வு துறவினிகளைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தது.

தெரேசு இவ்வழியைப் பற்றிச் சிந்தித்தார்; மன்றாடினார். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் புதிய கண்டுபிடிப்புகள் பலுகின. மின்சாரம், தொலைபேசி, சொகுசு உந்துகள், புகைப்படம், பலவித இயந்திரங்கள் எனப் பலவித வியப்புமிகு கண்டுபிடிப்புகள் உலகை நிறைத்தன. இத்தாலியப் பயணத்தின் போது மின் ஏற்றங்களில் பயணம் செய்வதை நன்கு அனுபவித்து மகிழ்ந்திருந்தார் தெரேசு. ஒரு நிமிடத்திலேயே மிக உயர்ந்த கட்டடங்களின் மேல் மாடியை அடைந்து விட முடிகின்றது- தூய நிலையை அடைவதற்கும் அவ்வாறு ஒரு மின் கருவி இருக்க இயலாதா? காலம் கடந்து கனிந்தது. இளம் வயதிலேயே உலக வாழ்க்கையை முடித்துக் கொண்ட தெரேசு, தமது வாழ்க்கையில் என்ன சாதனை புரிந்துள்ளார்? என்ன சாதித்துள்ளார்?

செலின் கார்மல் இல்லத்திற்குக் கொண்டு வந்த பொருட்களில் சில குறிப்பேடுகளும் அடங்கும். அக்குறிப்பேடுகளில் விவிலியப் பகுதிகள் சிலவற்றைக் கேரென் இல்லத்திலிருந்த விவிலியத்திலிருந்து எடுத்து எழுதியிருந்தார். தெரேசிடம் பழைய ஏற்பாடு இல்லாததால் அவரிடமிருந்து உடனடியாக அதை வாங்கி 'மிகுந்த ஆவலுடன் அதில் தமது கண்களைச் சுழல விட்டார். ஒரு நாள் செலினின் குறிப்பேட்டில் பின்வரும் பகுதியைக் கண்டார். "யாரேனும் மிகச் சிறியோராக இருந்தால் அவர் என்னிடம் வரட்டும்" (நீ.மொ. 9:4) இவ்வரி அவர் மனத்தில் உடனடித் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரே அந்த 'மிகச் சிறிய ஒருவர்." இதைக்கூற எவ்விதத் தயக்கமும் கொள்ளவில்லை. 'அப்படியென்றால் நான் வெற்றியடைந்து விட்டேன்'' என்று ஆனந்தத்தில் மிதந்தார். அவரை இதுவரை ஆட்டிப்படைத்து வந்த அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் போகின்றது என்பதனை உணர்ந்தார். நம்பிக்கையுடன் அவரைத் தேடிச் செல்லும் மிகச் சிறியோருக்கு இறைவன் என்ன செய்யப் போகின்றார் என்பதனை எண்ணி வியந்தார். இந்நிலையில் இறைவாக்கினார் எசாயா எழுதிய பகுதியொன்று அவரது வினாவுக்கு விடையளிப்பதாக அமைந்தது. "தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுப் போல் நான் உங் களைத் தேற்றுவேன். மார்பில் அணைத்துச் சுமக்கப்படுவீர்கள், மடியில் வைத்துத் தாலாட்டப்படுவீர்கள்" (எசா. 66 : 12 -13)

இறுதியில் ஒளி உதயமானது! தெரேசு ஆனந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார். அவர் தேடிக் கொண்டிருந்த 'மின் ஏற்றம்' இதோ இங்கே கிடைத்து விட்டது. இயேசுவின் அன்புக்கரமே அந்த மின் ஏற்றம். அக்கரம் தூய நிலையின் உச்சிக்கு எடுத்துச் செல்லும். இந்த வியப்பு நிலை உண்மை யின்றிப் பிறிதொரு உய்த்துணர்வையும் பெற்றார். கடவுளின் கரங்களால் ஏந்திச் செல்லப்பட, ஒருவர் சிறியவராக இருத்தல் மட்டும் போதாது. உண்மையாகவே மேலும் எளியவராக உருவாக வேண்டும். இதுவோர் தலைகீழ் திருப்பம்; முழுமையான திருப்பம்; நற்செய்தியின் முரண்பாடு மெய்யுரையோடு இணைந்த திருப்பம். தெரேசுவின் இதய ஆழத்திலிருந்து நன்றி மன்றாட்டு ஊற்றெடுத்து. "ஓ என் இறைவா, நாம் நம்பிக் காத்திருந்த செயல்பாடுகள் அனைத்தையும், நீர் எனக்கு நிறைவேற்றித் தந்துவிட்டீர். நான் உமது இரக்கப் பெருக்கைப் புகழ்ந்து பாட விரும்புகிறேன்."

தெரேசு தம் வாழ்வில் மீண்டும் கடக்க இயலாத நிலையைக் கடந்து செல்ல இவ்விரு விவிலியச் சொற்றொடர்களும் சரியான நேரத்தில் உதவின. இறைவன் அருளிய காப்புறுதியினால் அவர் பேருவகை எய்தினார். ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்தார். ஆம், அருட்பணியாளர் ப்ரு கூறியது உண்மைதான். துணிவுடன் இக்கண்டுபிடிப்பைச் செயல்பாட்டில் காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயம். பேதுரு திபெரிய நீரில் குதித்தது போல் நாமும் அன்பு, நம்பிக்கை நிறைந்த அலைகளில் அஞ்சாமல் குதிக்கத் துணிவு பெற வேண்டும். தெரேசுவின் சிறுமையும், வலிமையின்மையுமே அவரது மகிழ்வுக்கு அடிப்படைக் காரணமாயின. இறைவனின் கருணை நிறை அன்பு வெளிப்படுத்தப்பட உதவும் நல்ல நிலமே இந்தப் பண்புகள்.

இந்த மாபெரும் கண்டுபிடிப்பு தெரேசுவுக்கு ஓர் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டமாகும். அதன் அடையாளமாக அன்று முதல் அவருடைய கடிதங்களில் *'மிகச் சின்னசிறு தெரேசு'* என்றே கையொப்பமிட்டார். அவருடைய இந்த வெற்றிமிகு கண்டுபிடிப்பு அவருடைய திறன்மிகு வாழ்க்கைக்குப் பயணத்திற்கு வேகமூட்டியது. தெரேசுவின் புதிய கையொப்பத்தைக் கண்டதும் சிலர் அவர் தாம் குடும்பத்தில் சிறியவர், எனவே தான் இப்படி எழுதுகிறார் என்றனர். வேறு சிலர் இது 'மோசமான வெறும் அலங்கார வார்த்தை ஜாலம்' எனக் கருதின ர். 'சிறியவர்' 'சிறியவராய் நிலைத்து நிற்பது' போன்ற வார்த்தைகள் என்றாலே தெரேசுவுக்கு உடனடியாக 1894 ஆம் ஆண்டு இறுதியில் கண்டுபிடித்த மாபெரும் 'கண்டு பிடிப்பையே' குறிக்கும். மனிதனால் இயலாதவை இறைவனால் இயலாதவை அல்ல. அவருடைய தந்தைக்குரிய கருணைக்கு



ஒருவர் தம்மையே முழுமையாகக் கையளித்தால் அதுவே போதும்' என்று கூறிய தெரேசு தம் அன்றாட வாழ்க்கையில் மேலும் மேலும் தாம் கண்டுபிடித்த அன்பு மற்றும் நம்பிக்கை வழியின் உண்மையைத் தமது வாழ்வில் எண்பித்தார். எனவே, அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் அனைத்துமே அவருக்குப் புதுப் பொருளையும், புதுப் பொலிவையும் அளித்தன.

## விரல்களுக்கு ஓய்வில்லை

பணிகளுக்குப் பஞ்சமில்லை எனினும் பழக்கமில்லாப் பணிகளே அவருக்குக் கொடுக்கப்பட்டன. நாடகம் எழுதினார்; கவிதைகள் பல புனைந்தார். அதுவரை அவர் பதினைந்து கவிதைகளும், ஒரு மனமகிழ்வு நாடகமும் எழுதியிருந்தார். தற்போது கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு நாடகம் ஒன்று தயாரிக்க வேண்டும். மற்றொன்று, இல்லத் தலைவியின் பெயர் கொண்ட விழாவுக்காக எழுத வேண்டும். அதிக நேரமெடுக்கும் இப்பணிகளுக்கு, குறுகிய நேரமே கிடைத்தது. மதியம் 12 மணியிலிருந்து ஒரு மணி வரையிலும், மாலை வேளைகளில் 8 மணி முதல் 9 மணி வரையிலும்தான் நேரம் கிடைத்தது. புகுமுகத் துறவு நிலைப் பொறுப்புப் பணிகளும் எதிர்பாராது குழுவில் ஏற்படும் பணிகளும் அந்தக் குறுகிய நேரத்தைக் குறுக்கின. எளிதில் அனைவருக்கும் உதவும் மனப்பாங்கு கொண்டிருந்ததால் எவரும் எளிதில் அவரை அணுகினர். அவரும் உதவினார். எனவே, எழுதுவதற்கு நேரம் கிடைப்பதென்பது அரிதானது. அவர் தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களைக் கவிதைப் புனைவதில் செலவிட்டு அக்கவிதைகளைப் பிறருக்கு அளித்து விடுவார். தமக்கென ஒரு கவிதையையும் வைத்துக் கொள்ளாத அளவுக்கு அனைத்தையும் பிறருக்காகவே கொடுத்து விட்டார். எனினும் அவருக்கு ஓர் ஆவல் இருந்ததை ஏற்றுக் கொண்டார். 'எனக்கு நேரம் கிடைத்தால் இனிமை மிகு பாடலுக்கு விளக்கவுரை எழுத வேண்டும் என்றிருந்தேன். இந்நூலில் மனித ஆன்மாவுக்கும், அதன் அன்பர் இறைவனுக்குமிடையே உள்ள பற்றிணைப்பு பற்றிய ஆழ்ந்த உண்மைகள் புதைந்து கிடப்பதை நான் கண்டறிந்தேன்." ஒரு இளைய கார்மல் கன்னிகையிடம் இத்துணை ஆற்றலும், துணிவும் இருந்தது ஆச்சரியம் தான்! ஸ்பெயின் நாட்டுப் பாதுகாவலி தூய அவிலா தெரசாள் மற்றும் தூய சிலுவை யோவான் போன்ற அறிவு ஜீவிகள் மேற்கொண்ட பணிகளைத் தெரேசும் மேற்கொள்ள விருப்பமும், துணிவும் கொண்டிருந்தார். நேரம் அதிகம் கிடைக்காததால் ஒரு சில சொற்றொடர்களை மேற்கோள் காட்டி அவற்றுக்கு மட்டும் மேலோட்டமான விளக்கவுரைகள் கொடுப்பதோடு அவர் நிறைவடைய வேண்டியிருந்தது.

'குடிலில் வானவர்' என்னும் நாடகத்தைக் கிறிஸ்து பிறப்பு விழாவுக்காக எழுதினார். இந்நாடகத்திற்கான மேடையலங்காரங்கள் மிக எளியனவாக இருந்தன. புதிதாகப் பிறந்துள்ள மழலை இயேசுவை ஐந்து வானவர்கள் சூழ்ந்து வருகிறார்கள். ஒருவர் பின் ஒருவராகத் தங்கள் புகழ்மாலையைப் பாடுகிறார்கள். முதலில் குழந்தை இயேசுவின் வானதூதர், தொடர்ந்து திருஉணவின் வானதூதர், தூய திருமுகத்தின் வானதூதர், உயிர்ப்பின் வானதூதர், இறுதியாக இறுதித் தீர்வையின் வானதூதர் என வலம் வந்து பாடி மகிழ்கிறார்கள். தெய்வீக நீதியின் பெயரால், பழிவாங்கும் இடி மின்னல்களோடு தவறிழைப்பவர்களை இறுதித் தீர்வையின் தூதர் அச்சுறுத்துகின்றார். அதற்குப் பின்னர் தான் குழந்தை இயேசு தமது அமைதியைக் கலைத்து அவரைத் தடுத்து நிறுத்துகின்றார்.

தெரேசு தமது மாபெரும் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து இறைவனின் நிறைவுகள் அனைத்தையும் அவரது கருணையின் வழியாகவே கண்டு கொண்டார். இறை நீதியும் அன்பினால் அணி செய்யப்பட்டதாகவே அவருக்குத் தோன்றியது. கடவுளின் நீதியை மட்டுமே வலியுறுத்தி வந்த சில சகோதரிகளுக்குத் தமது அன்பு வழி வாயிலாக மாற்றுக் கருத்தைப் புகட்ட முயன்று வந்தார். ஒரு முறை உதவி இல்லத் தலைவி சகோதரி தூய குழந்தைப் பருவத்தின் பெப்ரோனியிடம் இறை நீதி உங்களுக்கு வேண்டுமா ? என்று கேட்டு விட்டு, " இறை நீதி உங்களுக்கு அருளப்படும். கடவுளிடமிருந்து எதிர்பார்ப்பதைச் சரியாக ஆன்மா பெற்றுக் கொள்கிறது- . . பல ஆன்மாக்களையும், அச்சுறுத்திய இந்த நீதியே எனது மகிழ்வுக்கும், நம்பிக்கைக்கும் காரணமாக விளங்குகிறது." எனப் பதில் அளித்தார்.

கிறிஸ்து பிறப்பு விழா நாடகத்தின் இறுதிக் காட்சியில் மிக நுண்ணிய செய்தியைப் பக்குவமாக எடுத்துரைக்கின்றார்; அழிவின் வானதூதர் உட்பட முழந்தாளிலிருந்த அனைத்து வானதூதர்களும், இறைவனில் நிறைவடைய அழைக்கப்பட்ட ஆண்கள் மீதும், பெண்கள் மீதும் பொறாமை கொள்கின்றனர். "அவர்களும் குழந்தைகளாக மாறியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே!" எனக் கூறி ஆதங்கப்படுகின்றனர். இச்சாதாரண சொற்றொடரில் புதைந்து கிடந்த ஆழமான ஆன்மீக உண்மைகளைக் கார்மல் கன்னியர்கள் புரிந்து கொண்டார்களா ? என்பது கேள்விக்குறியே!

ஒரு மாதம் கழித்து அரங்கேற்றப்பட்ட மனமகிழ்வு நாடகம் மிக இன்றியமையாததாகவும், அருமையானதாகவும் அமைந்தது- லொரேன் நகர் இளம் நங்கையினது வாழ்க்கையின் இரண்டாம் பகுதி நடித்துக் காட்டப் பட்டது. 'ஜோன் தார்க் தமது மறைப்பணியை நிறைவேற்றுகின்றார்" என்பதே



அந்நாடகத்தின் பெயர். ஏறக்குறைய பதினாறு கதாபாத்திரங்களைக் கொண்ட நாடகமாதலால் தயாரிப்பாளர் அதிகக் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது. பலமுறை முன் தயாரிப்பு, ஒத்திகை, ஆடை யணிகள், நாடகப் பொருட்கள் போன்றவற்றைத் தயாராக்க வேண்டும். புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி பெறுவோர் அனைவருமே தீவிரமாகக் கலைப்பணியில் ஈடுபட்டனர்.

சில வேளைகளில், நிழலே ஏறக்குறைய நிஜமாகி விடுகின்றது. நாடகமே வாழ்வாகி விடுகின்றது. ஜோன் தார்க்கின் ஆபத்தான நிலையைச் சித்திரிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட சாராய விளக்குகள் காட்சித் திரையை தீக்கிரையாக்கின. ஜோன் தார்க்காக நடித்த தெரேசு தீயினின்று மயிரிழையில் உயிர் தப்பினார். தீயணைக்கப்படும் வரை எந்தப் பணியிலும் ஈடுபட வேண்டாம் என இல்லத் தலைவி கட்டளையிட அவரும் பணிந்தார். அப்போது தாம் மரணத்தைச் சந்திக்கவும் தயாராக இருந்ததாகப் பின்னர் கூறினார். தீ விபத்து ஏற்பட்டு உடனே அணைக்கப்பட்டாலும் நாடகம் முழுமையான வெற்றி அடைந்தது. அந்நாடகத்தின் ஐந்து காட்சிகளைச் செலின் புகைப்படமாக்கினார். அவற்றில் ஒன்று 22 வயதான தெரேசு பழுப்பு நிறச் செயற்கைக் கூந்தலோடு, கையில் வாளும், கொடியும் ஏந்தியவாறு உயிரோட்டத்துடன் ஜோன் தார்க்கே நேரில் வந்து நிற்பதைப் போல் காட்சியளித்தார். அவராகவே மாறியிருந்தார். சிறைப்படுத்தப் பட்டிருந்த இளம் பெண் ஜோன்தார்க்காகத் தம்மை ஒப்புமைப்படுத்திக் கொள்வது போன்ற நிறைய சொற்றொடர்கள் நாடகத்தில் இடம் பெற்றிருந்தன. ஜோன்தார்க் தமது துயர்கள், வேதனைப்பாடுகள் அனைத்தும் இயேசுவினுடைய பாடுகளோடு இயைந்து தோன்றியதால், அவை அனைத்தையும் இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டார். விவிலியத்தில் உள்ள சாலமோனின் ஞானம் என்னும் நூலில், 'நீதிமான்களின் எதிர்பாராத முடிவு' என்கிற பகுதி, சிறையில் அடைப்பட்டுக் கிடந்த ஜோன் தார்க்கிற்கு ஆறுதல் அளித்துப் புத்தொளி வழங்கின. "நீதிமான் குறுகிய காலத்தில் நிறைவு எய்தினார்; நீண்ட வாழ்வின் பயனை அடைந்தார், அவரது ஆன்மா ஆண்டவருக்கு ஏற்புடையதாய் இருந்தது. . ." (சா. ஞா. 4 : 13 - 14)

இக்கருத்தை உண்மையிலேயே எடுத்துரைப்பவர் யார் ? ஜோன் தார்க்கா ? அல்லது குழந்தை இயேசுவின் தெரேசா ?

இறைவா ! உம் அன்பிற்காக மறைத் தியாகத்தை ஏற்கின்றேன். இறப்பு, நெருப்பு இவற்றுக்கஞ்சி ஒருபோதும் பின்வாங்க மாட்டேன், என் இயேசுவே! உமக்காக என் ஆன்மா எப்படியெல்லாம் ஏங்குகின்றது. உம்மைக் காண்பதே

என் இறைவா! எனது ஒரே ஆவல். . . நாம் விரும்புவதெல்லாம் உம் அன்பிற்காக இறப்பதே! வாழ்வைத் தொடங்குவதற்காகச் சாகத் துடிக்கிறேன், விரும்புகிறேன். இயேசுவோடு இணைவதற்காக இறக்கவும் விரும்புகிறேன்.

இந்த உயிரோட்டமுள்ள வரிகளை எழுதிய ஜோன் - தார்க்காக நடித்த தெரேசு 1895 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21 ஆம் நாள் அவரது கார்மல் குழுவில் அனைவருக்கும் முன்பாக வாசித்துக் காட்டினார். ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தத்தை ஆழமாக உணர்ந்தே அவர் கூறினார்.

# 9

## வளரும் பருவம்

(ஜனவரி 1895 முதல் ஏப்ரல் 1896 வரை)

*ஆசையா?. . . அதிகமாக எனக்கு என ஏதுமில்லை*
*அன்பு செலுத்த, அன்புக்காக உயிர்விடுவது மட்டுமே.*

### மலரும் நினைவுகள்

**1894** - 95 ஆம் ஆண்டு குளிர்கால மாலைப் பொழுது மன மகிழ்வு நேரத்தில் மார்ட்டின் சகோதரிகள் நெருப்பைச் சுற்றி அமர்ந்து குளிர் காய்ந்து கொண்டே சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இயல்பாகக் கதை சொல்லும் திறமை கொண்ட தெரேசு புய்ஸ்ஸொனேவில் நடந்த நிகழ்வுகளை அனைவரது கண்முன் கொண்டு வந்து நிறுத்தினார். அப்போது திடீரெனத் தெரேசின் ஆன்மீக அன்னை, இல்லத் தலைவியிடம், "பிற சகோதரிகளுக்காகக் கவிதைகள் எழுதும்படி நீங்கள் தெரேசைப் பணிக்கின்றீர்கள்; ஆனால் நமக்காக அவர் தமது குழந்தைப் பருவம் பற்றி ஒன்றும் எழுதுவதில்லையே! இதைப் பற்றி அவரிடம் பேசி எழுதச் சொல்ல இயலுமா? அவர் ஒரு தேவதை! வானதூதர், இம்மண்ணில் அவர் நீண்ட நாள்கள் வாழப்போவதில்லை! நமக்கு அதிகவிருப்பமான அவருடைய குழந்தைப் பருவ நிகழ்வுகளின் விளக்கங்களை நாம் இழக்க நேரிடும், இதை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்!" என்றார். தலைமைச் சகோதரி ஆக்னெசு தயங்கினார். தன்வரலாறு எழுதும் வழக்கம் கார்மல் மரபில் கிடையாது! அவரது சின்ன

சகோதரி தெரேசுவிற்கும் பணிகள் இல்லாமலில்லை! சகோதரி தூய இதய மரியா தமது வேண்டுகோளில் நிலைத்து நின்றார். தெரேசு சிரித்தார். அவர்கள் தம்மை எள்ளி நகையாடுவதாக நினைத்தார். அத்தகைய மாபெரும் பணியைச் செய்வதற்கான திறமை தனக்குக் கிடையாது என்றும் கூறினார். அப்போது தலைமைச் சகோதரி ஆக்னெசு 'எனக்காக உமது குழந்தைப் பருவ நினைவுகளை எழுதுமாறு நான் ஆணையிடுகிறேன்'' என்று உறுதியாகக் கூறினார். 'என் குழந்தைப் பருவ நிகழ்வுகளில் தாங்கள் அறியாதது எதுவுமில்லை. பின்னர் நான் எதை எழுத வேண்டுமென்று நினைக்கிறீர்கள்' எனக் கேட்க நினைத்தாலும் பணிவதைத் தவிர வேறு வழியொன்றும் இல்லை என எண்ணி அமைதியாகப் பணிந்தார்.

தெரேசு பலவிதப் பணிகளில் ஈடுபட்டிருந்ததால் ஏற்கெனவே நேரம் கிடைக்காமல் இடர்ப்பட்டுக் கொண்டிருந்தார். எனவே போதிய நேரமின்மையே முதல் பிரச்சினையாக அவருக்குத் தோன்றியது. 1895 ஆம் ஆண்டு ஜனவரி இறுதியில் சகோதரி தெரேசு தமது எழுத்துப் பணியை ஆரம்பித்தார். பொதுவாகத் தினமும் இரவு செபத்திற்குப் பிறகு கிடைக்கும் நேரத்திலும், விழா நாள்களிலும் எழுதினார். 30 பக்கங்கள் கொண்ட சிறிய பள்ளிப் பயிற்சியேடு அவருக்குக் கொடுக்கப்பட்டது. முதல் மாடியில் உள்ள அவரது சிறிய அறையின் மங்கிய விளக்கு அணையாதிருக்கும்படி சிறிய கம்பியினால் அதன் திரி அவ்வப்போது தூண்டி விடப்பட்டது. பரணிலிருந்து தேடிக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்து மேசை, அதன் மேல் சிற்றேடு. இத்தகைய பின்னணியோடு சிறிய இருப்பு மனையில் தெரேசு அமர்ந்து தமது எழுத்துப் பணியை ஆரம்பித்தார்.

தெரேசு தமது பணியைத் தொடங்கும் முன்பு தனது அறையை அடுத்து இருந்த அறையில் வைக்கப்பட்டிருந்த புன்னகை அன்னையிடம் மன்றாடினார். பிறகு விவிலியத்தைத் திறந்ததும் பின்வரும் பகுதி அவர் கண்ணில் பட்டது. 'அதன் பின்பு இயேசு மலை மேல் ஏறித் தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார். அவர்களும் அவரிடம் வந்தார்கள்.' (மாற் 3 : 13) இவ்வரிகள், தம் கதையை நிறைவாக வெளிப்படுத்தும் வரிகளாக அவருக்குத் தென்பட்டன.

**'உண்மையிலேயே இதுவே என் அழைப்பின், என் முழு வாழ்வுக் குரிய மறைபொருள், அனைத்திற்கும் மேலாக என் ஆன்மாவின் மீது இயேசு பொழிந்த எண்ணற்ற சிறப்புச் சலுகைகளின் மறைபொருள் இதுவே. தகுதியுள்ளவர்களை அவர் அழைக்கவில்லை ! மாறாகத் தமக்கு விருப்பம் உள்ளவர்களையே அழைத்தார். அல்லது தூய பவுல் அடியார் கூறுவது**



போலக் கடவுள் யார் யாருக்கு இரக்கம் காட்ட விரும்புகிறாரோ அவர்களுக்கு இரக்கம் காட்டுகிறார். யார் யாருக்குப் பரிவு காட்ட விரும்புகிறாரோ அவர்களுக்குப் பரிவு காட்டுகிறார். ஆகவே, மனிதர் விரும்புவதாலோ உழைப்பதாலோ எதுவும் ஆவதில்லை. கடவுள் இரக்கம் காட்டுவதாலேயே எல்லாம் ஆகிறது" (உரோ 9 : 15 - 16) எனத் தெரேசு தன் அழைப்பின் மேன்மையை உணர்த்துகிறார்.

எனவே, இத்தகைய உறுதியற்ற நிலையில் தகுந்த திட்டமின்றி அகத்தூண்டுதலுக்கேற்ப எழுதுகோலிலிருந்து வீழ்ந்த வார்த்தைகளை எவ்வித அழித்தல்களும் இன்றி இறுதிப் படிவத்திலேயே வடித்தார். 1895 ஆம் ஆண்டு மீண்டும் அதனை வாசித்து, இறை வார்த்தையையும் அவரது மாபெரும் கண்டுபிடிப்புமான சிறுவழியின் ஒளியில் மாற்றங்கள் சில செய்தார்.

'என் கடந்த கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும் போது என் வாழ்வின் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் நான் என்னைக் காண்கிறேன். வெளிப்படை மற்றும் உள்ளார்ந்த கடும் இடர்ப்பாடுகளினால் என் ஆன்மா முதிர்ச்சி அடைந்துள்ளது. தற்போது புயலினால் வலுவூட்டப் பெற்ற மலரினைப் போல என் தலையை நிமிர்த்த இயலும். விவிலியத்தில் காணப்படும் 'ஆண்டவர் என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை' என்ற 23 ஆம் திருப்பாவின் வரிகள் என்னில் செயலாக்கம் பெற்றுள்ளதை உணர்கின்றேன்' என்றார் தெரேசு.

தலைமைச் சகோதரி ஆக்னெசு, தமது ஆணையை இதைவிட மிகவும் சிறந்த தருணத்தில் பிறப்பித்திருக்க முடியாது. இறைவனது கருணையின் ஆழத்தை உணர்ந்தவராகத் தெரேசு தமது முழு வாழ்வின் அர்த்தத்தைத் தெளிவாகத் தற்போது தான் புரிந்து கொண்டார். இடர்கள் பல அவர் வாழ்வில் கடந்து சென்றாலும் இறையன்பு ஒரு போதும் அவரைக் கைவிடவில்லை என்பதை நினைவு கூர்ந்தார். அவருடைய அன்னையை இழந்த போதும், அவருடைய சகோதரிகள் பிரிந்த போதும், அவருடைய நோயினால் துன்புற்று வாடித்துடித்த போதும், உணர்வு வேதனைகளால் அலைக்கழிக்கப்பட்டபோதும், மனச்சஞ்சலங்களால் நொறுங்கிய போதும், அவருடைய தந்தை வேதனைகளால் வாட்டி வதைக்கப்பட்டபோதும், கார்மலில் தொடக்க காலத்தில் முட்களே அதிகம் நிறைந்த வாழ்வைச் சந்தித்த போதும் எந்தச் சந்தர்ப்பங்களிலும் கடவுள் அவரைக் கைவிடவில்லை. அவர் எழுதிய ஆறு குறிப்பேடுகளிலும், 'இறைவனுடைய

கருணையை' எண்ணி வியந்து போற்றுகின்றார். முதல் குறிப்பேட்டை மிக விரைவாக எழுதி முடித்தார். அவர் எழுதிய அனைத்துப் பக்கங்களும் தெரேசின் துதிபாடல்களை எடுத்துரைக்கின்றன. அவர் 'தம் வாழ்க்கையின் கதையை மட்டும் எழுதவில்லை: மாறாக அவருடைய ஆன்மாவின் கவிதையை, இறைவன் அவருக்கு அருளிய கொடைகளின் கதைகளையே' தமது எழுத்துக்களில் பிரதிபலிக்கின்றார். 1886 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு இரவில் அவர் பெற்ற மன மாற்றம் ஒரு கானல் நீரல்ல! மாறாக இந்தப் 'பேராற்றல் நிறை பந்தயத்தின்' ஆரம்பமே! இன்னும் அந்த ஓட்டம் முடிவடையவில்லை. எனவே, அவரது வாழ்க்கை நினைவலைகளின் சிறு துளிகள், அவைகளின் நகைப்புகள் அனைத்தும் இதுவரை நிழல்களாகவே தோன்றின. ஆனால் இறையன்பின் கருணையின் பால் அவையனைத்தும் ஒளிர்விக்கப்பட்டுவிட்டது.

அந்த அன்பின் கருணையில் தான் அளவு கடந்த விதத்தில் இதுவரை அவர் அன்பு செலுத்தப்பட்டார். இந்த அன்பே அவருக்குப் பைத்தியக்காரத் தனமாகத் தெரிந்தது. எனவே தான் தெரேசு கூறுகிறார்:

'அறிவிலி போன்ற நம்மீது அன்பு செலுத்தும் அவருக்காகத் துயர் அனுபவிப்பது எவ்வளவோ இன்பத்திற்குரியது! இவ்வுலகின் கண்களுக்கு அறிவிலிகளாய்க் காணப்படுவோர் மீது அன்பு பாராட்டுவது எவ்வளவோ இன்பத்திற்குரியது. . . மண்ணில் வந்து, குற்றம் புரிவோரைத் தேடி அலைந்து, அவர்களைத் தம் தோழர்களாக்கிக் கொள்ளும்படி நம் அன்பர் பைத்தியக்காரரானார். . . நாம் அவர் மீது அன்பு பாராட்டுவதற்காக அவர் மானிடராய் உருவெடுத்தது எவ்வளவோ மகிழ்ச்சிக்குரியது. அவர் அவ்வாறு உருவெடுக்காதிருந்தால் நாம் அவரை அன்பு செய்ய துணிந்திருக்க மாட்டோம்.

தெரேசு தமது வாழ்வின் மறக்க முடியாத அழகிய ஆண்டான 1895 ஆம் ஆண்டில் 'கீழ்ப்படிதல் பயிற்சி ஏடு' என்கிற நூல் அவருடைய துணையானது. ஒவ்வொரு ஏடு நிறைவு பெற்றதும் அதனை முதலில் படித்தவர் செலின் தான். ஒரு நாள் பேரின்பம் எய்தும் ஆவலோடு தெரேசிடம் இவ்வார்த்தைகள் அனைத்தும் அச்சிடப்படும்; இவை மற்றக் காலங்களிலும் பயனுள்ளவையாக இருப்பதை நீரே காண்பீர் என்றார் செலின். அவரது இந்த வார்த்தைகளை ஏளனப் பேச்சாகக் கருதி மனத்திற்குள்ளே சிரித்த தெரேசு "இலக்கியப் படைப்பை உருவாக்கும் எண்ணத்துடன் இதை நான் எழுதவில்லை; ஆனால் இல்லத் தலைவியின் வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டே இதனை எழுதுகின்றேன்' என்றார்.



**அன்புக்காகவே . . . (26 பிப்ரவரி 1895)**

இந்த இடைப்பட்ட காலத்தில், வேண்டுதலுக்கிணங்க, 12 கவிதை களையும் மனமகிழ்வுக்காக நான்கு குறு நாடகங்களையும் எழுதினார். இதற்கிடையில் தெரேசு குழுக்கவிதாயினியாகி விட்டார். 'ஜோன் தார்க' நாடகத்தின் இரண்டாம் பகுதி வெற்றிக்குப் பின் அவர் புகழின் உச்சிக்கே சென்று விட்டார். ஆனால் இலக்கிய நடை சரியாக அமையவில்லை! கவிதைகள், கடிதங்கள், நாடகங்கள், நிகழ்வுகளின் நினைவுகள் அனைத் தையும் தலைமைச் சகோதரி ஆக்னெசு கேட்டதற்காகவே படைத்தார். இலக்கிய நடையைப் பற்றிய கவலை இல்லாமல் தமது இதய ஏக்கங்களை இயேசுவுக்காகக் கொண்டிருந்த பேருணர்ச்சி மிக்க அன்பு எழுச்சிகளை முழுமையாக வெளிக் கொணர்ந்தார்.

சகோதரி தூய அகுஸ்தினாரின் தெரேசு, சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசின் நெருங்கிய தோழிகளில் ஒருவராகத் தம்மைக் கருதிக் கொண்டார். அவர், அந்த ஆண்டின் வசந்த காலத்தின்போது குழந்தை இயேசுவின் தெரேசிடமிருந்து ஒரு இரகசியமான உண்மையை



*ஜோன் தார்க்காகத் தெரேசு (1895, சனவரி)*

அறிந்து கொண்டார்: அதாவது "நான் விரைவில் இறந்து விடுவேன்!" என்று தெரேசு அவரிடம் கூறியுள்ளார். 40 மணி நேரத்திருவிருந்து ஆராதனை வழிபாட்டின் போது 15 வரிகளைக் கொண்ட, 'அன்பிற்காக வாழ' என்கிற கவிதை ஒன்றைத் தன்னிச்சையாகப் புனைந்தார். அவர் இயற்றிய கவிதைகள் அனைத்திலும் மிகச் சிறந்த படைப்பு இதுதான் என்பது செலினின் கருத்து. திருநீற்றுப் புதனுக்கு முந்தைய நாள் செவ்வாய் கிழமை மாலை தமது நினைவிலிருந்து அந்தக் கவிதைகளை எழுதினார். அதன் இறுதி வரிகள் அவர் வாழ்ந்து கொண்டிருந்த வாழ்வை வெளிச்சம் போட்டுக் காட்டுபவைகளாக அமைந்திருந்தன:

**அன்புக்காக இறப்பதே எனது நம்பிக்கை**
**அவரது அன்புத் தீயில் பற்றியெரிவதே எனது ஆவல்**
**அவரைக் கண்டு அவரோடு என்றும் ஒன்றாதலே எனக்கு விண்ணகம்**
**அன்புக்காக வாழ்வதே எனது வாழ்வின் இலக்கு.**

## படியேறி வருகின்றேன் (9 - 11 ஜூன் 1895)

ஜூன் திங்கள் 9 ஆம் நாள் வாரத்தின் முதல் நாள் மூவொரு இறைவன் பெருவிழா ஞாயிறு காலை குழுத்திருப்பலியின் போது எதிர்பாராத அகத்தூண்டல் ஒன்று தெரேசுவின் இதயத்திலிருந்து ஊற்றெடுத்தது. இறைவனின் கருணை நிறை அன்புக்கு அர்ப்பணப் பொருளாய்த் தம்மையே அவர் அர்ப்பணிக்க வேண்டும் இந்த வலிமையான உறுதிப்பாடு அவரை ஆட்கொண்டது. சிற்றாலயத்தை விட்டு வெளியே வந்தவுடன் செலினைத் தன்னுடன் வருமாறு அழைத்தார். செலின் அப்போது தலைமைச் சகோதரி ஆக்னெசுடன் வந்து கொண்டிருந்தார். அவர் அழைத்தலைக் கண்டு செலின் திகைப்புற்றார். தெரேசுவின் முகம் செந்நிறமாயிருந்தது. எழுச்சியடைந்திருந்தது. ஓரளவு குழப்பமடைந்திருந்தது போலவும் தோன்றியது. புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி பெறுவோருடன் தம்மையும் சேர்த்து அன்புக்காக அர்ப்பணப் பொருளாக மாற்ற விரும்புவதைப் பேச்சில் தடுமாறியபடி கூறினார். மற்றப்பணிகளில் ஆர்வமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், தெரேசுவின் விருப்பத்தின் மீது அதிக ஆர்வம் காட்டாததாலும் இல்லத்தலைவி உடனடியாக அனுமதி கொடுத்து விட்டார். 'தெரேசின் முகம் ஒளி மயமானது.' மிக்க மகிழ்ச்சி அடைந்து செலினை உடன் அழைத்துச் சென்று தமது திட்டத்தைச் சுருக்கமாக எடுத்துரைத்தார். 'தவறு இழைப்போருக்காக ஒதுக்கப்பட்ட தண்டனைகளை மாற்றித் தங்கள் மேல் சுமந்து கொண்டு தங்களையே இறைவனது நீதியின்படி பலியாக



அர்ப்பணிக்கும் ஆன்மாக்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன்.'

கடந்த ஆண்டு இறை நீதிக்காகத் தன்னையே அர்ப்பணித்த தலைமைச் சகோதரி ஆக்னெசின் வியப்பிற்குரிய வாழ்வு உணவறையில் வாசிக்கப்பட்டது. தங்கள் இல்லத்தில் வாழ்ந்த சகோதரி சிலுவையின் மரியா தன்னையே அர்ப்பணமாக்கி 33 ஆண்டுகளாகத் துயர்கள் அனுபவித்தபின் 1882 ஆம் ஆண்டில் இறந்ததைத் தெரேசு அறிந்திருந்தார். அண்மையில் அவரது பாசத்திற்குரிய தலைமைச் சகோதரி ஜெனவியேவ் அவர்களும் இந்த அடிச்சுவட்டையே பின்பற்றினார். இத்தகைய ஆன்மீகத்திலிருந்து தன்னைத் தொலைவுபடுத்தி வைத்திருந்தார் என்பது ஐயத்திற்கு இடமில்லாத உண்மை. 'இந்த அர்ப்பணம் சிறந்ததாகவும், பரந்ததாகவும் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அதனைச் செயல்படுத்த என்னையே ஈடுபடுத்திக் கொண்டதாக உணர முடியவில்லை' எனத் தெரேசு தெளிவாகக் குறிப்பிட்டார்.

தெரேசு தம்மையும் அர்ப்பணிக்கத் துணிந்தார். இறை நீதிக்காக அல்ல! அவரது கருணை நிறை அன்பிற்காக, எனவே அர்ப்பணச் செயலுக்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். ஜூன் திங்கள் 11 ஆம் நாள் செலினுடன் இணைந்து புன்னகை அரசியின் திருஉருவச் சிலை முன்பு முழந்தாளிட்டுத் தமது பெயராலும், தம் சகோதரியின் பெயராலும் அர்ப்பணம் செய்தார்.

'என் இறைவா! மிகவும் வணக்கத்திற்குரிய மூவொரு இறைவா! நான் உமக்கு அன்பு செலுத்தவும் அன்பு செலுத்தப்படவும் விரும்புகிறேன். இம்மண்ணில் மனித ஆன்மாக்களை மீட்பதன் வழியாகவும், கழுவாய் நிலையிலிருந்து துன்புறுபவர்களை விடுவிப்பதன் வழியாகவும், தூய திருச்சபையின் மகிமைக்காக உழைக்க விரும்புகிறேன். உமது விருப்பத்தை நிறைவாக நிறைவேற்றவும், உமது இறை ஆட்சியில் எனக்காகத் தயாரித்து வைத்துள்ள மாட்சிமையின் நிலையை அடையவும் விரும்புகிறேன். ஒரே வார்த்தையில் நான் புனிதையாக விரும்புகிறேன். ஆனால் எனது இயலாமையை உணர்கிறேன். எனவே உம்மை இறைஞ்சுகிறேன்! என் இறைவா, நீரே என் புகலிடமாய் இருந்தருளும்.'

தெரேசுவின் அகப்பேரியக்கமே இந்த் அர்ப்பணச் செயலைப் புரிய வைத்தது. இந்த அர்ப்பணச்செயலே நம்பிக்கையின் வழி கண்டுபிடிப்பை வெளிப்படுத்தியது. நம்பிக்கை வழியின் அடையான விளக்கமே இவ்வர்ப்பணம். அங்குப் பயன்படுத்திய 'மின் ஏற்றத்திற்குப்' பதிலாக இங்கு நெருப்பு பயன்படுத்தப்படுகின்றது. தம்மையே அர்ப்ணமாய்த் தருபவரது

நிறைவான கையளிப்பே பெரும்பலி! அப்பெரும்பலி அன்புத் தீயால் சுட்டெரிக்கப்பட வேண்டும்.

"நிறையன்பினை ஒரே செயலால் வாழ்ந்து காட்டுவதற்கு, உமது கருணை நிறை அன்பின் பலிப்பொருளாக என்னையே நீர் சுட்டெரிக்க வேண்டுகிறேன்! உம்மில் இருக்கும் எல்லையற்ற மென்மைத் தன்மையின் அலைகளை என் ஆன்மாவினுள் பொங்கி வழிய அனுமதியும். இதன் வழியாக எம் இறைவா! நான் உம் அன்பின் மறைத்தியாகியாக மாற அருள் தாரும். இம்மறைத் தியாகம் உம்முன் நிற்க என்னைத் தயார்ப்படுத்திய பின்பு, இறுதியாக இறக்கவும் தூண்டுதல் தந்தருளச் செய்தருளும். இவ்வாறு என் ஆன்மா எவ்வித தாமதமுமின்றி உம்மிடம் வந்து உமது கருணை நிறை அன்பின் முடிவில்லா அரவணைப்பில் அமைதி அடைவதாக! என் அன்பரே, எனது ஒவ்வொரு இதயத் துடிப்பிலும் இந்த அர்ப்பணம் புதுப்பிக்கப்பட் டும். எண்ணிலடங்காத தடவை புதுப்பிக்கப்பட்டும்! நிழல்கள் மறையும் வரையில் புதுப்பிக்கப்படட்டும்! அதன் பின்னர் என் அன்பை எம்மிடம் நேருக்கு நேர் என்றும் எடுத்துரைக்கும் நிலை அடைவேன்!" எனத் தெரேசு மன்றாடினார்.

தெரேசுவின் மறைந்த வாழ்வில் இவ்வர்ப்பண நிகழ்வு அவருக்கு ஒரு புதிய முடிவான படிநிலையை அமைத்துக் கொடுத்தது. அவரில் என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்பதைச் செலினால் தெளிவாகப் புரிந்து கொள்ள இயல்வில்லை! ஆனால் தெரேசு தெளிவாக அறிந்திருந்தார். அவர் தாமாகக் கண்டுபிடித்திருந்த வழியின் எல்லையை அடைந்திருந்தார். தெரேசுவுக்காகத் தன்னுயிர் ஈந்த அவருக்காக முழுமையாகத் தம்மையே கொடுக்க விரும்பினார். அன்பு என்பது அனைத்தையும் கொடுப்பது; தன்னையும் தருவது; அன்புக்கு ஈடு அன்பே!

சில நாள்கள் கழித்து (பெரும்பாலும் ஜூன் 14 ஆம் நாள்) சிற்றாலயத்தில் தெரேசு தனிமையில், சிலுவையின் வழியே மன்றாடத் தொடங்கியபோது இறைவனுக்காகத் தீவிர அன்பால் ஆட்கொள்ளப் பட்டார். அதாவது நெருப்பினால் முற்றிலும் மூழ்கடிக்கப்பட்டதாக அவர் எண்ணும் அளவுக்கு அன்பினால் ஆட்கொள்ளப்பட்டார். "நான் அன்பின் நெருப்பில் நின்றேன். அந்தச் சிறுபொழுது. . . இன்னும் ஒரு நொடி நீடித்திருந்தாலும் அந்தத் தீயின் கனலைத்தாங்க இயலாது நான் மடிந்திருப்பேன்" என்றார் தெரேசு. அவருடைய அர்ப்பணத்தை இறைவன் ஏற்றுக் கொண்டார் என்பதற்கான உறுதி அடையாளமாக இது அவருக்குக் கொடுக்கப்பட்டது.



உடனடியாக மீண்டும் தெரேசு தமது வறட்சி நிலைக்குச் சென்று விட்டார். தாம் பெற்ற அருட்கொடையை இல்லத்தலைவி ஆக்னெசிடம் வெளிப்படுத்தினார். ஆனால் அவரோ கண்டுகொள்ளவில்லை! மனப் பூர்வமாக அப்படி நடந்து கொண்டாரா? என்பது தெரியவில்லை. இந்த இறை அனுபவ நிலை அவருக்கு குழப்பத்தையே ஏற்படுத்தியது. ஏனெனில் தெரேசுவின் இந்த அர்ப்பணம் அவரை மட்டுமல்ல; அனைவரையும் கவர்ந்திழுக்க வல்லது எனக் கூறினார். 'என் இறைவா! இகழப்பட்டு ஒதுக்கப்படும் உமது அன்பு உம் இதயத்துக்குள்ளே முடங்கிக் கிடக்கப் போகின்றதா? அவர் நம் மீது அதனை பொழிய விரும்புகிறார்.'

செலினை அர்ப்பண அன்பு வழியில் ஈடுபடுத்திய பின்பு அவருடைய ஆன்மீக அன்னையையும் ஈடுபடுத்த விரும்பினார் தெரேசு. எனவே ஒரு நாள் சிறுவயல் ஒன்றில் அறுத்த புல்லை ஒன்றாகத் திரட்டிக் கொண்டிருந்த வேளையில் 'இறைவனின் கருணை நிறை அன்புக்குப் பலியாக உம்மையே அர்ப்பணிக்க விரும்புகிறீர்களா?' என்று கேட்டார். 'உறுதியாக இல்லை' எனச் சகோதரி தூய இதயத்தின் மரியா பதிலளித்தார். 'நான் அதற்குச் சம்மதித்தால் இறைவன் என் வார்த்தையை ஏற்றுக் கொண்டு விடுவார்; நான் துன்பத்தைக் கண்டு அஞ்சுகிறேன்' என்று கூறிய மரியாவுக்குத் தெரேசு, 'நீ என்ன சொல்கின்றாய்? என்பது எனக்குப் புரிகின்றது. ஆனால் அன்புக்காக ஒருவர் அர்ப்பணிப்பது, இறைநீதிக்காக ஒருவர் அர்ப் பணிப்பதைப் போன்றது அல்ல. இரண்டும் வேறுப்பட்டவை அன்புக்காகவே அர்ப்பணிப்பதில் ஒருவர் அதிகம் துன்புறமாட்டார், அவர் மீது அன்பு செலுத்த வேண்டும் அவ்வளவு தான்!' என்று விளக்கம் கூறினார். மரியாவினுடைய ஆன்மீகக் குழந்தையின் பேச்சாற்றல் அவரைக் கவர்ந்தது; வென்றது. அவரும் சம்மதித்து அன்புக்கான அர்ப்பணத்தை நோக்கி அடியெடுத்து வைத்தார்.

இந்த அர்ப்பணச்செயல் குறித்துத் தெரேசு தமது புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி பெறும் சகோதரிகளுக்கு எடுத்துக் கூறத் தயங்கவில்லை. மரியா ஆக்னெசு மற்றும் ஆகஸ்ட் 15 ஆம் நாள் முதல் திரு உணவில் மரியா என அழைக்கப்பட்ட தெரேசுவின் மாமா மகள் மரியா கேரென் ஆகிய இருவருக்கும் எடுத்துக் கூறினார். தெரேசின் அளவு கடந்த ஆர்வம் இல்லத் தலைவிக்கும் சிறிது கலக்கத்தை ஏற்படுத்தியது. தெரேசுவின் 'கொள்கை மாற்றம்' என்ற தாக்கத்தினால் புகுமுகத் துறவு நிலை ஆபத்தான பாதையொன்றில் சென்று கொண்டிருக்கிறதோ? என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார். இந்த இளம் கன்னியர்கள் அனைவரும் தங்களையே

பலியாக அர்ப்பணிக்க விடுவது விவேகமானதா? என்ற கேள்வி அவர் மனத்தில் அடிக்கடி எழுந்தது.

தலைமைச் சகோதரி ஆக்னெசு அவ்வாண்டு தியான மறையுரையாளருடன் கலந்து பேசினார். அருட்பணியாளர் லெமோன்னியர் (Lemonnier) ஒரு மறைப்பணியாளர்! ஏற்கெனவே 1893 மற்றும் 1894 ஆகிய ஆண்டுகளில் அவர்களுக்குத் தியான வழிகாட்டியாக இருந்திருக்கிறார். அவரே தெரேசுவைச் சிறுமலர்' என அழைத்தார். தெரேசைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். அவர் விவேகத்துடன் இந்த அர்ப்பணச் செயல் குறித்து அவருடைய தலைமைத் தந்தையிடம் எடுத்துக் கூறினார். இருவரும் இச்செயலுக்கு இசைவு வழங்கினர். ஆனால் தெரேசுவின் கருத்தியலை மேலும் சிறப்பிக்க அதில் சில வார்த்தைகளை மாற்றும்படி கருத்துத் தெரிவித்தனர். அதாவது தெரேசு பயன்படுத்திய 'எல்லையற்ற' என்கிற வார்த்தைக்குப் பதிலாக 'மிகச்சிறந்த' என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்படி கேட்டுக் கொண்டனர். 'எல்லையற்ற' என்ற வார்த்தை இறையியல் அடிப்படையில் சிறப்பானதாகத் தெரியவில்லை. தெரேசு இம்மாற்றத்தை விரும்பவில்லை! எனினும் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கினார். வார்த்தை மாறினாலும் கருத்தியல், தத்துவம் மாறவில்லை என்பதால் தெரேசு மகிழ்ச்சியடைந்தார். தெரேசுவின் அர்ப்பணச் செயல் திருச்சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## என் அன்பு அருட்பணியாளர் சகோதரருக்கு. . .

(17 அக்டோபர் 1895)

ஆண்டு தியானம் முடிந்தவுடனே ஆடைகளைச் சலவை செய்கிற நாளன்று இல்லத் தலைவி தெரேசைத் தனியாக அழைத்தார். மொரீஸ் பெல்லியெர் (Maurice Belliere) என்ற 21 வயது நிரம்பிய அருட்பணியாளராக பயிற்சி பெற்று வந்த மாணவர் கார்மல் இல்லத்திற்குக் கடிதம் ஒன்று எழுதியிருந்தார். அதில் தமக்காகவும் குறிப்பாகத் தமது ஆன்ம மீட்பிற்காகவும் மன்றாடும் ஒரு அருட்சகோதரியைத் தரும்படி கேட்டிருந்தார். மறைப்பணியாளராக இருந்த அவர் பல ஆன்மாக்களை மீட்கும் பணியில் ஈடுபடும் போது தமது மன்றாட்டுகள், அறச் செயல்கள், தியாகங்கள் வழியாக உதவி புரியும் ஒரு அருட்சகோதரியைத் தமக்குத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

தெரேசு இப்பணியை ஏற்றுக் கொள்ளுமாறு தலைமைச் சகோதரி ஆக்னெசு ஆலோசனை கூறினார். தெரேசு மகிழ்ச்சியில் முழ்கினார். ஆம்,



ஒன்றன்பின் ஒன்றாகக் கடவுள் அவரது விருப்பங்களை நிறைவேற்றி வந்தார். தமக்கென ஓர் அருட்பணியாளர் சகோதரர் ஒருவர் இருந்தால் நலமாக இருக்கும் என அடிக்கடி எண்ணினார். அவருடன் பிறந்த இரு சகோதரர்களின் இழப்பு, தமக்கு அருட்பணியாளர் சகோதரர் ஒருவர் கிடைப்பார் என்ற நம்பிக்கையை இழக்கச் செய்தது. இப்போது தமது 22 ஆவது வயதில் அவருடைய வயதை உடைய சகோதரரை விண்ணிலிருந்து பெற்றுக் கொண்டார். அவர் ஒரு எதிர்கால அருட்பணியாளர். எதிர்கால மறைப்பணியாளர். பல ஆண்டுகளாக அவர் இத்தகைய மகிழ்ச்சிக் கடலில் திளைத்தது இல்லை. 'என் ஆன்மாவின் ஒரு பக்கம் புதுப்பிக்கப்பட்டதாக உணர்ந்தேன்; இதுவரை மீட்ட மறந்து போன நரம்பிசைக் கருவியினை முதல் முறையாக ஒருவர் இசைப்பது போன்ற உணர்வு'. உடனடியாகத் தெரேசு அந்தச் சகோதரருக்குச் செபம் நிறைந்த கடிதம் ஒன்று எழுதினார். தெரேசு தமது அனைத்து மன்றாட்டுக்களையும் தியாகங்களையும் அச்சகோதரருக்காக அர்ப்பணித்தார். தமது அன்றாட வாழ்வில் புரியும் அனைத்துக் கடமைகளிலும் ஈடுபாட்டையும், மெய்ப்பற்றையும் இரட்டிப்பாக்கினார். அந்த இளம் அருட்பணியாளர் நவம்பர் மாதம்வரை எவ்வித பதிலும் எழுதவில்லை. நவம்பர் திங்களில் தாம் இராணுவப் பணிக்காகச் செல்லுவதாகக் சிறிய குறிப்பு அட்டையை மட்டும் அனுப்பியிருந்தார்.

தெரேசு தமக்குள் அவருக்காகப் புரிந்து வரும் வீரப் போராட்டங்கள் குறித்து அந்த இளம் அருட்பணியாளர் அறிந்திருக்க வாய்ப்பில்லை! தமது எல்லாவிதமான சிறிய நுண்ணிய செயல்களையும் உண்மையிலேயே முழு மன வலிமையுடன் ஆற்றி வந்தார் என்பதை அவரது மரணத்திற்குப் பின்பே அவருக்குத் தெரியவரும் என இளம் அருட்பணியாளர் அப்போது சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை. தெரேசு பின்புறம் சாய்ந்து கூட அமரவில்லை! கால்மேல் கால் போட்டு அமரும் சுகத்தையும் கைவிட்டாள். பிறர் கவனத்தைக் கவருவதைத் தடுக்கக் கோடைக் காலத்தில் முகத்தில் வழிந்த வியர்வையை எல்லோர் முன்னிலையிலும் துடைக்கவில்லை. குளிர் காலத்தில் கரங்களைத் தேய்த்துச் சூடேற்றும் சுகத்தையும் துறந்தார். குனிந்து நடந்து அடையும் சுகத்தை இழந்தார். தமது உதவி தேவைப்பட்ட அனைத்துச் சகோதரிகளுக்கும் தயங்காமல் உதவிக்கரம் நீட்டினார். வரவேற்பறைக்குச்சென்று யாரையும் எதிர்பார்ப்பதை முடிந்த வரையில் தவிர்த்தார். அவர் வாசித்துக் கொண்டிருந்த நூலை யாராவது இரவல் கேட்டால் அதைக் கொடுத்து விடுவார். மீண்டும் அவர்களிடம் சென்று

கேட்க மாட்டார். அவரது கவிதைகளை நகல் எடுப்பதைக் கூடத் தவிர்க்கும் அளவுக்கு ஏழ்மையின் எல்லைக்குச் சென்றார். அனைத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை விட்டொழித்தார். செப நேரத்தில் செப அறைக் கடிகாரத்தைப் பார்ப்பது, மன மகிழ்வு நேரத்தில் பயனற்ற கேள்விகள் கேட்பது போன்ற சிறுசிறு காரியங்களையும் தவிர்த்தார்.

இச்செயல்கள் மிகச் சிறியவை; அற்பமானவை; 'ஒன்றுமில்லாமை' தான்! ஆனால் பல நாள்களாக, வாரங்களாக, ஆண்டுகளாக வாழ்க்கை முழுவதுமே கடைப்பிடிப்பது கடினமே. தெரேசு தம் அன்பர் இயேசுவுக்காக ஒவ்வொரு நொடியும் தமது இயல்புகளை மாற்ற விரும்பினார்.

'சிறுமையாய் இருக்கும் எந்தன் விருப்பம் உம்மை மகிழ்விக்கவே
என்னை மறந்து உம் இதயத்தை வெல்வேன்.'

இவ்வார்த்தைகளையும் இதை போன்று இன்னும் பலவற்றையும் தமது குருதியினால் தெரேசு எழுதினார்.

## குழந்தை வடிவில் ஓர் யாசகர் (1895)

கிறிஸ்து பிறப்பு விழாவுக்கான தயாரிப்புகள் தொடங்கிவிட்டன. மீண்டும் புகுமுகத் துறவுநிலை மூத்த கன்னியரிடம் கொண்டாட்டங்களின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இல்லத்தலைவியின் திருவிழாவிற்கு வேறு ஒரு நாடகம் எழுத வேண்டியிருந்ததால் தற்போது எழுதும் நாடகத்தை மிக எளிதாக்கினார். குழந்தை இயேசு கார்மல் இல்லத்திற்கு வருகை தந்து கார்மல் சகோதரிகளின் 26 இதயங்களையும் யாசிக்கிறார். 'உங்களிடம் யாசிப்பவர் முடிவில்லா வார்த்தையாம் இயேசுவே!' 26 சொற்றொடர்களைக் கொண்ட எளிய அந்நாடகத்தில் தெரேசு தமக்கு மிகவும் நெருக்க மான ஓர் உண்மையை எடுத்துரைகின்றார். 'தம்மையே வெறுமையாக்கி, உதவுகிற கைகளைக் காணாமல் தவிக்கும் தெய்வக் குழந்தை மனித அன்புக்காக யாசிக்கின்றது' என்கிற உட்கருத்து நாடகத்தில் வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது.

ஜனவரி 21 ஆம் நாள் விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடத் தமது வலிமையெல்லாம் திரட்டி வைத்தார். 'எகிப்தை நோக்கிய ஓட்டம்' என்னும் ஒரு நாடகத்தை இந்த நாளுக்காகத் தயாரித்திருந்தார். ஓர் இரவில் திருடர்கள் சிலர் நாடுவிட்டு நாட்டுக்குச் சென்று கொண்டிருந்த திருக்குடும்பத்தைச் சந்திக்கின்றனர். தலைமைத் திருடனின் குழந்தை ஒரு தொழு நோயாளி. குழந்தை இயேசுவைக் குளிப்பாட்டிய நீரில்



அக்குழந்தையும் மூழ்கியதால் உடனடியாகக் குணம் பெறுகிறது. இது ஓர் மறை பரப்புதல் கதை. எனினும் சிந்தனைக்கு விருந்தாகவும், நகைச்சுவை நிறைந்ததாகவும், அபிரமேன் (Abramin) தார்க்கோல் (Torcol) போன்ற திருடர்கள் பழைய வெகுசனப் பல்லவி இசையுடன் நகைச்சுவை வரிகளைத் தங்களது முழு இதயத்தோடும், ஆன்மாவோடும் பாடுவது உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளும் நிகழ்ச்சியாக அமைந்தது.

ஆனால் இவையனைத்தையும் தலைமைச் சகோதரி ஆக்னெசு விரும்பவில்லை. தமது பெயர் கொண்ட விழாவுக்கு எழுதப்பட்ட நாடகம் மிக நீண்டதாக இருந்தது; சில பகுதிகளைக் குறைத்திருந்தால் களைப்பின்றிக் களிப்புற்றிருக்க முடியும் என்றார். மிகச் சுருக்கமாகக் கருத்தை வெளியிடாததால் தெரேசுவைக் கடிந்துக் கொண்டார். தெரேசு மனம் நொந்து அழுதுவிட்டார். மிகுந்த உறுதிப்பாட்டுடன் தங்கள் கதாபாத்திரங்களைச் சிறந்த முறையில் நடித்த புகுமுகத் துறவுநிலையாளர்கள் மனம் வெதும்பி நொறுங்குண்டனர்.

ஒருநாள் மாலை வழிபாட்டின் போது செப அறையில் நுழைந்தவுடன் நேரே தலைமைச் சகோதரி முன் சென்று முழந்தாளிலிருந்து தமது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பேட்டை அவரிடம் கொடுத்தார். இல்லத்தலைவி அதைத் திறந்து கூடப் பார்க்காமல் தமது மேசையின் சொருகு பெட்டியினுள் போட்டுவிட்டார். அவர் அதை வாசித்தாரா? அல்லது வாசிக்க நினைத்தாரா? என்று கூடத் தெரேசு ஒருபோதும் அவரிடம் கேட்கவில்லை.

தெரேசு மனமாற்றம் அடைந்து ஒன்பது ஆண்டுகளுக்கு பிறகு அன்புக்காகத் தம்மையே பலியாய் அர்ப்பணித்த ஆறு மாதங்களுக்கு பிறகு 23 வயது நிரம்பிய தெரேசு தமது வாழ்க்கையின் இருப்பு நிலையைத் தமது குறிப்பேட்டின் இறுதிப் பக்கத்தில் (தாள் 85) தெளிவாக்குகின்றார்.

'என் அன்பு அன்னையே! இவ்வழியில் என்னையே இறைவனுக்கு அர்ப்பணிக்க அனுமதித்தீர்கள். அருட்கொடைகளின் நதிகள் அல்ல! அருட்கொடைகளின் பெருங்கடலே என் ஆன்மாவின் மீது பெருக்கெடுத்துப் பாய்ந்ததையும் நீங்கள் அறிவீர்கள்! அந்த மகிழ்ச்சி நிறை நாள் முதல் அன்பு என்னைச் சூழ்கின்றது. என்னில் ஊடுருவிப் பாய்கின்றது என்பது எனக்குப் புலனாகின்றது. ஒவ்வொரு நொடியும் இக்கருணை நிறை அன்பு என்னைப் புதுப்பிக்கின்றது. தீமையின் கறைகளோ, வடுக்களோ இல்லாமல் என் ஆன்மாவைத் தூய்மைப் படுத்துகின்றது. எனவே, கழுவாய் நிலை பற்றிய அச்சமே எனக்குக் கிடையாது!

உண்மையிலேயே குற்றங்கள் பற்றிய அச்சங்கள் அகற்றப் பட்டுவிட்டன. அவரது மனக்கவலைகள் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டன; எனவே, தமது தவறுகள் அனைத்தும் இந்த 'அன்பின் நெருப்பில்' எரிக்கப்பட்டுவிட்டதாக உணர்ந்திருக்கிறார். ஏனெனில் கழுவாய்நிலை தீயை விட இந்த அன்பின் தீ அதிகமாகப் புடமிட்டு தூயதாக்கும் ஆற்றல் உடையது என்று தெரேசுவுக்குத் தெரியும். அவருடைய அர்ப்பணம் அவரை அனைத்து ஜேன்சனிசக் கொள்கை நிழலிலிருந்தும், அனைத்து அச்சங்களில் இருந்தும் நிலையாக அவரை விடுவித்து விட்டது. அவரது குழுச் சகோதரிகளில் சிலரை இன்னும் இவ்வச்சங்கள் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தன.

'ஒருவர் கடமைகள் தவறலாம்; தீமைகளில் விழலாம்; நம்பிக்கைத் துரோகம் புரியலாம் என்பதில் சந்தேகமில்லை! ஆனால் அன்பு எவ்வாறு எல்லாவற்றிலிருந்தும் நன்மைகளைப் பெறுவது என்பதை அறிந்திருக்கிறது. இயேசுவுக்கு விருப்பமில்லாத அனைத்தையும் சுட்டெரிக்கிறது. இயேசுவுக்கு இதயத்தில் ஆழ்ந்த அமைதியையும் பணிவையும் மட்டும் நிலைக்கச் செய்கிறது' எனத் தெரேசு தெளிவாக எடுத்துரைத்தார்.

உதாரணமாக அதுவரை அமைதிச் செப நேரங்களில் அவர் மீது வெற்றி கொண்டிருந்த தூக்கம் தற்போது அவருக்குத் தொல்லை எதுவும் கொடுப்பதில்லை! அருட்பணியாளர் யூஃப் அவர்களின் கண்டனங்களால் ஏற்படும் வறட்சியை எண்ணி அலைக்கழிக்கப்பட விரும்பவில்லை. 'என் இதய வறட்சியை எண்ணி அகமகிழ்வதை விட அதனை எனது ஆர்வம் இல்லாத மெய்ப்பற்றின்மையிலிருந்து வருவதாகக் கருத வேண்டும். கடந்த ஏழு ஆண்டுகளாகச் செப நேரத்திலும், நன்றிக் கூறல் நேரத்திலும் நான் தூங்கியதால் பாழாகி அழிந்து போயிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நான் அழியவில்லை! சிறு குழந்தைகள் தூங்கினாலும் சரி, விழித்திருந்தாலும் சரி; தம் பெற்றோரை மகிழ்விக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியும்' எனக் குழந்தை உள்ளதோடு தெரேசு தெரிவித்தார்.

'எனக்கு எவ்வித விருப்பங்களும் கிடையாது! தந்தை விண்ணகத்தில் இருக்கிறார். செலின் கார்மலில் இருக்கிறார். அவர் ஏங்கியிருந்த அருட் பணியாளர் சகோதரர் கிடைத்து விட்டார்! அறிவைக் கடந்த முறையில் இயேசு மீது அன்பு செலுத்துவது மட்டுமே எனது ஆவல், விருப்பம்; 'இப்போது என் பணி முழுமையுமே அன்பு செய்வதில் தான் அடங்கி யிருக்கின்றது.' (தூய சிலுவை யோவான்) என்று எழுதி தெரேசு முடிக்கின்றார்.



'இந்தக் கீழ்ப்படிதலின் பயிற்சி நூலை எழுதி முடித்த பிறகு தெரேசு தமது எதிர்காலத்தைப் பற்றித் தம்மையே கேட்டுக் கொண்டார். இச்சிறிய வெண்மலரின் கதை எவ்வாறு முடிவடையும்? விரைவில் அவர் இறந்து விடுவாரா? சைகோன் நகர் கார்மல் இல்லத்திற்குச் செல்வாரா? எனக்குத் தெரியவில்லை? ஆனால் இறைவனின் கருணை அவரை எப்போதும் தொடர்கின்றது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்! தற்கையளிப்பு மட்டுமே எனக்கு வழிகாட்டுகிறது' எனக் கூறி முடித்தார்.

பயிற்சி நூலின் 86 வது தாளில் தமக்கும் இயேசுவுக்குமுள்ள மரபுச் சின்னம் தாங்கிய மேலங்கியை மிகக் கவனத்துடன் ஓவியமாகத் தீட்டினார். அதன் கீழ் இயேசு தம் 'துணைவிக்கு'க் கொடுத்த அருளின் நாளினை அழகாகப் பொறித்தார். அதனைத் தொடர்ந்த பக்கத்தில் இந்த மரபுரிமைச் சின்ன மேலங்கியைப் பற்றி விளக்கம் எழுதப்பட்டுள்ளது. தூய சிலுவை யோவானின் நூலிலிருந்து எடுக்கப்பட்ட சொற்றொடர் இவை அனைத்தையும் ஒன்றாக இணைக்கிறது: 'அன்பு அன்பினால் மட்டுமே ஈடு செய்யப்படும்'.

அவருடைய பயிற்சி நூல் அன்பு என்ற வார்த்தையோடு நிறைவடைகிறது. 86 பக்கங்களில் அன்பு என்ற வார்த்தையை 96 முறை பயன்படுத்துகிறார்.

அன்பு என்கிற வார்த்தை மட்டுமே அவரது எழுதுகோலின் மையூற்றாய் இருந்தது; **அன்பே அவரது எழுத்து! வார்த்தை! உயிர்!**

### அங்கேயும் அரசியலா? (பிப்ரவரி முதல் மார்ச் 1896 வரை)

அருட்பணியாளர் தெலாத்ரோயெத்தின் மறைவுக்குப் பின் தூய ஜாக் ஆலயப் பங்கு அருட்பணியாளர் மோபஸ் (Maupas) கார்மலின் தலைமைத் தந்தையாக ஜனவரியில் பொறுப்பேற்றார். செலின் மற்றும் மூவொரு இறைவனின் மரியா உறுதிமொழி அளிப்பதற்கும், திரு உணவின் மரிய திருஉடை பெறுவதற்கும் உரிய நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அவையனைத்தும் இல்லத் தலைவி ஆக்னெசின் பணி பொறுப்புக் காலம் நிறைவு பெறும் 1896 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாளுக்கு முன்பே நடந்திருக்க வேண்டும். இதற்கிடையே எதிர்பாராத தடையொன்று எழுந்தது. புகுமுகத் தேர்வு நிலைப் பயிற்சி உருவாக்குநராக இருந்த தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் புதிய தலைமைத் தந்தையின் ஆலோசனைகளையும் மறுத்து, நடைபெறவிருந்த இரு சகோதரிகளின்

உறுதி மொழியளிப்பு விழாவினைத் தள்ளிப் போட விரும்பினார். அவ்வாறு அவர் செயல்படுவதற்கான காரணங்கள் தெளிவாகத் புரியவில்லை. தேர்தல் நெருங்கி வருகிறது. அவர் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இவ்விருவரின் உறுதிமொழியளிப்பினை ஏற்றக் கொள்ளமாட்டாரா? மேலும் ஒரு முக்கியமானப் பிரச்சினையும் இருந்தது. அருட்சகோதரி ஜெனிவியேவ் சைகோன் (Saigon) கார்மலுக்குச் செல்லும் வாய்ப்பையும் எதிர் பார்த்தார். இந்த எதிர்மறையான உதவியினால் மார்ட்டினின் குடும்பச் செல்வாக்கைக் குறைக்க ஆவல் கொண்டார். தற்போது அவர்கள், குழுவில் ஐந்தில் ஒரு பகுதியினராக இருந்தனர். எனவே, இரு குழுக்களாகப் பிரித்து ஒரு குழு



குழுப் பொதுப்பணி (19 ஏப்ரல் 1885)



தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கிற்கும் மற்றொன்று மார்ட்டின் குடும்பத்தினருக்கும் ஆதரவு அளிக்கும் ஆபத்தும் இருந்தது.

1886 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் மேகமூட்டமான ஒரு நாள், 15 கார்மல் அருட்சகோதரிகள் சலவை இடத்தில் தங்களது ஆடையைச் சலவை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது சகோதரி ஜெனிவியேவின் உறுதிமொழியளிப்பு பற்றிய பேச்சுத் தொடங்கியது. எப்போதும் மார்ட்டின் வம்சதிற்கு எதிராகப் பேசும் சகோதரி யேசுவின் ஏமே "அவரைச் சோதனை செய்யும் எல்லா உரிமையும் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கிற்கு உண்டு. பின் ஏன் அவரது முடிவைப் பற்றி வியப்படைய வேண்டும்?' என்று கேட்டார். அப்போது உறுதியான குரல் ஒன்று அவர்கள் நடுவினின்று எழுந்தது. "ஒருவருக்கு ஒருசில சோதனைகளை மற்றவர் மீது திணிப்பதற்கு உரிமை கிடையாது." மனம் கலங்கித் தெரேசுதான் இந்த வார்த்தையைக் கூறியிருந்தார்.

அதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்துவதல்ல தெரேசின் குறிக்கோள். மாறாக உண்மையை நிலைநாட்ட வேண்டும். தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் செய்தது தவறு! உண்மைக்குப் புறம்பான செயல்! எனவே அவருடைய தவறான செயலை சுட்டி காட்டுவது தமது கடமையே! என எண்ணினார்.

பல நாள்கள் கழித்து சகோதரி ஜெனிவியேவ் கன்னியர்களது குழுக் கூட்டத்தின் முன் வந்தார். சபை மரபுகளைப் பற்றிச் சகோதரி மரி தே கொன்சாக் தமக்குச் சாதகமான விளக்கம் கொடுத்தார். இல்லத் தலைவி ஆக்னெசு வாக்களிப்பதைத் தடுத்து நிறுத்திவிட்டார். இல்லத் தலைவி ஆக்னெசு தேர்தல் முடிவை அறியக் கதவின் பின்புறமாகக் காத்து நின்றார். மற்ற மார்ட்டின் சகோதரிகள் மூவர் மட்டும் முடிவைக் கேட்க உள்ளே சென்றனர். 'சகோதரி ஜெனிவியேவ் உறுதிமொழியளிக்க ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தார்; ஆனால் சகோதரி மூவொரு இறைவனின் மரியாவின் உறுதிமொழியளிப்பு தள்ளிப் போடப்பட்டதாக அப்போது அறிய வந்தனர். ஒரு வகையான சமரசம் செய்யப்பட்டிருந்தது. ஒரு மாதத்திற்குத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருந்தது. இல்லத் தலைவி ஆக்னெசு பணிக் காலத்திலேயே தம் சகோதரியின் உறுதி மொழியளிப்பும், மாமா மகளின் திருவுடை பெறும் நிகழ்வும் நடைபெறும். தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் இல்லத் தலைவியாகத் தேர்வு பெற்றால் சகோதரி மூவொரு இறைவனின் மரியாவின் உறுதி மொழியளிப்பை ஏற்பார் என்ற நிலை உருவானது.

இந்த மூன்று சகோதரிகளின் எதிர்காலம் குறித்துத் தெரேசு அதிக அக்கறையும், பதற்றமும் கொண்டது இயற்கையே. அதற்கான காரணங்களும் புரிதலுக்கு எளிதே. அதிலும் குறிப்பாகச் செலின் மீது அவரது கவனம் அதிகமாகியது. காரணம் இல்லத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த சதியாலோசனை செயல்களால் செலின் மிகவும் மனம் வேதனையடைந்திருந்தார். தெரேசு அவருக்கு உருவகம் நிறைந்த நீண்டதொரு கடிதம் எழுதினார். அதில் அவருடைய பேரிடர்கள் உருவகப்படுத்தப் பட்டிருந்தன. அதற்கான விளக்கங்களை ஆட்டுத் தோலின் துண்டு ஒன்றில் எழுதி அனுப்பினார். காலம் சென்ற தூய்மை நிறை தலைமைச் சகோதரி ஜெனிவியேவ் அவர்கள் திருவுருவப்படம் ஒன்றையும் அனுப்பிக் கொடுத்தார். இவையனைத்தும் கசப்பான பழைய நிகழ்வுகளை மறந்து அனைத்தையும் உள் அமைதியினால் கடந்து வரச் செலினுக்கு உதவி புரிந்தன.

பிப்ரவரி 24 ஆம் நாள் முதல் உறுதி மொழியளிப்பு விழா நடந்தேறியது. அதன் பின்னர் சகோதரி தூய தெரேசுவின், ஜெனிவியெவ் மார்ச் 17 ஆம் நாள் கறுப்புத் தலையணி (Veil) அணிந்தார். அவருடைய மாமா மகள் சகோதரி திருவுணவின் மரியா திருவுடை பெற்றார். பேராயர் யுகோனின் தலைமையில் நடைபெற்ற இருபெரும் சடங்கைப் பற்றி உருக்கமாக மாமா இசிதோர் நோர்மண்டியில் (La Normand) விளக்கிக் கூறினார். இந்நிகழ்ச்சியின் நினைவாகப் பல புகைப்படங்கள் இல்லத்தின் உட்பகுதியில் எடுக்கப் பட்டுப் பாதுகாக்கப்பட்டன.

இவ்வாறு லேயோனியைத் தவிர மற்ற எல்லாப் பெண்களும் கார்மல் சபைக்கு 'அடியோடு இழுத்துவரப் பெற்றார்கள்'. இதுவே தந்தை மார்ட்டின் முன்பு அடிக்கடி பயன்படுத்தும் சொற்றொடர்.

## அரசியல் . . . இன்னும் வளரும் (21 மார்ச் 1896)

மார்ச் திங்கள் 21 ஆம் நாள் சனிக்கிழமை திருப்பாடுகளின் ஞாயிற்றுக் கிழமைக்கு முன்தினம்; மாலைப் பொழுது! லிசியூ கார்மலில் பேரமைதி நிலவியது. எதிர்பார்ப்புத் தென்றல் நிழலிட்டது. தங்களது புதிய இல்லத் தலைவியைத் தேர்ந்தெடுப்பதற்கான தயாரிப்பில் அனைவரும் முனைந்திருந்தனர்.

1893 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் தொடங்கி இந்நாள் வரை மூன்று கன்னியர்கள் குழுவை விட்டுப் பிரிந்து சென்றுள்ளனர். ஒருவர் விண்ணகம் எய்தினார். மற்றொருவர் சைகோனில் உள்ள கார்மல் இல்லத்திற்குச் சென்றார். இன்னும் ஒருவர் கயென் நகரில் உள்ள மனநோய் இல்லத்திற்கு



அனுப்பப்பட்டிருந்தார். மூன்று இளைய சகோதரிகள் சேர்க்கப்பட்டி ருந்தனர். அன்று இருபத்து நான்கு கன்னியருள் குழுக் கூட்ட உறுப்பினர் சகோதரிகள் பதினாறு பேரும் செப அறையில் ஒன்று கூடினர். மற்றச் சகோதரிகள் மன்றாடினர். நேரம் கடந்து கொண்டே சென்றது. தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக், தலைமைச் சகோதரி மரியா ஆக்னெசுக்கு மிடையே கடுமையான போட்டி நிலவியது. ஏறக்குறைய ஏழு சுற்று வாக்கெடுப்புகள் நிகழ்ந்தன. இறுதியாக 62 வயது நிரம்பிய மூத்த தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் புதிய தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சகோதரி வானதூதர்களின் மரியா உதவி இல்லத் தலைவியாகத் தொடர்ந்தார். தலைமைச் சகோதரி ஆக்னெசு, சகோதரி ரஃபேல் அவர்களோடு இணைந்து ஆலோசனைக் குழுவின் உறுப்பினரானார். இறுதியாக இல்ல மணி ஒலித்தது. காத்திருந்த எட்டுச் சகோதரிகளும் அழைக்கப்பட்டனர். சகோதரி தெரேசு செப அறைக்குள் நுழையும் போதே, தலைமைச் சகோதரி மரியா தே கொன்சாக் இல்லத் தலைவியின் இருக்கையில் அமர்ந்திருப்பதைக் கண்டார். வியப்பினால் அதிர்ச்சியுற்றவராக நின்றார். எனினும் விரைவில் தேற்றிக் கொண்டார்.

நடந்து முடிந்த நிகழ்வுகளால் பாதிப்படைந்திருந்த "புதிய இல்லத் தலைவி" மாற்றுப் பொறுப்பேற்றல் மரபைக் கடைப்பிடிக்காமல் மிக மிகக் கவனமுடன் அதனைத் தவிர்த்தார். இல்லத் தலைவியே, புகுமுகத் துறவு நிலைப் பயிற்சி உருவாக்குநராகவும் இருக்கலாம் எனச் சட்டம் கை கொடுக்க, அதை இறுக்கமாகப் பற்றிக் கொண்டார் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்! எனவே தலைமைச் சகோதரி ஆக்னெசு புகுமுகத் துறவுநிலை பயிற்சி உருவாக்குநராகப் பொறுப்பேற்க இயலவில்லை. ஆனால் புதிய இல்லத் தலைவி, சகோதரி குழந்தை இயேசுவின் தெரெசுவைப் புகுமுகத் துறவுநிலை உதவிப் பயிற்சி உருவாக்குநராக நியமித்தார். கீழ்ப்படிதலினால் இக்கடினமான பணியை, இக்கட்டான சூழலில் ஏற்றுக் கொண்டார் தெரேசு.

## குருவாகும் சீடர் (மார்ச் 1896)

தெரேசுவின் கார்மல் வாழ்வில் புது விடியல் விடிந்தது. தமது கையளிப்பு வாழ்வை இப்பொழுதே முழுமையாக வாழ வேண்டும். இல்லை யேல் வாய்ப்புகள் கிடைப்பது அரிது என்பதை உணர்ந்து கொண்டார். எந்தவித உயர்பதவி நிலையுமின்றித் தீவிரப் பணியை நிறைவேற்றும் பொறுப்பு அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. அவர் இன்னும் புகுமுகத் துறவு நிலையிலே தான் இருந்தார். பயிற்சி பெறும் மற்றவர்கள் அனைவரும்

இதனை நன்கு அறிந்திருந்தனர். எவ்வாறு இந்த ஐந்து மகளிரையும், உண்மை இறை உறவுநிலை அடைந்தவர்களாக மாற்றுவது? அவர்களில் நால்வர் அவரை விட வயதில் மூத்தவர்கள். இப்பணி அவருடைய திறமைக்கு அப்பாற்பட்டது. அவருடைய சகோதரி செலின், மற்றும் மாமா மகள் மரியாவும் தெரேசை விட்டுச் சற்று விலகிச் சென்றனர். அவர்களுக்கு நல்லெண்ணம் இருந்தது. தெரேசுவின் புன்னகையை ஏற்றுக் கொண்டனர்; என்றாலும் உறுதியான அதிகாரத்தை ஏற்க மறுத்தனர். அவரை மிகக் கண்டிப்பானவராக அவர்கள் கருதினர். தமது மகிழ்ச்சியற்ற, அன்பற்ற குழந்தைப் பருவத்தின் காரணமாகச் சகோதரி மரிய மக்தலேனும் அச்ச உணர்வுடன் பின்வாங்கும் குணத்தில் நிலைத்து நின்றார். மாற்று மனநிலை கொண்ட இல்லத் தலைவி எந்த நேரத்தில் என்ன முடிவெடுப்பார் என்பது யாருக்கும் தெரியாமலிருந்தது. இன்று தெரேசை உதவிப் பயிற்சி உருவாக்குநராக நியமித்த அவர் நாளை அப்பணியிலிருந்து அவரை விலக்கவும் கூடும். எந்தவிதமான திருச்சபைச் சட்ட அடிப்படையிலான அதிகாரமும் தெரேசுக்கு வழங்கப்படவில்லை. சகோதரி தெரேசுக்கு ஒரேயொரு நம்பிக்கை மட்டும் இருந்தது. ஆவியின் ஆற்றல் அவரிலும், அவருடைய மந்தையின் ஆடுகளிலும் செயலாற்றியது.

தெரேசு எதையும் சொந்த முயற்சியால் மட்டும் செய்ய இயலாது என்பதை உணர்ந்தவராய் இறைவனிடம் மன்றாடினார்: 'இறைவா! நான் சிறியவள். உமது பிள்ளைகளுக்கு ஊட்ட உணவளிப்பது என்னால் இயலாத காரியம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்றவைகளை என் வழியாக நீர் வழங்க விரும்பினால் என் சிறு கரத்தை நிரப்பியருளும்! உம் கரங்களைக் கைவிடாது, உம்மிடமிருந்து என் சிந்தனைகளைச் சிதறவிடாமலும் என் கண்கள் கவனமிழக்காமலும் ஊட்ட உணவுக்காக என்னைத் தேடி வந்து கேட்குமுன் அனைத்து ஆன்மாக்களுக்கும் உம் அருட்கொடைகளை வாரி வழங்குவேன்.' இந்த மனநிலை மட்டுமே அவருக்கு அமைதி தந்தது. அதிலிருந்தே இடர் நிறைந்த பணியினை இறுதி வரை சிறப்பாக நிறைவேற்றும் மன்றாட்டும் தியாகமும் பிறக்கின்றன என உறுதியாக அவரால் கூற முடிந்தது.

ஒவ்வொரு நாளும் மதியம் 2.30 மணிக்குப் புதுமுகத் துறவு நிலைப்பயிற்சி பெறுவோரை ஒன்றுக் கூட்டி சுமார் அரைமணி நேரம் சந்தித்துப் பேசினார். அந்த நேரத்தில் சபையின் மரபுகள், பழக்கங்கள், ஒழுங்குகள் போன்றவற்றை விளக்கிக் கூறினார். அவர்கள் வினவும் வினாக்களுக்கு விடையளிப்பதிலும் அவர்களது குற்றங்களைத் திருத்துவதிலும் அக்கறை எடுத்துக் கொண்டார். இந்தச் சந்திப்பு உயிரோட்ட



முள்ளதாக இருந்தது. இளம் பயிற்சி உருவாக்குநர் தெரேசு சிறு கதைகள் வழியாகவும், தமது கருத்துக்களை அவர்களது உள்ளத்தில் பதித்ததால் யாரும் சலிப்படையவில்லை. செலினும், மூவொரு இறைவனின் மரியாவும் தங்களது குறிப்பேடுகளில் இந்தக் கல்வி முறைகளைக் குறித்து வைத்துக் கொண்டனர். மூவொரு இறைவனின் அன்பினை உணர்த்துவதற்காகப் பல்வண்ணக் காட்சிக் கருவியை உருவகமாகப் பயன்படுத்தினார். அன்பு வங்கியை விளக்க உயர்ந்த கம்பத்தை உருவகப்படுத்தினார். குழுவில் பிறரால் கவனிக்கப்படாமல் வாழும் சகோதரிகளைச் சித்திரிக்க சாதாரணமாகக் காணப்படும் சிறுபேரிக்காய்களைச் சுட்டிக் காட்டினார். கோழியும், குஞ்சும் தந்தையின் அன்பை எடுத்தியம்புவதாகக் கூறினார். பணக்காரியும் அவருடைய சகோதரனும், மரியா கண்ணீர் சிந்திய கடற்சங்கு என இன்னும் பல உவமைகள், உருவகங்கள், உதாரணங்களைத் தெரேசு பயன்படுத்தினார். எல்லாப் பொருட்களையும் தமது கருத்தை விளக்குவதற்காகத் தெரேசு பயன்படுத்திக் கொண்டார். ஒருமுறை மூவொரு இறைவனின் மரியா காந்தக் கவர்ச்சி பற்றி அவளுக்குத் தெரிந்த உண்மைகளைக் கூறினார். மறுநாளே தெரேசு அவரிடம் 'நான் இயேசுவினால் ஈர்க்கப்பட விரும்புகிறேன். ஆம்! முற்றிலும் தெய்வீகமான, ஆவியால் வழி நடத்தப்பட்ட செயல்களை மட்டும் நான் செயல்படுத்தும் பொருட்டு, என் மனத்திறன்களையெல்லாம் அவர் ஆட்கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன்' எனக் கூறினார்.

எந்தவிதக் கற்பித்தல் பயிற்சியையும் தெரேசு யாரிடமிருந்தும் பெறவில்லை. ஆனால் பிறரன்பின் அடிப்படையில் அவருடைய உள்ளுணர்வு கண்டு பிடித்த கல்வி முறை யாராலும் நம்ப இயலாத ஒன்றாய் இருந்தது. அவருடன் வாழும் சகோதரிகள் அவரிடம் எதார்த்தமாகப் பேச முடிந்ததை அவர் உணர்ந்திருந்தார். 'புகுமுகத்துறவு நிலைப் பயிற்சி பெறுவோருக்கு எல்லாம் அனுமதிக்கப்பட்டிருந்தது எனினும் அவர்கள் சில வேளைகளில் கசப்பு நிறைந்த உணவை அவருக்குப் படைக்கத் தயங்கவில்லை. ஆனால் தெரேசு "இனிப்பை விடக் கசப்பையே விரும்புகிறேன்" என்று அவர்களிடமே கூறினார்.

தெரேசுவைக் கண்டிப்பான பயிற்றுநராகக் கண்டனர். இதனை அவரும் அறிந்திருந்தார். எனினும் தம்மை மாற்றிக் கொள்ளவில்லை. தமது தோழியர் குழாம் நலிவடையாமல் இருக்க அதனை அதிகம் அன்பு செலுத்தினார். "நான் அன்பு செய்யப்படவில்லையென்றால், அது மிகவும் மோசம்! நான் உண்மைகள் அனைத்தையும் கூறுகின்றேன். யாராவது அதனை அறிந்து கொள்ள விரும்பவில்லையென்றால் அவர்கள் என்னைக் காண்பதற்கு

வராமல் இருந்து கொள்ளட்டும்" என உறுதியாகக் கூறினார்.

அனைத்திற்கும் மேலாக அவருக்குப் பெரும் வெற்றியை அளித்துக் கொண்டிருந்த "சிறுவழியை" அவர்களுக்கு கற்பித்தார். தந்தையுடன் அன்பும் நம்பிக்கையும் கொள்ளும் வழியே அந்தச் சிறுவழி! நற்செய்தியின் இதயமாக இருக்கும் இந்தச் சிறுவழியைப் பொறுத்தவரை அவர் ஆன்மீக வாழ்வின் உண்மை ஆசானாகத் தம்மையே வெளிப்படுத்தினார். தெரேசு இன்றியமையாத மையக் கருவை எப்படி அடைவது? என்பதை எப்பொழுதும் அவர் அறிந்திருந்தார். குழுவில் சில வேளைகளில் கடைப்பிடிக்கப்பட்ட பழைய மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட பக்தி முறைகளை வெறுத்து ஒதுக்கினார்.

தெரேசிடம் ஒவ்வொரு கன்னிகைக்கும் ஏற்ற முறையில் தம்மையே மாற்றிக் கொள்ளும் 'நெகிழ்வுத் திறன்' இருந்தது. அருட் பணியாளர் பிஷோன் முன்பு ஒரு முறை 'மனித முகங்களுக்கிடையே காணும் வேறுபாடுகள் மிக அதிகமே எனத் தெரேசிடம் கூறினார். 'அது முற்றிலும் உண்மையே' எனத் தெரேசு தற்போது உணர்ந்தார். அனைவரிடமும் ஒரே விதத்தில் நடந்து கொள்வது இயலாது: "ஒரு சிலரைப் பிடரியைப் பிடித்து நான் அழைத்துச் செல்ல வேண்டும்! வேறு சிலரை இறக்கைகளின் முனையைப் பிடித்து அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது" எனத் தலைமைச் சகோதரி ஆக்னெசிடம் வெளிப்படுத்தினார். இளம் கன்னிகை மூவொரு இறைவனின் மரியாவுக்குச் சற்று ஓய்வுத் தேவைப்பட்டது. 'அவர் மேல் அறைக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளட்டும். ஆனால் செலின்! நரம்புத் தளர்ச்சியுடைய தலைமைச் சகோதரி யேசுவின் இதய ஹெர்மான்ஸ் (Hermance) அவர்களைத் தவிர்க்கக் கூடாது. அவ்வாறு செல்வது துறவற வாழ்வைத் தெரிந்து கொண்ட செலின் செல்லும் வழியல்ல' எனத் தெளிவாக எடுத்துரைத்தார். வேறு சிலர் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கை "ஓநாய்" என அழைத்தனர். அப்படி அழைப்பவர் அழிவையே காண்பர் என எச்சரித்தார்.

சராசரியாக இருபத்து ஐந்தரை வயதைக் கொண்ட அந்த சிறுகுழுவில் தெரேசு தாயாகவும், சகோதரியாகவும் திகழ்ந்தார். 'இளமை இளமையைக் கவருகின்றது? மனமகிழ்ச்சி நேரங்களில் தெரேசு நகைச்சுவை பாவனை செய்யும் போது சிரிப்பொலிகள் வெடித்து முழங்கின. மடத்தின் அடைப்புப் பகுதியில் ஒரு முறை திருடன் நுழைந்த போது அவனை விரட்டுவதில் அனைவருமே ஒருங்கிணைந்து வீர அணியாகவே திரண்டனர்.



இந்தப் பயிற்சிப் பணியானது துணை நிலையிலிருந்தாலும், மனித இயல்புகளைப் பற்றி அதிகம் கற்றுக் கொடுத்தது. அவரது ஞானம், அனுபவத்தின் வெளிப்பாடாக அமைந்தது- மிதமிஞ்சிய தன்னொறுத்தல்கள்; ஒருவருடைய பாவத்தின் கழுவாய்க்காகத் தம்மையே துன்புறுத்திக் கொள்ள நடைமுறையில் பயன்படுத்தி வந்த கருவிகள் போன்றவற்றின் மீது ஒரு சில சகோதரிகள் அதிகப் பற்றுதல் காட்டினர். ஆனால் தெரேசு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை! தமது மன விருப்பத்தையும் தெரிவிக்கவில்லை. அவரது துறவற வாழ்வின் தொடக்க நாள்களில் இப்படிப்பட்ட கடினமான செயல்களில் ஈடுபட அவருடைய தாராள குணம் தூண்டியிருக்கலாம். 1896 ஆம் ஆண்டு ஏப்ரலில் ஒரு சிறிய இரும்புச் சிலுவையைக் கூட அணிந்தார். ஆனால் விரைவிலேயே அப்பழக்கத்தைக் கைவிட்டு விட்டார். ஏனெனில் இத்தகைய கடினமான துன்பச் செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வோர், அன்றாட வாழ்க்கையின் நிறைவற்றவர்களாகச் செயல்படுபவதைக் கவனித்தார். மேலும் அத்தகைய உடல் ஒறுத்தல் செயல்களில் ஈடுபடுவோரிடையே தன் அன்புத்தன்மைகள் மேலோங்கி இருப்பதையும் காண முடிந்தது. பிறர் அன்பு பணிகளுடன் இணைத்து ஒப்பிட்டுப் பார்க்கும் போது இத்தகைய செயல்பாடுகள் மதிப்பற்றவை எனக் கண்டார். பிறரைத் தெரேசு தீர்ப்பிடவில்லை! ஆனால் இதுவல்ல அவரது 'வழி'! புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி பெறுவோரின் கவனத்தை இந்தச் சிறுவழியை நோக்கித் திருப்பினார். பலரையும் இவ்வழி நோக்கி அழைத்து வந்தார். கீழ்க்காணும் தூய யோவானின் வார்த்தைகளை அடிக்கடி மேற்கோள் காட்டினார். "என் தந்தை வாழும் இடத்தில் உறை விடங்கள் பல உள்ளன" (யோவா 14 : 2)

தெரேசுவினுடைய அத்தகைய ஞானம் பிற்காலத்தில் அவர் சகோதரிகளை இவ்வாறு கூறத் தூண்டியது: 'அவர் இப்போது வாழ்ந்திருந்தால் ஒரு சிறந்த இல்லத் தலைவியாக விளங்கியிருக்க வேண்டும். சில வேளைகளில் புகுமுகத்துறவுப் பயிற்சி பெறும் சகோதரிகள் நம்பிக்கை கொண்டது போல ஆன்மாக்களின் அசைவுகளை அறியும் அளவுக்கு ஆன்மீக இயல்பூக்கம் கொண்டிருந்தார். இத்தகைய நம்பிக்கைகளை அவர் எதிர்த்தாலும் நல்லவற்றை அறிந்து கொள்ளத் தூய ஆவி அவருக்கு ஆற்றல் அளித்து உதவி செய்தார் என்பதை ஏற்றுக் கொண்டார்?

இந்த முக்கியமான கடமையோடு சகோதரி தெரேசு ஆலய உதவிப் பணியாளராக, சகோதரி வான தூதர்களின் மரியாவுக்கு உதவி செய்தார்; வண்ணங்கள் தீட்டினார்; சலவை அறையில் சகோதரி தூய வளனின்

மரியாவுக்கு உதவி புரிந்தார். தமது ஒன்பது வயதிலே அநாதையான இந்த 38 வயது சகோதரியைக் கண்டு குழுவே அஞ்சியது. சினம் கொண்டு அவர் பேசும் கடின வார்த்தைகளால் அவர் தனிமையாக்கப்பட்டார். ஒருவரும் அவரோடு இணைந்து பணிபுரிவதை விரும்பவில்லை. தெரேசு அவரோடு இணைந்து பணிபுரிய முன் வந்தார்.

இந்தக் கடமை மூலம்தான் சகோதரிகளது உள்ளன்பின் உண்மை அர்த்தத்தை அவர் கண்டறிய வேண்டியிருந்தது. இயேசு தம் சீடர்களிடம் அன்பு செலுத்தியது போல் நாமும் அன்பு செலுத்த வேண்டும் என்பதை அதுவரை தெரேசு முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. ஒருவரும் இந்த அன்பிலிருந்து விலகிச் சென்றுவிடக்கூடாது; சகோதரி தூய வளனின் மரியாவும் தவிர்க்கக் கூடாது என்ற எண்ணத்தில் தெரேசு தமது புன்னகையாலும் நட்புறவை வெளிப்படுத்தும் வார்த்தைகளாலும் அவரது தனிமையினின்று விடுவித்தார்.

1895-96 ஆம் ஆண்டின் குளிர்காலம் மிகக் கடுமையானதாகவும், நீண்டதாகவும் இருந்தது. அதன் இறுதியில் நோன்புக் காலம் தொடங்கியது. எவ்வளவு கடுமையாக நோன்பு இருக்க முடியுமோ அந்த அளவுக்கு உண்ணா நோன்பு இருக்க அனுமதி பெற்றார். இத்தகைய உடல் நலனையும், வலிமையையும் எப்போதும் உணர்ந்ததில்லையெனத் தெரேசு கூறினார்.

## குருதி சிந்தும் உதடுகள் (3 - 4 ஏப்ரல் 1896)

1896 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் மூன்றாம் நாள் புனித வியாழன் இரவு தெரேசு நள்ளிரவு வரை தொடர்ந்து விழித்திருந்து செபிக்கும் எண்ணத்தில் செப அறையிலே அமர்ந்திருந்தார். செபம் முடிந்த பின் படுக்கையறையில் சாய்ந்தது தான் தாமதம் அவருடைய உதடுகளில் நீர்ச்சுனைக் குமிழ் போன்று ஏதோ ஒன்று வருவதை உணர்ந்தார். கைக்குட்டையை உதடுகளில் வைத்தார். விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. என்ன உதடுகளிலிருந்து வந்த கொண்டிருந்து என்பதை அறிய அவர் முயற்சி செய்யவில்லை. அது குருதியாக இருந்தால்? விடியப் போகின்ற திருப்பாடுகளின் வெள்ளியன்று இறக்கப் போகிறார் என்ற அச்சம் துளியுமில்லை. மாறாக அவர் மகிழ்ச்சியடைந்தார். ஏனெனில் அவர் எப்போதும் இயேசுவைப் போலவே இருக்க விரும்பினார். அப்படியே அவர் அயர்ந்து தூங்கினார். விடியற்காலை 5.45 மணிக்கு மரக்கட்டை ஓசை அவரை எழுப்பியது. திறந்திருந்த பாதி ஜன்னல் வழியே அறையை ஊடுருவிய வெளிச்சத்தில் தமது கைக்குட்டையைப் பார்த்தார். குருதியினால் நனைந்திருந்தது. அவருடைய அன்பர் வருகையைப் பற்றி அறிவிக்கிறார். அவர் வெகு தொலைவில் இல்லை! அவருக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணமாக்கிய பின் அவருக்காக அச்சம் கொள்வதில் அர்த்தம் உண்டா? என எண்ணி மகிழ்ந்தார்.



ஒவ்வொரு திருப்பாடுகளின் வெள்ளியன்றும் காலை வழிபாட்டிற்குச் சகோதரிகளின் கருணைப் பண்பு பற்றி இல்லத் தலைவி உரை நிகழ்த்துவார். கார்மல் சகோதரிகள் உடன் வாழும் சகோதரிகள் ஒவ்வொருவரிடமும் சகோதரிகள் அன்புக்கு எதிராகச் செய்த அனைத்துச் செயல்களுக்கும் மன்னிப்புக் கோருவர். தெரேசுவும் ஒவ்வொருவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டே வந்தார். தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கின் அருகில் வந்த போது அவரைக் கட்டி அணைத்து முன்தினம் இரவு தமக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறினார்: 'நான் வேதனையில் தவிக்கவில்லை! எனவே என் மேல் தயவு செய்து தனிக்கவனம் செலுத்த வேண்டாம்!' என்று முழந்தாற்படியிட்டு அவரிடம் வேண்டினார். அவர் கூறியதன் உள்ளார்ந்த அர்த்தத்தை உண்மையிலேயே உணராத இல்லத் தலைவி சம்மதம் தெரிவித்தார். தெரேசு தொடர்ந்து நோன்பு முறைகளைக் கடைப்பிடித்தார். அன்றாடப் பணிகளையும் வழக்கம் போல் தொடர்ந்தார். புகைபோக்கியின் ஏணிப்படியில் நின்று கொண்டு பால்கனியில் இருந்த கண்ணாடிக் கதவுகளைத் தூய்மை செய்தார். கார்மல் சபையின் கடும் நோன்பு ஒருபோதும் அவருக்கு இவ்வளவு இனிமையானதாக இருந்ததில்லை. "விண்ணகத்திற்குச் செல்லப்போகும் நம்பிக்கை என்னை மகிழ்ச்சியில் தொடர்ந்து பயணம் செய்யத் தூண்டியது" என்றார்.

உதவி மருத்துவப் பணியாளராக இருந்த சகோதரி மூவொரு இறைவனின் மரியாவுக்கு இந்த இரகசியம் தெரிய வந்தது. எனவே அவர் தெரேசு பணி செய்வதை வன்மையாகக் கண்டித்தார். இல்லத் தலைவியிடம் அழுது, மோசமான உடல்நிலையிலிருக்கும் தெரேசை இத்தகைய பணிகளில் ஈடுபடுத்த வேண்டாம்! வேறு யாராவது ஒருவரிடம் இப்பணிகளைச் செய்யச் சொல்லுங்கள்" என்று வேண்டிக் கொண்டார். ஆனால் பலன் ஒன்றுமில்லை; ஏனெனில் தலைமைச் சகோதரி ஆக்னெசுக்கு இதைப்பற்றி எதுவும் தெரியாது.

மீண்டும் இரவு வந்தது. முதல் நாள் இரவு நிகழ்ந்தது போலவே செந்நிறக் குருதி பெருக்கெடுத்தது. இந்தமுறை ஐயத்திற்கு இடமே இல்லை. அந்நேரத்தில் சகோதரி தூயவளனின் மரியாவுக்குத் தெரேசு எழுதிய சில கவிதை வரிகள் அவரின் உள் ஏக்கங்களைப் படம் பிடித்துக் காட்டின:

அன்பே! சுடரும் நிலக்கரியே!
என் இதயத்துள் ஒளிர்ந்திடுக
நான் அழைக்கும் போது வந்துவிடு
அருகில் வந்தென்னை விழுங்கிவிடு!
உனது கனல்கள் என்னை நெருக்குகின்றன
களைப்பின்றி என் மனம் ஏங்குகின்றது
ஓ தெய்வீகத் தீப்பிழம்பே!
உன்னில் என்னை இழந்துவிடச் செய்.

அவருடைய மன்றாட்டு கேட்கப்படும் காலம் அண்மையிலிருந்தது. அவரது நம்பிக்கை உயிருள்ளது! தெளிவானது! அவரது எண்ணம் விண்ணக மகிழ்ச்சியே!

ஆனால் இந்த இரண்டாவது எச்சரிக்கை, இல்லத் தலைவியையும் குறிப்பாக மருத்துவப் பணியாளர்களையும் வருத்தத்திற்குள்ளாக்கியது. மருத்துவர் நீல் உடனடியாக வருகை தந்து தெரேசைப் பரிசோதித்தார். பின்னர் சில கேள்விகளை அவரிடம் கேட்டார். அப்போது நோன்பு காலத்தில் தினமும் மாலை நேரங்களில் அதிகமான பசியுற்றதாகத் தெரேசு கூறினார். கழுத்துப்பகுதியில் காணப்பட்ட சுரப்பிக் கட்டி அவரது குன்றிய உடல்நிலையைச் சுட்டிக் காட்டியது. நோயுற்ற சகோதரிகள் திருவுணவு பெற அமைக்கப்பட்ட கம்பிகளின் சிறிய திறப்பு வழியாகத் தெரேசு தம் தலையை நீட்ட மருத்துவர் அவரைப் பரிசோதித்தார். தொண்டையில் உள்ள குருதி நாளம் பாதிக்கப்பட்டதே குருதி வெளியாகக் காரணம் என நினைத்தார். மருந்துகள் குறிக்கப்பட்டன. சிறிய சிட்டிகையினால் மருந்து எண்ணெய் கொடுக்கப்பட வேண்டும்; தொண்டையின் மீது மருந்து தெளிக்கப்பட்டு கற்பூரத் தைலத்தால் தடவப்பட வேண்டும் எனக் கூறினார். இந்த மருத்துவ உதவிகள் தமக்கு முழுமையாகக் குணமாக்கும் என்கிற மாயையில் தெரேசு இருக்கவில்லை. அவருடைய மகிழ்ச்சி நிலைத்தது; அவரது இதயம் தேடும் இனியவரைச் சந்திக்க அவர் காத்திருந்தார்.

# 10

## ஆன்மீக இருள் அழைப்பின் பிறப்பு

(ஏப்ரல் 1896 முதல் ஏப்ரல் 1897 வரை)

*"இது விண்ணைத் தொடும் வரை தொடரும் ஒரு சுவர்;*
*அனைத்தும் மறைந்தே போய்விட்டன".*
*"எனது அழைப்பை இறுதியில் நான் கண்டு கொண்டேன்;*
*அன்பே என் அழைப்பு"*

### வெறுமை விழாக் கண்ட இரவு (ஏப்ரல் 1896)

எதிர்பாராத துன்பம் ஒன்று தெரேசுவிடம் சொந்தம் கொண்டாடத் தொடங்கியது. முன்னறிவிப்பு எதுவுமின்றித் திடீரென அவரது மகிழ்ச்சி மறைந்தே போய்விட்டது. ஒளிமயமான பாஸ்கு விழாவின் போது இருள் நிறைந்த ஆன்மீக அனுபவத்தில் அடியெடுத்து வைத்தார். விரைவில் விண்ணகம் செல்ல வேண்டும் என்பதே அவரது விருப்பம். 'விண்ணகம் என்றால் இயேசுதான்' என்று தெரேசு எழுதியிருந்தார். ஆனால் தம்மில் நம்பிக்கையின்மை தலை தூக்கி நிற்பதையும் உணர்ந்தார். "இருளிலே' முன்னேறத் தொடங்கினார்; 'ஆன்மீக இருளிலே' பயணம் தொடர்ந்தது; 'குகைப் பாதையிலே' தொடர்ந்து சென்றார். விண்ணைத் தொடும் சுவர் ஒன்றைச் சந்தித்தார். 'அன்பினால் மரணிக்கும்' எண்ணங்கள் பயங்கரமான உள்மனக் குரல்களாய் அவரிடத்தில் உந்துதல் செய்தன.

அவரது ஆசைகள், அவர் கண்டுபிடித்த "சிறிய வழி", அவரது தற்கையளிப்பு, அவரது முழுநிறை ஆன்மீக வாழ்வு அனைத்தும் மாயை என்று அக்குரல் எடுத்துரைப்பதைக் கேட்டார். ஒரேயொரு உண்மை மட்டும் தெளிவாயிற்று. வெறுமைக்காக, இளமையிலேயே இவ்வுலகப் பயணத்தை முடிக்கப் போகின்றார்.

"தீயவர்களின் குரலைத் தனதாக்கிக் கொண்டு இருள் என்னிடம் ஏளனமாகக் கூறியது: 'நீர் ஒளியைப் பற்றி, இனிய நறுமணப் பொருட்களின் வாசம் கொண்ட நாட்டைப் பற்றிக் கனவு காண்கின்றீர். இந்த வியப்புக் குரியவை அனைத்தையும் படைத்தவரை உமது நிறை உடைமையாக்கிக் கொள்வதைப் பற்றிக் கனவு காண்கின்றீர். உம்மைச் சூழ்ந்துள்ள பனித் திரையை விட்டு ஒருநாள் அகன்று செல்வாய் என்பது உமது நம்பிக்கை! கனவு காண்; கனவு கண்டுகொண்டேயிரும்; உம் எதிர்பார்ப்பை ஏமாற்ற மாக்கி வெறுமையான இரவை, கொடுமையான இரவை வழங்கப்போகும் மரணத்தில் மகிழ்ச்சி கொண்டிரு!"

பதினைந்து திங்களுக்குப்பின் தெரேசு இந்த எழுத்து வடிவ வெளிப்பாட்டைத் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கிடம் கொடுத்தார். இவரிடமும், இல்ல அருட்பணியாளரிடமும் தெரேசு வேதனையை வார்த்தை வடிவில் ஏற்கெனவே வெளிப்படுத்தியிருந்தார். தலைமைச் சகோதரி ஆக்னெசிடம் ஒரு நாள் தெரேசு இவ்வாறு கூறினார்: "மிக மோசமான பொருளைச் சார்ந்த விவாதங்கள் என் மனத்தில் எழுகின்றன. பின்னர் அறிவியல் என்றும் பெருகிக் கொண்டிருக்கும் புதிய முன்னேற்றத்தை உருவாக்குவதன் மூலம் அனைத்தையும் எதார்த்தாமாக எனக்கு எடுத்துரைக்கின்றது. 'இருப்பவை' அனைத்திற்கும் அறிவியலே தெளிந்த விளக்கமளிக்கும் போல் தெரிகிறது; இது மேலும் பல பிரச்சனைகளை என்னில் வலுவாக்குகின்றது. ஏனெனில் இன்னும் கண்டுபிடிக்கப்பட வேண்டியவை பல உள்ளன." இவை போன்ற இன்னும் சில எண்ண அதிர்வு கள் உள்ளத்துள் இருந்து தெரேசை அரித்துக் கொண்டி ருந்தன.

இத்தகைய கருத்தியல் கேள்விகள், தெரேசுவின் காலத்தில் அவர் படித்தறிந்த தியானா வோகான் (Diane Vaughan) எழுத்துக்களில் விவாதிக்கப்பட்டிருந்தன. அவர் வாசித்த அர்மிஞ்ஞோன்னின் (Arminjon) நூல் 'பொருள் சார்ந்த அறிவியல்' எடுத்துரைக்கும் உரிமைகளைப் பற்றிப் பலவிதமான கருத்துக்களைக் கற்றுக் கொடுத்திருக்கலாம்! ஆனால் அவர் வாழ்ந்த 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வலம் வந்து கொண்டிருந்த அவநம்பிக்கை அலைகளைப் பற்றி அவர் என்ன அறிந்திருந்தார்? 1883



ஆம் ஆண்டு இறந்த கார்ல் மார்க்ஸ் (Karl Marx) பற்றி அவர் கேள்விப்பட்டிருக்க மாட்டார். அல்லது தெரேசு மனமாற்றம் அடைந்த ஆண்டான 1886 ஆம் ஆண்டில் நீச்சே (Nietzsche) வெளியிட்ட "நன்மைக்கும் தீமைக்கும் அப்பால்" என்ற நூலையோ, அவர் கார்மல் மடத்தில் நுழைந்த ஆண்டான 1888 இல் வெளியிட்ட "எதிர்க் கிறிஸ்து" (The Anti Christ) என்ற நூலையோ தெரேசு வாசித்திருக்க வாய்ப்புமில்லை. தெரேசுவின் உறுதி மொழியளிப்பு ஆண்டான 1896 இல் ரெனென் (Renen) என்பவர் 'அறிவியலின் எதிர்காலம்' என்னும் நூலை எழுதினார். இசிதோர் கேரென் பாரீசில் கல்வி பயின்று கொண்டு இருக்கும் போது அவரது சொற்பொழிவுகளைக் கேட்டிருப்பார். 1891 இல் இசிதோர் ஒரு பத்திரிக்கைச் செய்தியாளர் ஆனார். லேநோர்மண்ட் (La Normend) என்ற பத்திரிக்கையில், மதச்சார்ப்பற்ற கல்விச் சட்டங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், எதிர்க் குருத்துவ ஆணைகள், மற்றும் குடியரசுக்கு ஆதரவளிப்பது குறித்துக் கத்தோலிக்கம் கொண்டிருந்த ஐயப்பாடுகள் போன்றவற்றை எதிர்த்தார். இசிதோரின் முன்னாள் எழுத்தரான ஹென்றி ஷெரோன் (Henry Cheron) என்பவர், லே ப்ரோக்ரே லெக்சோவியன் (Le Progres Lexovien) என்ற எதிர்ப்பத்திரிக்கை ஒன்றில் கத்தோலிக்கத் திருச்சபையின் சீர்த்திருத்த வாதத்தைப் பழித்துரைத்தார். இதனைக் கண்ட இசிதோர் அவரை வன்மையாகக் கண்டித்தார்.

தெரேசு நாளிதழ்களைத் தொடர்ந்து வாசிக்காமலிருந்தாலும், முடியரசுக் கோட்பாளராகவும், எதிர் ட்ரைபியூஸ் (Anti Dery Fus) கொள்கையாள ராகவுமிருந்த இசிதோரின் போராட்டங்களை அறிந்திருந்தார். கார்மல் மடத் தின் கம்பிகளுக்குப் பின்னே இருந்தாலும், சமகாலத்துச் சமூக மாற்றங் களைச் சரியாக அறிந்திருந்தார். ஆனால் அவரது போராட்டக்களம் இசிதோர் எதிர் கொண்டதைப் போன்றதல்ல! எவ்வாறு பிரான்ஸினியையும் மற்றும் லோய்சானையும் (Loyson) எதிர்க்கவில்லையோ' அது போன்றே பொருள் சார்புக் கொள்கையினரையோ, கலகக்காரர்களையோ எதிர்க்கவில்லை. அவர்களுக்காக மன்றாடினார்; அவர்களுக்காகத் தமது வாழ்வை இழந்தார்.

தெரேசு தமது வன்மையான அகப்போராட்டங்களை யாருக்கும் வெளிப் படையாக உணர்த்தவில்லை. ஆனால் தம் சகோதரியின் வேண்டு தலுக்கிணங்கி அவர் தொடர்ந்து எழுதிய வரிகள் அவரது மாற்றத்தை வெளிக்கொண்ர்ந்தன. அவரது கவிதை வரிகளை ஆழ்ந்து வாசிப்பவர் களுக்கு அவரது திரைமறைவு இரகசியங்கள் தெளிவாகப் புலப்படும். உதார ணமாகத் தூய சிலுவை யோவானின் கவிதைக்கு இவ்வாறு பொழிப்புரை

எழுதினார்:

ஆதரவின்றி ஆதரவடைந்தேன்.
ஒளியின்றி இருளில் நின்றேன்
அன்பினால் ஒளிர்கின்றேன்.

*மற்றொரு கவிதைக்கு இவ்வாறு விளக்கம் தருகிறார்:*

"நான் வணங்கும் தெய்வம் தன்னை மறக்கையிலே
எனது அன்பைப் பதம் பார்க்கையிலே
நான் புரியும் புன்னகையே என் சொர்க்கம்"

ஆனால் அவர் தாம் எழுதிய வரிகளையே வாழ்வாக்கி வந்தார் என்பதை அவருடன் வாழ்ந்த சகோதரிகள் கனவிலும் உணரவில்லை.

"இவ்வாண்டில் நான் எழுதிய சிறு கவிதைத் துளிகளில் உணர்த்தியிருக்கும் உணர்வுகளோடு நீங்களும் கலந்தால், உங்கள் ஆன்மாவை, ஆறுதலால் நிறைப்பவராக நான் உங்களுக்குத் தோன்றுவேன் - எனினும் . . " இக்கருத்திற்குச் செவிமடுத்தவர்களே ஒளியைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் இவ்வரிகள் உண்மையில் இருளின் நிழலையே குறித்துக் காட்டின.

தெரேசுவின் இத்தகைய இருள் அனுபவத்திற்கிடையிலும், சிறு ஒளிக்கதிரொன்று உதித்து அவரை உறுதிப்படுத்தியது. மே திங்கள் 10 ஆம் நாள் இரவு கனவொன்று கண்டார். அக்கனவில் ஒரு கார்மல் சகோதரி தெரேசுவை முத்தங்களால் நிரப்பினார். அவிலா தெரேசாளின் உடன்பணியாளரும், பிரான்சு நாட்டில் கார்மல் சபையை நிறுவியருமான சகோதரி ஆன் தே லொபேரா (Anne De Lobera) என்பவரே அச்சகோதரி. ஆனால் அவரைப் பற்றித் தெரேசு கேள்விப்பட்டிருந்தாரே தவிர நேரில் கண்டது கிடையாது. தெரேசு அவரிடம் கனவில் உரையாடிய போது பல கேள்விகளைக் கேட்டார். அதற்குப் பதில் கூறும் போது தெரேசுவின் பொருட்டுக் கடவுள் 'மிகவும் பூரிப்படைந்தார்' எனவும், "விரைவில்" மரணம் அவரைத் தழுவும் என்றும் கூறினார். அவரது இந்த இரண்டு வார்த்தைகளும் தெரேசுவை மகிழ்ச்சியால் நிரப்பின. விண்ணகம் குறித்த அவர் ஐயப்பாடு கொண்டிருந்தார்! ஆனால் அதே விண்ணகத்தில் அவர் மீது அன்பு செலுத்தப்படுவதைப் பற்றி உணர்ந்து அக மகிழ்ந்தார். வழக்கமாக அவரது கனவுகள் ஆன்மீக வாழ்க்கையில் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியதில்லை. ஆனால் அவரைப் பெரிதும் பாதித்த இந்தக் கனவு அனுபவத்



திற்குப் பின்பு அவருடைய ஆன்மீக இருள் அதிகமானது. அவருடைய எட்டு ஆண்டுத் துறவற வாழ்வில் பல நேரங்களில் வறட்சியை அனுபவித்திருக்கிறார்! ஆனால் இந்தத் தடவை அனுபவிக்கும் அளவிற்கு, வெறுமை விழா காணும் அளவுக்கு வறட்சியை அனுபவித்ததில்லை! என்று தீரும் இந்த "மனக் குழப்பம்?" என ஏங்கித் தவித்துக் காத்திருந்தார்.

## நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்த பணியார்வம் (மே 1896)

மே மாத இறுதியில் ஒரு நாள் உணவறைக்குச் செல்வதற்கு முன் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக், சகோதரி தெரேசுவைத் தம் அலுவலகத்திற்கு அழைத்தார். இளம் சகோதரியின் இதயம் வேகமாக அடித்தது. இல்லத் தலைவி இதற்கு முன் ஒரு போதும் இவ்வாறு அழைத்ததே கிடையாது. பாரீசில் உள்ள அயல்நாட்டு மறைப்பணிச் சபையைச் சேர்ந்த அதோல்ஃப் ரூலான் (Adolphe Roulland) என்னும் 26 வயது நிரம்பிய மறைப்பணியாளரைச் சகோதரராகத் தெரேசுவிடம் ஒப்படைக்கவே அழைத்திருந்தார். அந்த சகோதரர் அதே ஆண்டின் ஜூன் திங்கள் 28 ஆம்நாள் அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டு சீனாவுக்கு மறை பணிக்கென அனுப்பப்படவிருந்தார்.

காலனி விரிவாக்கத்தைத் தொடர்ந்து மறைப்பணி ஆர்வம் பிரான்சு நாட்டுக் கத்தோலிக்க இளைஞர்கள் பலரைக் கவர்ந்திழுத்தது. எனவே அழைப்புகள் பெருகின.

இல்லத் தலைவியின் விருப்பத்திற்குத் தெரேசு உடனே இணங்கவில்லை; தனக்கு ஏற்கெனவே ஒரு ஆன்மீக சகோதரர் உண்டு எனவும், அவருக்காகத் தமது மன்றாட்டுக்கள், தியாகங்கள் அனைத்தையும் அர்ப்பணித்து வந்ததாகவும் கூறினார். தன்னைவிடத் தகுதியுடைய சகோதரிகள் பலர் குழுவில் உண்டு. எனவே, அவர்களுள் ஒருவரிடம் அச்சகோதரரை ஒப்படைக்கும்படியும் வேண்டினார். ஆனால் இல்லத் தலைவி தெரேசுவின் எதிர் மறைக் கருத்துக்கள் ஒவ்வொன்றையும் நிராகரித்தார். தெரேசு கீழ்படிய வேண்டும் என்பதே அவரது முடிவு.

உண்மையில் தெரேசு தமது உள்ளத்தில் பேரானந்தம் அனுபவித்தார். இறைவன் அவரது விருப்பங்கள் அனைத்தையும் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டே இருந்தார். தெரேசு தம் உடன் பிறந்த சகோதரர்கள் இருவரையும் இழந்து விட்டார். ஆனால் இரு மறைப்பணியாளர்களைத் தம் சகோதரர்களாகப் பெற்றுக் கொண்டார். அவரது ஆர்வத்தை தற்போது



தெரேசுவின் வாழ்க்கையில் பங்கேற்ற அருட்பணியாளர்கள்

*(மேலே) இடமிருந்து வலம்: அ.பணி. தொமேன் (லிசியூ ஆசீர்வாதப்பர் சபை இல்ல அருட்பணியாளர்), அ.பணி. ரெவரோனி (பாயூ மறை மாவட்ட முதன்மை குரு.), பேராயர் யுகோனின் (லிசியூ மற்றும் பாயூவின் மறை ஆயர்).*

*(நடுவில்) அ.பணி. தெலாத்ரோயத் (கார்மல் சபையின் தலைமைத் தந்தை.), அ.பணி. அல்மீர் பிஷோன் சே.ச., அ.பணி. அலெக்ஸ் ப்ரு (1891 அக்டோபரில் ஆண்டுத் தியானம் கொடுத்தவர்)*

*(கீழே) அ.பணி. யூஃப் (கார்மல் இல்ல அருட்பணியாளர்), அ.பணி. பெல்லியேர், அ.பணி. ரூலான் (தெரேசுவின் ஆன்மீகச் சகோதரர்கள்)*

இரட்டிப்பாக்க வேண்டும். அவருடைய அன்னை அவிலா தெரசாளைப் போலத் "திருச்சபையின் மகள்" ஆக மாற விரும்பினார். "ஒரு கார்மல் கன்னிகைக்கு இல்வுலகையே அரவணைக்கும் பேரார்வம் இருக்க வேண்டும்" என்பதை நிரூபிக்க விரும்பினார்.



ஜூலை 13 ஆம் நாள் புதிய அருட்பணியாளர் ரூலான் தமது முதல் திருப்பலிகளில் ஒன்றை லிசியூ கார்மலில் நிறைவேற்ற வருகை தந்தார். அவருடைய சகோதரியாகத் தெரேசு தாமே வண்ணம் தீட்டிய பீடப் பட்டுத்துணியொன்றை அவருக்கு அளித்தார். அவர்கள் இருவரும் வரவேற் பறையில் உரையாடினர். மறைப்பணியாளர் விரைவில் சீனாவுக்குச் சென்று அங்குள்ள கிழக்கு ஷுவேன் (Su -Chuen) மாநிலத்தில் பணியாற்ற விருப்பதாகக் கூறினார். தெரேசுவும் தம் புதிய சகோதரனின் பயணத்தைத் தொடர்ந்தறிவதற்காகத் தாம் பணிபுரியும் இடத்தில் மாநில நிலப் படமொன்றைப் பொருத்தி வைத்தார். "அன்பு சகோதரரே, அன்புப் பயண வாழ்த்துக்கள். தூரம் நம் ஆன்மாக்களை ஒருபோதும் பிரிக்க இயலாது. மரணமும் நமது ஒன்றிப்பை நெருக்கமாக்கத்தான் முடியும். நான் விண் ணுக்கு விரைவில் சென்றால், ஷுவெனில் உங்களைச் சந்திக்க இயேசுவிடம் அனுமதி கேட்பேன். அங்கே நாம் இருவரும் இணைந்து நமது திருத்தூதுப் பணியைத் தொடர்வோம்" என்று அவருக்கு எழுதினார். தமது கவிதைகளின் தொகுப்பு ஒன்றையும் கொடுத்தார். அத்தோடு அவர்களது எதிர்காலத் திருத்தூதுப்பணி, உடன் உழைப்பு பற்றிய கருத்துக்களை மையமாக வைத்து அவர் எழுதிய "வெற்றிகளின் அன்னைக்கு" என்ற சிறப்புக் கவிதையையும் அவருக்கு அளித்தார்.

அருட்பணியாளர் ரூலான், 'தலைமைச் சகோதரி மரி தே கொன் சாக்கின் மறைப்பணியாளர்' என்றே குழுவில் இருந்த சகோதரிகள் அனைவரும் எண்ணியிருந்தனர். அவரும் தெரேசுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள இந்தப் பணியையும், அவர்களுடைய கடிதப் பரிமாற்றத்தையும் ரகசியமாக வைத்திருக்கும்படி தெரேசுவை கேட்டுக் கொண்டார். ஆனால் இல்லத் தலைவி, இவர்கள் இருவரும் புகைப்படங்கள் பரிமாறிக் கொள்ளவும் அனுமதி வழங்கினார்.

இல்லத் தலைவி தெரேசுவிடம் இன்னும் பல காரியங்கள் பற்றியும் நம்பிக்கையுடன் பேசினார். மார்ச் மாதம் நடந்து முடிந்த தேர்தல் நாடகத் தாக்கத்திலிருந்து தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் இன்னும் முழுமையாக விடுபடவில்லை. குழு இரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டதாகவும், இன்னும் சில சகோதரிகள் தன் மேல் பற்றுறுதி கொள்ளவில்லையென்றும் உணர்ந்தார். அவர்களை அவர் 'நம்பிக்கைத் துரோகிகள்' என எண்ணினார். தமது புகுமுகத் துறவு நிலை உதவிப் பயிற்சி உருவாக்குநர் மட்டுமே தமது முழு நம்பிக்கைக்கும் உரியவராகக் கருதினார்.

ஜூன் மாதம் 21 ஆம் நாள் இல்லத் தலைவி மரி தே கொன்சாக்கின்

பெயர் கொண்ட விழா. புகுமுகத் துறவுநிலை கன்னியர்கள் அனைவரும் ஆர்வத்துடன் செயல்பட்டனர். தெரேசுவின் தலைமையில் நாடகமொன்று அரங்கேற்றப்பட்டது. இது தெரேசுவின் ஏழாவது படைப்பாகும். இந்நாடகம் "அனைத்தையும் தலைகீழாக மாற்றி விட்டது" எனச் சகோதரி திருஉணவின் மரியா தன் பெற்றோருக்கு எழுதினார். "பணியின் வெற்றி" என்கிற தலைப்பில் அன்றைய நடைமுறை நிகழ்வில் அதிகமாக விவாதிக்கப்பட்ட கருத்தியலைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதியிருந்தார். அலகையின் செயல்பாடுகள் தெளிவாக அந்நாடகத்தில் விளக்கப்பட்டுள்ளன.

## தியானா வோகானின் தாக்கம்

தியானா வோகானின் செயல்பாட்டினால் கத்தோலிக்க சமயக் கோட்பாடுகள் சில நாள்களுக்கு பாதிக்கப்பட்டன. தியானா வோகான் என்பவர் ஃபிரிமேசன் என்ற எதிர்த் திருச்சபை அமைப்பைச் சேர்ந்த ஒரு இளம் பெண். அவர் 1895 ஆம் ஆண்டு "முழு முயற்சியோடு தனித்துவத்தோடு வாழ்ந்த முன்னாள் மன்னரின் வாழ்க்கைக் குறிப்புகள்: அலகை மூவர் குழுவின் அட்டகாசங்களையும் சூழ்ச்சிகளையும் வெளிக் கொணர்தல்" என்ற நூலை வெளியிட்டார். இந்நூலில் தமது அசாதாரண தீரச் செயல்களை அலகையின் உலகோடு ஒப்புமைப்படுத்துகின்றார். ஜோன் தார்க்கின் தூண்டுதலுக்குப் பிறகே தமக்கு மன மாற்றம் ஏற்பட்டதாகவும் கூறுகிறார். எனவே, இதுவரை பெரிதென மதித்து வந்த தீமைகளை எரித்து ஒழிக்கவும், போராடித் தகர்க்கவும், முறித்து அழிக்கவும் தமது ஆற்றல்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்தார். இறுதியில் ஒரு துறைவற இல்லத்தில் சேர விருப்பம் கொண்டார்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கத்தோலிக்கருக்கும், ஃபிரிமேசன் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களுக்குமிடையே போராட்டம் மூண்டது. திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் 1884 இல் எழுதிய மனித இனம் (Humanum Genus) என்ற சுற்று மடலில் இந்த அமைப்பைக் கடுமையாகச் சாடினார். "அலகைகள் தங்களது வெறுப்பு, தீமைகளை இவ்வமைப்புகளின் வழியாகப் பிறப்பெடுக்க வைக்கின்றன" எனவும் கூறினார். அலகை தனது பணியினைச் சிறப்பாகவே செய்து வந்தது. 1892 ஆம் ஆண்டில் முனைவர் பத்தாய் (Doctor Bataille) என்பவர் '19 ஆம் நூற்றாண்டில் அலகை' என்ற நூலை வெளியிட்டிருந்தார். கத்தோலிக்கர்கள் பலரும் இதனுடைய வெளிப்பாடுகளில் ஆர்வம் கொண்டனர். ஒரு சிலர் இதில் ஆர்வம் கொள்ளவில்லை. உதாரணமாக லெயோன் ப்ளுவா (Leon Bloy) என்ற ஏகாந்தவாதி இயல்புக்கு மாறானவற்றுக்கு ஆதங்கப்படும் எளிய மக்களைக் கடுமையாகச்



சாடினார். ஆனால் 'மலை வாழ் முதியவரின்" பழி உரைக்கு யார் செவிமடுப்பர்?

'தியானா' செயல்பாடு கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களிடையே பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. ஏனென்றால் ஒருவித இரகசிய நிலையும் மறைந்த நிலையும் மனமாறியவரிடையே காணப்பட்டன. தியானாவின் சார்பாக அருட்பணியாளர்கள் பலர் லா க்ரூவா (La Croix) அதாவது 'சிலுவை' என்ற பத்திரிக்கையில், கட்டுரைகள் எழுதினர். லிசியூவில் இசிதோரின் லேநோர்மன் (Lenormend) என்ற பத்தரிக்கையும் இந்த மறைப் போராட்டத்தில் ஈடுபட்டது. 'கூன்தான்ஸ் கத்தோலிக்க இதழ்' (Revue Catholique De Coutances) என்ற பத்திரிக்கையின் ஆசிரியரும், தியானாவின் முழு ஆதரவாளருமான அருட் பணியாளர் முஸ்தேல் (Mustel) என்பவரின் தூண்டுதலால் தியானாவின் நூல்கள் கார்மல் மடத்தில் கிடைத்தன. இவ்வாறு 'இழப்பீட்டின் திருவுணவு நவநாள்" (The Eucharistic Novena of Reparation) என்ற தலைப்பில் தியானா எழுதி 1895 ஆம் ஆண்டில் வெளியிட்ட நூலைத் தெரேசு வாசித்தார்.

திருத்தந்தை 13 ஆம் சிங்கராயரைப் போலத் தெரேசுவும் இந்த இளம் பெண்ணின் ஆன்மீக வளமையைக் கண்டு வியந்தார். ஜோன் தார்க் மீது அளவுக்கதிகமாக அன்பு செலுத்தியதன் அடையாளமாக 1895 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13 ஆம் நாள் 'தெய்வீக நீதியின் அர்ப்பணப் பொருளாய்த் தம்மையே தியானா அர்ப்பணித்தார். ஆனால் தெரேசு இறைவனின் 'கருணை நிறை அன்புக்கு'த் தம்மையே அர்ப்பணித்தார். இது ஒரு எதிர்பாராத நிகழ்வுப் பொருத்தமே. எனவே, கார்மல் கன்னிகை தெரேசு, தியானா வெளியிட்ட நவநாள் நூலிலிருந்து சில பகுதிகளை நகல் எடுத்துக் கொண்டார். தியானா துறவற இல்லத்தில் ஒரு நாள் நுழைவதைக் எண்ணிக் கொண்டிருந்தார். அந்தத் துறவற இல்லம் லிசியூ நகர் கார்மல் இல்லமாக இருக்குமோ? இது தெரேசின் ஏக்கம். தியானாவின் கதையைக் கேட்டு வியந்த தலைமைச் சகோதரி ஆக்னெசின் வேண்டுதலுக்கேற்ப மனம் மாறிய தியானாவுக்குக் கவிதை ஒன்றை எழுத முயன்றார். பலனில்லை! உந்துதல் எதுவும் மனத்தில் எழவே இல்லை. எனவே, ஒரு கடிதம் மட்டும் எழுதுவதில் நிறைவு கண்டார். அக்கடிதத்தோடு தெரேசு தாம் ஜோன் தார்க் சிறையில் இருப்பதாக நடிக்கும் போது எடுத்த புகைப்படம் ஒன்றையும் தியானாவுக்கு அனுப்பினார். தியானா அக்கடிதத்திற்குப் பதில் கடிதமும் எழுதினார்.

அலகைக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் கார்மல் சபையும் தன்

பங்கை வகிக்க வேண்டியிருந்தது. அனைத்திற்கும் மேலாக குழுவின் வலிமையை இழக்கச் செய்யும் அளவிற்குக் குழுவிற்குள்ளே பிரிவினை வெடிக்கத் தொடங்கியிருந்தது. எனவே, துறவற குடும்ப விழாவான ஜூன் 21 ஆம் நாள் தமது நாடகத்தின் வழியாகத் தெரேசு தமது சகோதரிகளின் சிந்தனைகளைத் தூண்டி எதார்த்த நிலையை உணர வைக்க முயற்சி எடுத்தார்.

அரங்கேற்றம் அனைவரையும் ஆனந்தத்தில் திளைக்க வைத்தது. அலகையின் தலைவன் லூசிஃபர் (Lucifer) மற்றும் அலகைகளின் குழுவையும் மேடையேற்றினார். அலகைகளின் குழு உறுப்பினர்களான பெயல் சபூப் (Beelzebub), அஸ்மோதேயுஸ் (Asmodaeus) அஷ்தாரோத் (Ashtaroth) அஸ்டார்த் (Astarte) என்பவர்களின் பெயர்கள் தியானாவின் நூலிலிருந்து எடுக்கப்பட்டன. நரகத்தை காண இயலாது என்ற எண்ணம் மேலோங்கி நின்றதால் நரக நிகழ்வுகளான சங்கிலிகள் ஒலி எழுப்புதல், இடி முழக்க ஒலி உண்டாக்குதல் போன்றவற்றைப் புகுமுகத் துறவு நிலை யில் பயிற்சி பெற்று வந்த துறவினிகள் திரைக்கு பின்புறம் இருந்தே செய்து மகிழ்ந்தனர்.

நாடகத்தின் கருப்பொருளிலிருந்து புதுச் சிந்தனைகள் பிறந்தன. ஆர்வ கோளாறு, விநோத விருப்பம் போன்ற தீமைகளினின்று தங்களையே காத்துக் கொள்ளக் கார்மல் கன்னியர்கள் துணிய வேண்டும். 'எளிமை' என்ற போர்க் கருவியின் உதவியால் மட்டுமே அலகையை எதிர்த்துப் போராடி வெற்றியடைய வேண்டும். புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி உருவாக்குநராகப் பணிபுரியும் தெரேசு தமக்கென்றே ஒரு முடிவை நாடகத்தினின்று தேர்ந்து கொண்டார்: 'அலகையை வெல்லும் வழியை தற்போது நாம் அறிவோம்; எனவே இனி எளிமையைக் கடைப் பிடிப்பதே நம் அனைவரின் ஒரே ஆர்வமாக இருக்கட்டும். இதுவே நமது படைக்கலன்; நமது கேடயம். இந்த வலிமை மிகு சக்தியினால் நவீன ஜோன் தார்க்கைப் போன்று நமக்கு அறிமுகமில்லாதவனை, அரசினின்று எவ்வாறு துரத்துவது என்பதை அறிந்து கொள்வோம். அதாவது ஆணவ அலகையை நம் துறவற இல்லத்திற்குள் நுழைவதைத் தடுத்து நிறுத்துவது எப்படி? என அறிந்து கொள்வோம்". இறுதிச் சொற்றொடர், குழுவையே 'சிறுவழி' நோக்கி அழைத்துச் செல்கிறது:

ஆர்வம்மிகு கார்மல் குலமே!
உனதன்பர் இயேசுவுக்கு
இதயங்களை வெல்வதே உன் குறியாகட்டும்;



நரகத்தையே கலக்கும் எளிமையே
உனதன்பர் இயேசுவுக்காக
நீ வாழும் இல்லமாகட்டும்.

ஆனால் தமது பகுதியை நடித்துக் கொண்டிருக்கும் போதுதான் அலகையின் சக்தி நாம் நினைத்ததை விட மிகவும் நுண் தன்மை கொண்டது எனத் தெரிய வந்தது.

இவை நடந்து எட்டுத் தினங்களுக்குப் பின்னர் குழந்தை இயேசுவின் தெரேசு தமது இல்லத்தலைவிக்கு உவமை வடிவில் நீண்டதொரு கடிதம் எழுதினார்: அதற்கு "மிகச் சிறு செம்மறியின் கதை" என அம்மடலுக்குப் பெயர் வைத்தார். அதில் அவர் குறிப்பிடும் செம்மறி தெரேசுவே தான். இந்தச் 'சிறு செம்மறியிடம் தான்' தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் தமக்கு 'இணையானவரிடம்' கூறுவது போலத் தமது மனத்துயர்களைப் பகிர்ந்து கொண்டார். வயது வேறுபாட்டைப் பார்க்கமால் தெரேசு முன்பாகச் சில சமயம் கண்ணீர் விட்டுக் கதறி அழுதார்.

இயேசுவே நேரடியாக இல்லத் தலைவியிடம் உரையாடுவதைப் போன்று தெரேசு கடிதத்தை எழுதியிருந்தார். அவர் அனுபவிக்கும் 'துன்பங்கள்' அனைத்தையும் தூய்மையாக்கும் கருவிகளாகக் கருதும்படி எழுதி அவரை ஆற்றுப்படுத்த முயன்றுள்ளார். இல்லத் தலைவியின் மனத்தைப் புண்படுத்தாமல் மிகவும் திறமையான முறையில், எத்தகைய ஆன்மீக மனநிலை அவருக்கு மன அமைதியைக் கொடுக்கவல்லது, அதனை எவ்வாறு கடைப்பிடிப்பது? என்பதைக் குறிப்பிட்டிருந்தார். அறுபத்திரண்டு வயது நிரம்பிய அந்த மூத்த சகோதரியிடம் தெரேசு துணிந்து அவருடைய கருத்துக்களை எடுத்துரைத்தார். இல்லத் தலைவியும் தெரேசுவின் தெளிந்த அறிவுரைகளை ஏற்றுக் கொண்டார். மீண்டும் தெரேசு 'மிகவும் கவனமாக'ச் செயல்பட்டு அவர் மனத்தைப் புண்படுத்தாமல் இருந்தார். 'உண்மை அனைத்தையும் விடுவிக்கின்றது'.

தெரேசு தமது உடல்நிலைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. லேயோனி தெரேசுவின் உடல்நிலையை அறியும் ஆர்வத்துடன் வினவிய போது, தற்போதெல்லாம் இருமலினால் தாம் துன்புறுவதில்லை என்று கூறினார். புகழ் பெற்ற மருத்துவர் தே கொர்னியேர் (De Courniere) என்பவரிடம் தெரேசுவை அழைத்துச் சென்றனர். அவரும் பலவித சோதனைகளை நடத்தி முடித்தபின் அவர் 'நலமாக' இருப்பதாக அறிவித்தார்.

'விரைவில்' இறப்போம் என்ற அவரது கனவு, நினைவை விட்டு நீங்க மருத்துவரின் வார்த்தை உதவவில்லை; அவரது மகிழ்ச்சியிலும் மாற்றமில்லை. மரியா கேரெனுடன் ஆலயப் பணிகளில் ஈடுபட்டபோதும், எந்தவித மனச்சோர்வுக் சூழலும் அங்கு நிலவவில்லை. "பயனற்ற வார்த்தைகள் நம் நாவினின்று உதிராமல் இருக்குமாறு நாம் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு அவசியமான சொற்றொடருக்குப் பின்பும் மற்றொரு மகிழ்ச்சி தரும் பல்லவியொன்றும், எப்பொழுதும் நம்மனத்தில் எழுகின்றது. ஆனால் அதனை நமது மனமகிழ்வு நேரத்திற்காக ஒதுக்கி விட வேண்டும்" என மரியா கேரெனிடம் தெரேசு கூறினார்.

தெரேசு சிரித்து மகிழ்ந்தார்; நகைச்சுவை மொழி பேசினார். எனினும் உள்மன நிலையிலும் பெரும் வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்தார். 1896 ஆம் ஆண்டு கோடை மாதங்களில் இறைவாக்கினர் எசாயா மற்றும் திருத்தூதர் தூய பவுல் அடியாரின் எழுத்துப் பகுதிகளைத் தியானித்தார். ஆகஸ்ட் 6 ஆம் நாள் தூய திரு உருமாற்ற விழா நாளன்று தம் சகோதரிகள் ஜெனிவியேவ் மற்றும் மூவொரு இறைவனின் மரியா ஆகிய இருவரோடு இணைந்து தெரேசு தம்மைத் திருமுகத்துக்கு அர்ப்பணித்தார். அப்போது பாடல் வரிகளைப் பயன்படுத்தி இவ்வாறு எழுதினார்:

" ஓ ஆராதனை நிறை தூய வதனமே !
லீலி மலரிலும் அழகுநிறை முகமே;
எங்கள் இதயங்களின் இதய நாயகரே !
ஓ என் இனிய இயேசுவின் திருமுகமே -
மற்றும் பல. . . .

ஆகஸ்ட் 15 ஆம் நாள் எழுதிய கவிதையிலும் இதே ஆழ்ந்த உணர்வு வெளிப்படுவதை நாம் காணலாம். 'இயேசு மட்டும்' என முதலில் எழுதப்பட்ட இக்கவிதை பின்னர் என் 'ஒரே அன்பர்' எனத் தலைப்பு மாற்றம் பெற்றது:

என் ஒரே அமைதி, என் ஒரே நலன்,
என் ஒரே அன்பு ! நீர் தாமே என் இறைவா !
. . . என் அன்புக்கு ஏங்கும் நீர் ஓர் இரவலர்
உம் தேவை என் இதயம் இயேசுவே. . .
இதோ நான் தருகின்றேன்.



## உயிரின் தரை தொடும் அழைப்பு (செப்டம்பர் 1896)

இயேசுவின் திருமுகத்திற்குத் தம்மை அர்ப்பணித்த உணர்வுகளுடன் குழந்தை இயேசுவின் தூய திருமுகத் தெரேசு தமது 'ஆண்டுத் தனிமைத் தியானத்தை' செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாள் மாலையில் தொடங்கினார். குழு மனமகிழ்வில் கலந்து கொள்ளச் செல்லவில்லை; அந்த நேரங்களைப் பயன்படுத்தித் தனிமையில் மன்றாடினார். தூய அன்னையின் பிறந்ததினமான மறுநாள் தமது உறுதிமொழியளிப்பின் ஆறாம் ஆண்டு நிறைவு விழாவினைத் தனிமையில் நினைவு கூர்ந்தார். அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கடந்த வாரங்களில் அவருக்கு நிகழ்ந்தவை அனைத்தையும் இயேசுவிடம் நேரடியாகப் பேசுவதைப் போலக் கடிதம் எழுத முனைந்தார். அவ்வாறு அவர் இயேசுவிடம் உரையாடிக் கொண்டிருக்கும்போதே அவரது எழுதுகோல் நளினமாக எழுதிக் கொண்டு இருந்தது.



தெரேசு தமது ஆலயப் பணியில்

தெரேசுவின் இதய இருளை அகற்ற மே 10 ஆம் நாள் இறைவன் அவருக்கு வழங்கிய அருள் குறித்து உரையாடலின் போது அவரிடம் நினைவூட்டினார்: "ஓ என் இனியவரே ! இந்த அருள், நீர்

என்மீது பொழியக் காத்தி ருக்கும் பேரருட் கொடைக ளுக்கெல்லாம் முகவுரையே! என் ஒரே அன்பே! அவற்றை இன்று உம் நினைவில் கொணர என்னை அனுமதியும்; இந்நாள் நமது ஒருங்கி ணைப்பின் ஆறாம் ஆண்டின் நினைவான பொன்னாள். ஒ இயேசுவே! எல்லை கடந்த என் ஏக்கங்களையும், எதிர் பார்ப்பு களையும் மீண்டும் உம்மிடம் எடுத்துரைக்கும் ஆவலில், அர்த்தமற்றவளாக நான் செயல் பட்டால் என்னை மன்னியும்; மன்னித்து, என் ஆன்மாவின் ஏக்கத்தைத் தணித்துக் குண மாக்கியருளும்!!!

தெரேசு தமது சிறிய அறையில் அமர்ந்து எழுது பலகையை மடியில் வைத்துக் கொண்டு அர்த்தமற்றவைகள் பலவற்றையும் எழுதிக் கொண்டிருப்பதை அறிந்திருந்தார். அவர் ஒரு கார்மல் கன்னிகையான - ஒரு துணைவராக - ஒரு அன்னையாக வாழப் பெற்ற அழைப்பில் நிறைவு காண முடியவில்லை! எண்ணிலடங்கா மாற்று விருப்பங்கள் அவரிடத்தில் ஊற்றெடுப்பதை உணர்ந்தார். மேற்கூறிய பண்புகளோடு ஆண்மைப் பண்புகள் நிறைந்த அழைத்தல் பெற ஆவல் கொண்டார். ஒரு போராளியாக, அருட்பணியாளராக, திருத்தூதராக, திருச்சபை முனைவராக, மறைத் தியாகியாக வாழ வேண்டும் என்று ஆர்வங்கள் பல அவர் கொண்டிருந்தார். அருட்பணியாளராகும் ஆவலை அடிக்கடி வெளிப்படுத்தினார். வாய்ப்புக் கிடைத்த போது அவருடைய ஆவல், உண்மை நிகழ்வாகவும் மாறியது.

தெரேசு ஆலயப் பணியாளராகப் பணியாற்றிய போது ஒரு நாள் திருஉணவின் துகள் ஒன்று தட்டில் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார். அதனை ஆலயத்திலிருந்து, திருப்பலி பொருட்கள் வைக்கும் இடத்திற்கு எடுத்து வரும் போது சகோதரி மூவொரு இறைவனின் மரியாவிடம், 'என் பின்னே வரும். இயேசுவை நான் எடுத்துச் செல்கிறேன்' என்றார். மேற்கூறியதைப் போன்ற வாய்ப்புகள் ஒவ்வொன்றையும் முழுமையாகக் காலம், இடம் போன்றவற்றிற்கேற்ப அனுபவிக்க விரும்பினார். மறையுரை யாற்றும் ஆவல் என்றுமே அவரில் தணிந்ததில்லை. உலகின் ஐந்து துணைக் கண்டங்களிலும் நற்செய்தியினை அறிவிக்க விரும்பினார். படைப்பின் விடியலிலிருந்து, கால இறுதி வரை மறைப்பணியாளராக வாழ விரும்பினார். அனைத்து வழிகளில் மறைத் தியாகியாகத் தம்மையே இழக்க விரும்பினார். அவரை வாட்டி வதைத்த இந்த ஏக்கங்கள் 'அனைத்துலகையும் விடப் பெரியவையாக" இருந்தன.

எனினும் எதார்த்தத்தில் தன் சிந்தனைகளையே கேள்விக்குட்படுத்தி இயேசுவிடம் கேட்கிறார்: 'ஓ என் இயேசுவே! எனது அறியாமைக்கு உமது



பதில் என்ன? இவ்வுலகில் என் ஆன்மாவை விடச் 'சிறிய' வலிமை குறைந்த ஆன்மா எதுவும் உண்டா?'

இரவும் பகலும் தியானம் செய்து வந்த இறைவார்த்தையின் அடிப்படையில்தான் வழக்கம் போல் இக்கேள்விக்கும் விடை காண வேண்டியிருந்தது. அவர் தமது புதிய ஏற்பாட்டு நூலை எடுத்துத் திறந்த போது தூய பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் மடல் அவருடைய கண்ணில் பட்டது. அவ்வார்த்தைகளைப் படித்தவுடன் அவர் தளர்வடைந்து சோகத்திலே மூழ்கியிருக்க வேண்டும்: "எல்லாருமே திருத்தூதர்களா? எல்லாருமே இறைவாக்கினர்களா? எல்லாருமே போதகர்களா? இருக்க முடியாது. . ." (1 கொரி 12 : 29, 21). இது பாமர அறிவாகவே இருந்தது. தெரேசுவும் மனந்தளராமல் தமது தேடலைத் தொடங்கினார். பதிமூன்றாம் அதிகாரம் அவருக்குப் புத்தொளியைக் கொணர்ந்தது: 'இறைவனிடம் நம்மை உறுதியாக அழைத்துச் செல்லக் கூடிய சிறந்த வழி அன்பே". அவருடைய தேடலுக்கு விடை கண்டு கொண்டார்!

"இறுதியில் என் மனம் அமைதியில் நிலைத்தது. . . என் அழைத்தலின் திறவுகோலே அன்பு தான். பல உறுப்பினர்களைக் கொண்ட ஒரே உடல் தான் திருச்சபை என்பதைப் புரிந்து கொண்டேன். இவ்வுறுப்பினர்களில் மிகவும் இன்றியமையாதவர்களை மற்றும் உயர் பண்புகளையுடையவர்களை இழந்துவிடக்கூடாது. எனவே, திருச்சபைக்கு இதயம் உண்டு என்பதையும் புரிந்து கொண்டேன். இந்த இதயம் 'அன்பினால் எரிந்து கொண்டிருந்தது'. 'அன்பு ஒன்றே' திருச்சபையின் உறுப்பினர்களைச் செயல்பட வைத்தது என்பதையும் உணர்ந்து கொண்டேன். அன்புத் தீ அணைந்து போயிருந் தால் திருத்தூதர்கள் நற்செய்தியை அறிவித்திருக்க மாட்டார்கள். மறைத் தியாகிகள் தங்களது குருதியைச் சிந்த மறுத்திருப்பார்கள்; 'அன்பு அனைத்து அழைத்தல்களையும் உள்ளடக்கியது; அந்த அன்பே அனைத்துமாக இருந்தது; அந்த அன்பே அனைத்து இடங்களையும், காலங்களையும் இணைத்தது என்பதைப் புரிந்து கொண்டேன். ஒரே வார்த்தையில் கூறினால் அன்பு என்றும் நீடித்து நிலைப்பது!" என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டேன்.

'அதன் பின்னர், என் அளவு கடந்த மெய்மறந்த மகிழ்ச்சியால் உரக்கக் கூறினேன்: "ஓ இயேசுவே, என் அன்பே, இறுதியில் என் அழைப்பைக் கண்டுக் கொண்டேன். அன்பு செலுத்துவதே என் அழைப்பு. . . 'அன்பே என் அழைப்பு!"

'ஆம் திருச்சபையில் என் இடத்தைக் கண்டு கொண்டேன். என் இறைவா! நீரே எனக்கு இந்த இடத்தைத் தந்தருளினீர்; என் அன்னையாம் அந்தத் திருச்சபையின் இதயத்தில் 'அன்பாக' நான் இருப்பேன். இவ்வாறு நான் அனைத்துமாக இருப்பேன். இவ்வாறு எனது கனவும் நனவாகி, நிறைவடையும்!!!"

அவரது விருப்பங்களையெல்லாம் நிறைவடையச் செய்யும் போது இந்தக் கண்டுபிடிப்புக்குப் பிறகு கார்மல் கன்னிகை தெரேசு இயேசுவோடு தொடர்ந்து உரையாடுகின்றார். அடையாளத்தை மாற்றுகின்றார். அவரது 24 ஆம் வயதில் இறுதியாக அவர் கண்டுணர்ந்த இந்த அனைத்துலக அழைப்பு, அன்றாடச் செயல்பாடுகளின்று அவரைப் பிரித்து ஒதுக்கவில்லை. மறைந்த வாழ்வில் மேலும் சிறப்பாகப் பணியாற்ற ஊக்கமளித்தது. அனைத்தையும் அன்புக்காகச் செய்ய வேண்டுமென்றால் அவரையே முழுமையாக மாற்றிக் கொள்ள வேண்டும். 'சிறிய, வலிமையற்ற, நலிந்த சிறியதொரு பறவை போன்றவர்; தூக்கம் நிறைந்த அல்லது கவனம் சிதறிய நிலையில் செப வாழ்க்கை மேற்கொண்டவர்; இன்னும் நிறைவடையாத நிலையில் இருப்பவர்; இத்தகைய குறைகளை உடையவருக்கு எங்கிருந்து ஆற்றல் வரும்? அவரது ஆற்றல், அன்புக்குத் தம்மையே முழுமையாகக் கையளிப்பதிலிருந்தே தோன்ற முடியும்; தெய்வீக ஆதவன் (அல்லது தெய்வீகக் கழுகு) இயேசுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட அவரது வாழ்க்கை, இவ்வுலகை மீட்க வல்லது என்னும் ஊக்கம் நிறைந்த நம்பிக்கையுடன், வாழ்வில் வரும் இடர்களைப் பொருட்படுத்தாமல் தம்மையே முழுமையாக வழங்கும் தற்கையளிப்பிலிருந்து தான் அந்த ஆற்றல் தோன்ற முடியும். இந்த அன்பில் நிபந்தனையற்ற முறையில் நம்பிக்கை கொள்ளத் துணிவதன் மூலம் அவர் திருத்தூதராகவும் முடியும்; திருச்சபை முனைவர், போராளி, அருட்பணியாளர், மறைத்தியாகி ஆக முடியும். வியப்பூட்டும் காட்சிகள் அவருக்கு மறுக்கப்பட்டன. ஆனால் அவரால் 'மலர்களைத் தூவ இயலும்'; அதாவது ஒவ்வொரு நாளும் வாழ்வு வழங்கும் சிறு சிறு வாய்ப்புகளையும் அன்புக்காக அர்ப்பணிக்க அவரால் இயலும்.

"மலர்களைத் தூவுதல்" என்பது தெரேசுவின் மழலைப் பருவம் முதல் அவருக்கு மிகவும் அறிமுகமான செயல்! புகுமுகத் துறவுநிலைக் கன்னியர் கள் வழியாக மீண்டும் இப்பழக்கத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார். கோடைக்கால மாலை வேளைகளில், கார்மல் இல்லத்தில் உள்ளே நிறுவி யிருந்த இயேசுவின் திருச்சிலுவை மீது ரோசா இதழ்களைத் தூவினார். இயேசுவைத் தொட்டுத் திரும்பிய இதழ்கள் திருச்சபைக்கும், உலகிற்கும்



விலை மதிப்பற்ற அருளைப் பெற்றுத் தருகின்றன. சாதாரண மொழியில் கூற வேண்டுமானால் 'வெறுமையாக' இருந்தத் தெரேசுவின் வாழ்க்கை இயேசுவுடன் இணைந்ததால் அருட்கொடைகளின் புதையலாக மாறியது. அனைவரது வாழ்வுக்கான புதையலாக மாறியது. இவ்வாறு மலர்களின் மொழி வழியாகத் தூயவர்கள் உறவின் ஆழங்கான இயலாத மறைப் பொருள்களை விளக்கினார். அவரது வாழ்வு ஒரு ரோசா மலர். இவ்வுலக வாழ்வுக்காக அதன் இதழ்கள் உதிர்ந்தன. இதயம் நிறைந்த நன்றிப் பெருக்குடன் சகோதரி தெரேசு, தமது ஆர்வம் நிறைந்த கடிதத்தை ஒரு மன்றாட்டுடனும், விண்ணப்பத்துடனும் நிறைவு செய்கிறார்; 'ஓ இயேசுவே, உமது அருள்மொழியும், பண்பும் வார்த்தைகளால் வருணிக்கப்பட இயலாதது என்பதை அனைத்துச் 'சின்ன இதயங்களுக்கும்' நான் ஏன் எடுத்துரைக்கக் கூடாது? என் ஆன்மாவை விட வலிமையற்றதும், சிறியதுமான ஓர் ஆன்மாவை நீர் அறிய வாய்ப்புக் கிடைத்திருந்தால், அந்த ஆன்மாவும், உமது அளவற்ற கருணையில் முழுநம்பிக்கை கொண்ட தம்மையே கைய ளிக்கத் துணிந்திருந்தால், அந்த ஆன்மாவுக்கு இன்னும் சிறப்பான அருட்கொடைகளை வாரி வழங்குவதில் பெருமகிழ்வு கொண்டிருப்பீர். . . உமது அன்புக்குத் தகுதி வாய்ந்த சிறிய பணியாள்களைக் கொண்ட படை வீரர் குழுவைத் தேர்ந்தெடுக்கும்படி உம்மை இரந்து கேட்கிறேன்' என்று தெரேசு மன்றாடினார்.

தெரேசு ஆண்டுத் தியானத்திற்குச் செல்வதற்கு முன்பு, 'அவரது சிறுமைக் கோட்பாடு' பற்றி ஏதேனும் கருத்து தெரிவிக்கும்படி சகோதரி தூய இதயத்தின் மரியா அவரைக் கேட்டுக் கொண்டார். தெரேசு அதற்கு இணங்கி பக்கம் பக்கமாக எழுதிக் கொடுத்தார். தனது ஆன்மீக அன்னை அதனை வாசிக்கும் போது மிகைப்படுத்தப்பட்டவையாக கருதுவார் என உணர்ந்தார். அவரது ஆன்மீகக் குழந்தை, ஆன்மீக ஆறுதல்களினால் நிறைந்திருக்கிறதா? என்று வியக்கவும் தோன்றும். எனவே, செப்டம்பர் 13 ஆம் நாள், தெரேசு மிகக் கவனத்துடன் தமது சிறுவழிக் கோட்பாட்டைப் பற்றி முகவுரை ஒன்றை அவருக்காக எழுதினார்: "நான் ஆறுதல் நதியில் நீந்திக்களிக்கின்றேன் என நினைக்க வேண்டாம்; அப்படியில்லை! இவ்வுலக ஆறுதலைப் பெறாமல் இருப்பது தான் எனக்கு உண்மையான ஆறுதல்!" தெரேசுவின் நம்பிக்கைப் போராட்டம் குறித்துச் சகோதரி தூய இதய மரியா எதுவும் அறிந்திருக்கவில்லை. தொடர்ந்து தெரேசு எழுதினார்: 'தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளாமலே, அவரது குரல் கேட்கப்பட முயற்சி எடுக்கப்படாமலே. . அந்தத் தெய்வீகச் சுடர் அலைக்கு நடத்திச் செல்லும் ஒரே சாலையை எனக்குக் காட்ட இயேசு விரும்பினார். தந்தையின்

கரங்களில் எவ்வித அச்சமுமின்றித் தூங்கும் சிறிய குழந்தையின் கைய ளிப்புப் போன்றதே இந்தச் சாலை!

தெரேசு பின்னர் இந்தப் பக்கங்களைத் தமது சகோதரியிடம் கொடுத் தார். எதையும் அவர் மிகைப்படுத்தி எழுதவில்லையென்றும், தாம் நிதர்சனத் தெளிவுடனும், அமைதியுடனும் இருப்பதாகவும், உறுதிப் படுத்தினார்.

'அன்பினால் பற்றியெரியும்' இந்தப் பக்கங்களை முதன் முதலாக வாசித்த சகோதரி தூய இதய மரியா, தெரேசு உண்மையிலே ஒரு விலை மதிப்பில்லாப் 'புதையலின்' உரிமையாளர் என்பதை உணர்ந்து கொண்டார். தியானத்தில் ஈடுபடுவோரிடம் தியானத்தின் போது பேசக்கூடாது என்பதை நன்கு உணர்ந்திருந்தாலும், தெரேசுவின் கோட்பாடு, சகோதரி தூய இதய மரியாவை உந்தித் தள்ளியது! "உமது கோட்பாட்டைப் பற்றி நான் உம்மிடம் ஏதேனும் கூற வேண்டுமென விருப்பமா ? நான் சொல்கிறேன்; இறைவனால் நீர் ஆட்கொள்ளப்பட்டுள்ளீர். தீயவர்கள் எவ்வாறு அலகையினால் ஆட்கொள்ளப்படுகின்றார்களோ அவ்வாறே நீரும் இறையருளால் ஆட் கொள்ளப்பட்டிருக்கிறீர்! என்று தெரேசைப் புகழ்ந்தார். ஆனால் அதே நேரத்தில் தன்னுடைய நிலையையும் எண்ணிப் பார்த்துக் கலக்கமுற்றார். ஆன்மீக அனுபவத்தில் தெரேசை விட மிகமிகத் தொலைவில் இருந்தார். தெரேசுவிடம் இருந்த எண்ணங்களும், விருப்பங்களும் தம்மிடத்தில் இல்லாத 'வெறுமைத் தன்மை'யை உணர்ந்து வருந்தினார். இறைவனின் அருளினால் நிறைக்கப்பட்ட தமது ஆன்மீகக் குழந்தையை நினைத்து எவ்வாறு அவரால் பொறாமை கொள்ளாமல் இருக்க முடியும்?

இந்தச் சிறுவழிக் கோட்பாடு குறித்துச் சில சாதகமான எதிர்மறைக் கருத்துக்கள் சகோதரிகளிடையே நிலவின. 'சிறிய பறவையின் உவமை' சகோதரி தூய இதய மரியாவுக்குப் புரியவில்லை. காரணம் தெரேசு அவ்வுவ மையைப் பற்றித் தெளிவாக விளக்கம் தராமல் இருந்திருக்கலாம் அல்லது அவருடைய சகோதரியின் ஆன்மா மிகவும் உயர்ந்த நிலையில் இருந்திருக்க வேண்டும்.

எனவே தெரேசு மீண்டும் விளக்குகின்றார்: கருணை நிறை அன்பின் கொடைகள் அனைவருக்குமே வழங்கப்பட்டுள்ளன. தெரேசு மட்டும் தனிச் சலுகை பெற்றிருக்கின்றார் எனக் கூற இயலாது! அவ்வாறு கூறுவது முற்றிலும் மாறானது. காரணம் அவர் வலிமையற்றவர்; நலிந்தவர். இறைவன் சிறியோரைத்தான் தேர்ந்து கொள்கிறார் என்பதற்குத் தெரேசு ஓர் உயிருள்ள சான்று.



"என் சிறுமையையும், எளிமையையும் விரும்பி ஏற்பது, இறைவனின் கருணையில் அசையாத நம்பிக்கை கொண்டிருப்பது போன்ற பண்புகளை என் சின்ன ஆன்மாவில் கொண்டிருப்பதே இறைவனுக்கு மகிழ்ச்சி தருகின்றது. இயேசு மீது அன்பு செலுத்த வேண்டுமென்றால், அவரது அன்புக்குப் பலியாளாக மாற வேண்டு மென்றால், நலிந்தவராய், விருப்பங்கள் - உயர் குணங்கள் அற்றவராய் இருத்தல் அவசியம்! அப்படிப்பட்டவர்களே இயேசுவினால் ஆட்கொள்ளப்படுவதும், உருமாறுவதுமான அன்பின் செயல்பாட்டிற்கு ஏற்றவர்கள். . . ஒருவர் என்றும் எளியவராக இருக்கவும், சக்தி இழந்தவராக இருக்கவும் இசைய வேண்டும். அது நம்மால் இயலாதது. . . ஆனால் நம்பிக்கை மட்டுமே நம்மை அன்பை நோக்கி அழைத்துச் செல்லும்."

இந்த மூன்று கடிதங்களில் குழந்தை இயேசுவின் திருமுகத் தெரேசு தம்மையும் அறியாமலே ஆன்மீக இலக்கியத்தின் முத்துக்களின் ஒன்றான, "குழந்தைப் பருவத்துச் சிறிய வழியின் பட்டைய"த்தை (Charter) குறித்து எழுதியிருந்தார் எனக் கொன்ராட் தே மீஸ்ட்டர் (Conrad De Meester) கூறுகிறார்.

அக்டோபர் 8 ஆம் நாள் முதல் 15 ஆம் நாள் வரை அருட் பணியாளர் காட்பிரை மதர்லைன் (Godefroy Madeleine) வழங்கிய தியானத்தில் கலந்து கொண்டார். இத்தியானம் அவரைத் தனிமையிலிருந்து விடுவித்தது. அருள்பணியாளர் காட்பிரை பழகுவதற்குச் சற்றுக் கடினமானவர். ஏற் கெனவே அவரைத் தெரேசு சந்தித்து நம்பிக்கைக்கெதிராக தம்மில் எழும் இடர்ப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தார். இன்னும் அந்த இடர்ப்பாடுகள் அவரை விட்டு நீங்கவில்லை. அருட்பணியாளர், தெரேசிடம் எப்பொழுதும் நம்பிக்கை வெளிப்பாட்டுச் செபத்தை அவரோடு வைத்துக் கொள்ளவும், நம்பிக்கையற்ற நிலை அவரை அலைக்கழிக்கும் போது அதனை எடுத்து வாசிக்கவும் ஆலோசனை கூறினார். எனவே, தெரேசுவும் தமது குருதி யிலேயே அந்தச் செபத்தை எழுதி, எப்போதும் தன்னுடனே வைத்திருந்த தமது நற்செய்தி நூலிலே பாதுகாப்பாக வைத்தார். "என் வாழ்வில் இதுவரை எடுத்திருந்ததை விடக் கடந்த ஆண்டில்தான் பெரு மளவு நம்பிக்கை உறுதிமொழிகளை எடுத்துள்ளேன்" எனத் தெரேசு கூறினார். தமது சிற்றறையில், வாசலில் பார்வையில் படும்படி, 'இயேசுவே எனது ஒரே அன்பர்' எனப் பொறித்து வைத்தார். அவரது இடர்கள் அதிகரித்து அவரை அதிகப் பாதிப்பிற்கு உள்ளாக்கியிருக்கக் கூடும். எனவே, தம் நிலைப்பாடியின் மேல் அந்த வரியை எழுதுமாறு அவரைத் தூண்டியது.

தியானத்தின் கடைசி நாள் அக்டோபர் 15 ஆம் நாள் தூய அவிலா தெரசாவின் திருப்பெயர் விழாவாக இருந்தது. அவருடைய பிற சகோதரிகளைப் போலத் தெரேசுவும் கூடையினின்று ஒரு குறிப்பு அட்டை யொன்றை எடுத்தார். ஒவ்வொருவருக்கும் தியானத்திற்காக ஒவ்வொரு இறை வார்த்தைகள் வழங்கும் முறை அவர்களது வழக்கமாக இருந்தது. இறைவனின் மகிமைக்காகவும், உலகின் மீட்பிற்காகவும், அன்னை அவிலா தெரசா கொண்டிருந்த அளவற்ற ஆவலை வெளிப்படுத்தும் வண்ணம் தெரேசு எடுத்த வாக்கியம் அமைந்திருந்தது. அவர் மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தார். உண்மையில் அதுவே அவரது பாதையாகும்.

## பற்றியெரியும் மறைப் பணி ஆர்வம் (நவம்பர் 1896)

தெரேசுவின் இரு அருட்பணியாளர் சகோதரர்களின் கடிதத் தொடர்புகள் வழியாக அவரது மறைப்பணியார்வம் தீவிரமடைந்தது. சீனாவிலிருந்து அருட்பணியாளர் ரூலான் (Roulland) தமது திருத்தூதுப் பணிகளின் ஆரம்பம் குறித்துக் கடிதம் எழுதியிருந்தார். அருட்பணியாளர் நெம்போன் (Nembon) அவர்களுடைய வாழ்க்கையை விளக்கும் "ஓர் மறைப் பணியாளரின் ஆன்மா" என்னும் நூலின் பிரதியை அனுப்பிக் கொடுத்தார். தெரேசுவும் தமது பதினாறு வயதை அடைந்த போது இந்த மறைப்பணியாளர் தமது இருபத்து ஏழாம் வயதில் தோன்கின் (Tonkin) நகரில் இறந்தார். தெரேசுவின் வேண்டுகோளுக்கிணங்க, அருட்பணியாளர் ரூலான் தமது வாழ்வின் முக்கிய நாள்களைக் குறித்து அனுப்பினார். அக்குறிப்பிலிருந்து தமது உறுதிமொழி அளித்த நாளான 1890 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாள், அருட்பணியாளர் ரூலான் தமது அழைத்தலை இழப்பதிலிருந்து தப்பித்துக் கொண்டார் என்பதைத் தெரேசு தெரிந்து கொண்டார். "ஆறு ஆண்டுகளாக என் சகோதரர் ஒருவர் மறைப்பணியாளராகத் தம்மையே தயாரித்து வந்தார் என்பதை நான் அறியவே இல்லை. தற்போது அச்சகோதரர் இயேசுவின் திருத்தூதர் ஆகிவிட்டார். இந்த மறை உண்மையை இயேசு எனக்கு வெளிப்படுத்துகின்றார். என் சகோதரர் மீது நான் இன்னும் அதிகமாகவே அன்பு செலுத்தவும், அவர் பிறரால் அன்பு செய்யப்படவும் தேவையான ஆவலை என் இதயத்தில் மேலும் பெருகிடச் செய்யவே இயேசு இம்மறை உண்மையை எனக்கு வெளிப்படுத்துகின்றார்" என்று கூறித் தமது மறைப்பணி ஆர்வத்தை தெரேசு புலப்படுத்துகின்றார். இந்த ஆவலே அவரது உள்ளத்தில் அணையாமல் என்றும் வளர்ந்து வந்தது. தெளிவான வார்த்தையில் அதற்கு விளக்கமும் தந்து வந்தார்.

மறைத் தியாகமளிக்கும் அருளை இறைவன் அருள வேண்டும் எனப் புத்தாண்டு வாழ்த்தாகத் தம் சகோதரருக்குத் தெரேசு அறிவித்தார். அவருடைய சிறு முடிக்கற்றையை நினைவுச் சின்னமாக அவர் இறப்பதற்கு முன்பு அனுப்பித் தருமாறு அவரை வேண்டினார். பிரான்சு நாட்டுக் குடியரசின் ஆணைகள் துறவற சபைகளின் இருப்புக்கு ஊறுவிளைவிக்கும் அச்சம் நிலவியது. எனவே, தானும் மறைத் தியாகியாக இறக்கும் அருள் கிடைக்கும் எனத் தெரேசு நம்பிக்கை கொண்டிருந்தாரோ ? "மறைத் துன்புறுத்தல் நிகழப் போவதாகப் பரவிய வதந்திகள், எங்களை எரிமலையின் நடுவே வாழ்வதைப் போன்றே நினைக்க வைத்தன' என்று பின்னர் தெரேசு கூறினார்.



நவம்பர் திங்களில் தெரேசுவின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. எனவே தோன்கின் நகருக்கு மறைப் பணிக்காக அவர் புறப்பட்டுச் செல்வதாகப் பேச்சு எழுந்தது- அவர் குழுப்பணிகள் அனைத்திலும் குறிப்பாக இரவு மன்றாட்டிலும் கூடத் தவறாமல் பங்கு கொண்டார். எனவே, மறைப்பணியில் தாம் ஈடுபடப்போவது குறித்து "இறைவனின் விருப்பத்தை அறிய அடையாளம் ஒன்று தரும்படி" அவரது உற்ற நண்பரும் இளம் மறைத்தியாகியுமான தெயோஃபான் வெனார்த் (1829 - 61) (Theophane Venard) என்பவருக்கு நவநாள் தொடங்கினார். அவருடைய வாழ்க்கை வரலாற்றையும், கடிதங்களையும் தெரேசு வாசித்திருந்தார். அவரது இளமை, துடிப்புணர்வு, கலகலகப்பு, தன் குடும்பத்தின் மீது அவர் கொண்டிருந்த பாசம், அவரது மரணம் போன்றவை தெரேசுவின் மனத்தை கவர்ந்தன. அவரது வாழ்க்கை மிக எளிமையானதாக இருந்ததால் தூய லூயிஸ் கொன் சாக் -கைவிட இவரிடம் தெரேசு அதிகம் அன்பு செலுத்தினார்.

தெரேசின் மன்றாட்டு கேட்கப்பட்டது; தெளிவான விடை கிடைத்தது; அடையாளமும் அருளப்பட்டது. நவநாள்களின் இடைப்பட்ட நாள்களிலேயே தெரேசு மீண்டும் இருமத் தொடங்கி விட்டார். அவரது உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டுக் குன்றியது. 1896 ஆம் ஆண்டின் குளிர் காலத்தில், கால்களுக்குச் சூடேற்றும் கருவியைப் பயன்படுத்துமாறு தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக், அவருக்கு அனுமதி அளித்தார். தெரேசு அதனை மிகவும் இன்றியமையாத நேரத்தில் மட்டுமே பயன்படுத்தினார். ஒரு நாள் தெரேசு இதைப் பற்றி சகோதரி மூவொரு இறைவனின் மரியாவிடம், "தூயவர்கள் தியாமென்னும் கருவியோடு விண்ணகம் செல்கின்றார்கள்; நான் எனது கால் சூடேற்றும் கருவியோடு விண்ணகம் செல்லப் போகின்றேன். இது எனக்கு ஏற்றதாகத் தெரியவில்லை" என்று

நகைச்சுவையாகத் கூறினார். அவர் பெரும் வேதனைகளுக்கு பிறகு தழும்புகள் உண்டாக்குகின்ற மருந்துக் கலவைகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. ஏழு மணிக்கு முன்பாக உதவி மருத்துவப் பணியாளரான சகோதரி ஜெனிவியேவ் அவருடைய உடலை அழுத்தித் தேய்த்து உராய்வு முறை மருத்துவ உதவி செய்தவதற்காக அவரை எழுப்பினார். இத்தகைய கடின மருத்துவத்தினால் டிசம்பர் திங்களில் ஒரு நாள் மிகவும் களைப் புற்றுத் தமது அறையை விட்டு வெளியேற இயலாமலிருந்தார். அப்போது கேரென் குடும்பத்தினர் அவருக்கு கன்றின் இறைச்சியையும், இனிப்பு கலவைகளையும் உணவாக அனுப்பி வைத்தனர். ஆனால் தம்மால் இயன்ற போதெல்லாம் அவர் எழுந்து திருப்பலிக்குச் சென்றார். "திருவிருந்து அருந்து வதற்காக எவ்வளவு வேதனையையும் அனுபவிப்பது பெரிதல்ல" என்றார்.

தமது புகுமுகத் துறவு நிலைத் துறவினிகளைக் கண்காணிப்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்தார். சகோதரி மரிய மக்தலேன் "தமது ஆன்மாவின் அந்தரங்கம் வெளிப்பட்டு விடும் என்று உணர்ந்து" தெரேசுவை விட்டு அகன்று கொண்டே சென்றார். சகோதரி மூவொரு இறைவனின் மரியாவைத் தெரேசு சில நேரங்களில் 'பொம்மை' என அழைத்தார். அவர் குழந்தை இயேசுவோடு விளையாட அனைத்து நுணுக்கங்களையும் கற்றிருந்தார். இயேசுவோடு இவர் விளையாட்டை மாற்றும்படியும், குறிப் பாக அவரோடு விளையாடும் எறி ஆட்டத்தைக் (Skittles) கைவிடும்படி அறிவுறுத்தினார். ஆனால் இயேசுவின் நூலிழைக் கட்டையாகும்படியும் (Spinning Top) ஆதனால் அவரிடமிருந்து கிடைக்கும் துயர்களை ஏற்றுக் கொள்ளும்படியும் கூறினார். சகோதரி தூய வளனின் மரியாவுக்கு நகைச்சுவையாக, ஆற்றுப்படுத்தும் வார்த்தைகள் அடங்கிய குறிப்புகள் எழுதினார்.

நேரமின்மையாலும், உடல் வலிமையின்மையாலும் வழக்கம் போல எழுதும் நாடகத்தைத் தெரேசு இந்த முறை கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு எழுத முடியவில்லை. எனினும் 'குழந்தை இயேசுவின் பறவைக் கூண்டு" என்கிற கவிதை மட்டும் எழுதி நிறைவு கொண்டார். கார்மல் துறவினிகள், குடிலின் குழந்தையை மகிழ்விக்கக் கூண்டில் பவனி வருவதாக வருணித் தார். ஆனால் ஒரு நாள்:

**உம் கூண்டிலிருந்து பறவைகள் அனைத்தும்**
**விண்ணகம் நோக்கிச் சிறகடித்துச் செல்லும்**

. . . . எனக் கவிதையை முடித்தார்.



இக்கவிதையை எழுதும்போது பத்து ஆண்டுகளுக்கு முன்பாகத் தமது முன் இளமைப் பருவத்தில் புய்ஸ்ஸொனேவில் அவர் அமைத்திருந்த பறவைக் கூண்டை மறவாமல் நினைவு கூர்ந்தார்.

ஆனால் தெரேசு விண்ணகம் பற்றித் தற்போது அதிகம் எண்ணிக் கொண்டிருந்தார். அவ்விண்ணகம் கடந்த காலத்தை விட, தற்போது அதிக மாக வியப்புக்குரிய முறையில் மறைக்கப்பட்டிருந்தது. டிசம்பர் 28 ஆம் நாள் மாசில்லாக் குழந்தைகள் விழாவை, இளம் வயதிலேயே இறந்து போன தனது நான்கு சகோதர, சகோதரிகளின் விழாவாகக் கொண்டாடினார். இறைவன் முன்பு "வெறுங்கையர்களாய்" வந்து நிற்கும் குழந்தைகளின் நிலை குறித்துப் பல மாதங்களாகத் தியானம் மேற்கொண்டிருந்தார். இந்தக் கருத்தை மையமாகக் கொண்டு சித்திரம் ஒன்றைத் தீட்டினார். அச்சித்திரத்தின் அடியிலேயே தூய பவுலடியார் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து பொருத்தமான வார்த்தைகளை மேற்கோள் காட்டியிருந்தார். "கடவுள் ஒருவருடைய செயல்களைக் கணிக்காமலே, அவரைத் தமக்கு ஏற்புடையவர் எனக் கருதுவதால் அம்மனிதர் பேறு பெற்றவர் (உரோ 4 . 6) வேலை செய்தவர் பெறும் கூலி நன்கொடையாகக் கருதப்படுவதில்லை; அது அவர்கள் உரிமை (உரோ. 4.4). எனவே, வேலையில்லாதவர்கள் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர். (உரோ 3: 24)

டிசம்பர் திங்கள் 28 ஆம் நாள் தெரேசு எழுதிய "விண்ணில் வாழும் என் சிறிய சகோதரர்களுக்கு" என்ற கவிதை, குழுவில் பாடப்பட்டபோது எதிர்பாராத அவமானம் அடைந்தார். தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்தான் குழுவில் தெரேசின் பாடலைப் பாடுவதற்கு இசைவு அளித்திருந்தார். ஆனால் அதனைக் குழுவில் இசையமைத்துப் பாடியபோது, இவ்வாறு தெரேசின் பாடலுக்கு இசையமைத்துப் பாடுவது அவரது தற்பெருமைக்கு உணவளிப்பது போன்றதாகும் என அவரே உரத்த குரலில் சொல்லிவிட்டு குழு அறையை விட்டுக் கோபமாக வெளியேறினார். சில நிமிடங்களுக்குப் பிறகு இரவு மன்றாட்டின் போது தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் அமைதி நிலையை மீண்டும் அடைந்தார்.

## என் கதையும் முடியும் நேரமிது (1897 ஜனவரி முதல் மார்ச் வரை)

1897 புத்தாண்டு பிறந்தது. தெரசுவின் 24 ஆம் வயதும் மலர்ந்தது. ஜனவரி 9 ஆம் நாள் தம் அன்பு அன்னை ஆக்னெசிடம் "நான் விரைவில்

அங்குச் செல்வேன் என்றே நம்புகிறேன்." என்று கூறினார். அதே திங்கள் 27 ஆம் நாள் உரோமை நகரில் உள்ள 83 வயதான சிமியோன் என்ற சகோதரருக்கு "எனது மண்ணகப் பயணம் அதிக நாள்கள் நீடிக்காது என்று நம்புகின்றேன்" எனக் கடிதம் எழுதினார். பிப்ரவரி திங்கள் அருட் பணியாளர் பெல்லியர் (Belliere) அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் 'அன் பினால் வாழ்வோம்' (Vivred' Amour) என்ற தமது கவிதையை மேற்கோள் காட்டி, "எனது நாட்டின் கடப்புப் பயணம் குறுகியதாகவே இருக்கும் என்பதே எனது நம்பிக்கை" என்று குறிப்பிட்டார். மேலும் "நான் எதிர் பார்த்ததை இயேசு நிறைவேற்றினார், விண்ணகத்தில் உமது சிறிய சகோதரியாக நான் இருப்பேன் என உமக்கு வாக்களிக்கிறேன்'' என்று அவருக்கு உறுதியளித்தார்.

இந்த மாதங்களில் அவர் எழுதிய எழுத்துக்கள் அனைத்தும் அவரது இறுதி விருப்பமாகவும், வெளிப்பாடாகவும் அமைந்தன. ஜனவரி 21 ஆம் நாள் தலைமைச் சகோதரி ஆக்னெசின் நாம விழாவின் போது "என் ஆனந்தம்" என்ற கவிதையை அவரிடத்தில் கொடுத்த போது "என் முழு ஆன்மாவும் அங்கு உள்ளது" என்று கூறினார்.

விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் இடர்ப்பாடுகள் இரட்டிப்பாகத் தீவிரமடைந்ததாகத் தோன்றின. குழந்தை இயேசுவின் தெரேசு, சகோதரி தூய அகுஸ்தினாரின் தெரேசிடம் எப்பொழுதும், எதிலும் வெறுப்புணர்வு கொண்டதாக உணர்ந்தார். ஆனால் அவரிடம் முழு விருப்பத்துடன் அன்பு செலுத்தினார். அந்தச் சகோதரியிடம் "நிலையான வாழ்வில் எனக்கு நம்பிக்கையில்லை. இந்த அழிவுறும் வாழ்விற்குப் பிறகு எதுவும் இல்லை என்றே எனக்குத் தோன்றுகின்றது. நான் மூழ்கியிருக்கும் இருளைப் பற்றி உமக்கு என்னால் வெளிப்படுத்த இயலாது" என்று தமது இதயக் குமுறலை வெளிப்படுத்தினார். ''என் ஆனந்தம்" என்னும் கவிதை வரிகள் இந்தப் போராட்டத்தின் வன்முறையை எதிரொலிக்கின்றன:

நீலவானம் நிறம்மாறிக் கருமையை ஏற்கும் போது
என்னவர் என்னைக் கைநெகிழ்வதாய்த் தோன்றும்போது
இருளின் கடலில் மிதந்து கிடப்பதே என் ஆனந்தம்
மறைந்து அதனுள் ஒளிந்து கிடப்பதே எனக்கின்பம்

இயேசு எந்தன் ஒரே அன்பர்
அவரது தூய விருப்பமே எனது ஆனந்தம்!



எனவே அச்சமின்றி நான் வாழ்கின்றேன்:
இரவையும், பகலைப் போல ரசிக்கின்றேன்.

. . . எனதன்பை நான் இரட்டிப்பாக்குகின்றேன்:
என் நம்பிக்கையின்று அவர் தம்மை மறைக்கும் போது,
. . . வாழ்வென்ன, சாவென்ன எனக்கு?
இயேசுவே உம்மை அன்பு செய்வதே என் ஆனந்தம்.

1861 ஆம் ஆண்டு தெயோஃபான் வெனார்த், தோன்கின் நகரில் இளம் மறைத் தியாகியாகச் சிரச்சேதம் செய்யப்பட்டார். அதன் 36 ஆம் ஆண்டு நிறைவின் நினைவாகத் தெரேசு இயல்பாக "என் ஆன்மாவின் நிலை இது" என்ற தலைப்பில் கவிதையொன்று எழுதினார். அவருடைய நண்பரைப் போலவே மறைப்பணிப் பேராவலினால் வலிமையுடன் போராடினார் என்பதை இந்தக் கவிதை வரிகள் விளக்குகின்றன.

அவரது ஆசியைப் பெற்ற
என் வலிமையிழந்த அன்பும், சிறு துயர்களும்
எங்கும் எவரையும் அன்பு செய்யப் பணிக்கும்!

அதே நாள், உணவறையில் உணவு பரிமாறிக் கொண்டிருந்த போது கையில் வைத்திருந்த தட்டால் சன்னல் கண்ணாடியை அறியாமல் உடைத்து விட்டார். இச்செயலால் வருத்தமுற்று கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த தெரேசுவிற்குச் செலின் உதவி செய்து, உடைந்த கண்ணாடித் துகள்களைச் சேகரித்தார். அப்போது தெரேசு செலினிடம் 'என் அன்பு சகோதரர் தெயோஃபானுக்காக அர்ப்பணிக்கும் பொருட்டு ஏதேனும் பெரியதொரு துன்பத்தைக் கேட்டிருந்தேன், இதோ கிடைத்து விட்டது!" என்று கூறினார்.

அதிகக் களைப்புற்றிருந்தாலும் தமது எழுத்துப் பணியைத் தெரேசு கைவிடவில்லை. குழுவில் மிகவும் வயது முதிர்ந்த சகோதரி ஸ்தனிஸ்லாஸ் அவர்களின் கார்மல் துறவறப் பொன் விழாவினைச் சிறப்பிக்கும் பொருட்டுத் தமது எட்டாவது படைப்பான "தூய ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா" (St. Stanislaus Kostka) என்ற நாடகத்தை எழுதினார். இயேசு சபையில் புதுமுகத் துறவு நிலையில் பயிற்சி பெற்று வந்த இளைஞர் ஸ்தனிஸ்லாஸ் காட்சி ஒன்று கண்டார். அக்காட்சியின் போது தூய பார்பரா அவருக்குத் திருவிருந்து கொணர்வதாகக் கண்டார். இந்நிகழ்வு தெரேசுவின் மனத்தை மிகவும் கவர்ந்தது; அவரைச் சிந்திக்க வைத்தது. இவ்வுலகில் வாழும் போது தூய

பார்பரா, அருட்பணியாளர் பணியில் தம்மை இணைத்துக் கொள்ள விரும்பியிருப்பாரோ? அந்த விருப்பத்தை இறைவன் நிறைவேற்றித்தர விரும்பியிருப்பாரோ? என்று எண்ணத் தோன்றியது. சந்தேகத்திற்கிடமின்றி அருட்பணியாளராக அதிகம் விரும்பிய தெரேசின் நிலையும் இவ்வாறே இருக்கும். ஆனால் அனைத்திற்கும் மேலாகத் "தான் இறந்த பிறகும் நன்மைபுரிய வேண்டும்" என்ற ஒரே ஆவலில் இளைஞர் தெயோஃபால் உறுதியாயிருந்தார். அதே ஆவல் தெரேசுவின் உள்ளத்திலும் வளர்ந்து கொண்டிருந்தது.

மார்ச் திங்கள் மூன்றாம் நாள் சாம்பல் புதனன்று மறைப்பணி நாடுகளின் காப்பாளரான தூய பிரான்சிஸ்கு சவேரியாருக்கு நவநாள் தொடங்கினார். அந்நவநாட்களின் போது தெயோஃபானைப் போலத் தாமும் இறந்த பிறகும் நன்மை புரிய வேண்டும் என்ற கருத்துக்காக மன்றாடினார். இந்த நவநாள்களில் கேட்கும் அருள் கிடைக்காமல் போகாது என்பது அவருடைய நம்பிக்கை. மார்ச் திங்கள் 19 ஆம் நாள் தூய வளனாரின் விழாவன்று, அவருக்காக அமைக்கப்பட்டிருந்த செபமனையில் (Hermitage) இதே கருத்திற்காக இறைஞ்சி வேண்டிக் கொண்டிருந்தார். சகோதரி தூய இதயத்தில் மரியா அங்குத் தெரேசுவின் உடல் நலிவுற்ற நிலையிலும் மன்றாடிக் கொண்டிருப்பதைக் கண்டு, அவரது அறைக்கு சென்று ஓய்வெடுக்கும்படி அவருக்கு அறிவுறுத்தினார். அதேநாள் மாலையில் சைனாவிலிருக்கும் தம் ஆன்மீக சகோதரர் அருட்பணியாளர் ரூலானுக்குக் கடிதம் எழுதும் போது "ஆன்மாக்களை மீட்பதற்காக என்னையே நான் மறக்க விரும்புகின்றேன். என் மரணத்திற்கு பிறகும் அவர்களை மீட்க விரும்புகிறேன்" என்ற குறிப்பிட்டார். அனுவா (Hanoi) நகரிலுள்ள கார்மல் இல்லத்திற்குச் செல்லும் ஆவலை இல்லத் தலைவி மரி தே கொன்சாக்கிடம் மீண்டும் தெரிவித்தார். அவரும் தெரேசுவுக்கு மறைப்பணி அழைத்தல் உண்டு என்பதில் நம்பிக்கைக் கொண்டிருந்தார். ஆனால் 'வாளுக்கேற்ற வாள் உறை இல்லை' என்பதையும் அறிந்திருந்தார். தெரேசுவின் உடலில் வலிமையில்லாததைக் கருத்தில் கொண்டு அவருடைய விருப்பத்திற்கு இணங்கவில்லை. இந்நிலையில் மனத்தில் அசைபோட்ட வாறே, "உடலோடும், ஆன்மாவோடும் நாம் படைக்கப்பட்டிருப்பது உண்மையில் நமது பணிக்கு ஏற்றதல்ல; குறிப்பாக நமது உடல் மெல்ல மெல்ல வலிமையிழந்து நலிவுறும் போது பணி செய்யும் வாய்ப்பும் குறைந்து விடுகிறது" என்று எண்ணி அங்கலாய்த்தார்.

ஆயினும் தெரேசு தமது பணியைத் தொடர்ந்தார். சகோதரி மூவொரு




இறைவனின் மரியாவிடம், "நான் இறந்தால் யாராவது ஒருவர் காண்பார்" என்றார். தனது இறப்பைக் குறித்து யாருக்கும் எவ்வித வருத்தமும் ஏற்படக்கூடாது என்பதே அவர் எண்ணம். புகுமுகத்துறவுப் பயிற்சி பெற்ற தமது கடைசி கன்னிகையான சகோதரி திருவிருந்தின் மரியாவின் உறுதிமொழியின் நினைவாக "என் படைக்கலன்கள்" என்ற கவிதையை எழுதினார். அதில் உடல் நலமில்லாதவர் தம்மையே ஒரு போராளியாகச் சான்று பகரச் செய்கிறார். அன்று மாலை இனிய குரலுக்குச் சொந்தமான தெரேசுவின் மாமா மகள் மரி கேரென், குழுவின் முன்னிலையில் அழகாகப் பாடினார்:

"ஓய்வின்றி, இடைவேளையின்றி நான் போராட வேண்டும்.
. . . நரகத்தின் கடும் சினங்களை நான் வெல்ல வேண்டும்"

பின்வரும் ஐந்து வரிகளோடு தெரேசு தமது கவிதையை முடிக்கின்றார்:

புன்னகையிலே தோட்டாக்களைச் சந்திப்பேன்
படைக்கலன்களை என் கரங்களில் தாங்கி நிற்பேன்
போர்க்களத்தில் உன் புகழ்பாடிக் கொண்டே
என் இனியவா!
உம் கரத்தில் நான் உயிர்துறப்பேன்.

- இதுவே தெரேசுவின் மரண வெளிப்பாடு; மரண பட்டையம், அதன் உட்கருத்தை அறியாமல் குழுக் கன்னியரது செவியில் இப்பாடல் ஒலித்தது. குழு அறையில் நெருப்பைச் சுற்றிக் கூடியிருந்து அவருடைய சகோதரிகளிடம் தெரேசு பகிர்ந்து கொண்ட இவ்வார்த்தைகளே அவருடைய கடைசி வார்த்தையாக அமைந்தது.



தெரேசு இறுதியாக வாழ்ந்த அறை (1894 - 97)

# 11

## நோய், வேதனை, மரணம்

(ஏப்ரல் முதல் செப்டம்பர் 1897 வரை)

*"அன்புக்காக வாழ்வது தாபோர் மலைமேல் ஒருவர் கூடாரம் அமைத்துக் கொள்வதல்ல! மாறாக இயேசுவோடு கல்வாரி மலைமேல் ஏறிச் செல்வது".*

### லப் . . டப் . . லப் . . டப் (ஏப்ரல் 1897)

ஏப்ரல் திங்கள் வரை தெரேசு நன்றாக இருந்தார். குழுச் செயல் பாடுகளில் பங்கேற்று வந்தார். இதைக் கண்ட சகோதரிகள் அனைவரும் தெரேசு உடல் நிலை மிகவும் மோசமான நிலையை அடைந்து கொண்டிருப்பதைக் கண்டுணரவில்லை. இந்நிலையுணர்ந்த தெரேசு பின்னர் கூறினார்: "நான் உண்மையிலே நோயின் கொடுமையில் வாட்டி வதைக்கப்படுகிறேன் என்பதை அவர்களால் நம்பமுடியவில்லை."

ஆனால் குடும்பத்தினர் அவரிடம் காட்டிய சிறப்பு அக்கறை உறவினர்களுக்கு உண்மையை உணர்த்தியது. ஏப்ரல் திங்கள் இறுதியில் சகோதரி ஜெனிவியேவ் உரோமையிலிருந்த சகோதரர் சிமியோனுக்கு இவ்வாறு எழுதினார்: 'உங்களது மற்றொரு சிறிய கார்மல் சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசின் உடல் நிலை மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. இந்த அழகிய மலரைத் தெய்விகத் தலைவர் பறிப்பதைக் காண அனைவரும் காத்திருக்கின்றோம்." ஏப்ரல் திங்கள் 4ஆம் நாள் மரியா கேரொன் தம்
201

பெற்றோருக்கு அனுப்பிய தெரேசின் முதல் உடல்நிலை அறிக்கையில் தெரேசு செரிமானப் பிரச்சனையாலும், தினமும் காய்ச்சலாலும் துன்புறு வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாளும் காலையில் சரியாக மூன்று மணிக்குக் காய்ச்சல் வந்ததாகத் தெரேசு தமது குறிப்பில் கூறியிருந் தார். மருத்துவர் தே கொர்னியேர் (De Cornniere) அழைக்கப்பட்டிருந்தார்.

நாள்கள் கடந்தபோது, வாந்தி, பயங்கர நெஞ்சுவலி, தொடர் இருமல், இருமலின் போது குருதி வெளியேறுதல் போன்றவை ஏற்பட்டுத் தெரேசை அதிக வேதனைக்குள்ளாக்கின. "அன்பு தந்தையே! இந்தத் துயரச் செய்தியை அறிவிப்பதால் உங்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கின்றேனோ என்ற அச்சம் நிலவுகின்றது. ஆயினும் அறிவிக்காமல் என்னால் இருக்க இயலவில்லை. உண்மையிலேயே நாங்கள் அனைவரும் மிகவும் வருத்தமுற்றிருக்கின்றோம். தெரேசுவின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருக்கின்றது. மிகுந்த சோர்வுற்ற நிலையிலிருக்கின்றார். அவரது வேதனை எவ்வளவு கொடியதாக இருக்கின்றதென்றால், அவர் விரைவில் இறக்கப் போவதாக அவருக்கே எண்ணத் தோன்றுகின்றது" என மரியா கேரென் ஜூன் 5ஆம் நாள் தம் தந்தைக்குக் கடிதம் எழுதினார்.

"புகைவண்டி நிலையத்தை அடைகின்ற போது, ஒரு புகை வண்டி எழுப்பும் ஒலியைப் போல நான் இருமினேன். . . இருமினேன். இருமிக் கொண்டேயிருந்தேன்" எனத் தெரேசு கூறுமளவுக்குத் தொடர் இருமலும், வலிப்புகளும் அவருடைய உடல்நிலையை நலிவுறச் செய்தன. இதனால் குறிப்பாக மனமகிழ்ச்சி, வழிபாட்டு மன்றாட்டுக்கள், பொதுப் பணிகள் போன்ற குழுப் பணிகளில் ஈடுபடுவதைச் சிறிது சிறிதாக நிறுத்தி விட்டார். மே 18 ஆம் நாள் அனைத்துப் பணிகளிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார். உயிர்ப்பு வாரத்தில் தலைமைச் சகோதரி ஆக்னெசிடம் அதிக நேரம் பேசிக் கொண்டிருந்தார். அவரும் தெரேசுவினுடைய சில வார்த்தைகளைக் குறித்துக் கொண்டார். அதுவே அவரது "கடைசி உரையாடல்களின்" ஆரம் பம். அவை ஆறு மாதங்களாக அவர் இறக்கும் வரை தொடர்ந்தன.

## யார் அந்தத் தியானா? (19 ஏப்ரல் 1897)

பாரீஸ் நகரில் உள்ள புவிஇயல் சங்க அறையில் உயிர்ப்பு வாரத்தின் திங்கட்கிழமையன்று இரவில் அனைவரும் ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருந்த பத்திரிக்கையாளர்கள் மாநாடு நடைபெற்றது. இறுதியாக, செல்வி தியானோ வோகான் (Diana Vaughan) தம்மையே வெளிப்படுத்தி மக்களிடம் பேசவிருந்தார். சில நாள்களாகவே அவரிடம் தம்மை அறிமுகப்படுத்தும்



படி அழைப்பு விடுக்கப்பட்டது. செர்மன் நாட்டு இயேசு சபையினர் சிலர் தியானாவின் இருப்பைப் பற்றி வினாக்கள் எழுப்பத் தொடங்கினர். ஆனால் தியானா அவர்களுக்குப் பதிலளிக்கும்போது ஃபிரிமேசன்ஸ் (Freamasons) முறையைக் காட்டிக் கொடுத்து விட்டதால் தமது உயிருக்கு அஞ்சி மறைவாயிருப்பதாகக் கூறினார். எனினும் இறுதியாக மக்கள் முன்னிலையில் தோன்ற முடிவெடுத்தார். அன்று மாலை அந்த அறை முழுவதும் நிரம்பியிருந்த மக்கள் கூட்டம் அவருக்காகக் காத்திருந்தது.


புரட்சியாளர் லெயோ தக்சில்

ஆனால் பெயருக்கேற்ற அழகிய இளம் பெண்ணுக்குப் பதிலாக, உயரம் குறைந்த, பரு மனான, குறைவான தலை முடியையும், குறுந்தாடியையும் கொண்ட ஒரு மனிதர் மேடை யில் தோன்றினார். அவரது பெயர் லெயோ தக்சில் (Leo Taxil) 1854 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாள் மார்செய்லஸ் (Marseilles) என்னுமிடத்தில் பிறந்த இவரு டைய இயற்பெயர் காபிரியேல் ஜோகண்ட பேஜஸ் (Gaberiel Jogant Pages). கத்தோலிக்கப் பத்தி ரிக்கையாளர்களும், குறிப்பாக அருட்பணியாளர்களும், எதிர் அருட்பணியளார்களும் குழுமியிருந்த அந்த அறையில் அனைவருக் கும் முன்பாகத் தமது முகமூடியை அகற்றி னார். அவரே தியானாவோ கான்! இந்தத் தியானா உயிர் வாழவில்லை. மாறாக தக்சி லின் வளமையான கற்பனை யில் மட்டுமே வாழ்ந்து வந்தார். பன்னிரெண்டு ஆண்டுகளாக அவரது எழுத்துக்கள் ஆயிரக்கணக்கான வாசகர்களை, அவர் கூறுவதை எளிதில் நம்பக்கூடியவர்களாக மாற்றியிருந்தன. கிறிஸ்தவர்கள், அருட் பணியாளர்கள், ஆயர்கள், திருத்தந்தையும் உட்பட அனைவரையும், ஃபரிமேசன் குழுவினரையும் மாற்றியிருந்தன. "திருவிருந்தின் நவநாள்"

என்னும் நூலையும் அவர் எழுதியிருந்தார். 'அலகையின் ஆட்சிக் கதைகள்' இளமையிலேயே எதார்த்தமாக நகைச்சுவைகளில் சிறப்படைந்திருந்த அவருடைய மூளையின் வெளிப்பாடு தான். அவர் "தமது வாழ்வின் ஆடம்பரமான, தந்திர ஏமாற்று வித்தைகளால்" பெருமை அடைந்தார்.

ஏறக்குறைய அங்குக் கூடியிருந்த அனைவரும் அந்த ஏமாற்றுக் காரனின் மேல் கைகளை வைக்கப் பார்த்தனர். ஆனால் காவலர்களின் பாதுகாப்பினால் அனைவர் கண்களிலுமிருந்து தப்பி மறைந்தார். தியானாவின் மாநாட்டை விளக்கும் நிழற்படக் காட்சிகளும் நடைபெறவில்லை. லெயோ தக்சிலின் சொற்பொழிவின் போது ஒரேயொரு புகைப்படம் மட்டுமே சுவரில் காட்சி தந்தது. அது ஜோன் தார்க்கின் புகைப்படமே.

ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் "லே நோர்மேன்" என்னும் இதழ், சிறப்பு மிக்க இந்தப் பத்திரிக்கையாளர் மாநாட்டைப் பற்றித் தெளிவான செய்தியொன்றை வெளியிட்டது. தியானாவின் மீது 'நம்பிக்கை' கொண்டிருந்த கத்தோலிக்கர்கள் வெட்கமடைந்தனர்; ஆனால் 24 ஆம் நாள், முதல் பக்கத்திலே அதே பத்திரிக்கை மாநாட்டைப் பற்றி நீண்டதொரு கட்டுரையை லே நோர்மன் இதழ் வழங்கியது. லிசியூ கார்மலில் உள்ள மார்ட்டின் சகோதரிகள் அக்கட்டுரையின் கடைசிப் பகுதியை வாசித்திருந்தால் அதிர்ச்சி அடைந்திருப்பர். மாநாட்டைப் பற்றிக் கூறுவதற்கு வேறு என்ன இருந்தது? நூற்றுக்கணக்கான படங்களை காட்டியிருக்க வேண்டிய தியானா ஒரேயொரு புகைப்படத்தை மட்டும் காண்பித்திருந்தார். கார்மல் இல்லத்தில் தியானாவின் பொருட்டு நடித்த நாடகத்தில் தூய கத்திரீனை, ஜோன்தார்க் தமது காட்சியில் கண்ட போது எடுத்த புகைப் படமே மாநாட்டில் காட்டிய அந்தப் புகைப்படம். அப்புகைப்படத்தைப் பார்த்தவர்கள் இது என்ன துறவற இல்லமா? அல்லது தக்சிலின் இல்லமா! என்று கேட்கவே எண்ணுவார்கள்.

இதைப்பற்றித் தக்சில் உண்மையை எடுத்துக் கூறியிருந்தார். லிசியூ கார்மல் இல்லத்திலிருந்துதான் இந்தப்புகைப்படம் அவருக்குக் கிடைத்தது. கத்திரீனாகவும், ஜோன் தார்க்காகவும் நடித்தவர்கள் செலினும், தெரேசுவுமே தான்! ஏப்ரல் 19 ஆம் நாள் நடைபெற்ற மாநாட்டில் இருவரும் முக்கிய இடம் பெற்றனர். சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசு அனுப்பியிருந்த புகைப்படத்தையே லெயோ தக்சில் பயன்படுத்தினார்.

கார்மல் கன்னிலகைக்கு இது ஒரு மாபெரும் அதிர்ச்சியே. உடல் நலமில்லாமல் இன்னும் நம்பிக்கையின் இருளிலே வாழ்ந்து கொண்டிருந்த



தெரேசை இந்நிகழ்வு ஆழமாய்ப் பாதித்தது. அவர் "பணிவுடைமையின் வெற்றி" என்னும் கவிதையை எழுதியிருந்தார். இப்போது அவமானத்தின் அடிவேரையே தொட்டு விட்டார்; எனினும் அமைதி காத்தார். தியானாவிடமிருந்து அவர் பெற்றுக் கொண்ட கடிதத்தைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் வீசினார். அவரது வாழ்வின் அச்சாணியாக இருந்த நிறை உண்மையையே நகைப்புக்குள்ளாக்கி, கேலிப் பொருளாக்கிய இந்த இறை அவச்செயல்களால் குழம்பிப் போய்விட்டார். அப்படியெனில் இவை அனைத்தும் மாயைகள் தாமோ? இந்த வெளிப்பாடு நடந்து முடிந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு தியானாவை மனத்திற்கொண்டு, "நம்பிக்கையின்றி, அருட்கொடைகளைத் தவறாகப் பயன்படுத்தி, விலை மதிப்பில்லாச் செல்வங்களை இழக்கும் ஆன்மாக்களுக்கு" என்று எழுதினார். அந்த ஏமாற்று வித்தகரும், தாமும் இருளில் வாழ்ந்து வருவதை ஏற்றுக் கொள்ளவேண்டும்; அவருக்காகவும், அவரைப் போன்ற அனைவருக் காகவும், தெரேசு இவ்வாறு மன்றாடினார்:

"இறைவா! உம் குழந்தை உமது தெய்வீக ஒளியை அறிந்து கொண்டேன். அவர் தமது சகோதரர்களுக்காக உமது மன்னிப்பை இறைஞ்சுகின்றார். நீர் விரும்புவது வரை அவர் கசப்பான உணவை உண்ணச் சம்மதிக்கிறார். உமது நாள் வரும்வரை, குற்றம்புரிந்து அமர்ந்து கசப்பான உணவை உண்ணும் இந்தப் பந்தியைவிட்டு விலக அவர் விரும்பவில்லை. ஆனால், 'எம்மீது இரக்கம் வையும்! ஏனெனில் நாங்கள் குற்றம் புரிந்தவர்கள்' என அவர் தம் பெயராலும், தம் சகோதரர்கள் பெயராலும் இறைஞ்சிக் கேட்கக் கூடாதா? ஓ என் இறைவா! உம் கருணையால் எங்களை மன்னித்து அருள் புரியும்: நம்பிக்கை ஒளியால் ஒளிர்விக்கப்படாத அனைவரும் ஒரு நாள் அது ஒளிரக் காண்பார்களாக. ஓ என் இயேசுவே! அந்தப் பந்தி, அவர்களால் களங்கம் அடைந்தால், உம்மை அன்பு செய்யும் ஆன்மாவினால் தூய்மைப் படுத்தப்படட்டும். ஒளிமிக்க உமது அரசில் நீர் என்னைக் கொண்டு சேர்க்க விரும்பும் வரை நான் இடர்ப்பாடுகளின் உணவைத் தனிமையிலேயே உண்பேன்."

தொடர்ந்து வந்த ஞாயிற்றுக் கிழமை அருட்பணியாளர் பெல்லியேருக்கு எழுதிய கடிதத்தில் இந்தக் கொடிய ஏமாற்று நிகழ்வைப் பற்றிக் குறிப்பிடவில்லை. எனவே, வழக்கத்திற்கு மாறாக "அன்புநிறை சிறிய சகோதரரே" என்று குறிப்பிட்டார். தம் சகோதரியைப் பற்றி அவர் தவறாக எண்ணிவிடக் கூடாது என்பதே அவரது விருப்பம். ஏகாந்த இல்லத்தில் காணப்படும் "சிறந்த ஆன்மாக்களில்" ஒருவர் அல்ல இவர். உண்மையில் அவர் ஒரு "மிகச் சிறிய ஆன்மா"! நிறைவடையாதவர்! ஆனால் இறைவனின்

கொடைகளை உய்த்துணரும் ஆற்றல் கொண்டவர். அவர் அருட்பெரும் செயல்களை அவரில் ஆற்றியுள்ளார். அவரும் இறைவனிடமிருந்து அருட்கொடைகளைப் பெற்று அனுபவித்த நாள்களைக் குறித்து வைப்பதில் இன்பம் கண்டார். தமது நெஞ்சம் மறக்க முடியாத நாள்களை அருட் பணியாருக்கான பயிற்சி பெறும் சகோதரருக்கு அவர் அனுப்பினார். அவரது வாழ்க்கைப் பயணத்தின் மறக்க முடியாத நாள்களை எழுதி அனுப்புமாறு பணித்தார்.

சீனாவில் இருக்கும் அருட்பணியாளர் ரூலான் தமது 'அன்பும் நம்பிக்கையும் நிறைந்த சிறிய வழியைப்' பற்றிப் பகிர்ந்துக் கொண்டார்.

'சில வேளைகளில், ஆன்மீக ஆய்வு மடல்களை நான் வாசிக்கும் பொழுது எனது சிறிய மனம் வெகு விரைவில் களைப்படைந்து விடுகின்றது. காரணம், அவற்றில் நிறைவு என்பது ஆயிரம் தடைகள் நிறைந்ததாகவும், மாயைகளால் சூழப்பட்டதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே, இதயத்தைப் பாழ்நிலமாக்கி, மனத்தில் களைப்பை உருவாக்கும் அத்தகைய அறிவுசார் நூல்களை மூடிவைத்து விட்டுத் திருவிவிலியத்தைத் திறக்கின்றேன். பிறகு அனைத்தும் தெளிவாக விளங்குகின்றன. ஒரு வார்த்தை, எண்ணிலடங்கா உண்மைகளை என் ஆன்மாவுக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது; நிறைவாழ்வு எளிதாகின்றது. ஒருவரது ஒன்றுமில்லாமையை உணர்ந்து, தன்னையே சிறு குழந்தைப்போல் இறைவனின் கரங்களில் கையளித்தால் போதும்! உண்மைகள் தெளிவாகும்! நிறைவாழ்வும் சொந்தமாகும்.

தெரேசு தம்மை ஒரு பூஜ்யமாக எண்ணினார். வேறு ஒரு எண்ணை அருகில் போடாமல், தன்னிலே அந்த பூஜ்யத்திற்கு மதிப்புக் கிடையாது. ஆனால் இறைவன் எனும் எண்ணின் அருகில், தன்னை இணைக்கும் போது பூஜ்யமாகிய அவர் மதிப்பு பெறுகின்றார். கார்மல் கன்னியாகிய அவரால் தனியாக எதுவுமே செய்ய இயலாது. செபம், தியாகம் வழியாக மறைப் பணியாளரைப் பின் தொடர்ந்தார்; அவர் கூறியதைச் செயல் படுத்தினார்; வார்த்தையை வாழ்வாக்கினார். மிகவும் சோர்வுற்று, தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்த அவரை, சகோதரி தூய இதய மரியா ஓய்வெடுக்கும்படி அறிவுறுத்தினார். அதற்குத் தெரேசு, "நான் மறைப் பணியாளருக்காக நடக்கின்றேன்" என்று பதில் அளித்தார்.

## அன்னையே! உன்னை அன்பு செய்கின்றேன் (மே 1897)

காய்ச்சல், இருமல், வலி, வலிப்பு ஆகியவற்றால் பெரும் வேதனை



யடைந்து தமது அறையின் உள்ளேயே அடைந்து கிடந்து தையல் பணியில் ஈடுபட்டார். அவர் நேரத்தை வீணடிப்பதை வெறுத்தார். தம் சகோதரிகளை மகிழ்விக்கக் கவிதைகளையும் எழுதுவார். பாரீஸ் கார்மலின் தலைமைச் சகோதரி ஹென்றியெட், தெரேசின் கவிப்புலமையைப் பற்றிக் கேள்வியுற்றார். "முத்து போன்ற இச்சிறிய சகோதரி அழகிய கவிதைகளை எழுதும் ஆற்றல் நிறைந்தவர் என்றால் அவருடைய கவிதைகளின் ஒன்றை எனக்கு அனுப்பித் தரட்டும். அக்கவிதைகளை நானே ஆராய்ந்து பார்க்கின்றேன்!" என்று தெரேசுவினுடைய கவித்திறமைக்குச் சவால் விடுத்தார் அத்தலைமைச் சகோதரி. சவாலைச் சந்தித்தார் தெரேசுவும்! ஐந்து வரிகளே கொண்ட "இதழ் அவிழ்ந்த ரோசா மலர்" என்று குட்டிக் கவிதையை தலைமைச் சகோதரி பெற்றுக் கொண்டார். இதோ அக்கவிதை வரிகள்:

**இதழ் அவிழ்ந்த ரோசா மலர் தன்னலமிழந்து**
**தன்னிலைமறந்து தருகிறது தன்னையே!**
**. . . . கவனம் சிதற, மலரோ காலடியில்!**
**சிறகிதழ்கள் சிதறிச் சிந்தின.**
**கலை அழகின்றி அங்கே ஓர் அலங்காரம்**
**நானறிவேன் தெளிவாக.**

பாரீஸ் நகர் கார்மல் கன்னிகை, 'இக் கவிதை மிகவும் சிறப்பானது; ஆனால் ஒரு முற்றுப் பெறாக் கவிதை' எனக் கருத்துத் தெரிவித்தார். முகவரி உள்ள இக்கவிதைக்கு முடிவு வரி தேவைப்பட்டது. அவிழ்ந்து போன அவ்விதழ்களை, இறைவன் இறப்பின் போது ஒன்றாக இணைந்து அழகிய மலராகத் தொடுத்து என்றும் வாசமுள்ளதாக்கி விடுவார். ஆனால் இந்த முடிவு கலைஞனின் படைப்புக்கு உள் அர்த்தம் கொடுக்கவேயில்லை. எனவே, அவர் "அன்புத் தலைமைச் சகோதரியே! நீங்கள் விரும்புவது போல் இறுதிவரியைக் கவிதையில் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆனால் நான் அதனை எழுதுவதற்குத் தூண்டப்படவில்லை. இறைவனை மகிழ்விக்க, அவிழ்க்கப்பட்ட இதழாக இருப்பதே என் விருப்பம். முற்றுப்புள்ளி. அவ் வளவுதான்!.

இன்னும் தெரேசு பிறரால் தவறாகப் புரிந்துக் கொள்ளப்பட்டார். 'இறைவன் மட்டுமே என்னைப் புரிந்து கொள்ள இயலும்' எனத் தெரேசு கூறினார். அவரைத் தொடர்ந்து வரும் இடர்கள், இவ்வாறு கவிதை எழுதித் தன்னையே வெளிப்படுத்த அனுமதியாது என்பதை அறிந்து இயல்

பூக்கத்துடன் தெரேசு இரு கவிதைகள் படைத்தார்: "ஜோன் தார்க்கிற்கு" எனத் தன் முதல் கவிதைக்குத் தலைப்பு வழங்கினார். கவிதையின் கதாநாயகியைத் தம் சகோதரியாக எண்ணி, மரணத்தைச் சந்திக்கச் சிறை யில் காத்திருக்கும் அவரை மனத்தில் கொண்டு எழுதுகிறார்.

ஜோன் ! உன்னை அழகுறக் கண்டேன் ! அறிவுடன் கண்டேன் !

மன்னவன் மகுடம் தரிக்கும் தருணத்தில் இருண்ட சிறையில்

காட்டிக் கொடுக்கும் பலரும் உம்மைச் சூழ்ந்திருக்க

விண்ணக மகிமையில் ஒளிவீசத் துணிந்தது எப்படி ?

தெரேசு தியானாவால் காட்டிக் கொடுக்கப்பட்டது போல ஜோன் தார்க்கும் தம் குழுவினராலேயே காட்டிக் கொடுக்கப்பட்டார். மரியன்னையின் மாதமான மே மாதம் அந்த அன்னையின் ஆவணமாக இரண்டாவது கவிதையை எழுதினார். தமது உள்ளத்து ஆதங்கத்தைச் சகோதரி ஜெனவியேவிடம் ஒருமுறை இவ்வாறு வெளிப்படுத்தினார்: "நான் இறப்பதற்கு முன் இன்னும் ஆற்ற வேண்டிய கடமைகள் சில உண்டு. மரியன்னையைப் பற்றி நான் கண்ட கனவுகளையெல்லாம் கவிதைகளாக வெளிப்படுத்த வேண்டும்." மரியன்னையைப் பற்றி எண்ணற்ற மறையுரை களைத் தமது வாழ்வில் கேட்டிருந்தாலும், அவர் மனத்தை எவையும் தொடவில்லை. "நிகழ இயலா"க் காரியங்களைப் பற்றி மறையுரையாளர்கள் அதிகம் பேசினார்கள். மரியன்னை 'அணுக இயலாதவர்' என்ற எண்ணத்தை உருவாக்கினார்கள். அவரது குழந்தைகளின் மாண்பை மறைக்கும் வண்ணம் அன்னையாகக் கூறுவதை விட மரியன்னையை அரசியாக வருணிப்பதில் மகிழ்ச்சி கண்டார்கள். "தூய கன்னி மரியாவைப் பற்றி எதார்த்தமாக எடுத்துரைக்க நான் ஒரு அருட்பணியாளர் ஆக விரும்புகின்றேன்' எனத் தெரேசு தமது ஆவலை வெளிப்படுத்தினார். அந்த கன்னி மரியாவை நாம் 'அரசியாக' அல்ல; 'அன்னையாக' எளிதில் பின்பற்ற முடியும் என்ற எண்ணத்தை வலியுறுத்தினார். தெரேசு தமது ஒரே வழிகாட்டியான நற்செய்தியின் குறிப்புகளைக் கொண்டு, நாசரேத்தூர் மரியாவின் கற்பனை வாழ்க்கை அல்ல எதார்த்தமான வாழ்க்கையைப் பற்றி 25 வரிகளில் கவிதையை எழுதினார். அவருடைய வாழ்வு மிக எளிமையானது; ஒரு நம்பிக்கையின் வாழ்வு! நம்மைப்போல, தெரேசைப் போல மரியா இடர்கள் பலவற்றை அனுபவித்தார்.

"இருளிலும் நம்பிக்கையிலும், அவரைத் தேடும் ஆன்மாவைப் போல

அம்மா ! உம்குழந்தை உம்மையே நாடவிழைகின்றது



கவிதையின் கடைசி வரிகளில் தமது சுயசரிதையைக் குறிப்பிடுகின்றார் தெரேசு.

அழகிய உன் இல்லத்தில் விரைவில் உன்னைச் சந்திப்பேன் !

என் வாழ்வின் விடியலில் எனைக்கண்டு புன்னகைத்தாய் !

மீண்டும் புன்னகைக்க வருவீரோ ?. . .

அம்மா ! இது ஒரு மாலைப் பொழுது !

தனது ஒளிவு மறைவற்ற கவிதை வரிகள் நன்மை பயக்கும் எனத் தெரேசு உணர்ந்தார். ஆள்களுக்குத் தகுந்தவாறு அவற்றில் சில மாற்றங்கள் செய்து, அவற்றில் சிலவரிகளை நகல் எடுத்து தம் சகோதரர்களுக்கு அனுப்பி வைத்தார். அவர்களும் அதனை மிகவும் கவனமாகப் பாதுகாத்தனர். கார்மல் கன்னியரும் நகல் எடுத்துக் கொண்டனர். கேரென் மற்றும் சில குடும்பங்களுக்கும், பாரீஸ், சைகோன் போன்ற இடங்களில் உள்ள கார்மல் இல்லங்களுக்கும் அதனை அனுப்பி வைத்தனர். உரோமையில் சகோதரர் சிமியோன் தமது கவிதை நகலைக் கவிஞராக இருந்த மற்றொரு சகோதர ருக்குக் கொடுத்தார். அவரும் தாம் விரைவில் வெளியிடயிருந்த "எனது பக்தி முயற்சிகள்" (Mes Devotions) என்ற கவிதைத் தொகுப்பிற்கு அணிந்துரை எழுதித்தரும்படி தெரேசிடம் கேட்க விரும்பிக் கடிதம் ஒன்று எழுதினார். ஆனால் தெரேசு அக்கடிதத்திற்குப் பதில் எழுதவே இல்லை. காரணம், இலக்கியத்தில் அவருக்கு ஈடுபாடே கிடையாது.

இந்த நாள்களில் பென்சிலை வைத்துக் கொண்டு தாம் எழுதியவை அனைத்தையும் திரும்பப் படித்தார். ஆனால் இலக்கியக் கண்ணோட் டத்துடன் படிக்கவில்லை. இனிவரும் நாள்களில் இத்தகைய பணியை மேற்கொள்வது கடினம். அவரில் நிரம்பிப் பொங்கி வழிந்த அன்பை அவர் மறந்து வாழத் தூண்டும் இடர்கள் பலவற்றை எதிர்த்துப் போராடுவதற்காகவே தமது எழுத்துக்களை மீண்டும் வாசித்தார். அவருடைய இடர்களின் ஒன்று தான் 'ஆன்மீக நினைவு மறதி".

ஜோன்தார்க் நாடகத்தைத் தற்போது ஒரு புதிய ஒளியிலே கண்டார். உள்ளத்தில் வேதனைகளோடு வாழ்ந்து மரணத்தைச் சந்திக்கக் காத்திருக்கும் அந்த இளம் பெண்ணாகத் தன்மையே எண்ணிப் பார்த்தார். உணர்வின்றியே தமது இறப்பைப் பற்றி அந்த நாடகத்தில் முன்மொழிந் துள்ளார். இதனைத் தலைமைச் சகோதரி ஆக்னெசிடம் வெளிப்படுத்தினார்: "நான் எழுதிய ஜோன் தார்க் நாடகத்தை மீண்டும் படித்தேன், இறப்பைப் பற்றி என்னுடைய உணர்வுகள் அனைத்தையும் நீங்கள் அங்குக் காண்பீர்கள்;

அவை அனைத்தும் விளக்கமாக கூறப்பட்டுள்ளன."

## "தன் வரலாறு' தொடர்ந்தது ( 4 ஜூன் முதல் 8 ஜூலை 1897 வரை)

இந்நாள்களில் நோயாளியான தெரேசு மற்றும் அவருடைய சகோதரி ஆக்னெசு இருவருக்குமிடையே உறவு ஆழமானது. பிணைப்பு அதிகரித்தது. தெரேசு, தம்மைப் பற்றிய உண்மைகள் அனைத்தையும் கூற விரும்பினார். மே மாதம் 30 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை மாலையில் தான் ஓராண்டுக்கு முன் இரத்தவாந்தி, இருமல் போன்றவற்றால் அதிகம் துன்புற்றதாகச் சகோதரி ஆக்னெசிடம் வெளிப்படுத்தினார். "சிறிய அன்னை" ஆக்னெசு மனம் உடைந்து போனார். கடந்த சில மாதங்களாகவே தன்னிடம் எதுவும் சொல்லாமல் மறைத்ததை நினைத்து வருந்தினார். தன் தங்கை மரணத்தின் வாயிலில் நிற்பதாக உணர்ந்தார் சகோதரி ஆக்னெசு. தமது மூத்த சகோதரியின் மெல்லிய உணர்வுகள், மிகுந்த வேதனை அடையக்கூடாதே என்பதில் தெரேசு ஆர்வம் காட்டினார். இந்த முறை ஆக்னெசு சூழ்நிலையை உடனே அறிந்து கொண்டார். எனவே, தெரேசுவிடம் "உமது நிலைமை மிகவும் மோசமாகவே உள்ளது; நீ விரைவில் இறந்து விடுவாய் என்றே எண்ணுகின்றேன்" என்றார்.

இவ்வாறு ஆக்னெசு தமது "அனுபவச் செல்வம்" மறையப் போகின்றதே! என்ற ஆதங்கத்தில் கூறினார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகத் தெரேசு தம் வாழ்க்கையை எழுதித் தன்னிடம் கொடுத்ததையும், அதனை வியப்புடன் படித்து மகிழ்ந்ததையும் ஆக்னெசு நினைவுக் கூர்ந்தார். எவ்வளவோ சிறந்த கருத்துக்கள் பலவற்றை அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். "இன்னும் இறப்பதற்கு நேரம் இருக்கின்றதே! ஏன் இன்னும் தம்முடைய வாழ்க்கை அனுபவச் செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது?' என்று மனத்திற்குள்ளே ஆக்னெசு நினைத்தார்.

ஜூன் இரண்டாம் நாள் இரவு அதிகாலை மன்றாட்டு முடிந்தவுடன் முன்னாள் இல்லத் தலைவி ஆக்னெசு தலைமைச் சகோதரி மரி தே கொன சாக்கின் அறைக்கதவைத் தட்டினார். நள்ளிரவைக் கடந்த முற்பொழுது அது.

"தலைமைச் சகோதரியே! ஒரு இரகசியத்தை உங்களிடம் வெளியிடாமல் என்னால் தூங்க இயலாது. நான் இல்லத் தலைவியாகப் பணியாற்றியபோது, எனது வேண்டுகோளுக்கிணங்கி என்னை மகிழ்விக்கத் தனது குழந்தைப் பருவ நினைவுகளைத் தெரேசு எழுதினார். சில நாள்களுக்கு முன்பு அதனை நான் திரும்பப்படித்தேன். அவை மிக நன்றாக



உள்ளன. ஆனால் அவருடைய இறப்பிற்கு பிறகு அவரைப் பற்றிய சுற்றுமடல் அனுப்புவதற்கான குறிப்புகள் அவற்றிலிருந்து கிடைக்காது. (கார்மல் கன்னிகை இறந்தவுடன் அவரது வாழ்க்கைக் குறிப்புகள் சுற்றுமடலாக அனைத்து கார்மல் இல்லங்களுக்கும் அனுப்புவது வழக்கம்) காரணம் அக்குறிப்புகளில் அவரது துறவற வாழ்க்கை பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. எனவே, நீங்கள் அவரிடம் தமது துறவற வாழ்க்கையைப் பற்றியும் எழுத ஆணையிட்டால் தற்போது என்னிடம் இருக்கும் குறிப்புகளை விடச் சிறந்த குறிப்புகளை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்" என்று ஆக்னெசு இல்லத் தலைவி மரி தே கொன்சாக்கிடம் தெரிவித்தார்.

இது ஓர் விவேகமான வேண்டுகோளாக அமைந்ததால் உடனே பலன் கிடைத்தது. தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் ஆக்னெசின் வேண்டுகோளுக்கிணங்கி, தெரேசிடம் தம் வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ந்து எழுதும்படி பணித்தார். வாந்தி, வலியினால் பெரும் அவதியுற்ற அவரிடம் தலைமைச் சகோதரி இவ்வாறு பணித்ததால் தெரேசு மிகவும் அதிர்ச்சியடைந்து "எதைப்பற்றி எழுதுவது?" என்று கேட்டார். உம்மிடத்தில் புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி பெறுவோரைப் பற்றியும், உமது ஆன்மீக சகோதரர்கள் பற்றியும் எழுதவும் என்று ஆக்னெசு பதில் அளித்தார். அழகான கருநிறத் தோல் அட்டைக் கொண்ட சிறியதொரு பயிற்சி ஏடு அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அது அவருடைய கண்களுக்கு மிகமிக அழகாகத் தென்பட்டது.

"எனது "சிறுவழி" யைப் பற்றி எழுதி எனது தலைக்குச் சோர்வைக் கொடுக்கப்போவது கிடையாது- எழுத்து வரியைக் கொண்டு மீன் பிடிப்பது போல மிகப் பொறுமையாக எழுதுவேன்; என் எழுதுகோல் முனையில் வரும் எழுத்துக்களை அப்படியே எதுவேன்" என்று கூறி ஜூன் மூன்று அல்லது நான்காம் நாள் அவர் தமது வரலாற்றை மீண்டும் எழுதத் தொடங்கினார். இந்த முறை தலைமைச் சகோதரியிடம் அவர் பேசும் பாணியில் எழுதினார். "என் தலைமைச் சகோதரியே! நான் உங்களுடன் இணைந்து இறைவனின் கருணையை எண்ணி வியந்து பாடி முடிக்க விரும்புவதாக என்னிடத்தில் தெரிவித்தீர்கள்.. . ஆம் உங்கள் விருப்பத்தை நிறைவு செய்யும் பொருட்டு, என் ஆன்மாவின் உணர்வுகளை இறைவனுக்கும், அவரைக் கண்கூடாக எனக்கு வெளிப்படுத்தும் உங்களுக்கும் செலுத்த வேண்டிய நன்றிக் கடனை என் எழுத்துக்களால் விவரிக்க முயற்சி செய்யப் போகின்றேன்." என்று தொடங்கினார்.

ஆக்னெசிடம் பேசுவது போன்று முன்பு எழுதிய தெரேசு மரி தே

கொன்சாக்கிடம் பேசுவது போன்று தற்போது எழுதுவதற்கு இன்றி யமையாத காரணம் இருந்தது. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக முடிந்த இல்லத் தலைவியின் தேர்தல் நேரத்திலிருந்தே தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் - தெரேசு இருவரின் உறவுகளில் மாற்றம் ஏற்பட்டி ருந்தது. தெரேசு, புகுமுகத் துறவுநிலை உதவிப் பயிற்சி உருவாக்குநராக அவருக்கு உதவிபுரிந்தார். ஆன்மீகத்தில் நெடுந்தொலைவு கடந்து வந்து விட்டார். இப்போது இறப்பை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். தற்போது, "வெறுமையை மட்டும் சொந்தமாக்கிக் கொண்ட சிறியவராக" இறைவன் முன் தாம் நிற்பதை தெரேசு கண்டார். எனவே, குழந்தைக்குரிய எளிமை யுடன், முழு உரிமையுடன் தமது இல்லத் தலைவியுடன் பேச முடிந்தது. "துறவறத்தில் வாழ்பவர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட வரையறைக்குக்குள் அவர் செயல்படாதிருந்தால்" அது குற்றமே. தெரேசிடம் அவர் "இல்லத் தலைவி" என்ற முறையில் பழகுவதைத் தவிர்த்து 'அன்னை' என்ற முறையிலே உறவு கொண்டிருந்ததால். . . அது அவருடைய தவறு தான் என்று தெரேசு கருத்துத் தெரிவித்தார்.

தெரேசு தமது எழுத்தைத் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கிற்கு உண்மையான நன்றியை தெரிவித்தபிறகே தொடங்கினார். ஏனென்றால் அவரின் துறவற அறிமுக நாள்களிலே அளவுக்கு மீறிய சலுகைகளைக் கொடுத்து அவரைக் கெடுக்காமலிருந்தார். அவருடைய "உறுதியான" ஆனால் "அன்னைக்குரிய" பாசத்துடன் பயிற்சி கொடுத்ததால் தெரேசு அதிகப் பலனடைந்தார். அன்று அவமானங்களால் வடிவமைக்கப் பட்டிருந்ததால் இன்று பெற்றுக் கொண்ட புகழ்ச்சி உரைகளைக் கேட்டு அச்சமடையாதிருந்தார்.

ஜூன் மாதம் முழுவதும் தமது வரலாற்றுக் குறிப்புகளை எழுதினார். தமது அறையில் அமர்ந்துக் கொண்டோ, அல்லது சிறிய, அழகிய வெள்ளை நாற்காலியில் அமர்ந்து கொண்டோ அல்லது மார்ட்டின் கார்மல் இல்லத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்த அவருடைய நாற்காலியில் அமர்ந்து கொண்டோ தெரேசு எழுதினார். மருத்துவப் பணியாளர்கள், அவரது அறையைக் கடந்து சென்ற சகோதரிகள், மற்றும் அவருடன் பேச விரும்பும் புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி பெறுபவர்கள் அவருடைய எழுத்துப் பணியில் குறுக்கிட்டனர். எனினும் தமது எழுத்துப் பணியைத் தொடர்ந்தார்.

"நான் என்ன எழுதுகின்றேன் என்று எனக்குத் தெரியவில்லை. . . பிறரது குறுக்கீடு இல்லாமல் பத்து வரிகளையாவது எழுதியிருப்பேனா? என்பதும் எனக்குத் தெரியவில்லை. அதோ வைக்கோல் பணி செய்பவர்



என்னைக் கண்டு இரக்கம் கொண்டு பேசிவிட்டுச் செல்கிறார்: "அன்பான சிறிய சகோதரியே! நாள் முழுவதும் இவ்வாறு எழுதிக் கொண்டே இருப்பது உங்களுக்குக் களைப்பைத் தரும்" என்றார். அதற்கு நான் மறுமொழியாக "வருத்தப்படாதீர்கள்" என்றேன். "நான் அதிகம் எழுதுவது போலத் தோன்றும், ஆனால் உண்மையில் நான் எழுதுவது மிகக் குறைவே" என்றேன். அதற்கு அவர், "அது நல்லது தான்! ஆனால் நான் வைக்கோல் பணி புரிவதிலே மகிழ்ச்சியடைகின்றேன். காரணம் இப்பணி உங்களைச் சிறிது நேரம் எழுத்துப் பணியிலிருந்து விடுவிக்கும்" என்றார். இவ்வாறு தெரேசு தம் எழுத்துப் பணியின் போது நிகழ்ந்த குறுக்கீட்டு நிகழ்வுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்.

அவரது நகைச்சுவையும், பலகுரல் பேச்சுத் திறமையும் நோயினால் மங்கி மறைந்து போய்விடவில்லை. "பொறுமையற்றவராக மாறாதபடி மிகக் கவனமாக இருந்தேன். எழுதும் என் எழுத்துக்களை வாழ்வில் செயலாக்கம் பெறச் செய்கிறேன்" என்றார். உண்மையில் சகோதரிக்குரிய அன்புணர்வே, அவருடைய நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமான பண்பாக இருந்தது. அப்பண்பினால் அதிக ஒளியை அவர் வாழ்வில் பெற்றுக் கொண்டார்.

## குற்றம் புரிவோரின் பந்தியில். . .

1896 ஆம் ஆண்டு உயிர்ப்பு விழா முதல் தெரேசு வாழ்ந்து வந்த குழப்பமான நிலையைப் பற்றி முதலில் விளக்க விரும்பினார். ஜூன் 9 ஆம் நாள் கருணை நிறை அன்புக்குத் தம்மையே தெரேசு அர்ப்பணித்ததன் இரண்டாம் ஆண்டு நிறைவுதான். அன்று அவர் அனுபவித்த உள்ளத் துயரங்களை விவரிக்க இயலாது. அன்றையத் தினம் "கொடிய நாகங்கள் அவர் செவிகளில் சீற்றொலி எழுப்பவில்லை". அவை முழுமையாகத் துன்பங்களைத் தரவில்லையென்றாலும், அவற்றின் எல்லையைத் தொடும் அளவிற்குச் சூழ்ந்திருந்ததைத் தெரேசு உணர்ந்திருந்ததாகக் கூறினார். அவர் 'வெறுமையை' நோக்கிப் பயணம் தொடர்கின்றார் என்று அவரது உள்ளொலி உரைப்பதாக எண்ணினார். அதனை எதிர்த்துப் போராடித் தடுத்து நிறுத்துவதற்காகப் பதின்மூன்று மாதங்களாகத் தெரேசு நம்பிக்கை உறுதி செய்து கொண்டிருந்தார்.

இப்பருவத்திற்கு முன்பு விசுவாசமற்றவர்கள் இருக்கின்றார்கள் என்ற எண்ணமே அவருக்கு இருந்தது இல்லை. நீரில் வாழும் மீனைப் போலக் குழந்தைப் பருவத்தில் பெற்றுக் கொண்ட நம்பிக்கையில் இதுவரை வாழ்ந்து கொண்டிருந்தார். ஆனால் இப்போது "எல்லாம் மறைந்து போய்விட்டன"

விண்ணகத்திற்குச் செல்ல வேண்டும் என்று தெரேசு கொண்டிருந்த இயல்பான ஆவலைத் தூயதாக்க இத்தகைய இடர்ப்பாடுகள் தேவைதாம் என்று தெரேசு புரிந்து கொண்டார். ஆனால் அனைத்துக்கும் மேலாக அவரும் விசுவாசமற்றவர்களுடன் இணைந்து நிற்பதாகக் கண்டார். இயேசு செய்தது போல எந்தவிதமான தயக்கமுமின்றிக் "குற்றம் புரிந்தவர்களின் பந்தியில்" அமரத் தயாராக இருந்தார். ப்ரான்ஸீனி, லெயோ தக்சில், ரெனே தோஸ்தே போன்றவர்களையும், மற்றும் அவர் அறியாத, குற்றச் செயல் புரிந்த பலரையும் நினைவு கூர்ந்தார்.

ஒரு நாள் சற்று மாறுபட்ட எண்ணத்தை வெளிப்படுத்தி, சகோதரி மூவொரு இறைவனின் மரியாவை வியப்பில் ஆழ்த்தினார்: "கார்மலில் நுழைய அனுமதிக்கப்படாதிருந்தால் நான் ஒரு அகதிகள் முகாமில் நுழைந்திருப்பேன். அங்கு யாராலும் அறியப்படாமல், எளிய பாவிகளோடு இழிவாகக் கருதப்படும்படி வாழ்ந்திருப்பேன்! அனைவர் கண்களிலும் குற்றவாளிகளாகக் கருதப்படும் அவர்களுக்காக என்னையே முழுமையாகக் கையளிப்பதிலேயே என் மகிழ்ச்சி நிறைவடைந்திருக்கும். இறைவனின் கருணையைப் பற்றி எனது எண்ணங்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டு நானும் அவர்களின் திருத்தூதராக மாறியிருப்பேன்."

இந்த இடர்ப்பாடு தெரேசுவின் ஆன்மீகப் பயணத்தை மேற்கொள்ள பெரும்துணை புரிந்தது. விசுவாசமற்றவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதன் வழியாகத் தாமும் அவர்களைப் போல ஒருவர் தாம் என்பதை உய்த்துணர்ந்தார். பிறருக்காக மன்றாடுவதையே வாழ்க்கையாக கொண்டிருந்த கார்மல் சபையில் பரிசேயத்தனம், வெளி வேடத்தனம் பெரும் அபாயமானதாகக் கருதப்பட்டது. தெரேசு தாம் வழி தவறிவிடாமல் கைம்மாறு எதுவுமின்றி மீட்கப்பட்டிருக்கிறார் என்றால் அதன் பெருமை இறைத்தந்தையையே சாரும். காரணம், அவரே பாதையில் கிடந்த தடைக்கற்களை அகற்றிப் பயணத்தில் துணைநின்று தெரேசை வழி நடத்திச் சென்றார். எனவே இத்தகைய குற்றம் புரிந்தவர்களுக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணிக்கத் துணிந்தார். சக்கேயு, மரிய மதலேனாள், சமாரியப் பெண், அகுஸ்தினார் போன்றவர்களைப் போன்று இவர்களும் இறைவனால் தாங்கள் அளவு கடந்த விதத்தில் அன்பு செய்யப் படுகின்றார்கள் என்பதைக் கண்டுகொள்ள முடியும் என்ற எதார்த்தத்தில் தெரேசு குற்றம்புரிவோருக்காகத் தம்மையே அர்ப்பணிக்கத் துணிந்தார்.

இந்த எண்ணங்களை வார்த்தையில் வடித்தார். "படைப்பின் பொருட்கள் மீது நான் பற்றுக் கொண்டு என்னையே அதற்காக முழுமையாகக்



கையளிக்காமல் இருந்த பெருமை என்னைச் சார்ந்ததன்று; கடவுளின் வல்லமை மிகுந்த கருணையினால் மட்டுமே நான் அதிலிருந்து காப்பாற்றப்பட்டேன். அவரது அருள் இல்லாதிருந்தால் மரிய மதலேனாளைப் போன்று நான் புழுதியில் வீழ்ந்திருப்பேன். ஆனால் மரியமதலேனாளைவிட இயேசு என்னை அதிகம் மன்னித்திருக்கின்றார் என்பதும் எனக்குத் தெரியும். காரணம் நான் விழாமல் தடுப்பதன் வழியாக என்னை அவர் மன்னித்து விட்டார் என்பதை எண்பித்து விட்டார். குற்றம் புரிந்து மனந்திரும்பியவர்களைவிட அதிகம் அன்பு செய்யும் தூய்மையான ஆன்மாக்களை ஒருவர் காண இயலாது எனப் பலர் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். எவ்வாறு அவ்வார்த்தைகளைப் பொய் என்று என்னால் கூற இயலும்!"

அவருடைய உள் இடர்ப்பாடுகளை விளக்கமாகக் குறிப்பேட்டில் எழுத அவர் விரும்பவில்லை. தாம் கூறுவது இறை நிந்தனையாகி விடுமோ என்ற அச்சம் அவரில் இருந்தது. ஏற்கனவே அதிகமாகக் கூறிவிட்டோமோ? என்ற அச்சமும் உடன் சேர்ந்து கொண்டது. அவர் தமது துயரங்களைத் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக், இல்ல அருட்பணியாளர், மற்றும் தற்போது ஆக்னெசு இவர்களிடம் தான் வெளிப்படையாகக் கூறினார். ஒருநாள் அவருடைய ஆன்மீக அன்னையிடம் இதைப்பற்றித் தெரிவித்து, "நம்பிக்கைக்கு எதிரான சோதனைகள் உங்களுக்கு உண்டா?" எனக் கேட்கும் ஆர்வமும் எழுந்தது. தூய இதய மரியாவும் தமக்கே உரித்தான எளிய வியப்பில் இதைக் குறித்துக் கேட்டபோது, விவேகமாக நடந்து கொள்வதே நல்லது என்று தெரேசு அறிந்திருந்தார். காரணம் அவ்வாறு இவர்களிடம் வெளியிடுவதன் வழியாக அங்குள்ள சகோதரிகளின் நம்பிக்கையான வாழ்வுக்கு ஊறுவிளைந்து விடும் என்பதை நன்கு அறிந்திருந்தார்.

தெரேசு தம் உள்ளத்தில் எத்தகைய இடர்களை அனுபவித்து வந்தார் என்பது யாருக்கும் தெரியாது. எப்பொழுதும் புன்முறுவலுடனும், மகிழ்ச்சியுடனும் காணப்பட்டார். ஒவ்வொரு நாளும் தமது மனத்தில் பட்டதை அழித்தல், திருத்தல் செய்யாமல் அப்படியே எழுதினார். அவருக்கு இருந்த ஆன்மீக சகோதரர்களைக் குறித்து மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். ஆனால் தமது இறப்பிற்குப் பிறகு இத்தகைய ஆன்மீகத் தொடர்பு கொள்வதில் இல்லத் தலைவி மிகவும் விவேகமாக இருக்க வேண்டும் என எச்சரித்தார். "கீழ்ப்படிதலின்றி இத்தகைய தொடர்புகளில் ஈடுபடுவது நன்மையன்றித் தீமையையே அதிகம் விளைவிக்கும். அந்தத் தீமைகள் பணியாளருக்கு ஏற்படவில்லையென்றாலும், கார்மல் கன்னிகைக்கு ஏற்படலாம். காரணம் தொடர்ந்து தம்மையே சார்ந்து வாழும் வாழ்க்கையை

அவரிடத்தில் உருவாக்கும்.

புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி பெறுவோரிடம் எவ்வாறு அவரது பழக்கமும், தோழமை உறவும் இருந்தன என்பதை விளக்கமாக எடுத்துரைக்கின்றார். அனைத்திற்கும் மேலாக அண்மையில் அவர் கண்டுபிடித்த "உண்மைச் சகோதரி அன்பின்" அர்த்தத்தைத் தெளிவாக விளக்குகின்றார். "பிறரது குறைகளைக் கண்டு வியப்புறாமல், அவர்கள் புரியும் சிறிய, மிகச் சிறிய நற்பண்புகளைக் கண்டு பாராட்டி, அவர்களது தவறுகளை ஏற்றுக் பொறுத்து வாழ்வதில்தான் நிலையான அன்பு அடங்கியுள்ளது என்பதைத் தற்போது தான் நான் புரிந்து கொண்டேன்' என்றார்.

## வினையா? விளையாட்டா?

ஜூன் பத்தாம் நாள் முதல் தெரேசு நல்ல உடல் சுகத்துடன் இருந்தார். 7 ஆம் நாள் திங்கள்கிழமை சகோதரி ஜெனவியேவ் தெரேசைப் புகைப்படம் எடுத்தார். கருப்பநிறப் போர்வையைக் கொண்ட பெரிய புகைப்படக் கருவி முன்பாக 9 நொடிகள் முழந்தாற்படியிட்டார். அவருடைய கையில் அவரது திருவழிப்பாட்டு நூலிலிருந்து எடுத்த இரண்டு படங்களை வைத்திருந்தார். அவற்றில் ஒன்று அவருடைய பெயரைக் குறித்த குழந்தை இயேசு படம். மற்றொன்று அவரது அழைப்பை எடுத்துரைக்கும் இயேசுவின் திருமுகம். புகைப்படம் எடுத்த ஜெனவியேவுக்கு மனத்தில் நிறைவு ஏற்படவில்லை. எனவே மீண்டும் இருமுறை புகைப்படங்கள் எடுத்தார். தெரேசு மிகவும் களைப்படைந்தார். செலின் பொறுமையிழந்தார். அன்று மாலையே தமது செயலுக்காகச் செலின் மனம் வருந்தித் தெரேசிடம் மன்னிப்பு வேண்டினார். தெரேசு அதற்குப் பதிலாக ஒரு சிறுகுறிப்பை அவருக்கு அளித்தார். "நிறைவற்றவர்களின் குழுவில் சிறியவர்களாக நம்மைக் கண்டு, பணிவோடு அவர்களின் எண்ணிக்கையில் சேர்த்து கொள்வோம். ஆம் ஒருவருடைய குறைகளைப் பணிவுடன் ஏற்று அவர் பணிந்து வாழ்ந்தாலே போதும். அதுவே உண்மையான தூய்மை நெறி. செலினது பணிவைப் பாராட்டி அவருக்குத் தெரேசு கொடுத்த பரிசே இப்பாராட்டுரை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தெரேசு கண்டுபிடித்த "சிறுவழி"யைப் பற்றித் தமது குறிப்பேட்டில் சிறிது விளக்கம் தந்திருந்தார். ஒரு நாள் அறைக்குச் செல்வதற்குமுன் தலைமைச் சகோதரி ஆக்னெசுடன் தோட்டத்தில் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு வெள்ளைப் பெட்டைக் கோழி ஒன்று தனது குஞ்சுகளைத் தன் இறக்கைகளின் கீழ் ஒன்று சேர்த்து கொண்டிருப்பதைக் கூர்ந்து கவனித்தார். அன்பும், நன்றி





தெரேசுவின் பல்வேறு முகங்கள்

*முதல் வரிசை : 1 சனவரி 1889, 1894*

*இரண்டாவது வரிசை : 1 ஏப்ரல் 1895, மார்ச் 1896*

*மூன்றாவது வரிசை: ஜூலை 1896 (இரு நிழற்படங்களும்)*

*இறுதி வரிசை : 1, 1897, 30 ஆகஸ்ட் 1897.*

யுணர்வும் பெருகி இதயத்தைக் கனக்கச் செய்தன; கண்கள் கண்ணீர் சிந்தின; அவருடைய வாழ்வும் அவ்வாறே அமைந்திருந்தது; அதுபோலவே இறைவன் தம்மைப் பாதுகாத்து வந்தார் என்று உறுதியாக நம்பினார்.

ஜூன் 4 ஆம் நாள் முதல் தெரேசுவின் உடல் நலனுக்காகச் சகோதரிகள் குழு முழுவதும் வெற்றியன்னையிடம் நவநாள் வழியாக மன்றாடினர். 1883 ஆம் ஆண்டு மே திங்கள் தெரேசு கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டபோது இச்சகோதரிகளின் மன்றாட்டினால் குணம் அடைந்தார் அல்லவா? இந்த முறை அன்னை மரியா அருங்குறி ஆற்றுவார் எனத் தெரேசு நம்பவில்லை.

அன்றைய தினம் மனமகிழ்ச்சி நேரத்தில், வைக்கோலினால் செய்யப்பட்ட சகோதரி ஜெனவியேவின் படுக்கையில் படுத்துக் கொண்டே மார்ட்டின் சகோதரிகளுக்குத் தமது பிரியாவிடைகளை அளித்தார். அவர்கள் தங்கள் சகோதரியைப் பார்க்கவும், தொடர்ந்து அவர் சொல்வதைக் கேட்கவும் ஆவல் கொண்டனர். " என் அன்புச் சகோதரிகளே! எவ்வளவு மகிழ்ச்சியோடு நான் இருக்கின்றேன். நான் விரைவில் இறந்து விடுவேன் என்று எனக்குத் தெரிகின்றது. இப்போது உறுதியாக இறந்து விடுவேன். என் இறப்பிற்குப் பின் நான் உங்களுக்குத் தோன்றாவிட்டால் வியப்படைய வேண்டாம். என் மகிழ்வின் அடையாளமாக அசாதாரண நிகழ்வு தோன்றவில்லையென்றாலும் அதிர்ச்சியடைய வேண்டாம். இதுவே "எனது சிறிய வழி" என்பதை நினைவு கூறுங்கள். வெறுமையைக் காண விழைவதே எனது சிறிய வழி" என்றார் தெரேசு.

அவர் அடிக்கடி திருவுணவு அருந்த இயலாது என அவருக்கு ஏற்கெனவே முன்மொழியப்பட்டது. 'திடீரென ஒருநாள் காலையில் நான் இறந்துவிட்டதை நீங்கள் அறிந்தால் கவலைப்பட வேண்டாம். இறைவன் அமைதியாக என்னை அழைத்துச் செல்ல வந்துவிட்டார் என நினைத்துக் கொள்ளுங்கள். ஆம்! திருஅருட்சாதனங்களைப் பெறுவது பெரும் அருட்கொடைதான். ஆனால் அதனையும் கடவுள் அனுமதிக்காவிட்டால் அதுவும் பெரும் கொடை தான்'. எனத் தொடர்ந்து தெரேசு மொழிந்தார்.

1891 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தந்தையின் ஆணைப்படி ஒரு சகோதரிக்குத் திருவுணவு அளிப்பதை அனுமதிக்கவோ, மறுக்கவோ இல்லத் தலைவிக்கு உரிமை இல்லை; சபையின் தலைமைத் தந்தைக்கே அந்த உரிமை உண்டு. இந்தச் சட்டத்தைத் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் நடைமுறைப்படுத்த மறுத்தார். அவருடைய கடின



மனப்பான்மையே இதற்குக் காரணம். அவரது இச்செயலை உண்மையிலே தெரேசு வெறுத்தார். தெரேசின் துணிவுமிக்க நம்பிக்கைக்கு எதிராக அமைந்தது தான் இல்லத்தலைவியின் துணிவற்ற கோழைத்தனம். "அன்பும் நம்பிக்கையுமே எனது வழி! தங்கள் நண்பர்கள் மீது அன்பு செலுத்த அஞ்சும் இதயங்களை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை" எனக் கூறிய தெரேசு மருத்துவ அறையில் தமது இல்லத் தலைவியிடம், "எனது இறப்புக்குப் பிறகு நான் உங்கள் மனத்தை மாற்றுவேன்" என்றார்.

நவநாளின் இறுதி நாளில் தெரேசின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. இது அவருக்கு ஏமாற்றத்தை அளித்தது. "நான் நலமுடன் இருக்கிறேன். நோய் எல்லாம் தீர்ந்து விட்டது. இறப்பின் நம்பிக்கை மறைந்து விட்டது. தமக்கு என்ன நேர்ந்தாலும் கவலையடையாத சிறு குழந்தையைப் போல என்னையே நான் கையளிக்க வேண்டும் என்பதே இறைவன் விருப்பம்; அப்படியே ஆகட்டும்" என்று சொல்லித் தம்மையே ஆற்றுப்படுத்திக் கொண்டார்.

ஜூன் மாத இறுதியில் குடும்பத்தினருடன் வரவேற்பறையில் அவரது கடைசிச் சந்திப்பு நடைபெற்றது. "என் மாமாவை வரவேற்பறையில் சந்திப்பதற்கு எனக்கு எவ்வளவு வெட்கமாயிருந்தது! ஆனால் வரவேற்பறையை விட்டு வெளியே வந்தபோது ஒரு புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி பெறும் சகோதரியை வன்மையாகக் கடிந்து கொண்டேன். என்னையே நான் அறிந்து கொள்ளவில்லை. என் பண்புகளில் எத்தனை முரண்பாடுகள்?" என்று தம்மையே எண்ணி வியந்த தெரேசு பிறிதொரு நாள் கூறுவார்: "எவருக்கும் நான் அஞ்சியதில்லை. எங்குச் செல்ல விரும்பினேனோ அங்கெல்லாம் சென்றுள்ளேன்".

மீண்டும் அவர் தம் குடும்பத்தினரைச் சந்திக்கவில்லை. காரணம் அவர்கள் விடுமுறைக்காக லமூஸ் சென்றுவிட்டனர். அவர்களுக்குச் செய்திகளை அறிவிக்கக் கோடைக்காலம் முழுவதும் சகோதரி திருவுணவின் மரியா, கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். புகழ்வாய்ந்த ஜூலை மாத ஆரம்பத்தில், தெரேசுவின் உடல்நலம் மெல்ல மெல்லக் குன்றியது. அவரது எழுதுகோலைப் பிடிக்கவும் அவருக்குச் சக்தியில்லாமல் போய்விட்டது. எனவே, கடிதம் எழுதவும், தன்வரலாற்றை எழுதவும் பென்சில் கொடுக்கப்பட்டது.

அதே திங்கள் ஆறாம் நாள் செவ்வாய்க் கிழமையன்று நுரையீரலே வெளியே வந்து விட்டது போல அதிகக் குருதி வெளிப்பட்டது. இதுவே

கடும் குருதி வெளியேற்றத்தின் ஆரம்பம். ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் நாள் வரை இது நீடித்தது. "நீண்ட கூந்தலுள்ள கிலோடியன்" எனத் தெரேசை அழைத்த மருத்துவர் தே கொர்னியேர் (DE Cornniere) தினமும் அவரைச் சந்தித்தார். எட்டாம் நாள் அருட்பணியாளர் யூஃப் என்பவரிடம் பாவ மன்னிப்பு வேண்டினார்; நோயில் பூசுதல் திருஅருட்சாதனத்தையும் நிறைவேற்றும்படி கேட்டுக் கொண்டார். "ஆனந்தத்தில் நிரம்பி வழிந்தவராய்" நாள் முழுவதும் நகைச்சுவை சொல்வதில் செலவிட்டார். "ஒருவர் வேதனையில் தவித்துக் கொண்டிருப்பது உண்மையிலே சற்றுக் கடினமானது தான். ஆனால், கடைசியில் அது ஒன்றும் பெரிதல்ல! சில வேளைகளில் அற்பகாரியங்களுக்காகக் கூட வேதனை அனுபவித்திருக்கின்றேன்" என்று கூறிய தெரேசு இறுதியாக வேதனையில் வெற்றியடைந்தார். வெள்ளிக் கிழமை மருத்துவர் அவரைச் சந்தித்த போது இறுதி அருட்சாதனத்தைப் பெறும் அளவுக்கு நோய் கடினமாகி விட்டது என நினைக்கவில்லை. தலைமைத் தந்தை மோபாஸ் (Maupas) அவரைச் சந்திக்க வந்தபோது இறுதி அருட்சாதனச் சடங்கு தற்போது தேவையற்றது எனக் கூறிவிட்டார். இறந்து கொண்டிருந்த சகோதரிக்கு இது பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. "இது என்ன காரியம். எனக்குப் புரியவில்லை. . அடுத்த முறை இன்னும் நன்றாகத் தயார் நிலையில் இருக்க வேண்டும்" என எண்ணினார். இதுவரை மருத்துவர் அறிவுரையின்படி, உணர்ந்த பால் மட்டுமே அருந்த வேண்டி யிருந்தது. அதுவும் அவருக்கு வெறுப்பாகவே இருந்தது. அதை மட்டும் அருந்தினால் "இறுதி அருட்சாதனத்தைப் பெறத்" தயாராகி விடுவார் என்பது மருத்துவரின் நம்பிக்கை.

### அன்பே உயிர் மூச்சு (8 ஜூலை 1897)

சிறிய உடல் அசைவும் உடல் நலத்தைப் பாதிக்கும் என மருத்துவர் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தார். எனினும் கார்மல் இல்லத்தின் கீழ்ப்பகுதி வடகிழக்கு பகுதியில் அமைந்திருந்த தூய திருமுக மருத்துவ அறைக்கு அவரைப் படுக்கையுடனேயே கொண்டு சென்றார்கள். 12 /15 அடி அளவுடைய பெரிய சன்னல் அவ்வறையில் இருந்தது. அச்சன்னலின் வழியாகத் தோட்டத்தைப் பார்வையிடலாம். அவரது அறைக்கருகிலிருந்த புன்னகை அன்னையின் திருவுருவச் சிலையும் அவரோடு கீழே கொண்டு வரப்பட்டு அவரது படுக்கைக்கு முன்பாக வைக்கப்பட்டது- காவி நிறத்திரைச் சீலைகளால் சூழப்பட்டிருந்த அவரது இரும்புக் கட்டிலிலிருந்து அன்னையை அவரால் எளிதாகக் காண முடிந்தது. அந்தத் திரைச் சிலைகளில் அவரது நெஞ்சுக்கு நெருக்கமானவர்களான அன்னை மரியா, தெயோஃபான்



வெனார்த் அவருடைய சிறிய சகோதரர்கள், மற்றும் சகோதரிகளின் படங்களைப் பொருத்தி வைத்திருந்தார். அது முதல் அவ்வறையே தெரேசின் உலகமானது.

73 வயது நிரம்பிய சகோதரி தூய ஸ்தனிஸ்லாஸ்தான் அப்போது இல்லத்தின் மருத்துவப் பணியாளராக இருந்தார். அவர் தெரேசின் அறைக்கு அருகில் உள்ள சிற்றறையில் இருந்த சகோதரி ஜெனவியேவிடம் முழுமன விருப்பத்துடன் தமது பணியை ஒப்படைத்தார். அவரே அவரது உதவிப் பணியாளராகப் பணிபுரிந்து வந்தார். பெரும்பாலும் தலைமைச் சகோதரி ஆக்னெசு, தங்கையோடே இருந்து வந்தார். அதிகாலை வழிபாட்டின் போதும் அவரோடு தங்கியிருந்து தெரேசின் வார்த்தைகளைத் தொடர்ந்து எழுதும்படி அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த நாள்குறிப்பின் வழியாகத் தெரேசின் வாழ்க்கை, துன்பம் அனுபவிப்பதிலும், நகைச்சுவையுடன் உரை யாடுவதிலும், அன்பு உறவாடலிலும்தான் அமைந்திருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

பிறரைப் போலவே அவரும் வலுவிழந்தவராகவும், கடும் நோயுற்ற வராகவும் இருந்தார். "நான் உடல் நலமின்றி இருந்ததால் என்னால் எதைப் பற்றியும் சிந்திக்க இயலவில்லை" என்றார் தெரேசு. பின் எவ்வாறு அவர்



கார்மல் இல்லத்து மருத்துவ அறை. வலப்புறத்தில் புன்னகை அரசியின் திருவுருவச் சிலை.

செபித்தார்? என்ற கேள்வி நம் மனத்தில் எழலாம். அதற்கு அவர் "நான் அவரிடம் ஒரு வார்த்தையும் பேசுவது கிடையாது. நான் அவர்மீது அன்பு செலுத்துகிறேன் அவ்வளவு தான்" எனப் பதில் அளித்தார். மிகவும் கடுமையான உடல்வேதனையால் பாதிக்கப்படும் போது வேதனைக்குரல் எழுப்பி அழுதார்.

நோயினால் பாதிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாக இருப்பவர்களின் இழிநிலையை அவர் அறிவார். எந்த ஒரு செயலுக்கும் தங்களைச் சுற்றி இருப்பவர்களைத் தான் சார்ந்திருக்க வேண்டும். "உடல் நலமின்றி இருக்கும்போது தளர்ச்சியடைவது எவ்வளவு எளிதானது" என்று சொன்ன தெரேசு எப்பொழுதும் போல், ஏன், இன்னும் அதிகமாகத் தன்னையே இறைவனிடத்தில் கையளித்தார்.

காய்ச்சல், மிகுந்த வியர்வை, மூச்சடைப்பு, உறக்கமின்மை, மலச்சிக்கல், படுக்கைப்புண், குடற்புண் போன்ற நோய்களினால் ஏற்பட்ட உடல் வேதனைகளாலும், மன வேதனைகளாலும் பாதிக்கப்பட்டாலும் அவரது முகம் எவ்வித மாற்றமும் இன்றியே காணப்பட்டது. ஒரு சில சகோதரிகள் அவர் நோயுற்றிருக்கிறார் என்பதை நம்பவே இல்லை. அவருடைய நோயின் உறுதியற்ற நிலை அவரை மட்டுமல்ல! மருத்துவரையும் குழப்பமடையச் செய்தது. "குழுவுக்குச் சுமையாக இருந்து விடுவோமோ!' என்ற அச்சமும் சில வேளைகளில் அவரை வாட்டியது. தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கின் மாறும் மனநிலையினால் ஏற்பட்ட தொல்லைகளையும் தெரேசு பொறுமையுடன் தாங்கிக் கொண்டார். செலின் உட்படச் சில சகோதரிகளின் நுண் உணர்வின்மையும் அவருக்கு வருத்தம் விளைவித்தது. மகிழ்ச்சியான நேரத்தில் சகோதரி தூய வின்செண்ட் தே பவுல், "சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசைப் பற்றி ஏன் இவ்வளவு அதிகமாகப் பேசுகின்றார்கள்? என்று எனக்குத் தெரியவில்லை. அசாத்தியமானதாக எதுவும் அவர் செய்வது இல்லை! நற்பண்புகளை அவர் கடைப்பிடிப்பதை ஒருவரும் பார்ப்பதும் இல்லை! ஒரு சிறந்த கன்னிகை என்று கூட அவரைப் பற்றிக் கூற இயலாது" என்று கூறினார். இதனைச் சகோதரிவாஞ்சையோடு ஒரு சகோதரி தெரேசிடம் தெரிவித்தார். அதற்குத் தெரேசு "என்னுடைய மரணப்படுக்கையில் இருக்கும் நான், ஒரு நல்ல கன்னிகையல்ல என்று கேட்பது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றது! இதைவிட வேறெதுவும் எனக்குச் சிறந்த மகிழ்ச்சியைத் தர இயலாது" என்று பதிலளித்தார். அவருடைய கடந்து வந்த பாதையைப் பற்றியும், அவருடைய இறப்பின் நாளைக் குறித்தும் அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் மீண்டும் மீண்டும் கேட்ட



கேள்விகளுக்கு அமைதியாகப் பதில் அளித்தார். "பிறகு எவ்வாறு நீர் இறப்பைச் சந்திப்பீர்?" என வினவியதற்கு "நான் அன்பினால் இறப்பேன்! . . மரண அச்சத்திலின்று மற்றவர்களை விட அதிகமாக நான் ஏன் பாது காக்கப் பட்டேன் என்பது எனக்கே தெரியவில்லை" என்று பதில் அளித்தார்.

ஆன்மீகத் துயர்கள் வேறொருபுறம் அவரைத் துன்புறுத்தின. மனக்குழப்பம் இன்னும் அவரில் தீராமலிருந்தது. "வெளிப்படையான விண்ணகத்தை நான் காண்கிறேன். ஆனால் மன விண்ணகம் மேலும் மேலும் எனக்குத் திறக்கப்படாமல் மூடியே கிடந்தது" என்றார். ஆகஸ்டு 19 ஆம் நாள் முதல் அவருக்குத் திருவுணவு வழங்கப்படவில்லை. காரணம் திருவுணவு வழங்கும் போது நடைபெற்ற புரியாத சடங்குகளை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. ஒருமுறை அவர் நரம்புத் தளர்ச்சி நோயினால் இறுதி அபாய எல்லை வரை சென்றார். மற்றொரு நாள் நோய் கடுமையாக அதிகரித்த போது "உயிருக்கு ஊறு விளைவிக்கும் ஆபத்தான மருந்துகளைக் கொடிய நோயாளிகளுக்கருகில் வைக்கக் கூடாது" என்று கூறினார். "கடவுள் நம்பிக்கையற்றவர்களில் பலர் தங்கள் உயிரைத் தாங்களே மாய்த்துக் கொள்ளாமல் இருப்பது எனக்கு வியப்பை அளிக் கின்றது. நான் நம்பிக்கையற்றவராக இருந்திருந்தால் எவ்விதத் தயக்கமுமின்றி என் உயிரை மாய்த்துக் கொண்டிருப்பேன்" என்றும் கூறினார்.

எனினும் இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலும் புன்னகையுடன் நகைச்சுவையுடனும் இருந்தார். "நான் எப்போதும் மகிழ்ச்சியாகவும், புன்னகையுடனும் இருக்கிறேன்!" என்றார். தலைமைச் சகோதரி ஆக்னெசு அவரது சிலேடைப் பேச்சுகள், புன்னகை புரிதல், பலகுரல் பேச்சு, உச்சரிப்பு போன்றவற்றைக் குறித்து வைத்தார். தெரேசு செலினைப் பலவிதப் பட்டப் பெயர்களால் அழைத்தார். "நான் குட்டிக் குரங்கின் தந்திர விளையாட்டை விளையாட நீர் அனுமதிக்க வேண்டும்" என வேண்டினார். காரணம் அத்தகைய விளையாட்டு அவரைச் சந்திக்க வருவோருக்கு மகிழ்ச்சியைக் கொணர்ந்தன. இந்த மருந்தக அறை, மகிழ்ச்சியின் அறையாக, மகிழ்ச்சியைப் பிரதிபலிக்கும் அறையாக மாறியது. புகுமுகத் துறவுநிலைப் பயிற்சி பெறுவோர், குறிப்பாகப் "பொம்மை" என்றழைக்கப்பட்ட மூவொரு இறைவனின் மரியா அங்குச் செல்ல அனுமதிக்காததைக் குறையாகக் கூறினார். சகோதரி தூய சிலுவையோவானும் மற்றும் பிற மூத்த கன்னியரும் அமைதியாக வந்து அவரது ஆலோசனையைப் பெற்றுச் சென்றனர்.

தெரேசு அவரது 'சிறிய வழியைப்' போராட்ட வீரர் பெல்லியேருக்குச்

'சிறிய குழந்தை போல' என்ற வார்த்தையின் வழியாகக் கற்றுத் தந்தார்.

உண்மை அன்பின் மகிழ்ச்சியை அவரது இதயம் அறிந்திருந்தது. அவருடைய அன்பை எப்படி வெளிப்படுத்துவது என்பதைத் தெரேசு அறிந்திருந்தார். அவர் தலைமைச் சகோதரி ஆக்னெசிடம் முத்தமொன்று கேட்டார். அவரும் ஓசையுடன் ஒரு முத்தம் கொடுத்தார். அவர் ஓர் ஆரம்ப நிலையைக் கடந்து வந்துள்ளார் என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்ததால் 'இப்போது' என்ற வார்த்தையின் வாயிலாக அதனைத் தெரேசு வெளிப் படுத்தினார்.

'என் துறவற வாழ்வின் விடியலிலிருந்து என்னையே நான் மறுத்து வாழ்ந்து வந்ததால் 'இப்போது' நான் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறேன்! துணிவுடன் போராடுபவர்களுக்கு உறுதி கூறப்பட்ட கைம்மாறை ஏற்கெனவே நான் பெற்று மகிழ்ந்து கொண்டிருக்கிறேன். மனித ஆறுதல்களையெல்லாம் மறுப்பதன் தேவையை நான் உணர்வதில்லை; ஏனெனில் யார் மீது நான் அனைத்துக்கும் மேலாக அன்பு செலுத்த விரும்பினேனோ, அவரால் என் ஆன்மா வலிமை அடைந்துள்ளது. அவர் மீது அன்பு செலுத்துவதால் என் இதயம் வலிமை அடைந்துள்ளது; விரிவடைவதை மகிழ்வுடன் நான் காண்கிறேன். என் இதயத்திற்கருகில் இருப்பவர்களுக்கு ஒப்புமைப்படுத்த இயலாத அளவுக்கு அதிகம் அன்பையும், பாசத்தையும் நான் கொடுக்க முடியும்! என் இதயம் இறுமாப்பானதும் பலனற்றதுமான அன்பில் ஒருமுகப்பட்டிருந்தால் இறைவனையும், பிறரையும் இவ்வளவு அன்பு செய்திருக்க இயலாது" என்றார்

தெரேசு தாம் எழுதியுள்ளவை அனைத்தும் உண்மையா என்பதை அறிய விழைந்தார். அன்பினால் இறக்கும் வரை அவர் அன்பு செலுத்த விரும்பியிருந்தார். அவர் இயேசுவையும் அவரது சகோதரிகள் அனைவரையும் உலகில் அனைவர் மீதும் அன்பு செலுத்த விரும்பினார். அவருடைய நோய், உடலை உருக்கி அழித்துக் கொண்டிருந்தபோது அவர் நிறை முதிர்ச்சியை அடைந்தார். எனினும் அவர் குழந்தையாகவே நிலைத்தார். அவர் பால்உணவையே உண்டு வந்ததால் தம்மைக் 'குழந்தை' என்றே அடிக்கடி நகைச்சுவையாக அழைத்துக் கொண்டார். ஆனால் தூய இதய மரியாவிடம் "நான் ஓர் வயதான குழந்தை" என்று கூறும் போது நகைச்சுவையாகக் கூறவில்லை. மாறாக உண்மையை எடுத்து உரைத்தார். அவர் தமது 'ஆற்றல் மிக்க ஓட்டத்தின்' கடைசி எல்லையை நெருங்கிக் கொண்டிருந்தார்.



அவர் மிகவும் களைப்புற்றிருப்பதாக இறுதியில் ஏற்றுக் கொண்டார். ஆனால் 'கடவுளின் கரங்களில் வீழ்ந்து கொண்டிருக்கிறேன்' என்றார். தமது வரலாற்றை எழுதப் பென்சிலைக் கையில் ஏந்தும் சக்தியும் இல்லாமல் தவித்தார். இந்தக் கறுப்பு அட்டை கொண்ட பயிற்சி ஏடு, அதன் 37ஆவது தாளில் பின்வரும் வரிகளோடு நிறைவுக்கு வருகின்றது.

"ஆம், நான் இதை உணர்கிறேன்! மனிதர் புரியக்கூடிய குற்றங்கள் அனைத்தும் என் மனத்தில் இருந்தால், துயரத்தால் நொறுங்கிய என் இதயத்துடன் நான் விரைந்து சென்று இயேசுவின் கரங்களில் என்னைச் சமர்ப்பணம் செய்வேன். ஏனெனில் தம்மிடம் திரும்பி வருகின்ற ஊதாரிக் குழந்தை மீது அவர் எவ்வளவு அன்பு செலுத்துகிறார் என்று எனக்குத் தெரியும். நான் அன்புடனும், நம்பிக்கையுடனும் இறைவனிடம் செல்வது அவர் தமது முற்காப்பு அருளினால் (Prevenient) என் ஆன்மாவைக் கொடிய பாவங்களினின்று காத்தருளினார் என்பதற்காக அல்ல!"

- அதற்கு மேல் அவரால் தொடர்ந்து எழுத முடியவில்லை.

35 ஆவது தாளை முடிக்கும் முன்பாக மீண்டும் தமது வாழ்வை ஒருமுறை திரும்பிப் பார்த்தார்.

"உமது அன்பு என் முன்பாகச் சென்றுள்ளது! அது என்னோடு வளர்ந்துள்ளது! அது இப்போது என்னால் ஆழங்காண இயலாத பாதாளமாகிவிட்டது. . .! ஒருவேளை இது ஒரு மாயையாக இருக்கலாம்; ஆனால் என் ஆன்மாவில் நீர் நிறைத்துள்ள அன்பை விட அதிகமாக எந்த ஒரு ஆன்மாவிலும் உன் அன்பை நிறைக்க முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது. . . 'எந்த ஒரு தகுதியும் இல்லாத எனக்கு' உமது அன்பை இலவசமாக அருள நல்லெண்ணம் கொண்டீர். இதைவிடச் சிறந்த அன்பின் ஆழத்தை இவ்வுலகில் என்னால் பெறவே இயலாது."

இவ்வாறு தெரேசு தம் சார்பில் இறைவனின் அருளைப் பாடி முடித்தார்.

## விழுது விடும் எழுத்துக்கள்

ஜூலைத் திங்களில் தலைமைச் சகோதரி ஆக்னெசு தமது திட்டங்களில் ஒன்றைத் தெரேசிடம் தெரிவித்தார். சுற்றுமடலுக்காகத் தெரேசு தம்மைப் பற்றி எழுதிய குறிப்புகளை வெளியிட்டால் என்ன? என்ற வினாவை எழுப்பினார் தொடர்ந்து, 'நீர் எழுதியுள்ளவை ஒரு நாள் திருத்தந்தையிடம் சென்று சேரும் சாத்தியம் உண்டு' என்றார். அதற்குத்

தெரேசு சிரித்துக் கொண்டே 'இன்றும் என்றும்' எனக் கூறினார்.

ஆனால் இத்தகைய சாத்தியக் கூறு உண்டு என்பதை முன் உணர்ந்தவராய்ச் சில பரிந்துரைகளைத் தலைமைச் சகோதரி ஆக்னெசிடம் தெரேசு வழங்கினார்:

"தலைமைச் சகோதரியே! என் கதையைப் பிறருக்குத் தெரிவிக்கும் போது அவர்களிடம் கூறுங்கள்: எல்லா வகையான குற்றங்கள் அனைத்தையும் நான் புரிந்திருந்தாலும் இதே அசையாத நம்பிக்கையை நான் கொண்டு இருந்திருப்பேன். காரணம் எண்ணற்ற குற்றங்கள் அனைத்தும் இறைவன் முன்பு, எரியும் தீக்கடலில் வீழ்ந்த ஒருதுளி நீர் போன்று மறையும்! பிறகு அன்பினால் இறந்து போன, மனந்திரும்பிய, குற்றம் புரிந்தவரைப் பற்றிய கதையைக் கூறுங்கள். அனைவரும் என் கதையை உடனடியாக எளிதாக புரிந்து கொள்வார்கள்! ஏனெனில் நான் சொல்ல விரும்புவது நெஞ்சைத் தொடும் என் வாழ்வின் மாதிரிகையாகும்."

ஆர்வம் மிக்க தலைமைச் சகோதரி ஆக்னெசு இந்த வெளியீட்டினால் ஏற்படப்போகும் துன்பங்களை முன்னோக்கிப் பார்த்தார். "நல்லது, ஜோன் தார்க்கைப் போன்று நான் கூறுகிறேன்: மனித பொறாமைகளுக்கிடையிலும், இறை விருப்பமே நிறைவேற்றப்படும்!" என்றார் தெரேசு. புன்னகை தவழும் முகத்துடன் தம் சகோதரியைத் தம் வரலாற்றாளராக நியமித்தார். அவர் விருப்பம் போல் எதையும் சேர்க்கவும், குறைக்கவும் உரிமையளிக்கப்பட்டது- தெரேசு, ஆக்னெசு மீது நம்பிக்கைக் கொண்டார். இந்த 'வாழ்க்கைப் பயிற்சி எடு' பிறருக்கு நன்மை பயக்கும் என்ற உணர்வொன்று அவரை நிறைத்தது.


சில நாள்களுக்கு பிறகு தலைமைச் சகோதரி ஆக்னெசு தெரேசின் எழுத்துப் பிரதியின் பகுதியொன்றை அவரிடம் கொடுத்து மீண்டும் எழுதப் பணித்தார். அவை முற்றுப் பெறாத பகுதி என்று அவர் நினைத்தார். ஆனால் அதைக் கண்ட தெரேசு கண்ணீர் வடித்தார். "இந்தப் பயிற்சி ஏட்டில் நான் மீண்டும் வாசிப்பது என் ஆன்மாவையே! தலைமைச் சகோதரியே! இந்தப் பக்கங்கள் நன்மைகள் பல புரியும்; இதனைப் படிப்பதன் வாயிலாக இறைவனின் பெருந்தன்மையை மிக நன்றாகப் புரிந்துக் கொள்வார்கள். மீண்டும் தொடர்ந்து என்னை அனைவரும் அன்பு செலுத்துவார்கள் என்று எனக்குத் தெரியும். இது ஒரு இன்றியமையாத பணி. ஆனால் கவனமாயிருக்கவும்! அசாதாரண வழியில் நடப்பவர்களைத் தவிர மற்ற அனைத்து வகையினருக்கும் ஏதேனும் ஒரு சில வரிகள் பயனளிக்கும். . . மகிழ்ச்சியை அளிக்கும்" என்றார்.



## மண்ணகமே என் விண்ணகமாய். . .

ஒரு நூலை மட்டும் விட்டுச் செல்வது தெரேசை நிறைவு படுத்த முடியவில்லை! குறிப்பாக நூல் வெளியிடப்படுமா என்பது தெளிவாக இல்லாமையால் தெரேசு மனம் நிறைவடையவில்லை! தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் தெரேசின் கைப்பிரதியை எரித்துவிடத் தீர்மானித்த திட்டங்கள் பாழாகும்; எனினும் அதைப்பற்றியும் அவர் கவலைப்படவில்லை. "விண்ணகத்தில் செயல்பாடின்றி இருக்கக்கூடாது" என்கிற விருப்பமே அவரை ஆட்டிப் படைத்தது. இந்த ஆர்வத்தினால் அவர் தொடர்ந்து பாதிக்கப்பட்டார். அதற்குத் தகுந்த காரண காரியங்களையும் எடுத்துரைக்கிறார்; 'எனது இறப்புக்குப் பிறகு மண்ணில் உள்ளவர்களுக்கு நற்பணிகள் புரிவதை இறைவன் விரும்பாதவராக இருந்தார், இவ்வுலகிலும், நற்பணிகள் புரியும் ஆவலை எனக்கு அளித்திருக்கமாட்டார்; விண்ணகத்தில் இளைப்பாறும் ஆவலையே அளித்திருப்பார்." விண்ணகத்தை இளைப்பாறும் இடமாகக் கற்பனை செய்து பார்க்க அவரால் முடியவில்லை!" அன்பினால் பற்றி எரியும் ஆன்மா செயலற்ற அமைதியில் நிலைக்க இயலாது! என் மனத்திலிருக்கும் திட்டங்களை நீங்கள் அறிந்திருந்தால் விண்ணகத்தில் இருக்கும் போது அந்தத் திட்டங்களை எவ்வாறு செயல் படுத்துவேன் என்பதை அறிந்து கொள்வீர்கள். எனதுமறைப் பணியை நான் இங்குத் தொடங்குவேன்" என்று தூய இதய மரியாவிடம் தெரேசு கூறினார். "எனது மறைப்பணி தொடங்கவிருக்கின்றது. நான் இறைவன் மீது அன்பு செலுத்துவது போல மற்ற ஆன்மாக்கள் மீதும் அன்பு பாராட்டுவதே எனது பணி. இறைவன் என் விருப்பத்தை நிறைவேற்றினால் உலகின் இறுதி நேரம் வரை என் விண்ணகம் மண்ணகத்தில் செலவிடப்படும். ஆம்! என் விண்ணகத்தை மண்ணகத்தில் நன்மை செய்வதன் வழியாகச் செலவிடுவேன்! நான் திரும்புவேன்! நான் இவ்வுலகிற்கு இறங்கி விடுவேன் !" என்று தெரேசு தொடர்ந்து கூறினார்.

அவரது துணிவுக்கு எல்லையே இல்லையே! மண்ணகத்தில் என் விருப்பம் போல் எதையும் நான் செய்ததில்லை! எனவே விண்ணகத்தில் என் விருப்பம் போல் தான் இறைவன் செயல்பட வேண்டும். தமது எதிர்காலம் குறித்து அவர் முன்பு கொண்டிருந்த முன்னுணர்வுகள் அவரைக் கலக்கமடையச் செய்தன எனச் சகோதரி "மூவொரு இறைவன் மரியாவிடம்" வெளிப்படுத்தினார். மீண்டும் சிரித்துக் கொண்டே தெரேசு கூறினார்: "உம்மைத் தவிர அனைவருமே என்னை அறிவிலி என்றே எண்ணுவர் அல்லது அதிக அகந்தை கொண்வர் என்று கூறுவர்" என்றார். ஆனால் தெரேசு "வெறுங்கையராய்; வாழ்க்கை முழுவதும் எளிமையாய் வாழ்ந்தார்.



O Marie, si j'étais la Reine du Ciel et que vous soyez Thérèse, je voudrais être Thérèse afin que vous soyez la Reine du Ciel!!!..............

8 Septembre 1897

தெரேசுவின் கடைசி மன்றாட்டு - கையெழுத்துப்படி

*"ஓ மரியே! நான் விண்ணக அரசியாகவும், நீர் தெரேசுமாக இருக்க நேர்ந்தாலும். . . நான் தெரேசுவாகவே இருக்க விரும்புகின்றேன்! நீங்கள் விண்ணரசியாக இருக்கவே விரும்புகிறேன்!!!*

என்னிடத்தில் உள்ளவை, நான் பெறுபவை எல்லாம் திருச்சபைக்காகவும், ஆன்மாக்களுக்காகவுமே! நான் 80 வயது வரை வாழ்ந்தாலும் இன்னும் எளியவராகவே வாழ்ந்திருப்பேன்."

ஜூலை 16 ஆம் நாள், கார்மல் அன்னை பெருவிழா! அன்று எங்கும் மகிழ்ச்சியே நிறைந்திருந்தது. புதிய அருட்பணியாளர் த்ருத் (Troude) அவருக்குத் திருஉணவு கொணர்ந்தார். மரியா கண்ணீர் சிந்தாமல் தெரேசு எழுதிய திருவிருந்துப்பா வரிகளைப் பாடினார். இன்னும் தம்மால் கவிதை வரிகளை எழுத முடிவதை நினைத்துத் தெரேசே வியப்பில் ஆழ்ந்தார். இன்னும் தெரேசு உயிரோட்டத்துடனே இருந்தார். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தமது பிரியாவிடை மடல்களைத் தெரேசு எழுதினார்.

அருட்பணியாளர் ரூலானுக்கு இவ்வாறு எழுதினார்: "என் சகோதரரே! மண்ணகத்தில் இருந்ததைவிட விண்ணகத்தில் நான் நுழையும் நாள் நெருங்கி வருகின்றது என்பதை மகிழ்வுடன் அறிவித்துக் கொள்கிறேன்.!

கேரென் குடும்பத்தினருக்கு இவ்வாறு எழுதினார்: "அன்பு மாமா!



அத்தை! இருவருக்கும் பிரியா விடை! நான் உங்கள் மீது கொண்டிருக்கும் அன்பை விண்ணகத்தில் மட்டுமே வார்த்தையால் வடிக்க இயலும். நான் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் வேளையில் எனது பென்சிலால் என் அன்பை உங்களிடத்தில் தெரிவிக்க இயலாது!"

லேயோனிக்குத் தொடர்ந்து எழுதினார், " எனது மிகவும் பிரிய சகோதரிக்குப் பிரியாவிடை! எனது விண்ணக நுழைவு பற்றிய எண்ணம் உம்மை மகிழ்வால் நிரப்ப வேண்டும் என விரும்புகிறேன். ஏனெனில் அங்கு உம்மீது மேலும் அதிகமாக நான் அன்பு பாராட்ட இயலும்." லேயோனி இறுதியாகக் கயென் நகரில் உள்ள மாதா மினவுதல் சபையில் மீண்டும் சேர்ந்து துறவியாகி நிலைத்திருப்பார் எனத் தான் உறுதியாக நம்புவதாகச் சகோதரி 'தூய இதய மரியாவிடம்' தெரேசு கூறினார்.

தெரேசின் கடிதங்களில் ஒன்று மட்டும் விதிவிலக்குப் பெற்றிருந்தது. பெல்லியேருக்கு எழுதிய கடிதமே அது. தெரேசின் வலிமை முற்றிலும் குன்றும் வரை பெல்லியேருக்குக் கடிதம் எழுதினார். நடுக்கத்துடன் பென்சிலால் எழுதப்பட்ட மூன்று கடிதங்கள் அனுப்பப்படாமலே இருந்தன. அருட்பணியாளராகப் பயிற்சி பெறும் அந்த இளைஞர் தமது விடுமுறையைக் கல்வாதோசில் உள்ள லாங்ரூன் (Langrune) இல் செலவழித்தார். தம் சகோதரியை இழந்து விடுவோமே என்கிற எதார்த்தம் அவரை அச்சத்தில் ஆழ்த்தியது. அவருக்குத் தெரேசு மிகவும் தேவை என்பதை அவரும் அறிந்திருந்தார். எனவே தெரேசு அவரை உறுதிப்படுத்தினார்.

"எந்த நிலையில் உங்கள் ஆன்மா என் ஆன்மாவோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதை இதுவரை இல்லாத அளவுக்கு என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஏனென்றால் அச்சமெனும் கரடுமுரடான படிக்கட்டுகள் வழியாக அல்ல! மாறாக அன்பு என்னும் 'மின் இயக்கி' வழியாக ஆன்மா அவரை அடையும்படி இறைவன் அழைக்கின்றார். . . உங்கள் ஆன்மா மீது நான் கொண்டுள்ள அன்பை உங்கள் குற்றங்களின் நீண்ட அட்டவணை குறைத்து விடும் என அஞ்சினால், நீங்கள் என்னைப் பற்றி நிறைவாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே பொருளாகிறது. . உங்கள் சிறிய சகோதரியின் வழியாகவன்றி வேறு எவ்வழியிலும் விண்ணகத்திற்கு நீங்கள் செல்ல இயலாது."

ஜூலை 30 ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று முந்தைய நாள்கள் போலல்லாமல், குருதி வெளியேற்றம் நாள் முழுவதும் நீடித்தது. மூச்சுத் திணறல் ஏற்பட்டது. எனவே செயற்கைச் சுவாச வசதிகள் அவருக்குச்

செய்யப்பட்டன. மருத்துவர் கொர்னியேர் இரவு நேரம் வரை உயிர் வாழ மாட்டார் என்று எண்ணினார். மாலை 6 மணிக்குத் தலைமைத் தந்தை மோபாஸ் இறுதியாக நோயில் பூசுதல் திருச்சடங்கு நிறைவேற்றி, அவருக்கு இறுதி அருட்சாதனமாகத் திரு உணவு வழங்கினார். அடுத்த அறையில் ஆலயப் பணியாளர் உடல் அடக்கத்திற்குத் தேவையான மெழுகுத் திரிகள், திருநீர், வைக்கோல் மெத்தை போன்றவற்றைத் தயார் செய்தார். எதிர்பாராத விதமாகத் திறந்திருந்த கதவுகளின் வழியே தெரேசு இவை அனைத்தையும் பார்க்க நேர்ந்தது. "இதோ! அங்கே உள்ள மெழுகுத் திரிகளைப் பாருங்கள்; தெய்வீகக் கள்வர் என்னைக் கவர வருகையில் அவை என் கையில் கொடுக்கப்படும். ஆனால் நீங்கள் மெழுகுத் திரி நிலைச் சட்டத்தைக் கொடுத்து விடாதீர்கள்; மிக அசிங்கமாகி விடும்" என்றார். அவருக்கு மரணத்தைச் சந்திக்க அச்சம் என்பது எள்ளளவும் இல்லை என்பதையே, பிறர் இதயம் கசியச் செய்யும் இந்தத் துயர நகைச்சுவை எடுத்துரைக்கிறது.

மீண்டும் ஒருமுறை நோய் அவருக்கு ஏமாற்றத்தைத் தந்தது. நோய் அவரை விட்டு அகன்றது. மறுநாள் உடல் நிலை "தேறியது". "ஆனால் எதனால் நான் இறப்பேன்?" என்று தனக்குள்ளே வினவினார். அவரது மரணப்படுக்கையைச் சூழ்ந்து நின்றவர்கள் இன்னும் அவர் வாழ வேண்டிய நாள்களின் எண்ணிக்கையைப் பற்றி விவாதித்தனர். தெரேசு அவர்களைக் குறுக்கிட்டு, "அதைப்பற்றி நோயாளியாகிய எனக்குத் தான் இன்னும் நன்றாகத் தெரியும்! நான் செல்ல வேண்டிய காலம் இன்னும் உண்டு என்றே நான் உணர்கிறேன்" என்றார்.

உண்மையில், அனைத்து எதிர்பார்ப்புகளுக்கும் எதிராக, ஆகஸ்டு ஆறாம் நாள் முதல் பதினைந்தாம் நாள் வரை அவரது உடல்நிலை நன்றாக இருந்தது. மருத்துவர் தே கொர்னியேர் விடுமுறையில் சென்றார்.

## வாழ்ந்தது கையளவு (6-15 ஆகஸ்ட் 1897).

நீண்ட நேரத் தனிமை, செயலற்ற நிலை, அமைதி நிலை. . . மருத்துவ அறையில் அவரது வாழ்க்கை முழுவதும் மனத்தில் நிழலாடியது. மழலைப் பருவம், அவரது போராட்டங்கள், ஒன்பது ஆண்டு கார்மல் வாழ்வு என அனைத்தும் விரிவாக மனத்தில் திரையிட்டன. "அந்தோ! எவ்வளவு குறுகிய காலம் நான் வாழ்ந்துள்ளேன்! எவ்வளவு குறுகிய காலம் நான் வாழ்ந்துள்ளேன்!" ஜூலையில் ஒரு நாள் கூறினார்; 'வாழ்க்கை எப்பொழுதும் எனக்குக் குறுகியதாகவே தோன்றுகிறது. எனது மழலைப் பருவம் நேற்றைய



நாள் அனுபவம் போல் தோன்றுகிறது." ஆனால் அவர் தமது நிகழ்காலத்திலேயே வாழ்ந்தார். "இன்றைக்கு மட்டும்" என்பதே அவரது கொள்கை."

"போலி நடிப்பு" அவர் மனத்தில் பேரச்சத்தை உருவாக்கியது. தம்மைப் பற்றி மருத்துவரோ, கார்மல் துறவிகளோ என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை. மருத்துவர் தே கொர்னியேருக்குச் சில அறிவுரை கூறும் படி தெரேசிடம் தலைமைச் சகோதரி ஆக்னெசு கூறினார். ஆனால் தெரேசு மறுத்து விட்டார். அவருடைய சகோதரியே அவரை உண்மையிலேயே புரிந்து கொள்ளவில்லை; "நிறைவடைவதற்காகப் பலவித துயர்களை அனுபவித்திருக்க வேண்டும்" என நான் அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் அதனை அவர் மறுத்து, "அப்படியொன்றும் இல்லை" என்று பதில் கூறினார்.

அவர் நோயுற்றிருந்த 200 நாள்களிலும் இயேசுவின் மீது அவரது கண்களைப் பதித்தார். அவரது திருச்சிலுவை அவரை விட்டு அகலவில்லை. அனைவரும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் பாதங்களை முத்தம் செய்வதே வழக்கம். ஆனால் அதற்கு மாறாகத் தெரேசு இயேசுவின் திருமுகத்தை அடிக்கடி முத்தமிட்டார். நம் இறைவன் கொடிய பாடுபட்டுச் சிலுவையில் இறந்தார். எனினும் அதுவே மிக அழகிய அன்பின் மரணமாகும். இதை மட்டுமே நோக்கினால் போதும்! (அவருடைய சகோதரிகள் கற்பனை செய்தது போல்) அன்பினால் இறப்பது விபத்தில் இறப்பது போன்றதல்ல; இயேசுவின் இறப்பையே நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்! என்று எனக்குத் தோன்றுகிறது என்பதை வெளிப்படையாகவே நான் ஏற்றுக் கொள்கிறேன்." என்றார். இயேசுவின் பாடுகளோடு தமது பாடுகளையும் விவேகத்துடன் ஒப்புமைப்படுத்துவது அவருடைய இறுதி உரையாடல்களில் இடம் பெறுகிறது. அவருடைய தோளில் வலி ஏற்பட்டபோது, சிலுவையை அவரே சுமந்து வருவதாக எண்ணினார். அவருடைய மூன்று சகோதரிகளும் அவரது படுக்கையருகில் தூங்கி இளைப்பாறுவதைக் கண்டு அவர்களை எழுப்பி, பேதுரு? யாக்கோபு, யோவான்! எனச் சுட்டிக் காட்டி விழித்திருக்கச் செய்தார்.

திருவிருந்து மறுப்பு அவரில் வருத்தம் உண்டாக்கவில்லை. அவரே தியாகத்தின் பலியாளாக மாறினார். "அந்தியோக்கிய நகர் தூய இஞ்ஞாசியாரின் வார்த்தைகளை அடிக்கடி நான் நினைப்பதுண்டு - தாயரம் என்ற ஆலையில் நானும் அரைக்கப்பட்டு இறைவனுக்கு ஏற்புடையதாகும் அப்பமாக மாற வேண்டும்".

## சோகமே சொந்தமாய் ( 15 - 27 ஆகஸ்ட் 1897)

விண்ணேற்பு விழாவன்று அவருடைய நோய்த் தாக்குதல் மீண்டும் அதிகரித்து. சுவாசிப்பது கடினமாகி விட்டது. அவரது இடப்புறத்தில் மிகுந்த வலி இருந்தது. அவருடைய கால்கள் வீங்கத் தொடங்கின. ஆகஸ்ட் 17 ஆம் நாள் மருத்துவர் கொர்னியேர் இல்லாமையால் மருத்துவர் பிரான்சிஸ் நீல் தெரேசைப் பரிசோதிக்குமாறு தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் அனுமதி அளித்தார். அதிகாரத்தில் இருக்கும் இல்லத் தலைவிக்கும், எதார்த்தமாகப் பேசும் மருத்துவருக்கும் இடையே இயல்பான உறவு இல்லை. மருத்துவக் குறிப்புகள் பெரும் அவநம்பிக்கையை அளித்தன. "வலப்புற நுரையீரல் முற்றிலும் பழுதடைந்திருந்தது. நுரையீரல் எலும்புருக்கி நோய் முற்றிய நிலையை அடையவிருந்தது. இடப்புற நுரையீரலின் மூன்றாவது கீழ்பகுதியும் பாதிக்கப்பட்டிருந்தது. நுரையீரல் எலும்புருக்கி நோய் முற்றிய நிலையை அடையவிருந்தது. எனினும் முகத்தில் புன்னகை மட்டும் குறையவில்லை. 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதல் 1945 வரை உலகையே உலுக்கி வந்த நோயான நுரையீரல் எலும்புருக்கி நோய் தெரேசையும் பிடித்தது. அவரை முழுமையாகப் பற்றிக் கொண்டது. கொடிய நோயாகக் கருதப்பட்ட இந்நோயின் பெயரைக் கேட்டாலே மக்கள் அச்சம் கொண்டனர். அதைப்பற்றிப் பேசுவது தடை செய்யப்பட்டிருந்தாலும் இறுதியில் கார்மலிலும் உச்சரிக்கப்பட வேண்டிய சூழல் உண்டானது மருத்துவர் கொர்னியேர் அந்த வார்த்தையைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தார். ஏனென்றால் "இது நுரையீரல் எலும்புருக்கி நோயல்ல; தெரேசின் நுரையீரல்களில் ஒருவகையான விபத்து ஏற்பட்டுள்ளது. எனவே இது ஒரு நுரையீரல் நெருக்கம் மட்டுமே" என ஜூலை திங்கள் 8 ஆம் நாள் திருவிருந்தின் மரியா தம் பெற்றோருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இதனை மருத்துவர் நீல் அவரது இயல்புப்படி எதார்த்தமாக உண்மையைக் கூறிவிட்டார்.

தெரேசின் நோய், குடல்கள் உட்பட உடலின் அனைத்து உறுப்புகளிலும் பரவியிருந்தது. ஆகஸ்ட் திங்கள் இறுதியில் வேதனைகள் அவற்றின் உச்ச நிலையை அடைந்தன. தெரேசு மூச்சுவிடப் போராடினார்; மூச்சுத் திணறல் அதிகம் ஏற்பட்டது. அவருடைய உடல் உறுப்புகளின் செயல் பாடுகள் தடைப் பட்டன. "ஒருவரைப் பைத்தியமாக்க இந்த நிலை மட்டுமே போதும்" என்று தெரேசு கூறும் அளவுக்கு உடல் வேதனையை அனுபவித்தார்.



## இறுதி மன்னிப்பு (27 ஆகஸ்ட் முதல் 13 செப்டம்பர் 1897 வரை)

ஆகஸ்ட் திங்கள் 27 ஆம் நாள் நண்பகலுக்குப் பின்னர் இக்கொடிய துன்பங்கள் முடிவுக்கு வந்தன. காய்ச்சல் மட்டுமே இருந்தது. நா வறண்டிருந்தது. தாகத்தினால் தவித்தார். அனைத்திற்கும் மேலாக மூச்சு விடுவது கடினமானதாகவே இருந்தது. அழிவுறாத இடப்புற அரைப்பகுதி நுரையீரலினால் மட்டுமே சுவாசிக்க முடிந்தது.

தோட்டத்து மலர்களைக் கண்டால் அவர் மனம் சற்று அமைதியில் நிலைக்கும் என எண்ணி அவரது படுக்கையை மருத்துவ அறையின் நடுப்பகுதிக்குக் கொண்டு வந்தனர். அவருக்கு இடப்பக்கத்திலிருந்த ஜன்னல் வழியாகத் தோட்டத்தைப் பார்த்து மனம் மகிழ்ந்தார். அவருக்கு முன்பாகத் தொங்கவிடப்பட்டிருந்த திரைச் சீலையில் பொருத்தி வைத்திருந்த புன்னகை செய்யும் கன்னிமேரியை நோக்கி "அங்கே பார்! அவர் என்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்" என்றார் தெரேசு. அன்னை மரியாவிடம் இவ்வளவு அதிகமாக அன்பு செலுத்தியும் அவரது செபமாலையைச் சொல்வதற்குத் தமது வாழ்நாள் முழுவதும் இடர்ப்பட்டதை நினைத்து வியப்பில் ஆழ்ந்தார்.

இந்த மன்னிப்பின் நாள்களில் தலைமைச் சகோதரி ஆக்னெசு, நோயாளிக் கன்னிகையின் வார்த்தைகள் பலவற்றையும் எழுதி வைத்தார். அவை சிறு சொற்றொடர்களாக அமைந்தன. ஒரு கருத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வேறொரு கருத்தைப் பற்றிச் சொல்வார். தெரேசு, தமது வார்த்தையாலும், உடல் அசைவினாலும் வாழ்வை வென்ற நாயகியாகத் திகழ்ந்தார். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இந்த நேரத்திலும் தமது நகைச்சுவைகளால் சகோதரிகளை மகிழ்வித்தார். விவிலியத்தில் காணப்படுவது போல இந்நிலையில், "உடல் அழிந்து கொண்டிருந்தாலும், உள்ளார்ந்த இயல்பு நாளுக்குநாள் புதுப்பிக்கப் பெற்று வருகிறது" (2 கொரி 4 : 16) என்கிற வார்த்தை தெரேசின் வாழ்க்கையில் அர்த்தம் பெற்றது. தெரேசு இந்நாள்களில் அமைதி மனம், விடுதலை உயர்வு, மகிழ்ச்சி பூத்த முகம் உடையவராகக் காணப்பட்டார். அவரைச் சூழ்ந்திருந்தோர் அனைவரும் இதைக் கண்டு வியப்புற்றனர். இத்தகைய நிலையான அமைதி நிலை அடைய என்ன செய்தீர்கள்? என்று அவரைக் கேட்டனர். அதற்கு "என்னையே நான் மறந்தேன். மேலும் எதிலும் என்னைத் தேடாதவாறு கவனமாய் இருந்தேன்" என்றார்.

தனக்காக நீண்ட நாள்கள் தூங்காத விழிகளைக் கொண்டிருந்த

சகோதரி ஜெனவியேவை அன்புடனும், நன்றியுடனும் நினைவு கூர்ந்தார். அவரிடம் கேட்கப்படும் வினாக்களுக்கு உயிரோட்டத்துடன் அறிவுக் கூர்மையான விடைகளைத் தரும் திறமை அவரிடமிருந்து மாறவில்லை. தலைமைச் சகோதரி ஆக்னெசு பதற்றத்துடன் "ஒருவர் நோயுற்றிருப்பது எவ்வளவு பாதகமானது" என்று கூறிய போது தெரேசு "அது சரியல்ல, இறப்பு நமக்குப் பாதகமான நிகழ்வு அல்ல. நாம் நற்பெயர் அற்றவர்களாக இறப்பது இல்லை. அந்தோ பரிதாபம்! இறப்புக்கு அஞ்சுவது எவ்வளவு சிறுமையானது! ஒருவர் திருமணமாகி, மனைவி குழந்தைகளுடன் வாழும் போது அவர் இறப்பிற்கு அஞ்சினால் அதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால் எனக்கு எதுவும் இல்லையே!" என்று கூறித்தேற்றினார்.

ஆக்ஸ்ட் திங்கள் 30 ஆம் நாள் இயங்கு படுக்கையொன்றில் மடத்தின் உட்பகுதிக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டார். அங்குத் திறக்கப்பட்ட அறையின் வாயிலே அவரது படுக்கை நிறுத்தி வைக்கப்பட்டது. அங்கிருந்து திருவிருந்துப் பேழையைச் சந்தித்தார். இதுவே அவரது கடைசித் திருவிருந்து சந்திப்பு. தெரேசு அங்குத் தங்கியிருந்த இயேசுவுக்கு ரோசாமலர் இதழ்களைத் தூவி இறைத்தார். அந்த அறிமுகமான, மற்றும் அதிகம் விருப்பமான இந்தச் செயலைச் சகோதரி ஜெனிவியேவ் புகைப்படம் பிடித்தார். செப்டம்பர் 14 ஆம் நாள் அதிக ரோசாமலர் இதழ்களை இறைத்து விட்டு "இவ்விதழ்களைக் கவனமாகச் சேகரித்து வையுங்கள் சகோதரிகளே! பிற்காலத்தில் நற்செயல்கள் புரிய உங்களுக்குப் பயன்படும். அவற்றில் ஒன்றையும் தவற விடாதீர்கள்" என்று உரைத்தார். அவருடைய முன்மொழிதல் வார்த்தைகளுள் இதுவும் ஒன்றே.

அத்தை கேரென், தெரேசின் உணவு ஆர்வத்தைத் தணிப்பதில் முனைந்திருந்தார். நோயின் விளைவாகத் தெரேசு இத்தகைய உணவார்வம் கொண்டது அனைவருக்கும் வியப்பைத் தந்தது. தெரேசு தம்மைப் பற்றி தாமே வியப்படைந்தார். அவர் பொரித்த இறைச்சி, திண்ணிய வடிசாறு, ஆப்பிள் பழம் கலந்து இனிப்பு உணவு வகைகள், கொக்கோவுடன் கூடிய பாற்கட்டி, இனிப்பு அப்பம் போன்றவற்றை விரும்பி உண்டு மகிழ்ந்தார். "என் வாழ்நாள் முழுவதற்கும் தேவையான உணவை ஒரு வேளையிலேயே உண்ணும் அளவுக்குப் பசிக் கொடுமை என்னைப் பற்றிக் கொண்டது. நான் இதுவரை மறைத்தியாகி போன்று உணவு உண்டு இருக்கின்றேன். இப்போது எதையும் என்னால் விழுங்க முடிகின்றது. நான் பசியால் இறப்பது போல எனக்குத் தோன்றுகிறது" என்றார்.

மெல்ல மெல்லத் தெரேசு பேச்சையும் குறைத்தார். "அனைத்தும்



கூறப்பட்டு விட்டன" என்ற எண்ணம் அவரிடத்தில் இருந்தது. அவருடைய கூரிய பார்வை அடிக்கடி தோட்டத்தின் பக்கமே இருந்தது. சன்னலுக்கு அருகில் இருந்த பேரிக்காய் மரத்தில் ஒன்பது பேரிக்காய்கள் தொங்குவதை எண்ணினார். "நான் மலர்களை அதிகம் நேசிக்கிறேன்; ரோசா மலர்கள், செம்மலர்கள், அழகிய இளஞ்சிவப்புக் காட்டு மலர்கள் இவையனைத்தும் எனக்குப் பிடித்த மலர்கள்" மேலும் 'அதோ பாருங்கள்! கருந்துளை ஒன்று அங்குத் தென்படுவது உங்களுக்குத் தெரிகின்றதா? வெறுமையையன்றி வேறொன்றையும் அங்குக் காண முடியவில்லை. என் உடலையும் ஆன்மாவையும் பொறுத்தவரை அவ்வாறான துளையில்தான் நான் இருக்கிறேன். ஆம், எத்தனை கொடிய இருள்! ஆனால் நான் அங்கு அமைதியில் இளைப்பாறுகிறேன்" என்று கூறினார்.

மருத்துவர் கொர்னியேர் விடுமுறை முடிந்து திரும்பிய போது தெரேசு மிகவும் இளைத்துப் போய் வலிமை குன்றியவராய் இருப்பதைக் கண்டார். அவரால் சிலுவை அடையாளம் கூட வரைய இயலவில்லை. 'தெரேசு இன்னும் பதினைந்து நாள்களே உயிர் வாழ்வார்"என்பதை மட்டுமே மருத்துவரால் சொல்ல முடிந்தது. . . இந்த முறை அவரது கூற்று பொய்க்கவில்லை.

## பாடுகளே இந்நிலை . . . பலி எந்நிலையோ? (14 - 30 செப்டம்பர் 1897)

தெரேசு தமது இறுதி மூச்சு வரை உயிரோட்டத்துடன் செயல்பட்டார். அது அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. செப்டம்பர் 18 ஆம் நாள் காலையில் உடல் சக்தி அதிகம் வாய்ந்த சகோதரி ஏமே அவரைத் தம் கைகளில் தூக்கிக் கொள்ள அவரது படுக்கை சரி செய்யப்பட்டது. அவர் இறந்து கொண்டிருப்பதாக அனைவரும் எண்ணினர். நண்பகலுக்குப் பின் தெரேசு நான் நலமுடன் இருக்கிறேன்!' என்று தெரிவித்தார். அவருடைய முதுகுப் பகுதி மெலிந்து போய் விட்டது என்பதைக் காண்பிப்பதற்காகத் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் அழைக்கப்பட்டார். அவரும் அவரைப் பார்த்துவிட்டு, "இவ்வளவு மெலிந்து சிறு குழந்தை போல் ஆகிவிட்டாரே! என்ன சொல்வது?" என வருத்தமுற்றார். தெரேசு அதற்கு "ஓர் எலும்புக் கூடு என்று சொல்லுங்கள்!" என்று பதில் அளித்தார்.

இதுவரை அவரை அச்சுறுத்தி கொண்டிருந்த நோய் அவரை நெருங்கி வரத் தொடங்கியது. அவர் மூச்சுவிடுவதும் குறைந்து கொண்டே வந்தது. "அம்மா! மண்ணகக் காற்று எனக்கு மறுக்கப்படுகிறது. விண்ணகக் காற்றை

இறைவன் எனக்கு எப்பொழுது அருள்வார்? என்று இல்லத் தலைவியிடம் கேட்டார். மூச்சுத் திணறலே அவரைப் பெரிதும் வாட்டி வதைத்தது- "எப்படி இறப்பது என்றே எனக்கு தெரியவில்லை" என்றார் தெரேசு.

29 -ம் நாள் புதன் கிழமை காலையில் அவரது மார்பில் மரண ஒலி கேட்பதை உணர்ந்தார். குழும உறுப்பினர்கள் அனைவரும் மருத்துவ அறையில் ஒன்று கூடினர். ஒரு மணி நேரமாக இறந்து கொண்டிருப் போருக்கான மன்றாட்டை இலத்தீன் மொழி வழி மன்றாடினார்கள். அதன் பிறகு இல்லத் தலைவி கன்னியர்களை வெளியே அனுப்பி விட்டுச் சற்று முன்னர் மன்றாடிய மன்றாட்டினை மொழி பெயர்த்துச் சொன்னார்கள். நண்பகலில் தெரேசு, தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கைப் பார்த்து, 'தலைமைச் சகோதரியே! இவைதாம் பாடுகளா? நான் இறப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? எப்படி இறப்பது என்றே எனக்கு தெரியவில்லை?" என்றார். மருத்துவர் அவரைச் சந்தித்து விட்டுச் சென்ற பிறகு, "இன்று நான் இறந்து விடுவேனா? தலைமைச் சகோதரியே ! சொல்லுங்கள்' என்று வினவினார். அதற்கு அவர், "ஆம் என் அன்புக் குழந்தாய். . . " என்று பதில் அளித்தார். மீண்டும் தெரேசு வேதனையுற்றவராய் "என்னால் இனியும் வேதனையைத் தாங்க இயலாது! எனக்காக மன்றாடுங்கள்! இயேசுவே! மரியன்னையே! ஆம் . . நான் விரும்புகிறேன் உண்மையிலேயே நான் இறக்க விரும்புகிறேன். . . ஆ! அன்னையே, மரணம் என் நரம்புகளையெல்லாம் நிறைத்து விட்டதே!" என்று மெல்லியக் குரலில் கூறினார்.

அன்று மாலை கார்மல் இல்லத்து அருட்பணியாளருக்கும் உடல் நலமில்லாததால் அருட்பணியாளர் ஃபோகன் (Fougon) தெரேசுவுக்கு ஒப்புரவு அருட்சாதன வழிபாட்டை நிறைவேற்ற வந்தார். அவர் மருத்துவ அறையை விட்டு வெளியே சென்றதும் தெரேசு, "என்னே ஓர் அழகிய ஆன்மா! அந்த ஆன்மா அருளால் உறுதியடைந்து விட்டதாக எனக்குத் தோன்றுகிறது" என்று தம் உள்ளத்தின் நிறைவை வெளியிட்டார்.

தொடர்ந்து வந்த இரவில், முதன் முறையாக இல்லத் தலைவி சகோதரி தூய இதய மரியா மற்றும் சகோதரி ஜெனிவியேவ் இருவரையும் அவர்களது சகோதரியுடன் தங்குமாறு ஆணையிட்டார். இருவரும் மாறிக் மாறிக் கண் விழித்துத் தங்கள் சகோதரியைக் கண்காணித்தனர். தலைமைச் சகோதரி ஆக்னெசு அடுத்திருந்த அறையில் தூங்கினார். இது தெரேசுவுக்கு கொடிய இரவு! தீய கனவுகள் நிறைந்து மனத்தை உலுக்கிய இரவு. தூய கன்னி மரியாவிடம் தெரேசு மன்றாடினார். மறுநாள் வியாழன், முகில் படந்த மழை



நாளாக விடிந்தது. குழுத்திருப்பலி நேரத்திலும், மார்ட்டின சகோதரிகள் மூவரும் தெரேசுவினுடனேயே தங்கினார். தெரேசு அவர்களிடம் "இது எவ்வித ஆறுதலும் இல்லாத கொடிய வேதனை" என்று கூறினார்.

அந்த நாள் முழுவதுமே மூச்சு விட மிகவும் சிரமப்பட்டார். ஆனால் அனைவரும் வியக்கும்படி பல நாள்களாக அவரால் செய்ய இயலாத காரியங்களை அவர் செய்தார். தமது உடலை அசைத்தார்; படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தார். "எவ்வளவு வலிமை என்னிடத்தில் இருக் கிறது! பாருங்கள்! இல்லை! நான் இறக்கப் போவது இல்லை! இன்னும் பல மாதங்கள், ஏன் பல ஆண்டுகள் வாழ்வதற்குத் தேவையான வலிமை என்னிடத்தில் இருக்கிறது!" என்று பெருமையுடன் கூறினார்.

மூச்சுத் திணறலுக்கிடையே தெரேசு மொழிந்த அனைத்து வார்த்தை களையும், தலைமைச் சகோதரி ஆக்னெசு குறிப்பு எடுத்தார். அவரது மூச்சு விடும் சக்தி சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்தது. "மூச்சுத் திணறல் எத்துணை வேதனைக்குரியது என்பதை நீங்கள் அறிந்திருந்தால் . . . .! என் இறைவா உம்முடைய எளிய, சிறிய குழந்தை மீது இரக்கம் வையும்! அவர் மீது இரக்கம் வையும்!" என்று மன்றாடினார். இல்லத் தலைவி மரி தே கொன்சாக்கிடம், "ஓ! தலைமைச் சகோதரியே! நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். என் துன்பக்கலம் விளிம்பு வரை நிரம்பி வழிகின்றது! ஆனால் கடவுள் என்னைக் கைவிடப் போவதில்லை! உறுதியாகச் சொல்கிறேன். அவர் என்னை ஒருபோதும் கைவிட்டதில்லை" என்றார்.

நண்பகல் வழிபாட்டிற்குப் பின் தலைமைச் சகோதரி மரி தே கொன் சாக் கார்மல் மலை அன்னையின் திருவுருவப்படம் ஒன்றைச் தெரேசின் மடியில் வைத்தார். "தலைமைச் சகோதரியே! என்னைத் தூய கன்னி மரியிடம் விரைவில் அர்ப்பணியுங்கள். நான் ஒரு குழந்தை! துன்பத்தை இனியும் தாங்கும் வலிமையில்லாத குழந்தை நான்! நல்ல முறையில் இறப்பைச் சந்திக்க என்னைத் தயார்ப்படுத்துங்கள்" என்றார். தெரேசு மற்றவர்களால் தயார்ப்படுத்தப்பட்டு இருப்பதாக அவரிடம் கூறினார்கள். 'ஆம் உண்மையை அன்றி வேறெதையும் நாம் தேடி அலைந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆம், இதயத்தின் பணிவுடைமையைப் புரிந்து கொண்டேன். நான் பணிவானவர் என்றே எனக்கு புலப்படுகின்றது" என்றார்

"வேதனைகள் மீது நான் கொண்டுள்ள ஆவலை என் எழுத்துக்களில் எடுத்துரைத்துள்ளேன். அவை உண்மையே! அவற்றையே நான் என்

வாழ்விலும் அனுபவித்து இருக்கிறேன். அன்புக்கு என்னையே நான் அடிமையாக்கி கொண்டதால் வருத்தமடையவில்லை. வருத்தமடைய மாட்டேன்! மாறாக மகிழ்ச்சி அடைவேன்" என்றார் தெரேசு.

தம் ஆன்மீகக் குழந்தை அனுபவிக்கும் வேதனையைக் கண்டு சகோதரி தூய இதய மரியா மனம்கலங்கி, மருத்துவ அறைக்குச் செல்வதையே தவிர்த்தார். தலைமைச் சகோதரி ஆக்னெசு முதல் மாடியில் இருந்த தூய இதயத் திருஉருவச் சிலைக்கு முன்பாக நின்று, தம் சகோதரி இறுதி மணித் துளிகளின் போது அவநம்பிக்கை அடைந்து விடக்கூடாது என்று உருக்கமாக மன்றாடினார்.

மாலை 5 மணிக்குப் பிறகு குழுவினர் அனைவரும் மருத்துவ அறையில் ஒன்று கூடும்படி மணியடித்தது- மரண வாயிலை நெருங்கிக் கொண்டிருந்த தெரேசு அனைவரையும் தம் புன்னகையால் வரவேற்றார். அவர் தம் திருச்சிலுவையை இறுகப் பற்றிக் கொண்டு இருந்தார். ஓர் மரண ஒசை அவரது நெஞ்சைக் கிழித்துக் கொண்டு சென்றது. அவரது முகம் சிவந்தது, கரங்கள் கருஞ்சிவப்பு நிறமாயின. பாதங்கள் குளிர்ந்தன. வியர்வையில் குளித்தார். . . படுக்கையும் வியர்வையால் நனைந்தது. காலம் கடந்து கொண்டிருந்தது. இல்லத் தலைவி சகோதரிகள் அனைவரையும் அனுப்பி வைத்தார்.

ஏழு மணிக்குப்பிறகு தெரேசு மெதுவாகப் பேச முயற்சி செய்தார். "தலைமைச் சகோதரியே! இது தான் வேதனையோ? நான் இறக்கப் போவதில்லையோ?" என அதற்கு மரி தே கொன்சாக், 'ஆம். என் அன்புச் சிறு குழந்தையே! இது தான் வேதனை. ஆனால் பல மணி நேரங்களாக இதனை நீட்டிக்கக் கடவுள் விரும்புகிறார். போலும்!" என்றார் அதற்கு தெரேசு "நல்லது, எல்லாம் நல்லது தான்! எல்லாம் நல்லது தான் நான் குறுகிய காலத்திற்குத் துன்பங்களை அனுபவிக்க விரும்பவில்லை!" என்று கூறினார். பின்னர் தம் திருச்சிலுவையை உற்று நோக்கியவாறு, "ஆ! நான் அவரை நான் நேசிக்கின்றேன்! . . . என் இறைவா நான் உம்மை அன்பு செய்கிறேன்" என்று உருக்கமாகக் கூறினார்.

அவரது தலை சாய்ந்தது. தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் மீண்டும் மணி அடிக்கப் பணித்தார். குழுவில் உள்ள சகோதரிகள் அனைவரும் மிக விரைவாக ஓடி வந்து கூடினர். முழந்தாளில் இருந்த சகோதரிகள் அனைவரும் அவரது முகத்தையே நோக்கிய வண்ண



மிருந்தனர். அவரது முகத்தில் மீண்டும் அமைதி குடிகொண்டது- அவரது கண்விழிகள், புன்னகை அன்னையின் திருஉருவச் சிலைக்குச் சற்று மேலே நோக்கிய வண்ணமாயிருந்தன. அவ்விழிகள் நம்பிக்கையின் ஒளியை வீசின. பிறகு கண்களை மூடியவாறு, தலையணை மீது தலையைத் திருப்பி வைத்தார். அவர் புன்னகைத்துக் கொண்டிருந்தார். அவர் மிக அழகாகக் காணப்பட்டார். இளமை நிரம்பித்ததும்பும் நங்கை போலக் காட்சியளித்தார்.

அப்போது நேரம் சரியாக ஏழுமணி இருபது நிமிடங்கள்.

சகோதரி ஜெனவியேவ் கண்ணீருடன் இல்லத்தின் உட்பகுதிக்கு விரைந்தார். அப்போது மழை பெய்து கொண்டிருந்தது. "வானில் ஒரு சில விண்மீன்கள் மட்டும் இருந்திருந்தால்!' எனத் தமக்குள் சொல்லிக் கொண்டார். சில நொடிகளில் மேகங்கள் கலைந்தன. தெளிந்த வானில் விண்மீன்கள் கண் சிமிட்டின. தங்களது நேரம் அனைத்தையும் கார்மலின் சிறிய செப அறையில், தெரேசின் வேதனைகளைக் கண்டு மன்றாடுவதில் செலவழித்து விட்டுத் திரும்பிய கேரென் குடும்பத்தினர் இந்தத் திடீர் வானிலை மாற்றங்களைக் கண்டு வியந்து கொண்டிருந்தனர். அப்போது தலைமைச் சகோதரி ஆக்னெசு எழுதிக் கொடுத்து அனுப்பிய குறிப்பு ஒன்றைப் புறப்பணிகள் புரியும் சகோதரி ஒருவர் அவர்களிடம் கொடுத்தார். அதில் "என் அன்பு மாமா, அத்தை! எனக்கு மிகவும் பிரிய லேயோனி! நம் வானதூதராம் மனுஷி வானகம் சேர்ந்து விட்டார். அவர் ஏழுமணிக்கு தமது திருச்சிலுவையைத் தமது நெஞ்சத்தின் மீது பதித்தபடி, இறுக்கிப் பிடித்தவாறு, ஆ! நான் உம்மை அன்பு செய்கிறேன்! என்று கூறியவாறு தமது கடைசி மூச்சை விட்டு, உயிர் நீத்து இறைவனடி சேர்ந்தார். அவரது கண்களை வான் நோக்கி உயர்த்தி வைத்திருந்தார். எதை அவர் பார்த்துக் கொண்டிருந்தார்?!!!" என ஆக்னெசு அக்கடிதத்தில் எழுதியிருந்தார்.

ஜூன் திங்களில் தெரேசு தம் சகோதரிகளுக்குக் கொடுத்திருந்த பிரியாவிடை திருஉருவப் படிவத்தில் "நான் நம்பியிருந்தவற்றையே காண்கிறேன். நான் எதிர்பார்த்திருந்ததையே உடைமையாக்கியுள்ளேன்! எனது அன்பு செலுத்தும் முழு ஆற்றலுடன் நான் அன்பு பாராட்டிய ஒருவருடன் இணைந்து ஒன்றித்திருக்கிறேன்" என எழுதியிருந்தார்.

மறு நாள் வெள்ளிக் கிழமை தெரேசின் உடல் கம்பி சன்னலுக்குப் பின்புறத்தில் செப அறையில் வைக்கப்பட்டது. சகோதரி அவரது புகைப்படத்தை மருத்துவ அறையிலேயே எடுத்திருந்தார். ஞாயிற்றுக் கிழமை

மாலை நேரம் வரை மார்ட்டின் குடும்பத்தினர், கேரென் குடும்பத்தினர், நீல் குடும்பத்தினர், மோதெலோன்ந்து குடும்பத்தினர், அருட்பணியாளர்கள், நண்பர்கள் மற்றும் இறை மக்கள் அனைவரும் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். அவர்களது மரபுப்படி செபமாலைகளையும், திரு உருவப் பதக்கங்களையும் அவரது உடல் மேல் வைத்து எடுத்துச் சென்றனர்.

அக்டோபர் திங்கள் நான்காம் நாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது திருஉடல் அடக்கம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

## நித்திய உறக்கத்திலே நிம்மதி. . .

அக்டோபர் திங்கள் நான்காம் நாள் திங்கட் கிழமை இரண்டு குதிரைகளால் கட்டி இழுக்கப்பட்ட தெரேசுவினது இறந்த உடலைத் தாங்கிய உந்துவண்டி செங்குத்தான பாதை வழியாக நகரின் கல்லறைத் தோட்டம் நோக்கி ஊர்ந்து பயணம் சென்றது. அக்கல்லறைத் தோட்டத்திலிருந்து பார்த்தால் அம்மலைக்குப் பின்புறத்தில் அமைத்துள்ள ஓர்பிக்கோ (Orbiquet) என்ற பள்ளதாக்கு காட்சி விரிக்கும்.

தெரேசின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருந்தவர்களை லேயோனி மார்ட்டின் வழிநடத்தி சென்றார். அவரைச் சூழ்ந்து கேரென் குடும்பத்தினர், நீல் குடும்பத்தினர் மற்றும் சில நண்பர்கள் நடந்து வந்தனர். "அது ஒரு சிறிய இறுதி ஊர்வலம்' தீல்வாத நோயினால் தாக்கப்பட்டு படுக்கையில் கிடந்த மாமா இசிதோர், மருமகளின் அடக்கச் சடங்குகளில் பங்குபெற இயலவில்லை என்று எண்ணி வருந்தினார். கார்மல் இல்லத்திற்காக இசிதோர் வாங்கிக் கொடுத்த அந்த இடத்தில் தம் மருமகள் தான் முதலில் அடக்கம் செய்யப்படுவார் என அவர் ஒரு போதும் நினைத்ததே இல்லை!

மறுநாள் கார்மல் கன்னியர் மருத்துவ அறையைத் தூய்மை செய்தனர். தெரேசு படுத்திருந்த வைக்கோல் மெத்தையையும், அவர் அணிந்திருந்த கயிற்றுக் காலணிகளையும் எரித்தனர். சகோதரி இதய மரியா அவற்றைப் பாதுகாக்க விரும்பியிருந்தார். சகோதரி மார்த்தா, "இந்த அழுக்குப் பொருட்களை நீங்கள் வைத்திருக்கமாட்டீர்கள்" என்றுக் கூறி அவரது எண்ணங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். உண்மையில் அவை ஏற்கெனவே கந்தலாகி இருந்தன.

துறவற வாழ்வு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி, அனைத்தும் முறையாக நடந்தன. செபம், பணிகள், குழு வாழ்வுப் பயிற்சிகள், அனைத்தும்



வழக்கம் போல் நடைபெற்றன. சில நாள்கள் தடைப்பட்டிருந்த அமைதி மீண்டும் லிசியூ கார்மலின் மேல் இறங்கித் தங்கியது. ஏனெனில் இத்தகைய இடங்களில் "கார்மல் துறவினியின் வாழ்வும், இறப்பும் அவர்களை அன்றாடப் பணி, செபம் இவற்றின் கால அட்டவணைகளின் சில மாற்றத்தினால் மட்டுமே குறிக்கப்பட்டன."



தெரேசு . . . மரணப் படுக்கையில்

# 12

# மரணத்திற்குப் பின் வாழ்வு: மாட்சிமைப் புயல்

*"சிறு பொறி நெருப்பு. . . காட்டுத் தீக்கனல்*
*இதுவே வாழ்வின் அந்தரங்கம்"*

## வீழ்ச்சிக்குப் பின் எழுச்சி

தெரேசு மார்ட்டினின் கதை இவ்வாறு முற்றுப் பெறுகிறது.

விந்தை நிறை மறுவாழ்வின் கதை இறப்புக்குப் பின் தொடங்குகிறது. அதை இங்கு எழுதப் போவதில்லை. அதற்கு இதன் இரண்டாம் பாகமாக இன்னொரு நூலே தேவைப்படும். எனவே, ஒரு சில நிகழ்வுகளையும், நாள்களையும் மீண்டும் நினைவிற்குக் கொண்டு வருவோம்.

சிறிய மார்ட்டின், குடும்ப வட்டத்தில் உள்ளவர்களையும் கடந்து லிசியூ கார்மல் குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே குழந்தை இயேசுவின் திருமுகத் தெரேசை மதித்தனர். அன்பு செலுத்தினர். விதிவிலக்காகவும் ஒரு சிலர் இருந்தார்கள். ஆனால் அவர் இறந்த பிறகு சில கன்னியர்கள் எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடமின்றிச் சகோதரி தூய இதய அன்னாள் கூறிய கருத்தை ஆமோதித்தனர். சைகோனில் உள்ள கார்மல் இல்லத்திலிருந்து தற்போது திரும்பி வந்துள்ள அவர் இந்தோ - சைனாவுக்குச் செல்வதற்கு முன் தெரேசுவுடன் ஏழு ஆண்டுகள் வாழ்ந்தவர் இவர்.



தெரேசைப் பற்றிக் குறிப்பிடும் போது, "தெரேசைப் பற்றிச் சொல்வதற்கு எதுவுமில்லை. அவர் இரக்கமுள்ளவர்; தனியே ஒதுங்கி வாழும் குண முள்ளவர். அவரிடம் எளிதில் கவனத்தைக் கவரக்கூடிய குணங்கள் எதுவும் இல்லை. அவருடைய தூய வாழ்வை என்றுமே நான் சந்தேகித்த தில்லை" என்று தெரிவித்தார்.

எனினும் அந்தக் குறுகிய வாழ்வின் கதை உலகெங்கும் எதிரொலிக்கத் தொடங்கியிருந்தது.

ஒரு மரம் அதன் கனிகளைக் கொண்டே கணிக்கப்படுகிறது. கடந்த கால வரலாற்று நிகழ்வுகளை, குறிப்பாக இறுதி நாள் நிகழ்வுகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கின்ற போது, "எலும்புருக்கி நோயாளிகள் அனுபவிக்கும் பெரும் அச்சக் கிளர்ச்சியை உண்டாக்கும் கனவுகளைத்" தெரேசு அனுபவிக்கவில்லை என்பது நமக்குத் தெளிவாகின்றது. அவர் மொழிந்தவை மற்றும் எழுதியவை அனைத்தும் உண்மையானவை! அவ்வுண்மையை உறுதி செய்யக் கூடியவை என்பன அவருடைய மரணத்திற்குப் பின்பு தெளி வாயின. அன்றாட வாழ்விலும், வேதனைகளின் போதும் அவர் கொண்டி ருந்த மனத்திடமும், அவரது அன்பும் நம்பிக்கை வழியின் உண்மையை எண்பித்துக் காட்டின. அவரது இறப்புக்குப் பிறகும், 'அச்சிறுவழி'யே மனத்திடம் பெற ஒரே வழி என அனைவரையும் உணர வைக்கின்றார்.

## ஓர் ஆன்மாவின் வரலாறு (30 செப்டம்பர் 1898)

தலைமைச் சகோதரி ஆக்னெசு தமது வார்த்தையில் தவறவில்லை. ஆனால் வழக்கத்திற்கு மாறான செயலைச் செய்தார். இவர் தெரேசைப் பற்றிய செய்திகளைத் தாங்கிய "இறப்புச் சுற்று மடல்" ஒன்றை வெளியிடுவதாக, தெரேசுவுக்கு அவருடைய மரணப் படுக்கையில் உறுதி கூறியிருந்தார். அவருடைய குறிப்புகளை ஒன்று திரட்டிய போது அது 475 பக்கங்களைக் கொண்ட பெரிய நூலாக வெளியிடப்பட்டது. 1898 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் தலைமைச் சகோதரி ஆக்னெசு அவர்களின் தங்கையின் இறப்பு முதல் ஆண்டு நினைவாக "ஓர் ஆன்மாவின் வரலாறு" என்னும் தலைப்பில் இரண்டாயிரம் படிகள் அச்சாகி வெளிவந்தன.

தெரேசு எழுதிய கையெழுத்துப் படிகளைத் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக் தம்மிடம் எடுத்துக் கூறுவது போல எழுதும்படி தெரேசைக் கேட்டிருந்தார். அவருடைய விருப்பத்தின் படியே தலைமைச் சகோதரி

ஆக்னெசு தம் தங்கை தெரேசின் பயிற்சிக் கையேடுகளைத் தலைப்புப் பிரிவுகளாகப் பிரித்து, சரியற்றவை என அவருக்குத் தோன்றியவற்றையெல்லாம் திருத்தம் செய்தார். காரணம் தெரேசு எழுத்துகளில், எழுத்துப் பிழைகள் அதிகம் காணப்பட்டன. திறமையாகத் திருத்தும் திறம் பெற்றிருந்த தலைமைச் சகோதரி ஆக்னெசு, தெரேசு அவரிடம் இட்ட உரிமைக் கட்டளையின் படி சஞ்சலமின்றிப் பயனுள்ள முறையில் திருத்தம் செய்தார். தெரேசின் பள்ளி வீட்டுப் பாடங்களைப் புய்ஸ்ஸொனேவில் திருத்தியது போல, அவரது பயிற்சி ஏடுகளைத் திருத்தினார். "தெரேசின் சுய வரலாற்றை ஏறக்குறைய ஆக்னெசு திரும்ப மறுபடியும் எழுதினார்" என்றே கூற வேண்டும்.

மான்தேய்யில் (Mondaye) உள்ள தூய நார்பர்ட் சபை (Praemonstratensians) யின் இல்லத் தலைவர் அருட்பணியாளர் காட்ஃபிரோ மதலேய்ன் (Godefroy Madelaine) கையில் பென்சிலை வைத்துக் கொண்டே பயிற்சி ஏடுகள் முழுவதையும் வாசித்து முடித்தவுடன் அதற்கு ஒப்புதல் அளித்து, அச்சிடும் உரிமை பெறுவதற்காகப் பேராயர் யுகோனிடம் சமர்ப்பித்தார். அவரும் 1898 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாள், அதிக ஆர்வம் காட்டாமல் வாய்மொழியால் உரிமை அளித்தார். மாமா இசிதோர் இம்மாபெரும் பணிக்காகத் தமது பணத்தையே செலவிட்டார். பொருளாதாரம் மற்றும் விற்பனை நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுத் திறம்படச் செய்தார்.

பிரான்சு நாட்டில் உள்ள அனைத்துக் கார்மல் இல்லங்களுக்கும் ஒவ்வொரு பிரதி வழங்கப்பட்டது. ஒரு சில அருட்பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது. உரோமையில் இருந்த சகோதரர் சிமியோனும் மறக்கப்படவில்லை. இரண்டு அல்லது மூன்று துறவற இல்லங்கள் மாற்றுக் கருத்துக்கள் தெரிவித்தனர். அதாவது "இளம் வயதினரான தெரேசின் கருத்தோட்டங்கள் மற்றும் கருத்தியல்கள் நாளடைவில் அவரது முதிர்ந்த வயதில், மிகவும் பழுத்த அனுபவத்தில் மாற்றமடைந்திருக்கலாம் அல்லவா ?" எனினும் ஆயர்கள், மற்றும் சிஸ்டெர்சிய சபை, தூய ஜான் யூதித் சபை போன்ற துறவற சபைகளின் தலைமைத் தந்தையர் பலரும் தங்களுடைய பாராட்டுதல்களை எழுத்தின் மூலம் கார்மல் இல்லத்திற்குத் தெரிவித்தனர்.

1899 ஆம் ஆண்டு மே திங்கள் வெளியான இரண்டாம் பதிப்பில், இந்தப் பாராட்டுக் கடிதங்கள் உள்ளடக்கப்பட்டன. கேரென் மிக கவனமாக அச்சுப்படிகளைத் திருத்தினார். ஆனால் அவரால் முழுமையாகத் திருத்த இயலாமற்போயிற்று. பேராயர் யுகோனின் அவர்களைத் தொடர்ந்து பேராயர்



பொறுப்பை ஏற்ற பேராயர் ஏமெத் (Amette) 1899 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாள் இப்புதிய பதிப்பிற்குத் தமது இசைவை மகிழ்வுடன் அளித்தார். இதன் ஆங்கில மொழியாக்கம் 1901 ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து போலந்து (1902), இத்தாலி மற்றும் டச்சு (1904), ஜெர்மனி, போர்ச்சுகல், ஸ்பெயின், மற்றும் ரஷ்யா (1905) ஆகிய நாடுகளிலும் தத்தம் மொழிகளில் தெரேசின் 'தன் வரலாறு' மொழியாக்கம் செய்யப் பெற்றது.

மார்டின் சகோதரிகள் தங்களின் குட்டிச் சகோதரியின் புகழ் வளர்ச்சி பெறப் பெரிதும் உழைத்ததினாலே தான் இந்நூல் வெளியானது என்று ஒரு சிலர் எழுத்து மற்றும் உரையாடல் மூலம் கருத்துத் தெரிவித்தனர். உண்மை நிகழ்வுகளும், அந்நிகழ்வுகளின் நாள்களும் அவர்களுடைய கருத்தைப் பொய்மையாக்கின. தெரேசின் புகழ் நாளுக்கு நாள் பெருகியது. இந்தப் புகழ் அலையினால் முதலில் குழம்பித் தவித்தவர்கள் கார்மல் இல்லத்தினர் தாம். தலைமைச் சகோதரி ஆக்னெசு ஒரு நாள் இஷ்ஷான் நீலியிடம் "நமது இந்த வயது முதிர்ந்த காலத்திலே எத்துணை பெரிய கடமையொன்று விண்ணிலிருந்து நமக்குத் தரப்பட்டுள்ளது! 1898 ஆம் ஆண்டில் மிகுந்த அச்சத்துடன் பற்றவைத்த முதல் சிறிய தீப்பொறி, இவ்வளவு விரைவில் பெருந்தீப்பிழம்பாக மாறும் என்று நான் கற்பனை செய்யவே இல்லை" என்று வியந்து மொழிந்தார். அப்போதிருந்த சூழ்நிலையை மிகவும் எதார்த்தமாகவே சந்தித்தனர் என்பது உண்மை. பெரும் பணிகள் பளுவினை மிகவும் சிறப்பான ஒருங்கமைவுத் திறனுடன் பகிர்ந்து கொண்டனர். மற்றக் கார்மல் இல்லத்தினர், இத்தகைய சூழலைச் சந்திக்க நேர்ந்திருந்தால் புயலில் சிக்கிய கப்பலாய்த் தவித்திருப்பார்கள்.

அனைவரும் வியப்புறும் வகையில் இந்நூலின் வாசகர்கள் பெருகினர். முதலில் ஒருவர் "ஓர் ஆன்மாவின் வரலாறு" நூலைப் படித்தார். அது அவரை மிகவும் பாதித்தது- எனவே சிறிய சகோதரி தெரேசுவிடம் மன்றாடினார். அவருடைய மன்றாட்டு கேட்கப்பட்டதை உணர்ந்தார். தாம் பெற்ற அருளினை விவரமாக எழுதி லிசியூ கார்மல் இல்லத்திற்கு அனுப்பினார். இளம் கார்மல் சகோதரியின் கல்லறைக்குத் திருப்பயணமாகச் சென்று அவர் பெற்ற அருளினைப் பற்றி ஆர்வத்துடன் பிறரோடு பகிர்ந்துக் கொ ண்டார். தாம் படித்த நூலினைப் பிறருக்குக் கொடுத்தார். அதைப் படித்தவர்களின் மன்றாட்டுகளும் கேட்கப்பட்டன. அவர்கள் தெரேசுவின் நினை புச் சின்னங்களைக் கேட்டுப் பெற்றுக் கொண்டனர். அதனைப் பிறரோடு பகிர்ந்து கொண்டனர். இந்த நிகழ்வு ஆயிரம் முறைகள் மீண்டும் மீண்டும் நடந்தன. இவ்வாறு சிறு நெருப்புப் பொறி ஒருவரிடமிருந்து மற்றொ

வருரிடம் பரவ, இறுதியில் தீப்பிழம்பாக மாறி அனைவரையும் கவரத் தொடங்கியது.

1899 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாள் சகோதரி திருவுணாவின் மரியா தன் உறவினரான செலின் பொத்தியெர் (Celine) என்பவருக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்.

**"தனது எழுத்துக்களால் நன்மைகள் பல புரியும் இந்த இறைத் தூதரைக் குறித்து அனைவரும் எங்களிடம் வானளாவப் பேசி மகிழ் கின்றனர். அருட்பணியாளர்கள் இவரைத் தூய அவிலா தெரசாவோடு ஒப்புமைப் படுத்தி, இவர் அன்பு வழி என்னும் முற்றிலும் புதியதொரு வழியை ஆன்மாக்களுக்குத் தந்துள்ளதாகக் கூறுகின்றார்கள். எங்களைச் சுற்றி வாழ்பவர்கள் மட்டுமல்ல, பிரான்சு நகரில் வாழும் அனைத்து அருட்பணியாளர்களுமே அவரில் பெரும் ஆர்வம் கெண்டுள்ளனர். தங்கள் மறையுரைகளில் தெரேசுவின் வரலாற்று நூலில் எழுச்சியூட்டும் பகுதிகளை மேற்கோள் காட்டுகின்றனர். பொது நிலையினர் தெரேசின் மீது கொண்டிருந்த பற்று அதனினும் வியப்பிற்குரியது. அவருடைய நூலினால் கவரப்பட்டு, அதனை அவர்களுடைய விருப்ப வாசக நூலாக்கிக் கொண்டுள்ளனர்."**

இந்நூல் பலவித மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டதன் விளைவாக உலகெங்கும் மன மாற்றங்கள் பெருகின. இன்று 40 மொழி களுக்கும் மேலாக இந்நூல் மொழியாக்கம் செய்யப் பெற்றுள்ளது. நோயாளி கள் உடல் நலமடைந்தனர். சிறிய சகோதரி தெரேசு தமது கார்மல் சபை உடையுடன் காட்சி தந்து பல நேரங்களில் அருங்குறிகள் நிகழ்த்தினார்.

ஸ்காட்லாந்த் நாட்டைச் சேர்ந்த, 1897 ஆம் ஆண்டு திருநிலைப் படுத்தப்பட்ட இளம் அருட்பணியாளர் தாமஸ் நிமோ டெய்லர் (Thomas Nimmo Taylor) என்பவர் 'குழந்தை இயேசுவின் தெரேசு வாழ்க்கை வரலாற்றைப் படித்தார். பிரான்சு நாட்டைச் சார்ந்த இளம் கார்மல் துறவியின் இந்த மாபெரும் வெற்றியினால் அகமகிழ்ந்தவராய் 1903 ஆம் ஆண்டில் தலைமைச் சகோதரி மரி தே கொன்சாக்கையும், மற்றும் மார்ட்டின் சகோதரிகளையும் கார்மல் வரவேற்பறையில் சந்திக்கச் சென்றார். அதற்கு இல்லத் தலைவி மரி தே கொன்சாக் சிரித்துக் கொண்டே, "அப்படியென்றால் எத்தனையோ கார்மல் கன்னியரைத் தூயவர் நிலைக்கு உயர்த்த வேண்டியிருக்குமே?" என்று பதில் கூறினார். லேயோனியோ அல்லது கேரென் குடும்பத்தினரோ இக்கருத்திற்கு இணங்கவில்லை.



## தூயவர் நிலை நோக்கி. . . (1909 முதல் 1917 வரை)

பத்திரிக்கைகளின் தலையீடு ஆரம்பமானது. 1906 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9 ஆம் நாள் லுனிவேர் (L'Univers) அதாவது "பாருலகம்" என்ற நாளிதழின் புகழ் பெற்ற எழுத்தாளர் லூயி வேய்யோ (Louis Veuillot) என்பவர், லிசியூ நகர் கார்மல் துறவினியைத் தூய நிலைக்கு உயர்த்து வதற்கான பணிகளை அருட்பணியாளர் பிரெவோஸ்ட் மிகத் தீவிரமாக உரோமை நகரில் செய்து வருவதாகச் செய்தி வெளியிட்டார். 1907ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் திருத்தந்தை பத்தாம் பத்திநாதர் தெரேசை 'மேன்மை நிலைக்கு' உயர்த்த வேண்டும் என்கிற தமது ஆவலை வெளிப்படையாகக் கூறினார். அவரைத் தனிமையில் சந்திக்கச் சென்றவர்கள் முன்னிலையில் பிற்காலத்தில் தெரேசுவுக்கு வழங்கவிருந்த, "நவீன காலத்தின் பெரும் தூயவர்" என்ற பெயரினை அப்பொழுதே பயன் படுத்த அவர் தயக்கம் காட்டவில்லை.

பேராயர் ஏமெத் (Amette) பாரீசின் மறை ஆயராக நியமிக்கப்பட்டார். எனவே லிசியூவின் புதிய மறை ஆயராக பேராயர் லெமொன்னியர் (Le Monnier) பொறுப்பேற்றார். அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள், ஆயர் அவர்கள் கார்மல் துறவினிகளை அமைதியாக அழைத்துக் குழந்தை இயேசுவின் தெரேசைப் பற்றிய அவர்களது நினைவலைகளை எழுதப் பணித்தார். அதற்குப் பத்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய தேவை யில்லை; சிலர் உடனே எழுதினர். 1898 ஆம் ஆண்டு முதல் மக்கள் ஏற்கெனவே செல்ல மாக அழைத்து வந்த 'சிறிய புனிதை" யான தெரேசைப் பற்றிய அனைத்துக் குறிப்புகளையும் மிகவும் பாதுகாப்பாகக் கார்மலில் சேகரித்து வைத்திருந்தனர்.

தெரேசு ஒருமுறை இஷ்ஷான் நீலுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்தில், "உரோமை தூய பீடம், தூயவர் நிலைக்கு ஒருவரை உயர்த்த நீண்ட காலம் எடுக்கும்" என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் தெரேசைப் பொறுத்தவரை அனைத்துமே குறுகிய காலத்தில் நடந்தேறின. பொதுவாக எதையும் பொறுமையாக, விரைவின்றிச் செயல்படுத்தும் உரோமை தூய பீடம் தெரேசுவின் காரியத்தில் மிக விரைவாகச் செயல்பட்டது. "மக்கள் திரண்டு குரல் எழுப்புவதற்கு முன்பாக நாம் காலதாமதம் செய்யாமல் சிறிய புனிதையை மாட்சிமையால் முடிசூட்டிவிட வேண்டும்" என்று சமயச் சடங்குக் குழுவின் தலைமைப் பணியாளரான, முதன்மைத் தலைமை ஆயர் வீகோ (Vico) அறிவித்தார். 1909 ஆம் ஆண்டு சனவரி திங்கள் உரோமையில் பணியாற்றிய கார்மல் சபை அருட் பணியாளர் ரொட்ரிகோ

(Rodriuo) வேண்டுகோள் சமர்ப்பிப்பவராகவும், அவருக்கு உதவியாகப் பேராயர் தே தைய் (Deteil) என்பவரும் நியமிக்கப்பட்டனர். தூய நிலைக்கு உயர்த்துவதற்கான மறை மாவட்டச் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு முனைந்தனர். நூற்றுக்கணக்கான அருங்குறிகள் நிகழ்வதை லிசியூவில் உள்ள கார்மல் இல்லத்திற்கு மக்கள் அறிவித்தனர். அவற்றில் ஒன்று இத்தாலியில் உள்ள கல்லிபொலி (Galli Poli) கார்மலின் இல்லத் தலைவிக்குத் தெரேசு காட்சியளித்த அருங்குறி. இவ்வருங்குறி பெரும் அதிர்ச்சியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. தெரேசு அச்சகோதரியிடம், "எனது வழி தெளிவானது! அவ்வழியைப் பின்பற்றுவதில் நான் தடம் மாறியதில்லை" என்று கூறினார்.

இவருடைய மரணத்திற்குப் பின் 13 ஆண்டுகளே நிறைவுற்ற நிலையில் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3 ஆம் நாள் மறை மாவட்ட அளவில், தெரேசைப் 'பேரின்ப நிலைக்கு' உயர்த்தத் தேவையான நடவடிக்கைகள் தொடங்கின. தெரேசு உடன் வாழ்ந்த 9 கார்மல் கன்னியர்கள் உட்பட 37 சாட்சிகள் குழந்தை இயேசுவின் தெரேசு வாழ்வுக்குச் சான்று பகர்ந்தார்கள். இந்நடவடிக்கை நிறைவுபெற 109 அமர்வுகள் தேவைப்பட்டன.

1910 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6 ஆம் நாள் பேராயர் லெமொன்னியர் மற்றும் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு நிற்க அவர்கள் முன்னிலையில் அடக்கம் செய்யப்பட்டிருந்த தெரேசுவின் உடல் வெளிக் கொணரப்பட்டது. மருத்துவர்களான பிரான்சிஸ் நீல் மற்றும் தே கொர்னியேர் இருவரும் செய்யவேண்டிய சட்டம் சம்பந்த நடவடிக் கைகளைச் சிறப்புறச் செய்தனர். அவருடைய உடல் ஒரு ஈயப் பெட்டியினுள் வைக்கப்பட்டு பிறிதொரு நிலவறைக் கல்லறைக்கு மாற்றப்பட்டது.

1914 ஆம் ஆண்டு திங்கள் 10 ஆம் நாள் பத்தாம் பத்திநாதர், மறை மாவட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நடவடிக்கை முன்னுரையில் கையொப்ப மிட்டார். அதன்பிறகு, "பேரின்ப நிலை அடைவதற்கான நடவடிக்கைகளை உடனடியாகப் புலனாய்வு செய்தல் சூழ்நிலைக்கு ஏற்ற ஒன்றாகும்" என அறிவித்தார்.

முதல் உலகப் போரின் விளைவாக 1915 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் பய்யே மறை மாவட்டத்தில் தொடங்கப் பெற்ற திருத்தூதர் நடிவடிக்கைகள் அம்மறை மாவட்டப் புதிய ஆயர் அவர்களால் தள்ளி வைக்கப்பட்டன. ஆனால் போரின் விளைவாகத் தொடர்பு சாதனங்கள் பாதிக்கப்பட்டதால் உரோமை நகருடன் தொடர்பு கொள்வது கடினப்பட்டது-



எனினும் தெரேசுவின் புகழ் ஜெர்மன் நாடு உட்பட அனைத்துப் பட்டி தொட்டிகளிலும் பரவுவதிலும் வேகம் குறையவே இல்லை. 1914 ஆம் ஆண்டு முதல் 1918 ஆம் ஆண்டு வரை கார்மல் சபையினர் முயற்சியினால் தொகுக்கப்பட்ட, "வரையறுக்கப்பட்ட" திரட்டிலேயே 592 பக்க சாட்சியங்கள் குறிப்பிடப் பட்டிருந்தன. அனைத்துச் சாட்சியங்களையும் உள்ளடக்க வேண்டுமெனில் ஐந்து தொகுப்புகள் தேவைப்படும் என அணிந்துரை குறிப்பிடுகிறது. 1915 ஆம் ஆண்டிற்குள் கார்மல் இல்லத்தினர் ஏறக்குறைய பத்து இலட்சம் பிரதிகளுக்கு மேல் வெளியிட்டிருந்தனர். அவற்றுள் 'ஒரு ஆன்மாவின் வரலாறு' 2,11,515 பிரதிகளும், வாழ்க்கை வரலாற்று சுருக்க நூல் 7,10,000 பிரதிகளும், ரோசா மலர்ப் பொழிவு 1,10,000 பிரதிகளும் அடங்கும்.

91 அமர்வுகளுக்குப் பிறகு 1917 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் நாள் திருத்தூதர் அலுவலக நடைமுறைப் பணிகள், பய்யே தலைமை ஆலயத்தில் நிறைவுற்றன. தூயவர் நிலைக்கு உயர்த்தப்பட 50 ஆண்டுகள் தாமதிக்கப்பட வேண்டும் என்கிற சட்டத்திலிருந்து திருத்தந்தை 15 ஆம் ஆசிர்வாதப்பர் விலக்குக் கொடுத்தார். 1921 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் நாள், குழந்தை இயேசுவின் தெரேசுவினது நற்பண்புகளின் வீரத்துவத்தைப் பற்றிய ஆணையொன்றை அறிவித்தார்.

திருத்தந்தை 15 ஆம் ஆசிர்வாதப்பரைத் தொடர்ந்து திருத்தந்தையான பதினொறாம் பத்திநாதர், "தமது ஆட்சி பீடத்தின் விண்மீன்" என்ற நிலைக்குக் கொண்டு வந்தார். அவர் பணியாற்றி பணி இடத்திலிருந்து தெரேசுவின் திருவுருவப்படமும், நினைவுச் சின்னமும், என்றும் அகலவேயில்லை. நூற்றுக்கணக்கான அருங்குறிகளிலிருந்து இரண்டு அருங்குறிகள் திறம்படப் புலனாய்வு செய்யப்பட்டன. அதன்பிறகு 1923 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் உரோமை நகரில் உள்ள தூய பேதுரு பேரா லயத்தில் நடைபெற்ற தூய தெரேசு பேரின்ப நிலையை அடையும் சடங் கிற்குத் தலைமை வகித்தார். நமது நூற்றாண்டில் அறிவிக்கப்பட்ட "இறை வார்த்தை"யாகக் குழந்தை இயேசுவின் தெரேசை தாம் காண்பதாகக் கூறினார்.

## லிசியூ நகர் தூயவர் தெரேசு (1925 மே 17)

1925 ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம் நாள் தூய பேதுரு பேராலயத்தில் 50,000 இறைமக்கள் (5,00,000 இறை மக்கள் பேராலயத்திற்கு வெளியே, தூய பேதுரு சதுரங்கத்தில் நின்றனர்) முன்னிலையில், 33

முதன்மைத் தலைமை ஆயர்களும், 250 ஆயர்களும் சூழ்ந்து நிற்க, திருத்தந்தை பதினொன்றாம் பத்திநாதர் சிறிய தெரேசு மார்ட்டினைத் தூயவர்கள் அட்டவணையில் பொறித்து வைத்தார். இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு அவரைத் "தூய பிரான்சிசு சவேரியாருடன் மறைபணி நாடுகளின் முதன்மைப் பாதுகாவலி" என அதே திருத்தந்தை அறிக்கை யிட்டார். இதுவோர் வியப்பைத் தரும் முரண்பாடாகும். பதினைந்து வயது முதல் இருபத்து நான்கு வயது வரை தமது அடைப்பட்ட கார்மல் இல்லத்தின் உட்பகுதியை விட்டு வெளியே வராத கன்னியைச் சீனாவின் கடை எல்லை வரை சென்று மறைப் பணியாற்றித் தமது உயிரையும் அர்ப்பணித்த ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த இயேசு சபை அருட்பணியாளரோடு ஒப்புமைப் படுத்தி அறிக்கையிட்டது உண்மையில் பெரும்பாலோரை வியப்பில் ஆழ்த்தியது.

**"லிசியூ நகர் தெரேசு"** எனும் பெயர் அனைவருக்கும் அறிமுகமானது. அவரது புகழ் உலகெங்கும் பரவியது. பேரின்ப நிலைக்கு உயர்த்தப் பெற்றபின் ஆறு இலட்சம் திருப்பயணிகள் சிறிய நோர்மன் நகருக்கு விரைந்தனர். அவர்கள் புய்ஸ்ஸொனேவிலும், கார்மல் இல்லத்துச் சிறிய ஆலயத்தின் முன்பாகவும் வரிசையில் காத்து நின்றனர். 1898 ஆம் ஆண்டிற்கும் 1925 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட 27 ஆண்டுகளில் ஏறக்குறைய 30,328,000 திருவுருவப் படங்கள் பலருக்கும் பகிர்ந்தளிக்கப் பட்டன. லிசியூ கார்மல் இல்லத்தில் சேர்வதற்காகப் பல இளம் பெண்கள் விண்ணப்பித்தனர். ஆனால் அவர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள் வதற்கான வாய்ப்புகள் அங்குக் கிடையாது. விண்ணப்பித்தவர்கள் எண் ணிக்கை அதிகமாக இருக்கவே அவர்களுக்குப் பதில் அளிக்கும் பொருட்டுச் சுற்று மடலே அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டது. "ஒரு ஆன்மாவின் வரலாறு" பல துறவற இல்லங்களில் அழைத்தல் பெருகத் துணை நின்று இளம் உள்ளங்களைத் தூண்டியது. தெரேசுவின் ஆன்மீகம் கார்மல் சபையையும் தாண்டிச் சென்றது. 1933 ஆம் ஆண்டில் "தூய தெரேசு மறைப் பணிக்குழு" நிறுவப்பட்டது. புதிய தூயவரின் பணியில் தங்களையே முழுமையாக அர்ப்பணிப்பதே அவர்களது இலக்காக இருந்தது. 1948 ஆம் ஆண்டில் அருட்பணியாளர் மார்ட்டின் "தூய தெரேசு மறைப் பணியாளர்கள் சபை" என்ற ஒரு சபையை ஆண்களுக்காக நிறுவினார்.

தமது வாழ்வின் இறுதியில் ஆன்மீக இருளில் வாழ்ந்து, நவீன நம்பிக்கையின்மையை முன்னுரைத்து, பிரெஞ்சு மறைப் பணிகளின் பாதுகாவலியாகவும், தூய தெரேசு உயர்த்தப் பெற்றார். முதன்மைத் தலைமை



ஆயர் சூகார்டு (Cardinal Suhard) கிறிஸ்தவர்கள் பிற சமயங்களைத் தழுவுதலைக் கண்டு பெரிதும் உள்ளம் பாதிப்படைந்தவராய் 1940 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாள் தமது நாள்குறிப்பேட்டில் இவ்வாறு எழுதுகிறார்: "தூய தெரேசின் மறைப்பணியில் ஒரு குறிப்பிட்ட பகுதி செயலாக்கம் பெற வேண்டியிருந்தது. பிரெஞ்சு மறை போதகக் குருத்துவக் கல்லூரி (La Mission De France) தொடங்கிய போது இச்சிறிய தூயவர் அவரே முன்நின்று தம் வழியில் செயல்படத் தொடங்கினார். ஏனெனில் தெய்வீக அருளுக்கு இறுதி எல்லையே கிடையாது. நானும் இப்பணியில் பயனுள்ள முறையில் உழைத்து, தூய குழந்தை இயேசுவின் தெரேசுவும் இப்பணியில் ஈடுபட்டு உழைக்க விழைகின்றேன்" 1914 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 24 ஆம் நாள் நிறுவப்பட்ட பிரான்ஸ் நாட்டு மறைப்பணிக்காக அருட் பணியாளர்களை உருவாக்கும் இல்லம் போன்று பிறிதொன்று 1942 ஆம் ஆண்டு அக்டோபரில் லிசியூவில் நிறுவப்பட்டது.

1944 ஆம் ஆண்டு மே திங்கள் 3 ஆம் நாள், பிரான்சு நாட்டு விடுதலைக்குச் சற்று முன்பாக, 12 ஆம் பத்திநாதர் (1937 ஆம் ஆண்டு லிசியூவில் பேராலயத் திருவருட் பொழிவு விழாவிற்குத் திருத் தந்தையின் தூதராகச் சென்று வந்தவர்) தெரேசை ஜோன் தார்க்குடன் இணைத்து "பிரான்ஸ் நாட்டின் இரண்டாம் பாதுகாவலி" என அறிவித்தார். இந்த இரு சகோதரிகளும் ஒன்றிணைந்து விட்டனர். ஒரு மாதம் கழிந்த பின்னர் லிசியூ நகர் வெடிகுண்டு தாக்குதல்களால் பற்றிய எரியத் தொடங்கியது. பிரான்சு நாட்டு மறைப்பணி சபையில் உருவாக்கம் பெறுபவர்கள் அதனை அணைத்தனர். கார்மலின் நிலத்தறையில் இருந்த படிகளைத் தாக்கும் ஆரம்ப நிலையில் வந்தது. நகரம் முழுவதும் தீக்கிரையானது. கார்மல் இல்லம் மட்டும் தப்பியது.

## அமைதிப் புரட்சி

தெரேசு பற்றிய வரலாற்று நூல்களும், ஆராய்ச்சி நூல்களும் அனைத்து மொழிகளிலும் எண்ணிலடங்காதவாறு பெருகின. 1898 ஆம் ஆண்டு மற்றும் 1947 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தெரேசுவின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் மட்டும் 865 எனக் கணக்கிடப்பட்டுச் சாதனை படைத்தன. "ஓர் ஆன்மாவின் வரலாறு" நூலின் மூலப் பயிற்சி ஏடுகளை ஆராய்வதற்கான விண்ணப்பங்கள் நாளுக்கு நாள் பெருகின. 1951 ஆம் ஆண்டு ஜூலை 28 ஆம் நாள் தமது 90 ஆவது வயதில் தலைமைச் சகோதரி ஆக்னெசு இறந்தார். தூய இதய மரியா 1940 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 19ஆம் நாள் தனது 80வது வயதிலும், 1941 ஆம் ஆண்டு

ஜூன் திங்கள் 16 ஆம் நாள் தனது 78 ஆவது வயதில் லேயோனியும் இறைவனடி சேர்ந்தனர்) திருத்தந்தை பனிரெண்டாம் பத்திநாதரின் கட்டளைப்படி, கார்மல் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் பிரான்சுவா தே சேன்த் மரி (Francois De Sainte - Marie) என்பவர் இறுதியாக 1956 ஆம் ஆண்டு "தன் வரலாற்றின் கைப்பிரதிகளின்" நிழற்பட மறுபடிவப் பதிப்பை வெளியிட்டார். 1961 ஆம் ஆண்டு வெளிக்கொணரப்பட்ட தெரேசுவின் புகைப்படங்கள் அடங்கிய செருகேடு (Album) லிசியூ நகர் தெரேசுவின் உண்மையான முகத்தை வெளியிட்டன. அதுவரை லிசியூ-வின் 'உருவ ஓவியர்' வரைந்த கலையற்ற படங்களே பிரபலமாயிருந்தன. ஆனால் அந்தப் படத்திற்கும் செலின் வைத்திருந்த உண்மையான புகைப்படத்திலிருந்து மறுபதிப்புச் செய்யப்பட்டு கையேட்டில் இருந்த படத்திற்கும் எவ்வித ஒப்புமையும் இல்லாமல் இருந்தது. 1959 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 ஆம் நாள் மார்ட்டின் குடும்பத்தின் கடைசி நபர் செலின் தமது 90 ஆவது வயதில் மரணமடைந்தார்.

என்னே விந்தையான தீரச் செயல்கள் அந்தக் குடும்பத்திற்கு நிகழ்ந்தன! தங்கள் இல்ல மழலை, உலகனைத்திற்கும் தூயவர் என்ற நிலை அடைந்த நம்ப இயலாத மாற்றத்தை மார்ட்டின் சகோதரிகள் தங்கள் வாழ்க்கை முழுவதும் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். 1939 ஆம் ஆண்டு தூய இதய மரியா மேலும் அதிகமாக வியப்புற்று, "சற்று நேரத்திற்கு முன்பாகப் பேராலயத்தை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் போது அன்னையைப் பற்றிய எண்ணமும் என் சிந்தனையில் கலந்தது. என் அன்னை லிசியூவுக்கு வரும்போதெல்லாம் தெரேசுவை என் அத்தையின் அதாவது தெரேசுவின் அம்மாவுடைய தோட்டத்திற்கு அழைத்துச் செல்வது வழக்கம். மிக அழகியதொரு இடம் அது. எங்கள் குடும்பத்தினர் இறந்தவர்களைப் புதைக்கும் அந்த இடத்திற்கு என் அன்னை அடிக்கடி செல்ல விரும்புவார். யாராவது ஒருவர் அவரிடத்தில் அப்போது, "நாமிருக்கும் இந்த அழகிய சிறிய மலையைப் பார்க்கின்றீர்களா? இன்னும் 50 ஆண்டுகளில் உங்கள் சிறிய தெரேசுவின் பெயரால் மாபெரும் பேராலயம் ஒன்று எழுப்பப்படும்" என்று கூறியிருந்தால், என் அன்னை எதார்த்தமாக, "உனக்கு மனநிலை சரியில்லை" என்று கூறியிருப்பார். பல்வேறு சோகங்களினால் சோர்ந்து போயிருந்த அவர் இதனை நம்பியிருக்க மாட்டார். இது உறுதி" என்று கூறினார்.

சிறிய மார்ட்டின் தெரேசு அவரது குடும்பத்திலிருந்து நழுவிச் சென்று விட்டார். . . ஆனால் அவர் "உலகின் நம்பிக்கையை வளர்க்கும் குழந்தை"யாக மாறி விட்டார். (11ஆம் பத்திநாதரின் கூற்று) அவர் இவ்வுலகிற்கு சொந்தமானவர். 17,000 ஆலயங்கள் சிறுமலர் தெரேசின் பாதுகாவலில் எழுப்பட்டுள்ளன.



1971ஆம் ஆண்டு முதல் அவரது கடிதங்கள், கவிதைகள், இறுதி உரையாடல்கள் போன்றவற்றின் மூலப் பிரதிகள், அவரது நூற்றாண்டுப் பதிப்புகளாக வெளிவரத் தொடங்கின. 1973 ஆம் ஆண்டில் அவரது மண்ணகப் பிறப்பின் நூற்றாண்டு அவருடைய எழுத்துக்களுக்குப் புதிய செயல் தூண்டும் திறனை அளித்தது. உரோமை நகரில் உள்ள கார்மல் சபையினர் 1973 ஆம் ஆண்டு மற்றும் 1976 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில், இதுவரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்த தெரேசின் பேரின்பப் பெருநிலை மற்றும் தூயவர் நிலைக்கு உயர்த்தப்படக் காரணிகளாக இருந்த நடிவடிக்கைகளை வெளியிட்டனர்.

பேரின்பப் பேறு நிலைக்குத் தெரேசு உயர்த்தப்பட்டதிலிருந்தே இறையியலார்கள் அவரது பயிற்சிக் குறிப்பேடுகளையும், மற்றும் அவரது அனைத்து எழுத்துக்களையும் ஆய்ந்து அறிந்து படித்தனர். இந்த ஆராய்ச்சிகளின் முன்னோடிகளில் ஒருவரான அருட்பணியாளர் கோம்ப் (Combes) "மனித பரிணாமத்தில் தூய ஆவி இயக்கி வைத்த பெரும் ஆன்மீகப் புரட்சிகளில் ஒன்றை"ச் சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசு நம்மிடையே கொண்டு வந்துள்ளார். அது எண்ணிலடங்கா அருட்கனி களைக் கொண்ட ஓர் அமைதிப்புரட்சி . . மறைவான புரட்சி", எனத் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தினார். சுவாமிநாதர் சபையைச் சார்ந்த இறையியலார் அருட்பணியாளர் மோலினி (Molinie) தமது கருத்தைத் தெரிவிக்கும் போது, "விவிலிய விழுமியங்களின் அனைத்து முழுமை களையும் உள்ளடக்கிய உலகளாவிய ஓர் ஆன்மீக இயக்கத்தை மீண்டும் கண்டுபிடிக்க நாம் குழந்தை இயேசுவின் தெரேசுவுக்காகக் காத்திருக்க வேண்டியதாயிற்று" என்று கூறினார். ஹான்ஸ் உர்ஸ் ஃபோன் பல்தசார் (Hans urs von Balthasar) என்னும் மற்றொரு இறையியலார் குறிப்பிடும்போது, "பெண்கள் இறையியல் பெரிதாக எப்போதுமே மதிக்கப்படுவதில்லை; முழுமையான இலக்கியத் தொகுப்பாக ஏற்றுக் கொள்ளப்படுவதுமில்லை. லிசியூவின் செய்திக்குப் பிறகே, இறுதியாக இன்றைய கொள்கை இறையியலின் மாற்றமைப்புப் பற்றி ஆலோசனை நடத்தி மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்" என்று உரைத்தார். அருட்பணியாளர் கொங்கார் (Congar) தெரேசைப் பற்றிக் குறிப்பிடும் போது, "அணு யுகத்தின் நுழைவாயிலில் கடவுளின் கரங்களால் ஏற்றி வைக்கப்பட்ட கலங்கரைத்

தீபங்களின் ஒன்றாகச் செயல்படுகிறார்" என்றார்.

தெரேசுவின் வாழ்வின் வழிகளில் வந்த தடைகள், துன்பங்கள், துயரங்கள் வேறு ஒருவர் வாழ்வில் ஏற்பட்டிருந்தால் உறுதியாக அவர்கள் அவற்றினால் முழுவதும் சீரழிக்கப்பட்டிருப்பார்கள். அன்பில் கொண்டிருந்த தீவிரமான ஈடுபாடும், உள்ளத்தின் உயிரோட்டமும் அவரை அன்பில் பயணிக்க வைத்தன. மீட்பின் அனுபவத்தைத் தனிமையில் சுவைத்தார். ஆன்மாவை அழித்தொழிக்கும் ஜேன்சன் தத்துவார்த்தங்கள் பெரும் பாதிப்பையும் அழிவையும் ஏற்படுத்திய நேரத்தில், இறைவனை நீதியின் கடவுளாய் மட்டும் குறைத்து மதிப்பிடும் குறுகிய அறநெறி அச்சத்தை உண்டாக்கி வந்த காலத்தில், தெரேசு விவிலியத்தை அகத்தூண்டலை மறு ஆய்வு செய்தார். இறைவன் இயேசுவின் தந்தை. அவர் தம் மகனை உலகிற்களித்தார். அவரும் குற்றம் புரிவோருக்காக, எளியோருக்காக, சிறியோருக்காக உலகிற்கு வந்தார் என உலகிற்கு அறிவிக்கும் துணிவு கொண்டார். இறைவனை "அப்பா" என உரிமையுடன் அழைக்கத் தயங்கவே இல்லை. இயேசுவின் அப்பா அனுபவத்தைத் தமது உள் உணர்விலே அறிந்து அனுபவித்தார்.

1962 -65 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இரண்டாம் வத்திக்கான் பேரவை தெரேசின் பெயரைக் குறிப்பிடாமல், அவரின் இறைத் தூது அகத்தூண்டல் கருத்தியல்களைத் தனதாக்கியுள்ளது. இறை வார்த்தை நோக்கித் திரும்பச் செல்லுதல்; விசுவாசம், நம்பிக்கை, அன்பு போன்ற இறையியல் நற்பண்புகளுக்கு அன்றாட வாழ்வில் முதன்மை இடம் அளித்தல்; கிறிஸ்துவின் உடலாகத் திருச்சபையைக் காணுதல்; அகில உலக மறைபணி ஆற்றுதல், திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் தூய வாழ்வுக்கு அழைத்தல், இறை நம்பிக்கையுற்றோர், வெவ்வேறு இறை நம்பிக்கை உடையோரிடம் சகோதர உணர்வுடன் கரிசனை கொள்ளுதல் போன்றவை தெரேசின் கருத்தியல்களே! ஆண், பெண் என்ற வேறுபாடின்றி மனித இனமே நம்பிக்கையற்ற நிலையோடு ஒருவரையொருவர் நேருக்கு நேர் எதிர்கொள்ளும் இக்காலக் கட்டத்தில், அந்நம்பிக்கையற்ற நிலையே கிறிஸ்தவர்களைச் சிறுபான்மையினராக்கும் காலத்தில், பற்றுறுதி, நம்பிக்கை பற்றிய தெரேசின் இடர்ப்பாடுகள் இருபதாம் நூற்றாண்டின் முன் அறிகுறிகளாகவே தோன்றியுள்ளன. விண்ணகம் அவருடைய கருத்தில் ஓர் ஆற்றல் மிக்க இயக்கமே. சகோதர அன்பு பற்றிய அவருடைய உரை, அன்றாடத் திருஉணவிற்கான அவருடைய ஆவல், அவரது 'மரி இயல்' என அவருடைய கருத்தியல்களின் தொடரை நீட்டிக் கொண்டே போகலாம்.



14 ஆம் நூற்றாண்டின் சியன்னா நகர் கத்திரீனா மற்றும் 16 ஆம் நூற்றாண்டின் அவிலா நகர் தெரசா இவர்களைத் தொடர்ந்து லிசியூ நகர் தெரேசுவும் விரைவில் ஒரு நாள் திருச்சபையின் முனைவர் (Doctor of The Church) என அறிவிக்கப்படுவார் என நம்பிக்கை கொள்ளலாம். **(அந்த நம்பிக்கை நாளும் இந்நூல் மூல மொழியில் எழுதப்பெற்று 15 ஆண்டுகள் நிறைவுறும் வேளையில் 19.10.1997 அன்று கனிந்து விட்டது. ஆம்! 1997 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாள் நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு அன்று உரோமை தூய பேதுரு பேராலயத்தின் முன்பு நிறைவேற்றப்பட்ட ஆடம்பரத் திருப்பலியின் போது திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அவர்களால், குழந்தை இயேசுவின் தெரேசு - 'அகில உலக திருச்சபையின் மறைவல்லுநர்' (Doctor of the Universal Church) என அறிவிக்கப் பட்டார்.) ***

## அவனியின் சகோதரி

தெரேசு தமது எண்ணங்களை வரையறைப்படுத்தியது இல்லை! எனினும் பெர்க்சன் (Bergson), கித்தோன் (Guitton), மோர் (More), மோன்னியர் (Monnier), திபூ (Thbou) போன்ற பிரான்சு நாட்டைச் சார்ந்த மெய்யிலாளர்களை வியப்பில் ஆழ்த்தியது. மார்க் சாங்னியெர் (Marc Sangnier) சார்ல் மோர்ராஸ் (Charls Maurras) போன்ற அரசியல் அறிஞர்களையும் கவர்ந்தது. பவுல் க்ளோதெல் (Paul Claudel) ஹென்றி கெயோன், (Henri Gheon), ஜார்ஜ் பெர்னானோஸ் (Georges Bernanos), லூசி தெலரூமார்த்ரூஸ் (Lucie Delarue - Mardrus) ஜோஸப் மலேக் (Joseph Malegue) எட்வர்ட் எஸ்த்தொனியே (Edward Estaunie) ஜொவான்னி பப்பினி (Giovanni Papini) ரெனே ஷ்வோப் (Rane Schwob), ஈதா கோர்ரஸ் (Ida Gorres), ஜான் வூ (John Wu), மாக்சென்ஸ் வான்டடெர் மெர்ஷ் (Maxence Vander Meersch), ஜில்பெர் சேப்ரோன் (Gilbert Cesbron), ஸ்தனிஸ்லாஸ் ஃபூமே (Satanislaus Fumet), ஜூலியன் க்ரின் (Julien Green), மோரீஸ் க்ளாவெல் (Maurice Clavel) போன்ற பல்வேறுப்பட்ட எழுத்தாளர்களின் உள்ளங்களையும் தெரேசு கொள்ளை கொண்டார். உலகின் ஐந்து கண்டங்களையும் உள்ளடக்கும் எண்ணற்ற அறிஞர்கள் தெரேசின் எழுத்துக்களால் கவர்ந்திழுக்கப் பட்டிருக்கும் போது இந்தச் சிறிய தொகுப்பு ந, கைப்பிற்குரியதே.

ஆனால் இறுதியாக ஏழைகளின் இதயங்களில் அவர் கொணர்ந்துள்ள மகிழ்ச்சியான விடுதலை உணர்வினையும், ஆழமான அன்பின் ஏக்கங்

* *தமிழ் மொழி பெயர்ப்பாளரின் குறிப்பு*



பெண்களுள் திருச்சபையின் மூன்றாவது மறைவல்லுநர்.



களையும் யார் விவரிப்பார்? சிறியோர், அவரது முன்னுரிமை பெற்ற தோழர்களான உரிமையற்றோர் போன்றவர்களுக்கு நற்செய்தியின் தூய வாழ்வு, அடையும் தூரத்தில் தான் உள்ளது என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். உணர்ச்சி ஊனம், நரம்பு கோளாறு, பேரழிவுக்குரிய மரபு, பல்வகை நோய்கள் போன்றவையோ வேறு எதுவுமோ இறைவனின் கருணை அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க இயலாது என்பதை அவரது வாழ்வு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அவர் தமது "அன்புத் துணிவினாலும்" அவரது "விவேகமுள்ள அச்சமின்மையாலும்" அனைத்து அச்சங்களையும் விரட்டித் துரத்தினார். அன்றாடம் வாழ்ந்து காட்டிய சாதாரண வாழ்வே, மீண்டும் அடையக்கூடிய தூய்மைத்துவத்தின் நாற்றங்கால் ஆகியது. "அசாதாரண வாழ்வு மேற்கொள்வோரைத் தவிர மற்ற அனைத்து வகையினருக்கும் ஏற்ற கருத்துக்கள் ஏதேனும் நிச்சயம் அங்கே இருக்கும்" எனத் தெரேசு கூறிய வார்த்தைகள் வடிவம் பெறத் தொடங்கின. அவர் மக்கள் திரளுக்காய் மன்றாடினார். திபேரிய ஏரியோரம் இயேசுவிடம் வந்த மக்களைப் போன்று, அவரிடம் திரண்டு வந்த "சிறிய ஆன்மாக்களுக்காக" தெரேசு மன்றாடினார். அவருடைய மன்றாட்டு செவி சாய்க்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும், நாடு, மொழி, இனம், வயது வேறுபாடின்றி அனைவரும் திருப்பயணிகளாகவோ, சுற்றுலாப் பயணிகளாகவோ, லிசியூ நகருக்கு வந்து செல்கின்றனர். புய்ஸ்ஸொனேவில் கார்மல் சிறிய ஆலயத்தில், கொல்லர்கள்- வழக்கறிஞர்களுடன் கைகுலுக்குகின்றார்கள். ஜப்பானிய அறிவுஜீவிகள் - பிகால் (Pigalle) விலைமாதரோடும், வட ஆப்பிரிக்க இஸ்லாமியர் - பெல்ஜிய நாட்டு மறைப்பணியாளரோடும், பிரெஞ்சு நாட்டுக் கிராமக் குடும்பத்தினர் - தென் அமெரிக்க இறையியலாரோடும், ஜெர்மன் நாட்டுத் திருப்பயணக் குழுவினர் - கனடா நாட்டுத் துறவிகளோடும், நெருங்கிய உறவு கொண்டு அன்பை வெளிப்படுத்தினர். "திருச்சபை உட்பிரிவுக்குப் பிறகு ரஷ்ய கிறிஸ்தவர்கள் வணங்கும் மேற்கத்தியத் தூயவர்கள், தூய பிரான்சிசு அசிசி மற்றும் சிறிய தெரேசு மட்டுமே" என மரபு வழி நம்பிக்கை கொண்ட கிறிஸ்தவர் ஒருவர் கூறியதாக ஒலிவியெர் க்ளமெண்ட் (Olivier Clement) கூறுகிறார்.

பிரெஞ்சு மொழி பேசும் நாட்டினர் 'சிறிய தெரேசு' எனவும், ஆங்கிலேய சேக்சர்கள் (Anglo Saxons) 'சிறுமலர்' எனவும், போர்ச்சுக்கல் நாட்டினர் "தெரசீனா" எனவும், ஸ்பானிய மொழி பேசும் உலகம் "தெரசித்தா" எனவும் அன்பாகத் தெரேசை அழைத்து அவரவர் மொழியில் பேசி மகிழ்கின்றனர்.

இவ்வாறு எல்லா இடங்களிலும் அவருக்கு நண்பர்கள் உண்டு. 'அவர் அங்கே இருக்கின்றார். அங்கே அவர் உடன் இருக்கிறார். அவர் நமக்கு மிக அருகில் இருக்கிறார்" எனப் பலரும் பலவாறு சொல்கிறார்கள்.

இவ்வாறு கூறுபவர்களின் வாழ்க்கைச் சரிதைகள் எழுதப்பட இயலா தவை. அவர்களது வாழ்க்கை அவர்களுக்கும் தெரேசுவுக்கும் இடையே உள்ள இரகசியமாகும். லிசியூ நகர் தூயவரின் இறப்பிற்குப் பிறகு உள்ள உண்மை வாழ்க்கை இக்கூற்றுக்களின் ஆழத்தில் உய்த்துணரப்பட வேண்டும். தெரேசு எல்லாவிதமான எல்லைகள், புள்ளி விவரங்களையும் கடந்து நிற்கின்றார்.

இறுதியில் அவரது மறை உண்மை நமது கண்களிலிருந்தே தப்பி விடுகிறது. ஆனால் அப்படி இருப்பது தானே நல்லது?

தூய்மை வானில் திகழ் விண்மீன் அவர். இருபத்து நான்கு ஆண்டு உலக வாழ்விலே, இளம் வயதிலேயே முதியோருக்குரிய அறிவுத்திறனையும் ஞானத்தையும் பெற்றிருந்தார். "தூயவர்கள் முதியவர்களாவதில்லை" என லிசியூவில் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் கூறினார். "அவர்கள் எப்போதும் கடந்த கால நபர்கள் ஆவதில்லை', "நேற்றைய மனிதர்கள் ஆவதில்லை" மாறாக அவர்கள் எதிர்கால விவிலியத்தின் மனிதர்கள்; வரும் உலகின் சாட்சிகள்"

போலந்து நாட்டைச் சேர்ந்த திருத்தந்தை தமது பிரான்சு நாட்டுப் பயணத்தை 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 2 ஆம் நாள் மேற்கொண்ட லிசியூ திருப்பயணத்துடன் நிறைவு செய்ய விழைந்தார். அங்கே பேராலய சமதளப் பாதையில் கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்கள் நடுவே இவ்வாறு உரையாற்றினார்:


'நாம் இறைவனின் பிள்ளைகளாகும் ஆவியைப் பெற்றுள்ளோம். அந்த ஆவியினாலே நாம் அப்பா! தந்தாய்! என அழைக்கின்றோம்' என்ற அடிப்படை மறை உண்மையினை, நற்செய்தியின் அடிப்படை எதார்த்தத்தை, நமது நாள்களின் மனித இனத்திற்கு நேரடியாக உணர்த்த இறைவனின் ஆவி லிசியூ நகர் தெரேசின் இதயத்தைத் தூண்டி வழி நடத்தினார் என ஒருவர் உறுதியுடன் கூற இயலும். "சிறிய வழி" என்பது "தூய குழந்தைத்துவத்தின் வழி". அந்த வழியில் மிகவும் அடிப்படையானதும், அனைத்து உண்மையின் உறுதிப்பாடுமாகிய மறுமலர்ச்சியும் அடங்கி



யுள்ளது. இறைவன் நம் தந்தை; நாம் அவருடைய பிள்ளைகள் என்ற பரந்த உண்மையை விட, நற்செய்தியின் உண்மைகளில் எந்த உண்மை மிகவும் அடிப்படையானதாக மற்றும் மேன்மையுடையதாக இருக்க இயலும்?

திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல், தெரேசு நீண்ட துயர்களை அனுபவித்த பிறகு இறந்த மருத்துவ அறைக்குச் சென்று மன்றாட விரும்பினார். வெவ்வேறு சபைகளினின்று கார்மலின் சிறிய செப அறையில், குழுமியிருந்த ஆழ்நிலைத் தியானத் துறவினியரிடம், "இறைவனில் மறைந்துள்ள உங்கள் வாழ்வின் செறிவும், சுடரொளியும் தங்கள் வாழ்வின் அர்த்தம் காணத் தேடித் திரியும் இன்றைய மாந்தர்களுக்குச் சவாலாக அமைய வேண்டும்".

லிசியூ நகர் கார்மல் கன்னிகை தெரேசின் இறப்புக்குப் பிறகு உள்ள வாழ்க்கையைப் பற்றிய இப்பக்கங்கள் அவருடைய நூறு ஆண்டுகள் வரலாற்றுப் பின்புலத்தை அடக்கியுள்ளன. அவை "இறைவனில் மறைந்துள்ள அவரது வாழ்வின் பல பரிமாணச் செறிவையும், சுடரொளியையும்"



தெரேசுவின் அறையில்
திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல். (2 ஜுன் 1980)

நிறைவின்றியே விளக்குகின்றன.

இவ்வொளி மிக்க சுடர் விட்டு. எரிகின்றது. அது எரிவது என்றும் தொடரும். . .

**"ஆம், நான் இவ்வுலகிற்கு நன்மை செய்வதிலேயே என் வாழ்வைச் செலவிட விரும்புகிறேன். . . மீட்கப்பட வேண்டிய ஆன்மாக்கள் இருக்கும் வரை ஓய்வெடுக்க நான் விரும்பவில்லை. ஆனால். . ." இனி நேரம் இல்லை" என வான தூதர் கூறும்போது நான் ஓய்வெடுத்துக் கொள்வேன்."**

## பின்னிணைப்பு

### கடலின் சிறு துளிகள் : (சான்றுகள்)

*"உலகின் ஐந்து கண்டங்களிலும் நற்செய்திகளை*
*அறிவிக்க எனக்கு ஆசை*
*வெகு தொலைவில் உள்ள தீவுகளிலும்*
*அறிவிக்க ஆசை மேல் ஆசை".*

லிசியூ நகர் தூய தெரேசுவை நான் அதிகம் நேசிக்கிறேன். ஏனென்றால் அவர் அனைத்தையும் எளிதாக்கி விட்டார். மனித - இறை உறவை அவர் கணிதமாக்கி விட்டார். ஆன்மீக வாழ்க்கையில் தூய ஆவிக்கு இருந்த இடத்தைப் பறித்த ஆன்மீக வழிகாட்டிகளிடமிருந்து மீண்டும் அதனைத் தூய ஆவிக்கே பெற்றுத் தந்த பெருமை தெரேசுவையே சாரும்.

முதன்மைத் தலைமை ஆயர் பூர்ன் *(1912)*
(Cardina Bourne)

*தலைமை ஆயர், வெஸ்ட் மினிஸ்டர்.*

நான் ஹைத்தி (Haiti)என்னும் இடத்தில் இருக்கும் போது ஒரு நண்பர் 'ஓர் ஆன்மாவின் வரலாறு' என்னும் சிறிய நூலை என்னிடத்தில் கொடுத்தார். எவ்வித சிறப்பு விருப்பமுமின்றி, சிந்தனைச் சிதறல்களுடனே அதன் முதல் பக்கங்களை மேலோட்டமாகப் புரட்டினேன். எனக்காக எழுதப்பட்ட நூலாகவோ, அல்லது எவ்விதத்திலும் எனக்குப் பயனளிக்கும் நூலாகவோ, அது எனக்குத் தென்படவில்லை. பிறகு லேயோனி ஒரு கூடை

நிறையப் பொருட்களை எடுத்து வந்து தெரேசுவிடம் காட்டி உனக்குத் தேவையான பொருட்களையோ அல்லது நூற்பின்னல்களையோ தேர்ந்தெடுத்துக் கொள் என்று கூறியபோது தெரேசு, "நான் அனைத்தையும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன்," என்று கூறிய சிறு நிகழ்வைப் படித்தேன். உடனடியாக எனது ஆன்மா தெய்வீக ஒளியால் ஆட்கொள்ளப்பட்டது. இனம் புரியாத உணர்வுகள் என்னில் தோன்றின. மகிழ்ச்சி, அக்களிப்பு, ஆனந்தக் கண்ணீர் என்னில் பெருகி என்னை அகமகிழ்வில் மூழ்கடித்தன; மறு உலக ஆனந்தத்தை அனுபவிக்க வைத்தன. சிறு துளி நேரம் 'சிறிய தெரேசு' (அந்நேரத்தில் அவர் தூயவர் நிலைக்கு உயர்த்தப்படவில்லை) என் அருகில் வந்து, என் ஆன்மாவின் கண்களைத் திறந்து கொண்டிருந்தார். இல்லை, இல்லவே இல்லை! இது உண்மை. மாயை அல்ல. 48 ஆண்டுகள் கடந்த பிறகும், அந்த அருட்கொடையின் தாக்கம் இன்னும் என் வாழ்க்கையை மிளிரச் செய்து கொண்டிருக்கின்றது.

இஷான் லே கூர் க்ரான் மெஷோன் *(1914)*
(Jean Le Cour - Grandmaison)
*கப்பற்படைத் துணை அதிகாரி*
*லூவார் அத்லாந்திக், 1974 - இல் கெர்கோனான் துறவகத்தில் இறந்தார்*

லிசியூ நகர் தூய தெரேசு என்னுடைய பாதுகாவலர். என் தோட்டத்தில் அவருடைய திரு உருவச் சிலையை நிறுவி, அதன் முன்பாக வெள்ளை ரோஜாச் செடியை நட்டு வைத்துள்ளேன். ஆண்டு முழுவதும் அதில் மலர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டே இருக்கின்றன.

அலேன் மிமூன் (1970)
(Alain Mimoun)
*ஒலிம்பிக் நெடுந்தூர ஓட்ட வீரர்*

இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக மத்தா எல் மெஸ்க்கீன் (Matta Ei Meskeen) என்பவரால் வாடி எல் நட்ரூன் (Wadi El Natroon) என்னுமிடத்தில் கோப்டிக் துறவகம் தோற்றுவிக்கப்பட்டது. மத்தா எல் மேஸ்க்கீன் ஒரு எகிப்தியர்; மருத்தாக்கத் துறை மாணவர்; 'கோப்புக்' மரபு வழி விசுவாசத்தைக் கடைப்பிடிப்பவர். அவருடைய இளமை வயதில் துறவற வாழ்க்கைக்குத் தான் அழைக்கப்படுவதாக உணர்ந்தார். எனவே மேல் எகிப்தில் உள்ள பாலைவனத்திற்குச் சென்று தங்கி, கோப்டிக் துறவற அமைப்புகளின் தந்தையர்களுள் ஒருவரான தூய மக்காரியஸ் (St. Macarius)



அவர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றித் தனிமையில் ஓர் துறவிப் போல் வாழத் தொடங்கினார். குழந்தை இயேசுவின் தூய தெரேசின் எழுத்துக்கள் 1964 - ஆம் ஆண்டில் அரபி மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. அவற்றைப் படித்த மாத்தா எல் மெஸ்க்கீன் உள்ளம் நெகிழ்ந்தது. அதன் விளைவாக அவை அவர் வாழ்வின் சட்டமாகவும் அவரது துறவிகளின் வாழ்க்கை நெறியாகவும் மாறிவிட்டன. இன்னும் வாழ்வைப் புதுப்பித்தலுக்கான அடிப்படைக் காரணிகளாக வாடி எஸ் நட்ரூனில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கார்மல் சபை செய்தி மலர்
(SIC 1981)

அறுபதுகளில் நான் ஒரு மாணவர். கத்தோலிக்க மன்றங்களில் தீவிரமாகச் செயலாற்றி வந்தேன். எங்களது அருட்பணியாளர் லிசியூ நகர் தெரேசைப் பற்றிப் பலமுறை எங்களிடம் எடுத்துரைத்துள்ளார். அல்ஜீரியாவில் அமைதிக்காக நடைபெற்று வந்த போராட்டங்களுக்குத் தெரேசின் வாழ்க்கை எவ்விதத்தில் உதவி புரிய முடியும்? அங்கு நிலவிய கொடுமைகளிலிருந்து விடுதலையளிக்க முடியுமா? என்றெண்ணிச் சிறுமிகள் சிரித்தனர். சிறுவர்கள் வியந்தனர். எனினும் நாங்கள் அந்த நல்ல சிறிய சகோதரியைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்வதில் தீவிரம் காட்டினோம்; அக்கறை கொண்டோம். 1968 ஆம் ஆண்டு மே திங்களைத் தொடர்ந்து அரசியல் செயல்பாடுகள் தீவிர மடைந்தன. எனவே மனித நேயத்தைப் பேணி வளர்க்க வும், புதியதொரு மனித சமுதாயத்தைப் படைக்கவும் எவ்வித முயற்சியும் எடுக்காத, செயலற்ற திருச்சபையோடு கொண்டிருந்த அனைத்து உறவுகளையும் அறுத்தெறிந்தேன்.

1975 ஆம் ஆண்டும் பிறந்தது. ஆனால் என்னுடைய திறமையினால் எந்த முன்னேற்றத்தையும் காண இயலவில்லை. இந்தச் சோக உலகில் மாற்றத்தைக் கொணர முடியும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டேன். என் எதிர்கால மனைவியின் பெற்றோர் வீட்டில் தெரேசு மார்ட்டினின் சுய சரிதையைப் படித்தேன். இது எனக்கு ஒரு வெளிப்பாடு; உரிமையின் குரல் கொடுக்கும் குழந்தையால் வாசிக்கப்பட்ட நற்செய்திகளின் கண்டுபிடிப்பு ஒரு வார காலமாக வெற்றிக் களிப்பில் மிதந்தேன். சிந்தனைகள் சிதறின. பிறகு எளிய யாசகரைப் போன்று செபிக்க முயற்சித்தேன். அன்பினால் தூண்டப்பட்ட செயற்பாட்டிலே தான் நம்பிக்கை பிறந்தது. அந்த நம்பிக்கையிலேயே இறைவனை மீண்டும் கண்டுபிடித்தேன். என் வாழ்வு மாற்றம் கண்டது; மலர்ந்து விடிந்தது.

D.L. (1979)

நாங்கள் துறவகம் ஒன்றைக் கட்ட விரும்பினோம். ஆனால் அது நடைமுறையில் இயலாத காரியம் என்பது தாங்கள் அறிந்ததே. காரணம் சட்டம், திட்டவட்டமாக அதற்கு அனுமதி மறுக்கிறது. பிறகு ஓர் ஆன்மாவின் கதையை நாங்கள் கண்டுபிடித்தோம். அதுவே எங்களது துறவற இல்லமாக மாறிவிட்டது. ஏனென்றால் அதிகாரத் துறவற நிறுவனங்கள் அனுமதிக்கா விட்டாலும், துறவறச் சட்டங்களே அனுமதிக்காவிட்டாலும், ஆன்மீகக் குழந்தைப் பருவத்தின் "சிறிய வழியை' அனைவரும் கடைப்பிடிக்கலாம்.

ரஷ்யாவைச் சார்ந்த மரபு வழிக் கிறிஸ்தவர்கள் (1977)
*மாஸ்கோ.*

இந்த நூல் ஒரு புகழுரை. கவிஞர்களைத் துன்புறுத்தியும், அச்சுறுத்தியும் கொண்டிருந்த காலக்கட்டத்திலே, கையிலே ரோசா மலர் களைத் தாங்கி அற்புதமாகக் காட்சித் தரிசனம் தந்த கார்மல் சபைக் கன்னிகைக்கு விசுவாசமற்ற ஒருவர் சாற்றும் பூர்வம் நிறைந்த புகழுரை. தெரேசு மார்ட்டின் என் மண்ணின் மகள், என் சம காலத்தவர், என்னுடைய பாணியிலே அவரை வாழ்த்தாமல், அவர் மகிமையான தூய்மை நிலையை அடைய நான் விரும்பவில்லை. எனவே அவர் அனைவருக்கும் சொந்த மானவர்.

லூசி டெலரு மார்ட்ரஸ் (1926)
(Lucie Delarue - Mardrus)
*எழுத்தாளர்.*

எனது அன்பு நிறைந்த தெரேசு,

அன்போடு உமக்கு நான் வரையும் சிறிய மடல். நான் சிறையில் தற்போது இருக்கின்றேன். உன் நினைவே என் மனத்தை நிறைந்துள்ளது. நான் இங்கு வந்து அதிக நாள்களாகவில்லை; மிகப் பெரிய குற்றமும் நான் புரியவில்லை. பல நாள்களுக்கு முன்பாக நானும், என் மனைவியும் உங்களைச் சந்திக்கச் சென்றோம். மிக விரைவில் நான்கு வயது நிரம்பிய என் மகனுடன் நான் உங்களைச் சந்திக்க வருவேன். என் கழுத்தில் உங்கள் உருவம் பொறித்த பதக்கத்தையும், என் அன்பர் இயேசு கிறிஸ்துவின் உருவம் பொறித்த பதக்கத்தையும் அணிந்துள்ளேன். மார்ச் திங்கள் 24 ஆம் நாள் நான் விடுதலை அடைவேன். உமக்காக நான் ஒரு திட்டம் தீட்டியுள்ளேன். உங்களையும் அத்திட்டம் மகிழ்ச்சியில் ஆழ்த்தும். தூய தெரேசு! என் அன்பு முத்தங்களையும், என் மனைவி மற்றும் மகளின்



அன்பு முத்தங்களையும் உரித்தாக்குகின்றேன்.

பத்தாம் செர்ஜ் (1979)
(Serge X)
*சிறைக் கைதி*

அமெரிக்காவில் வாழும் எனது பெயர் தெரேசு. சில நாள்களுக்கு முன்பாகத் "திரு மார்ட்டின் ஓர் இலட்சியத் தந்தை" எனும் நூலை வாசித்து முடித்தேன். ''ஓர் ஆன்மாவின் கதை'' என்ற நூலையும் வாசித்திருக்கின்றேன். எனது 42 ஆண்டு கால வாழ்க்கையில் இதைப் போன்று என் உள்ளத்தைக் தொட்ட நூலை நான் வாசித்ததேயில்லை. நான் கத்தோலிக்கக் கிறிஸ்தவராக இருந்தாலும் எனது பெயர் 'தெரேசு' ஆக இருந்தாலும், ஆன்மாக்களை மீட்கும் சக்திவாய்ந்த இந்தத் தூயவர் பற்றி இதுவரை அறிந்ததேயில்லை. 1981 - ஆம் ஆண்டு சனவரித் திங்களில் வாழ்க்கையின் விளிம்பிற்கே சென்று விட்டேன். துக்கம் தொண்டையை அடைத்த ஒருநாளில் ஆலயத்திற்கு உள்ளே சென்ற போது அங்கு ஒரு திரு உருவச் சிலையைக் கண்டேன். அச்சிலையின் காலடியில், 'அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தாலும் ஏன் கவலைப்பட வேண்டும்? என்னிடத்தில் எடுத்துரைக்கக்கூடாதா?' என்ற மன்றாட்டுடன் ஒரு படத்தைக் கண்டேன். என் நம்பிக்கை துளிர்த்தெழுந்தது. என்னையே நான் நம்ப முடியவில்லை. உயிரை மாய்த்துக் கொள்வதை தவிர வேறு வழியே இல்லை என எண்ணிய நான் மீண்டும் உயிர் பெற்று எழுந்தேன்.

திருமதி. தெரேசு பிரோமர் (1981)
(Mrs. Therese Bremer)

தூய தெரேசின் படுக்கை அறையைப் பார்வையிட்ட பிறகு ஆரஞ்சு நிறம் கலந்த காவி உடையுடன், மழித்த தலையுடன் சிறிய இருப்பு பலகையின் மீது அமர்ந்திருந்த அந்தப் புத்த மத குரு இன்னும் என் கண்முன் நிற்கின்றார். தன்னோடு அழைத்து வந்த பார்வையாளர்களிடம் அவர் "தற்போது நாம் அனைவரும், "பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே! என்ற செபத்தைச் செபிக்கப் போகின்றோம்" என்றார். மேலும் தொடர்ந்து, ''தூய தெரேசே! இங்கு உம்மைச் சந்திக்க வரும் அனைவருக்காவும் இறைவனிடம் மன்றாடும்படி உம்மை இறைஞ்சு கின்றேன்." என்றார். இவர் இந்தியாவில் இயேசு சபையினரோடு இணைந்து கல்வி பயின்றவர்; புத்த சமயத்தைச் சார்ந்தவர். 'அன்பின் குரலுக்குத் தன்னையே அர்ப்பணித்த தெரேசு அனைவர் மீதும் அன்பு செலுத்தினார்;

அவருக்குப் பகைவர் என்று சொல்வதற்கு ஆள்கள் கிடையாது' என்று தெரேசுக்கு இவர் புகழாரம் சூட்டுகின்றார். உலகளாவிய அன்பின் அலைகளைத் தமது ஆன்மீகத்தோடு இணைத்துப் புதிய சகாப்தத்தை, ஆன்மீகப் புரட்சியை விதைத்த மாபெரும் புனிதர் தான் தூய தெரேசு எனப்பிற சமய சகோதரரான இவர் கூறுகின்றார்.

அருட் சகோதரி கொலேத் பார்த்தலேமி (1973)
(Sr. Colette Barthelemy)
*லெ புய்ஸ்லொனே*

'லிசியூ நகர் தூய தெரேசு' பள்ளி என்ற கல்வி நிறுவனத்தை நான் நடத்தி வருகின்றேன். அனைத்து வகையான ஆள்களையும் தினம்தோறும் நான், இந்தப் பள்ளியில் பயிற்சி பெற அனுமதித்து வருகின்றேன். இந்தப் பள்ளியில் மாணவர்களைச் சேர்க்காத நாளே கிடையாது எனக்கூறும் அளவுக்குத் தெரேசின் எழுத்துக்களும், அவரைப் பற்றிய எழுத்துக்களும் எவ்வித வேறுபாடுமின்றி அனைத்து வகையான மாந்தரையும் கவர்ந்துள்ளன. விலை மாதர், துறவற அழைத்தலை நாடும் இளம் பெண்கள், துயரம் நிறைந்த கடந்த காலத்தால் மனம் நொந்து வாடும் அருட்பணியாளர்கள், தவறான வழியில் நடந்ததால் சிறைத் துன்பத்தை அனுபவித்து ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் இங்கே இடமுண்டு. பிரெஞ்சு மொழியில் வாசிக்கத் தெரியாமல் தூய தெரேசு கூறிய அனைத்துக் கருத்துக்களையும் இயல்பாகவே தெரிந்து வைத்திருந்த அன்னை முதல், தூய தெரேசு வழிபடும் கடவுளின் இரக்கத்தினால் 'தான் மன்னிக்கப் பட்டுவிட்டேன்' என்ற உணர்வுடன், விவாகரத்து செய்துள்ள தந்தை வரை அனைவரும் இப்பள்ளியில் உள்ளனர். ஒன்றன் பின் ஒன்றாக நடந்த அருங்குறிகளின் அடிப்படையிலேயே மேற்கூறிய உதாரணங்களைத் தொகுத்துக் கூறியுள்ளேன். தூய தெரேசுவுக்குக் கோடானகோடி நன்றிகள்.

பங்குத் தந்தை (1982)
*லயன்ஸ்*

இயேசு எனக்கு மிகவும் அருகில் இருக்கிறார். தனக்கருகே இன்னும் நெருக்கமாக என்னை அவர் ஈர்த்துக் கொண்டிருக்கிறார். அன்பிற்காக இறக்க ஆதங்கப்படும் நான், அமைதியில் தான் அவரை ஆராதித்து வணங்க இயலும். குழந்தை இயேசுவின் சிறுமலர் தூய தெரேசைப் போன்று எனது அர்ப்பணம் கருணை நிறை அன்பின் பலிப்பொருளாக மாறி வாழ்வில் புதுப்படைப்பாய் மாற வேண்டும் என்பதே என் இதயத் துடிப்பின் ஏக்கம்.



நான் அமைதியிலும், இருளிலும் காத்திருக்கின்றேன். . . அன்புக்காக நான் காத்திருக்கின்றேன்! இன்னும் 5 மணி நேரத்தில் இயேசுவை நான் சந்திப்பேன்!

ஜாக் ஃபெஷ் (30 செப்டம் 1957)
(Jacques Fesch)
*தெரேசு இறப்பின் 16 ஆம் ஆண்டு நிறைவு நாள்.*
*27 வயது இளைஞர் இவருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப் படுவதற்கு முன் இரவு எழுதப்பட்ட கண்ணீர் கடிதம் தான் இது.*

என் வாழ்வில் மிகக் கொடிய சோதனையைச்சந்தித்து முடித்த நேரம் அது. அறிமுகமில்லாத ஒரு நண்பர், சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசைப் பற்றிய செய்திகள் அடங்கிய துண்டு வெளியீட்டை என்னிடத்தில் கொடுத்தார். அதனை நான் வாசிக்கத் தொடங்கியபொழுது, என் உள்ளத்தில் மென்மையான ஆறுதல், அலையாய் எழுவதை உணர்ந்தேன். சகோதரி தெரேசைப் போன்று என்னையே முழுமையாக இறை விருப்பத்திற்குக் கையளிக்க வேண்டும். . . அதற்காக மிகச் சிறியவராக மாற வேண்டும் என்று என் உள் ஒலிக் கூறுவதைப் போன்றும் உணர்ந்தேன். அன்புத் தெரேசு, நாம் இயேசுவோடு ஒருங்கிணையும் வழியைக் காண்பிப்பாராக! விண்ணிலிருந்து அருள் வரங்களைப் பொழிந்து நமக்குத் துணை நிற்பாராக!

மார்க் சாங்னியெர் (15 செப்டம்பர் 1910)
(Marc Sangnier)
*சில்லோன் துறவகத்தின் தோற்றுவிப்பாளர்*
*தலைமைச் சகோதரி ஆக்னெசுக்கு அவர் வரைந்த மடல்.*

தூய தெரேசு என் இனிய தூதர். . . அவருக்கு நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றேன். அவருடைய எலும்பை நினைவுச் சின்னமாக நான் வைத்திருக்கிறேன். அதனை எப்பொழுதும் என் நெஞ்சுக்கருகிலேயே வைத்துள்ளேன். அச்சின்னத்தை எனக்குத் தலைமைச் சகோதரி ஆக்னெசு அவர்கள் கொடுத்தார்கள்; அவர் இறக்கும் வரை அவரோடு தொடர்ந்து கடிதத் தொடர்பு கொண்டிருக்கும் வாய்ப்புப் பெற்றிருந்தேன். . . 'ஓர் ஆன்மாவின் கதை" - ஞானத்தின் புதையலை உள்ளடக்கியுள்ள ஓர் நூல்.

சார்ல் முர்ரா (1952)
(Charles Maurras)
*ஃபிரான்சுவா இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.*

என் மகள் பெயர் ரெய்ன். நான்கரை வயது நிரம்பிய அவள் கண்நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டாள். 1906 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 11 ஆம் நாள் மருத்துவர்கள் அனைவரும் கைவிட்டுவிட்டனர். ஆறுமாத மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர், அது மருத்துவர்களால் குணமளிக்க முடியாத நோய் என அறிவித்தனர். இறுதியாக என் மனைவி, கண் பார்வையற்ற என் குழந்தையை எடுத்துக் கொண்டு சகோதரி குழந்தை இயேசுவின் தெரேசின் கல்லறைக்குச் சென்று, அந்தச் சிறிய சகோதரியிடம் மன்றாட நவநாள் தொடங்கினோம். 1908 ஆம் ஆண்டு மே திங்கள் 26 ஆம் நாள் . . . நவநாளின் இரண்டாம் நாள் . . . ஆண்டவரின் விண்ணேற்பு விழாவிற்கு இரண்டு நாள்களுக்கு முன்தினம். . . காலை ஆறுமணி. . . திருப்பலி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். . . அந்த அற்புதம் . . . புதுமை நடந்தது. ஆம் . . . என் மகள் ரெய்ன் ஒரு சிறிய தாக்குதலுக்குப் பிறகு, திடீரெனப் பார்வையை மீண்டும் பெற்றாள். என் மனைவிதான் இந்த அருங்குறியை முதலில் உணர்ந்தார். . . பிறகு நானும் உணர்ந்து வியந்து மகிழ்ந்தேன். இந்த மாபெரும் அருஞ்செயலை நினைத்து நன்றி உள்ளத்தோடு இந்தச் சான்றிதழில், சாட்சிகளோடு கையொப்பம் இடுகின்றோம்.

(சிறுமியின் நோய் குணமளிக்க இயலாத நோய் எனக் கண்டறிந்த மருத்துவரின் குறிப்பும், 16 சாட்சிகளின் கையெழுத்தும் சான்றிதழில் காணப்படுகின்றன.)

ஏ. ஃபோகே (12 டிசம்பர் 1908)
(A Fauquet)
*சிறுமி ரெய்ன் ஃபொகே, லிசியூ கார்மல் சகோதரிகளை அவர்களது இல்ல வரவேற்பறையில் பிறகு சந்தித்தார்.*

தெரேசைப் பற்றி இருநூல்கள் எழுதி முடித்த பிறகும், பதினைந்து ஆண்டுகளாக அவரைப் பற்றி அறியும் முயற்சியில் ஈடுபட்டு அவரோடு இணைந்து நீண்ட பயணம் மேற்கொண்ட பிறகும், அவருடைய இயல்பான, வரையறுக்க இயலாத ஆளுமையை இன்னும் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை என்ற உணர்வே என்னில் மேலோங்கி நிற்கிறது. . . 'அப்படியென்றால் யார் அந்தத் தெரேசு'? என்ற கேள்வியையே வியந்து நிற்கும் வாசகரும், கலக்கமடைந்த வாசகரும் கேட்பர். அவர்களிடம் 'வந்து பாருங்கள்' என்றே பதில் மொழி கூறுவேன். ஆசிரியர் உங்களிடம் திறவுகோலைத் தர வேண்டும் என்று விரும்புகிறீர்களா? இது அன்பின் கதை. . . இதற்கு ஒரு திறவுகோல் தேவைதானா? இதன் கதவுகள் திறந்தே இருக்கும்போது திறவு கோல் எதற்கு? அன்பின் கதையில் வாழ்வின் கதவும். . . சாவின் கதவும் எப்பொழுதும் திறந்தேயிருக்கும்.



ஷான் ஃபிரான்சுவா சிக்ஸ் (1973)
(Jean - Francois Six)
*தெரேசின் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்.*

எனது இனிய தெரேசு,

உமது சுயசரிதையை நான் வாசிக்கும் போது எனக்கு வயது பதினேழு. அது என்னை வலிந்து தாக்கியது. நீர் அதனைச் "சிறிய வெண் இளவேனிற் கருவ மலரின் கதை" என அழைக்கின்றீர். அது, மன உறுதியை, வலிமையை, தீர்வு காணும் திறனை என்னில் உருவாக்கியுள்ளது. எனவே, எனக்கு அது ஓர் துண்டு எஃகின் கதையாகவே தோற்றமளிக்கிறது. இறைவனுக்கு முழுமையாக அர்ப்பணிக்கும் வழியைத் தேர்ந்தெடுத்த உம்மைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் யாருக்கும் இல்லை; எதற்கும் இல்லை. நோயோ, வெளி ஆள்களின் எதிர்ப்போ, அக இருளோ மற்ற எதுவுமோ உமது வழியில் குறுக்கே நிற்கத் துணியவில்லை.

அல்பீனோ லூசியானி (1973)
(Albino Luciani)
*பின்னர், திருத்தந்தை முதலாம் யோவான் பவுல்.*

யூதித் பிறந்த உடனேயே அவளுடைய கண்ணில் கண்படல நோய் வளரத் தொடங்கி விட்டது. யாருடைய கண்ணிலும் இது தெளிவாகப் படவில்லை. மூன்று ஆண்டுகளாகக் கண் பார்வையற்றவளாகவே வாழ்ந்தார். அவளுடைய பாட்டி லூயி, அவளை லிசியூ நகருக்கு எடுத்துச் சென்றார். அங்கே தான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. யூதித் பார்வை பெற்றாள். இந்த நம்பிக்கை அவரிடத்தில் என்றும் நிலைத்து நின்றது. அந்த நேரம் முதல் குழந்தை இயேசுவின் தூய தெரேசின் மீது உண்மையான பக்தியை வளர்த்துக் கொண்டார். அவருடைய திருஉருவச் சின்னத்தை அணிந்து கொள்வதோடு, அவருடைய திருஉருவப் படத்தைத், தனது படுக்கைக்கு அருகே உள்ள மேசையின் மீது எப்பொழுதும் வைத்திருந்தார்.

சிமோன் பெர்த்தோ (1969)
(Simone Berteaut)
*யூதித் பியாஃப்-பின் சகோதரி*

எத்தகைய மோசமான பாவ நிலையில் வீழ்ந்திருந்தாலும், தெரேசின் உதவியினால் மீண்டும் புது வாழ்க்கையை ஒருவர் தொடங்க முடியும். மீண்டும் அன்பு செய்ய, மீண்டும் வாழ்வை முழுமையாக வாழத் தொடங்க முடியும். உலகில் அனைத்தும் கைவிட்ட நிலையில் உதவும் கரம் நீட்டி உயிர்ப்பின் நம்பிக்கையில் நம்மை வாழ வைப்பவர் தெரேசு. அச்சம், ஆழ்ந்த துயர், நம்பிக்கையின்மை போன்ற ஆணிகளால் அறையப்பட்ட தவறான சிலுவையிலிருந்து நம்மை விடுவித்து, உண்மையான சிலுவையின் அடியில் உம்மை மண்டியிடச் செய்கிறார். இந்த நகரில் எனக்குத் தேவையான அனைத்தும் இருந்தாலும், பலவித குழப்பங்களில் நான் அமிழ்ந்திருந்தேன். மிகப் பெரும் கலகத்திலிருந்து என்னை மீட்டு வழி நடத்திய தெரேசுவுக்கு நான் நன்றி சொல்லி மாளாது. எனினும், நான் இன்னும் அவரிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டியவை அதிகம் உண்டு என்றே எண்ணுகின்றேன். என் வாழ்க்கைப் பாதையில் அடிக்கடி வரும் தடைகள் அனைத்திலுமிருந்து என்னை விடுவிக்க வேண்டுமென அவரிடத்தில் நான் விரும்பிக் கேட்கின்றேன்.

H.M. (1982)
*லோய்ரெட்.*

# கருவி நூல் பட்டியல்.


Clarke, John, OCD (tr.), General Correspondence, vol. I. ICS Publications, Washington, DC, 1982.

Last Conversations. Therese's conversations with her sisters. ICS Publications, Washington, DC, 1977.

Story of a Soul. The three autobiographical MSS of St. Therese. ICS Publications, Washington, DC, 1976.

Sheed, F.J. (tr.), The Collected Letters of Saint Therese of Lisieux. Sheed And Ward, London, 1949.


இந்நூலைப் படித்து முடித்ததும் உங்களது உள்ளங்களில் ஏற்படும் உள்ளுணர்வை எழுத்து மூலம் எங்களுடன் பகிர்ந்து கொண்டால் மகிழ்ச்சி அடைவோம்.


**தொடர்பு முகவரி:**

அருட்பணி. ஆல்பர்ட் OCD

மே/பா கார்மல் ஆசிரமம், ஏற்காடு, சேலம் 636 601



அலர்ந்திடத் துடிக்கும்
அரும்பையும் வெல்லும்
மௌனப் புன்னகையாள்
இதழிலே மணக்கும்
தெய்வீகமாய் . . .

சுடர் விடும்
சாந்த முகத்தில்
விண்ணகக் கனவுகள்
காந்தமாய் கனலாய்
ஆன்மீகத் தாகமாய் . . .

ஊடுருவி நோக்கிடும்
மின்னொளி விழிகளில்
கருணையின் மகிழ்ச்சியும்
இனம்புரியாச் சோகமும்
கலவையாய் . . .

எளிமைக் கோலமாய்
இயேசுவை உடுத்திய
திருவுரு! குழந்தைப் போல்
உயிரள்ளும் சின்னஞ்சிறுவழி
புனிதை தெரேசு நீர்!
திருமறை வல்லுநர் வாழி நீர்!

- இளையநந்தன்.